# தாய்வீடு

222

ISSN 2369-3657

THAIVEEDU | SEPTEMBER | 2025

தாய்வீடு | செப்ரெம்பர் | 2025

## உலகநாடுகளின் கனிம வளமும் மன்னாரின் கருநிலப் போராட்டமும்

- சிவா முருகுப்பிள்ளை

## கல்வி நெருக்கடியும் சீரில்லாத் திருத்தங்களும்

- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ



ரொறன்ரோவில்

6–ஆவது அனைத்துலகத் திருக்குறள் மாநாடு

செப்ரெம்பர் 19, 20, 21

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

தாய்வீடு

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்

**வடிவமைப்பு**
ஆரையன், ஊரோடிகள் குழுமம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

**படங்கள்**
istock.com,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

## கைது சொல்லும் கதைகள்

ரணில் விக்கிரமசிங்கவின் அதிரடியான கைதானது இலங்கை அரசியலில் அதிர்வலைகளைத் தோற்றுவித்ததோடு, உலக அரங்கிலும் ஓரளவு கவனம் பெற்றுள்ளது. பல தடவைகள் இலங்கையின் பிரதமராகவும் ஒரு தடவை நிறைவேற்று அதிகாரமிக்க சனாதிபதியாகவும் பதவி வகித்திருந்த ரணில், கைதுசெய்யப்பட்டு, ஊழல், பணமோசடிக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இலங்கையின் வரலாற்றிலேயே முன்னாள் பிரதமராகவும் முன்னாள் சனாதிபதியாகவும் பதவிவகித்த ஒருவர் கைதுசெய்யப்படுவது இதுவே முதல்முறை.

இதன் அர்த்தம், இதற்குமுன் இருந்தவர்கள் எவரும் ஊழலில் ஈடுபடவில்லை என்பதல்ல. அவர்கள் எவரும் தமது ஊழல்களுக்காகப் பொறுப்புக்கூறும்படி கேட்கப்படவோ, நீதியின் முன் நிறுத்தப்படவோ இல்லை. அவ்வளவே. ரணிலின் கைதையடுத்து, இலங்கையின் அண்மைக் காலத்து ஊழற்பெருச்சாளிகளான ராஜபக்ச குடும்பத்தினர் அடுத்தடுத்துக் கைதுசெய்யப்படுவார்கள் என்றதோர் எதிர்பார்ப்பு எழுந்தது. அது நடக்கவில்லை. கூடிய விரைவில் நடக்கும் என்பதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை.

இங்கேதான், இந்தக் கைதுக்கான உண்மை நோக்கத்தைத் தேடவேண்டி வருகிறது. உண்மையில், இலங்கை அரசியல்வாதிகளிடையே, 'மிஸ்ரர் கிளீன்' எனப் பெயரெடுத்தவர் ரணில். ஊழல்களிலும் மோசடிகளிலும் நேரடியாக ஈடுபடாதவர் என்ற நற்பெயர் அவருக்குண்டு. தன்னைச் சுற்றியிருந்தவர்களும் கட்சிக்காரர்களும் மோசடிகளில் ஈடுபட்டுப் பெருலாபம் ஈட்டியதைக் கண்டும்காணாமல் அனுமதித்தார் என்பது இதில் சேர்த்தியில்லை.

இலங்கை மத்திய வங்கிப் பிணைமுறி ஊழலில் ரணிலுக்குத் தொடர்பிருக்கிறது எனக் கடந்த தேர்தற் பரப்புரைக் காலத்தில் தேசிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியிருந்தாலும், பல பில்லியன் ரூபாய் இழக்கப்பட்ட அந்த ஊழலுக்காக ரணில் கைதுசெய்யப்படவில்லை.

சொந்தத் தேவைகளுக்காகச் சில மில்லியன் ரூபாய் மோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் கையாடியதாகக் கூறப்படும் தொகையைவிடப் பலமடங்கு பெறுமதியான தனது சொத்துகளை பௌத்த மதபீடங்களுக்கும், தனது கல்லூரியான ரோயல் கல்லூரிக்கும் கொடையாக வழங்கியவர் ரணில். ஆகவேதான், இந்தப் பணமோசடிக் கதையை நம்புவது கடினமாக உள்ளது.

ஆகவே, ரணிலின் கைகளில் இருப்பது பணக்கறை இல்லை... இரத்தக்கறை. அந்த இரத்தக்கறைக்கான பழைய கணக்கைத் தீர்த்துக்கொள்ளவே இந்தக் கைது நாடகம் என்றே எண்ணவேண்டியுள்ளது.

1971-இலே முதலாவது ஜே.வி.பி. கிளர்ச்சியை நசுக்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு, அதன் தலைவர்களைக் கைதுசெய்து சிறையிலடைத்தது. கொல்லவில்லை. 1977-இலே ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு, ஜே.வி.பி. தலைவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தது. விடுதலை பெற்ற ரோகண விஜயவீர 1982-இல் சனாதிபதித் தேர்தலிலே போட்டியிட்டு கணிசமான ஆதரவைப் பெற்றதும் வரலாறு. அவருக்கான ஆதரவைக் கண்டு அச்சமுற்றோ என்னவோ, 1983 கறுப்பு ஜூலை இன அழிப்புக்கு ஜே.வி.பி.-யே காரணம் எனக் குற்றஞ்சாட்டி, ஜே.ஆர். மீண்டும் ஜே.வி.பி.-க்குத் தடைவிதித்தார். அதையடுத்து இடம்பெற்ற ஜே.வி.பி.-யின் இரண்டாவது கிளர்ச்சியை கோரக்கரங்கொண்டு அடக்கும் பணியை ஜே.ஆர். ஆரம்பித்துவைக்க, பிரேமதாச முடித்துவைத்தார். தப்பியோடிய சோமவன்ச அமரசிங்கவைவிட வேறு எந்தத் தலைவரையும் உயிருடன் விடவில்லை. இந்த இரண்டு ஐ.தே.க. அரசுகளிலும் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்தவர் ரணில். அன்றிருந்தவர்களுள் இன்றும் ஐ.தே.க. சார்பாக நேரடி அரசியலில் ஈடுபட்டுவரும் ஒரேயொருவர் ரணில். அத்தோடு, ஜே.வி.பி. சார்பானவர்களை இலங்கைப் படைகள் கைதுசெய்து கொடூரமான முறையில் கொன்ற பட்டலந்த வதைமுகாமுக்கு அடிக்கடி சென்று அந்தச் சித்திரவதைகளை நேரடியாகக் கண்காணித்தவர் என்ற குற்றச்சாட்டும் ரணில் மீது உண்டு. தனிப்பட்ட முறையிலும், ஐ.தே. கட்சியின் பிரதிநிதி என்ற வகையிலும் ஜே.வி.பி.-க்கு எதிரான வரலாற்றுக் குற்றங்களுக்காவே அவர் தண்டிக்கப்படுகிறார்.

அத்தோடு, ரணில், ‘கண்டிச் சிங்களவர்’ என்ற சாதியத் திமிரோடும், ஜே.ஆரின் மருமகனார் என்ற வாரிசுரிமையோடும் அரசிலுக்குள் கோலாகலமாகக் களமிறங்கியவர். அந்த வகையில் இந்தக் கைது ஜே.வி.பி.-யின் சில மட்டங்களுக்கிடையில் மீண்டும் தோன்ற ஆரம்பித்திருக்கும் வர்க்கப்போர் மனநிலையைச் சமரசம் செய்வதற்காகவேண்டியும் இருக்கலாம். ரணிலுக்கு ஆதரவாகத் தோன்றிய நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகளுக்கும் இது தெரிந்திருக்கலாம்.

எப்படியிருப்பினும். 1977-இல் ரணில் தேர்தலில் வெற்றிபெற்றது முதல் இன்றுவரை தமிழினப் படுகொலையில் அவர் ஆற்றிய முக்கிய பங்குக்குப் பொறுப்புக் கூறவேண்டுமென அனுர அரசு கேட்கப்போதில்லை. எனவே இந்தக் கைது நாடகத்தைக் கண்டு விசனப்படவோ, மகிழ்ச்சியடையவோ தமிழர்களுக்கு எதுவுமில்லை

# தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


அசர்பைஜான் – ஆர்மீனியா –
அமெரிக்கப் பேரரசு 5
- ரதன்

உலகநாடுகளின் கனிம வளமும்
மன்னாரின் கருநிலப் போராட்டமும் 11
- சிவா முருகுப்பிள்ளை

கல்வி நெருக்கடியும் சீரில்லாத்
திருத்தங்களும் 17
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

மக்களுக்கு நீதிகோரி ஓலமிடும்
செம்மணிப் புதைகுழிகள் 22
- சகுனா எம். கமகே
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

ரஷ்யா – உக்ரேன் போர்:
சமாதான முயற்சிகளும் சவால்களும் 27
- ரூபன் சிவராஜா

வெனிசுலா–அமெரிக்கா போதைப்பொருள்
யுத்தமா? எண்ணெய்க்கான யுத்தமா? 30
- ரதன்

இலங்கைத் தமிழ் அகதிகளை
நாடு கடத்துவது நியாயமா ? 32
- நெல்லை ஜெயசிங்

அபிவிருத்தியின் ஆணிவேர்கள் 38
- நிசன்குமார் கோபிநாத்

21–ஆம் நூற்றாண்டின்
ஆசிரியர் வகிபாகங்கள் 41
- அகமட் பிஸ்தாமி

பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே
உதவுவதற்கான வழிகாட்டல்கள் 43
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

சினைப்பை நீர்க்கட்டி –
மகளிரில் ஒரு மறைக்கப்படும் ஆபத்து! 46
- போல் ஜோசேப்

உளப் பாதுகாப்புப் பொறிமுறைகளும்
ஆளுமைக் கண்ணோட்டமும் 49
- சரவணன் லக்ஹரன்

ஆயுளைக் குறைக்கும் சிறு தவறுகள் 52
- குமார் புனிதவேல்

நம்மவர் மத்தியில் குடும்பக் கட்டமைப்பு 54
- ப. விஸ்வகோகிலன்

தேசிய அறக்கட்டளை வலுவாக்கப்படவேண்டிய
அவசியமும் இன்றைய தேவைப்பாடுகளும் 57
- சி. நற்குணலிங்கம்

படுகொலைகளை எதிர்கொண்ட கிரீட் தீவு 59
- குரு அரவிந்தன்

கேள்விக்குறியாகும்
மானுடப் படைப்பாற்றல் திறன்! 62
- சுப்ரமணியம் ஜெயசீலன்

தொடர்மாடிக் கட்டடங்களின்
கூட்டுரிமைக் காப்புறுதி 66
- செந்தூரன் புனிதவேல்

பாவனையும் பராமரிப்பும் – 5 68
- வேலா சுப்ரமணியம்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மேடையேறிய
மொரட்டுவப் பல்கலைக்கழக மாணவர்களின் நவீன நாடகம் 71
- க. பாலேந்திரா

உடைமையிழந்தோர் 75
- ஓவியர் ஜீவா

நவீன உலகும் உறவுகளின் சிதைவும்
அன்டோனியோனியின் இருத்தலியல் சினிமா 78
- சொர்ணவேல்

செப்ரெம்பர் 5, 1972 – மியுனிக் 85
- ரதன்

மூத்த ஊடகவியலாளர் லத்தீப் பாரூக்கின்
ஊடகப் பணியும் செல்நெறியும் 90
- இக்பால் அலி

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இசைப்
பட்டதாரி தர்மபூபதி சிதம்பரநாதன் 98
- வே. விவேகானந்தன்

ஜே.வி.பி.–யும் சண்ணும்:
சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகளை முன்வைத்து ஒரு பார்வை 101
- மல்லியப்புசந்தி திலகர்

நுகி வா தியாங்கோவுக்கு அஞ்சலி – 3
மார்க்சியக் கதைசொல்லல் 106
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

எதிர்ப்பும் கவிதையும்
அஷ்ரஃப் சிஹாப்தீன் கவிதைகளை முன்வைத்து 111
- ஜிஃப்ரி ஹாசன்

ஒளிக்காலக் கதைகள்
வேணி கிருபாகரனின் கதைகளின் வெளி 114
- கருணாகரன்

சந்திரோதயம் – நூல் மதிப்பாய்வு 118
- அருள்கார்க்கி

வரலாற்றுக் களத்தில் யதார்த்த –
புனைவுப் பாத்திரங்களின் மோதுகை
சல்மான் ருஷ்டியின் ‘விஜயநகரம்’ நாவலை முன்வைத்து... 120
- தேவகாந்தன்

ஆர். சூடாமணியின் ‘இரவுச்சுடர்’ 124
- சு. வேணுகோபால்

ஆதிலட்சுமி சிவகுமாரின் முட்காட்டுப் பூ
ஒரு தாயின் குரல் 126
- தாமரைச்செல்வி

ஒரு நூலின் உருவாக்கம்: ஆசிரிய –
வெளியீட்டாளருக்கான கைந்நூல் 129
- என். செல்வராஜா

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்
தென்திராவிட மொழிக்குடும்பத்தில் காணப்படும் மொழிகள்: 133
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

தென்னாசிய நாடுகளின் அரசியலில் மதம் 136
- அ. மேரி றெசோதா

மலையக மக்களின் வாழ்வியலோடு
பின்னிப் பிணைந்த கலையாக காமன் கூத்து 140
- அருணாசலம் லெட்சுமணன்

தொல்லியல்: கடந்த காலத்தின் பெருமையும்
எதிர்காலத்தின் திசையும் 144
- சிறிதரன் ஹரிஷா

இனப்படுகொலையின் அரசியல்
தத்துவார்த்தக் கேள்விகள் 147
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில்
பெண் வன்முறை 155
- சி. ரமேஷ்

புறநிலையும் அகநிலையும் 162
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

வரலாற்றில் ‘ஊடல்’
திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும் 165
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தமிழரின் பண்பாட்டு மரபில் திருக்குறள்
செலுத்திவந்துள்ள செல்வாக்கு 168
- நா. சுப்பிரமணியன்

திருக்குறள் காமத்துப்பாலின் இலக்கியவரலாற்று முக்கியத்துவம் –
தமிழின் அகப்பொருள் மரபை மையப்படுத்திய நுண்ணாய்வு 174
- கௌசல்யா சுப்பிரமணியம்

மகாகவி பாரதியின் மாண்புறு சீடர்கள்
கண்ணனும் கனகலிங்கமும் 178
- கிருங்கை சேதுபதி

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் – மகாவம்சம்
விஜயனின் பட்டாபிசேகம் 181
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

கம்பனின் கருவூலம் திறந்து... 184
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

முலையறுகாதை!
பெண் துயரப் பெருங்கதை 188
- மா. சித்திவினாயகம்

விலகல் 192
- உஷாதீபன்

ஆண்குறிகள் அழுக்கானவை 197
- பவானி சற்குணசெல்வம்

முத்தம் 199
- அன்ரன் செக்கோவ்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்




# அசர்பைஜான் ஆர்மீனியா அமெரிக்கப் பேரரசு

ரதன்

## ஆர்மீனியா:

ஆசியக் கண்டத்தின் வடமேற்கில் அமைந்துள்ள நாடு. உலகின் பழைமை வாய்ந்த நாகரிகம் தோன்றிய நாடுகளில் ஒன்று ஆர்மீனியாவாகும். நீண்ட காலமாக உதுமானிய (Ottoman Empire), பாரசீக பேரரசுகளின் ஆட்சியின் கீழ் ஆர்மீனியா இருந்துள்ளது. பின்னர் சோவியத் யூனியன் பரவலடைந்த போது ஆர்மீனியாவும் சோவியத் யூனியனின் குடியரசுகளில் ஒன்றாக இருந்தது (1920-1990). செப்ரம்பர் 23,1991-இல் ஆர்மீனியா சுதந்திர நாடாகியது. 1915-ஆம் ஆண்டளவில் துருக்கி (உதுமானிய பேரரசு) ஆர்மீனிய மக்களை இனப்படுகொலை செய்தது. இது பற்றி முன்னர் தாய்வீட்டில் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஆர்மீனியாவை சுற்றி ஜோர்ஜியா, ஈரான், துருக்கி, அசர்பைஜான் ஆகிய நாடுகள் உள்ளன.

## அசர்பைஜான்:

Transcaucasia என புவியியல் ரீதியாக அழைக்கப்படும் பிரதேசத்தில் உள்ள நாடு அசர்பைஜான். இப்பிரதேசத்தில் அசர்பைஜானுடன், ஆமேனியா, ஜோர்ஜியா ஆகிய நாடுகளும் உள்ளன. பெருமளவு மலைத் தொடர்களைக் கொண்டுள்ளது இப்பிரதேசம் வடக்கே ஜோர்ஜியாவையும், ரஷ்யாவையும், மேற்கே ஆர்மீனியாவையும் கிழக்கே ஈரானையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. அசர்பைஜானின் பெரும் பகுதி மேற்கூறிய நாடுகளுக்கு எல்லைகளாக உள்ளது. இதன் மற்றொரு சிறிய பிரதேசம் ஆர்மீனியாவிற்குள் அமைந்துள்ளது. இதனை நக்சிவன் பிரதேசம் (naxcivan) என அழைப்பார்கள். பாலஸ்தீனத்தின் மேற்கு கரையும், காசாப் பிரதேசம் போன்றே இப்பிரதேசங்கள் அமைந்துள்ளன. அசர்பைஜான் மக்கள் நக்சிவன் பிரதேசத்துக்கு ஆர்மீனியாவினூடாகவே செல்ல முடியும். அசர்பைஜானின் தலைநகரமான பக்கு (Baku) கஸ்பியன் கடலை அண்டியுள்ளது. பெருமளவு சியா முஸ்லீம்களைக் கொண்டுள்ளது அசர்பைஜான்.

அசர்பைஜானிகளில் பெரும்பாலானோர் ஓஸ் (Oguz) மொழியை தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். ஓஸ், ஒரு துருக்கிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியாகும். ஏழாம் நூற்றாண்டளவில் அரேபியரின் ஆட்சிக்குட்பட்டதனாலேயே ஓஸ் மொழி அசர்பைஜானை ஆக்கிரமித்தது. மூன்றாம் நூற்றாண்டில் ஈரானிய மன்னர்கள் தொடர்ச்சியாக ஆட்சி செய்தனர். தற்பொழுது ஓஸ்-துருக்கிய மொழியை தாய் மொழியாக கொண்டிருப்பினும், ஈரான் வழி வந்த கலாசாரத்தையே கடைப்பிடிக்கின்றார்கள்.

Nadir-shakh 1700-களில் அசர்பைஜானை ஆண்ட அரசன். இவர் இந்தியாவிற்கு படையெடுத்து நியூடெல்லி பிரதேசத்தை கைப்பற்றியுள்ளார். Russo-Persian Wars இது 1804-1813-க்குமிடையில் நடைபெற்ற யுத்தம். இது ஈரானுக்கும் ரஷ்யாவிற்குமிடையிலான யுத்தம். அசர்பைஜானின் சுதந்திர அரசர்களை வீழ்த்தி 18-ஆம் நூற்றாண்டில் ஈரான், அசர்பைஜானைக் கைப்பற்றியது. ஈரான் ஜோர்ஜியாவின் சில பிரதேசங்கள் உட்பட பல பகுதிகளை ஆட்சி செய்துள்ளது. ஒருபுறம் துருக்கியின் உதுமானிய சாம்ராச்சியம், மறுபுறம் ஈரானின் பாரசீகம். அசர்பைஜான் ஈரானின் ஆட்சியில் நீண்ட காலம் இருந்துள்ளது. ரஷ்யா - பாரசீக யுத்தத்தின் பின்னர் ரஷ்யா அசர்பைஜானைக் கைப்பற்றியது. இன்றும் ஈரானின் சனத்தொகையில் 35 வீதமானவர்கள் அசர்பைஜானிகள் ஆவார். ரஷ்யா, பக்குவில் பெற்றோலிய வணிகத்தில் ஈடுபடத் தொடங்கியது. இதனால் ஜோர்ஜியா, ஆர்மீனியா போன்ற நாடுகளிலில் இருந்து பலர் வேலை வாய்ப்புக்காக பக்குவிற்கு சென்றார்கள். 1901-ஆம் ஆண்டளவில் உலக எண்ணெய் வணிகத்தின் ஐம்பது வீதத்தை பக்கு எண்ணெய் கிணறுகளே உற்பத்தி செய்தன. படிப்படியாக பக்குவில் ஆர்மீனியரின் ஆதிக்கம் வலுக்கத் தொடங்கியது. உதுமானிய சாம்ராச்சியத்தின் வீழ்ச்சியின் பின்னர் சிறிது காலம் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டுக்குள் அசர்பைஜான் இருந்தது. பின்னர் 1920 ஏப்ரலில் ரஷ்யாவின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்தது. 71 வருட சோவியத் யூனியனின் ஆட்சி 1991-இல் முடிவுக்கு வந்தது. 1992-இல் ஐ.நா. சபையில் இணைந்தது.




1993-இல் Common wealth of Independent States-இல் இணைந்தது. இவ் அமைப்பு முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளடங்கிய அமைப்பாகும்.

## ஏன் அசர்பைஜான் இரு பகுதிளாக அல்லது தனித்த பிரதேசங்களாக உள்ளது?

ரஷ்யாவிற்கும் பாரசீகத்துக்குமான (தற்போதைய ஈரான்) தொடர்ச்சியான போர்கள் 1804-1813, 1826-1828 வடக்கு பகுதி அசர்பைஜான் ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள்ளும், தெற்கு பகுதி ஈரானின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இடையில் ஆர்மீனியா உள்ளது. சோவியத் யூனியன் தோற்றம் ஆர்மீனியா, அசர்பைஜான், ஜோர்ஜியா ஆகிய நாடுகளையும் உள்ளடக்கியது. தெற்கே ஈரானையும் துருக்கியையும் எல்லையாகக் கொண்டுள்ள நக்சிவன் பிரதேசம் தனக்கான ஒரு பாராளுமன்றத்தையும் கொண்டுள்ளது. கிட்டத்தட்ட கியுபெக் மாகாணத்தை ஒத்த அரச சபையாகவே இயங்குகின்றது.

ஆர்மீனியா - அசர்பைஜான் மோதல்கள் இரு நாடுகளும் மதத்தால் வேறுபட்டவை. துருக்கியால் இன அழிப்பு செய்யப்பட்டது ஆர்மீனியா. அப்போது அசர்பைஜானிகளும் இவ் இன அழிப்பில் ஈடுபட்டுள்ளர்கள். அசர்பைஜானின் பல நகரங்களில் ஆர்மீனியர்கள் பெருமளவு வாழ்கின்றனர். தலைநகர் பக்குவில் இன்றும் ஆர்மீனியர்கள் அதிகளவு வாழ்கின்றனர். அவ்வாறு அதிகம் வாழும் மற்றொரு மாநிலம் நகோர்னோ-கரபாக் (Nagorno-Karabakh). இப்பிரதேசம் தன்னை தனி நாடாகவும் அறிவித்தது. 1992-2023 காலப்பகுதியில் நகோர்னோ - கரபாக் தனிநாடாகவே இயங்கியது. சர்வதேச நாடுகள் இதனைத் தனிநாடாக அங்கீகரிக்கவில்லை. நகோர்னோ-கரபாக், அசர்பைஜானின் ஒரு மாநிலமாகும். சோவியத் காலத்திலும் இது ஒரு தனிக் குடியரசாகவே இருந்தது. இங்கு அதிகளவு ஆர்மீனியர்கள் வாழ்கின்றனர். இவர்களது கட்டுப்பாட்டுக்குள்ளேயே இந்த மாநிலம் உள்ளது. இதனால் ஆர்மீனியாவிற்கும் அசர்பைஜானிற்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டன. 1988-1994 காலப்பகுதியில் இரு நாடுகளும் மோதிக்கொண்டன. 1993-இல் ஆர்மீனியா நகோர்னோ-கரபாக் பிரதேசத்தின் 20 வீத நிலத்தை கைப்பற்றியது.

2020-இல் மீண்டும் மோதல்கள் வெடித்தன. துருக்கி, அசர்பைஜானுக்கு ஆதரவு வழங்கியது. துருக்கிக்கும் ஆர்மீனியாவிற்குமிடையில் கற்காலம் தொடங்கி எதிரி நாடுகளாகவே யுள்ளன. இறுதியில் ஆர்மீனியா பின்வாங்கியது. ஆர்மீனியாவிற்கும் நகோர்னே-கரபாக் பிரதேசத்துக்குமிடையில் உள்ள பிரதேசத்தை லச்சின் கொறிடோர் (lachin corridor) என அழைப்பார்கள். நகோர்னே-கரபாக் மக்கள் ஆர்மீனியாவிற்கு லச்சின் கொறிடோர் பிரதேசத்தினூடாகவே செல்லமுடியும். இப்பிரதேசத்தை சோவியத் படைகள் கண்காணிக்கின்றன.

மற்றொரு சிறு நிலப்பகுதியும் சர்ச்சைகளைக் கொண்டுள்ளது. அது அசர்பைஜானின் பிரதான நிலப் பிரதேசத்துக்கும், அதன் மற்றொரு சிறு பிரதேசமான நக்சிவனுக்குமிடையில் அமைந்துள்ள சன்ஹீசர் கொறிடோராகும் (zangezur corridor). சன்ஹீசர் கொறிடோர் என்பது அசர்பைஜானின் பிரதான நிலப்பகுதியை அதன் வெளிப்புறப் பகுதியான நக்சிவன் பிரதேசத்துடன் இணைக்க வடிவமைக்கப்பட்ட ஒரு முன்மொழியப்பட்ட போக்குவரத்து பாதையாகும். இது ஆர்மீனியாவின் சியூனிக் மாநிலம் வழியாகச் செல்கிறது. அசர்பைஜான் மற்றும் துருக்கியால் வலுவாக ஆதரிக்கப்படும் இந்த திட்டம் பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முக்கிய உட்கட்டமைப்பு முயற்சியாகும். இருப்பினும், இது மிகவும் சர்ச்சைக்குரிய பிரச்சினையாகவும் உள்ளது. ஆர்மீனியாவும் ஈரானும் இதனை உறுதியாக எதிர்க்கின்றன. இந்த வழித்தடம் ரஷ்யா மற்றும் பிற உலகளாவிய நாடுகளை உள்ளடக்கிய பரந்த புவிசார் அரசியல் இயக்கவியலில் மேலும் சிக்கியுள்ளது.

இந்த திட்டம் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், போக்குவரத்து செலவுகளைக் குறைத்தல் மற்றும் அசர்பைஜான் மற்றும் நக்சிவன் இடையே பயண நேரத்தை கணிசமாகக் குறைத்தல் மூலம் துருக்கி மற்றும் ஐரோப்பாவுடனான அசர்பைஜானின் வர்த்தகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அசர்பைஜானின் பரந்த பொருளாதார பல்வகைப்படுத்தல் முயற்சிகளுக்கு பங்களிக்கும். அத்தகைய விரிவாக்கம் விவசாயம் இயந்திர உற்பத்தி போன்ற துறைகளை உள்ளடக்கும். நக்சிவன் இடையே விமானப் பயணத்தைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும், குறிப்பிடத்தக்க செலவு சேமிப்பை உருவாக்கும் மற்றும் பிராந்திய மேம்பாட்டு முயற்சிகளை வலுப்படுத்தும்.

இந்த வழித்தடம் பிராந்திய இணைப்பில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சீனா, மத்திய ஆசியா மற்றும் ஐரோப்பாவை இணைக்கும் அதிகரித்து வரும் முக்கியமான வர்த்தக பாதையான மத்திய வழித்தட முன்முயற்சியின் ஒரு மூலக்கல்லாகும். புவிசார் அரசியல் பதட்டங்கள், குறிப்பாக ரஷ்யா-உக்ரைன் மோதல் காரணமாக கணிசமான இடையூறுகளை எதிர்கொண்ட வடக்கு வர்த்தக வழித்தடங்களுக்கு இந்த வழித்தடம் ஓர் அத்தியாவசிய மாற்றாகச் செயற்படுகிறது. ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் பயணிக்கும் பொருட்களுக்கு நம்பகமான பாதையை வழங்குவதன் மூலம் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் ஏற்படுத்தப்படும். இந்த அதிகரித்த செயற்றிறன் மத்திய ஆசிய நாடுகள் ஐரோப்பிய சந்தைகளை மிகவும் தடையின்றி அணுக அனுமதிக்கும். மேலும் அவற்றை உலகப் பொருளாதாரத்தில் மேலும் ஒருங்கிணைக்கும். கூடுதலாக, மத்திய வழித்தடத்தின் வளர்ச்சி துருக்கிய உலகில் பொருளாதார ஒத்துழைப்பின் வளர்ந்து வரும்




போக்குடன் ஒத்துப்போகிறது. அசர்பைஜான் துருக்கி மற்றும் மத்திய ஆசிய குடியரசுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துகிறது. எனவே, சன்ஹீசர் கொறிடோர் வெறுமனே ஒரு பிராந்திய உட்கட்டமைப்புத் திட்டம் மட்டுமல்ல, பல கண்டங்களில் பொருளாதார நிலப்ப ரப்புகளை மறுவடிவமைக்கக்கூடிய ஒரு பரந்த உருமாறும் முயற்சியின் ஒரு பகுதியாகும்.

## புவிசார் அரசியல் பதட்டங்கள்:

இறையாண்மை, தேசிய பாதுகாப்பு மற்றும் வரலாற்று குறை கள் குறித்த கவலைகளை மேற்கோள்காட்டி, ஆர்மீனியா இந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறது. ஆர்மீனியத் தலைவர்கள் தங்கள் இறையாண்மை பிரதேசத்தின் வழியாக அசர்பைஜானுக்கு ஒரு புறம்பான பாதையை வழங்குவது தேசிய ஒருமைப்பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்றும், அதன் சொந்த எல்லைகள் மீதான ஆர்மீனியாவின் கட்டுப்பாட்டை அச்சுறுத்தும் ஒரு முன்னுதாரணத்தை அமைக்கும் என்றும் வாதிடுகின்றனர். அத்தகைய ஒரு பாதை அசர்பைஜானின் இராணுவ அல்லது பொருளாதார வற்புறுத் தலை எளிதாக்கும் என்ற அச்சத்தால் இந்தப் பிரச்சினை மேலும் அதிகரிக்கிறது, குறிப்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல்களின் வரலாற்றைக் கருத்தில் கொண்டு, அசர்பைஜான் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு பாதை ஆர் மீனியாவை ஈரான் மற்றும் இந்து சமுத்திரத்துடன் இணைக்கும் முக்கியமான போக்குவரத்து மற்றும் வர்த் தக பாதைகளுக்கான அணுகலைக் கட்டுப் படுத்தக்கூடும் என்று ஆர்மீனியத் தலை வர்கள் வாதிடுகின்றனர்.

இப்பாதைத் திட்டத்தை ஈரான் எதிர்க்கின் றது. இந்தப் பிராந்தியத்தில் ஈரானின் முக்கி யத்துவத்தை குறைக்கும் என ஈரான் இதனை தீவிரமாக எதிர்க்கின்றது.

கூடுதலாக, ஈரான் இந்த வழித்தடத்தை துருக்கி தனது புவிசார் அரசியல் வரம்பை விரிவுபடுத்துவதற்கான ஒரு வழியாகக் கருது கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் அசர்பை ஜானின் நிலைப்பாட்டை வலுப்படுத்துவது ஈரானின் கவலைகளை மேலும் அதிகரிக் கிறது. ஏனெனில் அசர்பைஜானின் பாகுவின் வளர்ந்து வரும் செல்வாக்கு பிராந்தியத் தில் நேரடிச் சவாலாகக் கருதப்படுகிறது. துருக்கிய தேசியவாதத்தின் எழுச்சி குறித்து ஈரான் ஆழ்ந்த எச்சரிக்கையுடன் உள்ளது. இது ஈரானின் கணிசமான அசர்பைஜான் சிறுபான்மையினரிடையே பிரிவினைவாத உணர்வுகளைத் தூண்டக்கூடும் என்று அஞ்சுகிறது. ஈரானின் மொத்த மக்கள் தொகையில் 35 வீதமானோர் இன ரீதியாக அசர்பைஜானி என்று அடையாளம் காணப் படுவதால், பிராந்திய புவிசார் அரசியலில் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் உள் நாட்டு விளைவுகளை ஏற்படுத்தக்கூடும், ஈரானின் எல்லைகளுக்குள் அதிக சுயாட்சி அல்லது பிரிவினைவாத இயக்கங்களுக் கான கோரிக்கைகளைத் தூண்டக்கூடும். இந்த அச்சுறுத்தல் களுக்கு பதிலளிக்கும் விதமாக, ஆர்மீனியாவுடனான உறவு களை வலுப்படுத்துவதன் மூலமும், பிராந்திய வர்த்தகம் மற்றும் அதன் செல்வாக்கைப் பராமரிக்கும் மாற்றுப் போக்கு வரத்து வழிகளை ஆதரிப்பதன் மூலமும் ஈரான் இந்த திட் டத்தை எதிர்க்க தீவிரமாக முயன்றுள்ளது.

சன்ஹீசர் கொறிடோர் குறித்த ரஷ்யாவின் நிலைப்பாடு மிகவும் நுணுக்கமானது. இது அதன் சிக்கலான புவிசார் அரசி யல் நலன்களைப் பிரதிபலிக்கிறது. பிராந்திய இணைப்பு மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்தும் முயற்சிகளை ரஷ்யா பொதுவாக ஆதரிக்கும் அதே வேளையில், இந்த வழித்த டத்தின் பரந்த தாக்கங்கள் குறித்து அது எச்சரிக்கையாக உள்ளது. மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து இணைப்புகள் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் மற்றும் யூரேசிய வர்த்தக வலையமைப்புகளில் அதன் பங்கை வலுப்படுத்தும் என்பதை ரஷ்யா அங்கீகரிக்கிறது. அதில் அது தவிர்க்க முடியாத பகுதியாகும். இருப்பினும், இந்த திட்டம் மூலோ பாய அபாயங்களையும் கொண்டுள்ளது, குறிப்பாக பிராந்தி யத்தில் துருக்கியின் விரிவடையும் செல்வாக்கு தொடர்பாக. இந்த வழித்தடம் துருக்கியின் இருப்பை உறுதிப்படுத்தினால் அது தெற்கில் ரஷ்யாவின் நீண்டகால ஆதிக்கத்துக்குச் சவாலாக அமையும், இது முன்னாள் சோவியத் குடியரசுகள் மீது ரஷ்யாவின் செல்வாக்கைக் குறைக்கும்.



> “ பிராந்திய இணைப்பு மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்தும் முயற்சிகளை ரஷ்யா பொதுவாக ஆதரிக்கும் அதே வேளையில், இந்த வழித்தடத்தின் பரந்த தாக்கங்கள் குறித்து அது எச்சரிக்கையாக உள்ளது. மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து இணைப்புகள் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் மற்றும் யூரேசிய வர்த்தக வலையமைப்புகளில் அதன் பங்கை வலுப் படுத்தும் என்பதை ரஷ்யா அங்கீகரிக்கிறது. ”

கூடுதலாக, ஈரானுடனான ரஷ்யாவின் உறவு அதன் நிலைப் பாட்டை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது. சன்ஹீசர் கொறிடோர் பாதையை ஈரான் தனது பிராந்திய நிலைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகக் கருதுகிறது. மேலும் இந் தப் பாதையின் சாத்தியமான பொருளாதார நன்மைகளைக் கருத்தில்கொண்டு ரஷ்யா ஈரானுடனான அதன் மூலோபாய உறவைச் சமநிலைப்படுத்த வேண்டும். ரஷ்யா இந்தத் திட்டத்தை வெளிப்படையாக ஆதரித்தால், ஈரானுடனான அதன் இராஜதந்திர உறவுகள் மோசமடையக்கூடும். ஏனெனில் அது தனது பிரதேசத்தை கடந்து செல்லும் எந்தவொரு போக்குவரத்து பாதைக்கும் கடுமையான எதிர்ப்பை வெளிப் படுத்தியுள்ளது. அதே நேரத்தில், ரஷ்யா தற்போது ஆதிக் கம் செலுத்தும் முக்கிய போக்குவரத்து பாதைகள் மீதான கட்டுப்பாட்டை இழக்கும் அபாயத்தில் உள்ளது. இதில் அதன் சொந்த யூரேசிய பொருளாதார கட்டமைப்பின் வழியாகச் செல்லும் பாதைகளும் அடங்கும். பிராந்திய போக்குவரத்துத் துறையில் ரஷ்யாவின் மையத்தன்மையை இந்த பாதை குறைத்தால், அது சோவியத்துக்கு அதன் பரந்த செல்வாக்கை குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடும்.

எனவே, இந்தப் பாதையில் ரஷ்யாவின் ஈடுபாடு ஒரு சமநிலைப்படுத்தும் செயலாகும். துருக்கி அல்லது அசர்பைஜான் விகிதாசாரமற்ற மேலாதிக்கத்தைப் பெறாமல் இருப்பதை உறுதி செய்யும் அதே வேளையில், மேம்பட்ட இணைப்பிலிருந்து பொருளாதார நன்மைகளைப் பெற மாஸ்கோ முயல்கிறது. அதே நேரத்தில் எந்தவொரு இறுதி ஒப்பந்தமும் அதன் பிராந்திய நிலைப்பாட்டை மேலும் சிதைக்கவோ அல்லது அதன் முக்கிய உறவு நாடுகளுடானான உறவுகளை பாதிக்கவோ கூடாது என்பதை உறுதி செய்கிறது.

இதற்கிடையில், ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலான போக்குவரத்து இணைப்பாக அதன் வியூக உத்தி கொண்ட மதிப்பை அங்கீகரித்து அதன் பெல்ட் அண்ட் ரோடு (சில்க் பாதை) முன்முயற்சியில் இந்த பாதையை ஒருங்கிணைப்பதற்கான சாத்தியத்தை சீனா சாதகமாகக் கருதுகிறது. சீனா பெரும்பாலும் நடுநிலையான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வந்தாலும், பிராந்தியத்தில், குறிப்பாக ரஷ்யா மற்றும் ஈரானுடனான அதன் பொருளாதார கூட்டமைப்புக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய விரும்புகின்றது.

இந்தப் பிரதேசத்தில் துருக்கியின் செல்வாக்கு அதிகரிப்பதனை இஸ்ரேல் விரும்பவில்லை. இஸ்ரேலுக்கு எதிராக முன்னாள் சோவியத் குடியரசுகளை குரல் எழுப்புமாறு துருக்கி வலியுறுத்தியதை இஸ்ரேல் விரும்பவில்லை.

ஆவணி எட்டாம் நாள் அசர்பைஜானுக்கும், ஆர்மீனியாவிற்குமிடையில் சமாதான ஒப்பந்தம் ஒன்று அமெரிக்காவில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ரம்ப் முன்னிலையில் கைச் சாத்திடப்பட்டது.

Trump Route for International Peace and Prosperity என்ற திட்டத்தின் கீழ் ரம்ப் பாதை என்ற பெயரில் சன்ஹீசர் கொறிடோர் அழைக்கப்படும்.

## அமெரிக்கா:

இன்றைய அமெரிக்கா, 1790-களில் இருந்த அமெரிக்கா வல்ல. இது அமெரிக்காவின் நில அளவை மட்டுமே குறிப்பிடப்படுகின்றது. 1790-இல் இன்றைய அமெரிக்காவின் புளோரிடா பிரதேசம், கிழக்கு புளோரிடா, மேற்கு புளோரிடா என ஸ்பெயினின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அதே போல் கலிபோர்னியா, லூசியான பிரதேசங்கள் ஸ்பெயினின் ஆட்சிக் குட்பட்டிருந்தது. கலிபோர்னியாவிற்கு வடக்கே இன்றைய வோசிங்டன் மாநிலத்தை எவருமே ஆட்சி செய்யவில்லை. அலாஸ்கா ரஷ்யாவின் ஒரு பிரதேசமாகவேயிருந்தது. 1804-இல் லூசியானா வாங்கப்பட்டது. ரெக்சாஸ் மாநிலமும் ஒரு தனிநாடாகவேயிருந்தது. ஸ்பெயின், பின்னர் மெக்சிக்கோ விற்குமிடையில் ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து அமெரிக்கா கலிபோர்னியா, ரெக்சாஸ் மாநிலங்களைத் தனதாக்கிக் கொண்டது. கலிபோர்னியாவிலிருந்து 3857 கி. மீற்றர் தூரத்தில் உள்ள ஹவாய் தீவுகள் 1959-இல் அமெரிக்காவின் ஐம்பதாவது மாநிலமாக மாறியது. Baker Island, Howland Island, Howland Island, Jarvis Island, Johnston Atoll, Midway Islands, Puerto Rico, Guam, Danish Virgin Islands Kingman Reef, Swains Island, Kanton Island, Water Island, Caroline Islands, Marshall Islands ஆகிய தீவுகளும், பிரதேசங்களும் அமெரிக்காவினால் ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது வாங்கப் பட்டது எனக் கூறப்படும் பிரதேசங்கள். பிலிப்பைன்ஸ் தீவுகள் 1898-இல் ஸ்பெயினிடமிருந்து அமெரிக்காவால் வாங்கப்பட்டவை. பின்னர் 1946-இல் பிலிப்பைன்ஸ் சுதந்திரம் பெற்றது. எனினும் இன்றும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. Guantánamo கியுபாவில் உள்ள ஒரு சிறு துறைமுகமாகும். 1903-இல் அமெரிக்கா ஆக்கிரமித்தது. பல தடவைகள் கியூபா இப்பிரதேசத்தை விட்டு வெளியேறுமாறு அமெரிக்காவை கோரியிருந்தது. எனினும் அமெரிக்கா வெளியேறவில்லை. அந் நிலத்துக்கான வாடகையை அமெரிக்கா செலுத்தவதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. கஸ்ரோ இவ் வாடகையை பெற மறுத்தார். இன்று

உலகின் மிக மோசமான அமெரிக்க சிறைச்சாலை இங்கேயுள்ளது. இதில் பல தீவுகள் ஆசியாவில் உள்ளன. பசுபிக் தீவுகள் அமெரிக்காவிலிருந்து பல ஆயிரம் மைல்கள் தள்ளியே உள்ளன.

### சன்ஹீசர் கொறிடோர் – அமெரிக்கா:

அமெரிக்காவின் புதிய காலனித்துவ பிரதேசம் சன்ஹீசர் கொறிடோர். இந்தப் பாதை ரம்ப் பாதை என அழைக்கப்படும். இதனை ஆமேனியாவிடமிருந்து 99 வருடங்களுக்கு குத்தகைக்கு அமெரிக்கா வாங்கியுள்ளது. இனிமேல் அசர்பைஜானின் பிரதான நிலப்பரப்பிலிருந்து நக்சிவன் பிரதேசத்துக்கு பொருட்களை இலகுவாக ஏற்றிச் செல்ல முடியும். மக்கள் பயணிக்கவும் முடியும்.

### ஏன் அமெரிக்கா இந்தப் பாதையை குத்தகைக்கு எடுத்தது. இதனால் அமெரிக்காவிற்கு என்ன இலாபம்?

2025 TRIPP ஒப்பந்தம் சோவியத் வீழ்ச்சிக்குப் பிறகு இந்தக் கண்ணோட்டத்தை நனவாக்குவதற்கான மிகவும் உறுதியான படியைக் குறிக்கிறது. இந்த நீண்ட வரலாறு இந்த பாதை ஏன் வெறும் உட்கட்டமைப்பாக மட்டுமல்லாமல் தெற்கு பிரதேசத்தில் ஒரு குறியீட்டு மற்றும் மூல உத்தியுடனான பாலமாக பார்க்கப்படுகிறது என்பதை விளக்குகிறது. இந்த ஒப்பந்தத்துக்கு அப்பால் ஆர்மீனியாவும், அசர்பைஜானும் அமெரிக்காவுடன் எண்ணெய் வளங்கள், தொழில்நுட்பம் சார்ந்த ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளன.

அமெரிக்கா நீண்ட காலமாக காத்திருந்த ஒரு விடயம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை திறம்படச் செயற்பட்டுள்ளது என்றே கூற வேண்டும். இந்தப் பாதை வெறும் 20 மைல்கள் நீளம் கொண்டது. இது ஆர்மீனியாவில் அமைந்துள்ளது. இப்பொழுது ரம்ப் பாதை என பெயர் மாற்றம் பெற்றுள்ளது. அசர்பைஜான் அரசு அமெரிக்காவின் பாதையூடாகவே தனது நக்சிவன் பிரதேசத்துக்கு செல்லமுடியும். துருக்கியும் அசர்பைஜானும் நெருக்கமான உறவு நாடுகள். துருக்கிக்கு இப் பாதை வணிகத்துக்கு சிறந்தது. அமெரிக்கா பல தசாப்தங்களாகப் பழைமையான முட்டுக்கட்டைகளை உடைக்கவும், ஐரோப்பாவின் எரிசக்தி விநியோகங்களை ரஷ்யாவிலிருந்து வேறுபடுத்தவும், ஒரு முக்கியமான போக்குவரத்து பிரதேசத்தில் ரஷ்யா சீனா மற்றும் ஈரானின் வளர்ந்து வரும் செல்வாக்கை குறைக்கவும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த முயற்சி, ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்குமிடையில் உள்ள புவிசார் நிலப்பரப்பின் ஓர் அரிய அதிகார வெற்றிடத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் அமெரிக்காவின் பரந்த இலட்சியத்தை பிரதிபலிக்கிறது. இது வரலாற்று ரீதியாக ரஷ்யாவால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட ஒரு பிரதேசமாகும். ஆனால் செப்டம்பர் 2023-இல் நகோர்னே-கரபாக்-இல் அசர்பைஜானின் தீர்க்கமான தாக்குதலின்போது ரஷ்யா தனது நட்பு நாடான ஆர்மீனியாவை பாதுகாக்கத் தவறியதன் விளைவாகும்.

அமெரிக்காவிற்கு இது சிறுபாதையானாலும் பெரும் விளைச்சலைக் கொடுக்கும். சீனாவின் சில்க் பாதையின் தொடர்ச்சி தடைப்படும். ஈரானை மற்றும் ரஷ்யாவைக் கண்காணிக்கவும் இப் பாதை அமெரிக்காவிற்கு உதவும். எனவே இது ஈரானுக்கும், ரஷ்யாவிற்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்கும். அதே சமயம் இப் பிரதேசத்தில் சீனாவின் வணிக மற்றும் இராணுவ நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும். இவற்றிற்கு அப்பால் ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்குமிடையிலான வணிக போக்குவரத்து அமெரிக்காவினால் கண்காணிக்கப்படவும், கட்டுப்படுத்தவும் முடியும். அசர்பைஜான் எண்ணெய் வளம் மற்றும் கனிம வளம் கொண்ட நாடு. இனிமேல் அமெரிக்கா இதன் வளங்களில் தனது வணிகத்தை ஆதிக்கத்தையும் வளர்ச்சியடையச் செய்யும். இவ்வளவு காலமும் ரஷ்யாவின் ஆதிக்கத்திலிருந்து இப்பிரதேசம் மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் நாடுகள், நேரடியாக அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றன.

அமெரிக்கா ஈரானின் எல்லையில் தனது படைத்தளத்தை நிறுவலாம். இது இஸ்ரேலுக்கான வெற்றியாகும். எனவே இத் திட்டத்தின் பின்னால் இஸ்ரேலும் உள்ளது என கருதலாம்.

### வணிக மாற்றங்கள்:

துருக்கி தனக்கு இப்பாதை திறப்பின் மூலம் 310 வீத விற்பனை அதிகரிப்பு ஏற்படும் எனக் கணித்துள்ளது. உலக வங்கியின் கணிப்பின்படி 2027-ஆம் ஆண்டுக்குள் இந்த பாதை, ஆண்டு வர்த்தக மதிப்பில் $50-100 பில்லியனைத் தாண்டும் என்று கூறுகிறது. ப்ளூம்பெர்க் தரவுகளின்படி இந்த பாதை ஐரோப்பா-ஆசியா போக்குவரத்து நேரத்தை ஏற்கனவே உள்ள பாதைகளுடன் ஒப்பிடும் போது 12-15 நாட்கள் குறைக்கக்கூடும் என்பதைக் குறிக்கிறது.

ஐரோப்பிய எரிசக்தி பாதுகாப்பிற்கு இதன் தாக்கங்கள் ஆழமானவை. IEA-இன் 2025 உலக எரிசக்தி திட்டங்களுக்கு 2030-ஆம் ஆண்டுக்குள் ஐரோப்பாவிற்கு 20 பில்லியன் சதுர மீட்டர்கள் (20 billion cubic meters) கூடுதலாக ரஷ்யா இல்லாத இயற்கை வாயு தேவைப்படுகிறது.



*“ துருக்கி தனக்கு இப்பாதை திறப்பின் மூலம் 310 வீத விற்பனை அதிகரிப்பு ஏற்படும் எனக் கணித்துள்ளது. உலக வங்கியின் கணிப்பின்படி 2027-ஆம் ஆண்டுக்குள் இந்த பாதை, ஆண்டு வர்த்தக மதிப்பில் $50-100 பில்லியனைத் தாண்டும் என்று கூறுகிறது. ”*

இயல்பாக்கப்பட்ட ஆர்மீனியா துருக்கி எல்லைகள் கஸ் பியன் இயற்கை வாயு மற்றும் எண்ணெய் இருப்புகளைப் பெறுவது இலகுவாக்கப்படும். மேலும் பிரிட்டிஸ் பெற்றோ லியம் போன்ற நிறுவனங்களுக்கு இறக்குமதி செலவுகள் 10-15 வீதத்தால் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அசர்பைஜான் நேரடியாக குழாய்கள் மூலம் ஐரோப்பாவிற்கு இயற்கை வாயுவை அனுப்பமுடியும். முன்னர் ரஷ்யாவின் ஆதரவு நாடான ஜோர்ஜியாவின் உதவி தேவைப்பட்டது. இதன் மூலம் ரஷ்யாவின் ஐரோப்பாவிற்கான இயற்கை வாயு விநியோகம் குறைக்கப்படும். இதுவும் அமெரிக்காவிற்கு ஒரு மூலோபாய வெற்றியாகும்.

அமெரிக்கா நேரடியாக இப் பாதையினூடாக 100 பில்லியன் அளவில் வருமானம் பெறும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனை விட வேறு பல வழிகளிலும் அமெரிக்கா வருமானத் தைப் பெறும்.

### ரம்ப் பாதையின் எதிர்காலம்:

பனாமாக் கால்வாய் போன்றே, அமெரிக்கா இப்பாதையி னூடாக சமாதானத்தை மட்டும் பேணவில்லை. இச்சமாதான ஒப்பந்தத்திற்காக டொனல்ட் ரம்ப்ற்கு நோபல் பரிசு கிடைக் கலாம். ஆனால் அவற்றை விட அமெரிக்கா தனது பகை நாடுகளான ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளுக்கு அருகில் சென்றுள்ளது. துருக்கி தனது வணிக இலாபத்திற்காக அமெ ரிக்காவுடன் பகைக்காது. இப்பிரதேசத்தில் தளம் அமைத்த தால் நேட்டோவிற்கும் அமெரிக்கா ஓர் எச்சரிக்கையைச் செய் கின்றது. நேட்டோவின்றியே அமெரிக்கா தான் உலக இரா ணுவ வல்லரசு என்பதனை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. இது ஒரு சாதாரண 20 மைல் பாதையல்ல. சீனா, ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளுக்கு எதிரான அமெரிக்காவின் பலமான அடியாகும்.

இப்பாதையில் வணிக போக்குவரத்தை இலகுவாக்காவிட் டால் இப்பிரதேசம் ஒரு போர்ப்பிரதேசமாக மாறக்கூடிய சாத் தியங்களும் உள்ளன. அதே சமயம் இப்பாதையைக் கொடுத்து ஆர்மீனியா அசர்பைஜானுடன் சமாதான ஒப்பந் தம் ஒன்றைச் செய்துள்ளது. நகோர்னோ-கரபாக் பகுதியில் உள்ள ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ஆர்மீனிய அகதிகள் குறித்து எந்தவித உறுதியையும் அசர்பைஜான் வழங்க வில்லை. அதே சமயம் அசர்பைஜான் தனது நாட்டிற்குள் அமெரிக்கா வருவதற்கு கட்டுப்பாட்டற்ற அனுமதி வழங்கி யுள்ளது. எனவே இந்த சமாதான ஒப்பந்தம் ஆர்மீனியா விற்கோ அசர்பைஜானுக்கோ நீண்ட காலத்தில் நன்மைய ளிக்கக் கூடியதல்ல. இது அமெரிக்காவிற்கும் டொனால்ட் ரம்ப்க்கும் கிடைத்த பெரு வெற்றியாகும்.



rathan@thaiveedu.com





# உலகநாடுகளின் கனிம வளமும்
# மன்னாரின் கருநிலப் போராட்டமும்

– சிவா முருகுப்பிள்ளை

இயற்கை நமக்கு தந்த வரப்பிரசாதமாக இந்தப் பூமிப் பந்தில் நாம் இணைந்துள்ளோம். நமது சூரிய குடும்பத்தின் பிரதான சக்தியான வலுவான சூரியன் இல்லாமல் பூமியும் இல்லை, நாமும் இல்லை. சூரியனின் உடைவில் இருந்து உருவான கிரகங்களில் இதுவரையிலும் பூமியில்தான் உயிரினங்கள் வாழ்கின்றன என்பதை விஞ்ஞானம் கண்டறிந்துள்ளது. ஆனாலும், இதை மீறிய தேடல்கள் முடிவில்லாமல் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. உயிரினங்கள் வாழ்வதற்கு அடிப்படையான நீரும், ஏனைய வாயுக்களும், தட்ப வெப்ப நிலையும் பூமியில்தான் உள்ளதாக விஞ்ஞானம் கூறுகிறது. இதையும் தாண்டி, இந்தச் சூரிய குடும்பத்தில் ஏதும் உயிர்கள் வாழ்வதற்கு ஏதுவாக இருக்கின்றனவா என்பதை அண்டம் வரை சென்று ஆராயும் செயற்பாடுகளும் தொடர்கின்றன.

கணிதம், இயற்பியல் (பௌதிகம்), வேதியியல் (இரசாயணம்) என விஞ்ஞான உலகம் தன்னை வளர்த்துக் கொண்டும் வருகின்றது. இந்த ஆராய்ச்சிகளும், தேடல்களும், கண்டுபிடிப்புகளும் மனிதர் தோன்றிய காலத்தில் இருந்து நடந்து கொண்டிருக்கின்றன. சில தேவைகளுக்கான தேடல்களும், வெளிப்பாடுகளும் நமக்கு வேதியியலின் (இரசாயனவியலின்) ஆவர்த்தன அட்டவணையில் உள்ள பல கனிமங்களைக் கண்டறிய உதவியுள்ளன.

இவற்றில் ஆரம்பத்தில் உலோகங்கள் பிரதான இடத்தை பிடித்தன. நிலத்தின் அடியில் ஏராளமாகக் கிடைக்கும் இரும்பு, அதன் வலிமையின் காரணமாக முதன்மை உலோகமாகக் கருதப்பட்டது. ஆனால், தரை மற்றும் கடல் பயணங்களைத் தாண்டி, விமானப் பயணம் அறிமுகமானபோது ஒரு புதிய சவால் உருவானது. ரைட் சகோதரர்களின் கண்டுபிடிப்பு, பறத்தலை சாத்தியமாக்கியது. இருப்பினும், புவியீர்ப்பு விசை காரணமாக, கனமான இரும்பு போன்ற உலோகங்கள் விமானப் பயணத்திற்குப் பெரும் தடையாக இருந்தன. பறக்கும் இயந்திரங்களுக்கு, பலமாக இருப்பது மட்டும் போதாது; எடை குறைவாக இருப்பதும் அவசியமானது. கனமான உலோகங்களுக்கு மாற்றாக, குறைந்த எடையுள்ள, ஆனால் அதிக வலிமை கொண்ட, விமானப் பயணங்களுக்குப் பயன்படுத்தப்படும் உலோகங்கள், மிக அதிக வெப்பநிலையிலும் கடும் குளிரிலும் தங்கள் தன்மையை மாற்றிக்கொள்ளாமல் இருக்க வேண்டும். அவை உருகாமலும், உடையாமலும், நெளியாமலும் இருப்பது அவசியம். இந்தத் தேவைகளை நிறைவேற்ற, எடை குறைந்த, ஆனால் வலிமையான கலப்பு உலோகங்கள் இந்தத் துறையில் பெரிதும் தேவைப்பட்டன. இந்தத் தேடலின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட, இல்மனைட் (Ilmenite) கனிமத்தின் கண்டுபிடிப்பு, அத்தகைய உலோகங்களின் வளர்ச்சிக்கு ஒரு புதிய சகாப்தத்தைத் தொடக்கி வைத்தது.

இது முதன்முதலில் ரஷ்யாவில் உள்ள இல்மன் மலை மற்றும் ஏரிப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால்தான், இதற்கு இல்மனைட் என்று பெயர் வந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய பனிப்போர் காலத்தில், சோவியத் ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் விமானங்களை உருவாக்க, இல்மனைட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட இலகுவான உலோகங்களைப் பயன்படுத்தின. இல்மனைட் போன்ற கனிமங்கள் உருவானது ஒரு நீண்டகால புவியியல் செயல்முறை. பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு உருவான பாறைகள், வெயிலில் காய்ந்தும், மழையில் நனைந்தும், வெப்பத்தில் விரிந்தும், குளிரில் சுருங்கியும் சிறிது சிறிதாகச் சிதைவுறத் தொடங்கின. இந்தச் சிதைவுறுதலின்போது பாறைகளில் உள்ள கனிமங்கள் உதிர்கின்றன. இவ்வாறு உதிர்ந்த கனிமத்துகள்கள் மழை நீரால் அரிக்கப்பட்டு, சிற்றோடைகள் வழியே ஆறுகளை அடைகின்றன. ஆற்று வெள்ளத்தில் அடித்துக் கொண்டு வரப்படும் இக்கனிமங்கள் ஓரளவிற்கு ஆற்றங்கரைகளிலும் ஆற்றுப்படுகைகளிலும் வண்டல்

> ***“இல்மனைட் கண்டுபிடிப்பு, உலோகக் கண்டுபிடிப்புகளில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது. ஏனெனில், இது எடை குறைந்த, அதே சமயம் வெப்பநிலை மாற்றங்களைத் தாங்கும் திறன் கொண்ட ஓர் கனிமம். அதனால், இதற்குத் தேவைகளும், சந்தையும் அதிகரித்தன.”***



"இல்மனைட் கடற்கரையில் உள்ள மணலில் கறுப்புத் துகள்களாக மணலுடன் கலந்து சிறிய அளவில் காணப்படுகின்றது. இதனை மணலில் இருந்து பிரித்தெடுக்க மணலை வகை தொகையில்லாமல் அகழுதல்... அள்ளுதல்... அகற்றுதல்... என்று இலங்கை போன்ற தீவுகளில் ஆரம்பமானது."

களாகப் படிகின்றன. கரையோரமுள்ள கடலின் கீழ் படிந்த மணலும், கடற்கரையோரமுள்ள மணலும் அலைகளில் சிக்கி முன்னும் பின்னும் தாலாட்டப்படும் போதும் அலைக்கழிக்கப் படும்போது, அடர்த்தி மிகுந்த இல்மனைட் மற்றும் ரூட்டைல் போன்ற கனிமங்கள் கரையோரம் படிந்து அளவில் மிகுகின் றன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தொடர்ந்து இது நடைபெறுவதால் பல லட்சக்கணக்கான தொன் அளவிற்கு இக்கனிமங்கள் சேர்ந்து விடுகின்றன.

இல்மனைட் கண்டுபிடிப்பு, உலோகக் கண்டுபிடிப்புகளில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது. ஏனெனில், இது எடை குறைந்த, அதே சமயம் வெப்பநிலை மாற்றங்களைத் தாங் கும் திறன் கொண்ட ஓர் கனிமம். அதனால், இதற்குத் தேவை களும், சந்தையும் அதிகரித்தன. இவை உலகின் எல்லா பாகங்களிலும் இல்லாது மிகச் சிலபகுதிகளில் அரிதாகக் கிடைக்கப்பெற்றமையினால் கிடைக்கும் இடங்களில் எல்லாம் இலாபத்தை மட்டும் கருத்தில் கொள்ளும் பல் தேசிய கம் பனிகளின் கழுகுப் பார்வை அங்கெல்லாம் பதிந்தன. இதன் ஒரு வடிவம் தான் இலங்கையின் இல்மனைட் தேடலும், திரு கோணமலையின் கிழக்கு கடலோரப் பகுதியில் அது கண்டு பிடிக்கப்பட்டதும் ஆகும்.

இது கடற்கரையில் உள்ள மணலில் கறுப்புத் துகள்களாக மணலுடன் கலந்து சிறிய அளவில் காணப்படுகின்றது. இதனை மணலில் இருந்து பிரித்தெடுக்க மணலை வகை தொகையில்லாமல் அகழுதல்... அள்ளுதல்... அகற்றுதல்... என்று இலங்கை போன்ற தீவுகளில் ஆரம்பமானது. இந்த திட்டமிடா மணல் அகழ்வால் கடல் நீர் தரைக்குள் புகும். இந்த மணல் அள்ளல் பாரிய பிரச்சினையாகியும் வருகின்றது. மணலை அள்ளுபவருக்கு, அந்த கறுப்பு வைரம் என அழைக் கப்படும் இல்மனைட் மட்டுமே முக்கியமாகத் தெரிகிறது; மிகுதியாக உள்ள வெண்மையான மணல் அவர்களின் கண் ணுக்குப் பெரியதாகத் தெரிவதில்லை. இதுவே இங்குச் சுற்றுச் சூழலுக்கு மிகப் பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. இது மன்னார் மாவட்டத்தின் பிரச்சினை மட்டும் அல்ல; வடக்குத் தமிழ் மக்களின் பிரச்சினை மட்டும் அல்ல; இது முழு இலங் கைக்கும் உரிய பிரச்சினை. இன்னும் சற்று பரந்து சர்வதே தேசியக் கண்ணோட்டத்தில் பார்த்தால் முழு மனித குலத் திற்கான பிரச்சினை.

மன்னார் மாவட்டத்தில் பல்தேசிய நிறு வனங்களின் இல்மனைட் கனிம மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் திட்டங் களுக்கு எதிரான மன்னார் மக்களின் போராட்டம், "மன்னார் கருநிலம் போராட்டம்" எனப் பரவலாக அறியப்படுகிறது. இந்த இல் மனைட் அகழ்வுப் பணிகள் தொடர்ந்தால், அப்பகுதியின் சுற் றுச்சூழல் சமநிலை பாதிக்கப்பட்டு, நிலங்களுக்குள் கடல்நீர் உட்புகும் அபாயம் உள்ளதாக போராட்டக்காரர்கள் தெரி வித்தனர். இதனால் மக்களின் வாழ்விடங்களும், பூர்வீக நிலங்களும் அழிந்துவிடும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். இதனை மன்னாருக்கான பிரச்சினையாக மட்டும் சுருக்காமல் இலங்கை முழுவதற்குமான பிரச்சினையாக பொதுமைப்படு தப்படவேண்டும். சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தாமல், இல்மனைட் கனிமத்தை பாதுகாப்பாகப் பிரித்தெடுத்து மனித தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். மாறாக வெறுமனே இதனை அரசியலாக ஒரு பகுதி மக்கள் மீதான மேலாதிக்க அகழ்வாகப் பார்த்தல் அது சரியான பாதையில் நகர்வதற் குரிய வாய்ப்புகளைக் குறுக்கிவிடும். மேலும், இந்தப் புவி யியல் வளம் நாட்டின் வளர்ச்சிக்கும், வருவாய்க்கும் பயன் படுத்தப்பட வேண்டும் என்பது மனிதகுலத்தின் தேவையாகும்.

ஒரு நாட்டின் வளங்கள் தரைக்கு கீழாக இருந்தாலும் மேலாக இருந்தாலும் அவை அந்த நாட்டிற்கே சொந்தமானது. இன் னும் சிறப்பாகச் சொன்னால் அது அந்த நாட்டின் சகல மக்க ளுக்கும் சொந்தமானது; பொதுவானது. இதில் கிடைக்கும் பயன்கள் வருமானங்கள் இயற்கைக்கு முரணான செயற்பாடு களால் கிடைத்தவை. இதனால் ஏற்படும் பாதிப்புகள் அனை வருக்கும் பொதுவானது ஆகும்.

பூமியின் வளங்களைத் தனி உடமையாக யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. இதன் அடிப்படையில் மனித குலத் திற்கு சொந்தமானதை ஒரு பல்தேசிய நிறுவனம் - அது அவுஸ்திரேலியா நிறுவனமாக இருக்கலாம், அமெரிக்க நிறு வனமாக இருக்கலாம். தனி நபரின் பணக் குவிப்பிற்கு அனும திக்கும் பொது போக்கு ஏற்புடையது அல்ல. இயற்கைச் சம நிலையைக் குறைக்கும் எந்த செயற்பாடுகளையும் நாம் பூமியில் செய்வதை மிகக் குறைந்த அளவாக, அல்லது அந்த மாற்றம் இயற்கை தன்னை மீள் உருவாக்கம் செய்வ தற்கான கால அவகாசம், அல்லது வாய்ப்பை வழங்கும் வகையிலேயே நாம் மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக: மரத்தின் குழைகளை கால் நடைகளுக்கு தீவனத்திற்காக வெட்டும்போது மரத்தை முழுமையாக தறிக்காமல்

கிளைகளை மட்டும் வெட்டுவது போல்... இந்த புரிதலுடனான செயற்பாடுகளைத்தான், இல்மனைட் திருகோணமலையிலும், மன்னாரிலும்... ஏன், இன்னும் புதிய இடங்களிலும் எடுக்கும் போது நாம் மேற்கொள்ள வேண்டும்.

'கருநிலம்' என்ற மன்னார் மக்களின் போராட்டம் உண்மையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சார்ந்ததாகவும் அந்த பகுதி மக்களின் பிரதான வாழ்வாதரமான கடற்தொழில் என்பனவற்றைக் குழப்பாமலும் இயற்கைச் சமநிலை தன்னை மீண்டும் மீள் உருவாக்கம் செய்து பழைய நிலைக்கு வருவதற்கான கால அவகாச வாய்ப்புகளை அனுமதிக்கும் எல்லைக்குள் நடைபெற்றாக வேண்டும். இதுதான் கருநிலப் போராட்டத்தின் அடிப்படை கோரிக்கையாக இருக்க வேண்டும்.

கடல் மண்ணை அள்ளி, கூடவே வேறு நாடுகளில் இருந்து மண்ணைக் கொண்டு வந்து, தமது மேடுகளாக மட்டும் உள்ள பல தீவுகளை காப்பாற்ற முயலும் மாலைதீவை நாம் நல்ல உதாரணங்களாகக் கொள்ளலாம். எம் மண்ணை நாமே அளவிற்கு அதிகமாக அள்ளி அதனைப் பிரதியீடு செய்யாது எங்கள் தலையில் நாமே மண்ணை அள்ளிப் போடும் செயற்பாடுகளைச் செய்தல் கூடாது. இந்த பாதிப்புகளை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதை நாம் உள்வாங்கியாக வேண்டும். இவற்றின் அடிப்படையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் தகவல்கள் அடங்கிய பதிவாக இதனைக் கட்டமைக்க முயல்கின்றேன்.

சிறிதளவு காணப்படுவதற்கு அப்பால் கடல் சார்ந்த கடற்தொழிலைப் பிரதானப்படுத்தப்படும் வாழ்வியலை இந்த பிரதேச மக்கள் கொண்டிருப்பது இங்கு சிறப்பான விடயமாகும். ஒரு எட்டு எட்டினால் இந்தியாவின் தனுஸ்கோடியை அடைந்து விடலாம் என்ற எமது உறவுகள் பற்றி உணர்வுகளும் அதிகம் உள்ள மக்கள் இவர்கள். பவளப் பாறைகளும் அதிக மீன் வளமும் கற்பகத் தருவான பனை வளங்களையும் அதிகம் உள்ள இந்த பூமி கடல் மட்டத்திற்கு தாழ்வாக உள்ளதாக புவியியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

மண்ணையும், மணலையும் கொண்டு தரையை மேலும் உயர்த்தி, கடல் நீர் உட்புகாமல் பாதுகாக்கப்பட்ட குடியிருப்புகளும் உள்ளன. தற்போது, கடல் நீர் உட்புகுவதைத் தடுத்தல் குறித்த சிந்தனையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் மீதான ஆர்வமும் பொது மக்கள் மத்தியில் அதிகமாகப் பெருகி வருகிறது. இந்நிலையிற்றான் உலகின் இல்மனைட்டு வியாபாரத்தில் முதன்மையாக கோலோச்சும் அவுஸ்திரேலிய தனியார் நிறுவனத்தின் பார்வை 2015-ஆம் ஆண்டளவில் இங்கு 'ரைற்றானியப்' பார்வையாக விழுந்துள்ளது.

இவற்றின் வெளிப்பாடே மன்னார் கடற்கரை ஓரங்கள் எல்லாம் மணலுடன் இரண்டறக் கலந்திருக்கும் இந்த கருப்பு நிற நில வளத்தை வகை தொகையில்லாமல் அள்ளி இல்மனைட் என்ற தாதுப் பொருளை தமக்கான இலாபங்களைப் பெருக்குவதற்கு அவுஸ்திரேலிய பல்தேசியக் நிறுவனம் முயன்று வருகின்றது.




"
***மன்னார் கடற்கரை ஓரங்கள் எல்லாம் மணலுடன் இரண்டறக் கலந்திருக்கும் கருப்பு நிற நில வளத்தை வகை தொகையில்லாமல் அள்ளி இல்மனைட் என்ற தாதுப் பொருளை தமக்கான இலாபங்களைப் பெருக்குவதற்கு அவுஸ்திரேலிய பல்தேசியக் நிறுவனம் முயன்று வருகின்றது.***
"

மன்னார் மாவட்டமும் அம்பாந்தோட்டை மாவட்டமும் இலங்கையின் அதிக வறட்சியான மாவட்டங்களாக, மழை வீழ்ச்சிகளின் அடிப்படையில் கருதப்படுகின்றன. ஆனாலும், இவை சகாரா பாலைவனம் போலவோ அரேபிய தேசங்கள் போலவோ புல்லு பூண்டுகள் இயற்கையாக முளைப்பதற்கு ஏதுவற்ற பூமிகள் அல்ல. முற்றாக புல்லு பூண்டும் பனையும் தென்னையும் வருடத்தில் பல மாதங்கள் பயிர்களை செய்வதற்கும் உரிய நிலம்தான். மன்னார் நகரம் என்று பொதுவாக அறியப்பட்டாலும் அந்த பிரதேச மக்கள் நாம் மன்னார் தீவிற்குள் இருக்கின்றோம் என்று தம்மை அதிகம் அடையாளப்படுத்துவதில் பெருமிதம் கொள்வதை அந்த மக்களோடு நெருங்கி பழகியவர்கள் அறிவர்.

மன்னார் நகர மக்கள் தங்கள் பிரதேசம் பற்றிய புரிதல் கொண்டவர்களாகவும் பெருமைகளைத் தாங்கியவர்களாகவும் காணப்படுகின்றனர். விவசாயத்திற்குரிய பூமியாகவும் அள்ளும் மணலுக்கு உடனடியாக மாற்றீடாக அதேயளவு மணல் அங்கே நிரப்பி இயற்கைச் சம நிலைய ஓரளவிற்கு சமப்படுத்தாத நிலை தொடரலாம் என்றும் நம்பப்படுகின்றது. இச்செயற்பாடுகள் அங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரம், சுற்று சூழல் போன்றவற்றிற்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி விழிப்புணர்வையும் ஏற்படுத்தி கவன ஈர்ப்புப் போராட்டங்களைச் செய்ய வைத்துள்ளது. மன்னாரில் ஏற்படப் போகும் இந்த பாதிப்பு மன்னாருக்கும் மட்டுமானதா என்றால், இல்லை. தமிழ் தேசியம் என்ற அளவிற்குள் உள்ள உணர்வாளர்கள் இது தமிழ் பிரதேசத்திற்கு கடும் பாதிப்பு என்றாக இதனைக் குறுக்கிக் கொள்ள முயலலாம். ஆனால், இது உண்மையில் இலங்கைக்கான பிரச்சினையாகவே நாம் பார்த்தாக வேண்டும். இதுதான் உண்மை என்பதற்கு அப்பால், தந்திரோபாய ரீதியில் இப்படியான அணுகு முறைதான் சரியானது.

அது இங்கு ஏற்படப் போகும் என்று நம்பப்படும் சுற்றுச் சூழல் பாதிப்பு மக்களின் வாழ்வாதாரம் போன்ற பிரச்சினைகளை நடைபெறாது தடுத்து வெற்றிகளை ஏற்படுத்த ஏதுவாக அமையும். இதற்கும் அப்பால் இதுவும் சர்வ தேசியவாத சிந்தனைகளின் அடிப்படையில் முழு உலகத்திற்கும் மனித குலத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடாக அமையலாம் என்ற அடிப்படையிலேயே இதனை அணுகவேண்டும். அப்போதுதான் உலகத்தின் சுற்றுச் சூழல் ஆர்வலர்களின் கவனத்தையும் நாம் பெறமுடியும்.

இது வரை உலகத்தின் பல நாடுகளில் கடல் மணலில் ஒரு பகுதியாக இல்மனைட் காணப்படும். அவ்வாறு இல்மனைட்டை மணலில் இருந்து பிரித்தெடுப்பதாகச் செயற்பட்ட இடங்களில் மக்கள் தொடர்ந்தும் கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். மன்னார் மாவட்டத்து மக்களும் சூழலியல் ஆர்வலர்களும் இப்போராட்டத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் ஏற்கனவே உலகின் பல இடங்களில் ஏற்பட்ட அனுபவங்களான இவற்றை தமது கவனத்தில் கொள்கின்றனர் என்பதை உணர முடிகின்றது.

## அவையாவன.....

எமது தேசத்திற்கு மிக அருகாக மன்னார் கடலின் மறு புறத்தில் உள்ள கேரளக் கடற்கரை மற்றும் தமிழகக் கடற்கரையில் இல்மனைட், ருட்டைல், ஜிர்கான் என்று மூன்று தாதுப் பொருள்கள் பொதுவாகக் கிடைக்கின்றன. பல தொழில் நிறுவனங்கள் கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில் கடற்கரை மணலை அள்ளியெடுத்துத் தொழில் செய்து வருகின்றன. தோரியம் உள்ளிட்ட கதிரியக்கக் கனிமங்களைப் பிரித்தெடுக்கும் தொழில் கொல்லம் மாவட்டத்தில் பரவலாக ஆரோக்கியக் குறைவை ஏற்படுத்தியுள்ளது. குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பது, புற்றுநோய் அதிகரிப்பு முதலியவற்றுக்கான அபாயங்கள் பரவலாக இருக்கின்றன என்று ஆய்வுகள் சொல்லுகின்றன.

டைட்டானியம், டைட்டானியம் ஒக்சைடு என்ற அதன் ஒக்சைடு வடிவத்தில் இரும்பு மற்றும் யுரேனியம், தோரியம் போன்ற கதிரியக்கத் கனிமங்களும் கிடைக்கிறது. இயற்கையான அமைப்பை நாம் தொந்தரவு செய்யாத வரையில் கதிரியக்கத் தனிமங்களின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படாதவரையில் அவை அபாயகரமான கதிரியக்கத்தை வெளிப்படுத்துவதில்லை. அதுதான் இலத்திரன் இயல்பு. தோண்டி எடுத்து அவற்றைப் பிரித்தெடுத்துச் சுத்தம்செய்யும்போது, அவை கதிரியக்கத்தை வெளிப்படுத்துகின்றன. அதன் காரணமாகத் தொழிலாளர்களும் அருகாமையில் வசிக்கும் மக்களும் புற்று நோய் மற்றும் குறைபாடுள்ள குழந்தைப் பிறப்புகளுக்கு ஆளாக்கப்படுவார்கள் என அஞ்சப்படுகிறது.

## நிர்வாணமாகும் பூமி:

டைட்டானியம் வழக்கமாக 'நிர்வாணச் சுரங்க முறை'யில் எடுக்கப்படுகிறது. அதாவது புவிப் பரப்பின்மீது உள்ள அனைத்துத் தாவரங்களும் அழித்தொழிக்கப்பட்டு, பூமியை நிர்வாணமாக்கி, தாதுக்களைத் தோண்டியெடுக்கிறார்கள். மேல் மண்ணை அகற்றி வைத்துவிடுவார்கள். தாதுப்பொருள் அடங்கிய கீழ் மண் எவ்வளவு ஆழம்வரை கிடைக்கிறதோ அதனை எடுத்து முதல் கட்டச் சுத்திகரிப்புக்கு அனுப்புவார்கள். 6 மீட்டர் முதல் 20 மீட்டர்வரை தோண்டப்படும் எனச் செய்திகளில் அறியக் கிடக்கின்றது.

நிர்வாணச் சுரங்கம் உள்ளூர்ச் சுற்றுச்சூழல் மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆழமாகத் தோண்டுவது நிலத்தடி நீர்வளத்தைப் பாதிக்காது என்றாலும், நிலத்தடியை ஒட்டிய ஆழம் குறைவான நீர்வளமும் ஓடைகளும் வடிகால்களும் குளங்களும் மறைந்துபோக நீர்வளம் குறைய ஆரம்பிக்கும். கடற்பஞ்சு போல நீரை உறிஞ்சி வைத்துக்கொள்ளும் மணலை அகற்றுவது அப்பகுதியின் நீர்ச்சமநிலையைப் பாதிக்கும். நிலத்தின் மீதுள்ள தாவரங்கள் அகற்றப்படும் போது, வெப்பம் நேரடியாகப் பூமியைத் தாக்கும். அருகாமைக் கடலிலிருந்து வரும் குளிர்ந்த காற்று வெப்பமடையும். இதன் காரணமாக உள்ளூர் மழையின் அளவும் தன்மையும் முறையும் மாற்றமடையும். அனைத்தையும்விட மிக முக்கியமானது, கடல் அருகாமையில் இருப்பதால் நிலத்தடியில் கடல் நீர் புகுவதனால் குடிப்பதற்கும் வாழ்வதற்குமான நீர் அரிய பொருளாகிவிடும்.

நிர்வாணச் சுரங்கத்தால் எழும் தூசு அருகாமையில் உள்ள தாவரங்களில் படிந்து ஒளிச்சேர்க்கையைத் தடுத்து, இருக்கும் பசுமையையும் சாகடிக்கும். ரைற்ரானியம் இரு ஒக்சைட்டு உற்பத்தி இரண்டு வழிகளில் நடைபெறக்கூடும். ஒன்று சல்பேட் முறை, மற்றது குளோரைடு முறை. இந்த இரண்டு முறைகளுமே கடும் மாசுபாட்டை நீரில் ஏற்படுத்தக்கூடியவை.

**“கடற்பஞ்சு போல நீரை உறிஞ்சி வைத்துக்கொள்ளும் மணலை அகற்றுவது அப்பகுதியின் நீர்ச்சமநிலையைப் பாதிக்கும். நிலத்தின் மீதுள்ள தாவரங்கள் அகற்றப்படும்போது, வெப்பம் நேரடியாகப் பூமியைத் தாக்கும். அருகாமைக் கடலிலிருந்து வரும் குளிர்ந்த காற்று வெப்பமடையும். இதன் காரணமாக உள்ளூர் மழையின் அளவும் தன்மையும் முறையும் மாற்றமடையும்.”**



விவசாயத்தையும் மீன் வளத்தையும் அழிக்கக் கூடியவை. இந்த முறைகளில் மிக அபாயகரமானது சல்பேட் முறையாகும்.

## இந்த உற்பத்தி முறையில் வெளியேறும் மற்ற முக்கியப் பொருள்கள்:

நைதரசன்குளோரைடு ($NCl_3$), ஐதரோக் குளோரிக் அமிலம் (HCl), குளோரின் வாயு ($Cl_2$), அமிலத் தன்மையுள்ள சகதி, சல்பர் இரு ஒக்சைடு ($SO_2$), கார்பன் இரு ஒக்சைடு ($CO_2$), கன உலோகங்கள் நிறைந்த திடக்கழிவுகள், அமிலத் தன்மையுள்ள திரவக் கழிவுகள் மற்றும் காற்றில் மிதக்கும் திடப் பொருள் துகள்கள். ரைற்ரானியம் இரு ஒக்சைடு உற்பத்தியில் வெளியாகும் கழிவுகளில் அலுமினியம், ஆண்டிமணி, ஈயம், மோலிப்டனும் போன்றவை மிகக்குறைந்த அளவில் இருக்கும். இந்த உலோகங்கள் காற்றில் மிதக்கும் தூசுக்களிலும் இருக்கும். இந்த மிகக்குறைந்த அளவே போதுமான அபாயத்தை விளைவிக்கும். இவை நுரையீரலில் மிகக்குறைந்த அளவு நுழைந்தால்கூட, நீண்ட காலப்போக்கில், சிகிச்சை பலன் அழிக்காத இழப்புகளை ஏற்படுத்தக்கூடியவை.

சல்பர் இரு ஒக்சைடு ($SO_2$) உள்ளூர் அளவில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும். அது அந்தப் பகுதியில் அமில மழையை ஏற்படுத்தும். வெளியேறும் திடக்கழிவுகள் நிலத்தையும் நீரையும் கடலையும் நஞ்சாக்கும். இந்த முறையில் அமையும் இரும்பு குளோரைடும் உற்பத்தியை முறையாகப் பாதுகாத்து வைக்கவில்லை என்றால், அது சுற்றுச்சூழலில் கலந்துவிடும்.

கேரளாவில் சவரா என்னும் ஊரில் கேரளா மினரல்ஸ் அண்ட் மெட்டல்ஸ் லிமிடெட் (Kerala Minerals and Metals Limited - KMML) என்னும் நிறுவனம் ரைற்ரானியம் ஆலையை நடத்தி வருகிறது. அந்த ஆலையிலிருந்து வெளியேறிய கழிவுகள் நிலத்தடி நீரை மாசுபடுத்திவிட்டன என்று இந்திய உச்ச நீதி மன்றக் கண்காணிப்புக் குழு 2004-இல் குற்றஞ்சாட்டியது. தற்போது அந்த ஆலையைச் சுற்றியுள்ள ஊர்களிலுள்ள மக்கள் ஆலையினால் வழங்கப்படும் நீரை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குளோரைடு முறையின் மூலம் இரு ஒக்சினும் ஃபுரானும் (furans) உற்பத்தியாகும் என்பதே மிகுந்த கவனத்திற்குரியது. குளோரைடு முறையில் டைட்டானியம் டை ஆக்சைடு உற்பத்தி செய்யப்படும்போது, இரு ஒக்சின் (dioxins) மற்றும் ஃபுரான் (furans) போன்ற நச்சு வாயுக்கள் உருவாகும் வாய்ப்பு அதிகம் உள்ளது. இந்த வேதிப்பொருட்கள், உலக சுகாதார அமைப்பினால் (WHO) புற்றுநோய் உட்படப் பல உடல்நலக் கோளாறுகளை ஏற்படுத்தக்கூடியவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்டமான (UNEP - United Nations Environment Programme), டைட்டானியம் டை ஆக்சைடு உற்பத்தியில் பயன்படுத்தப்படும் குளோரைடு முறையானது, நச்சுத்தன்மை வாய்ந்த இரு ஒக்சின் மற்றும் ஃபுரான்களை வெளியிடக்கூடும் என்று குறிப்பிட்டுள்ளது. எனவே, இந்த உற்பத்தியின்போது சுற்றுச்சூழலையும், மனித ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதற்கான கடுமையான கட்டுப்பாடுகளும், விதிமுறைகளும் அவசியமாகின்றன.

அறிவியலுக்குத் தெரிய வந்த மிகக்கொடூரமான நச்சுத் தன்மை கொண்ட 100 இரசாயன வேதிப்பொருள்களின் பட்டியலில் இந்த இரண்டு பொருள்களும் இடம்பிடித்துள்ளன. இவை புற்றுநோயை உண்டாக்குவதோடு குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பதற்கும் காரணமாகின்றன. மிகக் குறைந்த அளவு இரு ஒக்சின் (dioxin) உடலில் நுழைந்தால்கூட அது உடலின் நோய் எதிர்ப்புத் தன்மையை ஒழித்துக்கட்டிவிடுகிறது. இதன் காரணமாக இப்பொருளை வேதியல் எய்ட்ஸ் (chemical AIDS) என்று கூறுகின்றனர். எய்ட்ஸ் நோயை ஏற்படுத்தும் வைரஸைப் போலவே, இரு ஒக்சினும் மற்றும் ஃபுரானும் (furans) உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைச் சிதைத்து, மனிதர்களை மரணத்தின் விளிம்புக்குத் தள்ளுகின்றன.

## தொழில் துறையில், உற்பத்தித் துறையில், உலகில் முன்னணியில் இருக்கும் சீனாவில்...

2006 ஒகஸ்ட்டில் சீனாவின் ஜிங்சூ மாகாணத்தில் டைட்டானியம் ஆலை நானி ஆற்றில் (Nanyi River) 3000 தொன் சுத்திகரிக்கப்படாத கழிவை வெளியேற்றிய குற்றத்திற்காக மூடப்பட்டது. அந்தக் கழிவு ஆற்றைக் கொன்று விட்டது என்கின்றனர் சீன மக்கள். ஆற்றங்கரையில் உள்ள ஊர்மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டனர்.

## பிரித்தானியாவில்...

1999-இல் இங்கிலாந்தின் டைட்டானிய உற்பத்தி ஆலை ஒன்றில் விபத்து ஏற்பட்டது. குழாய் உடைந்ததால் 8 ஆயிரம் தொன் திரவக் கழிவு வெளியேறியது. அதில் 37 தொன் அடர்த்தியான ஐதரோ குளோரிக் அமிலமும் அடக்கம். இதன் விளைவாக 17 ஏக்கர் நிலம் பயனற்றுப்போனது.

## ஐக்கிய அமெரிக்காவில்...

அமெரிக்காவின் தெற்கு ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள ஓகிஃபெனோகீ சதுப்புநிலப் (Okefenokee Swamp) பகுதிக்கு அருகே டுபொண்ட் (DuPont) என்ற நிறுவனம், டைட்டானியம் கனிமத்தை வெட்டி எடுக்க அனுமதி கோரியது. அந்தப் பகுதி அமெரிக்காவின் பழங்குடியினரின் புனித நிலமாகக் கருதப்பட்டது. மேலும், இது ஒரு மிக முக்கியமான சுற்றுச்சூழல் மண்டலமாகவும் உள்ளது. மணல் அகழ்வு நடவடிக்கை, அந்தச் சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்பைச் சேதப்படுத்தும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், அமெரிக்கப் பூர்வீகப் பழங்குடியினர் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களின் தொடர்ச்சியான போராட்டங்கள் மற்றும் கடுமையான எதிர்ப்பின் காரணமாக, டுபொண்ட் நிறுவனம் தனது திட்டத்தைக் கைவிட்டது. இந்தச் சம்பவம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பூர்வகுடி மக்களின் உரிமைகள் ஆகியவை வணிக நலன்களுக்கு மேலானவை என்பதை உணர்த்தும் ஒரு முக்கியமான உதாரணமாகப் பார்க்கப்படுகிறது.

## ஹோ சி மின்–இன் வியட்நாமில்...

நிலத்தடி நீர் கெட்டுப்போனது, மற்றும் குறைந்துபோனது என்று காரணம் காட்டி, மத்திய வியட்னாமின் கிராம மக்கள் 2006-இல் டைட்டானியம் தோண்டியெடுப்பதை வலுக்கட்டாயமாகத் தடுத்து நிறுத்தினர்.

## ஆபிரிக்க நாடான கென்யாவில்...

கென்யாவின் கடற்கரைப் பகுதியான க்வாலேவில் பழங்குடியினர் டைட்டானிய உற்பத்தியின் பாகசுரக் நிறுவனமான

“

டைட்டானியம் கலந்த எஃகு தற்போது உயர் தொழில்நுட்ப விமானங்கள், போர் விமானங்கள், ஏவுகணைகள், விண்வெளி ஓடங்கள், மருத்துவ அறுவை சிகிச்சைக் கருவிகள், மின் சாதனங்கள் மற்றும் பல உயர் தொழில் நுட்ப சாதனங்களில் பயன்படுத்தப் படுகிறது.

”

டியோமினுடன் (Tiomin) தங்களது மூதாதையர் நிலத்தைத் தோண்டவிடமாட்டோம் என்று விடாப் பிடியான போராட்டத்தை நடத்திவருகின்றனர். இங்கு எந்த முறையைப் பயன்படுத்துகிறார்கள் என்பது முக்கியமல்ல. ஏனென்றால் அனைத்து முறைகளும் ஆபத்தானவை. அவை சுற்றுச் சூழலையும் மனிதர்களின் நல்வாழ்வையும் பாதிக்கும். ஆனால் வலுவானதும் இலகு பாரம் என்றதுமான டைட்டானியத்தை மக்கள் தேவை களுக்காகப் பாவிப்பதற்கு பாதுகாப்பான முறை யில் கரு நிலத்தில் இருந்து பிரித்தெடுத்தல் என்பதை மிகவும் முக்கியமாக பிரதானப்படுத்தி செயற்பாட்டால் இந்த அழிவுகள் மிகக் குறைந்த அளவாக்கி ஆக்கத்திற்கு பாவிக்கலாம் என்பதற் காகவே இத்தனை அசம்பாவிதங்களையும் இங்கு குறிபிடுகின்றேன். (இதற்கான தகவல்களை நித் தியானந்த் ஜெயராமன் என்ற சுற்றுச் சூழல் ஆர் வலரின் பதிவுகளை உசாத்துணையாகக் கொண்டு பதிவு செய்துள்ளேன்)

மணலைத் தோண்டினாலும் டைட்டானியம் கிடைக்கலாம்... சில ஆண்டுகளில் அது தீர்ந்து போகும். தோண்டும் நிறுவனங்கள் உலக பணக் காரர்களில் மேல் இடத்தைப் அடைந்துவிடுவார் கள். அதே சமயம் அந்தப் பகுதியின் நீரும் தீர்ந்து போயிருக்கும்... இங்கு எது பெரியது ? எது முக்கியம் ? டைட்டானியமா ? நீரா ? எவர் முக்கிய மானவர் ? பல்தேசியக் நிறுவனங்களா ? மக்களா ? டைட்டானியம் இன்றியும் வாழ்ந்திருக்கிறோம். ஆனால் வள்ளுவன் கூற்றுப் போல் ‘நீர் இன்று அமையாது உலகு’.

டைட்டானியம் கலந்த எஃகு தற்போது உயர் தொழில்நுட்ப விமானங்கள், போர் விமானங்கள், ஏவுகணைகள், விண்வெளி ஓடங்கள், மருத்துவ அறுவை சிகிச்சைக் கருவிகள், மின் சாதனங்கள் மற்றும் பல உயர் தொழில் நுட்ப சாதனங்களில் பயன்படுத்தப்படுகிறது. அரிமானத்தை எதிர்க் கும் ஆற்றல் உள்ளதால் கடல் நீரைக் குடிநீராக மாற்றப் பயன்படுத்தப்படும் சாதனங்களிலும் இந்த உலோகக் கலவை பயன்படுத்தப்படுகிறது.

டைட்டானியம் இரு ஒக்ஸ்சைட்டு பெரும்பாலும் பெயின்ட் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. வெண்மை நிறத்தில் மாவுபோல் இருக்கும் டைட் டானியம் இரு ஒக்ஸ்சைட்டு நிறமியிலிருந்து தயா ரிக்கப்படும் வர்ணப்பூச்சுகள் தரமானவை. சிறந்த ஒளிர்தன்மை, நிறைந்த உழைக்கும் திறம், தூய வெண்மை நிறம், ஒளியை உள்ளே புகவிடா தன்மை இவையெல்லாம் டைட்டானியம் - இரு ஒக்ஸ்சைட்டு நிறமிக்கு உரித்தானவை.

பாலைக் காட்டிலும் வெண்மை நிறம் கொண்டது ரைற்ரானியம். இந்தக் கனிமத்தை 1791-ஆம் ஆண்டில் மனித இனம் முதன்முதலாக அறிந்து கொண்டது. 1795-ஆம் ஆண்டில் இதற்கு ‘ரைற்ரா னியம்’ என்ற பெயரை அது சூட்டியது. எனினும் அதனை சுத்தமான உலோகமாக மாற்றக் கற்றுக் கொண்டது என்னவோ 1910-ஆம் ஆண்டில்தான்!

இல்மனைட் மற்றும் ரூட்டைல் என்ற கனம் கூடிய கனிமங்களில் இருந்து ரைற்ரானியத்தைப் பிரித் தெடுக்கும் வழிமுறைகள் இதன் பின்னரே கண்ட றியப்பட்டன. 1946-ஆம் ஆண்டு வரையிலுமே ரைற்ரானியத்தை பரிசோதனைக் கூடங்களால் மட்டுமே உருவாக்க முடிந்தது. அந்த வருடத் தில்தான் ரைற்ரானிய உலோகத்தினை பெரிய அளவில் உருவாக்க முடியும் என்பதைக் வில் லியம் ஜே. கிரால் (William J. Kroll) என்பவர் கண்டு பிடித்தார். அவரால் முன்மொழியப்பட்ட கிரால் முறை (Kroll Process) இன்றுவரை கையா ளப்பட்டு வருகிறது.

மற்ற உலோகங்களைக் காட்டிலும் ரைற்ரானியம் எடை குறைந்தது. அதே நேரத்தில் எஃக்கைக் காட்டிலும் உறுதி மிக்கது. எந்த உலோகத்து டனும் எளிதில் சேரும் சிறந்த தன்மையையும் கொண்டது. இந்தத் தன்மைகள் சோவியத் ஒன்றி யத்தின் விஞ்ஞானிகளைக் கவர்ந்திழுத்தன.

தம் நீர் மூழ்கிக் கப்பல்களில் இந்த உலோ கத்தினை அவர்கள் பெரிதளவில் உபயோகப்ப டுத்தத் தொடங்கினர். இதுவே ரைற்ரானியத்தின் புகழை 1950-60-களில் எட்டுத்திக்கும் பரவச் செய்தது. சோவியத் விஞ்ஞானிகளின் போக் கைக் ‘கன்னம்’ வைத்து அறிந்து கொண்ட அமெரிக்க அரசு துடித்துதான் போனது. இருப் பினும் உடனடியாக சுதாரித்தும் கொண்டது.

டைட்டானிய உலோகத்தை ‘இராணுவ ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உலோகம்’ என்று அறி வித்து, அதனை சேமித்து வைக்கும் பணியில் உடனடியாக ஈடுபடத் தொடங்கியது. தான் உரு வாக்கும் போர் விமானங்களில் மிக அதிக அள வில் ரைற்ரானிய உலோகத்தினை உபயோகிப் பது என்ற முடிவை எடுத்தது.

மேற்கூறிய தன்மைகளே ரைற்ரானியக் கனிமத் தின் தீராப் புகழுக்குக் காரணம். என்றாலும் கூட, இன்றைய தேதியில் மனித இனத்தை அதன் அப் பழுக்கற்ற வெண்மை நிறமே அதிகம் கவர்ந் திழுத்திருக்கிறது. உலகில் உற்பத்தி செய்யப் படும் ரைற்ரானியக் கனிமத்தில் 95% இந்த வெண்மை நிறத்திற்காகத்தான் உபயோகப்படுத் தப்படுகிறது என்றால் மிகையில்லை.



James@thaiveedu.com

# கல்வி நெருக்கடியும் சீரில்லாத் திருத்தங்களும்

■ தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ



### தொடக்கக் குறிப்புகள்:

இலங்கை அரசாங்கம் கல்விச் சீர்திருத்தங்களை முன் மொழிந்துள்ளது. இந்தச் சீர்திருத்தங்கள் குறித்த தெளிவான வரைபடமோ, முழுமையான அறிக்கையோ இதுவரை பொதுமக்களின் பார்வைக்கு வரவில்லை. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பாராளுமன்றில் ஆற்றிய உரையும் அதைத் தொடர்ந்த ஒரு powerpoint presentation-னுமே இதுவரை கல்விச் சீர்திருத்தம் குறித்து பொதுவெளியில் உள்ள தகவல்களாகும். இவை போதுமானவையல்ல. அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள், பொதுமக்களின் பார்வைக்குக் கிடைத்துள்ளவற்றின் அடிப்படையில் அவை முன்னேற்றகரமானவை போலத் தெரிகிறது. அதில் உள்ள யோசனைகள் சுவாரஸ்யமாக உள்ளன. இருப்பினும், ஒரு விரிவான வரைபடம் இல்லை என்பது கவலையளிப்பது. இன்னும் அது பொதுவெளிக்கு வராமைக்கு மூன்று சாத்தியமான காரணங்கள் இருக்கலாம். முதலாவது, இன்னும் அவ்வாறு விரிவான ஒன்று இல்லாமல் இருக்கலாம், அல்லது கடந்த அரசாங்கம் முன்மொழிந்தவற்றின் தொடர்ச்சியாக இருக்கலாம். இரண்டாவது, ஒருவேளை அது தயாரிப்பில் இருக்கலாம், அவ்வாறாயின் இன்னும் சில காலத்தில் அது வெளிப்படுத்தப்படலாம். மூன்றாவது, அரசாங்கம் அதைப் பொதுவெளியில் வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கலாம். அரசாங்கத்திற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதால் அதைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தலாம். இந்த நாட்டில் குழந்தைகளின் கல்வி என்பது தேசிய பாதுகாப்புக் கவுன்சிலில் விவாதிக்கப்படும் விஷயமாக இல்லாததால், மக்கள் பங்கேற்புடன் விரிவான திட்டத்தை உருவாக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உள்ளது. அதேவேளை அரசாங்கத்தின் இந்த சீர்திருத்தங்களை எதிர்க்கட்சி தனது அற்ப அரசியல் விளையாட்டுத்தனத்தை விளையாடுவதற்கு பயன்படுத்தும் என்ற கவலை இருப்பினும் அதில் நியாயங்கள் உண்டு. கல்வித்துறைசார் சீரமைப்புகளுக்கு இவ்வாறுதான் தொடர்ச்சியாகக் குழிபறிக்கப்பட்டு வந்துள்ளது.

இருப்பினும், நமது குழந்தைகளின் கல்வியை அவர்களின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகக் கருதியதற்காக, அரசாங்கத்திற்கும், கல்வி அமைச்சர் என்ற முறையில் பிரதமருக்கும் நாம் நன்றிகூற வேண்டும். ஏனெனில் அவரின் பதவியில் இருந்தோர் தொடர்ச்சியாக இரக்கமின்றி புறக்கணித்த ஒன்று கல்வியும் கல்வியின் தரமுயற்சியும். இதன் விளைவாக, நாம் ஒரு தசாப்தத்



திற்கும் மேலாகப் பின்தங்கியுள்ளோம். இது கல்வி சீர்திருத்தங்களை மேலும் அவசரமாகவும் தேசிய முயற்சியாகவும் ஆக்குகிறது. நமது ஊக்கமளிக்காத பொருளாதார வளர்ச்சியின் காணாமல் போன கல்விக்கான நிதியும் சீர்திருத்தங் களும் தோல்வியடைந்த கல்வித்துறையை நோக்கி நகர்த்தியது. இதைச் சரி செய்வதற்கு அரசாங்கத்திற்கு இப்போது ஒரு வரலாற்று வாய்ப்பு உள்ளது.

கல்விச் சீர்திருத்தத்தை ஒருபோதும் முற்றிலும் தொழில்நுட்ப ரீதியான செயன் முறையாக நாம் குறுக்கிக்கொள்ளக் கூடாது. இருப்பினும், அது எந்த அளவிற்கு அரசியல் ரீதியாக நடுநிலையாக இருக்க முடியும் என்பது விவாதத்திற்குரியது. வரலாற்று ரீதியாக, கல்விக் கொள்கை என்பது இரண்டு விடயங்களை உள்ளடக்கியது. முதலாவது, சித்தாந்த ரீதியான போட்டி இரண்டாவது, தீவிர பொது நலனுக்கான தளமாகவும் மக்கள் செல்வாக்குக்கான களமாகவும் இருந்து வருகிறது. இலங்கையின் கல்விக் கொள்கையின் வேர்களை 1943-ஆம் ஆண்டின் கன்னங்கரா சீர்திருத்தங் களில் காணலாம். ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி என்ற கொள்கையை நிறுவுவதற்கு கன்னங்கரா அறிக்கை அடித்தளமாக அமைந்தது. மூன்றாம் வகுப்பு முதல் ஆங்கிலத்தை ஒரு பாடமாக அறி முகப்படுத்துவதை அது முன்மொழிந்தது, அதே நேரத்தில் தொடக்கக் கல்வி தாய் மொழியில் நடத்தப்படுவதை உறுதி செய்தது. கன்னங்கராவின் தொலைநோக்குப் பார்வை கல்வியை ஒரு பொது நன்மையாகவும் அடிப்படை உரிமை யாகவும் கருதியது. சமத்துவமான மற்றும் நவீனமான ஒரு அமைப்பை அவர் கற்பனை செய்தார். அதை நோக்காகக் கொண்டே அவர் இலவசக் கல்விக் கொள்கையையும் அதன் நடைமுறைச் செயற்பாடுகளையும் அறிமுகப்படுத் தினார். இதை சாத்தியமாக்குவதற்கு இலங்கைக்கு நீண்ட காலம் எடுத்தது. குறிப்பாக மலையகத் தமிழருக்கு இலவசக் கல்வி கிடைக்க நீண்ட நாட்கள் பிடித்தன. இருப்பினும் அனைவருக்கும் இலவசக் கல்வி என்பது சாத்தியமாகி யுள்ளது. அதன் உயரிய பலன்களை இலங்கையர்கள் அனுபவிக்கிறார்கள். இங்கு கேள்வி யாதெனில் தற்போதைய அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தத் திட்டமானது, கொள்கை அளவில், கன்னங்கரா அறிக்கையின் அடிப்படை இலக்குக ளுடன் ஒத்துப்போகிறதா அல்லது வேறுபடுகின்றனவா?

1981 முதல், ரணில் விக்கிரமசிங்கவின் கல்வி குறித்த வெள்ளை அறிக்கையுடன் தொடங்கி பெரும்பாலான கொள்கை முன்மொழிவுகள் அனைத்தும் (1991-இன் பிரேமதாச உடுகம சீர்திருத்தம் ஒரு விதிவிலக்கு), ஒரு புதிய தாராளமயத் திருப்பத்தை எடுத்துள்ளன. இந்த சீர்திருத்தங்கள் தனியார் துறையின் பங்கை வலியுறுத்து கின்றன, அரசு அதன் கல்விக் கடமைகளிலிருந்து விலகுவதை நியாயப்படுத்துகின்றன. பெரும்பாலும், பொருளாதார தாராளமயமாக்கல் தனியார் பள்ளிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பெருக்கத்தை துரிதப்படுத்திய 1977-க்குப் பிறகு, குறிப்பாக இந்தப் போக்கு வேகமெடுத்தது. இன்று தனியார் பல்கலைக்கழகங்களின் கட்டற்ற தரமற்ற பெருக்கம் வரை இது வளர்ந்துள்ளது.

> **“இந்த நாட்டில் குழந்தைகளின் கல்வி என்பது தேசிய பாதுகாப்புக் கவுன்சிலில் விவாதிக்கப்படும் விஷயமாக இல்லாததால், மக்கள் பங்கேற்புடன் விரிவான திட்டத்தை உருவாக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உள்ளது.”**

2023-இல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் 'தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பு - 2023-2033' என்ற யோசனை அறிமு கப்படுத்தப்பட்டது. அது நடைமுறைப்படுத்தப் படவில்லை என்றாலும், அதன் புதிய தாராளமய நோக்குநிலை வெளிப்படையானது. தனியார் துறைக்கு அதிகாரம் அளிப்பதன் மூலமும், அரசின் பங்கை படிப்படியாகக் குறைப்பதன் மூலமும் உற்பத்தி, விநியோகம், நிர்வாகம் முழுவதையும் தனியாரிடம் கையளிக்கும் வகையில் கல்வியை மறுசீரமைப்பதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டிருந்தது. பெற்றோர்கள், பழைய மாணவர் சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் நிதிச் சுமையைச் சுமக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இது கல்வியை ஒரு பொதுப் பொறுப்பாகக் கருதுவதில் அரசாங்கத்தின் அணுகுமுறையில் தெளிவான மாற்றத்தைக் குறிக்கிறது. இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியையே இப்போதைய அரசாங்கம் தூசுதட்டி வேறுவடிவில் முன்னெடுக்கிறது என்பது பலரின் கருத்தாக உள்ளது. அரசாங்கத்தின் நடத்தையும் இதற்கு வலுவூட்டுகிறது.

### ஜனாதிபதி உரையும் எதிர்வினையும்:

அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தம் குறித்து பாராளுமன்றில் உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, அனைத்து மாணவர்களும் 13 ஆண்டுகள் பள்ளிப்படிப்பை முடித்திருப்பதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், ஆசிரியர்கள் மற்றும் பிறர் மாணவர்களின் பள்ளி வருகையை உன்னிப்பாகக் கண்காணித்து, தேவையான இடங்களில் தீர்வு நடவடிக் கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். போக்குவரத்துச் சிக்கல்கள், அவர்கள் பயணிக்க வேண்டிய தூரம் மற்றும் தனியார் கல்விக் கட்டணத்தை அதிகமாக நம்பியிருப்பதால், மாணவர்களுக்குப் பள்ளிப்படிப்பு ஒரு கடினமான அனுபவமாக மாறியுள்ளது, இது அவர்களின் குழந்தைப் பருவ சுதந்திரத் தையும் மகிழ்ச்சியையும் பறித்து விட்டது என்று அவர் வருத்தப் பட்டார். பாடசாலைக் கல்வி தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் மற்றும் கொள்கைகளை அவர் விவா தித்தார். இருப்பினும், இந்தக் கருத்தின் கவனம் நிரந்தரமாக மூடப்படும் வாய்ப்பை எதிர் கொள்ளும் பின்தங்கிய பாடசாலைகளின் தலை விதியைப் பற்றியது.



98 அரசுப் பள்ளிகளில் புதிய மாணவர் சேர்க்கை எதுவும் நடைபெறவில்லை என்று ஜனாதிபதி திசாநாயக்க கூறினார். சுமார் 15% பள்ளிகளில் ஒவ்வொன்றும் 50-க்கும் குறைவான மாணவர்களைக் கொண்டிருந்தன என்றும், மூன்றில் இரண்டு பங்கு பள்ளிகளில் ஒவ்வொன்றும் 100-க்கும் குறைவான மாணவர்களைக் கொண்டிருந்தன என்றும் சுட்டிக்காட்டிய அவர், இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க ஒரு உத்தியைக் கையாள, பாடசாலைகள் பலவற்றை நிரந்தரமாக மூட வேண்டியிருக்கும் என்றும் கூறினார். அவர் மூடுவதற்கு முன் மொழியும், இந்த குறைந்த மாணவர் சேர்க்கை கொண்ட பள்ளிகளில் பெரும்பாலானவை கிராமப்புறங்களில் அமைந்துள்ளன.

சுவாரஸ்யமாக, மதுபானக் கடைகள், குதிரைப் பந்தையக் கடைகள் மற்றும் உணவு விற்பனை நிலையங்கள் கிராமப் புறங்களில் பெருகி இலாபகரமான நிறுவனங்களாக மாறி விட்டன. ஆனால் நாட்டின் அந்தப் பகுதிகளில் புதிய மாணவர் சேர்க்கை இல்லாததால் பள்ளிகள் மூடப்படுகின்றன. குறைந்த மாணவர் சேர்க்கை உள்ள பாடசாலைகளை மூடி, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நகர்ப்புற மற்றும் அரை நகர்ப்புற பள்ளிகளுக்கு போக்குவரத்து வசதியை வழங்கும் அதன் முன்னோடிகளின் கொள்கையைத் தொடரும் அரசின் திட்டம் தர்க்கரீதியானதாகத் தோன்றலாம். அந்தப் பள்ளிகளை ஒன்றிணைக்கும் திட்டமும் உள்ளது. இருப்பினும், இந்த உணர்திறன் மிக்க பிரச்சினையைக் கையாள்வதற்கான ஒரு உத்தி உண்மையான காரண காரணிகளைக் கண்டறிய முழுமையான ஆய்வின் அடிப்படையில் இருக்க வேண்டும். மேலும், எல்லாவற்றிற்கும் மேலாக, ஏழை மாணவர்கள் பள்ளியை விட்டு வெளியேறுவதைத் தடுக்க, அவர்களுக்கு பள்ளிக்கு எளிதாகச் செல்வது மறுக்கப்படக்கூடாது. மூடப் படுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள வறிய பள்ளிகளில் தற்போது உள்ள பெரும்பாலான மாணவர்கள், போக்குவரத்து இலவசமாக வழங்கப்பட்டாலும் கூட, நகர்ப்புற மற்றும் அரை நகர்ப்புற பள்ளிகளுக்குச் செல்லக்கூடாது.

நடைமுறைவாதம் மற்றும் பொருளாதார நிர்ப்பந்தங்கள், குறைந்த மாணவர் சேர்க்கை உள்ள பள்ளிகளை மூடுவதற்கான அரசாங்கத்தின் முடிவை பகுத்தறிவு மற்றும் விவேகமானதாகத் தோன்றச் செய்யலாம். ஆனால், அத்தகைய உத்தி கல்வி மற்றும் கிராமப்புற மேம்பாடு குறித்த ஜே.வி.பி.-யின் சித்தாந்த நிலைப்பாட்டிற்கு மிகவும் முரணானது. கிராமப்புற வளர்ச்சிக்கு உதட்டளவில் சேவை செய்த கடந்த அரசாங்கங்களின் கீழ் நடைமுறையில் இருந்த பெரும்பாலான வறிய பள்ளிகள் வறண்டு போயிருந்தன. முக்கிய துறைகளுக்கு அரசு வளங்களை ஒதுக்குவதில் வெளிப்படையான நகர்ப்புற சார்பு இருப்பதாக ஜே.வி.பி விமர்சித்து வந்துள்ளது. மேலும் கிராமப்புற வறுமை மற்றும் பின்தங்கிய நிலைக்கு அதைக் குற்றம் சாட்டியுள்ளது. 1980-களின் பிற்பகுதியில் இந்தக் கருத்தை வலியுறுத்துவ தற்காக 'கொலம்பாட்ட கிரி, கமட கெகிரி' (கொழும்புக்கு பால் மற்றும் கிராமத்திற்கு கசப்பான பழம்) என்ற ஒரு முழக்கத்தை அது உருவாக்கியது நினைவிருக்கலாம்.

ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், குறைந்த மாணவர் சேர்க்கை கொண்ட பாடசாலைகளை மூடுவதில் முதலில் தலையிடுவதைத் தவிர்த்து, போக்கு வரத்துப் பிரச்சினைகள் தவிர வேறு காரணங்களுக்காக நகர்ப்புற பள்ளிகளில் சேர முடியாத அதிகமான மாணவர் களுக்கு அவற்றை ஈர்க்கும் வழிகளையும் ஆராய தீவிர முயற்சி எடுக்க வேண்டும். இல்லையெனில், கிராமப்புறத்தில் பள்ளி இடைநிற்றல் விகிதம் அதிகரிக்கக்கூடும். ஜனாதிபதி திசாநாயக்க பாடசாலைப் படிப்பை இடைநிறுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை 2019-இல் 16,673 ஆக இருந்து 2022-இல் 20,759 ஆக உயர்ந்துள்ளதாகவும், பின்னர் 2024-இல் 20,755 ஆக உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்த புள்ளிவிபரங்களை மிகக் குறுகிய காலத்தில் குறைக்க முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். பள்ளிப் படிப்பை இடைநிறுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை ஒரு புள்ளி விபரத்தை விட மிக அதிகம், இது தீவிரமான ஒரு சமூகப் பிரச்சினைகளின் அறிகுறியாகும்.

## மதத்திற்கு முக்கியத்துவம்:

தற்போதைய சீர்திருத்த முன்மொழிவுகளின் அடிப்படையில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் மாணவர் 5 கட்டாய பாடங்களில் தோற்ற வேண்டும். தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமயம். இதைத் தவிர்த்து இரண்டு விருப்பப் பாடங்களைத் தெரிய முடியும். இதில் தகவல் தொழில்நுட்பம், வரலாறு, சமூகக் கல்வி, நுட்பவியல் (விவசாயம், உணவுற்பத்தி, கடல்வளம் போன்றன), புவியியல், தொழில்முனைவும் நிதியறிவும் ஆகியன அடங்குகின்றன. இதில் எழுப்பப்பட வேண்டிய பிரதானமான கேள்வி, மாணவர்களுக்கு அவசியமான தகவல் தொழில்நுட்பம் போன்றதொரு பாடத்தைக் கட்டாய பாடமாக்காமல் ஏன் சமயம் கட்டாய பாடமாயுள்ளது?

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்தைய வரலாற்றில் மதத்தின் இடம் முக்கியமானது. அதைப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் இல்லை. இருந்தபோதும் முற் போக்கான திசையில் பயணிப்பதாய் சொல்லிக் கொள்ளும் அரசாங்கத்தால்கூட மதத்தைத் தவிர்க்க முடியவில்லை என்பது வேதனைக்குரியது.

*"தற்போதைய சீர்திருத்த முன்மொழிவுகளின் அடிப்படையில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் மாணவர் 5 கட்டாய பாடங்களில் தோற்ற வேண்டும். தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமயம். இதைத் தவிர்த்து இரண்டு விருப்பப் பாடங்களைத் தெரிய முடியும். இதில் தகவல் தொழில்நுட்பம், வரலாறு, சமூகக் கல்வி, நுட்பவியல் (விவசாயம், உணவுற்பத்தி, கடல்வளம் போன்றன), புவியியல், தொழில்முனைவும் நிதியறிவும் ஆகியன அடங்குகின்றன."*





பன்முகத்தன்மை கொண்ட பல சமூகங்களில் மதம் பாடத்திட்டங்களிலிருந்து விலக்கப்பட்டுள்ளது, இது மதத்திற்கும் அரசுக்கும் இடையே தெளிவான பிரிவைப் பராமரிக்கவும், மதச்சார்பற்ற குடிமை மதிப்புகள் மற்றும் நடுநிலைமையை வலியுறுத்தவும் உதவுகிறது. நோர்வே போன்ற நாடுகள் மதத்தைக் கற்பிப்பது தொடர்பில் அனைத்தையும் உள்ளடக்கிய அணுகுமுறையை ஏற்றுக்கொள்கின்றன. அவை அனைத்து மதங்களையும் பொதுவாக மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றன. இந்த மாதிரிகள் நம்பிக்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, மாறாக பன்முக கலாசார உலகில் நம்பிக்கை அமைப்புகள் பற்றிய புரிதல், சகிப்புத்தன்மை மற்றும் விமர்சன சிந்தனையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

> **“இலங்கை போன்ற வளரும் நாடுகளுக்கு, மதவெறி பிளவுகளை வலுப்படுத்தாமல், மாறுபட்ட, ஜனநாயக சமூகங்களுக்கு மாணவர்களை சித்தப்படுத்தும் நவீன, மதச்சார்பற்ற கல்விப் பார்வையே அவசியமானது.”**

இலங்கை போன்ற மதத்தேசியவாதம் வலுவூன்றிய நாடுகளில் பாடத்திட்டத்தில் மதத்தைச் சேர்ப்பது ஆபத்தானது என்ற வாதம் வலுவானது. குறிப்பாக ஒரு நம்பிக்கை மற்றவற்றை விட சலுகை பெற்றிருந்தால் அல்லது கற்பித்தலில் கல்வி நடுநிலைமை இல்லாவிட்டால் இது பாரிய ஆபத்துக்களை ஏற்படுத்தும். இதன் விளைவுகளை இலங்கை ஏற்கனவே அனுபவித்துள்ளது. இலங்கை போன்ற வளரும் நாடுகளுக்கு, மதவெறி பிளவுகளை வலுப்படுத்தாமல், மாறுபட்ட, ஜனநாயக சமூகங்களுக்கு மாணவர்களை சித்தப்படுத்தும் நவீன, மதச்சார்பற்ற கல்விப் பார்வையே அவசியமானது.

பாடசாலைகளில் பாரம்பரிய முறையில் மதத்தைக் கற்பிப்பது - அதாவது, சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு சமூக ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் மூலம் ஏற்கனவே அதே மதத்தைப் பெற்ற மாணவர்களுக்கு மதத்தைக் கற்பிப்பது - பழங்காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ளது. இது எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகளில் ஒன்று. மாணவர்கள் அந்தந்த மதத்தைப் பற்றிய கூடுதல் விடயங்களை மனப்பாடம் செய்ய வைப்பதாக இருந்தால், அது நோக்கத்திற்கு உதவியது என்று பலர் ஒப்புக் கொள்வார்கள். இருப்பினும், இது அவர்களின் விமர்சன சிந்தனையை அதிகரிக்கவோ, நாட்டில் உள்ள பிற மதங்களில் ஆர்வம் காட்டவோ அல்லது தற்செயலாக அந்த மதங்களைப் பெற்றவர்களிடம் அவர்களின் அனுதாபத்தை அதிகரிக்கவோ சிறிதும் பங்களிக்கவில்லை. இலங்கையின் மதக்கல்வியின் பிரதான பிரச்சினை இதுதான். இந் நிலையில் மதத்தை ஒரு கட்டாய பாடமாக்குவது என்ற யோசனை அபத்தமானது மட்டுமல்ல, இலங்கையின் சிங்கள பௌத்த மேலாதிக்க நிகழ்ச்சி நிரலின் தொடர்ச்சியுமாகும். எல்லா ஆட்சியாளர்களும் பௌத்தத்தில் பிடித்துத் தொங்குகிறார்கள். அனுரகுமாரவும் ஜே.வி.பி.-யும் அதே கயிற்றில் தொங்கி கரையேற முயல்கிறார்கள்.

### வரலாறு என்ற வாலறுந்த பட்டம்:

கல்விச் சீர்திருத்தம் குறித்து பாராளுமன்றில் உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, வரலாறு கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் என்றும், அப்போதுதான் தேசிய அடையாளத்தை உருவாக்க முடியும் என்றும் தேசிய விழுமியங்களை மாணவர்களுக்குக் கடத்த வரலாறு தவிர்க்கவியலாத பங்காற்றும் என்றும் தெரிவித்திருந்தார்.

வரலாற்றைக் கற்பிப்பது நமது மிகப்பெரிய சவால். ஏனெனில் வரலாற்றைச் சரிவரக் கற்பிப்பதற்கு விமர்சன சிந்தனையைப் பெற்றிருத்தல் அவசியம். அதன் மூலம் மட்டும் வரலாறு குறித்து மனதில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் முற்கற்பிதங்களை விடுவிக்க முடியும், அல்லது வரலாறு என்பது கல்விக்கானதாக அல்லாமல், அரசியலுக்கு சேவை செய்யும் பிளவுபடுத்தும் கதைகளால் மாணவர்களைச் சிக்க வைக்கும் கருவியாகிவிடும். விமர்சனச் சிந்தனையைப் பயிற்றுவிக்கும் ஊக்குவிக்கும் கல்வி முறைகளுடைய நாடுகளில் உள்ள பாடசாலைகளில் தங்கள் பலநூறு ஆண்டுகாலக் கதையை பொய்கள் மற்றும் முரண்பாடுகள் இல்லாமல் கற்பிக்க முடிகிறது.

நீண்ட காலமாக, நமது வகுப்பறைகள் கதைகளால் எதிரொலிக்கின்றன, அவை கிளறிக்கொண்டே இருந்தாலும், தற்செயலாக பிரிவினையின் விதைகளை விதைத்துள்ளன. இளவரசர் விஜயனின் புராண வருகை, துட்டகைமுனு

விற்கும் எல்லாளனிற்கும் இடையிலான மகிமைப்படுத்தப்பட்ட மோதல் போன்ற விவரிப்புகள், எவ்வளவு கவர்ச்சிகரமானதாக இருந்தாலும், ஒன்றிணைக்கும் பாலங்களை விட பிரிக்கும் ஆயுதங்களாக மாறிவிட்டன. அதேவேளை சிங்கள வரலாற்றியலின் இயல்பான அழகியல் நிறைந்த பக்கங்கள் வரலாறாகக் கற்பிக்கப்படுவதில்லை. உதாரணமாக இளவரசர் சாலியருக்கும் அசோகமாலாவுக்கும் இடையிலான காதல் கதை, நாம் கட்டமைத்த செயற்கையான எல்லைகளைக் கடந்து செல்கிறது. இங்கே ஒரு இளவரசன், பாரபட்சத்திற்குப் பதிலாக அன்பைத் தேர்ந்தெடுத்தான், சாதிக்கும் இனத்திற்கு அப்பால் சென்று, குணத்தில் மதிப்புள்ள ஒரு பெண்ணை அரவணைத்தான். அவர்களின் சங்கமம், சிறிய மனங்கள் உருவாக்கும் சிறிய பிளவுகளை காதல் வெல்லும் என்பதற்கான அறிவிப்பாகும். ஆனால் அது எமது பாடப் புத்தகங்களில் இல்லை.

நமது சுதந்திரப் போராட்டம் பற்றி நமக்குச் சொல்லப்படும் கதைகள் அபத்தமானவை. சுதந்திரத்திற்குப் பிந்தைய அரசியலை விரிவாகப் படிக்க முன்னர் தேசியவாத காய்ச்சல் தொற்றவைக்கப்படுகிறது. குழந்தைகள் மனிதராக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதைப் புரிந்துகொள்வதற்கு முன்பே - 'சிங்கள' அல்லது 'தமிழ்' - இன அடையாளங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். இந்த ஆரம்பகால அடையாளங்கள் இளம் மனங்களில் செயற்கையான எல்லைகளை உருவாக்குகின்றன, அவை திறந்த மற்றும் வரம்பற்றதாக இருக்க வேண்டும். ஐந்து வயது குழந்தை முதன்மையாக ஒரு இனக் குழுவைச் சேர்ந்தவராக அடையாளம் காணக் கற்பிக்கப்படும்போது, அவர்கள் மனித அனுபவம் மற்றும் தொடர்பின் முழு நிறமாலையையும் ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, 'நாம்' மற்றும் 'அவர்கள்' என்ற குறுகிய கண்ணோட்டத்தின் மூலம் உலகைப் பார்க்கத் தொடங்குகிறார்கள்.

இலங்கையில் வரலாறு பாடமாகக் கற்பிக்கப்படுவதற்கான நல்லதொரு எடுத்துக்காட்டாக இல்லை. குறிப்பாக பல்லின பல்பண்பாட்டு சூழலில் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படும் வரலாறு என்பது மிகுந்த பக்கச்சார்பானதாக, வன்மம் மிக்கதாக மாறியுள்ளது. இந்தப் பின்புலத்தில் வரலாற்றைக் கட்டாய பாடமாக்குவது என்பது சிக்கலானது. இலங்கை கடந்த அரை நூற்றாண்டுகால வரலாறு வன்மமும் வன்முறையும் நிறைந்தது. அதைத் திறந்த மனதுடன் பேச இலங்கையர்கள் தயாராக இல்லாதபோது வரலாற்றைக் கற்பிப்பதில் பயனில்லை. இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகளை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு 1971-இலும் 1988/89-இலும் அரசாங்கங்கள் நிகழ்த்திய அரச பயங்கரவாதத்தைப் பேசத் தயாரா என்ற கேள்விக்கு எதிர்கட்சித் தலைவர் முதலில் பதில் சொல்லட்டும். அதற்கு பிறகு வரலாறு கற்பித்தல் குறித்துப் பேசலாம்.

> **“ ஐந்து வயது குழந்தை முதன்மையாக ஒரு இனக்குழுவைச் சேர்ந்தவராக அடையாளம் காணக் கற்பிக்கப்படும்போது, அவர்கள் மனித அனுபவம் மற்றும் தொடர்பின் முழு நிறமாலையையும் ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, 'நாம்' மற்றும் 'அவர்கள்' என்ற குறுகிய கண்ணோட்டத்தின் மூலம் உலகைப் பார்க்கத் தொடங்குகிறார்கள். ”**

### நிறைவுக் குறிப்புகள்:

கல்வியில் விமர்சன சிந்தனை தவிர்க்கவியலாதது. இது சமூக முன்னேற்றத்தின் முதன்மையான தீர்மானிப்பாகும். மாற்றத்தை எதிர்த்து, வழக்கமான மரபுகளைப் பின்பற்றினால், சிறந்த சமூகத்தை நோக்கி நகர்வது சாத்தியமில்லை. அதே பாதையில் இருப்பது எளிது. ஆனால், முன்னேற்றத்தைக் காண விரும்பும் எதிலும் எந்த நேர்மறையான மாற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. கல்வியைப் பொறுத்தவரை, பாடத்திட்டத் திட்டத்தின் முதல் கட்டங்களிலிருந்து மிகவும் மதிப்பு மிக்க விமர்சன சிந்தனை மேலோங்கியிருந்தால் மட்டுமே கற்றல் விளைவுகளில் எந்த அர்த்தமுள்ள மாற்றமும் வர முடியும்.

இலங்கையின் எந்தவொரு கல்விச் சீர்திருத்தத்திற்கும் சில அவசியமான முன்நிபந்தனைகள் உண்டு. அவற்றைத் தவிர்த்துவிட்டு கல்விச் சீர்திருத்தம் குறித்துப் பேசவியலாது. அதில் முதன்மையானது, இலவசக் கல்வியை முழுமையாக உறுதிசெய்தலும் அதற்கான நிதியை அரசாங்கம் குறையின்றி ஒதுக்கலுமாகும். இலவசக் கல்விக் கொள்கை பாதுகாக்கப்பட்டு வலுப்படுத்தப்படல் வேண்டும். அடுத்ததாக இன, மத, சாதிய சார்புகள் நீக்கப்பட்ட அனைவருக்கும் சமமான அணுகலை வழங்கக் கூடியதாகவும் வேறுபாடுகள் அற்றதாகவும் கல்வித் திட்டத்தையும் கல்வி வழங்கலையும் உறுதிப்படுத்தல். இதன் மூலம் வெளிப்படுத்த விரும்புவது யாதெனில், கல்விச் சீர்திருத்தம் என்பது வெறும் பாடத்திட்டத்தைச் சரிசெய்வது அல்லது நிர்வாகக் கடமைகளை மாற்றுவது மட்டுமல்ல. இது ஒரு ஆழமான சித்தாந்த செயல்முறையாகும். இதனாலேயே அரசாங்கத்திடம் வெளிப்படைத்தன்மையை எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலில் அரசாங்கம் இயங்குகிறது என்பது இரகசியமல்ல. இதனாலேயே நவ தாராளவாதத்தால் கபளீகரம் செய்யப்பட்ட ஒரு சீர்திருத்ததை நோக்கி நாம் நகர்கிறோமோ என்ற அச்ச உணர்வு தொற்றிக் கொள்கிறது. இலங்கை அதன் சமூக நலன்களில் பலவற்றை ஏற்கனவே பறிகொடுத்துவிட்டது. எஞ்சியிருப்பது இலவசக் கல்வியும், இலவச மருத்துவமுமே. அதையும் காவுகொடுப்பதற்கான ஒத்திகைதான் இந்த சீர்திருத்தங்களா என்பதற்கு காலம் பதில் சொல்லும். நிறைவாக ஒன்றை நினைவில் கொள்வது நல்லது:

'கல்வி வர்த்தகமாக மாறும்போது, மாணவர்கள் நுகர்வோராக மாறுகிறார்கள். கல்வி பண்டமாகிறது. பொது நன்மை என்பது தனியாரின் இலாபத்துக்குரியதாகிறது'



meenilankco@thaiveedu.com



– சகுனா எம். கமகே

தமிழில்: மணி வேலுப்பிள்ளை

# மக்களுக்கு நீதிகோரி ஓலமிடும் செம்மணிப் புதைகுழிகள்



(படம்: அகழ்வாராய்ச்சியின் முதலாவது கட்டம் முடிவுடைந்த பிறகு, 19 எலும்புக்கூடுகளாவது அகழ்ந்தெடுக்கப்பட்டதை தடயவியல்-தொல்லியலர் பேராசிரியர் ராஜ் சோமதேவா உறுதிப்படுத்தினார்)

வெறுமனே சான்றுகள் மாத்திரமல்ல, குற்றச்சாட்டும் மனச்சாட்சியின் நிலைகுலைவும்கூட செம்மணியில் தென்படுகின்றன; எலும்புகள் மட்டுமல்ல, திட்டமிட்டுத் தணிக்கை செய்யப்பட்ட நிகழ்வுகளும், போரையடுத்து, மக்களின் மறதிக்கோளாறைப் பயன்படுத்தி மௌனத்தை நிலைநாட்டிய ஓர் அரசினால் நெரிக்கப்பட்ட குரல்வளைகளும் கூட இத்தீவில் புதையுண்டவை என்பதைக் காத்திரமான முறையில் செம்மணி எமக்கு நினைவூட்டுகிறது.

**மீண்டும் செம்மணி ஓலம் கேட்கிறது:**

*அலரிப்பூ மரத்தடியில் நீ வீழ*
*உன் மார்பிலிருந்து குருதி பாய*
*இந்த நாட்டுக்கல்ல,*
*இந்த மண்ணுக்கே*
*உனை நான் ஈந்தேன்.*
*எழாதே! நீ எழுந்தால்*
*நாம் எங்கே போவது?*
*நீதியே புதையுண்ட பிறகு*
*மக்கள் எங்கே போவது? இனி,*
*யார்தான் குரல்கொடுப்பார் மக்களுக்கு?*

சொற்களுள் அடங்காத ஒரு போர் நிகழ்ந்த காலத்தில், ரத்ன சிறி விஜேசிங்கா எழுதிய மேற்படி சிங்களக் கவிதை வரிகள், இன்று மீண்டும் எதிரொலித்து, மேலும் எம்மை வருத்துகின்றன.

2025 யூலை மாதம் செம்மணியில் மறு அகழ்வாராய்ச்சி துவங் கிய 7-ஆம் நாள், ஒரு மண்வெட்டி ஆழங்கொண்ட புதைகுழியின் முன்னே, நான் நின்றிருந்தேன். ஒரு பொம்மையுடன் கூடிய பள்ளிப்பையை ஏந்தியபடி ஒரு பிள்ளையின் எலும்புக் கூடு தென்பட்டது. ஐ.நா. அனைத்துலக சிறார் அவசரகால நிதியம் (UNICEF) வழங்கிய பள்ளிப்பை அது!

இது வெறுமனே ஒரு போரின் நினைவுத் தடமல்ல; தண்டனைக்கு உட்படாமல் இழைக்கப்படும் கொடுமையின் தொடர்ச்சி இது; செம்மணியில் நாம் செவிமடுப்பது கடந்த காலத்தின் எதிரொலி அல்ல; அங்கு நிகழ்காலம் வெகுண்டெழுந்து குமுறுகிறது; அந்த மண்ணே மௌனத்தை விரட்டி அடிக்கிறது.

**“ *2018 முதல் 2019 வரை மன்னாரில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சியில் 346 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இற்றைவரை அவை இன்னாரின் உடல்கள் என்பது உறுதிப்படுத் தப்படவோ, அதற்குப் பொறுப்பேற்க வேண்டியது யார் என்பது நிச்சயிக்கப்படவோ, அதற்கு இழப்பீடு முன்வைக்கப்படவோ இல்லை.* ”**

செம்மணிக்கு மீள்வது என்பது, எமது நினைவை நாம் எதிர்கொள்வதாகும்; எமது மௌனத்துடன் நாம் மல்லாடுவதாகும்; நினைப்பதற்கல்ல, மறப்பதற்கு வகுக்கப்பட்ட ஒரு நீதிக் கட்டமைப்பின் மீது நாம் குற்றம் சுமத்துவதாகும். 1996-இல் கிரிசாந்தி குமாரசாமி கூட்டு வன்புணர்ச்சிக்கு உட்பட்டு, கொலையுண்டதை அடுத்து, செம்மணியில் பாரிய புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இன்று, 30 ஆண்டுகள் கழித்து, அச்சிறுமியின் கதையும், இங்கும் அங்குமாக எமது மண்ணில் புதையுண்ட எண்ணிறைந்த மக் களின் கதைகளும் மறுபடி வெளிவந்து, மறக்கடிக்கும் கலையில் துறைபோன எமது நாட்டைப் பிடித்து ஆட்டுகின்றன.

காரணம்: மௌனம் தற்செயலாய் நேர்வதல்ல; அது திட்டமிட்டு அரங்கேற்றப்படுவது; மறுப்பின் முழக்கமே மௌனம்; அந்த மௌனம் இன்னமும் கலைக்கப்படவில்லை.

## செம்மணியில் மறு அகழ்வாராய்ச்சி: படிமுறையும் வேதனையும்

செம்மணியில் தெரியவந்த பாரிய புதைகுழிகளை மறுபடி அகழும் பணி 2025-இல் தற்செயலாகவே துவங்கியது. பெப்பிரவரி மாதம் ஒரு கட்டுமானப் பணியின்பொழுது எலும்புகள் தென்பட்டபடியால், அதிகாரபூர்வமாக நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. ஆனாலும் அதனைத் தொடர்ந்து, அதற்குரிய அலுவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, பரந்துபட்ட முறையில் முன்னெடுக்கப்படவில்லை. பொருள்வசதி குன்றிய நிலையில், அரைகுறையாக, ஏனோதானோ என்று பதில்வினையாற்றும் மற்றுமோர் அரசியல் நடவடிக்கையாய் அது மாறியது.

அகழ்வாராய்ச்சியின் முதலாவது கட்டம் முடிவடைந்த பிறகு, 19 எலும்புக்கூடுகளாவது அகழ்ந்தெடுக்கப்பட்டதைத் தடயவியல்-தொல்லியலர் பேராசிரியர் ராஜ் சோமதேவா உறுதிப்படுத்தினார். பிறந்து 10 மாதங்கள் ஆகாத 3 குழந்தைகளின் எலும்புக்கூடுகளும் அவற்றுள் அடங்கும்.

சுரும்பூர்தி மூலமும், செய்மதி மூலமும் எடுக்கப்பட்ட படங்களைக் கொண்டு, மேலும் புதைகுழிகள் இருக்கக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டன. ஆயினும் அவ்வாறு அறியப்பட்ட இடங்களுள் 40 விழுக்காட்டிலும் குறைந்தளவு பகுதியே அகழ்ந்து பார்க்கப்பட்டது.

செம்மணி, ஒரு தனிப்பட்ட அகழ்வுப்புலம் அல்ல; நாடு புண்பட்ட இடம் இது; உண்மை புதையுண்ட இடம் இது. 2025 யூலை 4-ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேலும் 4 எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. 2 பிள்ளைகளின் எலும்புக்கூடுகள் அவற்றுள் அடங்குவதாக நம்பப்படுகிறது. தற்பொழுது இடம்பெற்றுவரும் அகழ்வாராய்ச்சியின் மூலம் இதுவரை 40 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காணாமல் போக்கடிக்கப்பட்டவர்களது குடும்பங்களின் பிரதிநிதியாக மனித உரிமைகள் சட்டவாளர் ரனிதா ஞானராஜா செயற்படுகிறார். சம்பந்தப்பட்ட குடும்பங்கள் வெறும் பார்வையாளர்களாக அல்ல, இழப்புகளின் நினைவைக் கட்டிக்காப்பவர்களாகச் செயற்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 600 குடும்பங்கள் இன்னமும் தம்மவரைத் தேடித்திரிகிறார்கள். ஏற்கனவே நிகழ்ந்த காட்டிக்கொடுப்புகள், நிறைவேறாத உடல்மீட்புகள், நீதித்துறையின் தட்டிக்கழிப்புகள், ஈற்றில் அரசியல் மௌனம் போன்றவை மேற்கொண்டும் நிகழக்கூடுமெனப் பலரும் அஞ்சுகிறார்கள்.

அவர்கள் அஞ்சுவதற்குப் போதிய நியாயம் உண்டு. மன்னார் முதல் களவாஞ்சிக்குடி வரை, மாத்தளை முதல் சூரியகந்தை வரை பாரிய புதைகுழிகளை அகழ்ந்தாராய்ந்த போதெல்லாம், அவற்றுக்குத் தடங்கல் விளைந்த வரலாறு படைத்தது இலங்கை.

2018 முதல் 2019 வரை மன்னாரில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சியில் 346 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இற்றைவரை அவை இன்னாரின் உடல்கள் என்பது உறுதிப்படுத்தப்படவோ, அதற்குப் பொறுப்பேற்க வேண்டியது யார் என்பது நிச்சயிக்கப்படவோ, அதற்கு இழப்பீடு முன்வைக்கப்படவோ இல்லை. அதிகாரிகளின் கவலையீனம் என்பது வெறுமனே படிமுறைத் தவறல்ல; அது அறநெறிக்கு நேர்ந்த கேடு! அறநெறிக்கு நேர்ந்த குலைவு!

## மானுடப்பண்பின் மறைவு:

செம்மணியில் தென்படும் துன்பியல் வெறுமனே இந்த நாட்டில் மட்டும் இடம்பெறவில்லை; உலகம் முழுவதும் பரந்துபட்ட முறையில் புதையுண்டுவரும் மானுட விழுமியங்களுடன் அது பின்னிப் பிணைந்தது.

இந்த 2025-ஆம் ஆண்டில், காசாவிலிருந்து போர்க் குற்றங்கள் நேரடியாக ஒளிபரப்பப்படும் உலகில், அங்கு சிறுவர்களின் இறப்புகள் நிகழுந்தோறும் எண்ணப்படும் உலகில்,

ஐக்கிய நாடுகள் அவையில் பெரிய வல்லரசுகளின் வெட்டு வாக்குகளினால் அனைத்துலகச் சட்டம் முடங்கிப்போன உலகில் நாங்கள் வாழுகின்றோம். இப்பொழுதெல்லாம் தலைமறைவாக அல்ல, அப்பட்டமாகவே இனப்படுகொலை புரியப்படுகிறது.

உலகில் காத்திரமான விசையாக விளங்கிய குடியாட்சி நெறி சார்ந்த மானுடத்துவம் மடிவதை இப்பொழுது நாம் காண்கிறோம். இரண்டாம் உலகப் போர்க்களத்து சாம்பல் மேட்டில் முளைவிட்ட நிறுவனங்கள், அமைதியையும் கண்ணியத்தையும் கட்டிக்காக்கவென அமைக்கப்பட்ட நிறுவனங்கள், இப்பொழுது செல்லாக்காசுகள் ஆக்கப்பட்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் மன்றம் ஏதேதோ பேசுகின்றது. ஆனால் தண்டனைக்கு உட்படாமல் நடத்தப்படும் புவியரசியல் அரங்கில், அதன் சொற்கள் கனதி குன்றி நிற்கின்றன.

காசாவில் காலந்தள்ளும் குடிமக்கள் மீது இஸ்ரேல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்வதும், அதனை நிறுத்த ஐ.நா. பாதுகாப்பு மன்றம் இம்மியும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும் அதன் நிலைகுலைவை உறுதிப்படுத்துகின்றன.

2025 யூன் மாத இறுதியில் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளர் வோக்கர் தேர்க், பாரிய செம்மணிப் புதைகுழிப் புலத்துக்கு மிகுந்த பற்றுணர்வுடன் சென்று, அங்கு 3 குழந்தைகள் உட்பட 19 பேரின் எலும்புக்கூடுகள் அண்மையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடத்தைப் பார்வையிட்டார்; 'மிகவும் உணர்ச்சிவசப்பட வைக்கும்' நிலைவரம் என்று கருத்துரைத்தார்; சுதந்திரமான தடயவியல் நிபுணர்கள் அவசரமாகத் தேவைப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார்; அகழ்வில் சம்பந்தப்பட்ட குடும்பங்களையும், சட்டவாளர்களையும் சந்தித்தார்; அகழ்வுக்கு ஐ.நா. பொறுப்பேற்க வேண்டும் என்ற அவர்களது மன்றாட்டத்தைச் செவிமடுத்தார்; நீதிகோரும் குடும்பங்களுடன் தோழமை பூணுவதைக் குறிக்குமுகமாக, 'அணையா விளக்கு'டன் அஞ்சலி நடைபெறும் இடத்தில் மலர்கள் தூவினார்; செம்மணியைக் கவனத்தில் கொண்டதன் மூலம், இலங்கையில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரின் தீரா விளைவுகளைக் குறித்துக் கொண்டார்; பொறுப்பேற்பு, வெளியுலகப் பொறுப்பு இரண்டையும் வலியுறுத்தினார்.

அந்த வகையிலே செம்மணி உலக வரலாற்றில் ஓர் அங்கமாகிறது; மீறப்பட்ட உடன்பாடுகளும், நிறைவேற்றப்படாத கடப்பாடுகளும், திட்டமிட்டு மறுக்கப்பட்ட நீதியும் புதையுண்ட புலமாக இப்பூவுலகு மாறிவிட்டது என்பதை அது குறிக்கிறது.

### மாறுகால நீதியும், மறதிக்கோளாறும்:

செம்மணியின் முதலாவது புதைகுழியை இலங்கை அரசு அம்பலப்படுத்தவில்லை; 1998-இல் ஒரு தனியாளே அதை அம்பலப்படுத்தினார். கிரிசாந்தி குமாரசாமியை வன்புணர்ச்சிக்கு உட்படுத்திக் கொலைசெய்த குற்றத்தில் பங்குவகித்தமைக்காக, இறப்புத்தண்டனையை எதிர்நோக்கியிருந்த, இளம்படைஞர் சோமரத்தின ராஜபக்சாவே இப்பாரிய புதைகுழிகளை அம்பலப்படுத்தினார். குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களையும், உடல்கள் புதைக்கப்பட்ட இடங்களையும் அவர் அம்பலப்படுத்தினார். அப்பொழுது இலங்கை அரசு முன்வந்து நீதியை நிலைநாட்டுவதற்குப் பதிலாக, சோமரத்தினா மீது சேற்றை வாரி இறைத்தது.

ஈற்றில், அதாவது 1999-இல், அகழ்வாராய்ச்சி துவங்கிய போது, 15 உடல்கள் மாத்திரமே கண்டுபிடிக்கப்பட்டன. பலரின் கண்களும், கைகளும் கட்டப்பட்டிருந்தன; கொலைஞர்கள் நேருக்குநேர் நின்று, அவர்களைச் சுட்டுப் புதைத்தது போல் தென்பட்டது. எஞ்சிய புதைகுழிகள் என்று சந்தேகிக்கப்பட்டவை என்றுமே அகழப்படவில்லை. இது தற்செயலான ஒன்றல்ல.

அடுத்தடுத்து எந்தக் கட்சி, எந்த ஆணையுடன் ஆட்சியேற்றாலும், அவை எல்லாம் செம்மணியை மறந்துவிடத் தீர்மானித்தன; சான்றுத் தடம் பதுக்கப்பட்டது; உயரதிகாரிகள் பாதுகாக்கப்பட்டார்கள்; சாட்சிகள் அச்சுறுத்தப்பட்டார்கள் அல்லது காணாமல் போக்கடிக்கப்பட்டார்கள்.

குற்றத்தீர்ப்புக்கு உள்ளான படையினர் என்ன பாடு என்பது தெளிவாகத் தெரியவில்லை. அவர்களுள் பலர் ஜனாதிபதியினால் மன்னிக்கப்பட்டதாகத் தெரிகிறது. 2010 வாக்கில் அவர்கள் பொதுவாழ்வுக்கு மீண்டுவிட்டார்கள் போலும்!

சட்ட விற்பன்னர் கிசாலி பிந்தோ ஜயவர்த்தன செவ்வனே எடுத்துரைத்தது போல், 'இங்கு சான்றுகள் கிடையாதபடியால் மாறுகாலநீதி தடங்கலுக்கு உள்ளாகவில்லை; அதிகாரபீடத்தின் உள்ளேயும், அச்சத்தின் உள்ளேயும் உண்மை திட்டமிட்டுப் புதைக்கப்பட்டுள்ளபடியால்தான், இங்கு மாறுகாலநீதி தடங்கலுக்கு உள்ளாகியிருக்கிறது.'



***ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளர் வோக்கர் தேர்க், பாரிய செம்மணிப் புதைகுழிப் புலத்துக்கு மிகுந்த பற்றுணர்வுடன் சென்று, அங்கு 3 குழந்தைகள் உட்பட 19 பேரின் எலும்புக்கூடுகள் அண்மையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடத்தைப் பார்வையிட்டார்; 'மிகவும் உணர்ச்சிவசப்பட வைக்கும்' நிலைவரம் என்று கருத்துரைத்தார்; சுதந்திரமான தடயவியல் நிபுணர்கள் அவசரமாகத் தேவைப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார்.***

### தேசிய மக்கள் சக்தி அரசின் மௌனம் காதை அடைக்கிறது:

நிலையூன்றிய ஊழல், தங்குதடையற்ற படைமயமாக்கம், மேல்தட்டு அரசியற் குழாத்தினரை தண்டனைக்கு உள்ளா காவாறு என்றென்றும் பாதுகாக்கும் கட்டுக்கோப்பு என்பவற்றைக் குறித்து விசனமடைந்து அலைதிரண்ட மக்களின் ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தி 2024-இல் ஆட்சியேற்றது. உண்மை, நீதி, மீளிணக்கம் என்றெல்லாம் வாக்குறுதிகளை அக்கட்சி அள்ளி வீசியது. தென்னிலங்கைச் சிங்கள மக்களிடையே மட்டுமல்ல, தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கிலும் கிழக்கிலும் கூட அது வாக்குகளை வாரிச்சென்று வெற்றிபெற்றது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியேற்று 8 மாதங்கள் கழிந்தும் கூட, செம்மணி குறித்த மௌனம் காதை அடைக்கிறது. அதிகாரிகள் எவரும் வந்து பார்க்கவில்லை; பொது அறிவிப்பு விடுக்கப்படவில்லை; ஒரு சைகையேனும் காட்டப்படவில்லை; போடி போக்காகவேனும் ஒரு கருத்து உதிர்க்கப்படவில்லை.

நீதிக்காகப் போராடுவதாக அரசாங்கம் மார்தட்டுகிறது; ஆனால், இலங்கையின் படுமோசமான பாரிய புதைகுழிகளுள் ஒன்றை மறுபடி அகழ்ந்தாராய்வதிலும், காணாமல் போக்கடிக்கப்பட்டோரின் எலும்புகள் அங்கு மண்டிக்கிடப்பதிலும் அதே அரசாங்கம் அறவே பாராமுகம் காட்டுகிறது.

இந்த முறையாவது நீதித்துறை சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்படும் என்று சிலர் வாதிக்கிறார்கள். ஆயினும், அரசியல் தலைமையின் மௌனத்தை, குறிப்பாக திறந்த மனதுடன் செயற்படுவதாக மார்தட்டும் ஒரு கட்சியின் மௌனத்தை, நாம் பொருட்படுத்தாமல் இருக்க முடியாது.

சூரியகந்தை முதல் மாத்தளை வரை, தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் பலரும் அரச பயங்கரத்தால் தாக்குண்டவர்கள். வன்முறை புரியும் இயந்திரத்தையும், தண்டனைக்கு உள்ளாகாத கட்டமைப்பின் தாக்கத்தையும் அவர்கள் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொண்டவர்கள். அப்படி இருந்தும் கூட, இன்று ஆட்சியில் அவர்கள் முடங்கி இருப்பதாகவே தெரிகிறது. இது திட்டமிட்டுக் கவனமாக நடத்தும் அரசியலாகுமா? அல்லது, இன்னும் அமைதியாகவும், நயவஞ்சகமாகவும் குற்றத்துக்கு உடந்தையாய் இருப்பதாகுமா?

தேசிய மக்கள் சக்திக்கு இன்னமும் ஒரு வாய்ப்பிருக்கிறது. சொற்சிலம்பத்தின் ஊடாக அல்ல, ஆட்சியாளரால் நெடுங்காலமாகக் கைவிடப்பட்ட சமூகங்கள் கடந்த தேர்தலில் வழங்கிய ஆணையின் ஊடாக ஈட்டிய வாய்ப்பு; எல்லா இனங்களையும் உள்ளடக்கி, அறம் காக்க அது ஈட்டிய அரிய வாய்ப்பு; அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, உண்மையைக் கண்டறியும் பொறிமுறை ஒன்றை அவர்கள் தோற்றுவிக்கலாம்; பல தரப்புகளும் பங்குபற்றும் வண்ணம், பலியானவர்களின் கண்ணியத்தைப் பேணும் வண்ணம், நம்பத்தகுந்த, வெளிப்படையான பொறிமுறை ஒன்றை அவர்கள் தோற்றுவிக்கலாம்.

> **"தேசிய மக்கள் சக்தி ஆட்சியேற்று 8 மாதங்கள் கழிந்தும் கூட, செம்மணி குறித்த மௌனம் காதை அடைக்கிறது. அதிகாரிகள் எவரும் வந்து பார்க்கவில்லை; பொது அறிவிப்பு விடுக்கப்படவில்லை; ஒரு சைகையேனும் காட்டப்படவில்லை; போடி போக்காக வேனும் ஒரு கருத்து உதிர்க்கப்படவில்லை."**

காலம் கடந்து வருகிறது; அரசாங்கம் எவ்வளவு காலத்துக்கு மௌனம் காக்கிறதோ அவ்வளவு காலத்துக்கு அதன் மௌனம் காதை அடைக்கப் போகிறது; பக்கஞ்சாரா மௌனம் அல்ல, காட்டிக்கொடுக்கும் மௌனம் காதை அடைக்கப் போகிறது.

### எதிர்முனைப்பட்ட ஊடகங்கள்:

2025-ஆம் ஆண்டு செம்மணியில் பாரிய புதைகுழிகள் மறுபடி அகழப்பட்டபொழுது, அங்கு எலும்புகள் மாத்திரம் வெளிப்படவில்லை. இலங்கை ஊடக அரங்கில் உள்ள ஆழ்ந்த பிளவுகளையும் அது அம்பலப்படுத்தியது.

தமிழ் ஊடகங்கள் செம்மணியில் நிலைகொண்டு, அன்றாடம் செய்திகளை வெளியிட்டன; துக்கம் கொண்டாடும் குடும்பங்களின் செவ்விகளைத் தாங்கிவந்தன; அகழப்பட்ட உடற்கூறுகளின் படங்களையும், தடயவியல் நிபுணர்களின் பகுப்பாய்வுகளையும் வெளிக்கொணர்ந்தன; அதேவேளை, பிரதான சிங்கள ஊடகங்கள் காத்த மௌனம் காதை அடைத்தது! பல தசாப்தங்களாக சிங்கள-பௌத்த தேசியத்தில் ஊறி, படையினரை வெற்றிவீரர்களாகக் கொண்டாடிக் கதையளக்கும் ஊடக வழமைக்கு செம்மணியால் ஆபத்து நேரும் அல்லவா! ஆதலால் சிங்கள ஊடகங்கள் பலவும் இந்த அகழ்வாராய்ச்சியைப் பொருட்படுத்தவே இல்லை; அல்லது அதை ஓர் ஓரச்செய்தியாகத் தாழ்த்தியும், பின்பக்கங்களில் புதைத்தும் வெளியிட்டன; 'பாதுகாப்புக் கரிசனைகள்' எனும் கண்ணாடி அணிந்து, அதை வெட்டிக்குறைத்து வெளியிட்டன. இது ஊடகப் பொறுப்புணர்வல்ல; திட்டமிட்டுத் தட்டிக்கழிக்கும் ஊடக வேலைப்பாடு! அத்தகைய மௌனம் நடுநிலை ஆகாது; திட்டமிட்டு மறுத்துரைக்கும் கட்டமைப்பின் வேலை அது.

அரச படைகளுடன் சம்பந்தப்பட்ட பாரிய புதைகுழிகள் கண்டறியப்பட்டதை ஒப்புக்கொள்வது, நெடுங்காலமாகப் பேணப்பட்டுவரும் கட்டுக்கதைகளுக்கு ஆப்பு வைப்பதாகலாம்; படையினர் புரிந்த குற்றங்களைப் பற்றிப் பேசுவோருக்கு புலி ஆதரவாளர்கள், தேசவிரோதிகள், தேசத்துரோகிகள் என்று முத்திரை குத்தப்படலாம்.

எனினும், இத்தகைய அரசியலை விட, அந்தப் பிள்ளையின் பள்ளிப்பையினுள் இருந்த காலணியும், பொம்மையும் உள்ளத்தை ஆழமாகப் புண்படுத்துகின்றன; நாட்டின் மனச்சாட்சியை நோக்கி அறைகூவுகின்றன.

உண்மையை அறிவிக்க மறுப்பது, வெறுமனே நெறிபிறழ்ந்த கோழைத்தனம் மட்டுமல்ல; அது குற்றத்துக்கு உடந்தையாய் இருக்கும் செயலாகும்; நீதியை ஓர் அச்சுறுத்தலாகவும், பொறுப்பேற்பை ஒரு காட்டிக்கொடுப்பாகவும் திரிக்கும் செயலாகும். ஆனாலும் அரசியல் யாப்பின்படி இன, மத, அரசியற் பேதமின்றி மக்கள் அனைவரையும் பாதுகாப்பதற்கு இலங்கை அரசு கடமைப்பட்டுள்ளது. சிங்கள

பௌத்தர்களை மட்டும் பாதுகாத்து, அதே மக்களை நோக்கி அறைகூவும் உண்மைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் அரசு, ஒரு குடியரசாகச் செயற்படாமல் நின்றுவிடுகிறது; ஓர் இன அரசாக மாறிவிடுகிறது.

செம்மணியில் இடம்பெற்றது ஒரு தனி நிகழ்வல்ல; திரும்பத் திரும்ப, திட்டமிட்டு, தண்டனைக்கு உட்படாமல், புரிந்த குற்றத்தின் தடத்தை ஒழித்துக்கட்டிய வரலாற்றில் செம்மணி ஒரு கூறு மாத்திரமே.

1990-ஆம் ஆண்டு சூரியகந்தையில் 33 பள்ளிச்சிறுவர்களை படையினர் படுகொலை செய்தனர். அதற்கு எவருமே பொறுப்பேற்க வைக்கப்படவில்லை. 1989-இல் ஜே.வி.பி. நடத்திய கிளர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட பாரிய புதைகுழி ஒன்று 2012-இல் மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்பாதகத்தைப் புரிந்தவர்கள் இன்னமும் இனங்காட்டப்படவில்லை. மன்னாரில் 346 உடல்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. எனினும் மௌனமே தொடர்ந்தது. கொக்குத்தொடுவாய், திருக்கேதீஸ்வரம், களுவாஞ்சிக்குடி முதலிய இடங்களில் தென்பட்ட புதைகுழிகள் ஒருகணம் செய்திச் சுழற்சியில் இடம்பெற்று, ஒப்புக்கொள்ளப்படாமல், விசாரிக்கப்படாமல், தீர்க்கப்படாமல், மறைந்து போயின.

இவை வெறுமனே தமிழரோ சிங்களவரோ அல்ல, இலங்கையர் புதையுண்ட குழிகள்; கசக்கும் உண்மைகள் புதையுண்ட குழிகள்; தேசியத்திலும், படைபலத்திலும், அரசியல் உபாயத்திலும் புதையுண்ட குழிகள்.

சட்டத்தின் முன் யாவரும் சமன். அரசியற் பாதிப்பு ஏற்படாவிடத்து அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுவதும், ஆதிக்கத்தரப்பின் கதையளப்புக்கு மாறான விபரங்கள் தெரியவருமிடத்து அகழ்வாராய்ச்சியை நிறுத்துவதும் உண்மையைக் கடைப்பிடிப்பதாகாது; உண்மையை விட்டு ஓட்டமெடுப்பதாகும்.

## வெளியுலகப் பொறுப்பு:

2024-இல் மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் அலுவலகம் குறிப்பிட்டது போல், உலக நியமங்களுக்கேற்ப அகழ்வாராய்ச்சியில் ஈடுபடும் தொழில்நுட்பமோ, பணபலமோ, நெறிதிறமோ இலங்கைக்குக் கிடையாது.

ஏற்கனவே இந்த இடைவெளியை நிரப்பவென அமைக்கப்பட்ட காணாமல் போனோரின் அலுவலகம் ஒரு ‘வீண் உருப்படி’ ஆகிவிட்டது. அதற்கு நிதியுதவியும் போதாது; அதிகாரமும் போதாது; சம்பந்தப்பட்டவர்களுக்கு அதில் நம்பிக்கையும் இல்லை.

அகழ்வாராய்ச்சிக்குப் பொறுப்பேற்கும்படி பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வெளியுலகத்திடம் கோருவது நியாயமே. அது வெளியுலகத் தலையீடல்ல; இன்றியமையாத ஒன்று. நம்பிக்கையான முறையில் கண்காணிக்கப்படாவிட்டால், செம்மணியும் மற்றுமோர் ஆறாத புண்ணாகிப் புரையோடக் கூடும்.

வெளியுலகப் பொறிமுறைகள் இலங்கையின் இறைமையை மீறுவதாகும் என்று வாதிடுவோருக்கு, நீதிவழங்கா இறைமை கொடுங்கோன்மை ஆகும் என்று எளிதாக நாம் பதிலளிக்கலாம்!

## மக்கள் கூறிவிட்டார்கள்; அரசாங்கம் செவி சாய்க்குமா?

கடந்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தி ஈட்டிய வெற்றி, வெறுமனே ராஜபக்சாக்களை மக்கள் நிராகரித்துவிட்டார்கள் என்று பொருள்படாது. அது நீதியை நிலைநாட்டுவதற்கான ஆணை; இனங்களை ஊடறுத்து ஓங்கிய மக்கள்-கூட்டணியின் நம்பிக்கை.

மக்கள் தமது பங்கினை ஆற்றிவிட்டார்கள்; இனி அரசாங்கம் அதன் பங்கினை ஆற்றவேண்டிய தருணம் இது. செயற்படுவதற்கான அரசியல்வலு அரசாங்கத்திடம் உள்ளதா? என்பதல்லக் கேள்வி; செயற்படும் துணிவு அரசாங்கத்திடம் உள்ளதா? என்பதே கேள்வி.

வெளியுலக உத்தரவாதங்களுடன் உள்நாட்டு உண்மை ஆணையம் ஒன்றை அரசாங்கம் அமைக்கலாம்; இழப்பீடுகளை முன்வைக்கலாம்; ஒரு முன்னீடாய் அமையும் வண்ணம், அதிகார ஏணி ஒன்றின் மீதாவது வழக்குத்தொடரலாம்; தடயவியல் அணிகளைப் புறக்கணிக்காமல், அவற்றுக்குத் துணைநிற்கலாம்; மௌனம் சாதிக்காமல், வாய்திறந்து பேசலாம்; செம்மணி பேசுகின்றதே!

## எமது குடியரசுக்கு செம்மணி ஒரு தேர்வு:

செம்மணி வெறுமனே ஒரு புதைகுழி அல்ல; அது ஒரு கண்ணாடி; கடந்த போரின் கொடுமையை மாத்திரமன்றி, நிகழ்கால அறச்சீரழிவையும் அது புலப்படுத்துகிறது. உண்மையின் மீதா, இதமான பொய்களின் மீதா கட்டியெழுப்பப்படும் குடியரசாக விளங்க நாம் விரும்புகிறோம் என்று அது எங்களிடம் வினவுகிறது.

யாழ்மண்ணில் புதையுண்ட எலும்புகள் எதிரிகளின் எலும்புகள் அல்ல; அவர்கள் குடிமக்கள்; பிள்ளைகள்; குடும்பத்தவர்கள்; அனைவரையும் காக்க வாக்குறுதியளித்த ஓர் அரசினால் அவர்கள் பொறுப்பேற்கப்பட வேண்டியவர்கள். செம்மணியில் நாம் செவிமடுப்பது வெறுமனே நீதிக்கான கூப்பாடல்ல; விசாரணைக்கு உட்பட்ட ஒரு குடியரசின் ஓசையும் எமது காதில் விழுகிறது.

## பொறுப்பேற்பதற்கான புதிய ஆணை:

2025-ஆம் ஆண்டு செம்மணியில் அகழ்வாராய்ச்சி தொடர்கையில், அரசியல் வசதிக்காக அல்ல, வரலாற்றுப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக, அரசாங்கம் செயற்பட வேண்டும்.

புண்பட்ட தெற்கிலிருந்தும், துயர்காக்கும் வடக்கிலிருந்தும் தேசிய மக்கள் சக்திக்கு ஓர் அசாதாரண ஆணை அளிக்கப்பட்டுள்ளது. அந்த நம்பிக்கைக்குத் துரோகம் இழைத்தலாகாது.

பொறுப்பேற்பு என்பது ஐக்கியத்துக்கு ஓர் அத்திவாரம் ஆகுமேயொழிய, அதற்கோர் அச்சுறுத்தலாகாது. இந்த நாட்டைக் காப்பதற்கு, அரசு அதன் பாவங்களை ஒப்புக்கொள்ள வேண்டும்; ஒரு புதிய இலங்கையை நிர்மாணிப்பதற்கு, உண்மையை அகழ்ந்தெடுக்க வேண்டும்; பொய்களைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும்.



mani.velupillai@thaiveedu.com

சமகாலத்தில் பரவலாகப் பேசப்படும் சர்வதேச விவகாரங்களில் ரஷ்யா - உக்ரேன் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முன்னெடுப்புகள் முதன்மையானவை. ஒகஸ்ட் 18-ஆம் திகதி வோசிங்ரனில் அமெரிக்க ஜனாதிபதி, உக்ரேன் ஜனாதிபதிக்கிடையிலான சந்திப்பும் ஐரோப்பியத் தலைவர்கள் பலர் பங்கேற்ற கூட்டமும் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் போர் நிறுத்தம், சமாதான முன்னெடுப்புகள் குறித்த எவ்வித எழுத்தாவணங்களோ உடன்படிக்கைகளோ எட்டப்படவில்லை. அதற்கு முன் ட்ரம்ப் அலாஸ்காவில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் பூடினை சந்தித்தார். 2022-இன் ஆரம்பத்திலிருந்து மிக மோசமான விளைவுகளையும் மானிட அழிவுகளையும் ஏற்படுத்திவரும் போர் நிலைமைகள் முடிவுக்கு வரக்கூடிய உடன்பாடுகள் எட்டப்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

வோசிங்ரன் கூட்டத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன், பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மல், ஜேர்மன் தலைவர் பிரெட்றிக் மெர்ஸ், இத்தாலியப் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி, பின்லாந் பிரதமர் அலெக்சாண்டர் ஸ்துப், ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வொன் டெர் லெயென் மற்றும் நேட்டோ பொதுச்செயலாளர் மார்க் ருத்த ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். ரஷ்யா - உக்ரேன் விவகாரம் தொடர்பாக அதீத நம்பிக்கைக்குரிய கூற்றுகளை வெளியிட்டுவருபவர் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப். தன்னுடைய இராஜதந்திர முன்னெடுப்புகள் மாதங்களுக்குள் அல்ல, சில வாரங்களுக்குள்ளேயே சமாதான உடன்படிக்கையை எட்டிவிடும் என்பது போன்ற மிகை நம்பிக்கைகள் அவரிடமிருந்து வெளிவருவதொன்றும் புதியவை அல்ல. விரைவில் புடின், செலன்ஸ்கி மற்றும் தனக்கிடையிலான நேரடிச் சந்திப்பு இடம்பெறும், அது முக்கியமான நகர்வு என்றும் சுட்டிக்காட்டினார்.



# ரஷ்யா – உக்ரேன் போர்
## சமாதான முயற்சிகளும் சவால்களும்

ரூபன் சிவராஜா

## நிலப்பரப்புகளின் எதிர்காலம்:

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அடிப்படை போர்நிறுத்தம். ஆனால் அதனைக்கூட எட்டுவதற்குரிய புறச்சூழல் தோற்றுவிக்கப்படவில்லை. பல கடினமான சவால்கள் அல்லது முட்டுக்கட்டைகள் நிலவுகின்றன. 2014-இல் ரஷ்யாவினால் ஆக்கிரமிக்கப்பட்டு சட்டவிரோதமாக ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட கிரிமியா குடா உட்பட்ட தற்போதைய போரின் போது ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரேன் நிலப்பரப்புகளின் எதிர்காலம், உக்கிரைன் கோரிவரும் பாதுகாப்பு உத்தரவாதம், மேற்குடனான ரஷ்யப் பொருளாதார அரசியல் உறவு போன்ற பல்வேறு விவகாரங்கள் குறித்த சவால்கள் நிலவுகின்றன. இந்நிலையில் சமாதானப் பேச்சுகளுக்கான வாய்ப்புகள் குறித்தும் இதில் அமெரிக்க ஜனாதிபதியின் வகிபாகம் தொடர்பான மாறுபட்ட கருத்துகளும் கேள்விகளும் உலகின் பல்வேறு மட்டங்களில் நிலவுகின்றன.

போர் நிறுத்தம், சமாதானத் தீர்வு சார்ந்த நகர்வினைத் துரிதப்படுத்துவதற்கு அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் உக்ரேன் ஆகிய முத்தரப்புகள் ஒருமித்த அழுத்தத்தினை ரஷ்யா மீது பிரயோகிக்க வேண்டுமென்ற கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. அந்தவகையில் வோஷிங்டனில் நடைபெற்ற சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

2011 ஜூன் ஜோ பைடன், பூடின் இடையிலான சந்திப்பு ஜெனிவாவில் நடைபெற்ற பின்னர் அமெரிக்க ஜனாதிபதிக்கும் பூடினுக்குமிடையில் நடைபெறும் முதலாவது சந்திப்பு இது.

சமாதானப் பேச்சுகள், போர்நிறுத்தம் பற்றிய முன்னெடுப்புகள் இன்றைய நாட்களில் பரபரப்பாகப் பேசப்படுகின்றன. ஆனால் இவை புதியமை அல்ல.

## நேட்டோ இணைவை விட்டுக்கொடுக்கிறது உக்ரேன்:

2022 பெப்ரவரி உக்ரேன் மீதான ரஷ்யப் படையெடுப்பிற்குப் பின்னர் உக்ரேன் - ரஷ்யா இடையே பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. துருக்கியில் இருதரப்புச் சந்திப்புகள் பல இடம்பெற்றன. நேட்டோ இணைவுத் திட்டத்தினைக் கைவிடுவதாக உக்ரேன் உறுதியளித்தது, ஆனால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பரப்புகளை விட்டுக்கொடுக்க மறுத்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைனின் இணைவுக்கான செயல்முறைகளுக்கும் ரஷ்யா இணக்கம் தெரிவித்தது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இருதரப்பும் ஒரு உடன்படிக்கை வரைபினை நெருங்கியிருந்தது. ஆனால் உக்ரேன் கோரிய பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படாமையினால் சமாதான உடன்படிக்கை தடைப்பட்டது.

இன்றைய சூழலில் உக்ரேன் - ரஷ்யா விவகாரம் ஒரு போர் நிறுத்தத்திற்கு இட்டுச் செல்லலாம் அல்லது ஒரு உறைநிலை முரணாக நீடிக்கலாம் என்ற இரு கருதுகோள்களும் நிலவுகின்றன.

போரக்களத்தில் உக்ரேன் படைகள் முன்னேறும் நிலை ஏற்பட்டால் அல்லது ரஷ்யாவிற்கு எதிரான மேற்கின் பொருளாதார, வணிகப் புறக்கணிப்புகள் ரஷ்யாவை அதிகம் பாதிக்கத்தொடங்கினால் சமாதானத் தீர்வு நோக்கிய நகர்வில் முன்னேற்றம் ஏற்படலாம்.

ரஷ்யாவின் கோரிக்கைகளில் முதன்மையானது உக்ரேன் நேட்டோவில் இணையக்கூடாது என்பதாகும். அது ஆக்கிரமிப்பில் இறங்கியதற்கான முதன்மைக் காரணி உக்ரைனின் நேட்டோ இணைவுத் திட்டம். இணைவுத் திட்டம் கைவிடப்படுவதை உக்ரைனும் நேட்டோ தரப்பும் (அமெரிக்கா, மேற்கு) உத்தரவாதமளித்து, வணிகப் புறக்கணிப்புகளை மேற்கு தளர்த்துமேயானால் ரஷ்யா போர்நிறுத்த உடன்படிக் கைக்குப் போகும் வாய்ப்புகள் தென்படுகின்றன. ஆனால் இதிலுள்ள சிக்கல் யதெனில் கிரிமியா குடா உட்பட்ட ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பரப்புகளை உக்ரேன் விட்டுக்கொடுக்காது. இந்நிலையில் சமாதானத் தீர்வு சாதகமான புறச்சூழலைக் கொண்டிருக்கவில்லை. நேட்டோ இணைவு கைவிடல், ரஷ்யா மீதானதும் அதனுடனானதுமான பொருளாதார உறவுகளில் இயல்புநிலையை ஏற்படுத்துதல் மட்டும் சமாதானத் தீர்வுக்கான கதவுகளைத் திறந்துவிடாது.

## உறைநிலை மோதல்:

தற்போது இரு தரப்புகளுக்கிடையிலான பெரும் இடைவெளி நிலவுகின்றது. கிரிமியா உட்பட தாம் கைப்பற்றிய அனைத்துப் பிரதேசங்களையும் தமதாக்கிக் கொள்வதில் ரஷ்யா விடாப்பிடியாக நிற்கிறது. 2014-இல் கிரிமியா இணைப்பிற்கு முன்பிருந்த எல்லைகளுக்கு ரஷ்யா நிபந்தனையற்றுத் திரும்பவேண்டுமென்பது உக்ரைனின் நிலைப்பாடு. இந்த இருவேறு நிலைப்பாடுகளுக்கு மத்தியில் நடுநிலையான தீர்வைக் கண்டடைவது கடினமானது. இது ஓர் ஆள்புல (நிலப்பிரதேசம்) நிலைப்பாடுகளில் தீர்வற்ற ஒரு போர் நிறுத்தத்தில் போய் முடியலாம். அத்தகு ஒரு தீர்வு உறைநிலை முரண்பாடாக நீடிக்கும். இதற்கான முந்தைய உதாரணமாக 1974-இல் சைப்பிரஸ் மீதான துருக்கியின் படையெடுப்பிற்குப் பின்னரான நிலையை ஒப்பிடலாம்.

உறைநிலை மோதல் அல்லது உறைநிலை முரண் என்பது ஆயுதப் போரில் நேரடியான மோதல்கள் முடிவுக்கு வந்திருந்தாலும், முழுமையான சமாதானத் தீர்வு எட்டப்படாமல், இடைக்காலத் தீர்வு மட்டும் ஏற்படுத்தப்பட்ட நிலையைக் குறிக்கும். ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பான இறுதித் தீர்வுகள் எட்டப்படாத சூழலும் உறைநிலை மோதல்தான்.

சைப்ரஸ் நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பினைக் கொண்ட அதன் வடபகுதி துருக்கியினாற் கைப்பற்றப்பட்டது. 1974 ஜூலையில், சைப்ரஸை கிரீசுடன் இணைக்க முயன்ற கிரேக்க ஆதரவுக் கலவரத்துக்குப் பிறகு துருக்கி சைப்ரஸை கைப்பற்றியது. இன்றுவரை அது துருக்கியின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது. அதன் பின்னர் சைப்ரஸ் இரண்டு பகுதிகளாகப் பிளவுபட்டது. தென்பகுதி கிரேக்க-சைப்ரஸ் (சைப்பிரஸ் குடியரசு - அனைத்துலக ரீதியாக அங்கீகரிக்கப்பட்டது) வடபகுதி துருக்கிய-சைப்பிரஸ். இது 1983-இல் துருக்கிய சைப்பிரஸ் குடியரசு என ஒருதலைப்பட்சமாகத் துருக்கியால் பிரகடனப்படுத்தப்பட்டது. (சர்வதேசம் இதனை அங்கீகரிக்கவில்லை.)

கள யதார்த்தமும் சமாதானப் பேச்சுக்களிற் கணிசமான செல்வாக்குச் செலுத்துவன. 2023-இன் இறுதியிலிருந்து இராணுவ ரீதியில் ரஷ்யா பலமான நிலையில் உள்ளது. நேட்டே இணைவைக் கைவிடுவதென்ற உக்ரைனின் விட்டுக்கொ

டுப்பு ஒப்பீட்டளவிற் பெரியது. ரஷ்யா பெரியளவிலான விட்டுக்கொடுப்புகளைச் செய்யவில்லை. எனினும் சற்று இறங்கி வந்துள்ளது. இருதரப்பு மென்போக்குகளும் முரண்பாட்டின் அடிப்படை அம்சங்கள், மற்றும் ஐரோப்பாவின் பாதுகாப்புக் கட்டமைப்புச் சார்ந்த பேச்சுவார்த்தைகளுக்கான வெளியை உருவாக்கியுள்ளது.

## பாதுகாப்பு உத்தரவாதம்:

மூலோபாய விவகாரங்கள் தொடர்பான விடயங்களில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகளின் அவசியத்தை ட்ரம்ப் புரிந்து கொள்ளவில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது. அதேவேளை தெளிவான உடன்பாடுகள் எட்டப்படாத சூழலில், முத்தரப்புச் சந்திப்பிற்கு பூடின் பங்கேற்க வாய்ப்பில்லை என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உக்ரேன் கோருகின்ற பாதுகாப்பு உத்தரவாதத்தினை வழங்குவதற்கு அமெரிக்காவும் ஐரோப்பாவும் நேட்டோவின் 5-ஆவது தீர்மானத்தை ஒத்தமுறையில் பரிசீலித்துவருகின்றன. இத்தகைய பொறிமுறை சார்ந்து ரஷ்யா வீட்டோ அதிகாரத்தைக் கோரினால், அந்தப் பாதுகாப்பு உத்தரவாதம் சிக்கலை எதிர்கொள்ள நேரும் எனவும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ட்ரம்ப் இந்த விவகாரத்தை மிகச் சாதாரணமாகச் சாத்தியப்படுத்தும் வல்லமை கொண்டவராகத் தன்னை முன்னிறுத்தி வருகின்றமை பரவலாக அறியப்பட்டதே. அலாஸ்காவில் பூடினுடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் அவர் தனது அவசரத்தனத்தை உணர்ந்ததாகத் தெரியவருகிறது. சமாதான முயற்சி தொடர்பான கூடுதல் அழுத்தம் உக்ரேன் மீது பிரயோகிக்கப்பட்டுவருகின்றது. பலவீனமான தரப்பின் மேல் பிரயோகிக்கப்படும் அழுத்தம் இது. கடந்த பெப்ரவரி உக்ரேன் ஜனாதிபதியை அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு அழைத்து பலவீனமான தரப்பாக விளித்த சம்பவம் நிகழ்ந்தது.

போரை முடிவுக்குக் கொண்டுவருவது ட்ரம்ப் நிர்வாகத்திற்கு முதன்மையான தேவையாகியிருக்கின்றது. உக்ரைனுக்கு அமெரிக்கா பெருமளவு இராணுவ உதவிகளை வழங்கிவருகின்றது. இது பொருளாதார ரீதியில் அமெரிக்காவிற்கு நட்டத்தை உண்டுபண்ணி வருகின்றது. உக்ரைனின் கனிம வளங்கள் மீதான பயன்பாட்டு உரிமையைப் பெறுவதற்கான உடன்படிக்கை அமெரிக்கா பெற்றுள்ளது. ரஷ்யாவுடன் உறவுகளை இயல்புக்குக் கொண்டுவருவதும் அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் பொருளாதார ரீதியில் முக்கியமானது.

## அமெரிக்க நலன்:

உக்ரைனில் போரும் ரஷ்யாவுடன் பகைமை உறவுகளும் தொடர்வது அமெரிக்காவினது பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நலன்களுக்குச் சாதகமான அம்சம் இல்லை என்ற நிலைப்பாட்டிற்கு டிரம்ப் நிர்வாகம் வந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதிகளிலும் போரை நிறுத்துதல் ட்ரம்ப்பின் முதன்மை வாக்குறுதிகளில் ஒன்றாக இருந்தது. எனவே ரஷ்ய - உக்ரேன் போரை நிறுத்துவதென்பதில் பொருளாதார, புவிசார் நலன்களுடன் ட்ரம்பின் கௌரவம் சார்ந்த அம்சமும் உள்ளடங்கியுள்ளது. போரை முடிவுக்குக் கொண்டுவரும் ஒற்றை வல்லமை தன்னிடம் மட்டுமே உள்ளதென அவர் சூளுரைத்திருந்தார்.

ரஷ்யா – உக்ரேன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நலன்சார் அரசியல் ரீதியாக மிகுந்த பிரயத்தனம் கொண்டுள்ளார். ஆனால் சமாதானத்திற்கான வரைபடம் அல்லது பாதை அவர் முன்னிறுத்துவது போல் எளிதானதாகத் தெரியவில்லை. அது சிக்கலான பரிமாணங்களாலும் மாறுபட்ட நலன்களாலும் சூழப்பட்டுள்ளது. இதில் ரஷ்யா, உக்ரேன் என்ற இரு தரப்புகள் மட்டும் தொடர்புபடவில்லை. அமெரிக்கா, ஐரோப்பா என நான்கு தரப்புகள் தொடர்புபட்ட சர்வதேச இராணுவ, அரசியல், புவிசார், பிராந்திய, பொருளாதார நலன்சார் நோக்கங்களாற் சூழப்பட்ட முரண்பாடு இதுவாகும்.

## சதுரங்க ஆட்டம்:

இந்தச் சதுரங்க ஆட்டத்தில் பூடின் தனக்குச் சாதகமாகக் காய்களை நகர்த்துவதான தோற்றம் தென்படுகின்றது. ஆடுகளத்தைப் பரபரப்பாக வைத்திருக்கும் அதேவேளை போர் நிறுத்தத்திற்கோ, அல்லது சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குரிய சமரசங்களுக்கோ போவதற்கு பூடின் அவசரம் காட்டவில்லை. பூடின் ஏன் இது விடயத்தில் அவசரம் காட்டவில்லை என்ற கேள்விக்கான விடை எளிதானது. போரில் அதிக வளங்களைக்கொண்டவர்களுக்கு அதனை இழுத்தடிப்புப் போராக நீடிப்பது சாதகமானது. உக்ரைனுக்கு உலகமே திரண்டு உதவினாலும் இப்போரில் ரஷ்யாவே வலிமையான தரப்பு. தனது வலிமையான இராணுவ இயந்திரம், படைக்கல மேலாண்மை, ஆளணி கொண்ட ரஷ்யா நீண்டகாலத்திற்கு இப்போரைத் தாக்குப்பிடிக்கும் சக்தியைக் கொண்டுள்ள தரப்பு. உக்ரேன் முற்றிலும் அமெரிக்க, மேற்கு நாடுகளின் ஆதரவில் தங்கியுள்ளது. அத்தோடு போர்க்களத்தில் பலமாக இருக்கும் தரப்புக்கு போர்நிறுத்த உடன்படிக்கை பாதகமாக அமையும் என்பது போரியல் யதார்த்தம்.

சமாதானச் செயற்பாடுகளில் போர் நிறுத்தம் என்பது பொதுவாக மூச்சுவிடும் ஓய்வுவெளியை உருவாக்கவும், படைரீதியான சவால்களை எதிர்கொள்ளும்போது நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும், மானிட அவலங்களை நிறுத்தவும், பேச்சுவார்த்தைக்கான அடித்தளங்களை உருவாக்கவும் போன்ற காரணிகளுக்காகவே போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படுவதுண்டு. உக்ரேன் இத்தகு போர் நிறுத்தத்தினைப் பலமுறை நீண்டகாலமாகவே வலியுறுத்தி வந்தபோதும் ரஷ்யா நிராகரித்துவந்துள்ளது. போர்க்களத்தில் பெரும் அழுத்தத்தினைக் கொடுத்து, தமது நிபந்தனைகளுக்கு உக்ரைனை நெருக்குவதே ரஷ்ய மூலோபாயமாக இருந்துள்ளது. பூடின் வசம் முக்கியமான சதுரங்கக்காய்கள் உள்ளனவெனவும் அர்த்தப்படுத்த முடியாது. போர் என்பது அடிப்படையில் அழிவுக்கருவி. அது வலிமையான தரப்பு, வலிமை குறைந்த தரப்பு என்ற வேறுபாடுளுக்கு அப்பால் மானிட அழிவையே முதன்மையாகத் தரும். பொருளாதார, அரசியல் நலிவும் அதன் விளைவு.



rooban.s@thaiveedu.com



# வெனிசுலா-அமெரிக்கா

## போதைப்பொருள் யுத்தமா எண்ணெய்க்கான யுத்தமா?

ரதன்

டொனால்ட் டிரம்பின் அமெரிக்க அரசாங்கம் வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோவை கைது செய்வதற்கு உதவி செய்பவர்களுக்கு அல்லது தகவல்கள் அளிப்பவர்களுக்கு 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவோம் என ஓகஸ்ட் 7-ஆம் திகதி அறிவித்துள்ளது. இத்தொகை முன்னர் 25 மில்லியனாக இருந்தது. தற்போது அது 50 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணமாக வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ போதைப் பொருட்கள் விற்பனை செய்யும் கும்பலுடன் (Cártel de los Soles - Cartel of the Suns) இணைந்து செயல்படுவதாகக் கூறப்படுகிறது. இதே போன்ற ஒரு குற்றச்சாட்டை டொனால்ட் ட்ரம்ப் கனடா, மெக்சிகோ மீதும் முன்வைத்திருந்தார். பென்ரனோல் எனப்படும் சக்தி வாய்ந்த போதைப் பொருள் கனடாவிலிருந்தே அதிகளவு அமெரிக்காவிற்கு வருவதாக டொனால்ட் ட்ரம்பின் அரசாங்கம் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றது. ஆனால் வெனிசுலா அதிபர் மீதான குற்றச்சாட்டின் பின்னால் பல அரசியல் மற்றும் வணிக காரணங்கள் உள்ளன. நிக்கோலஸ் மதுரோவின் நடவடிக்கை அல்லது செயல்பாடு அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவுள்ளது என மேலும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. Tren de Aragua gang, the Mexican Sinaloa Cartel ஆகியவற்றுடன் வேறு பல வெளிநாட்டு போதைப் பொருள் கடத்தல் கும்பல்களையும் மதுரோ பயன்படுத்தி, போதைப் பொருட்களை அமெரிக்காவினுள் கடத்துகின்றார் என்பது அமெரிக்காவின் தொடர்ச்சியான குற்றச்சாட்டு.

'அவர் உலகின் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல்காரர்களில் ஒருவர். மற்றும், நமது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளார். எனவே, அவரது வெகுமதியை நாங்கள் 50 மில்லியனாக இரட்டிப்பாக்கியுள்ளோம்.' என அமெரிக்கச் சட்ட அமைச்சர் தொலைக்காட்சியொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

> ***"அமெரிக்கா - கொலம்பியா பாதுகாப்பு திட்டப் பிரகாரம் கொலம்பியாவிற்கு பல மில்லியன் டொலர்களை அமெரிக்கா வழங்குகின்றது. வெளிநாட்டு இராணுவ உதவி என்ற பெயரில் 2017-2023-வரை 278-மில்லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்கா கொலம்பியாவிற்கு வழங்கியுள்ளது."***

மதுரோ போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதற்கான உறுதியான ஆதாரங்கள் குறைவாக இருந்தாலும் வெனிசுலா தேசிய காவல்படை மற்றும் இராணுவம் 2000-களின் நடுப் பகுதியில் கோகோயின் வாங்க, சேமிக்க, மாற்ற மற்றும் விநியோகிக்கத் தொடங்கியது என்பது அறியப்படுகிறது. வெனிசுலா இராணுவம் நேரடியாக போதைப் பொருள் விற்பனைக் களத்தில் இறங்குவதற்கு முன்பாக போதைப் பொருள் வியாபாரிகளை மிரட்டிப் பணம் பறித்தது..

Javier Sutil Toledano என்வர் ஒரு புலனாய்வு ஆய்வாளர். இவர் தெரிவித்திருக்கும் கருத்து முக்கியமானது. கொலாம்பியா போதைப் பொருட்கள் விற்பனை செய்யும் கும்பல், வெனிசுலா இராணுவத்துக்குப் பணத்துக்குப் பதிலாக போதைப் பொருட்களை கொடுத்தது. இதனால் வெனிசுலாவின் உள்ளூர் வியாபாரிகள் தங்களது சந்தையைத் தாங்களே தேடவேண்டி வந்தது எனக் குறிப்பிடுகின்றார். இது சற்றுக் குழப்பமானதாகவிருந்தாலும், கொலம்பியாவும் தனது அண்டை நாடான வெனிசுலாவிற்கு போதைப் பொருட்களைக் கடத்தியது.

அமெரிக்கா - கொலம்பியா பாதுகாப்பு திட்டப் பிரகாரம் கொலம்பியாவிற்கு பல மில்லியன் டொலர்களை அமெரிக்கா வழங்குகின்றது. வெளிநாட்டு இராணுவ உதவி என்ற பெயரில் 2017-2023-வரை 278-மில்லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்கா கொலம்பியாவிற்கு வழங்கியுள்ளது. இத்திட்டமே வெனிசுலா போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டமைக்கு காரணம் என வெனிசுலா தரப்பு தெரிவிக்கின்றது.

போதைப்பொருள் எதிர்ப்பு முயற்சியாகக் கூறப்பட்ட இந்தத் திட்டத்தின் உண்மையான நோக்கம்,

பெருநிறுவன பெட்ரோலியம் மற்றும் சுரங்க நடவடிக்கைகளுக்கு எதிராக அணிதிரண்ட கெரில்லா இயக்கங்களை ஒழிப்பதாகும். கொலம்பியா கொலைப் படைகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட துணை ராணுவப் படைகளுடன் நெருங்கிய உறவைப் பேணி வந்தது என்று நோம் சாம்ஸ்கி குறிப்பிடுகிறார். கொலம்பியாவின் கொரில்லா இயக்கங்களுக்கு எதிரான போர் FARC (Fuerzas Armadas Revolucionarias de Colombia) ஆகும். வெனிசுலா எல்லைக்குள் நடவடிக்கைகளை நகர்த்த அமெரிக்கா கொலம்பியாவைக் கட்டாயப் படுத்தியது. மேலும் ஊழல் அதிகாரிகள் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டனர்.

கொரில்லா அமைப்புகள் கொக்கோ உட்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்திக்கு வரிவிதிப்பதில்லை. FARC இதனை மறுக்கின்றது. சட்டத்துக்குப் புறம்பான பயிர் உற்பத்திக்கு கொரில்லாக்களால் வரி விதிக்கப்படுகின்றது. ஆனால், கொரில்லாக்கள் இவற்றிற்கு ஏன் அனுமதி வழங்குகின்றார்கள் என்ற கேள்வி எழாமல் இல்லை. அதே சமயம் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் கொலம்பியா, வெனிசுலா போன்ற நாடுகளில் இயங்கும் போதைப் பொருள் கும்பலையும், கொரில்லாக்களையும் ஒன்றாகவே கருதுகின்றது. மேற்கு நாடுகளின் குறி கொரில்லாக்களே. போதைப் பொருள் கும்பல்கள் அல்ல. FARC கொக்கோ பயிர்ச் செய்கைக்கு எதிராகச் செயல்பட்டது. பிரச்சாரம் செய்தது. கொலம்பிய கொக்கோ விவசாயிகள் இதனால் பாதிக்கப் பட்டனர். நவதாராளவாதச் சந்தையாலும் நவதாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகளாலும் அவர்கள் பாதிக்கப் பட்டனர்.

கொலம்பியாவின் போதைப் பொருட்கள் கடத்தல் இயக்கங்களில், முன்னால் கொலம்பியா அதிகாரிகளும் செயல்பட்டனர் என பல சர்வதேச அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. கொலம்பியாவினாலேயே வெனிசுலாவும் போதைப் பொருள் விற்பனைத் தளமாக மாறியது.

மதுரோவும் அவரது குழுவினரும் ‘அமெரிக்காவை கோகோயினால் நிரப்பவும் அமெரிக்க மக்களை போதைப் பொருட்களுக்கு அடிமையாக்கவும் முயற்சிக்கின்றனர் என மியாமி ஹெரால்ட் பத்திரிகை குற்றஞ் சாட்டியுள்ளது.

அமெரிக்கா குற்றஞ்சாட்டுமளவிற்கு வெனிசுலா போதைப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதா ? அல்லது கடத்தல் செய்கின்றதா என்றால் இல்லை என்பதே பதில்.

வெனிசுலாவின் ஐக்கிய சோசலிசக் கட்சியைத் தூக்கியெறிந்து, மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஹ்யூகோ சாவேஸ் (Hugo Chávez) தலைமையிலான பொலிவேரியன் புரட்சியை அழிக்கும் அமெரிக்காவின் முயற்சியைவிட, போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் டிரம்ப் நிர்வாகம் குறைவாகவே அக்கறை கொண்டுள்ளது. போதைப் பொருட்கள் இறக்குமதியை நிறுத்துவதில் டிரம்ப் மற்றும் குழுவினர் உண்மையிலேயே ஆர்வம் காட்டியிருந்தால் அதனை வேறு விதமாகவே கையாண்டிருப்பார்கள்.

ஏற்கனவே அமெரிக்க உளவுப்பிரிவு வெவ்வேறு நாடுகளில் போதைப் பொருட்கள் விற்பனையை தூண்டியது எனக் கூறப்படுகின்றது. Service de Documentation Extérieure et de Contre-Espionnage (SDECE) எனப்படும் பிரான்சின் முன்னாள் உளவுப் பிரிவும், பல நாடுகளில் போதைப் பொருள் உற்பத்தியையும் விற்பனையையும் தூண்டியது. அமெரிக்க உளவுப் பிரிவு இதே பாதையில் தெற்காசியாவின் தங்க முக்கோணப் போதைப் பொருள் மையத்தையும் (பர்மா, லாவொஸ், பாங்கொக்) ஊக்குவித்தது. வியட்நாமுக்குள் போதைப் பொருள் பாவனையை அதிகரிக்கவும் அமெரிக்க உளவுப் பிரிவு ஆவணவு செய்தது. Van der Reijden, ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மற்றும் அர்கன்சாஸின் ஆளுநராக இருந்த பில் கிளிண்டன் இருவரும் அமெரிக்க உளவுப் பிரிவின் நடவடிக்கைகளை சட்டத்திலிருந்து பாதுகாத்தனர் என டச்சு அரசியல்வாதி - அரசியல் ஆய்வாளர் விமர்சித்தார்.

1990-இல் அமெரிக்க ஊடகவியலாளர் Gary Webb, Mercury News பத்திரிகையில் அமெரிக்க உளவுப் பிரிவின் போதைப் பொருள் விற்பனை பற்றிய விரிவான கட்டுரையொன்றை மூன்று பகுதிகளாக எழுதியுள்ளார். 1993-இல் வெனிசுலா-விற்கான போதைப் பொருள் கடத்தல் கட்டுப்பாட்டுக்குழுவினரே அமெரிக்காவினுள் 2000 இறாத்தல் நிறை கொண்ட போதைப் பொருட்களை கடத்தியுள்ளனர் எனக் குளோபல் றிசேர்ச் ஒகஸ்ட் 21, 2025 அன்று தனது இணையத்தளத்தில் கருத்து வெளியிட்டுள்ளது.

போதைப் பொருள் விற்பனையை மையப்படுத்தி வெனிசுலாவைப் போன்று பனமா மீதும் அமெரிக்கா இதே குற்றச் சாட்டினை முன்வைத்துள்ளது. அமெரிக்க ஊடகங்களின்

> ***“ மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஹ்யூகோ சாவேஸ் (Hugo Ch´vez) தலைமையிலான பொலிவேரியன் புரட்சியை அழிக்கும் அமெரிக்காவின் முயற்சியைவிட, போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் டிரம்ப் நிர்வாகம் குறைவாகவே அக்கறை கொண்டுள்ளது. ”***





> கொலம்பியாவின் போதைப் பொருட்கள் கடத்தல் இயக்கங்களில், முன்னாள் கொலம்பியா அதிகாரிகளும் செயல்பட்டனர் என பல சர்வதேச அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. கொலம்பியாவினாலேயே வெனிசுலாவும் போதைப் பொருள் விற்பனைத் தளமாக மாறியது.

அழுத்தத்தின் பின்னர் டிசம்பர் 1988-இல், பனமாவை அமெரிக்கா தாக்கியது. அப்போது அமெரிக்க அதிபராக ஜோர்ஜ் டபிள்யூ புஸ் இருந்தார். Operation Just Cause என்ற பெயரிலேயே இத்தாக்குதல் இடம் பெற்றது. அப் போதைய பனமா ஜனாதிபதி Manuel Noriega-வுக்கும் அமெரிக்க உளவுப் பிரிவிற்கும் நெருக்கமான உறவு இருந் தது என்பது குறிப்பிடத்தக்கது.

தனது இரண்டாவது பதவிக்காலத்தில், டிரம்ப் மிகவும் போர்க்குணம் மிக்கவராகவும், பகுத்தறிவற்றவராகவும் மாறி விட்டார். ஈரானின் அணுசக்தி தளங்கள் மீது குண்டுவீச்சு நடத்தியதன் மூலம் அவர் அரசியலமைப்பு மற்றும் சர்வதேச சட்டத்தை மீறினார். தனது முந்தைய பதவிக்காலத்தில் ஈரானின் Quds Force படையின் தளபதி கசிம் சுலைமானியை அமைதிப் பணியில் இருந்தபோது டிரம்ப் படுகொலை செய்தார். அவரது நிர்வாகம் பல சந்தர்ப்பங்களில் ஏமனில் குண்டுவீச்சு நடத்தியது. பாலஸ்தீனியர்களைக் கொல்ல வெடிமருந்துகளை ஒரு இனப்படுகொலை அரசுக்கு வழங்கி யுள்ளது. இது பைடன் நிர்வாகம் அனுப்பியதை விட அதிகம்.

நிக்கோலஸ் மதுரோவை ஒரு 'பயங்கரவாத' போதைப் பொருள் கடத்தல்காரராகக் காட்டி அவரைக் கடத்த டிரம்ப் வெனிசுலாவுக்கு துருப்புகளை அனுப்புவதற்கான வாய்ப்பும் உள்ளது. வெனிசுலா நீண்ட காலமாக அமெரிக்காவின் படை யெடுப்பிற்கு தயாராகி வருகிறது. தேசிய பொலிவேரியன் மிலிஷியா (National Bolivarian Militia) என்பது பொது மக்கள் தன்னார்வலதொண்டர்களைக் கொண்ட ஒரு படை யாகும். இது வெனிசுலா, தனது நாட்டின் ஆயுதப் படை களை ஆதரிப்பதற்காக 2008-இல் சாவேஸால் நிறுவப் பட்டது என்று நியூஸ் வீக் செய்தி வெளியிட்டுள்ளது.

நிக்கரகுவா, கியூபா, வெனிசுலா ஆகிய நாடுகளையும் டொனால்ட் டிரம்ப் குறிவைக்கின்றார். இம்மூன்று நாடுகளை யும் இடது சாரி சார்பு அரசாங்கங்கள் ஆட்சி செய்கின்றன. இவற்றில் வெனிசுலா, கியூபா கொம்யூனிஸ்ட் நாடுகள். கியூபா மீதான அமெரிக்காவின் தொடர்ச்சியான பொருளா தார அழுத்தம் கியூபாவை பொருளாதார ரீதியாக சேதப்படுத் தியுள்ளது. கியூபா மக்கள் அடிப்படை வசதிகளை கொண்டே வாழ மேற்குலகால் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். இதே போன்றே வெனிசுலா மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பும் அமையும். வெனிசுலா எண்ணெய் வளம் நிறைந்த நாடு. அதுவும், மிகச் சிறந்த எரிபொருட்கள் உள்ள நாடு. வெனிசு லாவின் அருகில் உள்ள கயானாவில் உள்ள எண்ணெய்க் கிணறுகளை அமெரிக்க நிறுவனங்களே கட்டுப் படுத்து கின்றன. வெனிசுலாவின் கடற்பகுதியிலும் எண்ணெய் உண்டு.

வெனிசுலா உட்பட்ட தென் அமெரிக்க நாடுகள் சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேணுகின்றன. எனவே அமெரிக்கா விற்கு உக்ரேனை விட, ரஷ்யாவை விட, சீனாவைப் பொரு ளாதாரரீதியாக கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. எனவே சத்தமின்றி அமெரிக்கா வெனிசுலாவை நோக்கி நகர்கின்றது. அமெரிக்கா வெனிசுலாவிலிருந்து மதுரோவை துரத்தினால் அல்லது கைது செய்தால் அல்லது அழித்தால் அது அமெரிக்காவிற்கு பெரு வெற்றியாகும். அதன்பின், அடுத்த இலக்கு நீண்ட காலமாக அசையாது இருந்த கியூ பாவை அசைப்பதாகும்.

'இந்த வாரம் 4.5 மில்லியனுக்கும் அதிகமான போராளி களுடன் ஒரு சிறப்புத் திட்டத்தை செயல்படுத்துவேன். இது முழுத் தேசியப் பிரதேசத்தையும் உள்ளடக்கியது - இவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட ஆயுதம் ஏந்திய போராளிகள்' என்று மதுரோ ஒரு தொலைக்காட்சி உரையில் கூறினார்.

அடுத்த 30 நாட்களுக்கு அனைத்து வான்வழி ட்ரோன்களை யும் தரையிறக்க மதுரோ உத்தரவிட்டுள்ளார். இது 'கடலில் இருந்து தாக்குவதைத் தவிர்த்து, அமெரிக்கா, வான்வழி தாக்குதலை நடத்தும் என அவர் எதிர்பார்க்கலாம் என்பதற் கான அறிகுறியாகும்'. சிலி, பிரேசில் நாட்டு இடதுசாரித் தலைவர்களை அழித்த முறையையே அமெரிக்கா மேற் கொள்ளும். வெகுவிரைவில் மதுரோ மீதான தாக்குதலை அமெரிக்கா நடத்தும்.



rathan@thaiveedu.com

# இலங்கைத் தமிழ் அகதிகளை நாடு கடத்துவது நியாயமா?

**நெல்லை ஜெயசிங்**

1956-ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இலங்கையில் சிங்கள சமூகத்தவர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட தொடர் இனக் கலவரங்கள் (1958, 1977, 1981, 1983) மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களுக்கும், இலங்கையின் பாதுகாப்பு படைகளுக்கும் இடையில் நடந்தேறிய உள்நாட்டு யுத்தம் காரணமாக, இலங்கையில் இருந்த தமிழ் மக்கள் உயிரை பாதுகாத்துக் கொள்ள உலகின் நாலாபுறமும் சிதறி ஓடினர். வசதி வாய்ப்புடன் இருந்தவர்கள், மேலை நாடுகளுக்கு அகதிகளாக விமானங்களில் பறந்தனர். விபரம் அறியா, வசதி வாய்ப்பு இல்லாதவர்கள், அருகே இருக்கும் தமிழகத்தை நோக்கி உயிரைப் பணயம் வைத்து கடல் வழியே படகுகளில் வந்தனர்.

### அகதி மக்களின் வருகையும் வரவேற்பும்:

இவ்வாறு வந்தவர்களில் இலங்கைத் தமிழர்களுடன், இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களும் பெருமளவில் இருந்தனர். இவ்வாறு வந்தவர்களை தடுத்து நிறுத்தாத மத்திய மாநில அரசுகள், அகதி என்ற அடையாளத்தை வழங்கி, வரவேற்று, அகதி முகாம்களில் தங்கவைத்து கவனித்து வருகின்றன. 1983 ஜூலை முதல் 2012 ஒகஸ்ட் வரை, 3,03,076 பேர் தமிழகம் வந்து, நாளடைவில் திரும்பிச் சென்றவர்கள் நீங்கலாக, தற்போது 26 மாவட்டங்களில் உள்ள, 104 முகாம்களில், 19316 குடும்பங்களைச் சேர்ந்த 58492 பேரும், முகாம்களுக்கு வெளியில் தங்களது சுய விருப்பத்தின் அடிப்படையில், 13420 குடும்பங்களைச் சேர்ந்த 33639 பேரும் என, ஆக மொத்தம் 92131 பேர், இயற்கை அதிகரிப்புடன் அகதிகள் என்ற நிலையில் இருப்பதாக புள்ளி விபரம் வாயிலாக அறிய முடிகிறது. இவர்களில் ஒரு சிலர் இலங்கைக்கு போய்விட்ட நிலையில், மற்றவர்கள் கடந்த 35 வருடங்களாக இந்தியாவின் பாதுகாப்பில் தமிழ் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.



பங்களாதேஷ், பர்மா, நேபாளம், பாகிஸ்தான் போன்ற எல்லையோர நாடுகளில் இருந்து வந்தவர்களை விட, இலங்கையில் இருந்து வந்த அகதி மக்களை மத்திய மாநில அரசுகள் பரிவுடன் வரவேற்று, அவர்களுக்கான வசதிகளை, தேவைகளை இலவசமாக செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். பங்களாதேஷ் போன்ற எல்லையோர நாடுகளில் இருந்து வருபவர்களை, சட்ட விரோத குடியேறிகள் என கூறுவதைப் போன்று, இலங்கைத் தமிழ் அகதி மக்கள் அழைக்கப்படுவதில்லை.

அகதி மக்களாக இருப்பவர்கள் இரண்டு தலைமுறைகளாக இங்கே வாழ்ந்து வருகின்றனர். தற்போது இருப்பவர்களில் 69 வீதத்தினர் இந்திய நாட்டில் பிறந்தவர்கள். 30000-க்கு மேற்பட்ட இளைஞர்கள் உள்ளனர். வந்தவர்களில் கணிசமானவர்கள் இந்திய நாட்டில், வயது மூப்பு காரணமாக இறந்தும் போயுள்ளனர்.

ஒன்றிய அரசின் ஆதரவுடன் தமிழக அரசு இம்மக்களை சிறப்பாக கவனித்து வருவதை அனைவரும் அறிவர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் பண உதவியுடன் பல்வேறு நல உதவிகளையும் தமிழக அரசு செய்து வருகிறது. அனைவருக்கும் வீடு, இலவச துணிமணிகள், இலவச மின்சாரம், மருத்துவ வசதி, இலவச சமையற் பாத்திரங்கள், இலவச அரிசி, கல்வி உதவித் தொகை, ஓய்வூதியம், முதியோர் பண உதவி, திறன் மேம்பாட்டு பயிற்சி, மகளிர் சுய உதவிக் குழுக்கள் என ஏராளமான நல உதவிகளை, தமிழ் நாட்டு குடிமக்களுக்கு நிகராக தமிழக அரசு செய்து வருகிறது. அண்மையில் இவர்களுக்கு, புதிய தனி வீடுகளையும் கட்டித் தந்துள்ளது. ஆயிரக்கணக்கான மாணவர்கள் உயர் கல்வி வரை இலவசமாக கற்று வருகிறார்கள். பட்டதாரிகள், முதுநிலை பட்டதாரிகள், விஞ்ஞான, பொறியியல், மருத்துவ பட்டதாரிகள் உருவாகி இருக்கிறார்கள். குடியுரிமை இல்லாத நிலையிலும் அனைத்து துறைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். இங்கு தங்கி இருக்கும் இலங்கை அகதி மக்கள், மனரீதியாக தங்களை இந்தியர்களாகவே உணர்கின்றனர். இந்தியராகவும் வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலானவர்கள் இலங்கையைப் பற்றி அறிந்திராதவர்கள். இலங்கையில் புதிய வாழ்க்கை ஒன்றை ஆரம்பிக்க, அங்கே போக வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவர்கள் அவர்கள். அப்படி ஒரு எண்ணம் அவர்களுக்கு இருந்திருந்தால் என்றோ இலங்கைக்குச் சென்று அங்கே குடியேறி மகிழ்ந்திருப்பார்கள். அவர்கள் வழியில் அவர்கள் வாழ, வழி விடுவதே நல்லது.

## இந்திய வம்சாவளியினர்:

இலங்கையில் இருந்து உயிர் பாதுகாப்புத் தேடி இந்தியாவிற்குள் வந்த அனைத்து தமிழ் மக்களையும், பொதுவான பெயரில் இலங்கைத் தமிழர், என்று அரசு அழைக்கத் தொடங்கியது. ஆனால் வந்தவர்களில், எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக இந்திய வம்சாவளி தமிழர் என்ற ஒரு தனிப்பட்ட சமூக மக்களும் உள்ளனர், என்ற உண்மையை இந்திய அரசும், தமிழ் தேசியவாதிகளும் கவனத்தில் கொள்ளவில்லை. இன்றைய இந்தியாவின் சமூக வரலாற்றில் தொப்புள் கொடி உறவினர்களும் அவர்களே. அவர்களின் இரத்த உறவினர்கள், இன்றும் தமிழக கிராமங்களில், இந்திய குடிமக்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கிடையே திருமண உறவும் நடந்து வருகிறது. இவர்களின் நடை உடை பாவனை, பேச்சு மொழி, பண்பாடு, கலாசாரம் அனைத்தும் இந்திய மயமாகிவிட்டது. இந்நிலையில் இவர்களை இலங்கைக்கு, அவர்களின் விருப்பத்திற்கு மாறாக வலிந்து நாடு கடத்த முற்படுவது அறமற்ற செயலாகும்.

1964 மற்றும் 1974 ஆண்டுகளில் நடைபெற்ற இலங்கை இந்திய ஒப்பந்தங்களின் படி, 600000 பேரை இந்தியா ஏற்றுக் கொள்ளும் என்ற நிலையிலும், 461639 பேர் மட்டுமே இந்தியாவிற்கு திரும்பி வந்தனர். சூழ்நிலை காரணமாக எஞ்சிய 139000 பேரை, இந்தியா அழைத்துக் கொள்ளவில்லை. எனவே இத்தருணத்தில் இந்திய கடவுச் சீட்டு (Passport) வைத்திருந்தவர்களும் அகதிகளாக வந்து, தங்களின் நியாயமான இந்திய குடியுரிமைக்காக, போராடிக்கொண்டிருக்கும் வேளையில், அவர்களை வலுக்கட்டாயமாக நாடுகடத்த முயல்வது மனித உரிமைக்கு எதிரான செயலாகும்.

இலங்கையுடன் தற்போது தொடர்பில் இல்லாத, இந்திய மண்ணின் உறவுகளான இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் அகதிகள், இலங்கைக்கு மீண்டும் நாடு கடத்தப்பட்டால் அங்கும் அவர்கள் அகதிகளாக வாழ வேண்டிய நிலை ஏற்படலாம். அங்கே அவர்களுக்கு உரித்தான காணியும் இல்லை. இருக்க வீடும் இல்லை. 1970-களில் வன்னிப் பகுதிக்கு இடம் பெயர்ந்த மலையக மக்களில் பலர், இன்று வரையிலும் நிரந்தர நில உரிமை பெற முடியாதவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் இங்கிருந்து சென்று மீண்டும் ஒரு போராட்ட வாழ்க்கையை தொடங்க அவர்கள் தயாராக இல்லை. இந்நிலையில் அவர்களின் விருப்ப வழியில் அவர்களை வாழ விடுவதே நல்லது.

## பூர்வீக இலங்கைத் தமிழர்:

உள்நாட்டு யுத்தத்தால் பெரும் பாதிப்புக்கு உள்ளான, பூர்வீக இலங்கைத் தமிழ் மக்களில் சில ஆயிரக்கணக்கானவர்கள், அகதிகளாக உயிரைப் பணயம் வைத்து, கடல் வழியாக படகுகளில் வந்து, தமிழக அரசின் பராமரிப்பில், முகாம் எனப்படும் மறுவாழ்வு மையங்களில் இருந்து வருகின்றனர். வரும்போது ஏனைய இந்திய வம்சாவளி தமிழ் மக்களுடன் இணைந்து வந்த இவர்களும், ஏனைய மக்களுடன் கலந்தே வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் இவர்கள் தனித்துவமான மொழி பண்பாட்டு கலாசாரத்துடன் வாழ்ந்த போதும், இங்கே அவர்களின் இரண்டு சந்ததியைத் தாண்டிய வாழ்க்கை, அவர்களை இந்தியராக மாற்றிவிட்டது. தமிழக பேச்சு மொழியை, சரளமாக கதைத்து வரும் அவர்களில் பெரும்பாலானவர்களும், இந்திய நாட்டில் நிரந்தரமாக இருக்கவே விரும்புகின்றனர். மிகச் சிலர் மட்டும் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர்.

திரும்பிச் செல்பவர்களும் அங்கே தங்களின் பூர்வீக நிலத்தை தேடி, அதற்கான உரிமை கோரி, மீண்டும் ஒரு புதிய வாழ்க்கையை தொடங்குவது சவாலான விடயமாகும். இலங்கை இன்னும் பொருளாதார நெருக்கடியில் இருந்து பூரணமாக மீண்டு வராத நிலையில், இவர்களையும் நாடு கடத்த முயல்வது நியாயமற்ற செயலாகும். சில வருடங்களுக்கு முன்பு மீள் குடியேற்ற எண்ணத்தில், வன்னி மாவட்டத்தில் மீண்டும் குடியேறிய சிலர், சிரமத்திற்கு ஆளாகி இருப்பதாக அறியப்படுகிறது. வவுனியாவில் தொடர்ந்து வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. தங்களுக்கு தமிழ் நாட்டில் குடியுரிமை இல்லாது இருந்த போதும், தாங்கள் எந்தவிதமான உணவு நெருக்கடிகளுக்கும் உட்படாமல், பணப்புழக்கத்துடன் வாழ்ந்ததாகவும், தற்போது இலங்கையில் அப்படி ஒரு வசதி தங்களுக்கு இல்லை எனவும் கூறி வருகின்றனர். இன்னும் சிலர் மீண்டும் படகு வழியில் இராமேஸ்வரம் வருவது அனைவரும் அறிந்த ஒன்று. இன்னும் சிலர் வசதி வாய்ப்புகளை அறிந்து வர இலங்கை சென்று, அதிருப்தியுடன், கடவுச் சீட்டு வழியாக இந்தியா வந்து, விசா நீட்டிப்பு பெற முடியாமல், அகதி முகாம்களில் பதிவின்றி தவித்து வருகின்றனர். எனவே உண்மை நிலையை வெளிப்படையாக தெரிவிக்காமல், உண்மைக்கு மாறான தகவல்களை கூறி இவர்களை வெளியேற்ற முயல்வது தவிர்க்கப்பட வேண்டும்.

இலங்கையைப் பின்புலமாகக்கொண்ட சில திரைமறைவு அமைப்புகள், அரசியல் வாதிகள், அகதி மக்கள் அனைவரும் இலங்கைக்குத் திரும்ப வேண்டும் என்ற

வேண்டுகோளை முன்வைத்து பிரச்சாரம் செய்து வருவதாக கூறப்படுகிறது. தமிழக முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியிலும் இரண்டு தலைமுறைகளாக வாழ்ந்துகொண்டி ருக்கும் பூர்வீக இலங்கைத் தமிழர், மற்றும் இந்திய வம்சா வளித் தமிழர்கள், இந்தியாவே தங்களின் எதிர்காலம் என்ற உணர்வில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். இந்திய மொழி, கலாசாரம், பண்பாடு அவர்களை இறுக பற்றிக்கொண்டுவிட்டது. புதிய சந்ததியின ருக்கு இலங்கை தொடர்பான புரிதலோ அக்கறையோ இல்லாமல் போய்விட்டது. திருமணம் தொடங்கி, பல உறவு வழிகளில் தமிழக மக்களுடன் அவர்கள் இரண்டறக் கலந்து விட்டார்கள். குடியுரிமை நீங்கலாக, இந்திய பிரஜை பெறும் அனைத்து சமூக நலத் திட்டங்களையும் இவர்களும் பெறத் தொடங்கிவிட்டார்கள். இந்நிலையில் இவர்களை, இவர் களின் விருப்பத்திற்கு மாறாக ஆசை வார்த் தைகள் கூறி, இலங்கைக்கு அழைத்துச் செல்ல முயலும் நடவடிக்கைகள் உடன டியாக நிறுத்தப்படவேண்டும்.

### அரசியல் இலாபம்:

இலங்கையில் தாங்கள் அரசியல் செய்வதற்கும், வட இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக் கையை தக்க வைத்துக் கொள்ளவும், அதிகரிக்கவும், அகதிகளாக வந்த அப்பாவி மக்களை, பலிகடாவாக ஆக்க முயல்வது அறமாகாது. அகதி மக்களின் உணர்வுகளை, விருப்பங்களை அறிந்து கொள்ள அக்கறை காட்டாது, உண்மை நிலவரங்களை மூடி மறைத்து, சிலரின் சுயநலத்திற்காக சிலர் செய ற்ப ட்டுக்கொண்டிருப்ப து கண்டனத்துக்குரியது. யாழில் பாராளு மன்ற பிரதிநிதித்துவம் குறைவதற்கு இந்தியாவிற்கு வந்துள்ள வசதி வாய்ப்பு இல்லாத அகதி மக்களா காரணம்?

**வட இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை தக்க வைத்துக் கொள்ளவும், அதிகரிக்கவும், அகதிகளாக வந்த அப்பாவி மக்களை, பலிகடாவாக ஆக்க முயல்வது அறமாகாது. அகதி மக்களின் உணர்வுகளை, விருப்பங்களை அறிந்து கொள்ள அக்கறை காட்டாது, உண்மை நிலவரங்களை மூடி மறைத்து, சிலரின் சுயநலத்திற்காக சிலர் செயற்பட்டுக் கொண்டிருப்பது கண்டனத்துக்குரியது.**

வெளிநாட்டில் இயங்கி வரும் இலங்கைத் தமிழர் சார்ந்த பொது அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள் (NGO) அகதி மக்கள் இலங்கைக்கு வர வேண்டும் என்பதில் குறியாக செயற் பட்டு வருகின்றன. இதன் பின்னால் அரசியல் எதிர் பார்ப்பும் இருப்பதாக அறியப்படுகிறது. இலங்கை அரசியல் வாதிகள், குறிப்பாக இலங்கைத் தமிழ் தேசியவாதிகள், தங்களின் தேர்தல் ஆதாயத்திற்காக, இலங்கைக்கு அகதிகள் மீண்டும் வர வேண்டும் என்று கருத்துக்களை பதி விட்டும் வருகின்றனர். சென்னையை தலைமை இடமாகக் கொண்டு இயங்கும் ஏதிலியர் அமைப்பும், முகாம் மக்க ளிடையே மறைமுக பிரச்சாரத்தை செய்து வருகிறது. மத்திய மாநில அரசுகளுடன் நெருங்கிய உறவில் இருக்கும் இவ்வ மைப்பு, அதனை பயன்படுத்தி இவர்களை வெளியேற்ற முயல்வது வன்மையாக கண்டிக்கத்தக்கது. அரசியல் இலா பத்திற்காக அகதி மக்களை துருப்புச் சீட்டாக பயன் படுத்த அனுமதிக்கக் கூடாது. அகதி மக்களின் நீண்ட கால கோரிக் கையான, வாக்குரிமை பற்றி இவர்கள் வாய் திறப்பதில்லை.

200-வருடங்களுக்கு முன்னர், வறுமையில் இருந்த தமிழக ஏழை எளிய மக்களிடம், இலங்கையில் பொன்னும் மணியும் விளைகிறது என பசப்பு வார்த்தைகள் கூறி, முகவர்களாக வேடமிட்ட கங்காணிகள், அழைத்துச் சென்றதைப் போன்று இன்று சில செல்வந்தர்கள், நவீன கங்காணிகளாக அவதாரம் எடுத்து, அப்பாவி ஏழை அகதி மக்களை இலங்கைக்கு எப்ப டியாவது கொண்டு போய் விட சில பல தந்திரங்களை கையா ண்டு வருகிறார்கள். இதுபோன்ற செயல்களை முற்போக்கு அமைப்புகளும், தமிழக அரசும் உடனடியாக தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும். அகதி அடையாளத்துடன் இருப் போரில் 90 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் இலங்கை செல்ல விரும்பவில்லை என்ற தகவலை, மின்னூர் மறுவாழ்வு முகாமில் வசிப்பவரும், சமூக செயற்பாட்டாளரும், பட்டதாரி இளைஞருமான, திரு. சரவணன் நடராஜா என்பவர், சமூக வலைத்தளம் ஒன்றில் தெளி வாக பதிவிட்டுள்ள கருத்தொன்று கவனத்தில் கொள்ள வேண்டிய விட யமாகும். ‘தமிழக முகாமில் வாழும் எங்கள் மீது உங்கள் அரசியல் அபிலாஷைகளை திணிக்க வேண்டாம். எதிர்காலத்திற்கு இது ஆபத்தானது’ என அம்மக்கள் கூறி வருவதாகவும், அவர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். தற் போது தமிழகத்தில் குறைந்த அளவினரான இலங்கைத் தமி ழர்களும், பெருவாரியான இந்திய வம்சாவளி தமிழர்களும், இந்திய குடியுரிமை தங்களுக்கு தரப்பட வேண்டும் என்ற கோரிக் கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். உயர் நீதிமன்ற கதவுகளையும் தட்டத் தொடங் கிவிட்டனர்.

தங்களின் மூதாதைய உறவுக ளுடன் வாழ விரும்பும் இந்திய வம்சாவளி தமிழ் அகதி மக்க ளையும், இலங்கைக்கு நாடுக டத்தும் எண்ணத்தைக் கொண்டி ருக்கும் குறிப்பிட்ட ஏதிலியர் அமைப்பும், மீள் குடியேற்ற முனையும் இலங்கை தமிழ் கட்சிகள் உள்ளடக்கிய, இலங்கை அரசும் அத்திட்டத்தை கைவிட வேண்டும். ஆனால் அவை எதனை யும் கருத்தில் கொள்ளாது, அகதி மக்கள் நாடு திரும்பிட திட்டம் வகுக்கும் எண்ணத்துடன், இலங்கையின் வடக்கு ஆளுநர் திரு. வேதநாயகன் அவர்களுடன், இலங்கை ஏதிலிகள் மறுவாழ்வு நிறுவனம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதற்கு, தமிழக முகாம்களில் உள்ள பெரும்பான் மையானவர்கள் வரவேற்புகாட்டவில்லை, என்பதிலிருந்து அம்மக்களின் சுதந்திரமான உணர்வுகளை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவிற்கு வந்த அகதிகள் ஆரம்ப காலங்களில் இலங் கைக்கு திரும்பிச் செல்ல எந்த தடையும் இருக்கவில்லை. அதற்கென விசேட அனுமதியும் வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் அதனை முழுமையாக பயன்படுத்தவில்லை.

அதனால் 2002 முதல் 2019 வரையிலான கால இடைவெளியில், இலங்கையில் மீள குடியேறியவர்கள் மிகவும் குறைவு என கூறப்படுகிறது. அவ்வாறு குடியேறியவர்கள் எண்ணிக்கை 17492 என, UNHCR அமைப்பின் புள்ளி விபரம் வாயிலாக தெரிய வந்துள்ளது. இங்கிருந்து செல்லும் அகதி மக்களுக்கென தனியாக எந்தவிதமான சிறப்பு மீள் குடியேற்ற திட்டங்கள், இலங்கையில் இல்லாத நிலையில், இலங்கை சென்றவர்கள் வாழ்வாதாரத்திற்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருந்ததாக தகவல்கள் கூறுகின்றன. தற்போதும் கூட சில அமைப்புகளின் வழிகாட்டலில், தாங்கள் இலங்கை வந்தது, அவசரப்பட்டு தாங்கள் எடுத்த முடிவு என, தற்போது உணர்வதாக கூறி வருகின்றனர். இந்நிலையில் இந்திய மண்ணில் அகதிகளாக இருப்பவர்களை வெளியேற்றும் முடிவை இந்திய அரசு கருணையோடு மறுபரிசீலனை செய்ய வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

## கடவுச்சீட்டு (Passport) வழியில் வந்தவர்களை நாடு கடத்தல்:

இனக் கலவரம் மற்றும் உள்நாட்டு யுத்தம் காரணமாக, பாதிப்புக்கு உள்ளாகி இலங்கையின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வந்த தமிழ் சமூகம், உயிர் பாதுகாப்புத் தேடி, கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்தி, பல நாடுகளுக்கும் சென்றது. பல்லாயிரக்கணக்கானோர், மேலை நாடுகளுக்கு சென்று, அங்கு குடியுரிமை பெற்று சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றனர். சிலர் ஆவணங்கள் எதுவும் இன்றி கடல் மார்க்கமாக, இந்தியாவிற்குள் நுழைந்தனர். இன்னும் சிலர் கடவுச்சீட்டு மூலம் இந்தியாவிற்கு வந்தனர். இவர்கள் அகதி முகாம்களில் பதிவு பெற்று, அகதிகளாக தங்களை இணைத்துக்கொண்டனர். கடவுச்சீட்டுடன் வந்த மேலும் சிலர் காவல் துறையின் அனுமதியுடன், முகாமிற்கு வெளியில் வசிக்கத் தொடங்கினர். கடவுச்சீட்டுடன் வந்தவர்கள் அவ்வப்போது இலங்கை சென்றிட, சிலர் நிரந்தரமாக இங்கேயே தங்கி விட்டனர்.

**சட்ட விரோதமாக வட இந்திய மாநிலங்களில் குடியேறி இருப்பதாக கூறப்படும் பங்களாதேஷ், பாகிஸ்தான் பிரஜைகளை குறிவைத்து, வெளியேற்ற முயலும் ஒன்றிய அரசு, அதே கண்ணோட்டத்துடன், இலங்கை அகதி மக்களையும் பார்ப்பது சரியல்ல. அகதி மக்கள் தொடர்பான தெளிவான சட்ட வரைவு இந்தியாவில் இல்லாததால், இம் மக்கள் பாரிய இன்னல்களை எதிர்கொள்ளவேண்டி வருகிறது.**

மேலும் தவிர்க்க முடியாத காரணங்களால் இலங்கைக்கு சென்று, பின்னர் கடவுச்சீட்டு வாயிலாக, மீண்டும் முகாம் வந்தவர்களின் பதிவை, அரசு இரத்து செய்தது. இதனால் இவர்கள் பொருளாதார ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டதை ஒன்றிய அரசு கவனத்தில் கொள்ளவில்லை. மாறாக இன்றைய அரசு, எல்லோரையும் சட்ட விரோத குடியேறிகள், என்ற புதைகுழிக்குள் தள்ளி, மீண்டும் முகாம் பதிவுக்கான ஒரு வாய்ப்பை வழங்காது, நாடு கடத்தும் எண்ணத்தில் இருப்பதாக கூறப்படுகிறது.

இவ்வாறு கடவுச் சீட்டு வாயிலாக வந்தவர்கள், அதன் சட்ட திட்டத்தின் படி, சுற்றுலா விசா பெற்றதன் அடிப்படையில் மட்டுமே வர முடிந்தது. அகதிக்கான விசா என்ற ஒரு முறையே இல்லாத நிலையில், சுற்றுலா விசாவில் வந்து, அகதி முகாமில் இருந்தாலும், விசா முடிந்து திரும்பிச் செல்ல வேண்டும் என்பது பொதுவான விதியாகும். ஆனால் அகதி என்று வந்தவர்கள் வேறு வழியின்றி அகதிகள் என தங்களை அடையாளப்படுத்தி, இங்கு நிரந்தரமாக தங்கிவிட்டனர். இந்நிலையில் இவர்களைப் பற்றி இதுவரை கண்டு கொள்ளாத ஒன்றிய அரசாங்கம், தற்போது இவர்கள் இலங்கை திரும்ப வேண்டும் அல்லது விசாவை புதுப்பிக்க வேண்டும், என அறிவித்துள்ளதை அறிந்து, விசாவில் வந்தவர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளனர். இந்திய பாஸ்போர்ட் சட்டத்தின் படி, ஒன்றிய அரசு விசாவை கட்டணமின்றி நீடிக்க வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது. எனவே அவர்களை வலிந்து வெளியேற்றும் முயற்சி நடக்கும் என நம்பப்படுகிறது.

விசா முடிந்து நாட்டில் தங்கியிருக்கும் பலருக்கும் அறிவிப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. கரூர் மாவட்டம் பரமத்தி வேலூர் அகதி முகாமில் அறுபதுக்கும் மேற்பட்டோர்க்கு, இவ்வாறான அறிவிப்பு ஆணை காவல்துறை வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்று தமிழகத்தில் அகதி முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியிலும் நூற்றுக்கணக்கான அகதி மக்கள், நாட்டைவிட்டு வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளமை அறிந்து, அவர்கள் செய்வதறியாது மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளாகி வருகின்றனர். ஜம்மு காஷ்மீர் மாநிலம் பாஹல்கம் பகுதியில், 26 சுற்றுலாப் பயணிகள், பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, ஒன்றிய உள்துறை அமைச்சகம், மாநிலங்களுக்கு, வெளிநாட்டவர் வழிகாட்டும், சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளது. அதில் நாட்டில் சட்ட விரோதமாக தங்கியுள்ள (விசா முடிந்து தங்கி இருப்போர்) அனைத்து வெளிநாட்டவர்களையும், அடையாளம் கண்டு நாட்டை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. பல்வேறு காலகட்டங்களில், பலதரப்பட்ட சூழ்நிலையில், உற்றார் உறவினர்களுடன் முகாமில் அடைக்கலமாகி இருந்த, இவ் அகதி மக்களை, பத்து நாளில் நாட்டை விட்டு வெளியேற்ற நினைக்கும் ஒன்றிய அரசை என்னவென்று கூறுவது?

சட்ட விரோதமாக வட இந்திய மாநிலங்களில் குடியேறி இருப்பதாக கூறப்படும் பங்களாதேஷ், பாகிஸ்தான் பிரஜைகளை குறிவைத்து, வெளியேற்ற முயலும் ஒன்றிய அரசு, அதே கண்ணோட்டத்துடன், இலங்கை அகதி மக்களையும் பார்ப்பது சரியல்ல. அகதி மக்கள் தொடர்பான தெளிவான சட்ட வரைவு இந்தியாவில் இல்லாததால், இம் மக்கள் பாரிய இன்னல்களை எதிர்கொள்ள வேண்டி வருகிறது. அகதிகள்

தொடர்பான ஐ.நா. பிரகடனத்தில் இந்தியா கையெழுத்து இடவில்லை. உலக நாடுகளின் கட்டுப்பாடுகளை, ஆலோசனைகளை பின்பற்றாத இந்திய அரசு, கட்சி சார்ந்த முடிவுகளையே எடுத்து வருகிறது. 2003-ஆம் ஆண்டு குடியுரிமை திருத்தச் சட்டத்தில் முதற் தடவையாக, சட்ட விரோத குடியேறிகள் என்ற வாசகத்தை இடம்பெறச் செய்த போதும், அப்போது இலங்கை அகதி மக்கள் தொடர்பில், அரசு கடுமையான போக்கை கடைப்பிடிக்க முயலவில்லை. ஆனால் 2025 மார்ச் மாதத்தில், குடிவரவு சட்டம், வெளிநாட்டினர் சட்டம், பாஸ்போர்ட் சட்டம் போன்றவை இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய பின், இலங்கை அகதி மக்களையும், சட்ட விரோத மக்களாக அரசு பார்க்கத் தொடங்கி உள்ளது. அதன் வெளிப்பாடே இம்மக்களை வெளியேற்றும் முயற்சி.

## அகதி மக்களை வெளியேற்ற, அடிப்படையான காரணங்கள்:

- அகதி மக்கள் குடியுரிமை இல்லாது இருப்பது.
- வட இலங்கையின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க.
- சில ஏதிலியர் அமைப்புக்களின் அழுத்தம்.
- புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் வெளிநாட்டு அமைப்புக்களின் அழுத்தம்.

அகதி மக்களுக்கு குடியுரிமை இல்லாத காரணத்தால், இந்திய அரசு அவர்களை வெளியேற்ற, சட்ட நுணுக்கங்களை பயன்படுத்தி வருகிறது. 1986-ஆம் ஆண்டு இந்திய குடியுரிமை திருத்தச் சட்டத்தில் இலங்கை இணைத்துக் கொள்ளாமையால், அகதி மக்கள் குடியுரிமைக்கான தகுதியைப் பெறவில்லை. ஆனால் அதற்கான முயற்சியில் அவர்கள் இறங்கி இருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் திமுக, விசிக, மதிமுக, கம்யூனிஸ்ட் கட்சிகள் குரல் கொடுத்த போதும், ஒன்றிய பாஜக அரசு, மௌனமாக அதனைக் கடந்து செல்கிறது. வட இந்திய அரசியல் தலைவர்களும் தமிழக அகதிகள் பிரச்சினையில் சிறிதேனும் அக்கறை கொள்வதில்லை. தமிழீழக் கனவை மறக்காத தமிழக தேசியவாதிகளும், தமிழ் அகதிகள், இலங்கை திரும்பி, தமிழ் தேசியத்தை கட்டி எழுப்ப வேண்டும் என்ற எண்ணப்பாட்டில் செயற்பட்டு வருகின்றனர். புலம்பெயர்ந்து மேலை நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களில் ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலானவர்கள், இவர்களின் குடியுரிமைக்காக குரல் கொடுப்பதில்லை. அகதி மக்கள் இலங்கை செல்ல வேண்டும், என்பது மேலை நாட்டு புலம்பெயர் தமிழர்களின் எண்ணமாக இருக்கிறது. பல்வேறு வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களும் இதே கருத்தை கொண்டிருக்கின்றன. இவ்வாறு இவை அனைத்தும் இந்திய அரசின் அகதி மக்களை வெளியேற்றும் கொள்கைக்கு வலு சேர்ப்பதாக இருக்கிறது. இந்நிலையில் இவர்களின் நாடு கடத்தலை தடுத்து நிறுத்த ஒரே வழி அவர்களின் குடியுரிமை பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதாகும். உலக அளவில் இதற்கான குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். அரசியல்வாதிகளின் அபிலாஷைகளை புறந்தள்ளி, அகதி மக்களின் நலன் காக்க முற்போக்கு சக்திகள், அம்மக்களின் குடியுரிமை கோரிக்கை நிறைவேற ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும். அம்மக்களின் விருப்பத்திற்கு மாறான வெளியேற்றும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கை தமிழ் அகதி மக்களை இலங்கை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்து, அண்மைக் காலமாக பொது வெளியில் பேசப்பட்டு வருகிறது. அதன் பின்னால் அம்மக்களின் எதிர்கால நலனை விட அரசியல் நலன் மறைந்திருப்பதாகவும் அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இந்நிலையில் அம்மக்களின் எதிர்கால சந்ததியினரது நலன் கருதி, இரு அரசுகளும் மனிதாபிமானத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, நல்லதொரு முடிவுக்கு வர வேண்டும். அதற்கு பின்வரும் வழிமுறைகளை கையாண்டு, அகதி மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்திய அரசின் கவனத்திற்கு,

- இலங்கைக்கு திரும்பிச் செல்ல விரும்புபவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு தேவையான புனர்வாழ்வு உதவிகளுடன், கௌரவமாக அவர்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டும். இலங்கை அரசுடனும் இது தொடர்பான ஆலோசனைகளை மேற்கொண்டு, விசேட மீள் குடியேற்ற திட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.
- இந்தியாவில் நிரந்தரமாக குடியிருக்க விரும்புவோருக்கு, இந்திய குடியுரிமை வழங்க வேண்டும்.
- இந்திய வம்சாவளி அகதி மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் குடியுரிமை வழங்க வேண்டும்.

இரண்டு தலைமுறை கடந்து 35 வருடங்களுக்கு மேலாக, இந்திய மண்ணில் அகதிகளாக வாழும் இம்மக்களின் எதிர்கால நலன் கருதி, குடியுரிமை பிரச்சினையை தீர்க்க இந்திய இலங்கை அரசுகள் முன் வரவேண்டும். அவர்களை வலுக்கட்டாயமாக நாடு கடத்தும் எண்ணம் தவிர்க்கப்பட வேண்டும்.



jeyasingh@thaiveedu.com



# அபிவிருத்தியின் ஆணிவேர்கள்

நிசன்குமார் கோபிநாத்

அபிவிருத்தி என்பது ஒரு பல்பரிமான வளர்ச்சி செயன்முறையாகும். அது ஒவ்வொருவருடைய பார்வைக்கு ஏற்ப வேறுபடும். நாட்டுக்கு நாடு, சமூகத்திற்கு சமூகம், மக்களுக்கு மக்கள் வேறுபடும் தன்மை உடையது. ஆனாலும், அபிவிருத்தி தேவை என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு விடயமாகும். இன்றைய உலகில் எல்லா நாடுகளும் அபிவிருத்தியினை குறிக்கோளாகக்கொண்டே பயணிக்கின்றன. ஒரு சில நாடுகள் அதனை முறையான அணுகுமுறைகளின் ஊடாக வெற்றிகரமாக மேற்கொள்கின்றன. இன்னும் சில நாடுகள் அபிவிருத்தி அடைந்து கொள் வதற்காக பல திட்டங்களுடன் அல் லது செயற்பாடுகளை உருவாக்கி அதன் மூலம் பயணிக்கின்றன. அதனையே நாம் நிலையான அபிவிருத்தியை நோக்கி நகருகின்ற நாடுகள் எனச் சுட்டிக் காட்டுகின்றோம்.

ஒரு நாட்டில் அபிவிருத்தி என்பது உயர்வடைய வேண்டுமென்றால் அதற்கு அந்த நாட்டினுடைய மக்கள் மிகமுக்கியமானவர்களாவர்கள். ஆகவே, மக்கள் என்பவர்கள் வெறுமனே அபிவிருத்தியில் பயன்பெறுபவர்கள் மட்டுமல்ல, அபிவிருத்தியின் ஒரு பங்குதாரர்களாக அவர்களை உருவாக்க வேண்டியது அந்த நாட்டினுடைய அபிவிருத்தி திட்டத்தின் கடமையாகும். அப்பொழுது தான் அங்கு அபிவிருத்தி என்பது ஒரு நிலைப்பாட்டினை அடையும். எல்லோரும் அதன் பயனாளர்களாகி விட்டால் அங்கு அபிவிருத்தி என்பது முழுமை அடையாது. முற்றாக அபிவிருத்தியில் பங்குதாரர்களை உருவாக்கும் பொழுதே அபிவிருத்தி என்பது என்றும் கீழ்நிலைப்படாமல் ஒரே சமதளத்தில் திடமாகக் கட்டியெழுப்பப்படும்.



> “அபிவிருத்தி என்பது ஒரு நாட்டினுடைய தேசிய பொருளாதரத்தில் மட்டும் தங்குவதில்லை. சாதாரண மக்களின் வாழ்க்கை தரத்திலும் தங்கியுள்ளது.”

அபிவிருத்தி என்பது தனித்த பொருளாதாரக் காரணிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன் மாத்திரம் தங்கிவிடக்கூடாது. அவ்வாறு, தங்கிவிட்டால் அது அபிவிருத்தி அல்ல. மாறாக, வருமானப் பகிர்வு, வறுமையை ஒழித்தல், அடிப்படை தேவைகளை விருத்தி செய்தல், வேலையின்மை விகிதத்தைக் குறைத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்கம் போன்ற பலவேறு விடயங்களிலும் கவனம் செலுத்தப்படவேண்டும். ஒரு நாட்டினுடைய பொருளாதாரக்காரணிகள் மாத்திரம் அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்வதில்லை. மாற்றீடாக, மக்களின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் திறன்களையும் மேம்பாடடையச் செய்யும் வகையில் பங்களிப்புக் காணப்பட வேண்டும் என்பதே நிதர்சனமான உண்மை.

தேசிய பொருளாதாரத்தை மாத்திரம் அபிவிருத்தியாக கொண்டிருந்தால் இன்று அமெரிக்கா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகள் போன்றவை அபிவிருத்தியை அடைந்திருக்க முடியுமா? என்பது கேள்விக்குரியதாகும். 1950 தொடக்கம் 1960 வரையான காலப்பகுதியில் அபிவிருத்தி என்பது தேசிய பொருளாதாரத்துடனே கட்டமைக்கப்பட்டது. ஆனால், காலப்போக்கில் அந்த கட்டமைப்பில் தவறு இருப்பதாக உணரப்பட்டு 1970-இற்கு பின்னர் அபிவிருத்தி என்பது ஒரு நாட்டினுடைய தேசிய பொருளாதரத்தில் மட்டும் தங்குவதில்லை. சாதாரண மக்களின் வாழ்க்கை தரத்திலும் தங்கியுள்ளது என்று நிரூபிக்கப்பட்டது.

சாதாரண மக்களும் அபிவிருத்தியில் உள்ளீர்க்கப்படும் பொழுதே அந்த சமூகத்தினுடைய வறுமை, வேலையின்மை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவை இல்லாதொழிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்க்கை தரம் மேம்பாடடையும். அதன் தன்மையில் தேசிய அபிவிருத்தி என்பது சாத்தியப்படும். குறிப்பாக சாதாரண மக்களும் அபிவிருத்தியில் உள்ளீர்க்கப்படாவிட்டால் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்பட்டு, அதன் கட்டமைப்பு சீர்குலைந்து, அபிவிருத்தி என்பது கேள்விக்குறியாகின்றது.

பேராசிரியர் கூலட் (Prof. Colette) என்பவரால் முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி மாதிரி, முக்கியமாகக் கிராமப்புற அபிவிருத்தி மற்றும் விவசாயப் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்வதற்கும், அதனை மேம்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்ட ஒரு முக்கியமான கருத்தியல் மாதிரியாகும். இந்த மாதிரி, அபிவிருத்தியை வெறும் பொருளாதார வளர்ச்சியாக மட்டும் பார்க்காமல், சமூக, கலாச்சார, மற்றும் அரசியல் காரணிகளையும் கருத்தில் கொள்கிறது. இதனை மூன்று முக்கிய பெறுமானங்களின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள முடியும் அவையாவன,

- வாழ்வாதாரம்
- சுயமரியாதை
- அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் என்பனவாகும்.

### வாழ்வாதாரம்:

வாழ்வாதாரமென்பது தனிநபர் அல்லது குடும்பம் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருளாதார மற்றும் சமூக நடத்தைகளின் ஒருங்கிணைந்த அமைப்பாகும். இது கல்வி, வேலை வாய்ப்பு, வளங்கள், திறன்கள் மற்றும் சமூக ஆதரவு போன்றவற்றை கட்டமைப்பாகக் கொண்டது. சாதாரண மக்களும் அபிவிருத்தியில் உள்ளீர்க்கப்படாதபோது அவர்கள் புறக்கணிக்கப்பட்ட சமூகமாக கீழ்நிலைப்படுத்தப்படுகின்றார்கள். அங்கு வேலையின்மை உச்சகட்டம் அடைய, வறுமை நிலைப்பேறடைகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக:

1945-காலப்பகுதி இலங்கையில் இலவச கல்வி கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. தேசியரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டாலும், மலையகப் பகுதி மக்கள் புறக்கணிக்கப்பட்டதாகவே காணப்பட்டது. பிற்பட்ட காலப்பகுதியிலே இலவச கல்விக்கான வாய்ப்பு மலையகப் பிரதேசத்தை வந்தடைகிறது. ஆனாலும், இன்று வரை அது முழுமை அடையாமல் காணப்படுகின்றமை கவலைக்குரியதாகும். இவ்வாறு சரியான கல்வி கிடைக்கப் பெறாத தன்மையிலே அந்த சமூகத்தில் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்த தன்மையாலே அடிப்படை வசதிகளைப் பெறமுடியாத சமூகமாக மலையக மக்கள் அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். இவ்வாறான ஒரு நிலை இருக்கும் பொழுது அபிவிருத்தி என்பது எவ்வாறு நிலைபெறுமென்பது கேள்விக்குறியாகின்றது. ஒரு நாட்டினுடைய அனைத்து மக்களின் வாழ்வாதாரமும் மேம்பாடடையும்போதே அபிவிருத்தி என்பது சாத்தியப்படும்.

### சுயமரியாதை:

சுயமரியாதை என்பது ஒருவரின் ஆளுமை மதிப்பு, உரிமை, இன கௌரவம் மற்றும் சமூகத்தில் சமத்துவமான நிலையைப் பெறும் உரிமையாகும். நல்ல வாழ்க்கையின் மையப் பெறுமானங்களில் சுயமரியாதையும் முக்கியமானது. ஒவ்வொரு மக்களும் தங்களுக்குரிய சுய கௌரவத்தை எதிர்பார்க்கின்றனர். இன, மத, மொழி ரீதியான பாகுபாடு இல்லாமலும் அபிவிருத்தி செயற்பாடுகள் உருவாக்கப்பட வேண்டியமை கட்டாயமானது. எந்தவொரு நபருக்கு சுயமரியாதை சமூகத்தில் கிடைக்கப்பெறுகின்றதோ அப்பொழுதே அவர்களுக்குரிய தேவைகளும் நிறைவு செய்யப்படுகின்றன.

மலையகத் தமிழர்கள் என்பது இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு இலங்கையின் மத்திய மலைநாட்டு பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்குப் பணியமர்த்தப்பட்ட மக்கள் குழுவாகும். இவர்கள் பல்லாண்டுகளாக இலங்கையில் வாழ்ந்தாலும், பல துறைகளிலும் பின்தங்கிய நிலையிலே அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். அவர்களுக்கான அங்கீகாரம் வழங்கும்பொழுதே அவர்கள் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் மதிக்கப்படுவார்கள். இலங்கையில் பெருந்தோட்ட பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு அவர்களின் வாழக்கை நிலைமையை மதித்து அவர்களுக்கான வாய்ப்புகளை வழங்கும் போது அவர்களது வாழ்வும் மேம்பாடடையும். இதன் பொழுதே அபிவிருத்தி என்பது முறையாகக் கட்டியெழுப்பப்படும். அப்போதுதான் அபிவிருத்தி என்பது முழுமையாக அவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கை தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

### அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம்:

அடிமைப்படுத்தப்பட்ட சமூகங்கள் தெடர்ச்சியாக அடிமைப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுவதோடு பொருளாதாரம் முதல் அவர்களின் வாழ்வாதாரம் வரை கீழ்நிலைப்படுத்தப்பட்ட தன்மையிலே எழுச்சி பெறுகின்றது. இவ்வாறான நிலையில் அபிவிருத்தியை எவ்வாறு நிலைநிறுத்த முடியும் என்பதில் சிக்கல் தன்மை நிலைபெறுகின்றது. அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் அடையாத சமூகத்திலும் சரி, நாட்டிலும் சரி, அபிவிருத்தி என்பது சாத்தியப்படாது. 200-வருட காலமாக அடிமைச் சமூகமாக அடையாளப்படுத்தப்படுகின்ற மலைய மக்கள், இன்று வரை அடிப்படை வசதிகள் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இவ்வாறானதொரு தன்மை சமூகத்தில் காணப்படுகின்ற பொழுது ‘இலங்கை எவ்வாறு அபிவிருத்தி அடையும்? அவர்களுடைய வாழ்க்கை தரமும் ஏனைய மக்களுடைய வாழ்க்கை தரமும் எவ்வாறு சமநிலையடையும். ஆகவே, இவ்வாறான ஏற்றத் தாழ்வுகள் களையப்படவேண்டும். அபிவிருத்தி என்ற தன்மையில் ஒரு ஏற்றத்தாழ்வு இல்லாமல் சமச்சீரான தன்மை உருவாக்கப்பட வேண்டும்.

எனவே, பேராசிரியர் கூலட்டின் மூன்று பெறுமானங்களின் தன்மையில் அபிவிருத்தி என்பது நிலைபெற வேண்டுமாயின் வாழ்வாதாரம், சுயமரியாதை மற்றும் அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் ஆகிய மூன்றும் உயர்வடையும்

> “அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் அடையாத சமூகத்திலும் சரி, நாட்டிலும் சரி, அபிவிருத்தி என்பது சாத்தியப்படாது.”



பொழுதே அங்கு அபிவிருத்தி என்பது சாத்தியப்படும். இவற்றில் வாழ்வாதாரம் கீழ்நிலை அடைந்து ஏனைய இரண்டும் உயர்வடைந்தாலும் அல்லது சுயமரியாதை உயர்வடைந்து ஏனைய இரண்டும் கீழ்நிலை அடைந்தாலும் அங்கு அபிவிருத்தி என்பது சாத்தியப்படுவதில்லை. எனவே அபிவிருத்தி என்பது அனைவருக்கும் சமமான பார்வையிலேயே உள்வாங்கப்பட வேண்டும்.

## அபிவிருத்தியில் அனைவரையும் உள்ளீர்க்க என்ன செய்ய வேண்டும்?

ஆண், பெண், இன, மத, மொழி, கலாசாரப் பாகுபாடு இல்லாமல் சகலரையும் உள்ளடக்கியதாகக் காணப்பட வேண்டும். கடந்த காலங்களில் இன, மத, மொழி மற்றும் வர்க்கவாதம் போன்ற காரணங்களாலும், காலத்தை வென்று நீக்கக்கூடிய முறையில் தெளிந்து தீரமானம் எடுக்கக்கூடிய ஆற்றல் இல்லாத தன்மையினாலும், ஊழல்களாலும், வினைத்திறனற்ற நிர்வாக கட்டமைப்புகளினாலும் திறமைக்கு முதலிடம் கொடுக்காமல் சுயநலம் காணப்பட்டதாலும் திறனான மனித வளத்தை இடப்பெயர்வால் இழந்ததாலும் அபிவிருத்தியின் வளர்ச்சியை துரிதப்படுத்த முடியவில்லை. எனவே, சகலரையும் உள்ளீர்த்த அபிவிருத்தியையே (Inclusive Development) கட்டியெழுப்பப்படவேண்டும்.

அபிவிருத்தியின் பயன்களைப் பெறுபவர்களும் அதன் பங்குதாரர்களும் உள்ளீர்க்கப்பட வேண்டும். ஒரு சாரார் மாத்திரம் அதன் பயன்களைப் பெறுபவர்களாக இருப்பதுவும், ஒரு சாரார் மாத்திரம் அதன் பங்குதாரர்களாக இருப்பதுவும் நிராகரிக்கப்பட்டு, சகலரும் உள்ளடக்கப்பட்டு அபிவிருத்தி மேற்கொள்ளப்படவேண்டும். இவ்வாறான செயற்பாட்டில் அரசியல், தலையீடுகள் புறக்கணிக்கப்பட்டு சகல மக்களையும் வளங்களையும் உள்ளீர்ப்பதிலே அபிவிருத்தி நிலைபெறும். அத்துடன் சகலப்பிரதேசங்களையும் அபிவிருத்திக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

பொருளாதார வாழ்வாதாரங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் வாழும் மக்கள் இடையே ஒற்றுமை, புரிந்துணர்வு என்பன மேலோங்கி இருக்கும். இலங்கையில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் பொழுது மக்களுடன் இணைந்து மக்களுடைய பிரச்சினைகள் ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளுடன் அபிவிருத்தி என்பது கட்டியெழுப்பப்படும்போது அபிவிருத்தி காலத்தேவைக்கேற்ப சாத்தியப்படும். ஆகவே, அபிவிருத்தியை தேவை உடைய சமூகத்திற்கு அதனை முதலில் நிலைப்படுத்தவேண்டும்.

அத்துடன் மக்களும் அபிவிருத்தியுடன் பயணிக்ககூடிய தன்மையில் அவர்களைத் தயார்படுத்திக் கொள்வதோடு அபிவிருந்தி பற்றிய அறிவு மக்கள் மத்தியில் வளர வேண்டும். வெறுமனே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தில் மாத்திரம் அபிவிருத்தி தங்கிவிடாமல், ஏனைய அம்சங்களிலும் அபிவிருத்தியை எவ்வாறு நிலை நாட்டுவது என்பதை அனைவரும் கருத்தில் கொள்ளும்பொழுதே அபிவிருத்தியென்பது ஒரு நாட்டில் சாத்தியப்படும்.

அபிவிருத்தி என்பது வெறுமனே பொருளாதார வளர்ச்சி அடிப்படையினால் மட்டுமே அளக்கக்கூடிய ஒன்றல்ல. மாறாக, இது மக்களின் முழுமையான வாழ்வாதாரம், சுயமரியாதை மற்றும் அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் போன்ற மூன்று முக்கியமான கூறுகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டிய ஓர் உயர்ந்த சமூகச் செயற்பாடாகும் என்பதை பேராசிரியர் கூலட் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

ஒரு சமூகத்தில் மக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கும்போது, தங்களுக்குரிய உரிமைகள் புறக்கணிக்கப்படும்போது மற்றும் சுதந்திரமற்ற நிலையில் வாழும்போது, அங்குள்ள எவ்வகையான பொருளாதார முன்னேற்றமும் ‘அபிவிருத்தி' என்ற பதத்தைப் பெறமுடியாது. எனவே, அபிவிருத்தி என்பது முழுமையான மனித முன்னேற்றமாகும்.

அத்துடன், அபிவிருத்தி என்பது ஒரு சிறிய பிரிவினருக்கான நன்மையோ, ஒரு பகுதியினருக்கு மாத்திரமே வழங்கப்படும் வாய்ப்போ அல்ல. மாறாக, அது எல்லா மக்களுக்கும், எல்லாப் பிரதேசங்களுக்கும், எல்லாச் சமூக மட்டங்களுக்கும் சமமான வாய்ப்புகளையும் முழுமையான அரசியலற்ற உள்ளீர்ப்பையும் வழங்கும் போது மட்டுமே அதன் உண்மையான நோக்கத்தை அடையும். இந்த நிலையிலேயே, அபிவிருத்தி என்ற தீபம் எப்போதும் மனிதவாழ்வில் முழுமையாகச் சுடர்விட வேண்டுமானால் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதரதும் உரிமை, மரியாதை, மற்றும் வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

kobinath.n@thaiveedu.com



> “ வெறுமனே வாழ்க்கைத் தரத்தில் மாத்திரம் அபிவிருத்தி தங்கிவிடாமல், ஏனைய அம்சங்களிலும் அபிவிருத்தியை எவ்வாறு நிலை நாட்டுவது என்பதை அனைவரும் கருத்தில் கொள்ளும்பொழுதே அபிவிருத்தியென்பது ஒரு நாட்டில் சாத்தியப்படும். ”

# 21–ஆம் நூற்றாண்டின் ஆசிரியர் வகிபாகங்கள்



**- அகமட் பிஸ்தாமி**

ஆசிரியத்துவம் அல்லது கல்விப்புலத்தின் நடவடிக்கைகள் இப்பொழுது முன்னெப்போதும் இல்லாதளவு வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. கல்விப் புலத்தில் பணியாற்றக் கூடியவர்கள் எதிர்கால உலகை வடிவமைத்து எதிர்கால உலகின் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லக்கூடிய நிபுணர்களாக மாறி வருகின்றனர். அனைத்துத் துறையோடும் கல்விப் புலம் கட்டிறுக்கமான உறவைப் பேணி வருவது கண்கூடு.

கடந்த காலங்களைப்போல இருபத்தொராம் நூற்றாண்டின் வகுப்பறையை நோக்க முடியாது. வகுப்பறையில் இருக்கக் கூடிய மாணவர்களும் அவர்களுடைய சிந்தனைகளும் எதிர்பார்ப்புகளும் சிக்கல்களும் முன்னைய நூற்றாண்டுகளில் இருந்த மாணவர்களது இயல்பு, போக்கு, ஆர்வம், விருப்பு, வெறுப்பு போன்றவற்றிற்கு முற்றிலும் வேறுபட்டதாக அமைந்திருக்கின்றது.

சாதாரணமான ஓர் ஆசிரியரால் அவர்களைக் கையாளவோ வழிபடுத்தவோ நெறிப்படுத்தவோ முடியவே முடியாது. காரணம் இந்த நூற்றாண்டு மாணவர்களது இயல்புகளும் போக்கும் குணமும் தன்மையும் வேறுபட்டவை. இலகுவில் புரிந்து கொள்ள முடியாதவை. அதற்கேற்றாற்போல் அவர்களுக்கு என்று பிரத்தியேகமான மொழிக் குறியீடுகளும் மொழி வடிவங்களும் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இவர்களை எதிர்கொள்ள கடந்த கால அனுபவங்களோ வழிகாட்டல்களோ பெரும்பாலும் எந்த வகையிலும் பயனளிக்காது. அவற்றைச் சிரமப்பட்டு பிரயோகிக்க முனைவதால் கூட அவை கொஞ்சமும் எடுபடாது.

எனவே இத்தகைய புதிய இளம் தலைமுறைகளை எதிர் கொள்வதற்கு முன்வருகின்ற ஆசிரியர்கள் தம்மைத் தாமே அன்றாடம் இற்றைப்படுத்திக் கொள்கின்றவர்களாக இருக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் இன்றைய இளந்தலைமுறையும் அவர்களுடைய பெற்றோர்களும் நேரடியாகவே விமர்சித்து விசனம் தெரிவிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. அதற்கு ஏற்றாற்போல சமூக ஊடகங்களும் செயற்கை நுண்ணறிவுசார் பிரயோகங்கள் அதிகரித்திருக்கின்ற செயலிகளும் தாராளமாக கைவசம் இருக்கின்றன. உடனுக்குடன் எதிர்வினை ஆற்றக்கூடிய மாணவர்கள்தான் இன்று அதிகரித்திருக்கின்றனர். கிளிப்பிள்ளை போல சொல்வதைக் கேட்டு செயற்படக்கூடிய பிள்ளைகளைக் காண்பதரிது. அனைத்தையுமே எதிர்க்கக்கூடிய, குறுக்கு வினா தொடுக்கக்கூடிய, விமர்சிக்கக்கூடிய வினோதமான விடை காணக்கூடிய தலைமுறைதான் இன்று தோற்றம் பெற்றிருக்கின்றது. அதேபோல அவர்களின் விரல் நுனியில் இணையமும் சமூக ஊடகங்களும் உடனுக்குடன் தத்தமது கோரிக்கைகளுக்கு பதில் தரக்கூடிய அதிநவீன செயற்கை நுண்ணறிவுடன் கூடிய செயலிகளும் இருப்பதால் ஆசிரியர்கள் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

கல்விப்புலத்தைப் பொறுத்தளவில் அல்லது ஆசிரியத்துவத்தை பொறுத்த அளவில் ஒரு பக்கம் இது மிகப்பெரும்

சர்ச்சை நிறைந்தது போலவே மறுபக்கம் சவாலாக ஏற்று சாதிக்கக்கூடிய ஒரு துறையாகவும் காணப்படுகிறது. அந்த வகையில் ஆசிரியர்கள் தமது பாரம்பரிய வகிபாகங்களை கடந்து இருப்பத்தொராம் நூற்றாண்டு எதிர்பார்க்கின்ற வகிபா கங்களை நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இந்தப் பின்புலத்தில் பின்வரும் நடிப்பங்குகளை முழுமை யாகச் செயற்படுத்தக்கூடியவர்களாக ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்திக்கொண்டு இசைவாக்கம் அடையவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

- Facilitator - Guides students to learn actively and think independently.

  பாடசாலையின் இயல்பான கற்றல் கற்பித்தல் செயற்பா டுகளை மிக வெற்றிகரமாக செயற்படுத்துவதற்குத் தேவையான சகல வசதிகளையும் மாணவர்களுக்கும் அவர் களுடைய பெற்றோர்களுக்கும் செய்து கொடுக்கக்கூடிய ஆற்றலும் வலிமையும் பெற்றவராக இருக்க வேண்டும்.

- Coordinator - Organizes learning activities and connects students with resources.

  கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் பாடசா லையில் பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இதர பாடசாலையோடு தொடர்பு கொள்ளக் கூடிய சகலரோடும் சகல நிறுவனங்களோடும் உயர்ந்தபட்ச பயனைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அளவில் தொடர்பு களைப் பேணக்கூடிய இணைப்பாளராக ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டிய காலத்தின் கட்டாய தேவை ஏற்பட் டுள்ளது என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும்

- Resource Person - Shares knowledge, materials, and support for learning.

  கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஏற்ப மாணவர்கள் அதே அறிவு திறன் மனப்பாங்கு நடத்தை மனவெழுச்சி போன்ற அனைத்தும் நவீன சமூகத்துக்கு ஏற்றாற் போலவும் சவால்களை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு சாதனை புரி யக்கூடிய வகையிலும் விருத்தியடையச் செய்யும் நிலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற் கொள்ளும் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.

  ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுக்கு ஒரு வளவாள ராகத் தன்னை அடையாளப்படுத்த கூடிய வகையில் அனைத்துத் துறையிலும் பரந்த விரிந்த திறமை பெற்ற வராக, வாசிப்பாளராக, ஆர்வம் உள்ளவராக தேடலுடன் கூடியவராக இருக்க வேண்டும்.

- Researcher - Investigates best teaching methods and student needs.

  கல்வி உலகின் சமகால நிலைமை அது தேசிய ரீதியாக இருக்கலாம் சர்வதேச மட்டத்திலாக இருக்கலாம், கல்விப் புலத்தின் சமகால செல்நெறிகள் போக்குகள் சவால்கள் பேசு பொருள்கள் எரியும் பிரச்சினைகள் கல்விப் புலத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய ஆய்வுகள் விழுவினாக்கள் அதற்கான தீர்வுகள் பரிந்துரைகள் போன்றவற்றையும் மேற் கொள்ளக் கூடியவராக அல்லது இவற்றில் போதிய தெளிவும் ஈடுபாடும் கொண்டவராக இருக்க வேண்டும்.

- Explorer - Always learning and discovering new ways to teach.

  கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளோடு மாத்திரம் சுருங்கிக் கொள்ளாமல் நவீன உலகு வேண்டி நிற்கின்ற, அதேபோல தொழில் உலகு எதிர்பார்க்கின்ற அதற்குத் தேவையான விதத்தில் செயற்படக்கூடிய வகையில் தகவல்களையும் அவசியமான இதர தரவுகளையும் விடயங்களையும் பகுப் பாய்வு செய்யக்கூடிய அதற்கேற்றாற்போல் மிகச் சரியான தகவல்களை மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற் றோர்களுக்கும் வழங்கி தொடர்பைப் பேணக்கூடிய தகவல் பகுப்பாய்வாளராகவும் ஆசிரியர்கள் செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதுவே கல்விப்புலத்தில் ஆசிரியர் களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

- Conductor - Leads and harmonizes all classroom activities smoothly.

  அதேபோல இன்றைய நவீன ஆசிரியர்கள் தமக்கு பொறுப்பு வழங்கப்பட்டிருக்கின்ற வகுப்பில் இருக்கின்ற மாணவர்களை அல்லது தனக்கு பொறுப்பு சாட்டப்பட்டிருக் கின்ற பாடத்தைத் தன்னிடம் கற்கக் கூடிய மாணவர்க ளுக்கு மிகச் சிறப்பாகக் கற்பிப்பதோடு தேவையான அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பாக நின்று வழிநடத் தக்கூடிய ஆற்றலும் திறனும் பெற்றவராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- Trainer - Builds students' skills through practice and guidance.

  குறிப்பாக மாணவர்களை அவர்களுடைய இயல்புக ளுக்கும் திறமைகளுக்கும் பலவீனங்களுக்கும் ஏற்ப வேறு பிரித்து அறிந்து அடையாளம் கண்டு இனங்கண்டு தேவையான எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்களுடைய பெற்றோர்களுடனோ வழிகாட்டிகளுடனோ இணைந்து தேவையான பயிற்சிகளை, அனுபவங்களை, பயிற்சி பட்ட றைகளை வழங்கக்கூடிய பயிற்றுவிப்பாளராகவும் ஆசிரியர் செயற்பட வேண்டும்.

இப்படியெல்லாம் செயற்படுகின்ற பட்சத்தில் மாத்திரம்தான் இன்றைய புதிய தலைமுறையினரால் விரும்பப்படுகின்ற முன் மாதிரிமிக்க, தாக்கம் செலுத்துகின்ற, செல்வாக்கு உள்ள ஆசிரியராக மாற முடியும். இல்லாதபொழுது ஆசிரியர் துறைக்கு அருகதை அற்றவராக, அற்பமான மனிதர்களாக ஆசிரியர்களாகிய நாம் அவர்களால் அடையாளப்படுத்தப் பட்டு வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசப்படுவோம் என்பதனை மறந்து விடக்கூடாது.



bisthamy.ahamed@thaiveedu.com

# 5 பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே

# உதவுவதற்கான வழிகாட்டல்கள்

- எஸ்.கே.விக்னேஸ்வரன்



### சோளங்களை மிதிக்காதீர்கள்!

ஒவ்வொரு பதின்ம வயதினரிடமும் சில குறைபாடுகள் உள்ளன, அத்தகைய குறைபாடுகளை உலகம் பொதுவாகக் கவனிக்கிறது, கிண்டல் செய்கிறது, கேலிக் குள்ளாக்குகிறது. அந்தப் பதின்ம வயதினர் உயரத்தில் சிறியவராக இருந்தால், அவர் 'கட்டை', 'புளுக்கை, 'இறால்' அல்லது 'குட்டை' என்று அழைக்கப்படுவார். ஒல்லியாகவும் உயரமாகவும் இருந்தால், அவர் 'பயற்றங்காய்', 'நெடுவல்', அல்லது 'கொக்கைத்தடி' என்றும் அவர் கொழுப்பாக இருந்தால், 'குண்டு' அல்லது 'தொக்கை' அல்லது 'உருளை' என்று பெயரிடப்படுவார். அவர் பலவீனமாக இருந்தால், அவர் ஒரு ஆணாக இருந்து பலவீனமாகவும் இருந்தால் 'பெட்டை', 'சிஸ்ஸி', 'அம்மா பிள்ளை' அல்லது 'கோழிக்குஞ்சு' என்று அழைக்கப்படலாம். இளம் பதின்ம வயதினர்கள் இவை பற்றி அலட்சியமாக இருப்பதாக நடித்தாலும்கூட, இதுபோன்ற பட்டப் பெயர்களால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பதின்ம வயதினரை பகிடிக்குக்கூடக் கேலி செய்யாமல் இருப்பது நல்லது. பெற்றோரிடமிருந்து வரும் அவமானம் ஆழமாகவும் நீண்ட காலம் நீடிக்கும் ஒன்றா கவும் இருக்கும். சிலவேளை அதனால் வரும் தாக்கம் நிரந்த ரமானதாக மாறிவிடவும் கூடும்.

பதின்ம வயதினர் தங்கள் குழந்தைப் பருவத்தை நினைவு படுத்துவதை வெறுக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கும் குழந்தைப் பருவத்திற்கும் இடையில் ஒரு இடைவெளிய வைத்திருக்க விரும்புகிறார்கள். அவர்கள் தாம் பெரியவர்க ளாகக் கருதப்பட வேண்டும் என விரும்புகிறார்கள். பெற் றோர்கள் இந்த விருப்பத்தை ஆதரிக்க வேண்டும். நாம் பதின்ம வயதினர் முன்னி லையில், அவரது குழந்தைப் பருவத்தைப் பற்றி நினைவுப டுத்துவதையோ, அல்லது ஒரு வயதில் நிர்வாணமாக எடுக்கப் பட்ட அவரது புகைப்படங் களைக் காண்பிப்பதையோ தவிர்க்க வேண்டும். எங்களது எல்லாவிதமான தொடர்பாடல் களும் - பாராட்டு, விமர்சனம், வெகுமதி அல்லது கண்டிப்பு என்று எல்லாமே - சம்பந்தப்பட் டிருப்பதெல்லாம் வயதுக்கு வந்த இளைஞர்களுக்கு ஆனதே ஒழிய, பதின்ம வயதின ருக்கு ஆனதல்ல என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

### தங்கியிருப்பதற்கு அழைக்காதீர்கள்!

வளரிளமைப் பருவத்தில், இன்னொருவரில் தங்கியிருத்தல் என்ற நிலை விரோத மனப்பான்மையை உருவாக்குகிறது. பிள்ளைகள் தம்மில் தங்கியிருத்தலை வலியுறுத்தும் பெற்றோர்கள் தம்மை அறியாமலே தவிர்க்க முடியாமல் அவர்களது வெறுப்புகளுக்கு உள்ளாகிறார்கள். பதின்ம வயதினர் சுதந்திரத்தை விரும்புகிறார்கள். நாம் அவர்களை எவ்வளவுக்கு எவ்வளவு தன்னிறைவு அடையச் செய்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவர்கள் நம்மீது நன்மதிப்புக்களைக் கொண்டிருப்பர். அறிவார்ந்த பெற்றோர்கள், தமது பதின்ம வயதினரிடமிருந்து தம்மைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுக்கி வைக்கக்கூடிய நிலைக்கு மாறிக்கொள்கின்றார்கள். அவர்களது வளர்ச்சியின் போக்கை ஒருவகை அனுதாபத்துடன் அவதானிக்கின்றனர். ஆனால் அடிக்கடி தம்முள் தலையிட வேண்டும் என எழும் விருப்பங்களைக் கட்டுப்படுத்திக்கொள்கிறார்கள். அக்கறையும் மரியாதையும் காரணமாக, முடிந்தவரை, தமது பதின்ம வயதினரைத் தங்கள் சொந்தத் தேர்வுகளைச் செய்யவும், தங்கள் சொந்தச் சக்திகளைப் பயன்படுத்தவும் அவர் அனுமதிக்கிறார். அவரது மொழியில் வேண்டு மென்றே சுதந்திரத்தை ஊக்குவிக்கும் அறிக்கைகள் தெளிக்கப்படுகின்றன:

- 'தேர்வு உங்களுடையது.'
- 'அதைப் பற்றி நீங்கள் முடிவு செய்யுங்கள்.'
- 'நீங்கள் விரும்பினால்.'
- 'அது உங்கள் முடிவு.'
- 'நீங்கள் எதைத் தேர்ந்தெடுத் தாலும் எனக்குப் பரவாயில்லை.'

ஒரு பெற்றோரின் 'ஆம்' என்ற சொல் ஒரு சிறு குழந்தைக்கும் கூட மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் ஒரு பதின்ம வயதினருக்கு தனது வாழ்க்கையைப் பாதிக்கும் விஷயங்களில் முடிவெடுப்பதில் அதுபற்றிய கருத்தைத் தெரிவிக்கும் இன்னொரு குரலும் தெரிவுக்கான வாய்ப்புகள் பற்றிய தெரிவும் தேவைப்படும். இத்தகைய ஒரு நிலையில் வழங்கப்படக்கூடிய மரியாதைக்குரிய பதிலுக்கான ஒரு எடுத்துக்காட்டு இது:

**திருமதி A:** எனது பதினாறு வயது மகள் ஒரு ஆண் நண்பருடன் தனது பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கத் திட்டமிட்டாள் என்று என்னிடம் சொன்னாள். அவளுடைய திட்டத்தைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பதை அவள் அறிய விரும் பினாள். 'சரியான முடிவை

எடுக்கும் உங்கள் திறமையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது' என்று நான் சொன்னேன். என் மகள் திருப்தி அடைந்தது போல் தோன்றியது. அவள் கருணையுடன் கூடிய குரலில், 'நன்றி அம்மா' என்றாள்.

## உண்மைகளைச் சரிசெய்ய அவசரப்படாதீர்கள்!

பதின்ம வயதினர்கள் பெரும்பாலும் திருத்தங்களுக்குப் பிடிவாதமாகப் பதிலளிப்பார்கள். அவர்கள் அணுக முடியாதவர் களாகவும், கற்பிக்க முடியாதவர்களாகவும், யாராலும் பாதிக்கப்படவோ அல்லது எதற்கும் கட்டாயப்படுத்தப் படவோ கூடாது என்பதில் உறுதியாகவும் இருக்கிறார்கள்.

ஒரு பதின்ம வயதினர் கூறினார்: 'தவறாக இருப்பதிலும் நடப்பதிலும் ஒருவகையான திருப்தி இருக்கவே செய்கிறது, அது நல்ல பிள்ளையாக இருக்கும் ஒருவருக்கு ஒருபோதும் தெரியப்போவதில்லை.'

மற்றொரு பதின்ம வயதினர் கூறினார்: 'என் தந்தை சொல்வது சரி என்று எனக்குத் தெரியும். ஆனால் சில சமயங்களில் அவர் தவறு செய்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

மேலும் சிகிச்சை எடுத்துக்கொண்டிருக்கும் நிலையில் உள்ள ஒரு பதின்ம வயதினர் கூறினார்: 'என் தந்தை தனக்கேயான தனிவழியில் முன்னேறிக் கொண்டிருக்கும் இயல்புள்ள ஒருவர். அவரை ஒரு பிறவிச் செயற்பாட்டாளர் என்று சொல்லலாம். ஆனால் நான் என் சொந்த வழியில் எனது விஷயங்களைச் செய்வதைப் பார்க்க அவருக்குச் சகிக்க முடியாமல் இருக்கிறது. அவருக்கு எப்போதும் தனக்கென்று சொந்தமான சிறந்த வழி இருக்கவே செய்கிறது. ஆனால், எனது செயல்கள் மீது அவர் செய்ய வரும் திருத்தங்கள், என் மனதில் வெறுப்பு ஊசிகளால் பச்சை குத்தப்படுவதைப் போன்று எரிச்சல் தருவதாக நான் உணர்கிறேன். என் தந்தையின் அறிவுரை எனக்குப் பிடிக்கவில்லை; நான் என் சொந்தத் தவறுகளைச் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

கசப்பான வார்த்தைகளை உமிழும் நாக்குக் கொண்ட பெற்றோரால், உண்மைகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பதைக் கற்பிக்க முடியாது. குடும்ப உறவுகளில், 'இரக்கமற்ற உண்மை' அது உண்மையாக இருப்பதன் காரணமாகவே, குடும்ப உறவுகளைச் சிதைவுகளைக் கொண்டு வரும் அளவுக்கு மோசமான ஆயுதமாகி விடுவதுண்டு. புரிந்துணர்வுடன் அணுகப் படாத உண்மை, (பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான) அன்பை அழித்துவிடக்கூடும். சில பெற்றோர்கள் தாங்கள் எப்படி, எங்கே, ஏன் சரியாகச் சொன்னார்கள் என்பதை நிரூபிக்க மிகவும் கடினமாக முயற்சி செய்கிறார்கள். இந்த அணுகுமுறை கசப்பையும் ஏமாற்றத்தையும் மட்டுமே தருகிறது. மனப்பான்மைகள் விரோதமாக இருக்கும்போது, உண்மைகளால் எதையும் சாதிக்க முடிவதில்லை.



## அவர்களது அந்தரங்கத்தை மீறாதீர்கள்!

பதின்ம வயதினருக்கும் அவர்களுக்கென்றே உரிய தனிப்பட்ட அந்தரங்கம் இருப்பது அவசியம்; அது அவர்களுக்கு ஒரு சொந்த வாழ்க்கையை வாழ அனுமதிக்கிறது. அவர்களுக்குத் தனியுரிமை வழங்குவதன் மூலம், நாங்கள் அதற்கு மரியாதை காட்டுகிறோம். அவர்கள் எங்களிடமிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவும் வளரவும் நாங்கள் உதவுகிறோம். சில பெற்றோர்கள் அதிகமாக அவர்களை உற்று நோக்குகிறார்கள். அவர்கள் தங்கள் பதின்ம வயதினரின் அஞ்சல்களைப் படித்து அவர்களின் தொலைபேசி அழைப்புகளை ஒட்டுக் கேட்கிறார்கள். இத்தகைய மீறல்கள் நிரந்தர வெறுப்பை ஏற்படுத்தக்கூடும். பதின்ம வயதினர் தாம் ஏமாற்றப்பட்டதாகவும் கோபமூட்டப் படுதாகவும் உணர்கிறார்கள். அவர்களின் பார்வையில், தமது தனிப்பட்ட விடயங்களின் மீதான அத்துமீறல் ஒரு நேர்மையற்ற குற்றச் செயலாகும். ஒரு பெண் சொன்னது போல்: 'பெற்றோருக்கான தமது உரிமையைத் தவறாகப் பயன்படுத்தியதற்காக நான் என் அம்மா மீது வழக்குத் தொடரப் போகிறேன். அவள் என் மேசையைத் திறந்து என் நாட்குறிப்பு ஏடுகளைப் படித்தாள்.'

ஒரு பதினாறு வயது இளைஞன் கூறிய புகார் இப்படி இருந்தது: 'என் அம்மாவுக்கு என் மீது எந்தவித மரியாதையும் இல்லை. அவள் என் தனியுரிமையை ஆக்கிரமித்து, என் சிவில் உரிமைகளை மீறுகிறாள். அவள் என் அறைக்குள் வந்து என் மேசை லாச்சிகளை மறுசீரமைக்கிறாள். அவள் தன்னால் ஒழுங்கீனத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாது, என்று கூறுகிறாள். அவள் தன் சொந்த அறையைச் சுத்தம் செய்வதோடு நிறுத்திக்கொண்டு என்னைத் தனியாக விட்டுவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவள் சுத்தம் செய்தவுடனேயே நான் வேண்டுமென்றே சுத்தம் செய்யப்பட்ட என் மேசையைக் குழப்புகிறேன். ஆனால் அம்மா ஒருபோதும் இதை விளங்கிக்கொள்ள மாட்டாள்.'

சில பதின்ம வயதினர் தங்கள் பெற்றோர், தம்முடைய சமூக வாழ்க்கையில் மிகுந்த ஆர்வத்துடன் தலையீடு செய்வதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

பதினேழு வயது பேர்னிஸ் கசப்புடன் பேசுகிறார்: 'என் காதலன் வருவதற்கு முன்பே என் அம்மா தானும் உடை மாற்றிக் கொள்கிறாள். நான் தயாராகும் போது அவள் அவனுடன் கிசுகிசுக்கிறாள். அவள் நாங்கள் காரில் ஏறும் வரைக்கும் எங்களுடன் நடந்து வருகிறாள். நான்



திரும்பி வரும்போது, அவள் ஒருவகை விடுப்பார் வத்துடன் எனக்காகக் காத்திருப்பதைக் காண்கிறேன். அவள் நடந்த எல்லா விடயங்க ளையும் அறிய விரும்புகிறாள். அவன் என்ன சொன்னான்?, நான் என்ன சொன்னேன்?, அவன் அதை எப்படி எதிர்கொண்டான்? நான் அதற்கு எப்படிப்பட்ட எதிர்வினையைச் செய்தேன். நான் இப்போது எப்படி உணர்கிறேன்? அவன் எவ்வளவு பணம் செலவ ளித்தான்? அவனது எதிர்காலத் திட்டங்கள் என்ன? எனது வாழ்க்கையே ஒரு திறந்த புத்தகம் போலாகிவிடுகிறது. அதன் ஒவ்வொரு பக்கங்களும் ஒரு பகிரங்க அறிவிப்பு. அம்மாதான் ஒரு நண்பிபோல இருக்க முயல்கிறாள். அவளது உணர்வுகளை நோகடிக்க நான் விரும்பவில்லை... ஆனால்... ஆனால் எனக்கு ஒரு நாற்பது வயதுச் சினேகிதி தேவையில்லை. நான் எனக்கென்று சில தனிப்பட்டதும் இர கசியமானதுமான பக்கங்களைக் கொண்டிருக்க விரும்பு கிறேன்.'

ஒருவருடைய தமக்கேயான தனிப்பட்ட உணர்வுகளை இரக சியமாகக் கொண்டிருப்பதை மதிப்பது பெற்றோர்களுக்கு மிகவும் கடினமானதாக இருக்கிறது. அவர்கள் நெருக்கத் தையும் சகோதரத்துவத்தையும் விரும்புகிறார்கள். அவர்க ளிடம் நல்லெண்ணம் இருந்தபோதிலும், அவர்கள் செய்வ தெல்லாம் பிள்ளைகளின் உலகத்துக்குள் அத்துமீறி நுளை வதாகவே அது அமைகிறது. அத்தகைய நடவடிக்கைகள் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையிலான பரஸ்பர மரியாதையை வளர்க்காது. மரியாதை செழிக்கப், பெற்றோ ருக்கும் பதின்ம வயதினருக்கும் இடையில் சிறிது தூரம் அல்லது இடைவெளி பேணப்பட வேண்டும். அவர்கள் 'ஒன்றாக நிற்க முடியும், ஆனால் மிக நெருக்கமாக இல்லை.' மரியாதை என்பது நம் பதின்ம வயதினரை ஒரு தனித்துவமான, தனிப்பட்ட நபராக, நம்மிடமிருந்து விலகி இருக்கும் நபராக உணர்தலை உள்ளடக்கிய ஒன்று. இறுதிப் பகுப்பாய்வில், பெற்றோரோ பதின்ம வயதினரோ ஒருவருக்கொருவர் 'சொந்தமானவர்கள்' அல்ல. ஒவ்வொரு வரும் தத்தமக்குச் சொந்தமானவர்களே.

## பிடிப்புகளையும் பிரசங்கத்தையும் தவிருங்கள்!

பதினைந்து வயது மே கூறுகிறார்: 'என்னால் என் அம்மா விடம் பேச முடியாது. அவள் அதிகமாகக் கவலைப்படு கிறாள். எனக்கு உதவுவதற்குப் பதிலாக, அவள் கஷ்டப் படத் தொடங்குகிறாள். அவள் கண்கள் கண்ணீரால் நிரம்பு

**“மரியாதை செழிக்கப், பெற்றோருக்கும் பதின்ம வயதினருக்கும் இடையில் சிறிது தூரம் அல்லது இடைவெளி பேணப்பட வேண்டும்.”**

கின்றன, அவள் முகம் கூறுகிறது, 'ஐயோ, பாவம், அது உன்னைக் காயப்படுத்துவதை விட என்னை அதிகமாகப் பாதிக்கிறது.' என்று. அப்படிப்பட்ட ஒரு மருத்துவர் உங்க ளுக்கு எப்படி உதவ முடியும் என்று நீங்கள் நினைக்கி றீர்கள்? இரத்தத்தைப் பார்த்து ஒரு வைத்தியர் மயக்கம டைவது பரிதாபமா?... அதுதான் என் அம்மா.'

உதவியாக இருக்க, நாம் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; நம் குழந்தையின் மனநிலையும் உணர்வுகளும் அதனால் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில். அதற்கு உண்மையாகப் பதிலளிக்கும் திறனை நாம் எம்முள் வளர்த்துக்கொள்ள வேண்டும். நம் பதின்ம வயதினரின் கோபம், பயம், குழப்பம் என்பவற்றைச் சமாளிக்க உதவ வேண்டும். அதற்கு நாமும் கோபப்படா மலும், பயந்து, குழப்பமடையாமலும் இருக்க வேண்டும்.

'நான் உங்கள் வயதில் இருந்தபோது' என்ற சொற்றொட ருடன் நாம் தொடங்கும் போது, பதின்ம வயதினருக்கு உடனடியாகக் காது கேட்காமல் போய்விடும். அவர்கள் கேட்காமல் இருப்பதன் மூலம் நமது ஒழுக்கநெறி சார்ந்த விளக்கவுரைகளுக்கு எதிராகத் தங்களைத் தற்காத்துக் கொள்கிறார்கள். ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் நாம் எவ்வளவு நல்லவர்கள், தாம் எவ்வளவு மோசமானவர்கள் என்பதைக் கேட்க அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் நம்மைக் கேட்டாலும், நாம் மிகவும் கடின உழைப்பாளிகள், விவேகமுள்ளவர்கள், புத்திசாலிகள், சிக்கனமானவர்கள், நல்ல நடத்தை கொண்டவர்கள் என்று அவர்கள் நம்பப் போவதில்லை. உண்மையில், நாங்கள் எப்போதாவது இளமையாக இருந்தோமா என்று கற்பனை செய்வது அவர் களுக்குச் சிரமமாகவே இருக்கும்!.



vickneaswaran.sk@thaiveedu.com

# சினைப்பை நீர்க்கட்டி



## மகளிரில் ஒரு மறைக்கப்படும் ஆபத்து!

## Polycystic Ovarian Syndrome

**போல் ஜோசேப்**

ஒரு தொற்றாத ஆனால் நாட்பட்ட நோயாக உருவெடுத்து இன்று பல பெண்களை பூப்பெய்தியது முதல் மூப்பெய்தும் வரை பாதிக்கும் ஓர் இனப்பெருக்க மண்டல பிரச்சினையாகும். 25 வீதமான பெண்களில் பாதிப்பை ஏற்படுத்துவது மட்டுமல்ல, பலரும் தற்போது PCOS என உச்சரிக்கும் பொது நோயாக மாறி உள்ளது. ஓர் அமெரிக்க புள்ளி விவரத்தின் படி 2021-ஆம் ஆண்டில் இந்த நோய் தொடர்பான பொருளாதாரச் செலவு மட்டும் 15 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனக் கணிப்பீடுகள் குறிப்பிடுகிறது. அப்படி என்ன அவ்வளவு முக்கியமான பிரச்சினையா என்றால் ஆம் என்பது தான் பதில். இன்றளவும் எதனால் வருகிறது என்று காரணம் அறியப்படாததும், இதற்கென ஆங்கில மருத்துவத்தில் தனியான சிகிச்சை முறைகள் இல்லை என்பதும் இதனால் வரும் மற்றைய உடல் உபாதைகளினாலும் இது முக்கியத்துவம் பெறுகிறது. கடந்த சில தசாப்தங்களாக இதன் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளமை மருத்துவ உலகிற்கு ஒரு புரியாத புதிராக உள்ளது.

நோயின் தன்மை மற்றும் எவ்வாறு இந்த நீர்க்கட்டிகள் சினைப்பையில் உருவாகின்றன என்ற ஆய்வுகளும் அதன் பின்னால் உள்ள பொறிமுறைகளும் கண்டுபிடிக்கப்பட்டாலும் இவை என்ன காரணத்தால் அல்லது எந்தக் குறைபாட்டினால் அடிப்படையில் உருவாகின்றன என்பதை அறிய முடியாமல் மருத்துவ உலகமே தடுமாறுகிறது. பெரிய நோய்களுக்கு எல்லாம் காரணங்களை அறிந்து சிகிச்சைகள் செய்து வெற்றியடைந்து மருத்துவ விஞ்ஞானத்தில் முன்னேற்றம் கண்டுள்ள இந்தக் காலகட்டத்தில், வெறும் இந்த நீர்க்கட்டி தண்ணீர் காட்டுகிறது என்றால் ஆச்சரியம்தான். என்றாலும் இன்றைய நவீன வாழ்வியலும் அதன் தாக்கமும் தான் பெரும்பாலும் காரணம் என்பதை மறைக்க முயல்வதை மறுக்க முடியாது.

அண்மைக்கால ஆய்வுகளின்படி 15 வயது முதல் 19 வரையான இளம் பெண்களிலும் மற்றும் 45 வயது முதல் 55 வயது வரையான மாதவிலக்கு நின்று போகும் காலங்களிலும் பெண்களில் சினைப்பையில் நீர்க்கட்டிப் பாதிப்பு மிக அதிகமாக இருப்பதாக தெரிகிறது. எழுபது வீதமானவர்களில் இது கண்டுபிடிக்க முடியாமல் போவதும் அவர்கள் வேறு காரணங்களுக்கு மருத்துவரிடம் வரும்போது குறிப்பாக குழந்தைப் பேறின்மைக்காக மருத்துவ ஆலோசனைக்கு வரும் பெரும்பாலானவர்களில் இந்த PCOS இருப்பது கண்டுபிடிக்கப்படுகிறது. இதன் வீதம் அதிகரித்துச் செல்வதும் அவர்கள் பலவிதமான மாதவிடாய் கோளாறுகளால் அவதியுறும்போது குறிப்பாக மாதவிடாய் வராமல் இருப்பதும், ஒழுங்கற்றுக் காணப்படுவது போன்றவற்றிற்காக தங்களின் மருத்துவர்களை அணுகும் போதும் இதைப்பற்றி மருத்துவர்கள் பெரிதாக கண்டு கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டும் காணப்படுகிறது. 'இந்த வயதில் இப்ப எல்லாப் பெண் பிள்ளைகளுக்கும் இப்படித்தான் இருக்குது, வேண்டுமென்றால் பேர்த் கொன்ரோல் பில்ஸ் என்ற ஹோமோன் கருத்தடை மாத்திரைகள் அல்லது டயாபிற்றிக் நோய்க்கான மெற்போமின் மாத்திரைகளை தருகிறோம்' என்ற பதில்தான் பெரும்பாலான மருத்துவர்களிடமிருந்து வருவது கவலைக்குரிய விடயமாகும்.


***அண்மைக்கால ஆய்வுகளின்படி 15 வயது முதல் 19 வரையான இளம் பெண்களிலும் மற்றும் 45 வயது முதல் 55 வயது வரையான மாதவிலக்கு நின்று போகும் காலங்களிலும் பெண்களில் சினைப்பையில் நீர்க்கட்டிப் பாதிப்பு மிக அதிகமாக இருப்பதாக தெரிகிறது.***


கடந்தகால மருத்துவ ஆய்வுகளின் படி இந்த நோயின் நோயியல் பொறிமுறையில் மூளைக்குள்ளே குடிகொண்டிருக்கும் பிற்யூற்றரி மற்றும் ஹைப்போதலாமஸ் போன்ற சுரப்பிகளின் பங்களிப்பும், சினைப்பை மற்றும் அட்ரீனல் சுரப்பி ஆகியவற்றின் பக்கபலமும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுரப்பிகள் ஏன் அடம்பிடிக்கின்றன என்ற காரணம்தான் மருத்துவ ஆராய்ச்சியாளர்களுக்கு இன்னும் மூளைக்குள்ளே ஏறவில்லை. PCOS என்பது சில சுரப்பிகள் சார்ந்த இனப்பெருக்க மண்டல நோயாக இருந்தாலும் முதலில் ஹைப்போதலாமஸ் என்ற மூளைக்கு நடுவே பாதுகாப்பாக உள்ள பாதாம் பருப்பு அளவிலான வெறும் 4 கிராம் எடை கொண்ட ஒரு சிறு உறுப்பு, ஆனால் பெரும் பணிகள். இந்த உறுப்பை பற்றி முந்தைய பல கட்டுரைகளிலும் குறிப்பிட்டு இருக்கிறேன். பெயர் என்னமோ ஹைப்போதான் ஆனால் சரியான ஹைபேர் பேர்வழி. ஏதோ மூளையும் இருதயமும்தான் பெரிய வல்லரசுகள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். அவர்களையே கண்ணுக்குள்ளே விரலை விட்டு ஆட்டும் சிறு உறுப்புகள் நம் உடலில் பல உண்டு, அவற்றில் ஹைப்போதலாமஸ் மற்றும் பிற்யூற்றரி முக்கியமானவை. இவை இரண்டும் இணைந்து பெரும்பாலும் கூட்டணி அமைத்து பணி புரியும். உடலின் அத்தனை செயற்பாடுகளின் சமநிலையை பேணுதல், ஹோமோன்கள் மற்றும் உடல்



> **“ சினைப்பை நீர்க்கட்டிகளின் அறிகுறிகளாக பதின்ம வயதில் வரும் வழக்கமான முகப்பருக்களை விடவும் அதிக முகப்பருக்கள் தொடர்ச்சியாக உருவாகி முகத்தை சற்று விகாரமாக்கும். அப்போதே அதிக கவனம் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. ”**

இரசாயனங்கள் போன்றவற்றிற்கு தூதுவராக இருந்து உடலின் பல சச்சரவுகளையும் கண்டறிந்து சீர் செய்தல், ஐம்புலன்களின் மொழிபெயர்ப்பாளராக மூளையோடு தொடர்புகளைப் பேணுதல், மனம் மூளை உடல் இவற்றை ஒருங்கிணைக்கும் பாரிய செயற்பாடுகளுக்கும் பொறுப்பேற்று நம்மை நாமாக நலமாக நமது இருப்பை தக்க வைப்பதென்றால் சும்மாவா! அப்படி ஒருவரை உள்ளே வைத்திருக்கும் நாம் எவ்வளவு உயர்ந்தவர்கள்.

ஹைப்போதலாமஸ் எனும் குட்டிக் குறும்பன்தான் கோனாடோட்ரோப்பின் ரிலீசிங் ஹோமோன் Gonadotropin-releasing hormone (GnRH) என்பதைச் சுரந்து பிற்யூற்றரி சுரப்பியை கொஞ்சம் உசுப்பேத்திவிட்டு அதிலிருந்து பொலிகிள் தூண்டுதல் ஹோமோன் FSH மற்றும் லூட்டினைசிங் ஹோமோன் LH இரண்டையும் சுரந்து இனப்பெருக்க மண்டலத்தை ஆட்டிப்படைக்கிறது. நாம் அடிக்கும் அத்தனை லூட்டிகளுக்கும் பிதாமகன் அவர்தான். ஆண்களில் ரெஸ்ரோஸ்ரிரோன் மற்றும் பெண்களில் ஈஸ்ற்ரோஜன் ப்ரொஜஸ்ரோன் போன்ற ஹோமோன்களை சுரக்க வைத்து பெண்களின் சினைப்பையில் முட்டைகளை முதிர்ச்சி அடைய செய்வதும் ஆண்களில் விந்தணுக்களின் உற்பத்தியை தூண்டி விடுவதுமாக 1330-வது வள்ளுவன் வாக்கின்படி, காதல், காமம், கூடி முயங்குதல், குழந்தைப்பேறு இப்படி இந்த ஹோமோன்களின் அட்டகாசம் கொஞ்சமா!

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் மேற்சொன்ன அத்தனை சுரப்பிகளுக்கும் இடையே நடக்கும் வேலிச்சண்டை, சொத்துப் பிரச்சினை, கொடுக்கல் வாங்கல்கள் தகராறுகள், பதவிச் சண்டை, போட்டி பொறாமை இப்படி நமக்குள்ளே நடக்கும் அத்தனையும் இந்த சுரப்பிகளுக்கு இடையிலும் ஏதோ ஒரு சில துரோகிகளின் தூண்டுதலால் நடைபெறுவதால்தான் சினைப்பை கோபமடைந்து அதன் விளைவாக கட்டிகளை உருவாக்கி விடுகின்றன. மேலும் எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல அதிரினல் சுரப்பி மற்றும் சினைப்பையில் சுரக்கும் மற்றும் ஒரு சுரப்பான அன்ட்ரோஜன் அளவும் அதிகமாகிறது. ஆண்களின் விதைப்பையில்தான் இந்த ஹோமோன் சுரந்து ஆண்மைக்கான அடையாளமாகவும் செயற்படுகிறது. பெண்களிலும் குறைவான அளவில் எப்போதும் காணப்படும், ஆனால் இதன் அளவு அதிகமாகி சினைப்பையில் நீர்க்கட்டி உருவாவதற்கு மட்டுமல்ல பெண்மைக்குள்ளே அதிக ஆண்மை தன்மையை தூண்டி முகத்திலும் உடலின் மற்ற பாகங்களிலும் முடி வளர்ச்சியை தோற்றுவித்துவிடுகிறது.

சினைப்பை நீர்க்கட்டிகளின் அறிகுறிகளாக பதின்ம வயதில் வரும் வழக்கமான முகப்பருக்களை விடவும் அதிக முகப்பருக்கள் தொடர்ச்சியாக உருவாகி முகத்தை சற்று விகாரமாக்கும். அப்போதே அதிக கவனம் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. மேலும் முன்பு குறிப்பிட்டது போல பெண்களின் முகத்தில் ஆண்களைப் போலவே தாடி, மீசையும் தோன்ற ஆரம்பித்து விடுகிறது. சிலருக்கு உடல் பருமன் அதிகமாகி கழுத்து, உதடு, அக்குள், இடுப்பு பகுதிகளில் தோல் தடித்து கறுப்பாகிறது. இது மருத்துவத்தில் Acanthosis Nigricans என்று அழைக்கப்படுகிறது. இதன் பின்னணியில் வேறு சில நோய்களின் அறிகுறியாகவும் இருக்கலாம், உதாரணமாக டயாபிற்றிக் என்ற நீரிழிவு நோயின் ஆரம்ப அறிகுறியாகவும் இருக்கும் என்பது மருத்துவ அறிவியலின் முடிவாகும்.

சினைப்பை நீர்க்கட்டியின் அடுத்த அறிகுறி உடல் பருமன் ஆகும். இது நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல இள வயது பெண்களின் உடல் பருமன் அதிகரிப்பதால் சினைப்பை நீர்க்கட்டி வருகிறதா அல்லது சினைப்பை நீர்க்கட்டி இருப்பதால் உடற்பருமன் வருகிறதா என்பது இன்னும் முற்றுப் பெறாத நீயா! நானா!.

மற்றும் பெரும்பாலான பெண்களில் ஒழுங்கற்ற மாதவிடாய் அல்லது மாதவிடாய் முற்றிலுமாக தடைப்படுதல் போன்றவையும் அதிக வலியுடன் கூடிய மாதவிடாயும் நீர்கட்டிகளின் ஆதாரபூர்வமான அறிகுறிகள் ஆகும். எழுபது எண்பதுகளில் எங்கு பார்த்தாலும் கருத்தடை தொடர்பான விளம்பரங்கள் தான், நாம் இருவர் நமக்கு இருவர் மற்றும் கருத்தடை சாதனங்கள் ஆணுறை முதல் பெண்ணின் கருத்தடை அறுவை சிகிச்சை வரை வீதிகளிலும் பேருந்துகளிலும் விழிப்புணர்வு விளம்பரங்கள்தான் விழிகளில் தென்பட்டது. தமிழகத்தின் பல கிராமங்களில் பெண் சிசுக்கொலைகள் உச்சகட்டத்தில் இருந்த காலகட்டமும் அதுதான். ஆனால் இன்று மாறாக கருத்தரிப்பு நிலையங்களை Fertility centers நோக்கி தம்பதிகள் படையெடுப்பதும், அதற்காக தவம் கிடப்பதும் நம் அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். அதற்கு காரணங்கள் பல இருந்தாலும் இன்றைய வாழ்வியலும் உணவு பழக்கமும் முக்கிய காரணம் என்பதை மறுக்கமுடியாது. அதை அடிப்படையாகக் கொண்ட சினைப்பை நீர்க்கட்டியும் குழந்தைப் பேறின்மைக்கு ஒரு முக்கிய காரணியாக முன்னிலையில் இடம்பெறுகிறது.

PCOS உள்ள பெண்களில் Alopecia என்ற இளவயது முடி கொட்டுதல் இன்னொரு சிக்கு எடுக்க முடியாத சிக்கலாக உள்ளது. அதற்காக பல இணையத்தளங்களில் வரும் விளம்பரங்களைப் பார்த்து அமேசான் காடுகளின் வேர்களிலும் விதைகளிலும் தயாரிக்கப்பட்ட எண்ணெய் தலைக்கு தேய்த்தால் நாலு வாரத்தில் தலையில் முடி தஞ்சாவூர் வயல்கள்

போல செழித்து வளரும் என்று எண்ணி ஏமாறும் கூட்டம் ஒருபுறம், மேற்கத்தேய தொலைக்காட்சிகளிலும் என்ணெய் மற்றும் ஷாம்பூ நிறுவனங்களும் ஏமாற்றும் வித்தைகளிலும் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல. PCOS உடன் இணைந்து இணை நோய்களான Metabolic Syndrome என்ற வளர்ச் சிதை மாற்ற நோய் ஒருங்கியம் படுத்தும் பாடு மறுபுறம். இதில் இளவயதில் டயபிற்றிக், இதய நோய்கள், மாரடைப்பு, கல்லீரலில் கொழுப்பின் தேக்கம், உயர் இரத்த அழுத்தம் என்று ஒரு பெரிய பட்டியலே நீள்கிறது. என்ன இது ஒரு நீர்க்கட்டியின் பின்னணியில் இவ்வளவு பிரச்சினைகளா என்று கேட்க பெருமூச்சு விடுவதை ஒரு மருத்துவராக உணர முடிகிறது.

இதற்கு என்னதான் தீர்வு, மற்ற மருத்துவ முறைகளில் குறிப் பாக ஜேர்மன் மருத்துவமான ஹோமியோபதி மருத்துவ முறை யில் முழுமையான நிவாரணம் தரும் மருந்துகள் உள்ளன என்பது பலருக்கும் தெரிந்திராத ஒரு விடயம். அதிலும் எல்லா நீர்க்கட்டிகளுக்கும் ஒரே மருந்து என்று இல்லை, நோயாளியின் தன்மை, வாழ்க்கைமுறை, பழக்கவழக்கம், பாரம்பரியம், உடல்வாகு, மனநிலை, அவரின் குணம் குறிகள் இப்படி இன்னும் பலவற்றை ஆய்வு செய்து தனிநபருக்கும் தனித்தன்மை உள்ள ஹோமியோபதி மருந்துகள் கொடுக் கப்படுவதால் நிவாரணம் கிடைக்கும் என்பது அனுபவபூர்வ மானதாகும். இன்றைய நவீன வாழ்வியல் முறையும் பழக்க வழக்கங்களும் இந்த நோயின் பின்னணியில் உள்ள ஹோமோன்களில் மாறுபாடுகளையும் பல வேறுபாடுகளை யும் ஏற்படுத்தி பெண்களில் தாறுமாறாக ஊறுபாடுகளை உண்டாக்குகிறது. ஒரு மனித அதிசயம் என்னவென்றால் ஒரு பெண் குழந்தை அதன் தாயின் கருவறையில் இருக்கும் போதே ஐந்தாவது மாதத்தில் அந்த குழந்தையின் சினைப் பைக்குள்ளே அவளின் வாழ்நாள் முழுமைக்கும் தேவையான முட்டைகள் உருவாகிவிடுகின்றன. பூப்பெய்தலின் பின்புதான் அவை முதிர்ச்சி அடைகின்றன. அப்போது இந்த நோய்க் கான அடி அத்திவாரம் கருவுற்ற தாயின் வாழ்வியலிலேயே தொடங்கிவிடுகிறது. அதன் பின்பு சிறுமிகளாக இருக்கும் போது பலர் உட்கொள்ளும் துரித உணவுகள் (Fast Food) செயற்கையான குளிர்பானங்கள், இரசாயன பதப்படுத்தப் பட்ட உணவுகள், அதிக அளவிலான சேர்க்கை ஹோமோன் கள் மற்றும் இரசாயனங்கள் செலுத்தி வளர்க்கப்படும் உப் பிப்போன கோழி போன்ற இறைச்சிவகைகள் இப்படிப்பட்ட உணவுப் பொருட்கள் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.



அமெரிக்காவின் அதிகாரபூர்வ நிறுவனமான தேசிய மருத் துவ கழகம் (National Institute Medicine) இந்த நோயைப் பற்றி குறிப்பிடும்போது PCOS என்பது ஒரு சிக்கலான பல்வகை பரிமாண நோய், இது வலுவான ஏபிஜெனற்றிக் (Epigenetic) காரணிகளுடன் தொடர்புடையது என்று குறிப் பிட்டுள்ளனர். எபிஜெனற்றிக் அறிவியல் என்பது சற்று வித் தியாசமானது, டி.என்.ஏ.-இன் உட்புற மரபணுக்களின் கட்டமைப் பில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் மரபணுக்களின் மேலுள்ள படிமப்புரதங்களின் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி டி.என்.ஏ.-இன் பொறிமுறையில் தலையீடு செய்ய முற்படும் ஒரு விடயமாகும். இது மனிதனில் அகக் காரணி களாலோ புறக்காரணிகளாலோ ஏற்படலாம். உதாரணமாக நமது மனதின் செயற்பாடுகள், உணர்வுகள் உணர்ச்சிகள், பழக்கவழக்கங்கள் உதாரணமாக மது போதைப் பழக்கம், நாம் செய்யும் தவறான செயல்கள் போன்றவையும் மனதின் சிந்தனைகள் ஊடாக எபிஜெனற்றிக் என்ற மரபணுவின் மேல்படிமப் புரதங்களில் மாறுதல்களை உண்டாக்க வாய்ப் புண்டு. இவை மட்டுமல்ல உணவுப்பழக்கம், உடற்பயிற்சி மற்றும் நமது தொடர்ச்சியான சில பழக்கவழக்கங்கள் போன்றவையும் புற காரணிகளான சுற்றுச்சூழல், காலநிலைச் சூழல்கள், உறவு முறைகளில் சிக்கல்களின் தாக்கம், உறக்க மின்மை, போர்கள் இயற்கை அழிவுகளால் உண்டாகும் மனவடுக்கள், இழப்புகள் பிரிவுகளால் ஏற்படும் ஆழ்ந்த துயரம், மற்றவர்களால் வரும் ஆறாத மனக்காயங்கள், தொழிற்றுறைசார் உடல்பாதிப்புகள், சூழல் மாசடைதலால் வரும் இரசாயனத் தாக்கங்கள், மருந்துகளின் பக்கவிளைவு கள் என்று பெரிய பட்டியலே நீள்கிறது.

ஆகவே Primordial and Primary prevention என்ற அணுகு முறையில் நோய் வரும் முன்பே தடுக்கும் முறைகளிலே கவனம் செலுத்துவது அவசியமாகும். சிறுவயது முதலே ஆரோக்கியமான உணவு முறை, மனநலம் பேணுதல், போது மான உறக்கமும் ஓய்வும், மாசற்ற சூழல், அவசர நிலை களைத் தவிர தேவையற்ற மருந்துகள் ஸ்டீராய்ட் மற்றும் கோட்டிசோன், ஹோமோன் மற்றும் ஆன்ரிபயாட்டிக் மருந்து களை தவிர்த்தல், தினந்தோறும் உடற்பயிற்சி, மாதவிடாய் மற்றும் இனப்பெருக்க மண்டல நலத்தில் கூடுதல் விழிப் புணர்வு, GUT health என்ற உணவு குழாய் குடல் நலத்தில் Probiotics என்ற நலம் பயக்கும் குடல் நுண்ணுயிரிகளின் மேம்பாடு, அதற்கான உணவு முறைகளை பின்பற்றுதல் போன்றவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**உசாத்துணை:**

- https://www.researchgate.net/figure/Gross-presentations-of-normal-ovaries-and-polycystic-ovaries-with-cancer-in-hens-a-An_fig2_329189117
- https://www.endocrine.org/patient-engagement/endocrine-library/pcos



paul.joseph@thaiveedu.com

# உள பாதுகாப்புப் பொறிமுறைகளும் ஆளுமைக் கண்ணோட்டமும்

## சரவணன் லக்ஹரன்



உளவியல், தனிமனித நடவடிக்கைகளையும் அவர்களின் வாழ்வில் இடம்பெறும் - சிறு குழந்தைப் பருவம், முதிர்ச்சிப் பருவம், தளர்ச்சிப் பருவம் ஆகிய அனைத்து பருவங்களையும் ஆராய்கிறது. உளவியல், குழந்தைப் பருவம் முதிர்ச்சி அடைந்தவுடன், இயல்பானவரை பிறழ் வானவருடனும் மனிதரை விலங்குடனும் ஒப்பிடுகின்றது. அது ஒரு தனிமனிதருக்கும் இன்னொருவருக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை ஆராய்வதில் அக்கறை காட்டுகின்றது. அது கற்றல், நினைவுறுத்தல், சிந்தனை செய்தல், பிரச்சினைக்கு தீர்வு காணுதல், கற்பனை செய்தல், மெய்ப்பாடு, ஊக்க நிலை போன்ற நடவடிக்கையின் பொதுவான விதியில் பெருமளவு அக்கறை கொண்டுள்ளது. மனதில் உள்ள செயற்பாடுகளின்படி நமது நடத்தை தீர்மானிக்கப்படுகின்றது என்பதனை அறிவுறுத்தும்.

சிக்மண்ட் பிரைய்ட் (Sigmund Freud)-இன் உளகாப்பு நடத்தைகள் பிரசித்திம் பெற்றவை. அவர், மனமானது தன்னைக் காத்துக் கொள்ளும் தன்மை கொண்டது என்ற கருத்தை முன்வைத்தார். தான் அச்சத்திற்கு உள்ளாவதைத் தடுப்பதற்காக அறியா நிலை மனமானது சில உள முறைகளை உருவாக்குகிறது. இவற்றை உளக்காப்பு நடத்தைகள் என சிக்மண்ட் பிரைய்ட் அழைத்தார். உளவியல் பாதுகாப்பு பொறிமுறைகள் என்பது மனிதர் தம் வாழ்நாளில் அவர்களது உணர்வுகள், எண்ணங்கள், அல்லது நிகழ்வுகளைச் சமாளிக்க மக்கள் பயன்படுத்தும் உளவியல் ரீதியான உத்திகளையும் நடத்தைகளையும் குறிக்கின்ற தற்காப்பு பொறிமுறைகளாக காணப்படுகின்றது.

**உள பாதுகாப்பு பொறிமுறைகள் (Defense Mechanisms) மற்றும் அவற்றின் ஆளுமை சார்ந்த செல்வாக்கு:**

உளவியலாளர் சிக்மண்ட் பிரைய்ட் முதன்மையாக முன்வைத்த உள பாதுகாப்பு கவசங்கள் (Defense Mechanisms) என்பது, மனதிற்குள் ஏற்படும் உளவியல் சங்கடங்களிலிருந்து (anxiety) நம்மைப் பாதுகாக்க மனம் பயன்படுத்தும் அறியப்படாத (unconscious) முறைகள் ஆகும். இவை நம் ஆளுமையின் (Personality) வளர்ச்சியை, நடத்தையை, உறவுகளைக்கூட தாக்குகின்றன.

இப்போது 16 முக்கிய உள பாதுகாப்பு பொறி முறைகள் பார்ப்போம். அவையாவன:

- மறுப்பு (Denia)
- ஒதுக்கல் (Repression)
- இடமாற்றம் (Displacement)
- மாறுவடிவம் (Reaction Formation)
- சிற்றளவு உணர்வுப்படுத்தல் (Projections)
- பகுத்தறிதல் (Rationalization)
- இன்மையாக்கம் (Sublimation)
- மறு குழந்தையாக்கம் ((Regression)
- அடக்கல் (Suppression)
- அடையாளமாக்கல் (Identification)
- தன்னைக் குறைத்தல் (Undoing)
- பிம்பித்தல் (Introjection)
- தூண்டுதல் (Acting out))
- தற்குறிப்பு (Compensation)
- சூழ்நிலைக்கேற்ப பொருள் மாற்றம் (Intellectualization)
- நகைச்சுவையாக்கம் (Humor)

இத்தற்காப்பு பொறிமுறைகள் மனிதரது விருப்பு, வெறுப்புக்கு ஏற்ப அவர்கள் சூழ்நிலையில் எவ்வாறு பிரயோகப்படுத்துகிறார்கள்? என்பதை பொறுத்து அமையப் பெற்றுள்ளதாக காணப்படுகிறது. ஒரு செயலைத் தொடங்கும் போது அச்செயலின் ஏற்படும் நன்மை தீமைகளை அறிந்து, அதில் மனிதர் நன்மைகளை மாத்திரம் தான் விரும்பத்தக்கவராகக் காணப்படுகின்றனர். அதேசமயம், தனக்கு வரும் தீமைகளில் இருந்து விலகிச் செயல்படுவதற்கான பல்வேறுபட்ட பொறிமுறைகளை உருவாக்கி அதில் இருந்து விடுபட்டுச் செயல்பட முயல்கின்றனர்.

இதன் காரணமாக அவனது பாதுகாப்பு பொறிமுறை ஆளுமையிலும் உளவியல் கண்ணோட்டம் முக்கிய இடம் பிடிகின்றது. இதனை சிக்மண்ட் பிரைய்ட்டின் உளவியல் ஆளுமைக் கூறுகளுடன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது இட்டீகோ மற்றும் சூப்பர் ஹீரோவின் தொடர்பு இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

தனது சுயநலத்தின் மீதுள்ள பிடிவாத குணத்தினால் ஒவ்வொரு மனிதரும் தமது ஆசை, விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள முனைகிறனர். அச்சமயம் சமூகத்தின் எந்தவித கட்டுப்பாடுகளுக்கும் கீழ்படியாமல் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு துடிக்கும் ஈகோவை, மனமானது தடைசெய்து அதனை நடுநிலை வகிக்கச் செய்து, சமூகத்தின் விதிமுறைகளுக்கு, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, ஒரு தனி மனிதர் எதனை சாதிக்க வேண்டும்...? எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? சமூக ரீதியான விதிமுறைகள் என்னென்ன? என்பதை விளங்கப்படுத்தி மனிதரை ஒருநிலைப்படுத்தி சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் செயல்படதுண்டுகின்றது. மனிதர் தம் வாழ்நாளில் சுயமாகச் சிந்தித்து தனது செயற்பாட்டினை திறன்பட மேற்கொள்ள முடியாத நிலையில் இவ்வாறான பாதுகாப்பு பொறிமுறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன என சிக்மண்ட் பிரைய்ட் கூறுகின்றார். புறக்கணித்தல், பின்வாங்குதல், பகற்கனவு, ஈடு செய்தல், ஒன்றுதல், பின்னோக்கு, இடம் மாற்றம், அகநோக்குடமை, காரணம் கற்பித்தல், தெரிந்தெடுத்த மறதி, எதிர்வினை உருவாக்கம், பகுதி படுத்தல் என்ற மனோநிலை வெளிப்பாட்டில் சிக்மண்ட் பிரைய்ட்டின் பாதுகாப்பு வழிமுறைகள் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகின்றன.

எனது சகோதரனை ஓர் உதாரணம் காட்டி புறத்தெரித்தல் என்பதனை விளங்கப்படுத்தலாம் என முயல்கின்றேன். எனது சகோதரனின் ஆற்றல் மற்றும் செயற்பாடுகள் அனைத்தும் கலை மற்றும் விளையாட்டுப் போக்குடையதாகக் காணப்பட்டன. போட்டி நேரங்களில் அவன் ஏதாவது ஒன்றில் தோல்வியடையும் போது பிறரின் மேல் குற்றச் சாட்டை முன்வைத்து விடுவான். தன் பிழையை ஒத்துக் கொள்ளாது, இதுதான் தோல்விக்கு காரணம் எனக் குறை காட்டி விடுவான். இது புறத்திரிதலுக்கு சிறந்ததோர் உதாரணமாக காணப்படுகின்றது. அதுபோன்று, கலை விஞ்ஞானப் போட்டி ஒன்றில் அவன் பதிலளிக்கத் தவறியதால் அவனின் குழு நிலையில் உள்ள அனைவரும் தோல்வியைத் தழுவும் நிலை ஏற்பட்டது. அதன்போது அவன் தான் விட்ட பிழையை ஒத்துக் கொள்ளாது குழு நிலையில் உள்ளவர்கள் சரியாக எனக்கு நேர அவகாசம் கொடுக்கவில்லை. என்னுடன் கலந்துரையாடவில்லை என்று சூழ்நிலையை காரணம் காட்டி, தன் குற்றத்தைப் புறம் ஒதுக்கினான். இச்சந்தர்ப்பத்தில் அவன் தான் அறிந்து வைத்திருந்த உளவியல் பாதுகாப்பு பொறிமுறையை கையாண்டுள்ளான். தோல்வியை சகித்துக் கொள்ள முடியாது அவன் விட்டு விலகும் ஒரு சந்தர்ப்பமாக இதனை நான் பார்க்கின்றேன்.

அவ்வாறு, புறத்தெறித்தலில் பிரிதோர் உதாரணமாக மாணவர்கள் கல்வியில் பெறும் பேறுகள் சிறந்தாக பெறாத போது அவர்கள் பாடசாலையையோ படிப்பித்த ஆசிரியர்களையோ அல்லது வழங்கப்பட்ட வினாத்தாளில் உள்ள கேள்விகளையோ புறம் சாற்றி, தனது வெற்றியடையை நிரூபிக்க முடியாது போனதற்கான காரணத்தை சுட்டிக்காட்டி, தன் மீது உள்ள பிழையை அவர்கள் புறத்தள்ளுவர். இது, தன்னிடம் உள்ள ஊக்கிகள் அனைத்தையும் சமூக ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் உயரிய ஊக்கியாக மாற்றுதலாகும். அதாவது தன்னால் இழைக்கப்பட்ட குற்றங்கள் அல்லது சூழ்நிலையால் ஏற்பட்ட எதார்த்த உண்மைகளை, தான் மீண்டு கொள்வதற்காக அதிலிருந்து விலகி நின்று செயல்படும் தன்மையாகும். அல்லது கற்பனையில் அவை நிகழ்வதற்கான காரணத்தை சுட்டிக்காட்டி அதனுடன் சேர்ந்து பயணித்து வாழ்வதே ஆகும். உதாரணமாக: எனது மாமியார் திருமணம் முடித்தும் 12 வருடங்களாக பிள்ளைப்பேறு இல்லாமல் காணப்பட்டார். அதன்போது அவர் மடைமாற்றத்தின் வழியாக தன்னிலை அறியாது கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல், குறி சொல்பவர்கள், சாமியார் மூலம் பிள்ளையை பெற அதீத ஈடுபட்டுடன் காணப்பட்டார். காரணம் தனக்கான பிள்ளைப்பேற்றினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற உணர்வை, அதன் வாயிலாக அவள் நிவர்த்தி செய்து கொண்டார். இந்த உணர்வு நிவர்த்தியானது பிள்ளை பெற்றெடுப்பதற்கான ஒரு மடைமாற்ற செயல்பாடாக உளவியல் பொறிமுறை பாதுகாப்பு வழிமுறையில் உட்படுத்தி, நாம் உதாரணமாக நோக்கலாம்.

அதேபோல், சில மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர் பார்த்த விஷயங்கள் (காத்திருந்த நிகழ்வுகள், செயல்கள்) நடக்காதபோது, அவற்றை கற்பனையில் நடந்ததாக நினைத்து, அந்த கற்பனை உலகிலேயே வாழத் தொடங்குகி றார்கள். எனக்குத் தெரிந்த மனநலம் பாதிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவர் இப்படித்தான் வாழ்ந்து வருகிறார். ஒரு காலத்தில் நல்ல நிலையில் இருந்த அவர், இப்போது தன் குடும்பத்தினரால் கைவிடப்பட்டு, மனநிலை பாதிக்கப்பட்டு இருக்கிறார். குடும்ப உறவுகளால் ஒதுக்கப்பட்டு வாழ்வதால், எந்தவித ஐயமும் இன்றி அவர் ஒரு பிச்சைக்காரரைப் போல குப்பைகளைக் கிளறிக்கொண்டிருக்கிறார். அதே சமயம், அவர் தன் போக்கில் கதைக்கும் நேரத்தில் தன் ஆங்கில அறிவை வைத்து வரும் மாணவர்களைப் பார்த்துப் பயமுறுத் துகிறார் அல்லது அவர்களுடன் பேசி மகிழ்கிறார். தனது உடல், உள்ளம் சார்ந்த நடவடிக்கைகளில் எவ்வித ஈடுபாடையோ, சுய விருப்பையோ கருத்தில் கொள்ளாது, இலக்கின்றி அலைந்து திரிகிறார்.

எதிர்பார்ப்புகள் நிறைவேறாதபோது, ஒருவர் மனரீதியாகப் பாதிக்கப்பட்டு மனநோய்க்கு ஆளாக நேரிடலாம். இது சமூ கத்தில் நாம் கண்கூடாகக் காணக்கூடிய ஒரு நிலை. தனிந பரின் எதிர்பார்ப்புகள் நிறைவேறாதபோது, அந்த ஏமாற்றம் உச்சத்தை அடைந்து, அவரை மனரீதியாகப் பாதித்து, உளவியல் நோய்களை தோற்றுவிக்க கூடியதாக மடை மாற் றமடைவதை காண முடியும். ஒவ்வொரு உளவியல் செயல்மு றையும் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த பரப்பாக காணப்படு கின்றது. இவ்வழியில் உளவியலின் கருப்பொருள் எண்ணற்ற முக்கிய பரப்புகளான துணைப்பரப்புகளைக் கொண்டு விரிவ டைந்து காணப்படுகின்றது. ஒவ்வொரு பரப்பும் தனிநபரின் வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தில் கவனம் செலுத்து கிறது. எந்த ஒருவராலும் உளவியலின் எல்லாத் துறைக ளிலும் வல்லுனராக திகழ முடியாத அளவிற்கு, இந்தத் துறை மிகவும் பரந்து வளர்ந்துள்ளது. எனவே, ஒவ்வொரு துணைத் துறைக்கும் தனித்திறமை வாய்ந்த நிபுணர்கள் உள்ளனர், இது மனித மனதை முழுமையாகவும் ஆழமா கவும் புரிந்துகொள்ள உதவுகிறது.

மனிதர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, உளவியல் பாதுகாப்புப் பொறிமுறைகளைப் பயன்படுத்துகி றார்கள். ஆழ்மனதில் இயங்கும் இந்த வழிமுறைகள், மன ஆரோக்கியத்தையும், ஆளுமை வளர்ச்சியையும் பாதுகாக்க இன்றியமையாதவை. இந்த நுட்பமான உத்திகளைப் புரிந்து கொள்வதன் மூலம், நமது சொந்த நடத்தைகளையும், மற்ற வர்களின் செயல்களையும் ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும். உளவியல் என்பது ஒரு பரந்த துறையாகும். அதன் ஒவ்வொரு பிரிவும் மனித மனதை முழுமையாகப் புரிந்து கொள்ள உதவுகிறது. இது தனிப்பட்ட மேம்பாட்டிற்கும் சமூக உறவுகளை வலுப்படுத்துவதற்கும் பங்களிக்கிறது. இந்த பாதுகாப்புப் பொறிமுறைகளைப் பற்றிய அறிவு, நாம் உலகை எவ்வாறு உணர்கிறோம் என்பதையும், அதற்கு எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பதையும் புரிந்துகொள்ள மிகவும் உதவும்.



laksharan.sarawanan@thaiveedu.com



# ஆயுளைக் குறைக்கும் சிறு தவறுகள்



**- குமார் புனிதவேல்**

**நா**ம் பொதுவாக சிறுவிடயம் எனக் கவனிக்காது விடும் விடயங்கள் பெரும் விளைவுகளை ஏற்படுத்தலாம். இதனையே வள்ளுவனும் 'உருவு கண்டு எள்ளாமை வேண் டும்' என்றார். இங்கு மனித வாழ்வில் அறியாது செய்யும் ஐந்து சிறு தவறுக ளையும் அதன் விளைவு களையும் தந்தால் அவற்றை அறிந்து தவிர்த்து நெடு வாழ்வு வாழ் வீர்கள் என்ற நம்பிக்கையில் இக்கட்டுரை அமைந்து ள்ளது.

பலரும் ஓய்வுக்காலத்தில் வரும் நோய்களுக்கு எல்லாம் 'ஊழ்'தான் காரணம் என்று கூறி மனஅமைதி கொள்ள முயல்கிறார்கள். ஆனால், அப்படி ஒன்றுமே இல்லை. முயற்சி இருந்தால் எதனையும் வெற்றி கொள்ள முடியும். இதனையே தனது 620-வது குறளில் வள்ளுவர் குறிப்பி டுகிறார்.

*'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழாது உஞற்று பவர்.'*

அதாவது சோர்வு இல்லாமல் முயல்கின்றவர் இடையூறாக வரும் ஊழையும் புறுமுதுகு காட்டச் செய்வார்கள் என் கிறார். நாமும் இங்கு தரப்படும் சிறு தவறுகளை தவிர்த்து நெடிய வாழ்வு வாழ்வோம்.

**தவறு ———— 1**

சிலர் ஓய்வு பெற்றவுடன் 'இனி செய்வதற்கு ஒன்றுமில்லை ஓய்வு எடுத்துக் கொள்வோம்' என்னும் மனநிலைக்கு மாறுகிறார்கள். ஓய்வு பெறுமாறு அரசு அனுப்பும்போது சிலர் தம்மைப் பலமற்றவராக எண்ணிச் சோர்ந்து விடுகி றார்கள். ஓய்வு பெற அனுப்புவது என்பது, இவ்வளவு காலமும் உழைத்தமைக்கு நன்றி செலுத்தி, உழைத்தவர் மகிழும் வகையில் அவருக்கு ஓய்வூதியத்தை கொடுத்து, வாழ்க்கையை மகிழ்சியாக அமைப் பதற்கு. வயது கூடக்கூட இயலாமையும் கூடும் என அவர்கள் உண்மை யாகவே நம்புகிறார்கள். ஆனால், உலகின் எந்த உயிரி னமும் வாழ்க்கையின் இறுதிக் காலத்தை ஓய்வூதியத்தில் கழிப்பதில்லை.

இங்கு இரு உதாரணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வேன்.

என்னிடம் Buddy என்னும் ஒரு நாய் இருந்தது. 16 வருடங்கள் வாழ்ந்த நாய் இறப்பதற்கு முதல் நாள் கூட என்னுடன் நடை செய்து வந்தது. உலகின் ஒரு உயிரினமும் ஓய்வு எடுப்பதில்லை. தானாகவே தேடி வந்து உணவை அருந்தி வாழ்ந்து வரும்.

இங்கு இன்னும் ஒரு விடயத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். எங்கள் பாட்டாமார்கள் வீட்டில் ஒரு வேலையும் செய்யமாட்டார்கள். வெட்டிக்கதைப் பேசிவிட்டு வந்து வீட்டில் வந்து முடங்கிக் கொள்வர். தாம் ஓய்வு எடுப்பதாகக் கூறி முன் விறாந்தையில் ஒரு வசதியான கதிரையில் சாய்ந்திருந்து பத்திரிகை படிப்பார் அல்லது

புத்தகம் வாசிப்பார். அதேவேளை, பாட்டிமார்கள் முன்பு செய்த சமையல் வேலை, வீட்டை துப்புரவு செய்வது மற்றும் துணி துவைப்பது என்று தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பார்கள். இதன் விளைவு பாட்டிமார்கள் நெடிய காலம் வாழ்வார்கள். பாட்டாமார்கள் விரைவில் மரித்து விடுவார்கள்.

ஒய்வு எடுக்கும் வேளையில் உடம்பில் ஏற்படும் மாற்றம் என்ன ?

நீங்கள் ஒய்ந்து இருக்கும் வேளையில் உடம்பின் தசைகள் வீரியம் இழக்கத் தொடங்குவதுடன் உங்கள் எடையும் கூடத் தொடங்கும். இந்த நிலையில் உங்கள் மூளை உங்கள் உண்மையான வயதை விடக் கூடியாதக உணர வைக்கும்.

இவற்றை தவிர்ப்பதற்காக GYM என்னும் உடல் பயிற்சிக் கூடங்களுக்கு செல்ல வேண்டும் என்பது அவசியம் இல்லை. வீட்டைச் சுற்றி நடக்கலாம். இருந்து T.V பார்க்கும் போது இடைக்கிடை எழுந்து நடந்துவிட்டு அமரலாம். மேலும் அங்காடிகளில் சென்று நடக்கலாம். நீங்கள் கைத்தொலை பேசி பாவிக்கும் வேளைகளில் நடந்து கொண்டு கதைப் பதை பழக்கமாக்கிக் கொள்ளலாம்.

உங்கள் உடல் அசையாது இருக்கும் வேளை இரத் தோட்டம் குறைவதனால் மூளைக்குச் செல்லும் இரத்தமும் குறையும். இதன் பின்விளைவு உங்கள் மூளையின் செயற்பாடு குறைந்து மறதி நோய்வரும்.

**தவறு ———— 2**

முதலாவது தவறு உடம்பை ஒய்வு எடுக்கவைப்பது எனில், அடுத்த பெரும் தவறு மூளையை ஒய்வு எடுக்க வைப்பது. வேலைக்கு செல்லும் காலத்தில் நாள் முழுவதும் வேலையில் கவனமாகச் செயற்படுகையில் உங்கள் மூளையும் செயற்பட்டுக் கொண்டிருக்கும். ஆனால் பல முதியவர்கள் ஒய்வு எடுக்கும் போது ஆழ்ந்து சிந்திப்பதை நிறுத்தி விடுவார்கள். கேட்டால் இனி எதற்கு ஒய்வூதியம் தருகிறார்கள் எனக்கூறி இருக்க முற்படுவார்கள். இதன் பின்விளைவு மூளை துருப்பிடிக்கத் தொடங்கி விடும். அவர்கள் தொடர்ந்து ஒய்வூதியம் தருவார்கள். நீங்கள் மனதிற்குப் பிடித்த புதுப்புது விடயங்களை கற்கத் தொடங்குங்கள். புதிதாகப் புத்தகங்களை வாசிப்பதற்கு நிறையவே வாசிக சாலைகள் உள்ளன.

புதுப்புது வித்தைகளைக் கற்கத் தொடங்குங்கள். சிறு வயதில் இசை ஆர்வம் இருந்தும் வசதி இல்லாதிருப்பின் அதனைக் கற்க ஆரம்பியுங்கள். ஓவியத்தில் ஆர்வம் இருப்பின் ஓவியம் வரையுங்கள். புதுப்புது சமையலைக் கற்றுக் கொள்ளுங்கள். மற்றவருக்குக் கற்றுக் கொடுப் பதும் பயனுள்ள மகிழ்ச்சியான செயலாகும்.

**தவறு ———— 3**

முப்பது வயதில் உண்டது போல் அறுபது வயதிலும் சாப்பிடக்கூடாது. பலரும் தமது வயதிற்கு தகுந்த விதத்தில் பழக்கங்களை மாற்றிக் கொள்ளத் தவறிவிடு கிறார்கள். மேலும் இளம் வயதில் கடையில் வாங்கி உண்ட உணவு செமிக்கும். ஆனால், முதுமையில் அவை இலகுவில் செமிக்காது. ஆதலால், அவற்றைத் தவிர்ப்ப துடன் கண்ட கண்ட பாணங்கள் அருந்துவதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள். வயது அதிகரிக்கும் வேளையில் வளர்சிதை மாற்றம் (Metabolism) ஏற்படுவதுடன் உடல் உள்வங்கும் (Absorption) தன்மை குறையத்தொடங்கும். உங்களுக்கு கூடிய புரதச் சத்தும், குறைந்த அளவு சீனிச் சத்தும் தேவையாகும். மேலும் கூடிய அளவு நீர் அருந்துவதுடன் குறைந்த அளவு உப்பு பாவியுங்கள். ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வதவசியம். தவறான உணவுகள் உடம்பிற்கு ஒவ்வாமையை உண்டு பண்ணு வதுடன், உபாதைகளையும் தரும். ஆரோக்கி யமான உணவுகளை உண்பது மிக அவசியமான விடயம். தவறான உணவுகள் உடனடித் தாக்கத்தைத் தராவிடினும் உள் எதிரியாக நின்று வருத்தங்களைத் தந்து, மகிழ்ச் சியை கெடுத்து, ஆயுளையும் குறைக்கும்.

**தவறு ———— 4**

ஒருவருக்கும் தொல்லை கொடுக்காமல் வாழ விரும்பும் முதியவர்கள் ஒதுங்கி இருக்க முற்படுவதும் உண்டு. இது அவர்களுக்கு உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பாதி ப்பை ஏற்படுத்தும். மனிதர் அடிப்படையில் ஒரு சமூக மிருகம். அவர்கள் குரங்குகள் போல் கூட்டம் கூட்டமாகத் தான் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

உங்கள் கவலைகளை இன்னொருவருடன் பகிரும்போது அது பாதியாகக் குறையும், நீங்கள் சுமையை இறக்கியது போன்ற உணர்வைப் பெறுவீர்கள். அதேவேளை மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பகிரும்வேளை மகிழ்ச்சி இரட்டிப்படையும். ஒதுங்கி வாழ்வதால் உண்மையில் உங்கள் மேல் அன்புடை யவர்களுக்கு கூடிய வேதனை யைத்தான் நீங்கள் கொடுப்பீர்கள். எனவே நீங்கள் பலருடன் உறவாடி ஆரோ க்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க பழைய நண்பர் களுடன் இணைந்து இருங்கள்.

**தவறு ———— 5**

இலக்கு இல்லாத வாழ்க்கை அர்த்தம் அற்றதாகிவிடும். அர்த்தம் இல்லாத வாழ்க்கை அதிகம் காலம் வாழ் வதில்லை. அப்படி வாழ்பவர்கள் ஒய்வு பெற்ற பின் அதிககாலம் வாழ்வதில்லை. பிள்ளைகள் வளர்ந்து அவரவர் வாழ்க்கையைத் தொடர்வார்கள். ஆனால், உங்கள் வாழ்க்கை எங்கே செல்கிறது ?. இந்தக் கேள்விக்கு விடை காணுங்கள். முன்பே குறிப்பிட்டபடி பொழுது போக்குகளைப் பயனுள்ள வகையில் ஆக்கிக் கொள் ளுங்கள். இசை, விளையாட்டு என எதுவாகவும் இருக்கலாம். பயனுள்ள வகையில் உங்கள் பொழுது போக்கை அமைத்துக் கொள்ளுங்கள். இன்று பல அமைப்புகளில் தன்னார்வத் தொண்டர்கள் சேவைக்கு தேவை உள்ளது. அதில் சேர்ந்து, சேவை செய்வதால் பலர் பயன் அடைவதுடன் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் உண்டாகும். தொலைக்காட்சி பார்ப்பதும் ஒய்ந்து இருப்பதுமாக இருந்தால் நீங்கள் விரைவிலேயே மறைந்து விடுவீர்கள்.

மகிழ்ச்சியாக நெடுங்காலம் வாழ்வதற்கு வாழ்த்துகிறேன்.



kumar.punithavel@thaiveedu.com

# நம்மவர் மத்தியில் குடும்பக் கட்டமைப்பு



**- ப. விஸ்வகோகிலன்**

இன்றைய தலைப்பானது குடும்பம் என்றால் என்ன? என்ற வினாவுடன் ஆரம்பமாகின்றது. அதாவது தாயகத்திலுள்ளவர் மத்தியிலும் புலம்பெயர்ந்தவர் மத்தியிலும் குடும்பம் என்ற வரையறையானது பல்வேறு விடயங்களிலும் வேறுபட்டுக் காணப் படுகின்றது. இங்குள்ளவர்களின் ஆரம்ப வாழ்க்கை முறையானது பாரம்பரிய முறையினூடாக வளர்க்கப்பட்டு வந்தாலும் தற்போது நவீன உலகின் வளர்ச்சி காரணமாக இக் கட்டமைப்பானது பல வழிகளிலும் வேறுபடுகின்றது. இந்த வகையிலே நாம் 'குடும்பம்' என்பதனை சரியான முறையில் வரைவிலக்கணப்படுத்துவதன் மூலம் மக்கள் தமது வாழ்க்கை தொடர்பான வளத் தன்மையையும் பெறுமதி யையும் உணர்ந்துகொள்ள முடியும். இந்த வரைவிலக்க ணங்கள் சமுதாயத்தில் குடும்பம் தொடர்பான நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக அமையும். இவை ஒரு சமுதாயத்தில் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், எவ்வாறு குடும்பம் அமைய வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துவ தாகவும் உள்ளது.

குடும்பம் என்பது உலகம் முழுவதிலும் உள்ள கட்டமைக்கப் பட்ட விடயமாகும். குடும்பம் இல்லாத சமுதாயங்கள் இல்லை. குடும்பம் என்பதனால் குடும்ப அங்கத்தவர்களின் அந்தஸ்து, வகிபங்கினைக் குறிப்பிட்டுக் காட்டுவதாகவும் அமைகின்றது. இதனால் குடும்பங்கள் பல்வேறு வகையாக வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றன.

- குடும்பம் தொடர்பான கட்டமைப்புசார் வரைவிலக்கணம் உதாரணமாக ஒரு வீடு என்பது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பிறப்பு, திருமணம் அல்லது சுவீகாரம் மூலமாக ஒன்றாக வாழ்தலைக் குறிக்கும் என்பர்.
- குடும்பம் தொடர்பான தொழிற்பாட்டுசார் வரைவிலக்கணம் உதாரணமாக ஒரு குடும்பம் ஓர் அலகாக பின்வரும் தொழிற்பாடுகளைக் கொண்டதாக அமைய வேண்டும் எனக் கூறப்படுகின்றது.
  - வளப்பகிர்வும், சிறந்த பொருளாதாரமும் இருத்தல் வேண்டும்.
  - ஆதரவான பாரமரிப்புசார் உறவுமுறை காணப்பட வேண்டும்.
  - குடும்ப அங்கத்தவர்களிடையே பொறுப்புணர்வும் அர்ப்ப ணிப்பும் காணப்பட வேண்டும்.
  - பாலியல் உறவு முறையும் பிள்ளையைப் பெறுதலும் வளர்த்தலும் வேண்டும்.

இதில் சட்ட ரீதியாகத் திருமணம் முடித்த நல்ல உறவுமுறை யில்லாமல் பொருளாதார உழைப்புக்காகவும் சமுதாய நன் மதிப்பைப் பேணல் வேண்டும் என்பதற்காகவும் வாழ்வோரின் குடும்பம் ஒரு குடும்பமாக அமையமாட்டாது. இதனால் குடும்பம் என்பது தாய், தந்தை சட்ட ரீதியாக அல்லது சட்ட ரீதியாகப் பிள்ளைகளை வளர்த்து வாழ்வோரைக் குறிக்கும். குடும்பக் கட்டமைப்புகள் மாறலாம். உதாரணமாக பெற்றோர் மற்றும் பிள்ளைகள், உறவுமுறையானவர்கள் மற்றும் பிள்ளைகள், முதிர்ந்த அம்மாவும் பேரப்பிள்ளைகளையும் கொண்ட குடும்பங்கள், ஒன்றுவிட்ட சகோதரங்கள் மற்றும் பிள்ளைகள் போன்ற உறவு முறையில் குடும்பக் கட்டமைப் பானது காணப்படும். எவ்வாறாக இருப்பினும் அவர்களி டையான உறவுமுறையானது மாறுபட்டு காணப்பட்டாலும் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்புடன் காணப்படும்.

இங்கு சமூக பண்பாட்டு, கலாசார, மொழி, மதம் சார்பான பண்புகளில் வேறுபாடுகள் காணப்படலாம். ஆனால் அவை குடும்பம் என்ற அலகிற்குள் கட்டமைக்கப்பட்டுக் காணப் படும். இவற்றில் வெளித்தாக்கங்களின் செல்வாக்கானது பங்கம் விளைவிக்கும் நிலைகள் பல சந்தர்ப்பங்களில் நிலவி னாலும் குடும்ப அலகு என்பது நிலைகுலையாது தொடர்ந்து செல்லும். பிற்பட்ட காலங்களின் பின்னர் திருமணம், வேலை, இடம்பெயர்வு போன்ற பல தாக்கங்களின் காரணமாகப் பிரிந்து பெருகும் தன்மையினையும் எட்டுகின்றன. ஆரம்ப

காலகட்டங்களில் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் பின்பற்றப்பட்டுவந்த கூட்டுக்குடும்ப நிலையானது தற்போது தனிக்குடும்ப கட்டமைப்பிற்குள் வந்துவிட்டது. அதுமட்டுமன்றி தனிநபர் என்ற நிலையினையும் எட்டிவிட்டது. இவ்வாறான செயற்பாடுகள் தனிமனித மட்டத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

பின்வரும் காரணிகளின் அடிப்படையில் குடும்பங்களை வரைவிலக்கணப்படுத்தலாம். அவையாவன,

- சமூக பொருளாதார குணாம்சங்கள் (கல்வி நிலை மற்றும் வருமான மட்டம்).

- குடும்பக் கட்டமைப்பு.
  - பெற்றோர் மற்றும் பிள்ளைகள் இல்லாத தம்பதிகளைக் கொண்ட வீடு.
  - தாய் அல்லது தந்தை திருமணமாகாதவர்கள், பிரிந்தவர்கள், விவாகரத்துச் செய்தோர், தாரமிழந்தவர்கள். (கணவர் அல்லது மனைவி)
  - இரு பெற்றோரைக் கொண்ட வீடு. (முதலாவது திருமணம் / இரண்டாவது திருமணம்)
  - வளர்ப்புக் குடும்பம். (Foster Family)
  - சட்ட ரீதியாகப் பிள்ளையை மகவேற்பு செய்த குடும்பம்.
  - தனிக்குடும்பம் / வீடு
  - கூட்டுக் குடும்பம் / வீடு
  - விரிந்த குடும்பம்
  - உழைப்பில்லாத குடும்பம், பல உழைப்பாளிகளைக் கொண்ட குடும்பம்.
  - குடும்பங்களின் வாழ்க்கை வட்டத்தின் கட்டத்தினாலும் குடும்ப வகைகள் பின்வருமாறு காணப்படும்.
    - பிள்ளைகள் இல்லாத குடும்பம்.
    - குழந்தைகளைக் கொண்ட குடும்பம்.
    - முன்பள்ளிப் பிள்ளைகள் கொண்ட குடும்பம்.
    - பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் கொண்ட குடும்பம்.
    - கட்டிளமைப் பருவத்தினரைக் கொண்ட குடும்பம்.
    - வளர்ந்த பிள்ளைகளைக் கொண்ட குடும்பம்.
    - முதியோரைக் கொண்ட குடும்பம்.
    - மூன்று தலைமுறையைக் கொண்ட குடும்பம். (முதியோர் / நடுத்தரவயதுடையோர், சிறுவர்)
    - வலது குறைந்தோரைக் கொண்ட குடும்பம்

- சூழ்நிலையை மையமாகக் கொண்டும் குடும்பங்களை வகைப்படுத்தலாம். உதாரணமாக,
  - தமிழ்க் குடும்பம், முஸ்லிம் குடும்பம்
  - இந்துக் குடும்பம், கிறிஸ்தவ குடும்பம்
  - கிராம, நகரக் குடும்பங்கள்

குடும்ப உறவுமுறை எனும்போது தூய குடும்ப உறவுமுறையானது குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும்போது குடும்ப அங்கத்தவர்கள் தமது வகிபங்கினையும், பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு தொழிற்படுவர். தூய உறவுமுறையில் குடும்ப நியமங்கள், விழுமியங்கள், குடும்ப எல்லைகள், குடும்ப வகிபங்கு, எமது குடும்பம் என்ற உணர்வு, நாளாந்த குடும்ப செயற்பாடுகள், குடும்ப நிகழ்வுகள், குடும்ப ஒழுங்குமுறை சமூக இணைப்புத் தன்மை போன்றன காணப்படும். இதனால் குடும்ப உறவுமுறைகள் பேணப்பட்டு வளர்க்கப்படும்.

இணைப்புக் கோட்பாடு எனும்போது குடும்பத்தில் இணைப்புகள் மூலமாக சீரான உறவுமுறைகளைக் கட்டியெழுப்புவதினால் குழந்தைகளின் விருத்தியும் குடும்ப விருத்தியும் காணப்படும். இணைப்பு என்பது ஒரு குழந்தைக்கும் ஆரம்ப பாரமரிப்பாளருக்குமிடையிலான உடல்சார் மனவெழுச்சிசார் நெருங்கிய தொடர்பாகும். குழந்தையின் முதல் மூன்று வயது வரையும் பேணப்படும் குழந்தையின் இணைப்பு மிகவும் முக்கியமானதாகும். இதனால் மூளை விருத்தியடைவதுடன் சமூக உறவுமுறைகளில் நம்பிக்கையான உறவும் கட்டியெழுப்பப்படும். குழந்தைப் பருவத்தில் பேணப்படும் பாதுகாப்பான இணைப்பானது ஒரு தனிநபரின் முழு வாழ்க்கையிலும் பாதுகாப்பு, நம்பிக்கை, மனவெழுச்சியை ஒழுங்குபடுத்தல், சுய கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு உதவும். இவ்வாறான பாதுகாப்பான இணைப்பானது ஒரு தனிநபரின் வாழ்க்கையில் தொடர்ச்சியாக மேன்மைப்படுத்தப்பட வேண்டும்.

## இணைப்பான உறவுமுறைகள்:

- பாதுகாப்பான உறவு முறைகள்: ஒரு குழந்தையின் தேவையை ஒழுங்குமுறையாகவும் உணர்வு பூர்வமாகவும் பூர்த்தி செய்வதனூடாக வளர்க்கப்படும் இணைப்பு உறவுமுறை.
- பாதுகாப்பற்ற இணைப்புகள்: ஒரு குழந்தையின் தேவைகள் எல்லாவற்றையும் ஒழுங்குமுறையாகப் பூர்த்தி செய்ய முடியாமை ஆகும்.

## பாதுகாப்பான இணைப்பின் விளைபலன்கள்
## பாதுகாப்பற்ற இணைப்பின் விளைபலன்கள்

குழந்தையின் நம்பிக்கையை கட்டியெழுப்பப்படும்
நம்பிக்கையற்ற தன்மை காணப்படும்
தேவைகள் பூர்த்தி செய்யப்படும்
தளர்வான உறவுமுறை
ஆரோக்கிய உறவுமுறை காணப்படும்
ஆரோக்கிய உறவுமுறை விருத்தியின்மை
மனவெழுச்சி முகாமைத்துவம் காணப்படும்
மனவெழுச்சி கட்டுப்பாடின்மை
வசதிகரமான, சௌகரியமான உணர்வு
ஆவேசப்படுதல், விலகுதல்
ஒத்துழைப்பும் உதவும் மனப்பாங்கும் கட்டியெழுப்பப்படும்
சுயநலமான மனப்பாங்கு
நேர்சீராக சிந்தித்தல்
எதிர்மறையாக சிந்தித்தல்

பெரும்பாலான மேலைத்தேய நாடுகளில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை பகல் பராமரிப்பு நிலையங்களில் இணைப்புச் செய்கின்றனர். இவ்வாறான நிலைப்பாடானது காலப்போக்கில்



பெற்றோர் மற்றும் பிள்ளைகளிடையே விரிசலை ஏற்படுத்துகின்றது. இவற்றிற்குப் பல்வேறு காரணங்களை நாம் கூறிக்கொண்டு செல்லலாம். ஆனால் அதற்கான தீர்வினை எட்டிக்கொள்வதென்பது தற்போது கடினமானதாகவே இருக்கின்றது. இவ்வாறான நிலைப்பாடானது கூட்டுக்குடும்ப சூழலில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. மற்றும் சமூக ஆதரவு என்பது பிள்ளைகளுக்கு உறவினர் மூலமாகக் கிடைக்கின்றது. இச்சூழலில் வாழ்கின்ற பிள்ளைகள் சமூக பொறுப்புள்ளவர்களாக இருப்பார்கள். பாரமரிப்பாளர் அல்லது குழந்தை உறவுமுறைகளில் நான்கு வகையான இணைப்பு வகை காணப்படும்.

- பாதுகாப்பு (Secure) - ஒரு குழந்தை நம்பிக்கையாக தனது தேவை பூர்த்தி செய்யப்படும் என உணர்தல்.
- மறுத்தல் (Resister) - ஒரு குழந்தை தனது தேவை பூர்த்தி செய்யப்படும் என்ற நிச்சயமற்ற நிலையை உணர்தல்.
- விலகுதல் (Avoidant) - ஒரு குழந்தை தனது பாரமரிப்பாளர் மறுத்து பின் தேவையை பூர்த்தி செய்வார் என உணர்தல்.
- ஒழுங்குமுறையற்றதாக இருத்தல் (Disorganized) - ஒரு குழந்தை தனது தேவை பூர்த்தி செய்யப்படுமா என குழப்பமடைதல்.

இவ்வகையின் அடிப்படையில் பிள்ளைகளுக்கு பெற்றோர் மற்றும் குடும்ப உறவுகளுக்கிடையில் பிணைப்பினை ஏற்படுத்தல் அவசியம். இங்கு பராமரிப்பளார் என்பது பெற்றோர் தொடக்கம் பிள்ளை மீது அக்கறைகொண்ட அனைவரையும் குறிப்பதாக அமையும். குடும்பத்தில் பாரமரிப்பாளர்கள் எப்படி இணைப்பு முறையான உறவைக் கட்டியெழுப்ப உதவலாம்.

- பாதுகாப்பான ஒழுங்கான, நிலையான நேர்சீராகப் பிள்ளைகளை வளர்த்தல், அவர்களின் விருத்தி, தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- குழந்தைகளுக்கும் பிள்ளைகளுக்கும் என்ன வேண்டும் என்பதை உணர்தல், அறிதல் வேண்டும்.
- குழந்தைகளிடம் கதைத்தல், சிரித்தல், விளையாடுதல் வேண்டும்.
- நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.
- முழுமையான பெற்றோர் (100%) என்பதில்லை. வித்தியாசமான இணைப்புக்கள் காணப்படும் என்பதை அறிந்திருத்தல்.
- குடும்பத்தில் நாம் என்ற உணர்வினைப் பேணுதல்.
- குடும்ப அங்கத்தவர்களிடையே குடும்ப உறுப்பினர்கள் என்ற வகையில் நியமங்கள் பொறுப்புகள் ஆகியவற்றைக் கொண்டவராக நடத்தல்.
- உறவுமுறையைக் கட்டியெழுப்புவதற்கு காலமெடுக்கும் என அறிந்து தொடர்ச்சியாக உறவுமுறையைக் கட்டியெழுப்புதல்.

இங்கு நாம் குடும்ப விழுமியங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துதல் அவசியமாகும். குறிப்பாக தனிநபர் விழுமியங்கள் (Individual Values) எனும்போது தனிநபர் ஒன்றில் நம்பிக்கையாக இருத்தல். மக்கள் செயற்பாடுகள் அனுபவங்கள் போன்றவற்றில் நம்பிக்கையாக இருத்தல். இது நல்லது அல்லது தீயது எனவும் வகைப்படுத்தி நம்புவார்கள். அடுத்து குடும்ப விழுமியங்கள் (Family Values) எனும்போது குடும்பமாக சில சிந்தனைகள், மனப்பாங்குகளில் நம்பிக்கையாக இருத்தல். இது குடும்பத்தில் குடும்ப பண்பாடாக மாறும். இது குடும்ப அங்கத்தவர்களின் நடத்தைகளுக்கும் ஒழுங்கு முறைக்கும் பயன்படும். விழுமியங்கள் காலத்துக்கேற்ப மாறலாம். ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்பட்ட விடயங்களைப் பின்பற்றி வாழ்தல் அக் குடும்பத்திற்கும் அவர்கள் சார்ந்த சமூகத்திற்கும் பயனளிக்கும்.

நியமம் என்பது குடும்ப செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளாக, நியாயமானதா, சரியானதா அல்லது பிழையானதா என நடத்தையை ஒழுங்குபடுத்த உதவும். உதாரணமாக கோவிலுக்கு அல்லது தேவாலயத்திற்கு செல்லுதல், ஒன்றாகச் சாப்பிடுதல், சேர்ந்து விளையாடுதல் மற்றும் ஒன்றாக கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுதல் போன்றனவாகும். இங்கு ஒவ்வொருவ ரிடையேயும் விழுமியத்திலிருந்து நியமம் உருவாகின்றது. இக்கட்டமைப்புகளைப் பின்பற்றி வாழ்கின்ற தனிநபர், குடும்பம், சமூகம் மற்றும் சமுதாயம் என்பன தொடர்ச்சியான வளர்ச்சிப்போக்கினை எட்டிச் செல்லும். இவற்றில் பின்னடைவுகள் ஏற்படும் பட்சத்தில் இங்குள்ள உறவுக்கட்டமைப்புகள் அனைத்தும் பின்னடைந்து செல்லும். இதனால்தான் நம் சமூகத்தினர் கூடி வாழ்ந்தனர். இவை இன்று படிப்படியாக அருகிக்கொண்டு செல்கின்றது. எனவே நாம் விழிப்புடன் செயற்படுவது எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கிய குடும்ப உறவு சிறப்புற அமைவதற்கு ஏதுவாக அமையும். எனவே குடும்பத்தின் பெறுமதியினை எதிர்கால சந்ததியினருக்கு சந்தர்ப்பம் அமையும் போதெல்லாம் கூறுவோம்.

**உசாத்துணை:**


- Haralambos & Holborn, (2004). Sociology, 6th edition, Harper Collins. London.



vishvakohilan.p@thaiveedu.com




# தேசிய அறக்கட்டளை

## வலுவாக்கப்படவேண்டிய அவசியமும் இன்றைய தேவைப்பாடுகளும்

**சி. நற்குணலிங்கம்**



குறிப்பிட்ட நல்ல செயல்களுக்காக சிலர்கூடி உருவாக்கி நடத்தும் அமைப்பினை அறக்கட்டளை என்றும் நற்பணி என்றும் சமுதாயத்தொண்டு என்றும் பொதுவாகக் கூறலாம். தர்ம நோக்கில் செயற்படும் டிரஸ்ட்களுக்கு மட்டுமே அறக் கட்டளை என்று பெயர். ஆனால் தற்போது டிரஸ்ட் (TRUST) என்பது அறக்கட்டளை என்றே பொதுவாக அழைக்கப்படு கிறது. இவ்வமைப்புகள் பொதுமக்களின் நலன்களுக்கு எதிராகவும், நெறியற்றதாகவும்கூட இருக்கக்கூடாது. அறக் கட்டளையில் பொதுமக்கள்தான் பிரதான பயனாளிகள் ஆவர். தங்கள் முடிவுகளைத் தாங்களே எடுக்க முடியாமல், தங்களின் தேவைகளென்ன?, உரிமைகள் என்ன? என்பது போன்ற எந்தவித எண்ணங்களுமற்று சமூகத்தின் மனச் சாட்சியை மட்டுமே நம்பி வாழும் சிறப்புக் குழந்தைகளுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டியது அரசின் முக்கிய கடமைகளில் ஒன்று. இந்தக் குழந்தைகளின் எதிர்காலத்தில் அரசுக்கு இருக்கும் தார்மீகப் பொறுப்பை விட்டுக்கொடுக் கக்கூடாது. அக்கறையீனம் ஏற்படுமாயின் அந்த மக்களின் நிலை என்ன? அந்த மக்களைத் தவிக்கவிடலாமா? தவிர்த் துவிடலாமா? இதற்கு விடை கண்டவர்தான் அன்னை தெரேசா.

அறக்கட்டளைக்கும் அன்னைதெரேசாவிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஐரோப்பிய நாடான அல்பேனியாவில் 26 ஓகஸ்ட் 1910-இல் பிறந்த அன்னைதெரேசா, இந்திய குடி யுரிமை பெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார். இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ ஆகும். மக்கள் தொண்டினில் ஈடுபட்டு, வயது மூப்பின் காரணமாக செப்டம்பர் 05, 1997-இல் இறப்பைத் தழுவியவர். 1950-ஆம் ஆண்டு இந்தியாவின் கல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபை யினை நிறுவினார். 45 வருடங்களுக்கு மேலாக ஏழை, எளியோர்களுக்கும், நோய்வாய்ப்பட்டோர்க்கும், ஆதரவற்ற வர்களுக்கும், இறக்கும் தருவாயில் இருப்போருக்கும் தொண்டாற்றியவர். முதலில் இந்தியா முழுவதும் பின்னர் வெளிநாடுகளிலும் பிறர் அன்பின் பணி யாளர் சபையினை நிறுவினார். 1970-ஆம் ஆண்டுகளுக்குள் இவர் சிறந்த சமூகசேவகர் எனவும் ஏழைகளுக்கும், ஆதரவு அற்றோருக்கும் பரிந்து பேசு பவர் என்றும் உலகம் முழுவதும் புகழப் பட்டார்.

> *“அல்பேனியாவில் 26 ஓகஸ்ட் 1910-இல் பிறந்த அன்னைதெரேசா, இந்திய குடியுரிமை பெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார். இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ. 1950-ஆம் ஆண்டு இந்தியாவின் கல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார்.”*

இவர் 1979-இல் அமைதிக்கான நோபல் பரிசையும், 1980-இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதினையும் பெற்றவர். அன்னை தெரேசாவின் ‘பிறர் அன்பின் பணியாளர் சபை’ அவரது இறப்பின் போது 123 நாடுகளில் 610 தொண்டு நிறுவனங்களைத் தனக்குள் உள்வாங்கிக்கொண்டிருந்தது. இதில் எயிட்ஸ், தொழுநோய், காசநோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்கும் இடங்கள், குழந்தைகள் மற்றும் குடும் பத்துக்கான ஆலோசனைத் திட்டங்கள், ஆதரவற்றோர்

இல்லங்கள், பாடசாலைகள் ஆகியன அடங்கும். மேலும் சிறைக்கைதிகளுக்கும், போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கும் போதிய உதவிகளை ஆலோசனை மையங்கள் வழியாக செய்து வந்தார். புனித அன்னை தெரேசா கைவிடப்பட்டவர்களுக்கு நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்தவர். 'நமை சூழ்ந்திருக்கும் இருளைப் போக்கும் இறை, இரக்கத்தின் வழித்தடம் அன்னை தெரேசா' என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைத்தமை அவரது சிறப்பான சேவைகளை வெளிக்காட்டுகிறது. அன்னை தெரேசாவிற்கு 2016-இல் புனிதர் பட்டம் அறிவிக்கப்பட்டது. இப்பட்டம் அவரை மேலும் மேலும் உயர்ந்த இடத்திற்கு எடுத்துச் சென்றது.

> **"அன்னை தெரேசாவின் பலவிதப்பட்ட சேவைகள்தான் தேசிய அறக்கட்டளை தினம் (NATIONAL TRUST) உருவாக வழிகோலியது. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5-ஆம் திகதி தேசிய அறக்கட்டளை தினம் அனுசரிக்கப்படுகிறது. இத் தினமானது 2012-ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச்சபையினால் அறிவிக்கப்பட்டது."**

அன்னை தெரேசாவின் பொன்மொழிகள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்பட்டன. இவை மக்களை நல்வழிப்படுத்தின எனலாம். 'கருவுற்றால் ஒரு குழந்தைக்குகூட அன்னையாக முடியும்', 'அன்புதான் உன் பலவீனம் என்றால் இந்த உலகின் மிகச் சிறந்த பலசாலி நீதான்', 'தண்டனை கொடுப்பதற்கு தாமதம் செய். ஆனால், மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனைகூட செய்யாதே', 'எதுவுமே நிரந்தரம் இல்லாத இவ்வுலகில் உங்கள் கஷ்டங்கள் மட்டும் எப்படி நிரந்தரம் ஆகும்?, கவலையை விடுங்கள்', 'கண்ணுக்கு தெரிந்த மனிதரை மதிக்காவிட்டால் கண்ணுக்கு தெரியாத கடவுளை மதித்தும் பயன் இல்லை', 'வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருங்கள்', 'இறக்கத்தான் பிறந்தோம் அதுவரை இரக்கத்தோடு இருப்போம்', 'இரு கை கூப்பி கடவுளை வணங்குவதைவிட ஒரு கை நீட்டி உதவி செய், இரு கைகள் உன்னை வணங்கும் கடவுளாக'. இவை மக்களை அறத்தின் வழியாக வாழ வழிகாட்டக் கூடியவை.

அன்னை தெரேசாவின் பலவிதப்பட்ட சேவைகள்தான் தேசிய அறக்கட்டளை தினம் (NATIONAL TRUST) உருவாக வழிகோலியது எனலாம். ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5-ஆம் திகதி தேசிய அறக்கட்டளை தினம் அனுசரிக்கப்படுகிறது. இத் தினமானது 2012-ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச்சபையினால் அறிவிக்கப்பட்டது. உலகம் முழுவதும் அறக்கட்டளை தொடர்பான நிகழ்ச்சிகளுக்கான ஒரு பொதுத்தளத்தை ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவை இத் தினத்தின் நோக்கங்களாகும். கல்கத்தாவில் மறைந்த அன்னைதெரேசாவின் நினைவாக செப்டம்பர் 5-ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது முதன்முதலாக 2013-இல் கொண்டாடப்பட்டது. தேசிய அறக்கட்டளையானது அதன் சேவைகருதி மேலும் வலுவாக்கப்பட வேண்டும்.

அறக்கட்டளை பல்வேறு சேவைகளைச் செய்துவருகின்றது. உடல் நலத்திற்கான காப்பீட்டு திட்டங்கள் சிறப்புக் குழந்தைகளுக்கு எட்டாக் கனியாகவே இருந்த நிலையில் 'நிர்மயா' காப்பீட்டுத்திட்டத்தை தேசிய அறக்கட்டளை ஏற்படுத்தி உள்ளது. இதன்மூலம் சிறப்புக் குழந்தைகளின் மருத்துவச் செலவு, Physiotherapy (உடற்பயிற்சிச்சிகிச்சை) கட்டணங்கள் போன்றவற்றை உதவித் தொகையாக பெறமுடியும். பெரும்பாலான சிறப்புக் குழந்தைகளுக்கு இயல்பிலேயே பல்வேறு நரம்பு சிக்கல்களும் இருப்பதால் இவர்களின் மருத்துவச் செலவு என்பது கடும் நெருக்கடியை தரக்கூடிய ஒன்று என்பதை மனதில் வைத்துப் பார்த்தால், இந்தக் காப்பீட்டின் முக்கியத்துவம் புரியும். சிறப்புக் குழந்தைகளுக்கு தேவையான தொழிற்பயிற்சிகளை வழங்கல், அவர்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த உதவுதல் போன்றவற்றிலும் தேசிய அறக்கட்டளையின் வழிகாட்டுதல்களும் நிதி உதவிகளும் முக்கியமானவையாக உள்ளன.

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட தேசிய அறக்கட்டளை செய்திருக்கும் காரியங்கள் அளப்பரியவை. முதன்மையாக இந்த அறக்கட்டளையானது மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கானது. இதில் ஓட்டிச நிலையாளர்கள், மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோர் போன்றோர் இந்தக் குடைக்குள் வருவார்கள். இவர்கள் அனைவருக்கும் பொதுவான சில சிக்கல்கள் உண்டு. தகவல் தொடர்பின்மை, சிலரால் அறவே பேச முடியாது, பேசும் சிலரால் நினைப்பதை எல்லாம் அடுத்தவருக்குச் சரியாகப் புரியவைக்கும் அளவுக்கு தெளிவாகப் பேசிவிட முடியாது. சமூகத்தில் கலந்து பழகும் தன்மை குறைவு, நடத்தைச் சிக்கல்கள், நரம்பியல் சிக்கல்கள் எனப் பட்டியல் நீண்டு செல்லும்.

ஒரு சராசரியான, நரம்பியல் சிக்கல்கள் ஏதும் இல்லாத குழந்தை 18 வயது நிறைவடைந்ததுமே வளர்ச்சி அடைந்த நபராக அறியப்படுவார். தனக்கான முடிவுகளைத் தாமே எடுக்கும் சட்டபூர்வமான உரிமை அவருக்கு வந்துவிடுகிறது. வலுவளரினருக்கோ ஆயுள் முழுமைக்கும் பெற்றோர் அல்லது வேறு யாரேனும் ஒருவர் காப்பாளராக இருந்தே ஆக வேண்டிய தேவை உள்ளது. இதைச் சட்டபூர்வமாகவும் பதிவு செய்தாக வேண்டும். இப்படி சட்டபூர்வ காப்பாளரை நியமிப்பதில் தேசிய அறக்கட்டளையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறப்புக் குழந்தைகளுக்கு பல்வேறு உதவிகளை தேசிய அறக்கட்டளை வழங்குகிறது. ஆதரவற்றோருக்கான விடப்பட்ட சிறப்புக் குழந்தைகளுக்கான இல்லங்களையும் தேசிய அறக்கட்டளை அமைத்துவருகிறது.

அன்னைதெரேசாவின் நினைவு நாளை சமுதாயத் தொண்டுகள்மூலம் நினைவுகூரவேண்டும். பொருத்தமான தொண்டுகளை, சேவைகளை அறக்கட்டளையின் மூலம் வழங்கிவர தேசிய அறக்கட்டளை அமைப்புகள் வலுவாக்கப்பட வேண்டும். வலுவான அமைப்பே வலுவான தொண்டுகளை, சேவைகளை வழங்க முடியும்.



natkunalingam@thaiveedu.com

# படுகொலைகளை எதிர்கொண்ட கிரீட் தீவு

- குரு அரவிந்தன்





வரலாற்றில் ஆர்வமுள்ளவர்கள் பண்டைய கிரேக்க நாகரிகம் பற்றியும், அதன் பின் இடம்பெற்ற உரோமர் காலம் பற்றியும் தெரிந்திருப்பார்கள். நாகரிகம் பரவிய இந்த இரண்டு இடங்களிலும் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்ட ஐ.நா.-வின் யுனெஸ்கோ, உலக பாரம்பரிய இடங்களாகச் சிலவற்றை அறிவித்துப் பாதுகாத்து வருகின்றது. விளை யாட்டுத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் ஒலிம்பிக் விளையாட் டுகளின் ஆரம்பம் கிறீஸ் நாட்டில் தான் தொடங்கியது என்பதை அறிந்திருப்பார்கள். பொ.ஆ.மு. நான்காம் நூற் றாண்டில், மாசிடோனிய மன்னர் 2-ஆம் பிலிப் கிரேக்கத்தின் பெரும்பகுதியை ஒன்றிணைத்தார். அதன்பின் ஆட்சிக்கு வந்த அவரது மகன் மகாஅலெக்சாண்டர் மத்திய கிழக்கு முதல் வடமேற்கு இந்தியா வரை உள்ள பெரும்பகுதியைக் கைப்பற்றி மிகப்பெரிய பேரரசை நிறுவினார். ஐரோப்பிய நாடுகளில் எங்கு சென்றாலும் கிரேக்க நாகரிகத்தின் அடை யாளங்களைக் காணமுடியும். உள்ளூர் வீதிகள் இப்பொழுதும் அக்காலத்துக் கற்கள் அடுக்கிய வீதிகளாக இருப்பதை அவ தானிக்கலாம்.

தென்கிழக்கு ஐரோப்பாவில் பால்கன் தீபகற்பத்தின் தெற்கு முனையில் கிறீஸ் என்ற இந்த நாடு அமைந்துள்ளது. அல்பேனியா, மாசிடோனியா, பல்கேரியா, துருக்கி போன்ற நாடுகள் இதன் நில எல்லையில் இருக்கின்றன. ஏஜியன் கடல், அயோனியன் கடல், கிரீட் கடல் மற்றும் மத்தியதரைக் கடலும் இதன் நீர் எல்லைகளாக இருக்கின்றன. மத்தியதரைக் கடலில் இந்த கிரேக்க நாடு ஆயிரக்கணக்கான தீவுகளைக் கொண்டி ருப்பதால் மிக நீளமான கடற்கரையைக் கொண்டிருக்கின்றது. ஏதென்ஸ் நகரைத் தலைநகராகக் கொண்ட கிறீஸ் நாட்டில் சுமார் 10 மிலியன் மக்கள் வசிக்கிறார்கள்.

சென்ற முறை இத்தாலி நாட்டின் தென் பகுதிக்குச் சென்றபோது உரோமப் பேரரசின் அழிவுற்ற நிலையில் இருந்த சின்னங்களைப் பல இடங்களில் பார்க்கமுடிந்தது. அதுபோல சந்தர்ப்பம் கிடைத்தால், கிரேக்க சின்னங்களைப் பார்க்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். எதிர்பாராமல் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்ததால், இம்முறை கிரேக்க நாட் டுக்குச் சென்றிருந்தேன். நகரங்களைவிட கிராமப்பகுதிகளில்

ஆதிகால கட்டடங்களை ஓரளவு நல்ல நிலையில் காணமுடிந்தது. இத்தாலியின் உரோம், புளோரன்ஸ், வெனிஸ், சிசிலி, மிலான், நேப்பிள்ஸ், பொம்பி போன்ற இடங்களில் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்திருப்பதைக் காணமுடிந்தது. எனவேதான் இம்முறை புராதன சின்னங்களைப் பார்ப்பதற்காகக் கிறீஸ் நாட்டில் சில இடங்களைத் தெரிவு செய்திருந்தேன். அங்கு சென்றபோது இத்தாலிய மக்களைவிட கிரேக்க மக்கள் அன்பாக, நட்போடு பழகக்கூடியவர்களாகவும், நாகரிக உடை அணிபவர்களாகவும் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

கிரேக்க நாட்டின் கிரீட் தீவு (Crete Island) இத்தகைய வரலாற்றுச் சின்னங்களைத் தாங்கி நிற்பதை அங்கு சென்றபோது அவதானிக்க முடிந்தது. அவர்கள் இலங்கைத் தமிழர்களைப் போல பல துன்பங்களை அனுபவித்தவர்கள். இரண்டாம் உலக யுத்தத்தின் போது, ஜேர்மன் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள். கிரீட் தீவு சுமார் 3260 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட, மத்தியதரைக் கடலில் ஐந்தாவது பெரிய தீவாக இருக்கின்றது. கிரீட்டில் மத்தியதரைக் கடல் வெப்பமான காலநிலையைக் கொண்டுள்ளது, இது கிழக்கு மேற்காக சுமார் 160 மைல் நீளமானது. அதி உயரமான மலை சுமார் 8000 அடியாக இருக்கின்றது.

கிரீட் தீவில் முக்கியமான இடங்களான ஹெராக்லியன் (Heracleion), ரெதிம்னோ, சானியா ஆகிய மூன்று முக்கியமான இடங்களிலும் தங்கியிருக்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஹெராக்லியனில் இருந்து வண்டியில் பயணிக்கும்போது அந்த வழியில் ரெதிம்னோ இருக்கின்றது. அங்கு தங்கிவிட்டு அங்கிருந்து சானியாவிற்குப் பயணித்தோம்.

இந்த இடங்கள் எல்லாம் மிகப் பழைய குடியிருப்புக்கள் என்பதால் வீடுகளோடு சேர்ந்த வாகனத் தரிப்பிடங்கள் இல்லை. வீதிகளில்தான் வாகனங்களை விடவேண்டியிருந்தது. வீதிகளும் ஒடுங்கிய வீதிகளாகவே இருக்கின்றன. இங்கே சிறந்த வெண்மணல் கடற்கரைகள் இருப்பதால் அவை அனேக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் கடற்கரைகளாக இருக்கின்றன. இதைவிடப் புராதன சின்னங்களும் இந்த நகரங்களில் இருப்பதால் வரலாற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் உள்ள சுற்றுலாப் பயணிகள் விரும்பி வருகின்றார்கள். இங்குள்ள இளைய தலைமுறையினருக்கு இரவு ஏழு மணிக்குப் பின்தான் பகலாக இருக்கின்றது. எங்கிருந்து வருகிறார்கள் என்று மலைக்கும் அளவிற்கு புற்றீசல் போல பல வர்ண உடைகளில் வீதியெல்லாம் இரவிரவாக வலம் வருகிறார்கள். ஆட்டம் பாட்டத்திற்குக் குறைவேயில்லை. மீண்டும் பகலில் முடங்கிவிடுகிறார்கள். சில உணவு விடுதிகளும் அதிகாலை இரண்டு மணிவரை திறந்திருக்கின்றன.

கிரீட் மற்றும் அதைச் சுற்றியுள்ள பல தீவுகள் கிரீட் பிராந்தியமாக இருக்கின்றன. இது கிரேக்க நாட்டில் உள்ள 13 உயர் மட்ட நிர்வாக அலகுகளில் தெற்குப் பகுதியில் இருக்கின்றது. இதுமட்டுமல்ல, கிரேக்கத்தின் ஐந்தாவது அதிக மக்கள் தொகை கொண்ட பிராந்தியமாகவும் இருக்கிறது. இதன் மிகப் பெரிய நகரம் தீவின் வடக்குக் கரையில் உள்ள தலைநகரான ஹெராக்லியன் ஆகும். வரலாற்றுத் தளங்கள், தொல்பொருள் அருங்காட்சியகம் மற்றும் நகரத்தின் சந்தைகள், உணவகங்கள், நொசோஸ் அரண்மனை போன்றவற்றை இங்கே பார்க்க முடிந்தது. 2021-ஆம் ஆண்டு நிலவரப்படி, இப்பகுதியில் சுமார் 624,400 மக்கள் வாழ்ந்துவருகிறார்கள்.

ஹெராக்லியன் நகரம் பொ.ஆ.மு.7000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. அன்று தொடக்கம் தொடர்ந்து மக்கள் அங்கு வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் உண்டு. இது ஐரோப்பாவின் பழைமையான மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. மினோவான் நாகரிகத்தின் முக்கிய மையமான பண்டைய நொசோஸ் அரண்மனை இங்கேதான் இருக்கின்றது. இங்குள்ள அரண்மனை கிரேக்கத்தில் உள்ள மிக முக்கியமான தொல்பொருள் தளங்களில் ஒன்றாக இருக்கின்றது. மினோவான் காலம் பொ.ஆ.மு.3500 தொடக்கம் 2100 வரையும் இருந்திருக்கிறது. எம்மிடையே உள்ள நாகவழிபாடு போல அவர்களும் நாகத்தை வழிபட்டிருக்கிறார்கள். ஹெராக்லியோன் தொல்பொருள் அருங்காட்சியகத்தில் பாம்பு தெய்வத்தைக் (பொ.ஆ.மு.1600) காட்சிக்கு வைத்திருக்கிறார்கள். மினோவான்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, ஹெராக்லியன் உரோமானியர்களின் ஆட்சிக்குள் உட்பட்டாலும், பைசண்டைன் காலத்தில் (960) இந்த நகரம் கடற்கொள்ளையர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.

1204-ஆம் ஆண்டு இந்த நகரம் வெனிஸ் குடியரசின் கட்டுப்பாட்டில் வந்தது. அவர்கள் இந்த நகரத்தின் முக்கிய இடங்களில் எட்டுக் கோட்டைகளைக் கட்டி நகரத்தைப் பலப்படுத்தினர். சாண்டாக்ஸ் என்ற இந்த நகரம் காண்டியா எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1212-ஆம் ஆண்டு வெனீசியர்களின் குடியேற்றங்கள் இடம்பெற்றன. இதனால் கிரீட் கலாசாரத்தோடு வெனீசிய கலாசாரமும் கலந்தது. இன்றும் கிரேக்க தேசமாக இருந்தாலும் இங்கு வெனீசிய கலாசாரத்தையும், வெனீசியக் கட்டடக்கலையையும் இப்பகுதிகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

கிரெட்டன் போரின் போது ஒட்டோமான்கள் இந்த நகரத்தை 1648 முதல் 1669 வரை, 21 ஆண்டுகள் முற்றுகையிட்டனர். வரலாற்றில் மிக நீண்ட முற்றுகையிடப்பட்ட இடம் இதுவாகும். இறுதி யுத்தத்தின் போது 70,000 துருக்கியர்கள், 38,000 கிரெட்டன்கள் மற்றும் 29,000 கிறிஸ்தவ பாதுகாவலர்கள் கொல்லப்பட்டனர். அல்பேனிய பிரதம மந்திரி கோப்ருலு பாசில் அகமது பாஸாவின் கீழ் ஒட்டோமான் இராணுவம் 1669-இல் நகரத்தைக் கைப்பற்றியது. 1856-ஆம் ஆண்டு கிரீட்டின் வடக்கு கடற்கரையில் ஏற்பட்ட பூகம்பத்தால் சுமார் 3,600-க்கும் மேற்பட்ட வீடுகள் அழிந்து போயின. இந்தப் பேரழிவில் ஹெராக்லியனைச் சேர்ந்த 538 பேர் பலியாகினர்.

வெனீசியரின் கட்டுப்பாட்டில் கிரீட் தீவு இருந்த போது, ஹெராக்லியனுக்கும் சானியாவிற்கும் இடையில் ஒரு வணிக நிலையம் தேவைப்பட்டதால், ரெதிம்னோவை அதற்காகத் தெரிந்தெடுத்தனர். இன்றைய பழைய நகரம் (பாலியா பாலி) கிட்டத்தட்ட முழுமையாக வெனிஸ் குடியரசால் கட்டப்பட்டது. இது கிரீட்டில் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்ட பழைய நகரங்களில் ஒன்றாக இப்பொழுதும் இருக்கின்றது. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டடங்கள், வளைந்த கதவுகள், கல் படிக்கட்டுகள், பைசண்டைன் எச்சங்கள், வெனிஸ் துறைமுகம், குறுகிய தெருக்களுடன் கூடிய இந்த நகரம் இன்னும் அதன் பழைய தோற்றத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது.



கொலைகளின் போது, உள்ளூர் கிராமங்களில் பொதுமக்கள் சுற்றி வளைக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இந்த நிகழ்வை அப்போது போர் பிரசார நிருபராகப் பணியாற்றிய பிரான்ஸ் பீட்டர் வெய்க்ஸ்லரால் என்பவர் புகைப்படம் எடுத்திருந்தார். பல வருடங்களின் பின்தான் இந்தப் புகைப்படங்கள் வெளிவந்திருந்ததால், இந்தப் படுகொலைகள் சாட்சியங்களோடு நிருபிக்கப்பட்டன.

இதே போன்ற வியன்னாஸ் படுகொலைகள் என்பது இரண்டாம் உலகப் போரின்போது கிரேக்க தீவான கிரீட்டில் கிழக்கு வியன்னாஸ் பகுதியில் அமைந்துள்ள சுமார் 20 கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு 500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். செப்டம்பர் 14-ஆம் திகதி 1943-ஆம் ஆண்டு வெர்மாச்ட் பிரிவுகளால் இந்தப் படுகொலைகள் நடத்தப்பட்டன. அவற்றுடன் பெரும்பாலான கிராமங்கள் சூறையாடப்பட்டு, எரிக்கப்பட்டன, ஐரோப்பாவின் வேறு இடங்களில் நடந்த போர்முனைகளில் ஜேர்மனியர் தோல்வியடைந்ததால், ஜேர்மன் படைகள் ஒக்ரோபர் 1944-ஆம் ஆண்டு கிரீட் தீவின் பெரும்பகுதியை விட்டு வெளியேறினர்.

இந்தச் சம்பவங்கள் பற்றி அங்கு கேள்விப்பட்டபோது, அங்குள்ள மக்களின் விடாமுயற்சியும், ஒற்றுமையும் அங்கு நடந்த படுகொலைகள் சார்ந்த உண்மையை வெளிக்கொண்டு வருவதற்கு அவர்கள் மேற்கொண்ட கடின உழைப்பும் உலகிற்கு நடந்ததை எடுத்துச் சொல்ல உதவியாக இருந்ததை எண்ணிப் பார்த்தேன்.

எம்மினக் கொலைகள் நடந்தபோது நிச்சயமாக இராணுவத்தினர் செல்போனில் படங்கள் எடுத்திருப்பார்கள். காலம் தாழ்த்தாது முயற்சி செய்தால் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். எம்மினத்திற்கு ஏற்பட்ட சாபக்கேடு போல, எதையும் சாதிக்கும் நோக்கமின்றி, அரசியலில் புகுந்து அரசியல் இலாபம் கருதி மௌனமாக இருப்பவர்களையும், தங்கள் இருப்பை உறுதி செய்ய அவ்வப்போது திடீர் அறிக்கை வெளியிடுபவர்களையும் பாரதி குறிப்பிட்டது போல, 'வேடிக்கை மனிதராகவே' எங்களால் எண்ணிப் பார்க்க முடிகின்றது.

வெனிஸ் கால கோட்டையான ரெதிம்னோவின் ஃபோர்டெஸா, நெராட்ஜே மசூதி, கிரேட் கேட், பியாஸ்ஸா ரிமோண்டி, லோகியா போன்ற நினைவுச்சின்னங்களும் இங்கே இருக்கின்றன. அடுத்து நாங்கள் சென்ற சானியா நகரம் கிரீட் தீவின் வடமேற்கு கடற்கரையில் இருக்கின்றது. ரெதிம்னோவிற்கு மேற்கே சுமார் 43 மைல் தொலைவிலும், ஹெராக்லியோனுக்கு மேற்கே 90 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. வெனீசியர்களின் கோட்டைகளையும், கட்டடக் கலையையும் அங்கும் காணமுடிந்தது. இத்தீவில் 3 விமான நிலையங்கள் இருக்கின்றன. ஹெராக்லியனில் உள்ள நிகோஸ் கசான்ட்சாகிஸ் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக இருக்கின்றது. இங்கு தொடர்வண்டிப் போக்குவரத்து இல்லை.

கிரேக்க இலக்கியத்திற்கு கிரீட் ஆசிரியர்களும் முக்கிய பங்களிப்புகளைச் செய்துள்ளனர். காதல் காவியமான எரோடோக்ரிடோஸை உருவாக்கிய விகென்டியோஸ் கோர்னாரோஸ் மற்றும் நிகோஸ் கசான்ட்சாகிஸ் போன்ற எழுத்தாளர்கள் முக்கியமானவர்கள். இலங்கையில் காணப்படும் பூநாறி, அலரி, கள்ளி, நாகதாளி, போக்கன்விலா போன்ற செடிகளை அங்கும் காணமுடிந்தது. எல்லா இடமும் ஒலிவ் மரங்களைக் காணமுடிந்தது. தீவு என்பதால் சிறந்த கடற்கரைகளைக் கொண்டிருக்கின்றன. சில இடங்களில் வாடகை வண்டியோ, ஊபர் வண்டியோ எடுப்பது கடினமாக இருந்தது. வண்டித் தரிப்பிடங்களுக்கு இடமில்லாததால், அனேகர் மோட்டார் சைக்கிள் வண்டியைப் பாவிக்கின்றார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது, கிரீட் தீவு ஜேர்மன் படைகளால் மிகவும் பாதிப்புக்கு உள்ளானது. 1941-ஆம் ஆண்டு கிரீட்தீவில் நடந்த போரின் போது சுமார் 11,000-இற்கு மேற்பட்ட படையினரும் பொதுமக்களும் கொல்லப்பட்டனர். அங்கு நடந்த ஜேர்மன் படையினரின் மரணத்திற்கு கோண்டோமாரியில் இருந்தவர்கள்தான் காரணம் என்று பழிவாங்கும் வகையில் ஜூன் மாதம் 2-ஆம் திகதி 1941-ஆம் ஆண்டு சுமார் 3000 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கொண்டோமாரி படுகொலை (Massacre of Kondomari) மற்றும் வியானோஸ் (Viannos) படுகொலைகள் போன்ற

**உசாத்துணை:**


• https://en.wikipedia.org/wiki/Crete





kuruaravindan@thaiveedu.com

# கேள்விக்குறியாகும் மானுடப் படைப்பாற்றல் திறன்!



■ சுப்ரமணியம் ஜெயசீலன்

பண்டைய காலம் முதல் நவீன காலம் வரையில் மனிதனின் படைப்பாற்றல் திறன்களின் விஸ்வரூப வளர்ச்சியானது சிலாகிப்பிற்குரியது என்பதில் துளியும் ஐயமில்லை. ஒவ்வொரு நொடியும் உலகின் ஏதோ ஒரு மூலையில் மனிதர்கள் புதிய ஆக்கத்திறன் முயற்சிகளில் ஜெயித்து ஜொலித்துக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், செயற்கை நுண்ணறிவின் மீதான அபரிமிதமான தங்குநிலை மனித மூளையின் பயன்பாட்டை மலினப்படுத்திவிடக்கூடிய பேராபத்தினைக் கட்டியம் கூறிச் செல்கிறது. இந்த வியாகூலமான பிரச்சினையை ஊடாடும் ஒரு முயற்சியாக இந்தக் கட்டுரை அமைகிறது.

செயற்கை நுண்ணறிவு (AI) மனித மூளையை உருவகப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அது மனித மூளையின் அன்றாட வாழ்க்கையில் உள்ள பாங்கை மாற்றி அமைக்கும் செயல்முறையில் உள்ளதா? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

உலகில் கைத்தொழிற்புரட்சி ஏற்பட்ட போது மனித உடல் உழைப்பின் தேவை வெகுவாகக் குறைக்கப்பட்டு இயந்திர சாதனங்களின் பயன்பாடு அதிகரித்தது.

சர்வதேச வணிகத்திலும் ஏனைய துறைகளிலும் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை ஆய்வுக்கு உட்படுத்திப் பார்க்கும்போது, செயற்கை நுண்ணறிவு ஓர் அறிவாற்றல் புரட்சியைத் தூண்டுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் கலைஞர்கள் எழுதுவது, வடிவமைப்பது மற்றும் முடிவெடுப்பது போன்ற சில அறிவாற்றலுடன் தொடர்புடைய செயல்முறைகளின் தேவைப்பாடு மறுவடிவமைக்கப்பட்டு அல்லது மாற்றம் கண்டு வருவதனை மறுதலித்துவிட முடியாத ஒரு காலம் உருவாகியுள்ளது.

தங்களது வாடிக்கையாளர்களுக்குத் துரிதகதியில் லோகோக்களை (Logo) உருவாக்கிக் கொடுப்பதற்குத் தற்பொழுது கிராஃபிக் வடிவமைப்பாளர்கள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றனர்.

கணினி மென்பொருள் உருவாக்கத்திற்காக மென்பொருள் பொறியியளாலர்கள் செயற்கை நுண்ணறிவு உதவியை பெற்றுக்கொள்கின்றனர். சிக்கலான சில மென்பொருள் பிரச்சினைகளுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உதவிகள் துல்லியமான தீர்வுகளை வழங்குகின்றன.

செயற்கை நுண்ணறிவு உதவியுடன் வாடிக்கையாளர் சுயவிபரங்கள் திரட்டல் மற்றும் விளம்பர பிரச்சாரங்களுக்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதை கவனத்திற்கொண்டு, சந்தைப்படுத்தல் வல்லுனர்கள் தங்களது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

கல்லூரி மாணவர்கள் தங்களது ஒப்படைகளைச் செய்வதற்கும் கட்டுரைகளை எழுதுவதற்கும் செயற்கை நுண்ணறிவின் உதவியைப் பெற்றுக்கொள்வதுடன் ஆசிரியர்களும் இவ்வாறான செயற்கை நுண்ணறிவுசார் கருவிகளைப் பயன்படுத்தித் தங்கள் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள்.

## பொருளாதார மற்றும் கலாசார தாக்கங்கள் ஆழமானவை:

கவிஞர்கள் எழுத்தாளர்கள் தங்களது சிருஷ்டிகளுக்குச் சரியான வார்த்தைகளைத் தேடித் தவம் கிடந்து காத்திருக்காது நொடியில் வார்த்தைகளைக் கோர்த்து எழுதக்கூடிய செயற்கை நுண்ணறிவு இயலுமையும், வடிவமைப்பாளர்கள் பல்வேறு உருவரைகளை (sketch) வரைந்து வரைந்து பின்னர் இறுதி செய்யாது, ஒரே தடவையில் வடிவமைப்புகளை உருவாக்கும் இயலுமையும் ஆரோக்கியமானதா ? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஏனெனில் இந்தப் படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறன் கொண்ட மனித மூளையுடன் தொடர்புடைய பல்வேறு பணிகளை செயற்கை நுண்ணறிவு செய்து முடிப்பது மனித மூளையின் பாங்கினைப் பாதிக்கக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

## தொழிற்புரட்சி யுகத்தில் ஏற்பட்ட தாக்கங்கள்:

உலகில் தொழிற் புரட்சி ஏற்பட்ட காலகட்டத்தில் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் மனித உடல் உழைப்பு மருவி, இயந்திரமயமாக்கப்பட்ட உற்பத்தி முன்னிலை பெற்றது. இதனால் பொருட்கள் பெருமளவில் நகலெடுக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டன. இது முழு மனித உழைப்பினால் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளை விடவும் பாரியளவு எண்ணிக்கைப் பெருக்கத்தை ஏற்படுத்தியது.

காலணிகள், கார்கள் மற்றும் பயிர்கள் உள்ளிட்ட அநேகமானவற்றைத் திறமையாகவும் ஒரே மாதிரியாகவும் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் பொருட்கள் மிகவும் சாதாரணமாகவும், அனுமானிக்கக்கூடியதாகவும், தனித்துவமற்றவையாகவும் காணப்பட்டன.

மனித உழைப்பின் மூலமான கைவினைத்திறன் ஆடம்பரமாகவோ அல்லது மலினமான வடிவமாக வரையறுக்கப்பட்டது.

> **“ செயற்கை நுண்ணிறிவு எம்மைத் தோல்வியடையச் செய்யும் என்பது ஆபத்து கிடையாது, மாறாக மக்கள் அதன் பெறுபேறுகளின் சாதாரண தன்மையை இயல்பாக ஏற்றுக்கொள்வதே இதன் ஆபத்து நிலையாக நோக்கப்பட வேண்டியுள்ளது. ”**



கைத்தொழிற் புரட்சியினால் உலகின் பண்ட உற்பத்தி ஒரே விதமான பாரியளவிலான எண்ணிக்கைப் பெருக்கத்தைப் பதிவு செய்த போதிலும் அவற்றில் ஒவ்வொன்றுக்குமான தனித்துவத்தன்மைகள் மருவியிருந்தன.

இதேவிதமாக சிந்தனையாற்றல் தானியங்கி அடிப்படையிலான ஒரு வடிவத்திற்குள் வரையறுக்கப்பட்டால் கைத்தொழிற் புரட்சியின் போதான வினைத்திறன் அதிகரிப்பு ஏற்பட்டால் அது காத்திரமானதும் தனித்துவமானதுமாக அமையாது. செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டின் வளர்ச்சியில் இதுபோன்ற பல்வேறு ஆபத்துக்கள் காணப்படுகின்றன.

வேகம் மற்றும் தரம் அதேபோன்று உற்பத்திறன் மற்றும் அசல் தன்மை என்பனவற்றை பிரித்தறிந்து கொள்ள முடியாத வகையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயனர்களை குழப்பத்தில் ஆழ்த்துகின்றது.

செயற்கை நுண்ணிறிவு எம்மைத் தோல்வியடையச் செய்யும் என்பது ஆபத்து கிடையாது, மாறாக மக்கள் அதன் பெறுபேறுகளின் சாதாரண தன்மையை இயல்பாக ஏற்றுக்கொள்வதே இதன் ஆபத்து நிலையாக நோக்கப்பட வேண்டியுள்ளது.

அனைத்து விடயங்களும் விரைவாகவும், தடையின்றியும் கிடைக்கப்பெறும் நிலைமையின் ஊடாக மனித பணியின் தனித்துவத்தை வரையறுக்கும் ஆழம், நுணுக்கம் மற்றும் புலமைச்சொத்துக்களை இழக்கும் ஆபத்தினை மறுதலித்துவிட முடியாது.

## செயற்கை நுண்ணறிவு எனப் பெயரிடப்பட்டாலும் உண்மையில் இந்தத் தொழில்நுட்பத்தின் ஊடாக அவை சிந்தித்து செயலாற்றுவதில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்:

சாட்ஜீபீரி (ChatGPT) கிளாவுட் (Claude) மற்றும் ஜெமினி (Gemini) போன்ற செயற்கை நுண்ணறிவுக் கருவிகள், இணையத்திலிருந்து பெரும்பாலும் அனுமதியின்றி எடுக்கப்பட்ட மனிதரால் உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தின் பாரியளவிலான தகவல்களைப் பயன்படுத்தி தொழிற்படுகின்றன. அதாவது ஏற்கனவே அறிவுறுத்தப்பட்ட சில அறிவுறுத்தல்களின் அடிப்படையிலான விபரங்களுக்கான துலங்கலாகவே செயற்கை நுண்ணறிவின் தொழிற்பாடுகள் அமையப்பெற்றுள்ளது.

அவற்றின் வெளியீடுகள், அவை செயலாக்கிய தரவுகளில் உள்ள முறைகளின் அடிப்படையில் எந்த வார்த்தை அல்லது பிக்சல் (pixel) அடுத்து வர வாய்ப்புள்ளது என்பதற்கான புள்ளி விபரவியல் கணிப்பாகவே நோக்கப்பட வேண்டியுள்ளது. அதாவது தரவுகளைக் கருத்திற்கொண்டு அதன் மாதிரிகள் அடிப்படையில் செயற்கை நுண்ணறிவு துலங்குகின்றது.

மனிதர்களது ஆக்கத்திறன் வெளிப்பாடுகளின் தொகுப்புக்களைப் பரிசீலனை செய்து மீளமைக்கும் பணிகளை செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் மேற்கொள்கின்றன, எனினும் இதன் ஆரம்பப் புள்ளி மனித ஆக்கத்திறன் வெளிப்பாடுகளின் அல்லது மனிதனின் திறன் வெளிப்பாடுகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. இதன் காரணமாகவே செயற்கை நுண்ணறிவுக் கருவிகளின் மூலம் பெறப்படும் பெறுபேறுகள் சிறந்தவையாகத் தென்படுகின்றன.



**“ செயற்கை நுண்ணறிவின் உதவியானது வசதியான குறுக்குவழியாக ஆரம்பிக்கப்பட்டாலும், காலப்போக்கில் அது மனித மூளையின் ஆற்றல் வெளிப்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளது. ”**

மக்களினால் எழுதப்படும் எண்ணற்ற மின்னஞ்சல்கள், மூலோபாய ஆலோசகர்கள் உருவாக்கும் ஸ்லைடு டெக்ஸ்கள் மற்றும் சமூக ஊடக பின்னூட்டங்களில் நிரம்பிக் கிடக்கும் விளம்பரங்கள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டால், அவற்றின் உள்ளடக்கங்களில் பெரும்பாலானவை கணிக்கக்கூடிய கட்டமைப்பு முறைகளையும் குறிப்பிட்ட சில சூத்திரங்களையும் பின்பற்றுவதனை அவதானிக்க முடியும்.

அவை ஒரு வடிவத்தில் அல்லது இன்னொரு வடிவத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டவையின் பிரதிபலிப்புக்களாகக் காணப்படுகின்றன. அதாவது மின்னஞ்சல்கள், விளம்பரங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் ஏதோ ஒரு வகையிலான கட்டமைக்கப்பட்ட வடிவமைப்பினைப் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளன. இந்த கட்டமைப்பினைத் தளமாகக்கொண்டு செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் நம் தூண்டல்களுக்குத் துலங்குகின்றன என்பதே யதார்த்தமாகும்.

உருவாக்க செயற்கை நுண்ணறிவு (Generative AI), சிறந்த ஒலி உள்ளடக்கத்தை உற்பத்தி செய்வதில், பட்டியல்கள் தயாரிப்பில், சாராம்சங்கள், செய்திக்குறிப்புகள், விளம்பரங்கள் என்பனவற்றை உருவாக்குவதில் மனித உருவாக்கத்தின் அம்சங்களை உட்கொண்டிருக்கும் என்றாலும் புத்தாக்கத் தீப்பொறி அதில் பொதிந்திருக்காது என்பது நிதர்சனம்.

அசல் புத்தாக்கத்திற்கான தேவைகள் குறைவாகக் காணப்படும் பின்னணியில் திருப்திகரமான பெறுபேறுகளை வழங்குவதனால் இந்த செயற்கை நுண்ணறிவு வளர்ச்சிப்பாதையில் நகர்கின்றது.

எனினும், உள்ளடக்கப்பட்ட சூத்திரங்களினால் கட்டமைக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவுகூட, சில சந்தர்ப்பங்களில் ஆச்சரியமான பெறுபேறுகளை வெளிக்கொணர்கின்றது.

ஒரு சோதனையில், ஆராய்ச்சியாளர்கள் மக்களைப் பல்வேறு படைப்புச் சவால்களை முடிக்கப் பணித்தனர். உருவாக்க செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தியவர்கள், சராசரியாக, மிகவும் படைப்பாற்றல் மிக்க ஆற்றல் திறன்களை வெளிப்படுத்தியிருந்தனர். இணையத் தேடல்களைப் பயன்படுத்தியவர்கள் அல்லது எந்த உதவியும் இல்லாதவர்களை விடச் சிறப்பாக செயற்பட்டனர். வேறு வார்த்தைகளில் கூறினால் செயற்கை நுண்ணறிவைக்கொண்டு சில சந்தர்ப்பங்களில் படைப்பாற்றல் செயற்றிறனை விருத்தி செய்ய முடியும்.

எனினும், செயற்கை நுண்ணறிவு முறைமைகளை மித மிஞ்சிய அளவில் நம்பியிருப்பது புத்தாக்கப் படைப்பாற்றலின் பன்முகத்தன்மையை வெகுவாகக் குறைக்கின்றது. மனித மூளையின் படைப்பாற்றல் திறனின் மாறுபட்ட திறன்களுடன் ஒப்பீடு செய்யும் போது செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் குறிப்பிட்ட வரையறைக்குள் சிக்குண்டு தொழிற்படுகின்றன. இதனால் படைப்பாற்றல் திறன் மாறுபட்ட திசைகளை நோக்கிய அனாயாசமான பயணங்களைக் கட்டுப்படுத்தி ஒரு நிர்ணயிக்கப்பட்ட வட்டத்திற்குள் நகர்வதனையும் அது அபார ஆற்றல் வெளிப்பாடுகள் அன்றி சராசரியான திறன் வெளிக்கொணர்வுகளாக அமைவதையும் அவதானிக்க முடிகின்றது.

உருவாக்க செயற்கை நுண்ணறிவின் உதவியின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படும் வெளியீடுகள் அல்லது பெறுபேறுகள் பெரும்பாலும் ஆங்கில மொழி பேசும் மேற்கத்தேய நாடுகளின் பெறுமதிகளைப் பிரதிபலிக்கும் வகையில் காணப்படுவதாக தென்கரோலினாவின் சர்வதேச வணிகவியல்துறை பேராசிரியர் வொல்வ்கேங் மெஸ்னர் (Wolfgang Messner) தெரிவிக்கின்றார். இந்தக் கண்டறிதல்கள் தமக்கும் தமது மாணவர்களுக்கும் ஆச்சரியமளிக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றார்.

இந்த உள்ளார்ந்த பாகுபாடு இந்த அமைப்புகள் உருவாக்கக்கூடிய யோசனைகளின் பன்முகத்தன்மையை இயல்பாகவே வரையறுக்கின்றது.

இதன் மூலம் புதிய கண்டுபிடிப்புக்களை வெளிக்கொணர முடியாது என்பதுடன் கடந்த காலத் தரவுகளின் கலவையாகவே இந்தச் செயற்கை நுண்ணறிவு வெளிப்பாடுகள் அமையப் பெறுகின்றன. செயற்கை நுண்ணறிவு குறுகியகால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவுகின்றது. சாராம்சங்களை வழங்கவும் உண்மையைப் போன்ற வடிவமைப்புகள் மற்றும் பொருத்தமான அறிக்கைகளை வழங்குகின்றன.

ஒரு சோதனையில், பங்கேற்பாளர்களை செயற்கை நுண்ணறிவு உதவியுடன் மருத்துவ நோயறிதல்களைச் செய்யப் பணிக்கப்பட்டனர். ஆனால், ஆராய்ச்சியாளர்கள் சில பங்கேற்பாளர்களுக்கு செயற்கை நுண்ணறிவைத் தவறான பரிந்துரை



களை வழங்கும் வகையில் சோதனையை வடிவமைத்தனர். அந்தப் பங்கேற்பாளர்கள் செயற்கை நுண்ணறிவுக் கருவியை பயன்படுத்துவதை நிறுத்திய பின்னரும், அவர்களை அறியாமல் அந்தப் பாகுபாடுகளை ஏற்றுக்கொண்டு, தங்கள் தீர்மானங்களில் பிழைகளைச் செய்தனர் என பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

செயற்கை நுண்ணறிவின் உதவியானது வசதியான குறுக்கு வழியாக ஆரம்பிக்கப்பட்டாலும், காலப்போக்கில் அது மனித மூளையின் ஆற்றல் வெளிப்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளது. இது இந்த செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் புறநிலையில் மோசமான உள்ளடக்கத்தை உருவாக்குவதால் அல்ல, ஆனால் அவை மனித படைப்பாற்றலை மெதுவாக குறைப்பதனால் இந்த நிலைமை உருவாகின்றது.

அதாவது செயற்கை நுண்ணறிவினைக் கூடுதல் அளவில் நம்பியிருப்பது மூளையின் தொழிற்பாட்டு செயலாற்றலை மங்கச் செய்து காலப்போக்கில் அதன் செயல் திறனை வீழ்ச்சியடையச் செய்யும் நிலைமை உருவாகின்றது. மெய்யான படைப்பாற்றல், புதுமை மற்றும் ஆராய்ச்சி ஆகியவை கடந்த காலத் தரவுகளின் நிகழ்தகவு மறுசீரமைப்பு மட்டுமல்ல, அவை கருத்தியல் பாய்ச்சல்கள், பலதுறை சிந்தனை மற்றும் நிஜ உலக அனுபவம் ஆகியவற்றின் ஒரு கலவையாகும்.

இந்த அம்சங்களைச் செயற்கை நுண்ணறிவு மாதிரிகளினால் அப்பட்டமாக நகலடுத்து வெளிப்படுத்திவிட முடியாது. அதாவது இது எதிர்காலத்தைப் புதிதாகக் கண்டுபிடிக்க முடியாது என்பதுடன் இது கடந்த காலத்தை மட்டுமே மறுசீரமைக்க முடிகின்றது.

செயற்கை நுண்ணறிவு ஊடான வெளிப்படுத்தல்கள் பொதுவாகக் குறுகியகால அவசியங்களை நிறைவேற்றக்கூடும், துரிதமான சாரம்சம், நம்பகமான வடிவமைப்பு அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் எழுத்து வடிவமாக அமையப் பெற்றிருக்கும். எனினும் இந்த வெளிப்படுத்தல்கள் அரிதாகவே புத்தாக்கப் படைப்புருவாக்கங்களைத் தருகின்றன. மேலும் ஏற்கனவே காணப்படும் அசல் படைப்புக்களின் மரபு சார்ந்த ஒரே படைப்புகள் என்ற கடலில் மூழ்கும் அபாயம் காணப்படுகின்றது.

எனவே உருவாக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப ரீதியான சவால் மட்டுமன்றி கலாசார மரபு ரீதியான சவால்களையும் எதிர்கொள்கின்றது. இந்தச் செயற்கை உள்ளடக்கக்

***“ செயற்கை நுண்ணறிவினைக் கூடுதல் அளவில் நம்பியிருப்பது மூளையின் தொழிற்பாட்டு செயலாற்றலை மங்கச் செய்து காலப் போக்கில் அதன் செயல் திறனை வீழ்ச்சிய டையச் செய்யும் நிலைமை உருவாகின்றது. ”***

கட்டற்ற வெள்ளத்தின் மத்தியில் மானுட படைப்பாற்றலின் மாற்ற முடியாத பெறுமதிகளை எவ்வாறு காத்திட முடியும்?

கைத்தொழில் மயமாக்கல் புரட்சி என்ற வரலாற்றுப் பின்னணி இந்த விடயத்தில் எமக்கு நம்பிக்கையையும் எச்சரிக்கையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

கைத்தொழில் புரட்சியின் ஊடான இயந்திரமயமாக்கல் பல தொழிலாளர்களை இடம்பெயரச் செய்தது, ஆனால் அது புதிய உழைப்பு வடிவங்கள், கல்வி மற்றும் செழிப்பு ஆகியவற்றை உருவாக்கியது. இதேபோன்று செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் சில அறிவாற்றல் பணிகளைத் தன்னியக்கமாக்கலாம், ஆனால் அறிவுசார் திறன்களை உருவகப்படுத்துவதன் மூலம் புதிய அறிவுசார் எல்லைகளை விஸ்தரிக்க முடியும்.

இதனால், அவை புதிய செயல்முறைகளைக் கண்டுபிடிப்பது அல்லது தங்கள் சொந்த வெளியீடுகளை மதிப்பீடு செய்யும் அளவுகோல்களை உருவாக்குவது போன்ற படைப்புப் பொறுப்புகளை எதிர்காலத்தில் ஏற்கக் கூடிய சாத்தியங்களை மறுப்பதற்கில்லை. எனினும் இந்த மாற்றம் இன்னும் ஆரம்பகட்டங்களில் காணப்படுகின்றது.

செயற்கை நுண்ணறிவு மாதிரிகள், அறிவாற்றல் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைப்பது தொழில்முறையாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் பொறுப்பாகும். செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் எதிர்காலத்தில் மானுட மூளையை மங்கச் செய்து, படைப்பாற்றல் திறனை ஒடுக்குமா? அல்லது மனிதன் புதிய சிருஷ்டிப்புகளை உருவாக்கிச் சிகரம் தொட வழியமைக்குமா? என்ற கேள்விக்குக் காலத்தினால் மட்டுமே பதில் சொல்ல முடியும்.



jeyaseelan.s@thaiveedu.com

# தொடர்மாடிக் கட்டடங்களின் கூட்டுரிமை காப்புறுதி





பல தொடர்மாடிக் கட்டட வதிவிடங்கள் (Condomanium Apartment) கூட்டுரிமை முகாமைத்துவத்தினால் காப்புறுதி செய்யப்படும். இந்நிலையில் எமக்கு ஓர் ஐயப்பாடு தோன்றுவது இயல்பே. அதாவது, எமது வதிவிடம் கூட்டுரிமை முகாமைத்துவத்தினால் காப்புறுதி செய்யப்படும்போது, நாமும் ஏன் தனியாகக் காப்புறுதி செய்ய வேண்டும் என்று. ஆனால், எக்காரணம் கொண்டும் நீங்கள் தனியாகக் காப்புறுதி செய்யத் தவறாதீர்கள். நீங்கள் வசிக்கும் பகுதிக்கு நீங்கள் காப்புறுதி செய்ய வேண்டிய காரணத்தை இங்கு பகிர்ந்து கொள்வேன்.

**- செந்தூரன் புனிதவேல்**

உங்கள் வீட்டின் கூட்டுரிமை அமைப்பு தனியாக ஒரு காப்புறுதி செய்திருப்பார்கள். அது கீழ் காணும் விடயங்களை மட்டுமே காப்புறுதி செய்யும்.

- உங்கள் தொடர் மாடிக் கட்டடம் - அதாவது கட்டடச்சுவர், கூரை மற்றும் பொது இடங்கள்.
- எல்லாருக்கும் பொதுவான நடைபாதைகள், மின்னுயர்த்திகள் (Elevators), பொது வசதிகள் (Amenities).
- கட்டடம் கட்டும்போது உள்ள சாதனங்கள்

ஆகியவற்றை அக்காப்புறுதி பொறுப்பெடுக்கும்.

கூட்டுரிமைக் காப்புறுதி பொறுப்பெடுக்காத விடயங்கள் இதோ!

- உங்கள் தனிப்பட்ட உடமைகள்.
- உங்கள் வதிவிடப் பகுதிக்கு நீங்கள் செய்துள்ள மேம்படுத்தல்கள்.
- உங்கள் தனிப்பட்ட பெறுப்புக் கூறல்கள்
- அனர்த்தத்தால் வெளியேற வேண்டிய நிலை வந்தால் ஏற்படும் மேலதிகச் செலவுகள்.

இவற்றை உங்கள் தனிப்பட்ட காப்புறுதி ஈடுசெய்யும். ஒரு நல்ல தனிப்பட்ட காப்புறுதியானது கீழ்காணும் நான்கு விடயங்களுக்கு நஷ்டஈட்டினை வழங்கும்.



## தனிப்பட்ட உடமைகள்:

நெருப்பு அல்லது நீரால் வரும் இழப்பீடு, களவு போனால், திட்டமிட்டோ - தவறுதலாகவோ யாராலும் ஏற்படுத்தப்படும் இழப்புகள், மற்றும் ஈடு செய்வதாக சொல்லப்பட்ட இழப்புகள், உதாரணமாக: தண்ணீர்க்குழாய் உடைந்து உங்கள் வீட்டிலிருந்த பெறுமதியான தளபாடங்கள் பழுதாகினால், கூட்டுரிமைக் காப்புறுதி ஈடு செய்யாது. ஆனால், உங்கள் தனிப்பட்ட காப்புறுதி ஈடு செய்யும். அதேவேளை குழாய் திருத்தங்களை கூட்டு உரிமையாளர் காப்புறுதி ஈடு செய்யும்.

**உங்கள் வதிவிடப் பகுதியில் நீங்கள் செய்துள்ள மேம்பாடுகள்:**

உங்கள் வதிவிடப் பகுதியில் நீங்கள் செய்துள்ள மேம்பாடுகள், உதாரணமாக: தரையை தரம் உயர்த்திச் செய்தவை, சமையலறை, குளியலறை ஆகியவற்றில் செய்துள்ள மேம்பாடுகளில் ஏற்படும் இளப்புகளை கூட்டுரிமை அமைப்பின் காப்புறுதி ஈடு செய்யாது. ஆனால், உங்கள் செந்தக்காப்புறுதி ஈடுசெய்யும். உதாரணத்திற்கு உங்கள் வதிவிடத்தில் உள்ள தரையை $15,000 கொடுத்து திருத்தி வைத்திருந்தால் அனர்த்தம் ஏற்படும் வேளை உங்கள் சொந்தக் காப்புறுதி திருத்தித்தரும்.

**தனியார் கட்டணப் பொறுப்பு:**

உங்கள் குடிமனையில் யாராவது காயப்பட்டால் அல்லது நீங்கள் வேறு ஒருவருடைய வீட்டிற்கு தவறுதலாக இழப்பை ஏற்படுத்தினால் உங்கள் சொந்த காப்புறுதிதான் ஈடுசெய்யும்.

- உங்கள் வீட்டில் யாராவது வழுக்கி விழுந்து காயப்பட்டால்,
- உங்கள் வீட்டு நீர்க்குழாயில் பழுது பார்க்கும்போது உங்களுக்கு கீழ் குடியிருப்பவருக்கு நஷ்டம் ஏற்பட்டால்
- செல்லப்பிராணியால் நஷ்டம் ஏற்பட்டு நீங்கள் செலவு செய்ய வேண்டி வந்தால்
- உங்கள் சொந்தக் காப்புறுதியே அதனை ஈடுசெய்யும். அது மாத்திரமன்றி உங்கள் குளியல் தொட்டி நிறைந்து மேலால் ஒழுகி உங்கள் வீட்டுக்குக் கீழே வசிப்பவருக்கு நஷ்டம் ஏற்பட்டால் உங்கள் சொந்தக் காப்புறுதி தான் ஈடு செய்யும்.

**மேலதிக வாழ்க்கைச் செலவு:**

அனர்த்தங்களால் உங்கள் வதிவிடத்தில் நீங்கள் தற்காலிகமாக வசிக்க முடியது போனால் அச்சமயத்தில் ஏற்படும் ஓட்டல் செலவு, உணவுச் செலவு, உங்கள் உடைமைகளை கிட்டங்கியில் வைத்து எடுக்கும் செலவு போன்றவற்றை உங்கள் சொந்தக் காப்புறுதியால்த்தான் ஈடு செய்ய முடியும்.

உதாரணமாக: உங்கள் கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டு நீங்கள் வெளியேற வேண்டி வந்தால், அப்போது உங்கள் காப்புறுதி ஈடுசெய்யும். சில வேளைகளில் ஒரு தீ விபத்தால் ஆறு மாதம் வரை வீடு திரும்ப முடியாதிருப்பின் வாடகை வீட்டுச் செலவையும் உங்கள் காப்புறுதி ஈடு செய்யும்.

**சிலவிடங்களில் இடம்பெறும் இன்னல்களைக் கவனிப்போம்:**

- உங்கள் வீட்டிற்கு மேல் வீட்டில் உள்ளவர் கவனக்குறைவால் நீர் வடிந்து உங்கள் சமையல் அறை பழுதுபட்டால் கூட்டுரிமை காப்புறுதி திருத்தித் தந்தாலும் அது நீங்கள் அமைத்த திருத்த வேலைகள், அதாவது தரைக்கு, மேசைகளுக்கு செய்த செலவுகளை ஈடுசெய்யாது. இந்த நிலையில் உங்கள் சொந்தக் காப்புறுத்திதான் அந்தச் செலவுகளை ஈடு செய்யும்.
- உங்கள் வீட்டில் திருடன் புகுந்து பத்தாயிரம் டொலர் வரையுள்ள நகை மற்றும் மின் சாதனங்களைத் திருடிச் சென்றால் அத்தொகையை உங்கள் கூட்டுரிமைக் காப்புறுதி ஈடுசெய்யாது. உங்கள் சொந்தக் காப்புறுதி தான் ஈடு செய்யும்.
- உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தாளி ஈரமாய் இருந்த சமையல் அறைத் தரையில் வழுக்கி விழுந்து அதற்கு நஷ்ட ஈடு $25,000 கேட்டால் அதுவும் உங்கள் சொந்தக் கட்டடக் காப்புறுதிதான் ஈடுசெய்ய வேண்டும்.
- நீங்கள் வசிக்கும் தொடர்மாடிக் கட்டடத்தில் ஒரு பெரும் அனர்த்தம் ஏற்பட்டு பின் அக்கட்டடத்தில் வசிக்கும் அனைத்து உரிமையாளர்களும் $10,000 கொடுக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டால் அவ்வேளையில் உங்கள் சொந்த காப்புறுதி தான் கை கொடுக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

இப்போது கூட்டுரிமை வதிவிடத்தின் உங்கள் சொந்த காப்புறுதியின் அவசியத்தை அறிந்து கொண்டிருப்பீர்கள். எனவே கூட்டுரிமை தொடர்மாடிக் கட்டட வீடு வாங்கும்வேளை தகுதியான காப்புறுதி முகாமையாளருடன் கலந்து ஆலோசித்து உகந்த காப்புறுதியைப் பெற்று சிறந்து வாழ்வதற்கு எனது வாழ்த்துகள்.



senthuran.p@thaiveedu.com

# பாவனையும் பராமரிப்பும்



# 5

– வேலா சுப்ரமணியம்

### துணி துவைக்கும் இயந்திரம் (Washing Machine):

பொதுவாகக் கூறுவதானால் எல்லோருக்கும் மிக அவசியமான ஒன்றாகக் காணப்படுவது துணி துவைக்கும் இயந்திரமாகும். தனி வீட்டில் வசித்தாலும் சரி, தொடர் மாடிக் கட்டடங்களில் வசித்தாலும் சரி இவற்றின் தேவை மிக அவசியமானதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக வெளிநாடுகளில் வசிப்பவர்கள் இத்தகைய இயந்திரங்களில் மிகவும் தங்கியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

18-ஆம் நூற்றாண்டில் கையால் இயக்கும் துணி துவைக்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், 1920-ஆம் ஆண்டிற்குப் பின்னரே மின்சாரத்தில் இயங்கும் இயந்திரங்கள் பொதுமக்களது பாவனைக்கு அறிமுகம் செய்யப்பட்டன. சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலான விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியினைக் கடந்து, தற்போதய நிலையில் பல நிறுவனங்களினாலும் பலவித தரங்களிலும் விலைகளிலும் நவீன புதிய இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.



2025-ஆம் ஆண்டு நுகர்வோர் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு பார்க்கையில் விவேக தொழில்நுட்பம் (Smart Technology) குறைந்த இயங்கு சக்தியில் உத்தம பலன் (Engery Efficient) என்பவற்றின் அடிப்படையில் LG, Electrolux, Samsung, Maytag போன்ற நிறுவனங்களின் தயாரிப்புகள் முன்னணியில் நிற்கின்றன. அவற்றின் கொள்ளளவு, தரம், இயங்கும் தன்மை, நிறம் போன்றவற்றின் அடிப்படையில் ஏறத்தாள $600 தொடக்கம் $2000 கனடிய டொலர் வரையில் மாறுபட்ட விலைகளில் அவை விற்பனை செய்யப்படுவதைக் கண்டு கொள்ளலாம்.

பொதுவாகப் பார்த்தால் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தனி வீடுகளில் வசிப்பவர்களின் வீடுகளில் தனியான ஒரு சலவை அறை (Laundry Room) அமைக்கப்பட்டிருப்பதைக் காண முடியும். இடவசதியின் அனுகூலம் காரணமாக இத்தகைய இடங்களில் பெரிய கொள்ளளவைக் கொண்ட (5 - 5.5 Cubic Feet) இயந்திரங்களைப் பாவிப்பதே விவேகமான தெரிவாகக் காணப்படுகின்றது. தொடர்மாடிக் கட்டடத்தில் வசிப்பர்கள் சிறிய கொள்ளளவைக் கொண்டவற்றைப் பாவிப்பதே வழக்கமாக உள்ளது.

அதே வேளை பிரித்தானியா போன்ற நாடுகளை அவதானித்தால் சமையலறையின் ஒரு பகுதியில் துணி துவைக்கும் இயந்திரங்களும் பொருத்தப்பட்டிருப்பது மிக ஆச்சரியமாக இருக்கும். மட்டுப்படுத்தப்பட்ட இடம் என்பதால் பொருத்தப்பட்டிருக்கும், இயந்திரங்களும் மிகச் சிறிய அளவினதாக இருப்பதும் வழக்கமாக உள்ளது.
அடிப்படைத் தொழிற்பாட்டை ஆதாரமாகக்கொண்டு பார்த்தால் துணி துவைக்கும் இயந்திரங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

- Front Loading Machines
- Top Loading Machines

வினைத்திறன், நீரைப் பாவிக்கும் அளவு, மின்சாரத்தை நுகரும் அளவு, எடுக்கும் நேரம் என்பவற்றின் அடிப்படையில் முதலாவது வகையாகக் குறிப்பிடப்பட்ட Front Loading இயந்திரங்களே பிரபல்யமாக உள்ளன. ஒரு புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்கின்றபோது குறிப்பாக குறுகிய நேரத்தில் சிறிய அளவு உடுப்புகளை துவைக்கக்கூடியதாகவும்,

அதேவேளை துணிகளின் தன்மைக்கேற்ப துணிகள் கெட்டு விடாது பாவிக்கும் விதத்தில் Hand Wash, Delicate போன்ற தெரிவுகள் கொண்டதாக இருப்பதும், மின்சாரச் செலவைக் குறைப்பதற்காகக் குறிப்பிட்ட நேரத்தில் இயங்கும் விதத்தில் உள்ள தெரிவுகளைக் கொண்டதாக இருப்பதும் அல்லது வலையமைப்புத் தொழில்நுட்பத்துடன் கூடியதும், Smart Phone மூலம் இயங்க வைக்கக்கூடியதாக இருப்பதும் உத்தம தெரிவுகளாக இருக்கும் என்பது எனது கருத்து.

### பராமரிப்பு:

- மாதம் ஒருமுறையாவது சுடுநீர் தெரிவைப் பயன்படுத்தி (Hot Water Cycle) ஒரு கோப்பை White Vinegar-ஐ விட்டு துணிகள் இல்லாது வெறுமையாக இவற்றை இயங்க வைப்பது சிறந்தது. Mold, பங்கஸ் போன்றவை சிறிது சிறிதாக வளர்ந்து வருவதைத் தடுக்க இவை உதவும்.
- சலவைத்தூள் அல்லது சலவைத் திரவம் விடப்படும் தட்டை வெளியில் எடுத்து காலத்திற்குக் காலம் சுத்தம் செய்வது நல்லது.
- பாவனை முடிந்ததும் கதவினைத் திறந்தபடி வைப்பதும் கதவை அண்டிய பகுதியாகிய Casket-இல் இருக்கக் கூடிய நீரைத்துடைத்து எடுப்பதும் சிறந்தது. (எங்கள் வீட்டுத் துணிதுவைக்கும் இயந்திரக் கதவின் வாசலில் எப்போதும் தொங்கிக்கொண்டிருக்கும் ஒரு நிறத்துணியின் இரகசியத்தைப் புரிந்துகொள்ள எனக்குப் பலகாலம் எடுத்தது. பலனாக எந்தவித கறையும் மணமும் இன்றி பல வருடங்கள் கழிந்தும் இன்றும் அது புதுமை மங்காது காட்சி தருகிறது)



- உரிய வடிகட்டிகளை (Lint Filter) காலத்திற்கு காலம் சுத்தம் செய்தல் வேண்டும். இதனைச் சார்ந்த பகுதியில் தேங்கியிருக்கும் கழிவு நீரை சுத்தம் செய்யாது விட்டால் சாக்கடை மணம் தவிர்க்க முடியாததாக இருக்கு.



- சரியான சலவைத் திரவத்தையோ அல்லது தூள்களையோ குறிப்பிட்ட இயந்திர உற்பத்தியாளர்களின் சிபாரிசிற்கு ஏற்ப உரிய அளவில் பாவிப்பது மிக முக்கியமானது. குறிப்பாக உத்தம வினைத்திறன் கொண்ட இயந்திரங்க ளிற்கு 'He' எனப் பொறிக்கப்பட்டிருக்கும் உள்ளீடுகளை மட்டுமே பாவித்தல் வேண்டும்.
- அளவுக்கதிகமாக துணிகளை ஒரே தடவையில் துவைக்க முயற்சிப்பது தவறானது. அத்தகைய செயலால் துணிகள் ஒழுங்காகக் கழுவப்படாதிருக்கும் என்பது ஒரு புறமிருக்க இயந்திரங்களின் ஆயுட்காலத்திற்கும் அவை அச்சுறுத் தலாக அமையும்.
- சமப்படுத்தப்பட்ட நிலையில் இயந்திரங்கள் பொருத்தப்ப டாதிருந்தால் மேலதிக சத்தத்தை இடர்கொள்ள வேண்டியி ருக்கும் என்பதோடு இயந்திரத்திற்கும் அதனைச் சார்ந்த பகுதிகளுக்கும் பல பாதிப்புகள் ஏற்படக் காரணமாகவும் அமையும்.
- காலத்திற்குக் காலம் பொருத்தப்பட்டிருக்கும் நீர்க்குழாய் களில் (Hose) பாதிப்புகள், கசிவுகள் இருக்கின்றனவா? என பரிசீலிப்பது எதிர்காலத்தில் வரக்கூடிய பல இடர் களைத் தவிர்க்க உதவும்.
- Fabric Softner பாவிப்பது துணிகளை மென்மைப்படுத்த உதவும் என்றாலும் மறுபுறம் அதன் சிதைவுகளின் கூறுகள் அகற்றப்டாது இருப்பதால் Mold உருவாகும் வாய்ப்பும் இருப்பதாகச் சில ஆராய்ச்சிகள் கூறுகின்றான.
- ஒவ்வொரு தடவையும் இயந்திரத்தின் சுழற்சி முடிவுக்கு வந் தவுடன் துணிகளை எடுத்துவிட வேண்டியது அவசிய மானது. பல மணி நேரம், சில நாட்கள், பல நாட்கள் என்று காலம் கடந்து அவற்றை அகற்றுவதால் வேண்டத்தகாத பல இடர்கள் ஏற்படும்

### துணி உலர்த்தி (Dryer):

1800-ஆம் ஆண்டின் ஆரம்பகாலப் பகுதியில் நெருப்பின் உதவியுடன் துணிகளை உலர்த்தும் முறையில் ஆரம்பித்து 1915-ஆம் ஆண்டிலேயே மின்சாரத்தைப் பாவித்து இயங்கும் துணி உலர்த்தும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. ஏறத்தாழ 100 ஆண்டுகள் கடந்து தற்போது பலவித தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட விவேக உலர்த்திகள் பாவனைக்கு வந்துள்ளன.

2025-ஆம் ஆண்டு நுகர்வோர் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு பார்த்தால் விவேகமாக இயங்கும் விதம், குறுகிய நேரம், துணிகளை பாதிக்காத தன்மை, உத்தம வினைத் திறன் (High Efficiency) என்பவற்றின் அடிப்படையில் சில Brands அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் Electro-lux, LG, Maytag, GE என்பன குறிப்பிடத்தக்கவை. இருப் பினும் ஒரு துணி துவைக்கும் இயந்திரத்தை வாங்கும்போது அதே Brand-இல் உலர்த்திகளையும் வாங்க முயற்சிப்பதால் உரிய தரங்கள் தட்டிக் கழிக்கப்படுவதற்கான வாய்ப்பும் அதிகமாக உள்ளது.

பொதுவாகப் பார்த்தால் இயற்கை வாயுவில் இயங்கும் உலர்த்தியும் மின்சாரத்தில் இயங்கும் உலர்த்தியும் பரவ லாகப் பாவனையில் உள்ளன. இயற்கை வாயுவில் இயங்கும் உலர்த்தியைப் பாவிப்பதால் மாதாந்த மின்சாரக் கட்ட ணத்தைச் சேமிக்கலாம் என்ற ஒருபக்கம் உண்டு. அதே நேரம் அதன் விலையும் பொருத்தும் செலவும் அதிகமாக இருக்கும் என்பதையும் கருத்திற் கொள்ளவேண்டும். ஒரு வீட்டிற்கான மாதாந்த மின்சாரக் கட்டணத்தில் அதிக பங்கை வகிப்பது

துணி உலர்த்தியும் சமையலறை அடுப்பும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஒவ்வொருவரது பழக்கத்தையும், பாவனையையும் பொறுத்துக் கட்டணத்தின் அளவு மாறுபட்டதாக இருக்கும்.

துணி உலர்த்தியைப் பாவிப்பதால்தான் உடுப்புகள் விரைவில் கெட்டுவிடுகின்றன என்ற ஒரு பொதுவான கருத்து உண்டு. அதிகளவு வெப்பம் ஒரு குறுகிய நேரத்தில் உடுப்புகள் மீது செலுத்தப்படுவதால் உடுப்புகள் சுருக்கமடைவதும் சிறுத்துப் போவதும், இயல்பானது. Synthetic, Nylon போன்ற மூலப் பொருட்கள் அதிகளவு உடுப்புகளுடன் கலக்கப்படுவதால் அதற்கான விளைவுகளும் அதிகமாகவே காணப்படுகின்றன. இதனைச் சமப்படுத்துவதற்காக நீராவியுடன் (Steam) கலந்து உலர்த்தும் விதத்தில் உலர்த்திகள் விற்பனைக்கு வந்துள்ளன. அதுமட்டுமன்றி துணிகளுக்கு ஏற்றவிதத்தில் வெப்பத்தையும் நேரத்தையும் தேவைக்கேற்றவாறு தெரிவுசெய்யும் விதத்திலும் இவை உள்ளன. சற்று அவதானித்துப் பொறுமை





யுடன் உரிய முறையில் செயற்பட்டால் அதிக பலனை அடைய முடியும். இத்தகைய பல இடர்களைக் கருத்திற்கொண்டு பலரும் பதில் நடவடிக்கையாக பிறவழிகளைக் கையாண்டு துணிகளை உலர வைக்கிறார்கள். கனடாவில் pulam peyar naadukalil வீட்டிற்குள் துணிகளை உலர வைப்பதைப் பலரும் கைக்கொள்வதைப் பார்க்க முடிகிறது. குளிர்காலத்தில் இதனைச் செய்வது மிகச்சிறந்த வழிதான். ஆனால் கோடைகாலத்தில் இந்தச் செயற்பாட்டால் வீட்டிற்குள் உருவாக்கப்படும் மேலதிக ஈரப்பதன் அதிகரிப்பால் (Humidity Level) வீட்டில் வேண்டத்தகாத பல பாதக விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. Hygrometer-இன் மூலம் வீட்டின் Humidity Level 50% - 55%-இற்கு மேலே போகாது பார்த்து அதற்கேற்ப செயற்படுதல் அவசியமானது.

கனடாவில் வெளிப்புறத்தில் கொடி கட்டி வெப்பத்தில் காயவிடுவது மிக அரிது. ஆனால் ஏனைய பல நாடுகளில் இம்முறை சர்வசாதாரணமாகப் பின்பற்றப்படுகிறது. இதனால் அத்தகைய நாடுகளில் உலர்த்திகளின் பாவனையும் அரிதாகவே காணப்படுகிறது.

**பராமரிப்பு:**

- ஒவ்வொரு தடவையும் உலர்த்தியைப் பாவிக்க முன்னர் வடிகட்டியை (Lint Filter) சுத்தம் செய்வது மிக அவசியமானது.
- குறைந்தது வருடம் ஒருமுறையாவது வெளிச்சுவர் வரை பொருத்தப்பட்டிருக்கும் போக்கியை (Exhaust Vent) சுத்தம் செய்தல் வேண்டும். தொடர் மாடிக்குடியிருப்பில் இருப்பவர்கள் முகட்டில் (Ceiling) பொருத்தப்பட்டிருக்கும் இணைப்பைத் திறந்து vacuum செய்தல் அவசியம். வீட்டில் வசிப்பவர்கள் வெளிச்சுவரில் இருக்கும் திறந்து மூடும் flapper ஒழுங்காக வேலை செய்கிறதா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- உலர்த்தியைப் பாவிக்க முன்னர் உடுப்புகளில் உள்ள லேபல்களைப் பார்த்து அதற்கேற்ற முறையில் உலர்த்தியைப் பாவிப்பது உடுப்புகளைப் பாதுகாக்க உதவும்.
- அளவுக்கதிமாக உடுப்புகளை ஒரே தடவையில் உலர்த்த முயற்சிப்பது (over Loading) தவிர்க்கப்படவேண்டும்.
- ஈரம் அறிவுறுத்தும் கருவி (Moisture Sensor) பொருத்தப்பட்டிருக்கும் உலர்த்தியாக இருந்தால் தட்டைவடிவில் (Stripe) இருக்கும் அவற்றை கிரமமாக சுத்தம் செய்வது அவசியமானது Fabric Softner பாவித்தால் அவை அதில் ஒட்டியிருக்கும் வாய்ப்பும் உள்ளது.
- சலவை அறையில் பொருத்தப்பட்டிருக்கும் காற்றாடியை (Celing Fan) உலர்த்தியைப் பாவிக்கும் போது இயங்க வைத்து காற்றோட்டம் ஏற்பட வழிசெய்தல் வேண்டும்.
- உலர்த்தியில் (Delay Start) பிந்திய நேரத்தில் இயங்க வைக்கும் தெரிவு இருந்தால் மின்சாரக் கட்டணம் மிகக் குறைவாக இருக்கும் காலப்பகுதியில் இயங்க வைக்கும் விதத்தில் உரிய தெரிவைப் பயன்படுத்தும் முறை மிக இலாபகரமானது என்பதைக் கவனத்திற் கொள்வது மிகச் சிறந்தது



velasubramaniam@thaiveedu.com

**50** வருடங்களுக்கு முன்னர் ஒரு முழு நீள நாடகம் கொழும்பில் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களுக்கு முன்னிலையில் மேடையேறியது. அது ரஷ்ய மொழியிலிருந்து தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்ட ஒரு நாடகம். அந்த நாடகத்தின் தலைப்பு 'பிச்சை வேண்டாம்.'

நாடகம் இப்படித்தான் தொடங்குகிறது.

**கதைசொல்வோர்:** மூன்று இளையவர்களின் கதை இது. அங்காரா நதியோரம் இர்குட்ஸ்க் நகருக்கு அண்மையில் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு பெரும் அணைக்கட்டு வேலைத் தளத்தில்தான் அந்த மூவரும் சந்திக்கிறார்கள்.

**கதைசொல்வோர்:** இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், ஒரு பெரிய நீர்மின் நிலையம் கட்டப்பட்டுக்கொண்டிருந்த இர்குட்ஸ்க் நகரத்துக்கு அண்மையில், அங்காரா நதிக்கரையில் சந்தித்த மூன்று இளைஞர்களின் கதை இது.

இந்த மூன்று இளைஞர்களையும் பற்றிய தீர்ப்பை நாங்கள் உங்கள் கையிலேயே விட்டுவிடுகிறோம். உங்கள் தீர்ப்பில் எங்களுக்கு முழு நம்பிக்கை இருப்பதால், எந்த ஒழுக்கத்தையும் நாங்கள் சுட்டிக்காட்ட மாட்டோம்.
இந்தக் கதை...

**வல்யா:** என் வாழ்க்கையின் கதை.

**சேர்கே:** என்னுடையது...

**விக்டர்:** (ஒருவித எதிர்ப்போடு) என்னுடையதும் கூட.

**வல்யா:** என் பெயர் வல்யா.

**விக்டர்:** நான் விக்டர்.

**சேர்கே:** (அமைதியாக) அவர்கள் என்னை சேர்கே என்று அழைத்தனர்.

விக்ரர், வல்யா, சேர்கே ஆகிய மூன்று இளையவர்கள் முக்கிய பாத்திரங்கள்.

# ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மேடையேறிய மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்களின் நவீன நாடகம்

– க. பாலேந்திரா



இந்த நாடகத்தில் நான் (க. பாலேந்திரா) 'விக்ரர்' பாத்திரத்திலும், ஆனந்தராணி 'வல்யா' பாத்திரத்திலும், சுகந்தன் 'பிளாஞ்சாட் சேர்கே' பாத்திரத்திலும் நடித்தோம்.

இந்த ரஷ்ய நாடகம் இளைஞர்களின் கதையைக் கூறுகிறது. ஒரு வகையில் காதல், பிரிவு, உழைப்பு, கூட்டு வாழ்க்கை போன்ற விடயங்களை அழகியலோடு பேசுகிறது. இரும்புத் திரை என்று கூறப்பட்ட இறுக்கமான சோவியத் சமூகத்தில் இருந்த கட்டுப்பாடுகளுக்கிடையே மிக லாவகமாக மனித மனதையும் மென்மையான உணர்வுகளையும் அடக்கி அழகான வடிவமைப்புடன் எழுதப்பட்ட நாடகம் இது.

அரங்கின் காலம், இடம் ஆகியவற்றின் எல்லைப்பாடுகளை மிகவும் இலாவகமாகக் கடந்து நனவோடைப் பாணியில் எழுதப்பட்ட நாடகம். திரைப்படத்தில் உள்ளதுபோல் நேரப் பாய்ச்சல், காலப் பாய்ச்சல் உத்திகளை கோரஸ் மூலம் சிறப்பாக அரங்கில் கையாண்டு உள்ளார் நாடகாசிரியர் அலெக்சி ஆர்பூசோவ்.

அலெக்ஸி நிகோலாயெவிச் ஆர்பூசோவ் மே 26, 1908 அன்று மொஸ்கோவில் பிறந்தார். இளமைப் பருவத்தில் நடிகராகவும், பின்னர் மொஸ்கோ மற்றும் லெனின்கிராட்டில் இயக்குநராகவும் இருந்த அவர், 1930-இல் மேடைக்காக எழுதத் தொடங்கினார்.

போருக்குப் பிந்தைய அவரது சிறந்த பிரபலமான வெற்றிகளில் ஒன்று சைபீரிய கட்டுமானத் திட்டத்தில் இளைஞர்களின் வாழ்க்கை மற்றும் காதல்களைப் பற்றிய 'அன் இர்குட்ஸ்க் ஸ்டோரி' (An Irkutsk Story) ஆகும். முதன்முதலில் 1959-இல் மேடையேற்றப்பட்ட இந்நாடகம் சோவியத் கிளர்சிக்காக மாறியுள்ளது. மேற்கு ஐரோப்பிய அரங்குகளில் மேடையேற்றப்பட்டுள்ளது.

ரஷ்ய இலக்கியங்கள் குறித்து 50 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இருந்த கலை இலக்கிய சூழல் பற்றியும் சொல்ல வேண்டும். உன்னதமான பல ரஷ்ய இலக்கியங்கள் தீவிர வாசகர்களாகிய எமக்கு மிக மலிவான விலையில் தமிழாக்கமாகக் கிடைக்கக்கூடிய ஒரு சூழல் அப்போது இருந்தது. ஏராளமான நூல்கள் என்னிடமே இருந்தன. சோவியத் அரசின் அனுசரணையோடு தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் இந்த அருமையான நாவல்கள், சிறுகதைகள் கிடைத்தன. நாடகங்கள் நூலாக வந்தது குறைவு.

எனக்குத் தெரிந்த வகையில் ரஷ்ய எழுத்தாளரான Maxim Gorky உடைய 'Lower depths' என்ற மிகவும் கடினமான முழு நீள நாடகத்தை சுஹேர் ஹமீட் நெறிப்படுத்தி மேடையேற்றியிருந்தார். ஆனால், அலெக்ஸ்சி ஆர்புசோவை அறிந்திருக்கவில்லை. பின்னாளில் 1978-இல் அவரது 'புதிய உலகம் பழைய இருவர்' என்ற நாடகத்தை நான் நெறிப்படுத்தி மேடையேற்றியிருந்தேன்.

இலங்கையில் இடதுசாரி இலக்கிய அரசியல் அப்போது கோஷங்களால் ஆன, அல்லது பிரச்சார நோக்கில் அமைந்த எழுத்துகளுக்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கும் ஒரு போக்கு இருந்தது. அதிலும் இடதுசாரிகள், ரஷ்யா சார்பு - சீனச் சார்பு என இரு பிரிவுகளாக இருந்தனர். சீனச் சார்பு கம்யூனிஸ்டுகள் இது போன்ற முயற்சிகளை ரஷ்ய திரிபுவாதம் என்று குறை கூறும் ஒரு போக்கும் இருந்தது.

இலங்கை பல்கலைக்கழக மொரட்டுவ வளாக தமிழ்ச் சங்க நிதிக்காக 'பிச்சை வேண்டாம்' நாடகம் மேடையேறியது. பல்கலைக்கழக பொறியியல் மாணவர்களைக்கொண்டு இந்த நாடகம் தயாரிக்கப்பட்டது. அப்போது நான் மொரட்டுவ பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்தேன். நாடகத்தின் தயாரிப்புப் பணியையும் நானே செய்தேன். வல்யா என்ற முக்கியமான பெண் பாத்திரத்தில் நடிப்பதற்குப்



பொறியியல் படிக்கும் மாண விகள் ஒருவரும் தயாராக இருக் கவில்லை. அப்போது மிகக் குறைந்த அளவு பெண்களே பொறியியல் பயின்றார்கள். அப் போதுதான் ஆனந்தராணியைத் தேடிக் கண்டு பிடித்தேன். இந்த நாடகத்தில்த்தான் முதல் முறை யாக நானும் ஆனந்தராணியும் இணைந்தோம். இந்த நாடகத்தை ஞானம் லெம்பட் அவர்கள் ஆங்கில மூலத்திலிருந்து தமிழ் மொழி யாக்கம் செய்திருந்தார். நாடக த்தை நெறிப்படுத்த அ. தாசீசியஸ் அவர்களை மொரட்டுவ பல்க லைக்கழகத்துக்கு அழைத்திருந் தோம். அதற்கு முதல் 1973-இல் ‘ஏணிப் படிகள்’ நாடகத்தை சுஹைர் ஹமீட் அவர்களை அழைத்து வெற்றிகரமாக மேடை யேற்றியிருந்தோம்.



இந்த முயற்சிகளை 1975-ஆம் ஆண்டு தமிழ்ச் சங்கச் செயலா ளராக இருந்த ஜீ. ஜெயக்குமார் 21-09-1975-இல் கொழும்பு ராம கிருஷ்ண மண்டபத்தில் நடந்த கலைவிழாவில் வெளியிட்டு வைக்க ப்பட்ட ‘நுட்பம்’ மலரில் பின்வ ருமாறு பதிவு செய்துள்ளார்.

*‘நாடகத்துறையில் புதுமையைப் புகுத்தி ஒரு திருப்பத்தை ஏற்படுத் துவது எமது நோக்கமாகும். இவ்வாறான புதுமை நாடகம் எமது ‘ஏணிப் படிகள்’ ஆகும். 15-6-75 அன்று கலைஞர் மு. கருணாநி தியின் 52-வது பிறந்ததின விழாவை முன்னிட்டு ஏழாவது தடவையாக மேற்படி நாடகத்தை மேடையேற்றினோம். நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலும் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இந்நாடகத்திற்கு நீங்கள் அளித்த வரவேற்பு நாங்கள் விரும்புகின்ற புதுமையை நீங்களும் ஏற்பதைக் குறிக்கிறது. இவ்வாறாக புதுமை நாடகங் களுக்கெல்லாம் நீங்கள் தந்த அமோக ஆதரவின் பயனாக மற்றுமொரு புதுமை நாடகம் ‘பிச்சை வேண்டாம்’ மேடையேற் றப்பட்டது. 29-6-75 அன்று புதிய கதிரேசன் மண்டபத்தில் முதல் தடவையாகவும், 5-7-75 அன்று லும்பினி அரங்கில் இரண்டாம் தடவையாகவும் (சங்கநிதிக்காக) பிறிதும் இரு தடவைகள் மேடையேற்றியுமிருந்தோம். ஒரேவிதமான ஒரேபாணி - நாடகங் களைப் பார்த்துச் சலித்துப்போன அபிமானிகளுக்கும் புதுமை விரும்பிகளுக்கும் எமது ‘பிச்சை வேண்டாம்’ நாடகம் ஒரு வரப் பிரசாதமாகும். வந்து குவிந்த பாராட்டுக் கடிதங்களும் பத்திரிகை விமர்சனங்களும் நாடக, திரைப்பட தயாரிப்பாளர் களின் வியப்புக் கலந்த பாராட்டுகளும் எம்மைத் திணறடித்து விட்டன. இந்தத் துணிவு, இதுபோன்ற படைப்புகளைத் தயாரிக்க வேண்டும் என்ற விருப்பைத் தோற்றுவித்துள்ளது.’*

(இந்த நுட்பம் மலரை நூலகம் ஆவணக் காப்பகத்தின் இணையத் தளத்தில் பார்வையிடலாம்.)

நாடகத்தில் வரும் முக்கிய பாத் திரங்கள் வயது 20 தொடக்கம் 25 வரை என்று சொல்லலாம். அதில் நடித்தவர்கள் வயதும் அப்படியே.

இந்த நாடகம் தயாரிக்கப் பட்டபோது எனக்கு வயது 23. ஆனந்தராணிக்கு வயது 19. இதில் நடித்தவர்கள் எல்லோரும் என்னுடைய ஒத்த வயதினர் அல்லது குறைந்த வயதினர்.

நாடகத்தில் வரும் பாத்திரங்கள் கூட எல்லோரும் இள வயதினர். இந்த நாடகத்தில் வரும் பாத்தி ரங்கள் சைபீரியாவில் நடை பெறும் கட்டுமாணப் பணிக்காக ரஷ்யாவின் பல்வேறு மாநிலங் களில் இருந்து வந்தவர்கள்.

இந்த நாடகத்தில் நடித்த எமது நடிகர்கள் கூட எல்லோருமே அப்போது பல்வேறு இடங்களில் இருந்து மொரட்டுவ பல்கலைக் கழகத்தை அண்டிய இடங்களில் வாடகைக்கு அறை எடுத்து தனிய னாக இருப்பவர்கள். சிலர் கூட் டாக ஒரே வீட்டில் தங்கியிருந் தார்கள். நானும் அப்படியே.

இந்த நாடகத்தை நான் வாசித்துப் பார்த்தபோது இளை ஞர்கள் ஆகிய எமக்கு மிகவும் பொருத்தமான நாடகமாக இருந்தது. நாடகத்தில் ஏராளமான பாத்திரங்கள். இதற் கெல்லாம் நடிகர்களைத் தேட வேண்டும். என்னுடைய சக மாணவர்கள், நெருக்கமான நண்பர்களையே நடிக்க வைத் தேன். அதில் மிகச் சவாலான விடயம் 5 பெண் பாத்திரங்கள்.

**பாத்திரங்கள்:**

| | |
|---|---|
| வல்யா | - ஆனந்தராணி ராஜரட்ணம் |
| விக்ரர் | - கே. பாலேந்திரா |
| சேர்கே | - சுகந்தன் பிளாஞ்சாட் |
| சேஜுக் | - க. சுப்பிரமணியம் |
| லரிசா | - சந்திரப்பிரபா மாதவன் |
| றோடிக் | - சந்திரபாலன் |
| டெனிஸ் | - மதுரநாயகம் |
| சின்கா | - ஜேசுதாசன் |
| லப்சென்கோ | - ஜெயக்குமார் |

**கோரஸ் – கதை சொல்வோர்:**

நா. சாந்திநாதன்,
வை.எல்.எம். பாரூக்,
ஜோர்ஜ் செல்வநாயகம்,
விஜய சிவாஜி,

இவர்களுடன்...
மாயா,
நியூரா.
அன்ரன், வீரா
(10, 9 வயது சிறுவன் சிறுமி.)

இதைவிட சில உதிரிப் பாத்தி ரங்கள்.

இவர்களில் சாந்திநாதன், ஜேசுதாசன் ஆகியோர் இப்பொழுது எம்மோடு இல்லை என்பது மிகவும் வருத்தமளிக்கிறது. மற்ற நண்பர்கள் இப்போதும் என்னோடு தொடர்பில் உள்ளார்கள். சிலர் பொறியியல் துறையில் தொழில் புரிகிறார்கள். மற்றவர்கள் என்னைப்போல ஓய்வு பெற்று பேரக் குழந்தைகளைப் பார்க்கிறார்கள். உலகின் பல பாகங்களில் வசிக்கிறார்கள். சுகந்தன், சுப்பிரமணியம் அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகரிலும், சந்திரபாலன், விஜய சிவாஜி, மதுரநாயகம் ஆகியோர் அவுஸ்திரேலியா சிட்னி நகரிலும் ஜோர்ஜ் செல்வநாயகம், ஜெயக்குமார் ஆகியோர் கனடா ரொறன்ரோ நகரிலும் வை.எல்.எம். பாரூக் இலங்கையில் நிந்தவூரிலும், சந்திரப்பிரபா மாதவன் (குமாரபாரதி) நியூஸிலாந்திலும் வாழ்ந்து வருகிறார்கள். நானும் ஆனந்த ராணியும் லண்டனில் வாழ்கிறோம்.

இந்த நாடகத்துக்கு கே.எஸ். சிவகுமாரன், பேராசிரியர்கள் சி. மௌனகுரு, சித்திரலேகா மௌனகுரு, கவிஞர் இ. முருகையன், தேவன் - யாழ்ப்பாணம், அறிஞர்கோன் ஆகியோர் விமர்சனக் குறிப்புகள் எழுதியுள்ளனர்.

‘மல்லிகை’ நவம்பர் 1975 இதழில் பிரசுரமான கவிஞர் இ. முருகையன் அவர்களின் விமர்சனக் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி:

*‘இர்க்குட்ஸ்’ என்னும் இடத்தில் அணைக்கட்டு வேலையொன்று நடந்துகொண்டிருக்கிறது. இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களின் வாழ்க்கையின் ஒரு சிறு துண்டத்தைச் சித்திரிப்பதன் வாயிலாக, புதியதொரு பண்பாட்டின் கருத்துக் கோலங்களையும் விழுமியங்களையும் (வாழ்க்கை மதிப்புகளையும்) நன்கு காட்டிவிடுகிறது நாடகம்.*



*பல்வேறு படித்தரங்களில் உள்ள தொழிலாளர்கள், பல்வேறு ஊர்களிலிருந்து வந்தவர்கள். பல்வேறு குணவியல்களையும் ஆளுமையையும் உடையவர்கள் இந்த அணை கட்டும் வேலைத்தளத்திலே கூடியிருக்கின்றார்கள். அவர்களின் பண்புகள் பலதரப்பட்டு இருப்பினும் அவர்கள் இங்கு கூடியிருப்பது ஒரு பொதுவான நோக்கத்தின் பொருட்டு. அணைக்கட்டு வேலை வெற்றிகரமாக நிறைவேற வேண்டும் என்பதுதான் அந்த உடனடி நோக்கம். அதன் பொருட்டு ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்பில் விடப்பட்டுள்ள வேலைகளை ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் கடமையுணர்வுடனும் செய்கிறார்கள். அத்துடன் அணைக்கட்டு வேலை என்ற உடனடி நோக்கம், நாட்டின் அபிவிருத்தி, மக்கள் நலம், சமுதாய மேம் பாடு, வாழ்க்கையின் முன்னேற்றம் ஆகிய பரந்த இலட்சியங்களுடன் பின்னிப் பிணை ந்தவை என்ற முழு உணர்வும் அவர்களுக்கு இருக் கிறது.*

*பல விதத்திலும் சிறந்த இந்த நாடகம் மீண்டும் மீண்டும் மேடையேறுதல் மிகவும் அவசியமாகும். ஏனெனில், நல்ல நாடகங்கள் எவையென இனங்கண்டு சுவைக்கும் பயிற்சியைத் தமிழ் மக்களுக்கு அளிக்கும் வல்லமை இந்த நாடகத்துக்கு உண்டு. இலவசமாகப் பெறும் பிச்சையை விட, உழைத்துப் பெறும் வருமானமே மேலானது’ என்னும் கருத்துக்கு அழுத்தம் தருவதாக இந்தத் தயாரிப்பு அமைந்தமை மிகவும் பொருத்தமே ஆகும்.*

‘பிச்சை வேண்டாம்’ நாடகம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம், பேராதனை பல்கலைக்கழகம், மகாஜனக் கல்லூரி ஆகிய இடங்களிலும் மேடையேறியது. இதன் தயாரிப்பு, பயண அனுபவங்களை பிறிதொரு கட்டுரையில் எழுதலாம்.

balendra.k@thaiveedu.com





# உடைமையிழந்தோர்

■ ஓவியர் ஜீவா

ஜி. அரவிந்தன் இந்திய புதிய இயக்குநர்களில் குறிப்பிடத்தகுந்தவர். மலையாளத் திரையுலகம் எப்போதுமே தரமான இயக்குநர்களைத் தந்துகொண்டே இருக்கிறது. அடூர் கோபாலகிருஷ்ணனும் அரவிந்தனும் சமகாலத்தவர்கள். இருவருமே அவரவர் பாணியில் அற்புதமான படைப்புகளைத் தந்தவர்கள். அரவிந்தன் ஒரு கேலிச்சித்திர ஓவியராக அறிமுகமானவர். மாத்ருபூமி இதழில் அவருடைய 'செறிய மனுஷ்யரும் வலிய லோகமும்' என்ற சித்திரத்தொடர் பெரும் புகழ் பெற்றிருந்தது. இந்தத் தொடரின் தாக்கம் அவரது முதல் படமான 'உத்தராயணத்திலும்', பின்னர் வந்த 'ஓரிடத்திலும்' நன்றாகத் தெரியும். உத்தராயணம் வெளியான போதே அதைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பின்னர் வெளியான அவரது திரைப்படங்களையெல்லாம் விடாமல் பார்த்தேன்.

அவரது இரண்டாவது திரைப்படம் 'காஞ்சன சீத'. இராமாயணத்திலிருந்து ஒரு சிறிய பகுதியை எடுத்துக்கொண்டு ஒரு வித்தியாசமான பாணியில் உருவான திரைப்படம் இது. இராம லட்சுமணர்களாகத் தாடி மீசை வைத்திருந்த ஆதிவாசிகளை நடிக்க வைத்திருந்தார். சீதையை இயற்கையாக உருவகப் படுத்தியிருந்தார். இந்த மாற்றங்கள், பல அடிப்படைவாதிகளை சினமுறச் செய்தது. அரவிந்தன் கண்டு கொள்ளவில்லை. அடுத்த படைப்பில் கவனம் செலுத்தச் சென்றுவிட்டார்.

'தம்பு' (கூடாரம்) ஒரு சிறிய கிராமத்திற்கு வந்து முகாமிடும் ஒரு சர்க்கஸ் கம்பெனி மற்றும் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த மனிதர்கள் குறித்து உருவானதொரு திரைச்சித்திரம். கோபி, நெடுமுடி வேணு, ஜலஜா போன்ற அப்போதைய இளம் நடிகர்கள் நடித்திருந்தனர். கறுப்பு வெள்ளையில் உருவான ஒரு அற்புதமான படைப்பு இது.

'கும்மாட்டி', 'எஸ்தப்பன்' என்ற திரைப்படங்களைத் தொடர்ந்து வெளிவந்தது 'போக்குவெயில்'. மனித மனங்களின் ஆழத்தை விளக்கமுடியாத ஒரு சூழலைச் சொன்னது. ஓர் இளங்கலைஞன் மனப்பிறழ்வுக்கு ஆளாகும் நிலைக்குச் செல்கிறான். அந்தப் பாத்திரத்தை கவிஞரான சுள்ளிக்காடு பாலச்சந்திரன் ஏற்று நடித்தார். பின்னர் 'சின்னவீடு' போன்ற தமிழ்ப்படங்களில் நடித்த கல்பனா அவரது தோழியாக நடித்தார். சுள்ளிக்காட்டின் கவிதைகளே திரையிலும் பயன்படுத்தப்பட்டன. பின்னணி இசைக்கு ஹரிப்ரசாத் சவுராஸியாவின் புல்லாங்குழலும் ராஜீவ் தாராநாத்தின் சரோடும் மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

> *“மலையாளத் திரையுலகம் எப்போதுமே தரமான இயக்குநர்களைத் தந்துகொண்டே இருக்கிறது. அடூர் கோபாலகிருஷ்ணனும் அரவிந்தனும் சமகாலத்தவர்கள். இருவருமே அவரவர் பாணியில் அற்புதமான படைப்புகளைத் தந்தவர்கள்.”*





அடுத்த படமான ‘சிதம்பரம்’ படத்தின் நாயகி சிவகாமியும் அவள் கணவன் முனியாண்டியும் தமிழர்கள். அவளைத் தமிழ்நாட்டில் மணம் புரிந்து மூணாறுக்கு அழைத்து வந்திருக்கிறான் அவன். அவன் பணிபுரியும் அரசு மாட்டுப்பண்ணையின் அதிகாரி சங்கரன் அந்தத் திருமணத்திற்காகவே தமிழ்நாடு வந்தவன். படத்தின் போக்கு, மனிதனின் குற்ற உணர்ச்சியை தூண்டி எந்த அளவுக்குச் செல்ல முடியும் என்று காட்டுகிறது. சி.வி. சிறிராமனின் சிறுகதையைத் தழுவி எடுக்கப்பட்ட திரைப்படம். கோபி, சிறினிவாசன் மற்றும் இந்தி நடிகையான ஸ்மிதா பாட்டிலும் நடித்திருந்தனர்.

‘ஓரிடத்து’, ‘உண்ணி’ படங்களைத் தொடர்ந்து வந்தது ‘வாஸ்துஹாரா’ (உடமையிழந்தோர்). இந்தப்படம் அரவிந்தனது இறுதிப்படைப்பாகத் திகழ்ந்தது. அவர் மரணத்திற்குப் பின்பே வெளியானது.



வேணு, கேரளத்தைச் சேர்ந்த ஓர் அரசு அதிகாரி 1971-ஆம் ஆண்டு கல்கத்தாவில் கிழக்கு வங்காளத்திலிருந்து மேற்கு வங்காளத்திற்குப் புலம்பெயர்ந்தோரில் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் சமூக விவசாயிகளை அந்தமான் தீவுக்குக் குடியமர்த்தும் பணியில் இருக்கிறார். கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாக அகதிகள் முகாமில் வாழ்ந்து தவிப்பவர்கள் இவர்கள். தொழிலும், கால்நடைகளும், அடிப்படை வசதிகளும் மட்டுமே இவர்களுக்கு இப்போதைய தேவை. வேணு இவர்கள் மீது அனுதாபமும் பரிவும் கொண்டவன். தனது சிறிய அறையில் இவர்களின் நலனைக் குறித்து எப்போதும் கவலைப்பட்டுக்கொண்டிருப்பவன். ஒரு நாள் இவர்கள் துயரங்களில் தானும் ஒரு பங்காளி என்று உணரும் தருணத்திற்கு வருகிறான். காரணம் அவனைக் காணவந்த ஒரு பெண்மணியான ஆர்த்தி பணிக்கர். உடைந்த மலையாளம் பேசிய அவள், ஒரு கிழக்கு வங்க அகதி. கல்கத்தாவிலிருந்து வெளியேற வேண்டும் என்பது அவளது கோரிக்கைகளில் ஒன்று. முதுகலை படித்த ஒரு மகளும் தலைமறைவாய் வாழும் ஒரு மகனும் வாரிசுகள். மகளும் சிறையிலிருந்து பரோலில் வந்திருப்பவள். அவளுடன் பேசும்போது அவர்கள் தன் தாய் மாமனின் குடும்பத்தினர் என்று வேணு உணர்கிறான்.




ஒரு முடிவெடுத்து கேரளம் செல்கிறான். நோக்கம் தன் தாய்மாமன் பணிக்கரின் சொத்துக்களை அவரது வாரிசுகளிடம் சேர்ப்பது. அந்தப் பெரிய தாய்வழி தரவாட்டில் வேணுவின் தாய்க்குப் பணிக்கரின் குடும்பத்தின் மீது அனுதாபம் இல்லை. வேணுவின் அத்தை பவானி ஒரு காலத்தில் குஞ்சுண்ணி மீது காதல் கொண்டிருந்தவள். அவர்கள் காதலுக்குத் தூது போனவனே வேணுதான். பின் பணிக்கரின் சகோதரனை மணந்து அவனது தற்கொலையினால் விதவையானவள். பணிக்கரின் சொத்து இப்போது அவள் கையில்தான். ஒரு குற்ற உணர்வில் வாழும் அவள், ஆர்த்தி குடும்பத்தின் மீது அனுதாபம் கொள்கிறாள். அவர்களுக்கு உரிய சொத்துக்களை அவர்களிடம் ஒப்படைக்க ஒத்துக்கொள்கிறாள்.



திரும்பி வந்த வேணு யார் என்று தெரிந்தவுடன் ஆர்த்திக்கு ஆச்சரியம். அவளுக்கும் மகள் தமயந்திக்கும் ஒரு ஆசுவாசம். உறவுக்குக் கை நீட்ட ஒருவன் இருக்கும் மகிழ்ச்சி. அனால் அவள் அந்தச் சொத்துக்களை பெற மறுத்துவிடுகிறாள். அவளும் அவள் கணவனும் அந்த வீட்டின் முற்றத்தில் அவமானப்பட்ட நிகழ்வுகள் நினைவில்தான் இருக்கின்றன. கிழக்கு வங்கத்திற்கு வந்ததும், நாடு சுதந்திரம் பெற்று பிரிவினை ஏற்பட்டபோது அங்கிருந்து புலம்பெயர்ந்து கல்கத்தா வந்ததும், உடல் நலமின்றி பணிக்கர், மரணமடைந்ததும் அவளுக்கு ஆறாவடுக்கள். அப்போது தமயந்தி குழந்தை, மகனோ வயிற்றில்.



தமயந்தியின் சகோதரன் அவளைப்போலவே ஒரு கம்யூனிஸ்ட். தலைமறைவாகி இருக்கும் அவனை வேணு சென்று பார்க்கும்போது அவனும் மகிழ்ச்சி கொள்கிறான். ஊரே துர்கா பூஜையில் கோலாகலமாக இருக்கும்போது, வேணுவுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் சிலரைக் கப்பலேற்றி அந்தமானுக்கு அழைத்துச்செல்லும் கடமை காத்திருக்கிறது. விடை தர வந்த தமயந்தி உணர்ச்சி மீறிட கதறும்போது வேணு அவளை சமாதானப்படுத்துகிறான். பல துன்பங்களை இதுவரை தாங்கிவந்த ஆர்த்தி எந்தச் சலனமும் இல்லாமல் எப்போதும் போல இறுகிய முகத்துடன் நிற்கிறாள். கப்பலில் ஏற எத்தனிக்கும்போது தமயந்தியின் குரல் கேட்கிறது ‘கடிதம் எழுதுங்கள், முகவரி: தமயந்தி பணிக்கர், அலிப்பூர் சிறைச்சாலை, கல்கத்தா’ !

பின்னர் நடந்த போரின் விளைவினால் பங்களாதேஷ் உருவானபோது, பலர் திரும்பிச்செல்ல முயன்றிருக்கக்கூடும். புதிய புகலிடம் தேடிச்சென்றவர்கள், அங்கேயே கூலித்தொழிலாளர்களாக, சிலர் கொத்தடிமைகளாக வாழ வேண்டியிருக்கலாம் அல்லது தாய்நாட்டிற்கே திரும்பலாம் என்ற நிலைதான் உருவானது!

சிங்க் சவுண்ட் என்று அழைக்கப்படும் படமாக்கும்போதே ஒலியையும் பதிவு செய்வது என்ற முறையில் இந்தத் திரைப்படம் உருவானது. அரவிந்தனின் கலை மேதமையின் இன்னொரு முயற்சி இது. சன்னி ஜோசப்பின் ஒளிப்பதிவும், வங்காளியான சலீல் சவுத்திரியின் இசையமைப்பும் படத்தின் யதார்த்த உருவத்திற்கு மெருகு சேர்த்தன. மோகன்லால் அப்போது புகழ் பெற்ற நடிகர். வணிக சினிமாவில் இருந்தாலும் கலைப்படைப்புகளில் தன்னை எப்போதும் ஈடுபடுத்திக்கொண்டவர். இது பெரும்பாலான மலையாள நடிகர்களுக்கும் பொருந்தும். அரவிந்தன், அடூர் போன்ற மேதைகளுக்கு அங்கு எப்போதும் எல்லாத் தரப்பிலிருந்தும் பெரும் மரியாதை கிடைக்கும். மோகன்லால் வேணு பாத்திரத்தில் அற்புதமாகப் பொருந்தியிருந்தார். உடை, உடல்மொழி, நடிப்பு அனைத்துமே உயர்தரம். ஓர் அரசு ஊழியரை நேரில் பார்ப்பது போலவே இருந்தார்.

ஆர்த்தி பணிக்கராக நடித்தவர் நீலாஞ்சன மித்ரா. இறுகிய முகம், மெல்லிய உடல்வாகு, உணர்ச்சிகளை வெளிக்காட்டாத தன்மை என்று பண்பட்ட நடிப்பை தந்திருந்தார். அவரை நான் பார்த்த முதல் படம் இது.

அவரது மகள் தமயந்தியாக நடித்தவர் நீனா குப்தா. ஷியாம் பெனகல் பாசறையைச் சேர்ந்த இவர் அப்போது ஓரளவுக்குப் புகழ் பெற்ற நடிகை. பக்கா வணிகத் திரைப்படக் கலைஞரான நாட்டியப் பேரொளி பத்மினி அநேகமாக நடித்த ஒரே கலைப் படம் இதுவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். வேணுவின் அத்தை பவானியாக பத்மினி நடித்திருந்தார். இதில் இன்னொரு புதுமையும் இருந்தது. பத்மினியின் சகோதரர் மகளான ஷோபனா இளம் வயதுப் பவானியாக நடித்திருந்தது மிகவும் இயற்கையாக இருந்தது. பத்மினி போன்றே முகஜாடை உள்ள இவர் மிகவும் பொருந்தியிருந்தார். பணிக்கர் மட்டும் திரையில் காட்டப்படாத பாத்திரமாக இருந்தார். கதையை எழுதிய சி.வி. சிறிராமன் ஒரு சிறிய பாத்திரத்தில் தோன்றினார்.

வங்கப்பிரிவினையினால் புலம் பெயர்ந்தோர் குறித்து நிறையத் திரைப்படங்கள் இதற்கு முன்னும் வந்திருக்கின்றன. வாஸ்துஹாரா தவிர என் நினைவில் பளிச்சிடும் இன்னும் ஒரு திரைப்படம் ‘சின்னமூள்’ (பெயர்த்தெடுக்கப்பட்டவர்கள்). 1950-இல் வெளியான இந்தத் திரைப்படம் புதிய அலை திரைப்படங்களில் ஒரு முன்னோடி என்று அழைக்கப்படுகிறது. பின்னர் தமிழில் ‘பாதை தெரியுது பார்’ படத்தை இயக்கியவரும், பல தமிழ்ப்படங்களை ஒளிப்பதிவு செய்தவருமான நிமாய் கோஷ் இயக்கிய வங்க மொழிப்படம் இது. இயக்குனர் ரித்விக் கதக் ஒரு சிறிய வேடத்திலும் நடித்திருந்தார் என்பது ஒரு உபரிச் செய்தி.

வாஸ்துஹாரா ஒரு நுணுக்கமான யதார்த்தத் திரைப்படம். கலை மேதைமை நிறைந்திருந்த ஒரு சிறப்பான படைப்பு. உடைமையிழந்தோரின் உணர்வுகளை அழகுணர்வுடன் யதார்த்த பூர்வமாகச் சொன்ன படம். அரவிந்தனின் ‘ஸ்வான் சாங்’ என்ற இறுதிப்படைப்பு. சிறந்த திரைப்படத்துக்கான தேசிய விருது பெற்ற இந்தத் திரைப்படம், வணிக ரீதியாகவும் வெற்றி பெற்று பல மனிதர்களைச் சென்றடைந்தது.



jeeva@thaiveedu.com



# நவீன உலகும் உறவுகளின் சிதைவும் அன்டோனியோனியின் இருத்தலியல் சினிமா

- சொர்ணவேல்

## அன்டோனியோனியின் இயக்கமும் காட்சி மொழியும்

அன்டோனியோனியின் தனித்துவமான காட்சி மொழி மற்றும் மெதுவான கதை சொல்லல் ‘தி பேசஞ்சர்’ திரைப்படத்திலும் தெளிவாக வெளிப்படுகிறது. மிக நீண்ட காட்சிகள், குறைவான வசனங்கள், மற்றும் அழுத்தமான மௌனம் ஆகியவற்றின் மூலம் உணர்வுகளையும் சூழ்நிலைகளையும் பார்வையாளர்களுக்கு கடத்துவதில் அவர் வல்லவர். நடிகர்களை வெறும் நகரும் வெளிகளாகவே அன்டோனியோனி கருதியதாக ஜாக் நிக்கல்சன் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு காட்சியிலும் நடிகர்கள் பரந்த வெட்டவெளிகளில் சட்டகப்படுத்தியிருப்பது இதனை உறுதிசெய்கிறது. கதையோட்டத்தை விட, பாணியே (style) கதையைச் சொல்லும் விதம் என்பதை அன்டோனியோனி வலியுறுத்துகிறார். படத்தில் ஒலிக்கும் இயற்கையான சத்தங்கள் - சரளைக் கற்களின் சத்தம், எரியும் இலைகளின் சத்தம், சுழலும் மின்விசிறியின் சத்தம் - ஒருவித ரகசிய நாடகத்தை நாம் கவனிப்பது போன்ற உணர்வைத் தருகின்றன.

## அடையாளத் தேடலும் அந்நியமாதலும்



டேவிட் லாக் தனது அடையாளத்தை மாற்றுவதன் மூலம் தனது கடந்த காலத்திலிருந்து விடுபட நினைக்கிறார். ஆனால், அவர் தேர்ந்தெடுக்கும் புதிய அடையாளமும் அவரைச் சிக்கலுக்குள்ளேயே தள்ளுகிறது. "நான் முன்பு வேறொருவராக இருந்தேன், ஆனால் அவரை வர்த்தகம் செய்து விட்டேன்" என்று லாக் ஒரு கட்டத்தில் கூறுகிறார். ராபர்ட்சனின் டைரியில் உள்ள சந்திப்புகளைப் பின்தொடர்ந்து ஐரோப்பா முழுவதும் பயணிக்கும் லாக், வழியில் ஒரு பெண்ணையும் (மரியா ஷ்னைடர்) சந்திக்கிறார். இந்தப் பயணம், தப்பித்தலாகத் தொடங்கினாலும், இறுதியில் ஒரு தவிர்க்க முடியாத முடிவை நோக்கியே அவரை அழைத்துச் செல்கிறது. லாக்கின் மனைவி மற்றும் தயாரிப்பாளர் அவரது "மரணத்தைப்" பற்றி அறியும்போது, அவர்கள் லாக்கின் ஆவணப்படக் காட்சிகளைப் பார்க்கிறார்கள். ஒரு காட்சியில், ஆப்பிரிக்க ஜனாதிபதியை நேர்காணல் செய்யும் லாக், அவரை உரிய முறையில் கேள்வி கேட்கத் தவறுகிறார். மற்றொரு காட்சியில், ஒரு சூனியக்காரரை நேர்காணல் செய்யும்போது, அந்த சூனியக்காரர் கேமராவை லாக் பக்கம் திருப்பி, "உங்கள் கேள்விகள் என்னைப் பற்றி வெளிப்படுத்துவதை விட உங்களைப் பற்றி அதிகம் வெளிப்படுத்துகின்றன" என்கிறார். இது லாக்கின் பத்திரிகையாளர் பணியில் உள்ள பற்றின்மையையும், அவரது உள்ளார்ந்த அந்நியமாதலையும் காட்டுகிறது.

## முடிவின் மௌனமான (கடைசிக்கு முந்தைய ஷாட்டின்) ஏழு நிமிடங்கள்



திரைப்படத்தின் உச்சக்கட்ட காட்சி அதன் இறுதிப் பாகத்திலுள்ள, இறுதி ஷாட்டுக்கு/காட்சித் துண்டுக்கு முந்தைய, ஏழு நிமிட ஷாட் ஆகும். லாக்கின் மரணத்தை நேரடியாகக் காட்டாமல், ஒரு ஜன்னல் வழியாக மிக மெதுவாக நகரும் கேமரா, வெளியே நடக்கும் நிகழ்வுகளைப் பதிவு செய்கிறது. இந்த ஒற்றை ஷாட், அன்டோனியோனியின் சினிமா வாழ்க்கையின் மிகச்சிறந்தத ஷாட் என்றும், சினிமா வரலாற்றின் மிகச்சிறந்த ஷாட்களில் ஒன்று என்றும் கருதப்படுகிறது. இந்த ஷாட்டைபடமாக்க பதினொரு நாட்கள் ஆனது.

காட்சி தொடங்கும் போது, லாக் தனது ஹோட்டல் அறையில் படுக்கையில் படுத்திருக்கிறார். கேமரா மெதுவாக ஜன்னலை நோக்கி நகர்ந்து, ஜன்னல் கம்பிகளுக்கு வெளியே சென்று, ஹோட்டலுக்கு வெளியே உள்ள தூசி நிறைந்த திடலில் நடக்கும் நிகழ்வுகளைப் படம் பிடிக்கிறது. கார்கள் கடந்து செல்கின்றன, ஒரு சிறுவன் சைக்கிள் ஓட்டுகிறான், மனிதர்களும் நாய்களும் சுற்றித் திரிகின்றனர். லாக்கின் காதலி ஒருவருடனும் பின்னர் மற்றொருவருடனும் பேசுவதைக் காண்கிறோம். ராபர்ட்சனுக்கு ஆயுதம் வழங்கிய ஆப்பிரிக்கப் புரட்சியாளர்களின் முகவர்களோ அல்லது அவர்களை எதிர்த்த அரசாங்கத்தின் முகவர்களோ ஹோட்டலை அணுகுகிறார்கள். ஒரு காரின் எஞ்சின் சத்தம், ஒருவேளை துப்பாக்கிச் சூட்டின் ஒலியை மறைக்கக்கூடிய உத்தியாக, ஒலிக்கிறது. கேமரா பின்னர் மீண்டும் ஜன்னல் வழியாக அறைக்குள் திரும்பி லாக்கின் மரணத்தைக் காட்டுகிறது.





இந்த ஷாட், அகநிலை பார்வையிலிருந்து புறநிலை பார்வைக்கு மாறுவதைக் குறிக்கிறது என்று அன்டோனியோனி கூறுகிறார். பார்வையாளராகிய நாம், லாக்கின் மரணத்தை நேரடியாகப் பார்க்காமல், வெளியே நடக்கும் உலகின் சலனமற்ற தன்மையையும், லாக்கின் தனிப்பட்ட சோகம் அந்த பரந்த உலகில் எவ்வளவு சிறியது என்பதையும் உணர்கிறோம். ஜன்னல் கம்பிகள் ஒருவித சிறைப்பிடித்த உணர்வைத் தருகின்றன. லாக்கின் விதி தவிர்க்க முடியாதது என்பதையும், அவன் தனது கடந்த காலத்திலிருந்தோ அல்லது தன்னிடமிருந்தோ தப்பிக்க முடியாது என்பதையும் இது காட்டுகிறது. கேமரா ஜன்னலுக்கு வெளியே சென்று மீண்டும் உள்ளே வருவதன் மூலம், ஒரு முழு வட்டம் பூர்த்தியாவதையும், மரணம் மற்றும் நிச்சயமற்ற தன்மையையும் இது குறிக்கிறது. இந்த ஷாட்டில் ஒலியமைப்பு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. கதவைத் திறக்கும் சத்தம் மற்றும் (கூர்ந்து கேட்கையில் சன்னமாக ஒலிக்கும்) துப்பாக்கிச் சூட்டின் ஒலியைப் போன்ற ஒன்று மட்டுமே நாயகன் கொல்லப்பட்டதை நமக்கு உணர்த்துகிறது.

‘தி பேசஞ்சர்’ திரைப்படம், அடையாளச் சிக்கல்கள், தனிமை, மற்றும் மனிதனின் இருத்தலியல் போராட்டங்கள் ஆகியவற்றை அன்டோனியோனியின் தனித்துவமான பாணியில் ஆராய்கிறது. படத்தின் இறுதி ஏழு நிமிட ஷாட், வெறும் தொழில்நுட்ப சாதனை மட்டுமல்ல, அது படத்தின் மையக் கருவை ஆழமாகப் பிரதிபலிக்கும் ஒரு கவித்துவமான காட்சி அனுபவம். பார்வையாளர்களை சிந்திக்கத் தூண்டும் ஒரு மௌனமான சாட்சியாக அது நிலைத்து நிற்கிறது. இத்திரைப்படம், சினிமா ஒரு கதைசொல்லும் ஊடகம் மட்டுமல்ல, அது ஒரு காட்சி அனுபவம் என்பதையும் அழுத்தமாக உணர்த்துகிறது.

## காலத்தை வென்ற கலைஞர்: அன்டோனியோனியின் நீடித்த மரபு



மைக்லேஞ்சலோ அன்டோனியோனியின் சினிமா, அழகியல் துணிச்சலுக்கும் தத்துவார்த்த ஆழத்திற்கும் ஓர் அழியாச் சின்னமாகத் திகழ்கிறது. அவரது கைகளில், திரைப்பட வடிவம் கவிதையாக மலர்ந்தது: நீண்ட மௌனங்கள், நீடித்த காட்சிகள், தரிசு நிலப்பரப்புகள், மற்றும் துடிப்பான வண்ணங்கள் ஆகியவை உரையாடல்களுக்கு அப்பாற்பட்ட ஆழமான உணர்வுகளைப் பேசின. அன்டோனியோனி ஒரு நவீனத்துவ அழகியலை வார்த்தெடுத்தார்; அது பார்வையாளர்களைச் சவாலுக்குட் படுத்தியது - கதை ஸ்திரத் தன்மைகளைக் கலைத்து, நேரத்தின் ஓட்டத்தை மெதுவாக்கி, மனநிலைக்கும், காட்சி அமைப்புக்கும் முன்னுரிமை அளித்து - அவரது படைப்புகளின் மையக்கருப்பொருள்களுடனான தியானிப்பு நிறைந்த சந்திப்புகளுக்கு நம்மை ஈர்த்தது. அந்தக் கருப்பொருள்கள், நவீன வாழ்வின் உணர்ச்சி மற்றும் ஆன்மீக ஆடிகளாகும்: அந்நியமாதல், துண்டிப்பு, அர்த்தத்திற்கான தீராத ஏக்கம், மற்றும் சமூகம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் நுட்பமான சிதைவுகள். ஒருபோதும் நேரடியாகப் போதிக்காமல், அன்டோனியோனியின் படங்கள் வளமான நவீன உலகின் வெற்று மையத்தை விமர்சிக்கின்றன; அவற்றின் நோக்கம் இல்லாத, தொடர்ந்து வலியுறும் கதாபாத்திரங்களின் சித்தரிப்புகள், ஒரு பரந்த இருத்தலியல் நெருக்கடியைப் பிரதிபலிக்கின்றன. மிக முக்கியமாக, அன்டோனியோனி அவரது படங்களின் மூலம் உருவமும் உள்ளடக்கமும் தனித்தனி உலகங்கள் அல்ல என்பதை அழுத்தமாக உணர்த்தினார்: அவரது படங்கள் என்ன சொல்கின்றன என்பதை, அவை எப்படிச் சொல்கின்றன என்பதிலிருந்து பிரிக்க முடியாது. அன்டோனியோனியின் திரைப்படத்தின் எளிமையான கதைச் சுருக்கம் அதன் உண்மையான சாரத்தைத் தவறவிட்டுவிடும்; ஏனெனில் உண்மையான “கதை” காட்சி அமைப்பு, வேகம், மற்றும் இல்லாமையின் மொழி ஆகியவற்றின் மூலம் சொல்லப்படுகிறது. அறிஞர்கள் குறிப்பிடுவது போல, அவரது திறந்த நிலை கதைகளும், வெளிகளை மையமாகக் கொண்ட காட்சிப் பாணியும், பார்வையாளர்களைக் கற்பனைத்திறனுடன் ஈடுபடவும், தங்களின் சொந்த விளக்கங்களைக் கண்டறியவும் கட்டாயப்படுத்துகின்றன. இந்தச் செயலில் உள்ள காண்பியல் அனுபவமே அன்டோனியோனியின் நோக்கம் - வாழ்வின் தெளிவின்மைக்கு ஒரு சினிமா கண்ணாடி; அங்கு புரிதல் என்பது ஒருபோதும் இறுதியானது அல்ல.



அதிவேக பிளாக்பஸ்டர்களின் சகாப்தத்தில், அன்டோனியோனியின் மெதுவான, உள் நோக்கிய பாணி ஒரு புத்துணர்ச்சியூட்டும் மாற்றீட்டை வழங்குகிறது; இது டால்டன் “சினிமா தியான அமர்வு” என்று அழைப்பது போல, காலம், வெளி, மற்றும் உணர்ச்சியின் நுட்பங்களுடன் நம்மை மீண்டும் இணைக்கிறது. அவரது அழகியல், அரசியல், மற்றும் வடிவம் ஆகியவற்றின் ஒத்திசைவு மானிட நிலை மற்றும் மாறிக்கொண்டிருக்கும் மானுட விழுமியங்கள் சார்ந்த நித்தியக் கேள்விகளுடன் ஒன்றிணை கின்றன. அன்டோனியோனியின் வெளியின் பயன்பாடு எவ்வாறு தனிமையை வெளிப்படுத் துகிறது என்பதையும், அவரது துண்டிக்கப்பட்ட கதைகள் எவ்வாறு யதார்த்தத்தைக் கேள்வி கேட்கின்றன என்பதையும், அவரது படங்கள் நவீன உலகத்தை எவ்வாறு விமர்சிக்கின்றன என்பதையும் பகுப்பாய்வு செய்வதன் மூலம், அவரது அழகி யலின் அழகையும் ஆழத்தையும் நாம் கண்டு ரசிக்க முடியும். அன்டோனியோனி ஒருமுறை, “நான் மக்களை சிந்திக்க வைக்க விரும்பவில்லை, உணர வைக்க விரும்புகிறேன்” என்று கூறினார் -ஆயினும் முரண்பாடாக, அவரது படங்கள் சமூகம் மற்றும் நம்மை மிக ஆழமாக பாதிக்கும் ஆயினும் எளிதில் புலப்படாத விஷயங்களை சிந்தனையைத் தூண்டி ஆழமாக உணர வைக்கின்றன. சுருக்கமாக, மிக்கெ லேஞ்சலோ அன்டோனியோனியின் சினிமா, கலையாகத் திரைப்படத்தின் வீச்சுக்கு ஆதாரமாகும்: வடிவம் உள்ளடக் கமாக மாறும் இடம், பாணி பொருளாக மாறும் இடம், மற்றும் அழகியலின் மூலம், ஓர் ஆன்மாவின் நாம் எதிர்கொள்ள விரும்பாத மூலைகளில் ஒளிபாய்ச்சி நமது விலகலை வெளிப்படுத்தும் இடம் அது.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக, அன்டோனியோனியின் படைப்புகள் தொடர்ந்து திரைப்பட இயக்குநர்களுக்கும், ரசிகர் களுக்கும் ஊக்கமளித்து, அவர்களது சிந் தனைகளை தூண்டிக்கொண்டிருக்கின்றன. பிற்காலத் தலைமுறை கலைப் படங்களில் (தியோ ஏஞ்சலோ பொலோஸ் மற்றும் ஆண்ட்ரே தர்கோவ்ஸ்கியின் சிந்தனை மிக்க நிலப்பரப்புகளில் இருந்து, சோபியா கோப்போலா அல்லது ரிச்சர்ட் லிங்க்லேட்டரின் படைப்புகளில் உள்ள புதிரான நகர்ப்புற அந்நியமாதல் வரை) அவரது செல் வாக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆயினும், அவரது படங்கள் தனித்துவமாகவே நிலைத்திருக்கின்றன. அவை “காலத்தால் அழியாதவை. மனிதமனம் சார்ந்த தீர்க்கப் படாத மர்மங்கள் நிறைந்தவை. மற்றும் அவற்றின் ரகசியங் களைப் பொறாமையுடன் பாதுகாப்பவை” - ஒவ்வொரு காலத்திலும் அவை புதிய விளக்கங்களை அழைக்கின்றன.



மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனியின் சினிமா, அழகியலின் துணிச்சலுக்கும் தத்துவத்தின் ஆழத்திற்கும் இடையறாது ஒளிவீசும் ஓர் அழியாச் சின்னம். அவர் கரங்களில் திரைப்படமெனும் வடிவம், மௌனத்தின் மொழியில் ஒரு கவிதையாய் மலர்ந்தது. நீண்ட நெடிய மௌனங்கள், காலத்தை உறையவைக்கும் காட்சிகள், ஆன்மாவின் தரிசாக விரிந்த நிலங்கள், உணர்வுகளின் சித்திர மாய்த் துலங்கும் வண்ணங்கள் - இவை யாவும் சொற்களின் எல்லை கடந்த ஆழமான உணர்வுகளை நம்மில் கடத்துகின்றன. அவர் வடித்தெடுத்த நவீனத்துவ அழகியல், பார்வையாளனின் புத்தியைச் சற்றே சவாலுக்குட்படுத்தி, மெல்ல மெல்ல ஒரு தியானம் போன்ற ஆழ்ந்த அனுபவத்திற்கு இட்டுச் சென்றது.

அந்நியமாதலின் நிழல், உறவுகளின் துண்டிப்பு, அர்த்தம் தொலைத்த வாழ்வின் தீராத ஏக்கம், மெல்லச் சிதையும் சமூ கத்தின் சித்திரங்கள் - இவை யாவையையும் நவீன வாழ்வின் உணர்ச்சிப் புயல்களென, அவர் தன் படைப்புகளில் அரிய பாடங்களாய்ப் பதிவு செய்தார். செழிப்பின் உச்சியில் அமர்ந்தி ருக்கும் வளமான நவீன உலகின் உள்ளீடற்ற வெற்று மையத்தை, அவர் படங்கள் கூர்மையான விமர்சனக் கணைகளால் தாக்கின. உண்மையான “கதை” என்பது வெறும் சம்பவங்களின் கோர்வையல்ல; அது காட்சி அமைப்பின் நுட் பத்திலும், காலத்தின் மெதுவான நகர்விலும், இல்லாமையின் வலியிலும் தான் இருக்கிறது என்று ஒளிபாய்ச்சினார்.





அன்டோனியோனியின் திரைப் பயணத்தில், மோனிகா விட்டி எனும் பேரழகுப் பதுமையும், அசாத்தியத் திறமை வாய்ந்த நடிகையும், தத்துவார்த்த சக பயணியும் ஒரு பிரிக்க முடியாத அங்கம். அவர்களின் கூட்டணி, வெறுமனே ஒரு இயக்குநர்-நடிகை உறவு என்பதைத் தாண்டி, ஓர் ஆழமான கலைப் பிணைப்பாக மலர்ந்தது. விட்டி, அன்டோனியோனியின் சிக்கலான பெண் கதாபாத்திரங்களுக்கு உயிர் கொடுத்தார்; அவர்களின் அக உலகின் புதிர்களையும், நவீன வாழ்வின் அழுத்தங்களால் அவர்கள் சிதைவுறும் தருணங்களையும் தன் நுட்பமான நடிப்பால் திரையில் வடித்தார்.



லா வென்டுராவின் கிளாடியாவாகட்டும், லா நோத்தேவின் வாலண்டினாவாகட்டும், லெக்லீஸேயின் விட்டோரியாவாகட்டும், அல்லது ரெட் டெசர்ட்டின் ஜூலியானாவாகட்டும் - ஒவ்வொரு பாத்திரத்திலும் விட்டி, அன்டோனியோனியின் பார்வையை உள்வாங்கி, அந்நியமாதலின் வலியை, சொல்லப்படாத துயரத்தை, வாழ்வின் பொருள் கோடும் ஆன்மாவின் தவிப்பைத் தன் விழிகளாலும், உடல்மொழியாலும் பேசினார். அவரின் பொன்னிறத் தலைமுடியும், கனத்த மௌனங்களும், திடீரென வெளிப்படும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளும், அன்டோனியோனியின் படங்களின் தனித்துவமான மனநிலைக்குப் பெரும் பங்களித்தன. விட்டி, வெறுமனே ஒரு நடிகையாக இல்லாமல், அன்டோனியோனியின் கலை ஆன்மாவின் ஒரு நீட்சியாக, அவரின் உணர்வுகளின் தூரிகையாகத் திரையில் வாழ்ந்தார். அவர்களின் நீண்ட காலக் கூட்டணி, உலக சினிமா வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஓர் அத்தியாயம்; அது நவீனத்துவ சினிமாவின் பெண் சித்திரங்களுக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கியது. அவர்களின் கலைப் பயணம், உணர்வுகளின் ஆழத்தையும், மனித உறவுகளின் சிக்கல்களையும் திரையில் வடித்த ஒரு காவியம். விட்டி அல்லாத அன்டோனியோனியின் சினிமா மண்வாசனை அற்ற சாரல் போன்றது.

## சான்றாதாரங்கள்


✓ அங்கெனி, ஜே. (ஆ.இ.). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி. ஆல்மூவி. மே 21, 2012 அன்று பெறப்பட்டது.

✓ அன்டோனியோனி, மை. (1963). ஸ்க்ரீன்பிளேஸ் ஆஃப் மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனியின் திரைக்கதைகள்]. ஓரியன் பிரஸ்.

✓ ஆரோஸ்மித், வி. (1995). அன்டோனியோனி: தி போயட் ஆஃப் இமேஜஸ் [அன்டோனியோனி: பிம்பங்களின் கவிஞர்] (டெட்பெரி, பதி.). ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக அச்சகம்.

✓ ஈக்கோ, உ., & லீஃபெல்ட், கி. (1977). டி இன்டர்பிரிடேஷியோன், ஆர் தி டிஃபிகல்டி ஆஃப் பீயிங் மார்கோ போலோ [பொருள்விளக்கவியல், அல்லது மார்கோ போலோவாக இருப்பதன் கடினம்]. ஃபிலிம் குவார்ட்டர்லி, 30(4), 8–12.

✓ எபர்ட், ரோ. (2005, ஏப்ரல் 8). ஈரோஸ். சிகாகோ சன்-டைம்ஸ். மார்ச் 28, 2016 அன்று பெறப்பட்டது.

✓ ஓ'மீரா, எல். (2016). பர்த்ஸ் அண்ட் அன்டோனியோனி இன் சைனா: தி மஃப்ளிங் ஆஃப் கிரிட்டிசிசம் [சீனாவில் பார்தும் அன்டோனியோனியும்: விமர்சனத்தை அடக்குதல்]. டெக்ஸ்சுவல் பிராக்டிஸ், 30(2), 267–286. https://doi.org/10.1080/0950236X.2016.1129729

✓ கசெடாஸ், அ. (2008). ஆன் இன்ட்ரொடக்ஷன் டு வேர்ல்ட் சினிமா [உலக சினிமாவிற்கு ஒரு அறிமுகம்] (2வது பதிப்பு.). மெக்ஃபார்லேண்ட்.

✓ கேமரூன், இ. அ., & வுட், ரா. (1971). அன்டோனியோனி. பிரேகர்.

✓ கிராண்ட், பே. கீ. (2007). ஷிர்மர் என்சைக்ளோபீடியா ஆஃப் ஃபிலிம், தொகுதி 4 [ஷிர்மர் திரைப்பட கலைக்களஞ்சியம், தொகுதி 4]. தாம்சன் கேல்.

✓ கிரைட்டீரியன் சேனல். (ஆ.இ.). ஸ்வீட் ரூயின் [இனிய அழிவு]. கிரைட்டீரியன் சேனல். நவம்பர் 17, 2022 அன்று பெறப்பட்டது.

✓ கிரேவன், பீ. (2008, மே 17). அன்ஈஸி மொமெண்ட்ஸ் ஃப்ரம் மாஸ்டர் ஆஃப் ஆங்ஸ்ட் [பதற்றத்தின் ஆசானிடமிருந்து அமைதியற்ற தருணங்கள்]. தி ஏஜ், பக். A2, 20.

✓ குரோசாவா, அ. (1982). சம்திங் லைக் ஆன் ஆட்டோபயாகிரஃபி [சுயசரிதை போன்ற ஒன்று]. ஆல்பிரட் ஏ. நாஃப்.

✓ குக், டே. A. (2004). எ ஹிஸ்டரி ஆஃப் நெரேட்டிவ் ஃபிலிம் [கதைமொழித் திரைப்பட வரலாறு]. நார்டன்.

✓ சாட்மன், செ. பெ. (1985). அன்டோனியோனி: தி சர்ஃபேஸ் ஆஃப் தி வேர்ல்ட் [அன்டோனியோனி: உலகின் மேற்பரப்பு]. கலிபோர்னியா பல்கலைக்கழக அச்சகம்.

✓ சாட்மன், செ. பெ. (2008). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி: தி கம்ப்ளீட் ஃபிலிம்ஸ் [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி: முழுமையான திரைப்படங்கள்]. டாஸ்சென்.

✓ சாட்மன், செ. பெ., & டங்கன், பா. (2004). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி: தி இன்வெஸ்டிகேஷன் [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி: புலனாய்வு]. டாஸ்சென்.

✓ சாமுவேல்ஸ், சா. தா. (1969, ஜூலை 29). இன்டர்வியூ வித் மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி இன் ரோம் [ரோமில் மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனியுடன் ஒரு நேர்காணல்]. யூரோ ஸ்க்ரீன்ரைட்டர்ஸ். மே 9, 2016 அன்று பெறப்பட்டது. (அசல் ஏப்ரல் 8, 2016 அன்று காப்பகப்படுத்தப்பட்டது).

✓ சாமுவேல்ஸ், சா. தா. (1972). என்கவுண்டரிங் டைரக்டர்ஸ் [இயக்குநர்களை எதிர்கொள்ளுதல்]. G.P. புட்னம்'ஸ் சன்ஸ்.

✓ சிகார் அஃபிஷியனாடோ. (1996, மார்ச் 1). ஃப்ரம் ஆக்டிங் டு டைரக்டிங், சிகார்ஸ் டு ஜாஸ், ஆக்டர் பீட்டர் வெல்லர் இஸ் எ மேன் ஆஃப் மெனி பேஷன்ஸ் [நடிப்பிலிருந்து இயக்கத்திற்கு, சுருட்டுகளிலிருந்து ஜாஸ் வரை, நடிகர் பீட்டர் வெல்லர் பல ஆர்வங்கள் கொண்ட மனிதர்]. சிகார் அஃபிஷியனாடோ. மே 9, 2016 அன்று பெறப்பட்டது.

✓ சிமெண்ட், மை. (2003). குப்ரிக்: தி டெஃபனிடிவ் எடிஷன் [குப்ரிக்: தீர்க்கமான பதிப்பு]. ஃபேபர் & ஃபேபர்.

✓ சொரேஸ், கி. (2019). ஈஸ்தெடிக்ஸ் [அழகியல்]. ஆஃப்டர் லைவ்ஸ் ஆஃப் சைனீஸ் கம்யூனிசம்: பொலிடிகல் கான் செப்ட்ஸ் ஃப்ரம் மாவோ டு ஸி இல் [சீன கம்யூனிசத்தின் பிற்கால வாழ்வுகள்: மாவோவிலிருந்து ஸீ வரையிலான அரசியல் கருத்துக்கள்]. ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழக அச்சகம்.

✓ ஜெயராஜ், டி.பி.எஸ். (2014). அன்டோனியோனி மாஸ்டர்பீஸ் ‘L’Avventura’ அட் இன்டர்நேஷனல் ஃபிலிம் பெஸ்டிவல் கொழும்பு [கொழும்பு சர்வதேச திரைப்பட விழாவில் அன்டோனியோனியின் தலைசிறந்த படைப்பான ‘லாவென்டுரா’]. Ft.lk.com. https://www.ft.lk/d-b-s-jeyaraj/antonioni-master-piece-lavventura-at-international-film-festival-colombo/10496-350566

✓ ஜான்ஸ்டன், இ. (2006, ஆகஸ்ட் 1). வி'ஆர் நாட் ஹேப்பி அண்ட் வி நெவர் வில் பி [நாம் மகிழ்ச்சியாக இல்லை, எப்போதும் இருக்கப்போவதும் இல்லை]. பிரைட் லைட்ஸ் ஃபிலிம் ஜர்னல். ஜூன் 2, 2025 அன்று பெறப்பட்டது. (அசல் ஜூலை 20, 2012 அன்று காப்பகப்படுத்தப்பட்டது).

✓ டசோன், ஆ. (2002). ஐ ஃபிலிம் டி மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி: உன் போயெட்டா டெல்லா விஷியோனே [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனியின் திரைப்படங்கள்: காட்சியின் ஒரு கவிஞர்]. கிரெமீஸ் எடிடோர்.

✓ டால்டன், ஸ்டீ. (2019, ஜனவரி 16). வாட் அன்டோனியோனி'ஸ் மூவிஸ் மீன் இன் தி எரா ஆஃப் மைண்ட்ஃபுல்னெஸ் அண்ட் #MeToo [முழுமனம் மற்றும் #MeToo காலத்தில் அன்டோனியோனியின் திரைப்படங்கள் என்ன அர்த்தம் கொள்கின்றன]. Bfi.org. https://www.bfi.org.uk/features/michelangelo-antonioni-modernity

✓ டாஸ்ட், பி., & டாஸ்ட், ஹா.-யூ. (2014, மார்ச் 14). லைட் ரூம், டார்க் ரூம்: அன்டோனியோனி'ஸ் ப்ளோ-அப் உண்ட் டெர் ட்ராம்ஜாப் போட்டோகிராஃப் [ஒளி அறை, இருள் அறை: அன்டோனியோனியின் ப்ளோ-அப் மற்றும் கனவுத்தொழில் புகைப்படக்காரர்]. குல்லேரஜன், (44).

✓ தி சினிமா ஆர்கைவ்ஸ். (2019, ஜனவரி 22). தி பேசஞ்சர் – 1975 அன்டோனியோனி – தி சினிமா ஆர்கைவ்ஸ். தி சினிமா ஆர்கைவ்ஸ். https://thecinemaarchives.com/2019/01/22/the-passenger-1975-antonioni/

✓ தாமசுலோ, F. P. (1996). [தி ஆர்கிடெக்சர் ஆஃப் விஷன்: ரைட்டிங்ஸ் அண்ட் இன்டெர்வியூஸ் ஆன் சினிமா, எழுதியவர் M. அன்டோனியோனி, C. டி கார்லோ, G. டினாஸி, & M. கொட்டினோ-ஜோன்ஸ் மீதான விமர்சனம்]. ஜர்னல் ஆஃப் ஃபிலிம் அண்ட் வீடியோ, 48(4), 54–56.

✓ பாக்மன், கி., & அன்டோனியோனி, மை. (1975, கோடை). அன்டோனியோனி ஆஃப்டர் சைனா: ஆர்ட் வெர்சஸ் சயின்ஸ் [சீனாவுக்குப் பின் அன்டோனியோனி: கலையும் அறிவியலும்]. ஃபிலிம் குவார்ட்டர்லி, 28(4), 26–30. doi:10.2307/1211645

✓ பார்ட், ரோ. (1980, அக்டோபர்). காரோ அன்டோனியோனி [அன்புள்ள அன்டோனியோனி]. கஹியேர்ஸ் டு சினிமா, 311.

✓ பிராட்ஷா, பீ. (2012, செப்டம்பர் 27). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி: சென்டினரி ஆஃப் எ ஃபர்காட்டன் ஜெயண்ட் [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி: மறக்கப்பட்ட மாமனிதரின் நூற்றாண்டு விழா]. தி கார்டியன். மே 9, 2016 அன்று பெறப்பட்டது.

✓ பிராடி, ரி. (2012, செப்டம்பர் 28). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி அட் 100 [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி 100 வயதில்]. தி நியூ யார்க்கர். செப்டம்பர் 20, 2019 அன்று பெறப்பட்டது.

✓ பிராடி, ரி. (2013, ஜூலை 11). அன்டோனியோனி'ஸ் கோல்ட்லி லூமினஸ் விஷன் [அன்டோனியோனியின் குளிர்ச்சியான ஒளிமயமான பார்வை]. தி நியூ யார்க்கர். செப்டம்பர் 20, 2019 அன்று பெறப்பட்டது.

✓ பிரவுன், ஜே. (2002). அன்டோனியோனி, மைக்கேலேஞ்சலோ. சென்சஸ் ஆஃப் சினிமா. https://www.sensesofcinema.com/2002/great-directors/antonioni/

✓ பிரவுன்லீ, சா. (2023, செப்டம்பர்). டர்னிங் தி கேமரா அரவுண்ட் டு யூ: தி பேசஞ்சர் அண்ட் ஆப்ஜெக்டிவிட்டி vs. சப்ஜெக்டிவிட்டி [கேமராவை உங்கள் பக்கம் திருப்புதல்: தி பேசஞ்சர் மற்றும் புறவயத்தன்மை எதிர் அகவயத்தன்மை]. ஆஸ்பெக்ட்: ஜர்னல் ஆஃப் ஃபிலிம் அண்ட் ஸ்கிரீன் மீடியா. https://aspectfilmjournal.web.unc.edu/2023/09/brownlee-turning-the-camera-around-to-you-the-passenger-and-objectivity-vs-subjectivity/

✓ புருனெட், பீ. (1998). தி ஃபிலிம்ஸ் ஆஃப் மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனியின் திரைப்படங்கள்]. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்.

✓ பெட்டர்சன், ஜா. (2015, ஆகஸ்ட் 25). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி: ஸ்டேட்லி சினிமாடிக் மாஸ்டர் ஆர் ப்ரெட்டென்ஷியஸ் போர் ? [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி: கம்பீரமான சினிமா ஆசானா அல்லது டாம்பீகமான சலிப்பூட்டுபவரா ?]. தி கார்டியன்.

✓ பெலன், டி. (2023, மார்ச் 28). “வி டிரான்ஸ்லேட் எவ்ரி எக்ஸ்பீரியன்ஸ் இன்டு தி சேம் ஓல்ட் கோட்ஸ்”: இன் மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி'ஸ் ‘தி பேசஞ்சர்,’ விச் டர்ன்ஸ் 50 டுடே, ஜாக் நிகோல்சன் அட்டம்ப்ஸ் எ டிரான்ஸ்ஃபரன்ஸ் ஆஃப் செல்ஃப் [“ஒவ்வொரு அனுபவத்தையும் அதே பழைய குறியீடுகளுக்குள் மொழிபெயர்க்கிறோம்”: இன்று 50 வயதை எட்டும் மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனியின் ‘தி பேசஞ்சரில்,’ ஜாக் நிக்கல்சன் சுய பரிமாற்றத்திற்கு முயற்சிக்கிறார்]. சினிஃபிலியா & பியாண்ட். https://cinephiliabeyond.org/the-passenger/

✓ பெர்லினாலே. (ஆ.இ.). பெர்லினாலே 1961: ப்ரைஸ் வின்னர்ஸ் [பெர்லினாலே 1961: பரிசு வென்றவர்கள்]. பெர்லினாலே. ஜனவரி 23, 2010 அன்று பெறப்பட்டது.

✓ போக்டானோவிச், பீ. (1992). திஸ் இஸ் ஆர்சன் வெல்ஸ் [இது ஆர்சன் வெல்ஸ்]. ஹார்ப்பர்பெரன்னியல்.

✓ போர்ட்வெல், டே., & தாம்சன், கி. (2002). ஃபிலிம் ஹிஸ்டரி: ஆன் இன்ட்ரொடக்ஷன் [திரைப்பட வரலாறு: ஒரு அறிமுகம்]. மெக்ரா-ஹில்.

✓ போமரன்ஸ், மு. (2011). மைக்கேலேஞ்சலோ ரெட் அன்டோனியோனி ப்ளூ: எயிட் ரிஃப்லெக்ஷன்ஸ் ஆன் சினிமா [மிக்கெலேஞ்சலோ சிவப்பு அன்டோனியோனி நீலம்: சினிமாவின் மீது எட்டு பிரதிபலிப்புகள்]. கலிபோர்னியா பல்கலைக்கழக அச்சகம்.

✓ BFI சவுத்பேங்க். (2023, டிசம்பர் 2). தி பேசஞ்சர் - BFI சவுத்பேங்க் புரோகிராம் நோட்ஸ். BFI சவுத்பேங்க். https://bfidata-digipres.github.io/big%20screen%20classics/2023/12/02/passenger/

✓ மார்கஸ், M. (1987). அன்டோனியோனி'ஸ் ரெட் டெசர்ட்: அப்ஸ்ட்ராக்ஷன் அஸ் தி கைடிங் ஐடியா [அன்டோனியோனியின் சிவப்பு பாலைவனம்: வழிகாட்டும் எண்ணமாக சுருக்கம்]. இட்டாலியன் ஃபிலிம் இன் தி லைட் ஆஃப் நியோரியலிசம் இல் [நியோரியலிசத்தின் ஒளியில் இத்தாலிய திரைப் படம்] (பக். 188-208). பிரின்ஸ்டன் பல்கலைக்கழக அச்சகம். https://doi.org/10.1515/9780691209470-012

✓ மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி பிளாக். (2021, ஜூன் 9). அன்டோனியோனி டிஸ்கஸ்ஸஸ் தி பேசஞ்சர் (1975) [அன்டோனியோனி தி பேசஞ்சர் (1975) பற்றி விவாதிக்கிறார்]. மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி பிளாக். https://antonioni9.wordpress.com/2021/06/09/antonioni-discusses-the-passenger-1975/

✓ முல்லெட், லூக். (2012, ஏப்ரல் 2). ராக்கஃபெல்லரின் மனச்சோர்வு. மூபி.காம். https://mubi.com/en/notebook/posts/rockefellers-melancholy

✓ மெல்லர், டே. ஆ. (2007, டிசம்பர் 1). 'ஃப்ரேக்மென்ட்ஸ் ஆஃப் ஆன் அன்னோவபிள் ஹோல்': மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி'ஸ் இன்கார்ப்பரேஷன் ஆஃப் கண்டெம்பரரி விஷுவாலிட்டீஸ் இன் லண்டன், 1966 ['அறியமுடியாத முழுமையின் துண்டுகள்': 1966 லண்டனில் சமகால காட்சிகளை மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி இணைத்தது]. விஷுவல் கல்ச்சர் இன் பிரிட்டன், 8(2), 45-61.

✓ ரெஸ்டிவோ, ஏ. (2002). தி ஆப்ஜெக்ட் அன்டோனியோனி [பொருள் அன்டோனியோனி]. தி சினிமா ஆஃப் எகனாமிக் மிரக்கிள்ஸ்: விஷுவாலிட்டி அண்ட் மாடர்னைசேஷன் இன் தி இட்டாலியன் ஆர்ட் ஃபிலிம் இல் [பொருளாதார அற்புதங்களின் சினிமா: இத்தாலிய கலைத் திரைப்படத்தில் காட்சித்தன்மை மற்றும் நவீனமயமாக்கல்] (பக். 95–123). ட்யூக் பல்கலைக்கழக அச்சகம். https://doi.org/10.2307/j.ctv1220m0v.9

✓ ரெஸ்டிவோ, ஏ. (2002). தி சப்லைம் அண்ட் தி டிசாஸ்டர் [உன்னதமும் பேரழிவும்]. தி சினிமா ஆஃப் எகனாமிக் மிரக்கிள்ஸ்: விஷுவாலிட்டி அண்ட் மாடர்னைசேஷன் இன் தி இட்டாலியன் ஆர்ட் ஃபிலிம் இல் [பொருளாதார அற்புதங்களின் சினிமா: இத்தாலிய கலைத் திரைப்படத்தில் காட்சித்தன்மை மற்றும் நவீனமயமாக்கல்] (பக். 124–144). ட்யூக் பல்கலைக்கழக அச்சகம். https://doi.org/10.2307/j.ctv1220m0v.10

✓ ரோடி, சா. (1988). தட் பௌலிங் ஆலி ஆன் தி டைபர்: டேல்ஸ் ஆஃப் எ டைரக்டர் [டைபரில் அந்த பந்துவீச்சு சந்து: ஒரு இயக்குநரின் கதைகள்]. ஃப்ரேம்வொர்க்: தி ஜர்னல் ஆஃப் சினிமா அண்ட் மீடியா, (35), 137–139. JSTOR 44111651.

✓ லாக்ஹார்ட், கி. (ஆ.இ.). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி, இயக்குநர். ஃபிலிம் ரெஃபரன்ஸ். ஜூன் 2, 2025 அன்று பெறப்பட்டது.

✓ லயன்ஸ், ரா. ஜோ. (1976). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி'ஸ் நியோ-ரியலிசம்: எ வேர்ல்ட் வியூ [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனியின் நியோ-ரியலிசம்: ஒரு உலகப் பார்வை]. Ayer கம்பெனி பப்ளிஷர்ஸ். (From Dissertations on Film series).

✓ லைமன், ரி. (2007, ஆகஸ்ட் 1). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி, போல்ட் டைரக்டர், டைஸ் அட் 94 [துணிச்சலான இயக்குநர் மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி, 94 வயதில் காலமானார்]. தி நியூ யார்க் டைம்ஸ். அக்டோபர் 30, 2024 அன்று பெறப்பட்டது.

✓ வில்லியம்ஸ், டே. E. (2020, ஏப்ரல் 7). தி பேசஞ்சர்: ஒன் எபிக் ஷாட் [தி பேசஞ்சர்: ஒரு காவிய ஷாட்]. அமெரிக்கன் சினிமாட்டோகிராஃபர். (முதலில் 1975 ஜூன் AC இதழில் வெளியானது). https://theasc.com/articles/the-passenger-one-epic-shot

✓ வெண்டர்ஸ், வி. (2000). மை டைம் வித் அன்டோனியோனி: தி டைரி ஆஃப் ஆன் எக்ஸ்ட்ராஆர்டினரி எக்ஸ்பீரியன்ஸ் [அன்டோனியோனியுடன் என் காலம்: ஓர் அசாதாரண அனுபவத்தின் நாட்குறிப்பு]. ஃபேபர் & ஃபேபர்.

✓ வெக்ஸ்மன், வி. ரை. (2006). எ ஹிஸ்டரி ஆஃப் ஃபிலிம் [திரைப்பட வரலாறு]. பியர்சன்.

✓ வேக்மேன், ஜா. (பதி.). (1988). வேர்ல்ட் ஃபிலிம் டைரக்டர்ஸ்: வால்யூம் டூ, 1945–1985 [உலகத் திரைப்பட இயக்குநர்கள்: தொகுதி இரண்டு, 1945–1985]. H.W. வில்சன்.

✓ ஹீலி, கே. (2024). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி, டூரிஸ்ட் ஸ்னாப்ஷாட்ஸ், அண்ட் தி பாலிடிக்ஸ் ஆஃப் தி 'பேக்வேர்ட் சீன்' இன் 1970s சைனா [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி, சுற்றுலாப் பயணிகளின் புகைப்படங்கள், மற்றும் 1970களின் சீனாவில் 'பின்தங்கிய காட்சி'யின் அரசியல்]. ஜர்னல் ஆஃப் கண்டெம்பரரி ஹிஸ்டரி, 59(4), 732–753. doi:10.1177/00220094241271006

✓ ஹூஸ்டன், பெ. (2007, ஜூலை 31). ஆபிச்சுவரி: மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி [நினைவஞ்சலி: மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனி]. தி கார்டியன். மே 9, 2016 அன்று பெறப்பட்டது.

✓ ஹோப்வெல், ஜா. (2021, மார்ச் 2). மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனி ஸ்க்ரீன்பிளே டு பி ஃபைனலி ஷாட் பை குல்லேன், சிமிலர், ஆந்த்ரே ரிஸ்டம் [மிக்கெலேஞ்சலோ அன்டோனியோனியின் திரைக்கதை இறுதியாக குல்லேன், சிமிலர், ஆந்த்ரே ரிஸ்டம் ஆகியோரால் படமாக்கப்படவுள்ளது]. வெரைட்டி. நவம்பர் 17, 2022 அன்று பெறப்பட்டது.

✓ ஹோல்டன், ஸ்டீ. (2006, ஜூன் 4). அன்டோனியோனி'ஸ் நத்திங்னெஸ் அண்ட் பியூட்டி [அன்டோனியோனியின் ஒன்றுமில்லாமையும் அழகும்]. *தி நியூ யார்க் டைம்ஸ்*. மே 21, 2012 அன்று பெறப்பட்டது.



Swarnavel@thaiveedu.com

# செப்ரெம்பர் 5, 1972
# மியுனிக்

– ரதன்

**செ**ப்ரெம்பர் மாதம் பல விடயங்களுக்காகப் பிரசித்தமானது. 2001-இல் நடைபெற்ற உலக நியூயோர்க் நகர வணிக வளாகங்கள் மீதான விமானத் தாக்குதல் உலக பிரசித்தமானது. விமானங்கள் வளா கங்களின் மீது மோதும் காட்சி தொடர்ச்சியாகப் பல நாட்கள், மாதங்கள் தொலைக்காட்சிகளிலும், மற்றும் அனைத்து ஊடகங்களிலும் நூற்றுக் கணக்கானோரால் ஆய்வு செய்யப்பட்டன. அதே செப்ரெம்பர் மாதம் ஒன்பதாம் திகதி 1972-ஆம் ஆண்டு மியுனிக்கில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது அங்கு சென்ற பாலஸ்தீனிய தீவிரவாதிகள், இஸ்ரேலிய வீரர்களைக் கடத்திக் கொலை செய்தனர். இதனைக் கறுப்பு செப்ரெம்பர் என்ற பாலஸ்தீனிய அமைப்பினர் செய்த தாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. யார் இந்தக் கறுப்பு செப்ரெம்பர் அமைப் பினர்? ஏன் அவர்களுக்குக் கறுப்பு செப்ரெம்பர் என்ற பெயரிடப்பட்டது என்ற கேள்விகள் எழாமல் இல்லை. பொதுவாகத் தீவிரவாத அமைப் புகள் மீது விளிக்கப்படும் பெயர்களுக்கு ஏதோ ஒரு காரணம் இருக்கும்.

பாலஸ்தீனியர்களைப் பொறுத்தவரை செப்ரெம்பர் மாதம் அவர்களது சரித்திரத்தில் ஒரு முக்கிய மாதம். தற்போது ஒக்ரோபர் ஏழு தமிழில் ஐப்பசி ஏழு தாக்குதல் என அழைக்கப்படும். தாக்குதல் நடைபெற்ற மையால் ஒக்ரோபரும் அவர்களது சரித்திரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இந்த செப்ரெம்பர் மாதத்தில் fedayeen தாக்குதல் 16-ஆம் நாளிலிருந்து 27-ஆம் நாள்வரை இடம்பெற்றது. இத் தாக்குதல்கள் ஜோர்டானிய அரசரை வெளியேற்றுவதற்காக நடைபெற்றது. இதன் விளைவாக ஆயிரக்கணக்கான பாலஸ்தீனிய போராளிகள் கொல்லப் பட்டனர். பலர் வெளியேற்றப்பட்டனர். இத் தாக்குதல் பாலஸ்தீனிய பற்றா அமைப்பின் கறுப்பு செப்ரெம்பர் குழுவினரால் நடத்தப்பட்டது. இதன் தலைவராக இருந்த தளபதி அபு அலி அயட்ன் தலைமையில் இடம் பெற்றிருந்தது. (1971-இல் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்களும் ஜோர்டானிலிருந்து வெளியேற்றப்பட்டனர். சிறைப்பிடிக்கப்பட்ட பாலஸ் தீனிய தீவிரவாதிகளைச் சித்திரவதை செய்ததாக ஜோர்டானிய பிரதமர் வசிப் ரால் குற்றஞ்சாட்டப்பட்டார். இவர் பின்னால் 1971 நவம்பரில் கறுப்பு செப்ரெம்பர் அமைப்பினரால் கொல்லப்பட்டார். செப்ரெம்பர் 1970-இல் நடைபெற்ற தாக்குதல்களை நடத்தியமையினால் அக் குழு பற்றாவின் உறுப்பினர்களை அதிகமாகக் கொண்ட குழு கறுப்பு செப்ரெம்பர் குழு என அழைக்கப்பட்டது. எனினும் அமெரிக்கா கறுப்பு செப்ரெம்பர் குழுவை பற்றாவின் ஒரு குழுவாகவே கருதியது. 1970 செப்ரெம்பரில் பாலஸ்தீன விடுதலை அமைப்பை (PLO) வலுக்கட்டாயமாக எதிர்கொண்ட ஜோர்டான் மன்னர் ஹுசைனை படுகொலை செய்யவும் ஜோர்டான் இராணுவத் தினைப் பழிவாங்கவும் இந்தக் குழு 1971-இல் நிறுவப்பட்டது.

1972 மே மாதம் ஆஸ்திரியாவிலிருந்து இஸ்ரேலுக்குப் பறந்த பெல்ஜிய விமானத்தைக் கடத்தியது மற்றும் உலகெங்கிலும் உள்ள இஸ்ரேலிய தூதரகங்களுக்கு கடித குண்டுகளை அனுப்பியது உட்பட்ட பல செயல் களில் கறுப்பு செப்ரெம்பர் ஈடுபட்டிருந்தது - அவற்றில் ஒன்று 1972 செப் ரெம்பரில் லண்டனில் ஒரு தூதர் கொலை. 1972 மார்ச் மாதம் சூடானில் உள்ள சவுதி தூதரகம் மீதான தாக்குதலுடன் 1973-இல் நடவடிக்கைகள் தொடர்ந்தன, பல பணயக்கைதிகள் பிடிக்கப்பட்டனர், சூடானுக்கான அமெரிக்கத் தூதர் கிளியோ ஏ. நோயல், அவரது துணைத் தூதர் மற்றும் ஒரு பெல்ஜியத் தூதர் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஒகஸ்ட் மாதம், எதன்சில் (கிறீஸ்) நியூயோர்க்கிற்கு விமானத்தில் ஏற காத்திருந்த பயணிகளை, இளம் கறுப்பு செப்ரெம்பர் உறுப்பினர்களின் ஒரு ஜோடி (இருவர்) தாக்கினர். இதில் 3 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 50-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். (இந்த ஜோடி ரெல் அவிவ் செல்லும் பயணிகளைத் தாக்க முயன்றது, ஆனால் அவர்கள் வருவதற்கு முன்பே அந்த விமானம் ஏறிவிட்டது.)

*"செப்ரெம்பர் மாதம் ஒன்பதாம் திகதி 1972-ஆம் ஆண்டு மியுனிக்கில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது அங்கு சென்ற பாலஸ்தீனிய தீவிரவாதிகள், இஸ்ரேலிய வீரர்களைக் கடத்திக் கொலை செய்தனர்."*





1972 மியுனிக் ஒலிம்பிக் கிராமத்தில் நடைபெற்ற கொலைகளை மையப்படுத்தி பல படங்கள் வெளிவந்துள்ளன. அண்மையில் வெளிவந்த படம் 'செப்ரெம்பர் 5' ஆகும்.

1972 மியுனிக் ஒலிம்பிக் படுகொலையின் கதையை - பாலஸ்தீனிய கறுப்பு செப்ரெம்பர் குழுவால் 11 இஸ்ரேலிய பணயக் கைதிகள் கொல்லப்பட்டனர். அவர்களுடன் அந்தக் குழுவின் ஐந்து உறுப்பினர்களும் ஒரு மேற்கு ஜேர்மன் காவல்துறை அதிகாரியும் இறந்தனர் - சுவிஸ் இயக்குநரும் இணை எழுத்தாளருமான டிம் பெல்பாம் (Tim Fehlbaum) ஒரு இறுக்கமான, பதட்டமான படமாக மீண்டும் கூறுகிறார். நவீன சமாச்சாரங்களை நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ அதை உருவாக்க இந்தப் படம் நம்மையே விட்டுவிடுகிறது.

பெரும்பான்மை ஊடகங்கள் புதிய செய்திகளுக்கும், பரபரப்புகளுக்கும் மிகவும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. அவை ஊடக நிறுவனங்களுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கின்றன. வருமானத்தை நோக்கி ஊடக நிறுவனங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். நிறுவனங்களின் பணியாற்றும் ஊடகவியலாளர்களின் உயிரை விட, செய்தியின் உண்மைத் தன்மையை விட வருமானமே அவர்களது குறியாகவுள்ளது. எவ்வாறு செப்ரெம்பர் 5 கொலைகள் வணிகமயப்படுத்தப்பட்டு நுகர்வோரைச் சென்றடைகின்றது என்பதனை இப் படம் வெளிப்படுத்துகின்றது.

ABC TV-யின் விளையாட்டுப் பிரிவின் பார்வையில் இருந்து முற்றிலும் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் நெரிசலான, தனிமை சூழலிலிருந்து ஒலிம்பிக் நிகழ்வுகளை உலகிற்கு நேரடியாக ஒளிபரப்பிக்கொண்டிருந்தனர். மற்றைய ஊடகங்களுடன் ஒரு தகுந்த இடத்திலிருந்து போட்டிகளைப் படம் பிடிக்கப் போட்டியிடுவதையும், மற்றைய ஊடகங்களை தவிர்த்து தங்களது தொலைக்காட்சியை பார்க்க வைக்க கற்பனைகளைக் கலந்தும் வெளியிடுகின்றார்கள். இது களத்திலிருக்கும் ஊடகவியலாளர்களுக்கு ஒருவகை அழுத்தமாகும்.

**வருமானத்தை நோக்கி ஊடக நிறுவனங்கள் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். நிறுவனங்களின் பணியாற்றும் ஊடகவியலாளர்களின் உயிரை விட, செய்தியின் உண்மைத் தன்மையை விட வருமானமே அவர்களது குறியாகவுள்ளது.**

ஏபிசி சர்வதேச தீவிரவாதத்துக்கு பழக்கப்படாத ஜேர்மன் பொலிசாரின் அனுபவமற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றார்கள். கட்டடங்களின் கூரைகளில் ஏறி தீவிரவாதிகளைச் சுட முயற்சிக்கின்றனர். ஏபிசி இதற்கான திட்டமிடலை மிகக் குறைந்த நேர அவகாசத்தில் திட்டமிட்டு படமாக்கி ஒளிபரப்புகின்றனர். இந்த ஒளிபரப்பை அதாவது ஜேர்மன் பொலிசாரின் நடவடிக்கைகளை தீவிரவாதிகளும் தொலைக்காட்சியில் பார்க்கின்றனர். இது உண்மையில் ஜேர்மன் பொலிசாரின் நடவடிக்கைகளுக்கு எதிரான விடயம். ஆனால் ஏபிசி-யின் இலக்கு பார்வையாளர்கள். ஏபிசி-யின் பார்வையாளர்கள் மேற்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள். குறிப்பாக அமெரிக்கர்கள். தீவிரவாதிகள் பார்ப்பது ஏபிசிக்கு தெரியாமலிருந்தது என்பது உண்மை. தெரிந்திருந்தாலும் அவர்கள் ஒளிபரப்பை நிறுத்தியிருக்கமாட்டார்கள்.

ஏபிசி-யின் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பு மிகவும் முழுமையானதாக இருந்தது. தீவிரவாதிகள் மற்றும் பணயக் கைதிகளின் குடும்பங்கள் இரு தரப்பினரும் நிகழ்நேரத்தில் பின்தொடர முடிந்தது. அதிகாரிகள் ஒளிபரப்பு மூலம் என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டனர்.

'செப்ரெம்பர் 5', 17 மணி நேர சோதனையின் திரைக்குப் பின்னால் நம்மை அழைத்துச் செல்கிறது. அது ஏன் உண்மை என்பதைப் பார்க்க, தாக்குதலுக்கு சற்று முன்பு தொடங்கி, முக்கிய முடிவுகளை பட்டியலிட்டு, துயரமான இறுதிக்குப் பிறகு, 'Wide World of Sports' தொகுப்பாளர் ஜிம் மைக்கே, 'அவர்கள் அனைவரும் போய்விட்டார்கள்' (They're all gone) என்ற அதிர்ச்சியூட்டும் செய்தியை ஒளிபரப்பில் உறுதிப்படுத்தினார். இருப்பினும், ஏபிசி ஸ்போர்ட்ஸ் கதையை எவ்வாறு அணுகியது என்பதற்கான ஒரு உட்கதையாக, இந்தப் படம் முதன்மையாக ஒரு இளம் இலட்சிய தயாரிப்பாளரை (காலத்திற்கு ஏற்ற தோற்றமுடைய ஜோன் மாக்கிறோ நடித்தார்) மையமாகக் கொண்டுள்ளது. இது மூத்த விளையாட்டு ஒளிபரப்பாளரான ஜெப்ரி மேசனின் (Geoffrey Mason) ஒலிம்பிக் நிகழ்வுகளின் நினைவை அடிப்படையாகக் கொண்டது.

திரைக்கதையை மியுனிக்கில் பிறந்த மொறிட்ஸ் பைன்டர் இணைந்து எழுதியுள்ளார். இப்படத்தில் ஒரு பெண் ஊடக வியலாளரை, ஆண்களை அதிகமாகக் கொண்ட ஏபிசி விளையாட்டுப் பிரிவு குழுவினர் மிகவும் மோசமாக நடத்துகின்றார்கள். பெண்களுக்கு எதுவுமே தெரியாது, அவர்களால் எதுவுமே செய்யமுடியாது என்ற மனோநிலை அன்று மேற் கத்தேய ஊடகவியலாளர்கள் மத்தியில் அதிகமிருந்தது என்பதனை வெளிப்படுத்தியுள்ளார்கள். ஏபிசி-யின் ஒளிபரப்புக்

குழுவில் உள்ள அதிகாரி ஒருவரின் குடும்பம் ஜேர்மனியில் நாசிகளால் பாதிக்கப்பட்ட குடும்பம். மாவின் படர் நியுயோர்க்கில் பிறந்திருந்தாலும் அவரது கருத்தியல் இந்த ஒளிபரப்பின்போது வெளிப்பட்டது. படத்தில் ஊடகவியலாளர்கள் தீவிரவாதிகளை எவ்வாறு தொலைக்காட்சியில் கூறுவது என விவாதிக்கின்றார்கள். இறுதியாக பயங்கரவாதிகள் என அழைப்பது என்று முடிவாகின்றது. இவ்வாறு படம் பல மேற்கத்தேய அரசியலைப் பேசுகின்றது.

பிரதான ஊடகமே வதந்திகளால் அவதிப்படுகின்றது. தீவிரவாதிகள் பற்றியும், பணயக்கைதிகள் பற்றியும் பல தவறான செய்திகளை ஏபிசி ஒளிபரப்புகின்றது. ஒரு கட்டத்தில் பணயக்கைதிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக ஒளிபரப்புகின்றது. இக் குழுவினர் மிகவும் பதட்டமாகவுள்ளனர். மேலிடத்து அழுத்தம், எது உண்மை, எது வதந்தி என்று அறிய முடியாத சூழல். மற்றைய ஊடகங்களை முந்தி செய்திகளை வெளியிட வேண்டும் என்ற அவசரம். செய்திகளை உறுதி செய்து வெளியிடும் கால அவகாசத்துக்குள் மற்றைய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுவிடும் என்ற பயம் அனைத்தும் இணைந்ததே இப் படம்.

அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் நேரலையில் நடக்கும்போது, நம் கற்பனைகள் விரிவடைகின்றன. ஆனால் இப்படம் அன்று ஒளிபரப்பு அறையில் என்ன நடந்தது என்பதனையே பதிவு செய்கின்றது. இப்படத்தைப் பார்க்கும் பொழுது பார்வையாளர்களுக்கு என்ன நடந்துள்ளது என்பது தெரியும். அதனை திரைக்கதையாசிரியர்கள் கருத்திற்கொண்டுள்ளார்கள்.

மியுனிக் நெருக்கடியின் நேரடி அறிக்கை இறுதியில் ABC ஸ்போர்ட்ஸ் 29 எமி விருதுகளை வென்றது, 1979-80-ஆம் ஆண்டில் ஈரானிய பணயக்கைதிகள் நெருக்கடியை 444 நாட்கள் தொடர்ந்து வெளியிட ABC-ஐ அனுமதித்தது. இது அப்போதைய ஜனாதிபதி ஜிம்மி காட்டர் அமெரிக்க நலன்களைப் பாதுகாக்க போதுமான வலிமையானவர் அல்ல என்ற உணர்வை அதிகரித்தது. இது காட்டரை ரொனால்ட் ரீகனால் தோற்கடிக்க வழிவகுத்தது.

செப்ரெம்பர் 5 படம் மியுனிக் ஒலிம்பிக் கிராமத்தில் என்ன நடந்தது என்பதனைப் பதிவு செய்துள்ளது. இஸ்ரேல் வீரர்கள் கொல்லப்பட்ட விடயம் இஸ்ரேலைப் பெருமளவு தாக்கியது. அப்போதைய இஸ்ரேலிய பிரதமர் கோல்டா மெயர் தீவிரவாதிகளைப் பழிவாங்க விரும்பினார். அதன் பின்னர் நடைபெற்ற விடயங்களை ஸ்ரீபன் ஸ்பில்பேர்க் மியுனிக் என்ற படமாக எடுத்துள்ளார்.

அரசியல் ரீதியாக, ஸ்பீல்பெர்க் ஒரு தாராளவாத சியோனிஸ்ட் ஆவார். அவர் இஸ்ரேலின் இருப்பை ஆதரிக்கிறார், ஆனால் மோதலுக்கு அமைதியான தீர்வை நாடுகிறார். இரு தரப்பினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் அவர் பகிரங்கமாக ஆதரிக்கவில்லை.

ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின் இஸ்ரேலுடனான உறவு சிக்கலானது மற்றும் நுணுக்கமானது. யூதர்களுக்குப் பாதுகாப்பான புகலிடமாக இஸ்ரேல் இருப்பதை அவர் ஆதரிக்கும் அதே வேளையில், பாலஸ்தீனியர்களுடனான அமைதியையும் அவர் ஆதரிக்கிறார். மற்றும் இரு தரப்பினதும் வன்முறையைக் கண்டிக்கிறார். தனது திரைப்படங்கள் மற்றும் பொது அறிக்கைகள் மூலம், ஸ்பீல்பெர்க் யூத வரலாறு மற்றும் இஸ்ரேலுடனான அதன் தொடர்பு பற்றிய பரந்த கலாசார புரிதலுக்கு பங்களித்துள்ளார். இறுதியில், ஸ்பீல்பெர்க் இஸ்ரேலை ஆதரிக்கிறார். ஆனால் அவரது ஆதரவு பிராந்தியத்தில் அமைதி மற்றும் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான விருப்பத்தால் மென்மையாக்கப்படுகிறது.

எனினும் அண்மைக் காலங்களில் அவரது மௌனம் குறிப்பாக காசாவில் நடைபெறும் இன அழிப்பிற்கு எதிராக குரல் கொடுக்காமல் இருப்பது அவரது இஸ்ரேலின் இருப்புக்கான கருத்தியலை வலுப்படுத்துகின்றது. அவர் இயக்கி வெளிவந்த மியுனிக் (2005) படம் பல சர்ச்சைகளைக் கொண்டது. மியுனிக்கில் நடைபெற்ற இஸ்ரேலிய ஒலிம்பிக் வீரர்களின் கொலைகளின் பின்னர், இஸ்ரேலிய அரசு கொலையாளிகளை எவ்வாறு அழித்தது என்பதனையே இப்படம் பதிவு செய்துள்ளது.

கனடிய பத்திரிகையாளர் ஜோர்ஜ் ஜொனாஸ் (George Jonas) எழுதிய 'வெஞ்சன்ஸ்' (Vengeance) என்ற புத்தகத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தப் படம். 1984-ஆம் ஆண்டில், இஸ்ரேலிய உளவுத்துறை செயற்பாட்டாளர்களின் இரத்தமும், 'பேய்களின் போரில்' அவர்கள் வேட்டையாடிய பாலஸ்தீனிய பயங்கரவாதிகளின் இரத்தமும் ஐரோப்பாவில் இன்னும்



உறைந்து கிடந்தன. (Yuval Aviv) யுவல் அவிவ் என்ற இளம் இஸ்ரேலியர், வளர்ந்து வரும் பத்திரிகையாளரான கனடிய ஜோர்ஜ் ஜொனாஸ் இணைந்தார். அவிவ், புதிதாகப் பதவி நீக்கம் செய்யப்பட்ட மொசாட் கொலையாளி என்று ஒரு உண்மையான கதையைச் சொல்ல, ஜோர்ஜ் ஜொனாஸ் அதனை எழுதி நூலாக்கினார். இது அவிவ் கருத்தியலை மட்டுமே கொண்டது. இதில் குறிப்பிட்ட விடயங்களைப் பற்றிய ஆய்வின்றியே திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் பிரதம மந்திரி கோல்டா மெய்ர், மொசாட்டின் தலைவரான ஜெனரல் ஸ்வி ஜமீரை அழைத்து நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்ட அனைத்து PLO செயற்பாட்டாளர்களையும் கொல்லுமாறு உத்தரவிட்டார் என்ற விடயத்தை விட பல விடயங்கள் தவறாகவுள்ளன. ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கும் அவரது தயாரிப்பாளர் கதலீன் கென்னடியும் தங்கள் மியுனிக் படத்திற்கு அவிவின் கதையை எவ்வாறு தேர்ந்தெடுத்தார்கள்? இப்படம் யூத மக்களுக்கும் இஸ்ரேலுக்கும் எதிரானது அல்ல என பிரச்சாரப்படுத்த ஸ்பில்பேர்க்கும், தயாரிப்பாளரும் இரு பிரபல அரசியல்வாதிகளை நியமித்தார்கள். ஒருவர் முன்னாள் அமெரிக்க மத்திய உதவி அமைச்சர் டெனில் றொஸ். இரண்டாமவர் முன்னாள் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் சரோனின் மனித வள மற்றும் மக்கள் தொடர்பு விசேட ஆலோசகர் இயல் அரட்.

மறுபுறத்தில் இப்படம் பாலஸ்தீனிய தீவிரவாதிகளை எவ்வாறு பிம்பப்படுத்தியது என்ற கேள்வியும் உண்டு.

'செப்ரெம்பர் 5' 1972 அன்று ஜேர்மனியின் முனிச்சில் நடந்த கோடைகால ஒலிம்பிக் போட்டிகளின்போது எடுக்கப்பட்ட கருப்பு மற்றும் வெள்ளை தொலைக்காட்சி காட்சிகளுடன் தொடங்குகிறது.

பொதுவாக இவ்வாறான படங்கள் எடுக்கப்படும்பொழுது பாலஸ்தீனிய தீவிரவாதிகள் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பது ஆய்வுக்குட்பட்டிருக்கும். அதேபோல் மொசாட்டின் எதிர் நடவடிக்கைகள் அவர்கள் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பதெல்லாம் இயக்குநர் அறிந்திருப்பார். அதற்கேற்பவே திரைக்கதை அமைக்கப்படும். மியுனிக் உண்மைச் சம்பவங்களை மையமாகக் கொண்டது. சம்பவங்கள் அனைத்தும் ஒரு வரலாறு. அதே சமயம் கொதிநிலையில் இருக்கும் இரு இனங்கள் சம்பந்தப்பட்டது இப்படம். இந்த இனங்களுக்கிடையில் திரையில் சமநிலை பேணப்பட்டிருக்கவேண்டும். மொசாட்டின் இரத்தக்களரி பழிவாங்கலின் கொடூரமான மனோநிலை போன்றன படத்தில் வெளிப்பட்டிருக்கவேண்டும். ஆனால் எதிர்த்தாக்குதல் என்ற மனோநிலையே படம் முழுவதும் நிரம்பியுள்ளது.

மொசாட்டின் செயற்பாடு பற்றிய அடிப்படை உண்மைகள் கூட, குறிப்பாக தாக்குதல் குழுக்களின் அமைப்பு போன்றவை பெரும்பாலும் படத்தில் தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளுக்கு மிகப் பெரிய அணி ஒன்று செயற்படும். படம் எதிர்மறையாக ஒரு ஐவரையே காட்டியுள்ளது. பெண்கள் அணியில் இருப்பார்கள். அதுவும் இங்கு தவிர்க்கப்பட்டுள்ளது. இது போன்ற பல விடயங்களை ஸ்பில்பேர்க் தனது சினிமா பாணியிலேயே செயற்படுத்தியுள்ளார்.

ஐவர் கொண்ட அணியின் முதலாவது கொலை Wael Zwaiter. ரோமில் வசிக்கும் ஒரு பாலஸ்தீன எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் மொசாட். அவர் மியுனிக் சம்பவத்தைத் திட்டமிடுவதில் ஆழமாக ஈடுபட்டதாக நம்பியது. தனது தொடர்மாடிக் கட்டடத்து உயர்த்தியுனுள் நுழையும்பொழுது காத்திருந்த அவ்னரும் றொபெட்டும் அவர் யார் என கேட்டு-விட்டு சுட்டுக் கொல்கின்றனர்.

இரண்டாவது கொலை Mahmoud Hamshiri ஒரு தொலைபேசி வெடிகுண்டு மூலம் செய்யப்பட்டது. மூன்றாவது கொலை Abad al-Chir - இவர் சைப்பிரசில் உள்ள கறுப்பு செப்ரெம்பர் குழுவின் தலைவர். இவ்வாறு ஒன்பது தீவிரவாதிகள் கொல்லப்படுகின்றார்கள்.

'கடவுளின் கோபம்' (Wrath of God) நடவடிக்கை நடைபெறுவதற்கு முன்பே இஸ்ரேல் பாலஸ்தீன அகதிகள் முகாம்கள் மீது வான்வழித் தாக்குதல்களை நடத்தி பதிலடி கொடுத்தது. மேலும் தடகள வீரரின் விதவைகளில் ஒருவரான (Ankie Spitzer) அங்கி ஸ்பிட்சர், மியுனிக்: மொசாட்டின் பழிவாங்கல் (Munich: Mossad's Revenge) என்ற ஆவணப்படத்தில்,

> **பல உண்மையான நிகழ்வுகளை இயக்குநர் தவிர்த்துள்ளார். குறிப்பாக மியுனிக் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை மொசாட் கொலை செய்ய முயற்சிக்க முன்னர், பாலஸ்தீனத்தில் உள்ள அகதி முகாம்கள் மீது குண்டுகளை வீசுகின்றது. இது இஸ்ரேலுக்கு ஆதரவான செயலாகும். இஸ்ரேலின் பயங்கரவாதத்தை இயக்குநர் காட்சிப்படுத்த விரும்பவில்லை.**





Wael Zwaiter



Mahmoud Hamshiri

*“மியுனிக் 1972-இல் நடந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் ஆராய்ந்த கருப்பொருள்கள் இன்றைய இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலை அர்த்தத்துடன் ஒத்திருக்கின்றன.”*

கோல்டா மெய்ர் கொலை செய்யப்பட்ட விளையாட்டு வீரர்களின் குடும்பங்களை ஒரு தனிப்பட்ட கூட்டத்திற்கு அழைத்ததாகவும் அதில் ‘சம்பந்தப்பட்டவர்களையும் அவர்களின் கைகளில் இரத்தக்கறை உள்ளவர்களையும் வேட்டையாடுவோம்’ என்று உறுதியளித்ததாகவும் கூறினார்.

முன்னாள் மொசாட் உளவாளி Gad Shimron, Reuters ஊடகத்துக்களித்த செவ்வியில் படத்தில் உள்ள பல தவறுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மொசாட்டின் முக்கிய இலக்கான அலி ஹசன் சலாமே நோர்வேயில் இருப்பதாகச் சில தகவல்கள் கிடைத்திருந்தன. துரதிர்ஷ்டவசமாக அவர்களின் முகவர்கள் வேறு பணிகளில் இருந்ததால் கள அனுபவம் இல்லாத அதிகாரிகளை வேலையைச் செய்ய அனுப்ப வேண்டியிருந்தது. குழு கண்டு பிடிக்கப்பட்டது மட்டுமல்லாமல் அவர்கள் கொன்ற நபர் சலாமே கூட இல்லை. அவர் ஒரு அப்பாவிப் பணியாளர் என்பது தெரியவந்தது.

பாலஸ்தீனியர்கள் போராட்டத்தை நியாயப்படுத்துவதாக காட்சிப்படுத்தும் இயக்குநர், அவர்கள் பயங்கரமானவர்கள் என முத்திரை குத்துகின்றார். பல உண்மையான நிகழ்வுகளை இயக்குநர் தவிர்த்துள்ளார். குறிப்பாக மியுனிக் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை மொசாட் கொலை செய்ய முயற்சிக்க முன்னர், பாலஸ்தீனத்தில் உள்ள அகதி முகாம்கள் மீது குண்டுகளை வீசுகின்றது. இது இஸ்ரேலுக்கு ஆதரவான செயலாகும். இஸ்ரேலின் பயங்கரவாதத்தை இயக்குநர் காட்சிப்படுத்த விரும்பவில்லை.

‘பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரே வழி தீவிரவாதிகள் யார் அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்பது குறித்து எந்த கேள்வியும் கேட்காமல் அவர்களை மனிதாபிமானமற்றவர்களாக மாற்றுவதாகும்.

தீவிரவாதத்தின் ஒவ்வொரு செயலுக்கும் வலுவான பதில் தேவைப்படுகிறது. மியுனிக் 1972-இல் நடந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் ஆராய்ந்த கருப்பொருள்கள் இன்றைய இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலை அர்த்தத்துடன் ஒத்திருக்கின்றன.

இஸ்ரேல்-பாலஸ்தீன மோதல் உலகின் மிகவும் சோகமான மற்றும் தொடர்ச்சியான மோதல்களில் ஒன்றாக உள்ளது, இடைவிடாத மற்றும் அழிவுகரமான வன்முறை சுழற்சியில் சிக்கியுள்ளது. பொதுமக்கள் அதிக விலை கொடுக்க வேண்டியவர்கள்.

மியுனிக் வன்முறையில் பங்கேற்ற அனைத்து ஆண்களையும் அது தூக்கிலிடவில்லை. மொசாட் அலி ஹசன் சலாமே என்று நினைத்து நோர்வேயில் படுகொலை செய்யப்பட்ட மொராக்கோ பணியாளர் போல முற்றிலும் அப்பாவிகள் சிலரைக் கொன்றது.

மியுனிக்கின் கடைசிக் காட்சியில் அவ்னரும் அவரது மொசாட் கட்டுப்பாட்டாளரும் பகைமையில் பிரிகிறார்கள். அவர்கள் நியூயார்க்கில் இரட்டைக் கோபுரங்கள் இன்னும் உயரே பறக்கும் மன்ஹாட்டன் வானத்துக்கு எதிராக நிற்கிறார்கள். கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்குப் பிறகு நியூயோர்க்கில் நடக்கவிருந்ததற்கு அவ்னர் செய்தது பங்களித்ததா என்று ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் கேட்பது போல் தெரிகிறது. மேலும், ‘ஈராக்’ என்ற வார்த்தையைக் குறிப்பிடாமல் ஸ்பீல்பெர்க், பார்வையாளர்களிடம் அந்தத் தொடர்பை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்.

மியுனிக் கொலைகள் பற்றி பல படங்கள் வெளிவந்துள்ளன. One day in September மிகவும் குறிப்பிடத்தக்க விவரணத் திரைப்படம். 21 Hours at Munich, Munich (2005 film), Munich’72 and Beyond, Prefontaine (film), September 5 (film), Sword of Gideon, Visions of Eight போன்ற படங்கள் வெளிவந்துள்ளன. இது தொடரும்.

ஸ்பில்பேர்க்ன் மியுனிக்கில் கொல்லப்பட்டவர்கள், அதாவது மொசாட்டில் உண்மையில் மியுனிக் கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்களா ? மொசாட் கொலைப்பட்டியலில் இருந்தவர்களை கொன்றுவிட்டு, மியுனிக் கொலையுடன் தொடர்புபடுத்தியுள்ளார்களா ? இன்றைய நிலையில் வரலாறுகள் புனையப்பட்டுள்ளன. அவையே உண்மை என நம்பவைக்கப்படுகின்றன.

உண்மையான நிகழ்வுகளால் ஈர்க்கப்பட்டதாகக் கூறும் படம் உண்மையான நிகழ்வுகளைப் பிரதிபலிக்கவில்லை.



rathan@thaiveedu.com

## மூத்த ஊடகவியலாளர்

# லத்தீப் பாரூக்கின்

## ஊடகப் பணியும் செல்நெறியும்

- இக்பால் அலி



இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் லத்தீப் பாரூக்கின் ஊடகப் பணி ஆறு தசாப்தங்களுக்கு மேற்பட்டதாக மதிக்கப்படுகின்றது. அரபுலகின் அரசியல், பொருளாதாரம் மற்றும் யுத்த நிலவரங்கள் குறித்து இலங்கையில் இருந்து ஆங்கிலத்தில் எழுதுவதற்கு அவரைப் போல வேறோருவர் இருக்க முடியாது எனக் கருதுகின்றேன். மத்திய கிழக்கு நாடுகளிலும் அவரது தாய் நாட்டிலும் ஆற்றிய ஊடகப் பங்களிப்புகள் அளப்பரியவை. சர்வதேச ரீதியில் ஒரு புகழ்பெற்ற ஆங்கில மொழி ஊடகவியலாளர். சர்வதேச விவகாரங்களில் புலமைமிக்க எழுத்தாளர். அதே போல் தமிழ் ஊடகத் துறைக்கும் பங்களிப்பு நல்கியவர். சமூக வலைத்தளத்தில் பல இலட்சக் கணக்கான வாசகர்களின் நன்மதிப்பையும் பெற்றவர். அத்தோடு, எழுத்தின் வாயிலாக தன் புகழை மேலோங்கச் செய்தவர்.

அவர் இணையத் தளங்களுக்கும் வெளிநாட்டு இதழியலுக்கும் இற்றைவரையிலும் ஓய்வு இல்லாமல் சுறுசுறுப்போடு எழுதி வருகின்றவர். ஊடகத்துறை என்பது புனிதமானது. அதற்குப் புதுக்குருதி பாய்ச்சி வலிமையூட்டி காக்க வேண்டும் என்ற உள்ளத் துடிப்போடு தான் பின்பற்றி வருகின்ற கொள்கையில் சற்றும் பின்வாங்காமல் செயற்பட்டு வருகின்ற ஒருவர்.

ஒவ்வொரு துறையிலும் அவரது பங்களிப்புகள் விதந்துரைக்கத்தக்க வகையில் அமைந்திருக்கின்றன. 'இன்டிப்பென்டன் நியூஸ் பேப்பர்ஸ்' நிறுவனத்தின் 'சன்' ஆங்கில நாளிதழின் உதவி ஆசிரியர். அரசாங்க ஊடாகமான தினசரி நாளிதழ் 'டெய்லி நியூஸ் மற்றும் சன்டே ஒப்சவர் பத்திரிகைகளின் உதவி ஆசிரியர். மத்திய கிழக்கில் இருந்து

வெளிவரும் பிரபல்யமான ஆங்கில மொழி 'கல்ஃப்' இதழின் இலங்கைக்கான பிரதான செய்தியாளர். 1979-ஆம் ஆண்டில், அவர் இலங்கை பத்திரிகையாளர்கள் குழுவைத் துபாய்க்கு அழைத்துச் சென்று, ஆங்கில மொழி நாளிதழான 'கல்ஃப் நியூஸ்' பத்திரிகையில் இணைந்தார். ஒரு வருடம் கழித்து அவர் 'கலீஜ் டைம்ஸில்' சேர்ந்தார். ஐக்கிய அரபு எமிரேட்ஸின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கு அவர் அந்நாட்டின் அரசியல், பொருளாதாரம் பண்பாட்டு அம்சங்கள் தொடர்பாக ஏழு ஆண்டுகள் தொடர்ந்து எழுதியவர் என்பது அவரது வரலாறு கூறுகின்ற பாடம்.

1987-ஆம் ஆண்டு மீண்டும் வளைகுடா செய்தி நிறுவனத்தில் இணைந்த அவர், பஹ்ரைன் மற்றும் சவுதி அரேபியாவில் வளைகுடா செய்திப் பணியகத் தலைவராகப் பணியாற்றினார். அங்கு, வளைகுடா மற்றும் மத்திய கிழக்கின் முக்கியமான பொருளாதாரம், நிதி முகாமைத்துவம், அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து தொடர்ந்து கட்டுரைகளை வெளியிட்டார். அக்காலத்தில் ஊடக மாநாடு நடத்துவதற்காக மட்டும் கல்ஃப் நாட்டுக்கு உலகத் தலைவர்கள் வருவார்கள். பல நாட்டு உலகத் தலைவர்கள் அந்த இடத்திற்கு வந்து ஊடக அறிக்கைகளை வெளியிடுவார்கள். இதில் முக்கிய அம்சமாக இவற்றையெல்லாம் முன்னின்று நடத்தி அச்செய்தி அறிக்கைகளை வெளியிடுபவராக லத்தீப் பாரூக் அவர்கள் இருந்தார்கள்.

கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலம் வளைகுடாவில் வாழ்ந்து பணியாற்றிய பிறகு, மார்ச் 2001-இல் அவர் கொழும்புக்குத் திரும்பினார். இங்கு வந்த அவர் வளைகுடாப் பகுதி, ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் தூர கிழக்கு நாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டு இலங்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் விளக்கும் முகமாக சிறப்புக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினார். முஸ்லிம் உலகில், குறிப்பாக மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் அவர் கட்டுரைகளை எழுதினார். சன்டே டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் சிங்கரட்ணதுங்க அவர்கள் சன் பத்திரிகையில் லத்தீப் பாரூக் அவர்களுடன் இணைந்து கடமையாற்றிய ஆத்ம நண்பர். ஆங்கில மற்றும் சிங்களப் பத்திரிகைகளுக்கும் எழுதுகின்ற வல்லமையைக் கொண்டவர்களாக இருவரும் திகழ்ந்தனர். லத்தீப் பாரூக் வீரகேசரியில் உலக விவகாரங்கள், அரசியல், பொருளாதார விடயங்கள் தொடர்பாக கிட்டத்தட்ட 400 கட்டுரைகளுக்கு மேல் எழுதியுள்ளார். அதேபோல் தினகரனிலும் எழுதியுள்ளார். கடந்த அரசாங்கத்தால் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற இன வன்முறைகள் குறித்து முழு வெளியுலகமும் அறிந்து கொள்ளும் வகையில் ஆங்கிலத்தில் துணிந்து எழுதி வந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் பெரியளவில் பேசப்பட்ட ஊடகவியலாளர்கள் கூட இவை குறித்து எழுதுவதற்கு முன்வரவில்லை. ஆனால் இவருடன் சுதந்திர ஊடகவியலாளர் ஹமீட் கரீம் உள்ளிட்ட ஓரிருவர்களே துணிந்து ஆங்கிலத்தில் எழுதினார்கள்.

"வெறுமனே
செய்திகளை மாத்திரம்
எழுதுகின்ற ஊடகவிய
லாளன் இல்லை.
மாறாக,
சமூக
அநீதிகளுக்கு
எதிராகவும்
கொடுமைகளுக்கு
எதிராகவும்
போராடும் ஒரு
போராளியாக,
சமூக வெளியில்
பொது மனிதர்களுக்கு
இழைக்கப்படும்
அநீதிக்கு எதிராக
பக்கம் சாயாமல்
துணிந்து நின்று,
குரல் எழுப்புகின்ற
ஓர் ஆளுமையாக
இருந்தார்
லத்தீப் பாரூப்"

துறை சார்ந்து விரிவாக ஆராயும்போது லத்தீப் பாரூக்கின் சர்வதேச ஊடகத்துறையின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. கடந்த காலங்களில் இலங்கை முஸ்லிம்கள் இன நெருக்கடி நிலைக்குள்ளாகி துன்புறுத்தலுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளான வேளையில் அவர் ஆங்கில மொழிகளில் எழுதிய கட்டுரைகள் உலக அரங்குகளில் மிகவும் பேசு பொருளாகக் காணப்பட்டன. அக்கட்டுரைகள் தமிழ் மொழி உட்பட பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பிரபல்யமான செய்தித் தளங்களில் மீள் பதிவுகளாய் வெளிவந்தன.

எவரைப் பார்த்தாலும் ஊடகம் என்று, அவர்கள் நம்புகிற எதையோ வைத்துக் கொண்டு குண்டு சட்டிக்குள் அங்கீகாரத்தை தேடி குதிரை ஓடுகிறவர்களாகப் பார்க்க முடிந்த சூழலில், இவர் தனித்து துலங்கினார். மானுட முன்னேற்றத்திற்காகவும் அவர்களது ஆரோக்கியமற்ற வாழ்வுநிலை குறித்தும் தனது சக்தி உட்பட்ட வகையில், அரபுலக ஆங்கில மொழி ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கினார். இவர் லேக் ஹவுஸின் டெய்லி நியூஸ், மற்றும் சண்டே ஒப்சேவர் பத்திரிகைகளின் ஆசிரியர் பீடத்தில் ஒரு தசாப்த காலம் கடமையாற்றியவர். அவற்றில் அதி வேகமாக புதுப்புது அரசியல் சார்ந்த சூடான செய்திகளை வெளியே கொண்டு வந்து மக்களுக்கு வழங்கியவர். வெறுமனே செய்திகளை மாத்திரம் எழுதுகின்ற ஊடகவியலாளன் இல்லை. மாறாக, சமூக அநீதிகளுக்கு எதிராகவும் கொடுமைகளுக்கு எதிராகவும்போராடும் ஒரு போரா ளியாக, சமூக வெளியில் பொது மனிதர்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக பக்கம் சாயாமல் துணிந்து நின்று, குரல் எழுப்புகின்ற ஓர் ஆளுமையாக லத்தீப் பாரூப் அவர் கள் இருந்தார்கள்.

இலங்கை மற்றும் உலக அரசியல் அரங்குகளிலுள்ள அரசியல் தலைமைகளுடன் இவர் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டவர். பேராசியர் எம்.ஏ. நுஃமான், ஏ.எம். நஹியா, சட்டத்தரணி ஜாவிட் யூசுப், சட்டத்தரணி எம்.எம். சுஹைர் போன்ற பெரும் புகழ் பெற்ற நண்பர்களுடன் மதிப்பும் அன்பும் கொண்டு தொடர்ந்தும் இடைவெளி இல்லாமல் பழகி வருபவர். கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்கள் இறக்கும் வரை அவருடனும் நெருங்கிப் பழகிவந்தவர். தன் கைக்குக் கிடைக்கக் கூடிய அனைத்து ஆங்கில மொழி நூல்களையும் வாசிக்கக் கூடிய வாசகர்.

லத்தீப் பாரூக் அவர்கள் கண்டி மாவட்டத்தில் புகழ்மிக்க மடவளை எனும் ஊரில் 1943-இல் பிறந்தவர். அவர் மடவளை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையிலும் கடமையாற்றியவர். லத்தீப் பாரூக் அவர்கள் ஒரு வசதியுள்ள குடும்பத்தில் பிறந்தவர் அல்ல. ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தந்தை அப்துல் லத்தீப் குருநாகல் நகரில் சாதாரண கடை வியாபாரம் செய்தவர். அவர் ஆரம்பக் கல்வியை (1949-1955) மடவளை மதீனா பாடசாலையில் கற்றவர். ஆறாம் ஆண்டு முதல் பத்தாம் வகுப்பு வரை (1956-1959) வத்துகாமம் க்ரைஸ்சேர்ச் கல்லூரியில் கற்றார். 1960-இல்

உயர் தரக் கல்வியை மாத்தளை புனித தோமஸ் கல்லூரியில்கற்றவர்.

அப்பொழுது பாடசாலையின் ஆங்கிலப் பாட ஆசிரியர் அவரது வகுப்புக்கு சென்று தனியார் பாடசாலைகளை அரசாங்கம் உள்ளீர்க்கப் போகுகின்றது என்ற தலைப்பில் ஒவ்வொரு மாணவர்களுக்கும் சுய கட்டுரை எழுதும்படி கோரினார். அதற்கு இணங்க அவர் அது 'நல்லதுதான்' என்று அரசாங்கத்துக்கு ஆதரவாக அந்தக் கட்டுரையினை எழுதினார். அதனால் குறித்த ஆசிரியர் அவருடன் முரண்பட்டுக் கொண்டார். மாணவரும் ஆசிரியருமாகிய இருவரும் மாறி மாறி எதிரான கருத்துகளை முன் வைத்தார்கள். அப்பாடசாலை தனியார் பாடசாலையாகும். அதனால் அவர் அங்கு தொடர்ந்து படிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. 1962-இல் மாத்தளை சாஹிராக் கல்லூரிக்குச் சென்று கல்வி கற்றார். அங்கு கல்வி கற்று எச்.எஸ்.யூ.ஈ. பரீட்சை எழுதி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்.




அப்பொழுது பல்கலைக்கழகம் சென்று படிப்பது என்றால் ரூபா 150 செலவாகும். அந்தளவுக்குச் செலவுகள் செய்து படிக்கக் கூடியளவுக்கு குடும்பத்தில் பண வசதிகள் இருக்கவில்லை. அவர் வீட்டில் பொருளாதார நெருக்கடி இருந்தது. ஆதலால் அவர் படிப்பினை இடை நிறுத்திவிட்டு 1962-களில் கொழும்பு சென்று மருதானை ரெம்பில் வீதியிலுள்ள விடுதியில் தங்கியிருந்தார். டோனட்ல்ஸ் ஸ்ரூடியோவுக்குப் பக்கத்தில் ஊடகவியலாளர் யூனூஸ் என்பவர் இருந்தார். அவர் சன் நியூஸ் இதழியலின் விளையாட்டுத் துறை ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

லத்தீப் பாருக் அவரிடம் சென்று 'தனக்கு ஏதாவது தொழில் பெற்றுத் தர முடியுமா' என்று கேட்டார். அதற்கு அவர் 'நாளை காலை 10.00 மணியளவில் தனது அலுவலகத்திற்கு வரும்படி' கூறினார். அந்த வகையில் லத்தீப் பாருக் அங்கு உரிய நேரத்துக்குச் சென்றார். யூனூஸ் அவர்கள் அவரை அழைத்துச் சென்று சன் பத்திரிகையின் முகாமைத்துவ பீட ஆசிரியர் தனபால் என்பவரை அறிமுகம் செய்து வைத்தார். அவர் சன், தவச, தினபதி, சிந்தமாணி போன்ற பத்திரிகைகளின் வெளியீட்டு நிறுவனத்தின் முகாமையாளர் ஆவார். அங்கு உடனே லத்தீப் பாரூக் அவர்களுக்கு நேர்கமுகப் பரீட்சையொன்றை வைத்தார்கள். அதில் லத்தீப் பாருக் தெரிவு செய்வு செய்யப்பட்டார். முதலில் சுதந்திர ஊடகவியலாளராக இயங்கும்படியும் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதாகவும் உறுதியளித்தார்கள். அக்காலத்தில் 10 வரிகளுக்கு ஒரு செய்தி எழுதினால் 40 சதம் வழங்குவார்கள். அவர் ஆங்கில மொழியில் எழுதுகின்ற செய்திகள் அதே தினம் தமிழில் மொழிபெயர்த்து தினபதி பத்திரிகையிலும் வெளிவரும். அதில் வெளிவரும் செய்திகள் யாவற்றிற்கும் பணம் வழங்குவார்கள். இப்படி ஒவ்வொரு நாளும் எழுதும் செய்திகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் இருபது சதம் அளவில் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் 1966-1969 காலம் வரையிலும் மிகுந்த கஷ்டத்துடன் அங்கு ஊடகவியலாளராகப் பணியாற்றினார்.

சன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கலாநிதி காமினி விஜயவர்தன, லத்தீப் பாருக், ராஜா அரியரட்ணம், யோகா பாலச்சந்திரன் போன்றவர்களுடன் 'சன்' ஆங்கிலப் பத்திரிகையில் கடமையாற்றினார். அப்போது தினபதி, சிந்தாமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக எஸ்.டி. சிவநாயகம் அவர் கள் இருந்தார். 'மனிதர்களுள் மாணிக்கம்' என்ற பத்தியை அப்போது எழுதினார்.

கொழும்பு காலி வீதியில் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுடைய

மாமனாரின் ‘காணிவெல் ஐஸ் கிரீம்’ அருகில் உள்ள வீடொன்றிலேயே அவர் தங்கி இருந் தார். அதற்கு முன்னால்த்தான் டொக்டர் எம்.சி. கலீல் இருந்தார். அப் பொழுது அவருடைய அறிமுகம் லத்தீப் பாரூக் அவர் களுக்கு கிடைத்தது. நல்ல குணம் படைத்த அவர், அறுவை சிகிச்சை செய்து கடற்கரைப் பக்கம் இருந்த அவர் வீட்டில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். அச்சமயம் எம்.சி. கலீல் அவர்களைச் சந்தித்த லத்தீப் பாரூக் அவர் களின் பொருளாதார நிலைமையினை கவனத்திற் கொண்டு டாக்டர் எம்.சி. கலீல் அவர்கள் தான் சுகயீனமுற்ற நிலையில் இருந்தாலும்கூட அவர் தன்னை சுதாகரித்துக் கொண்டு லத்தீப் பாரூக்கின் விடயமாக லேக் ஹவுஸ்க்குச் சென்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் மாமாவான ரஞ்சித் விஜயவர்தன அவர்களை நேரடி யாகச் சந்தித்து கதைத்தார். அதற்கு அவர் லத்தீப் பாரூக் அவர்களை இணைத்துக் கொள்வதாக உறுதியளித்தார்.

> “மக்கள் விடுதலை முன்னணியினர் என்பவர்கள் யார்?. எப்படித் தோற்றம் பெற்றது? அவர்களுடைய இலக்கு என்ன? என்பது பற்றி விரிவான கட்டுரை ஒன்றை ‘சன்டே ஒப்சவர்’ பத்திகையில் எழுதினார். அதன் பின்னரே பி.பி.சி. போன்ற பல சர்வதேச ஊடக நிறுவனங்கள், வெளி நாட்டுப் பத்திரிகையா ளர்கள் என முழு ஊடக நிறுவனங்களும் லத்தீப் பாரூக் அவர்களை ஒரு கணம் திரும்பி பார்க்கச் செய்தன”

அதேவேளையில் முன்னாள் அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் அவர்களும் லத்தீப் பாரூக் அவர்களுடன் மிக நெருக்கமான உறவு இருந்தது. அவர் டெய்லி நியூஸ் பிரதம ஆசிரியர் ஏர்னஸ்ட் கொரியாவுடன் கதைத்தார். அதன் பின்பு 1971-களில் லத்தீப் பாரூக் அவர்க ளுக்கு ஆசிரியர் பீடத்தில் நியமனம் வழங்கப்பட்டது.

லேக் ஹவுஸ் டெய்லி நியூஸ் பத்திரிகை நிறுவனத்தின் குழு மத்தில் இணைந்து லத்தீப் பாரூக் அவர்கள் தன் கடமை களைத் திறன்படச் செய்ய டெய்லி நியூஸ் பிரதம ஆசிரியர் ஏர்னஸ்ட் கொரியா, லத்தீப் பாரூக் அவர்களுக்கு முழு ஆதரவு வழங்கினார். அன்று முதல் பத்திரிகையின் வளர்ச் சிக்காக லத்தீப் பாரூக் இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்தார்.

ஆசிரியர் ஏர்னஸ்ட் கொரியா அவர்கள் லேக் ஹவுஸில், டெய்லி நியூஸின் ஆசிரியராகவும் (1966-1970) பின்னர் 1960-கள் மற்றும் 70-களில் மிகவும் செல்வாக்கு மிக்க நாளிதழான சிலோன் ஒப்சர்வரின் ஆசிரியராகவும் (1970-71) பணியாற் றினார். மேலும் அவர் லேக் ஹவுஸை விட்டு வெளியேறிய பிறகு, சிங்கப்பூரில் உள்ள ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸில் ஆசிரிய ராகவும் வெளியுறவுக் கட்டுரையாளராகவும் இருந்தார். ஏனர்ஸட் ஆங்கில மொழியில் அபாரமான புலமை கொண்டவர். சொற்பொழிவாளரும் கூட. எர்னஸ்ட் ஃபாஸ்ட், அமெரிக்க அதிகாரிகளிடம் அவர்களின் சொந்த நடையில் பேசும் ஆற்றல் பெற்றவர். அவரது அசாத்தியமான திறனால், வாஷிங்டனின் உள் வட்டத்தில் ஏ-பிளஸ் மதிப்பெண் பெற்று, பத்திரிகைப் பணியில் தனது முழுமையான தொழில்முறைத் திறமைக்காக நற்பெயரைப் பெற்றார் என்றும் கூறுவார்கள். அவருடைய நிர்வாகத்தின் லத்தீக் பாரூக் கடமையாற்றினார். அப்போது தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகச் சிவகுருநாதன் அவர்கள் இருந்தார்கள்.

அப்பொழுது சிறீலங்கா சுதந்திரக் கட்சி எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் தலைமையில் ஆட்சி பீடம் ஏறியது. ஒரு வருடத்தின் பின் மக்கள் விடுதலை முன்ன ணியின் கிளர்ச்சி ஏற்பட்டது. நாட்டு மக்க ளிடையே மக்கள் விடுதலை முன்னணி என்று கூறப்படுகின்றவர்கள் யார் எவரென்று தெரியாது. அவர்களை மக்கள் தேடவும் ஆராயவும் தொடங்கினார்கள். மக்கள் விடுதலை முன்னணி என்று சொன்னால் பெரும் பயம். பொலிஸார் அவர்களைக் கைது செய்து விடுவார்கள். அவர்கள் பற்றி வாய் திறக்க முடியாது. பிடித்துச் சென்று கொலை செய்து விடுவார்கள். அப்பொழுது லத்தீப் பாரூக் அவர்கள் பௌத்த மதகுரு ஒருவரைச் சந்தித்தார். அவர் ஒரு மக்கள் விடுதலை முன்னணியின் அதி தீவிர ஆதர வாளர்.

முன்னாள் மின்வலு சக்தி அமைச்சர் காஞ்சனா விஜேசேகர அவர்களுடைய தந்தையான மஹிந்த விஜேசேகர அவர்கள் மக்கள் விடுதலை முன்னணியின் முக்கியஸ் தர்களுள் ஒருவராக அப்பொழுது இருந்தார். அவரைப் பௌத்த மத குரு ஒருவரின் ஆதர வுடன் வனாத்தமுல்ல என்ற இடத்தில் உள்ள ஒரு பழைமைவாய்ந்த கல்யாண மண்டபத்தில் லத்தீப் பாரூக் சந்தித்தார். லத்தீப் பாரூக் அவர்களுக்கு, மஹிந்த விஜேசேகர அவர்களுடன் செவ்வியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்ட போதிலும் அவருடன் சேர்ந்து எந்தப் புகைப்படமும் எடுக்க அனுமதி வழங்கப்படவில்லை. லத்தீப் பாரூக் அவர்களுடைய கேள்விகளுக்கு மஹிந்த விஜேசேகர விடையளித்தார். மக்கள் விடுதலை முன்னணியினர் என்ப வர்கள் யார்?. எப்படித் தோற்றம் பெற்றது? அவர்களுடைய இலக்கு என்ன? என்பது பற்றி விரிவான கட்டுரை ஒன்றை ‘சன்டேஒப்சவர்’ பத்திகையில் எழுதினார். இந்தச் செய்திதான் லத்தீப் பாரூக் அவர்களை உச்ச நிலை ஊடகவியவாளராக உயர்த்தியது. பின்னர் அவர் இந்த தகவலை எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்பதை உலகமும் ஊடகம் நிறுவனங் களும் தேடியது. பி.பி.சி. போன்ற பல சர்வதேச ஊடக நிறு வனங்கள், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் என முழு ஊடக நிறுவனங்களும் லத்தீப் பாரூக் அவர்களை ஒரு கணம் திரும்பி பார்க்கச் செய்தன. இதே செய்தியை இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளில் வெளிவரும் புகழ்பெற்ற தேசியப் பத்திரிகைகள் லத்தீப் பாரூக் அவர்களின் பெய ரோடு இணைத்து மீளப் பிரசுரித்தன. இதனால் அவருக்கு எண்ணிலடங்கா செல்வாக்குகள் குவிந்தன.

அப்பொழுது டெய்லி நியூஸ் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஏர்னஸ்ட் கொரியா மலேசியாவுக்குச் சென்றுவிட்டார். லத்தீப் பாரூக் சன்டே ஒப்சவர் பத்திரிகைக்கு இடமாற்றம் செய்யப் பட்டார். அக்காலத்தில் ஹட்டன் நேஷனல் வங்கி ஹெரி ஜய வர்தன, லத்தீப் பாரூக் ஆகிய இருவர்களுக்குமிடையே மிக நெருக்கமான நட்புறவு நிலவியது. ஹெரி ஜயவர்ன அப் பொழுது தேயிலை ஏற்றுமதியின் உதவி முகாமையாளராகப் பணி புரிந்தார். இருவரும் அடிக்கடி சந்திப்பது வழக்கமாக இருந்தது. ஒரு நாள் ஹெரி ஜயவர்ன அவர்கள் ‘இலங்கையி லுள்ள நல்ல தேயிலையை இந்தியா நிறுவனங்கள் கொள்வனவு செய்து, அதனைத் தரமாற்றதாக மாற்றி ஈராக்

நாட்டுக்கு விற்பனை செய்கிறார்கள்' என்று லத்தீக் பாரூக் அவர்களிடம் தெரிவித்தார். அந்தச் செய்தியை லத்தீக் பாரூக் அவர்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்தார். இவ்வாறு அவர் வெளியிடும் ஒவ்வொரு செய்திகளும் எரிமலையாகப் பொங்கிக் கொப்பளித்துப் பூரித்து நிற்கக்கூடியவையாக இருந்தன.




அவருக்கு ரூபா 200 சம்பளம் ஆகும். அப்பொழுது அது ஒரு பெரிய சம்பளம். அந்தச் செய்தி வந்தவுடன் ஈராக் உயர்ஸ்தானிகராலயத்தில் இருந்து லத்தீப் பாரூக் அவர்களுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. ஈராக் உயர் ஸ்தானிகர் லத்தீப் பாரூக் அவர்களுடன் பேச வேண்டும் என்று பெண்மணி ஒருவர் அழைப்பு விடுத்தார். அதற்கு லத்தீப் பாரூக் அவர்கள் 'உயர் ஸ்தானிகராலயமே இங்கே இல்லை. எங்கு இருந்து பேசுகிறீர்கள் ?' என்று கேள்வியினைத் தொடுத்தார். அதற்கு அந்தப் பெண்மணி 'இலங்கையின் ஈராக் உயர் ஸ்தானிகராலயத்தின் அலுவலகம் இன்டர்கொண்டனல் ஹோட்டலில் தான் இருக்கிறது' என்று பதிலளித்தார். லேக் ஹவுஸுக்கு அருகாமையில்தான் இன்டர்கொண்டனல் ஹோட்டலும் இருந்தது. அந்த இடத்திற்கு லத்தீப் பாரூக் அவர்கள் நடந்து சென்று சந்தித்தார்.




அப்பொழுது உயர்ஸ்தானிகர் 'பத்திரிகையில் வெளிந்த செய்தி பிழையானது. அவர்கள் தரமற்ற தேயிலையை விற்பனை செய்யவில்லை' என்று கூறி தெளிவுபடுத்தியுள்ளார். லத்தீப் பாரூக் அவர்கள் அவருடைய உரையை செவிமடுத்து தூதுவருடைய மறுப்புக் கருத்தை பெற்றுக் கொண்டு வந்து அதனைப் 'புதிதாக வந்துள்ள ஈராக் உயர் ஸ்தானிகர் அந்தச் செய்தி பிழையென்று குறிப்பிட்டுள்ளார்' என்று கூறிப் புகைப்படத்துடன் பத்திரிகையில் பிரசுரம் செய்தார்.




அதன் பின்பு தூதுவருக்கு மிக்க மகிழ்ச்சி. தூதுவர் அவரை உயர்ஸ்தானிகராலயத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்திருந்தார். அதனை ஏற்று அங்கு சென்ற லத்தீப் பாரூக் அவர்களுக்கு தூதுவர் நன்றி தெரிவித்தார். அவர் அப்பொழுது திரும்பிச் செல்லும் போது பத்திரிகைகள் சிலவற்றை அவர் கையில் தூதுவர் கொடுத்தார். அவை எல்லாம் பத்தாத் நியூஸ் பத்திரிகைகள் ஆகும். அதில் ஈராக் நியூஸ் ஏஜன்ஸி பற்றி பெரியதொரு கட்டுரை இருந்தது. அதனை முழுமையாக வாசித்து விட்டு மறுநாள் தொலைபேசியில் அது பற்றி தூதுவருடன் பேசினார். அவரைத் தூதுவர் மீண்டும் வரச் சொன்னார்.







லத்தீப் பாரூக் அவர்கள் அங்கு சென்று தூதுவருடன் உரையாடிவிட்டு இலங்கை ஈராக் நியூஸ் ஏஜன்ஸியின் செய்தியாளராகக் கடமையாற்றுவதற்கான விண்ணப்பத்தையும் நிரப்பிக் கொடுத்தார்.

வெளிநாட்டு ஊடகத்துறையில் செய்தியாளராக நியமனம் எப்போது வரும் வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த லத்தீப் பாரூக் அவர்களுக்கு ஒன்றரை மாதத்திற்கு பிறகு ஈராக் தூதுவரின் அழைப்பு வந்தது. அங்கு சென்ற லத்தீப் பாரூக் அவர்களுக்கு ஈராக்கின் நியூஸ் ஏஜன்ஸின் இலங்கைக்கான செய்தியாளராக நியனம் வழங்கப்பட்டது. என்ற தகவலைத் தெரிவித்த தூதுவர் தனது மகிழ்ச்சிகரமான நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார். லத்தீப் பாரூக் அவர்கள் லேக் ஹவுஸில் கடமையாற்றிக் கொண்டு 1971-இல் இருந்து ஈராக் நியூஸ் ஏஜன்ஸிக்கும் செய்திகளை அனுப்ப ஆரம்பித்தார்.

அப்பொழுது ஈராக் நியூஸ் ஏஜன்ஸினியின் மாதாந்தம் சம்பளம் ரூபா 1,800 என்று குறிப்பிடப்பட்டது. அதேவேளை லேக் ஹவுஸில் உயர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் பெறும் சம்பளம் ரூபா 350 ஆகும். லேக் ஹவுஸின் பிரதம ஆசிரியரின் சம்பளம் ரூபா 850 ஆகும். அரபுலக மத்திய நாடுகளை பற்றி அறிந்து கொள்வதற்காக நிறையப் புத்தகங்கள் வாசித்து, மத்திய கிழக்கு நாடுகள் பற்றிய அறிவுப் புலமையை நன்கு வளர்த்துக் கொண்டார். பின்னர் எழுதத் தொடங்கினார்.

தொடர்ச்சியாக இருவருடங்கள் ஈராக் நியூ ஏஜன்ஸிக்கு செய்திகள் அனுப்பி வந்தார். இரண்டு வருடங்களுக்கு பிறகு அந்நாட்டுக்கு வரும்படி அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்நாட்டுக்குச் சென்று பல இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு நாடு திரும்பினார். லேக் ஹவுஸில் பணியாற்றியமையால் பாராளுமன்ற செய்தி சேகரிப்புக்கும் செல்வார். அதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் எல்லாத் தரப்பினர்களுடைய அறிமுகங்களும் அவருக்கு தானாகவே கிடைத்தன எனலாம்.

பிரதம ஆசிரியர் ஏர்னஸ்ட் கொரியா அவருடன் மிகுந்த அன்பு வைத்திருந்தார். அவர் லத்தீப் பாரூக் அவர்களை அரசியல் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படப் போகிறது. அவை தொடர்பான தகவல்களை சேகரித்து எழுதும்படி கேட்டுக்கொண்டார். அக்கால அரசிலமைப்புத் துறையின் அமைச்சர் கொல்வின் ஆர்.டி சில்வா வாகும். ஆனாலும் லத்தீப் பாரூக் அவர்களுக்கு அத்துறையில் சிறந்த அனுபவ முதிர்ச்சி போதாது. எனினும் பத்துக் கேள்வி

களைக் தயார் படுத்திக்கொண்டு சென்று அமைச்சரிடம் கேள்விகளைக் கேட்குமாறு ஆசிரியர் அவரைப் பணித்திருந்தார்.

அந்தக் கேள்வியில் இன ஒருமைப்பாடு சகவாழ்வுதான் என்று மேடைகளில் நன்றா கப் பேசுகின்றோம். இது இவ்வாறிருக்க இலங்கை பௌத்த நாடு எனவும், சிங்கள மொழி தேசிய மொழி எனவும் அரசியல் அமைப்பில் கொண்டு வந்தால் நாட்டில் பெரிய பிரச்சினைகள் எழலாம். அதே போன்று சிறுபான்மையினத்தவர்கள் இரண்டாம் நிலையைச் சார்ந்தவர்கள் என்ற கருத்து முரண்பாடுகள் எழுவதற்கான வாய்ப்பு களும் உள்ளன என்று அமைச்சரிடம் லத்தீப் பாரூக் அவர்கள் கேள்வி கேட்டதோடு நில்லாது, அதனை விளக்கவும் செய்தார். அதன் போது அமைச்சர் அவர்கள் ‘தனது தலையிலே ஆணி ஒன்றை எடுத்து அடித்த மாதிரியான கேள்வி யினை அல்லவா கேட்டீர்கள்! ஆனாலும், அது உண்மையிலேயே பிரச்சினைக்குரிய விட யம்தான்’ என்று அமைச்சர் பதிலளித்தார். அவர் அவ்வாறு ஒத்துக்கொண்ட கருத்தை லத்தீப் பாரூக் அவர்கள் பத்திரிகையில் எழுதினார். அந்தச் செய்தி இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகள் முழுவதும் பர பரப்பாகப் பேசப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மறு வாரம் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களுடன் நேர்காணல் ஒன்றைச் செய்யுமாறு பிரதமர் ஆசிரியர் ஏர்னஸ்ட் கொரியா அவர்கள் லத்தீப் பாரூக் அவர்களுக்கு பணிப்புரை விடுத்தார். அதுவும் ஒரு பெரிய தலைப்புச் செய்தியாக மாறியது. இப்படி, பெரும் பெரும் அரசியல் தலைமைகளைப் பேட்டி கண்டு பத்திரிகையில் பிரசுரம் செய்தார்.

லத்தீக் பாரூக் அவர்களின் நண்பர் ஒருவர் லிபியா தூதுவராலயத்தில் கடமையாற்றினார்.அவர் பெயர் அப்துல் சலாம் மிலாதி. அவர் லத்தீப் பாரூக் அவர்களைச் சந்தித்தபோது ‘ஊடவியலாளர்க ளுக்கு லிபியா நாட்டுக்குச் சுற்றுலா செல்வ தற்கான விசாக்கள் வந்துள்ளன. சகல பயணச் செலவுகளும் இலவசம்’ என்று தெரி வித்தார்.

அதற்கு இணங்க அந்தப் பயணம் லத்தீக் பாரூக் அவர்களுக்கு கைகூடியது. இலங் கையில் இருந்து லிபியாவுக்குச் சென்று பின்னர் லண்டன் செல்ல வேண்டும் என்று இருந்தது. லத்தீப் பாரூக் அவர்கள் அங்கு சென்று வெளிநாட்டு அமைச்சர் அவர்க ளுடன் சந்தித்து உரையாடியவர். லிபியாத் தலைவர் கடாபி அவர்களை சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன் வைத்தார். அதற்கு ஏற்ப அந்நாட்டின் நேரப்படி மறுநாள் மாலை 4.00 மணி அளவில் நாட்டின் தலைவர் கடாபி அவர்களை சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. அவருக்கு கிடைத்த அந்தச் சந்திப்பின் மூலம் பத்திரிகைக்கு நேர்கா ணலைச் செய்தார். அந்த நேர்காணலை ஆங்கில மொழியில் செய்வதற்கு லத்தீப் பாரூக் எதிர் பார்த்தார். ஆனால் கடாபி அரபு மொழியில் வழங்குவதற்கே விரும்பினார். அந்த வகையில் அரபு மொழியில் நேர்காணல் இடம் பெற்றது. அவ்வாறு அரபு மொழியில் இடம்பெற்றதால் லத்தீப் பாரூக் அவர்க ளுக்கு இடையில் கேள்விகளைத் தயார் செய்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற் பட்டது. அப்பொழுதுதான் லிபியா நாட்டில் எரிபொருள் உற்பத்தி ஆரம்பிக் கப்பட்ட காலம் எனலாம். அப்பொழுது கடாபி அவர்கள் லத்தீப் பாரூக் அவர் களைப் பார்த்து ‘தான் சந்தித்த முத லாவது ஆசியா நாட்டு ஊடகவியாலளர் லத்தீப் பாரூக்தான்’ என்ற கருத்தைத் தெரிவித்து, தன் நேர்காணலை வழங் கினார். இது லத்தீப் பாரூக் அவர்க ளுக்கு ஒரு மகத்தான சந்திப்பாக அமைந்தது.
















லத்தீப் பாரூக் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆகி யோர்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களுடைய அரசியல் நடவடிக்கைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியவர். இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் இலங்கை பலஸ்தீன் நட்புறவு ஒன் றியத்தை உருவாக்குவதற்கு பிற்புலமாக இருந்து செயற்பட்டவர். இப்படி நீண்டதொரு வர லாற்றைக்கொண்டவராக இவர் காணப்ப டுகின்றார்.

அதேபோன்று 1979-இல் நடைபெற்ற இந்தியத் தேர்தலின் போது இந்திரா காந்தி அவர்களுடைய தேர்தல் பிரச்சா ரங்களை வெளியுலகிற்கு கொண்டு வந்த ஒரு சிறந்த ஊடகவியலாளரும்கூட. டுபாய் நாட்டின் கலதாரி ஹோட்டலின் உரிமை யாளர் அப்துர் ரஹ்மான் அவர்கள் 1979-இல் டிசம்பரில் இந்தியாவில் தேர்தல் நடக்கிறது. இந்திரா காந்தி போட்டியிடுகின்றார். அவர் எங்கு தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்கின்றாரோ அங்கே சென்று அவருடைய செய்திகளைச் சேகரிக்க வேண்டும் என்று லத்தீப் பாரூக் அவர்களை அழைத்து வேண்டிக் கொண்டார். அந்த வகையில் லத்தீப் பாரூக் அவர்கள் இந்தியா சென்றார். இந்திரா காந்தி செல்லும் கூட் டங்கள் அனைத்திற்கும் அவர் சென்றார். இந்திரா காந்தியின் ஊடகச் செயலாளர் லத்தீப் பாரூக் அவர்களுக்கு கூட்டங்கள் நடைபெறும் நிகழ்ச்சி நிரல்களை வழங்கி உதவிகள் செய்தார்.

ஹைதராபத்தில் வைத்து லத்தீப் பாருக் அவர்களைப் பார்த்த இந்திரா காந்தி அவர்கள், 'நீங்கள் யார்?' என்று கேட்டார். கல்ஃப் நாளிதழின் உரிமையாளர் அப்துர் ரஹ்மான் அவர்கள் தங்களுடைய தேர்தல் பிரச்சாரச் செய்திகளைச் சேகரிக்கும்படி கூறியுள்ளார் என்றார் இவர். நீங்கள் யார் என்று, உங்களைப் பார்த்து இந்திரா காந்தி கேட்பார் என்பதை, லத்தீப் பாருக் அவர்களிடம் அப்துர் ரஹ்மான் முன்னரே தெரிவித்திருந்தார். அது அப்போது உண்மையாகி இருந்தது.

ஏழு வாரங்கள் இந்திரா காந்தியுடன் பயணம் செய்தார் லத்தீப் பாருக். இறுதி நாட்கள் அவர் கேரளாவில் கோவளம் பீச் ஹோட்டலில் தங்கியிருந்தார். அன்றுதான் தேர்தல் முடிவு வெளியிடப்பட்டது. இந்திரா காந்தி வெற்றிபெற்று விட்டார். அவர் வெற்றிபெற்றவுடன் முதல் ஊடகச் சந்திப்பு கேரளாவில் நடைபெற்றது. அந்த ஊடகச் சந்திப்புக்கு லத்தீப் பாருக் அவர்களும் கலந்து கொண்டார். அந்த இடத்தில் 'பத்திரிகைளில் உங்களைப் பற்றிய விமர்சனங்கள் வெளிவந்தன. அவைகளுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?' என்று அவர் கேட்டார். அதற்கு இந்திரா காந்தி அவர்கள் 'யார் யாரெல்லாம் விமர்சனம் செய்தார்களோ அதற்கு எதிராக நாங்கள் நடவடிக்கைகள் எடுக்கப் போவதில்லை' என்று இந்திரா காந்தி தெரிவித்தார். இப்படி ஊடகத் துறைக்கான கண்ணியத்தைப் பேணிச் சீர்மையான நோக்குடன் செயலாற்றி வந்தமையால் அவருக்குப் பெயரும் புகழும் உலகமெங்கும் தானாகவே தேடி வந்தது.

இவை தவிர இவர் ஊடக வாழ்க்கைப் பயணம் என்ற பெயரில் ஆங்கிலத்தில் பெரியதொரு சுயசரிதை நூலையும் எழுதியுள்ளார். ஆங்கில மொழியில் எல்லாமாக மொத்தம் அவரது 11 நூல்கள் வெளிவந்துள்ளன. இவர் எழுதிய நூல்களில்...

**War on Terrorism–The Untold Truths** - 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்-சொல்லப்படாத உண்மைகள்' என்ற புத்தகம், அமெரிக்க-ஐரோப்பிய மற்றும் இஸ்ரேலிய படையெடுப்புகளையும் அந்நாடுகள் முஸ்லிம் நாடுகளை அழிப்பதையும் வெளிப்படுத்தி இருந்தது. இந்நாடுகள் தங்களின் செய்கைகளை நியாயப்படுத்த பயங்கரவாதத்தை இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுடன் தொடர்புபடுத்தும் சதித்திட்டத்தை விரிவாகவே கையாள்கிறது என்பதையும் அந்நூலில் வெளிப்படுத்தி இருந்தார்.

பிரபல பிரிட்டிஷ் நாடக ஆசிரியர் நோபல் பரிசு பெற்ற ஹரோல்ட் பின்டரின் கருத்துக்களைக் கொண்ட இந்த புத்தகத்திற்கு மலேசியா பிரதமர் டாக்டர் மஹதிர் முஹம்மத் முன்னுரை எழுதியுள்ளார். இந்நூலின் வெளியீட்டு விழா மலேசியாவில் இடம்பெற்றது. உலகில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து வெளியிடப்படும் ஒரு முதல் நூலாக இதனைக் கருதுவதாக மஹதீர் முஹம்மத் அவர்கள் குறிப்பிட்டிருந்ததும் இங்கு நினைவுகூருத்தக்கது.

**Nobody's People–The Forgotten Plight of Sri Lankan Muslims** - யாருமற்ற மக்கள் - இலங்கை முஸ்லிம்களின் மறக்கப்பட்ட அவலநிலை' என்ற தலைப்பில் எழுதப்பட்ட நூல் இலங்கை அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இனப் போரினால் இலங்கை முஸ்லிம்கள் அனுபவித்த துன்பங்களை எடுத்துக்காட்டுகிறது.

**America's New World Order–EXPORTING WARS** - அமெரிக்காவின் புதிய உலக ஒழுங்கு-ஏற்றுமதிப் போர்கள்' என்ற நூல் இஸ்ரேலிய ஆதரவு பெற்ற அமெரிக்கா தலைமையிலான பிரிட்டிஷ், ஐரோப்பிய நாடுகள் மற்றும் ரஷ்யப் படையெடுப்புகள் முதலானவற்றால் முஸ்லிம்மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் 1991இல் முன்னாள் சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்ததிலிருந்து இற்றைவரை முஸ்லிம் நாடுகளின் அழிவுகள், மில்லியன் கணக்கான முஸ்லிம்களின் திட்டமிட்ட படுகொலைகள் ஆகியவற்றை ஆழமாகப் பேசுகிறது.

பாலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலின் முடிவில்லாத அட்டூழியங்கள், ஆப்கானிஸ்தான், போஸ்னியா, கொசோவோ, செச்சினியா, ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா மற்றும் சிரியாவில் ஏமன் வரை மேற்கொளப்பட்ட போர்கள் மற்றும் முஸ்லிம் நாடுகளில் செய்யப்பட்ட இனப்படுகொலைகள் முதலானவற்றை இந்தப் புத்தகம் ஆவணப்படுத்துகிறது.

உலகளவில் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்டு நடந்து வரும் இஸ்லாமிய வெறுப்பு பிரச்சாரத்தையும் இந் நூல் வெளிப்படுத்தி நிற்கிறது. இந்த புத்தகத்தில் நோபல் பரிசு பெற்ற தவக்குல் கர்மான், அமெரிக்காவின் மறைந்த ஜனாதிபதி ரொனால்ட் ரீகனின் முன்னாள் உதவி செயலாளராக இருந்த அமெரிக்க பிரபல பத்திரிகையாளர் போல் கிரெய்க் ரொபர்ட்ஸ், சிகாகோவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஸ்டீபன் லென்ட்மென், முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேரின் சர்வதேச மேம்பாட்டுக்கான வெளியுறவுத்துறை செயலாளர் கிளேர் ஷார்ட், மலேசிய அறிவுஜீவி டாக்டர் சந்திரா முசாபர் மற்றும் இந்திய எழுத்தாளர் ராம் புன்யானி ஆகியோரின் கருத்துகளும் உள்ளன.

**Muslims under Siege** - முற்றுகையிடப்பட்ட முஸ்லிம்கள்' என்ற நூல் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இலங்கைத் தீவின் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களைக் கூறுகிறது. 2015-இல் ஜூன் மாதம் இலங்கையின் மேற்கு கடற்கரையில் உள்ள அளுத்கம, தர்கா டவுன் மற்றும் பேருவளை ஆகிய இடங்களில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களைப் பற்றியும் ஊரடங்கு உத்தரவின் போது ஏற்பட்ட வன்முறை குறித்தும் இந்நூலில் பேசப்படுகிறது.

**India lost Kashmir** - இந்தியா காஷ்மீரை இழந்தது' என்ற நூல் 1947-ஆம் ஆண்டு துணைக்கண்டம் பிரிக்கப்பட்டதிலிருந்து காஷ்மீர் முஸ்லிம்களின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்க இந்திய அரசு எடுத்த முக்கிய தீர்மானங்கள், ஆக்கிரமிப்புகள் மற்றும் இந்திய ஆயுதப் படைகள் அப்பாவி முஸ்லிம்கள் மீது மேற்கொண்ட வன்முறைகள் குறித்த கட்டுரைகளின் தொகுப்பாகும்.

**Genocide of Rohingya Muslims** - 'ரோஹிங்கியா முஸ்லிம்களின் இனப்படுகொலை'. வளமான மற்றும் வளம் நிறைந்த ராக்கைன் பகுதியில் மியான்மர் அரசாங்கம் முஸ்லிம்களை இனப்படுகொலை செய்தது குறித்து உலகம் முழுவதிலுமிருந்து எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 'ரோஹிங்கியா முஸ்லிம்களின் இனப்படுகொலை' என்ற தலைப்பில் நூல் ஒன்றினையும் வெளிக் கொண்டு வந்திருந்தார்.

**Hope shattered** - மைத்ரி-ரணில் கூட்டணியின் வாக்குறுதிகள் மற்றும் தோல்விகளை உள்ளடக்கி வெளிவந்த நூலே 'Hope shattered'. அன்றைய அரசாங்கத்தின் கீழ் இலங்கைத்தீவின் முஸ்லிம்களுக்கு எதிரான முறையில் மேற்கொள்ப்பட்ட தேவையற்ற மற்றும் வெட்கக்கேடான இனவெறி வன்முறைகள் குறித்தும் இந்நூல் பேசுகிறது.

**Playing with Fire** - நெருப்புடன் விளையாடுதல் - முஸ்லிம்களின் கட்டாய இறுதிச் சடங்கு கொரோனா மரணம் என்ற நூல் 2021-இல் பெப்ரவரியில் வெளியிடப்பட்டது

**No tears for Palestine** - 'பாலஸ்தீனத்திற்காக கண்ணீர் இல்லை' என்ற நூல் 2025-ஜுனில் வெளியிடப்பட்டது.

இவற்றைவிட Mayhem during Curfew, Foreign Presence in Sri Lanka ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன.

## மதிப்பளிப்பு:

2015-இல் இலங்கை பத்திரிகை நிறுவனம் அவருக்கு பத்திரிகைக்கான மதிப்புமிக்க வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கியது. 1976-ஆம் ஆண்டில், சிலோன் டெய்லி நியூஸ் அவரை ஐக்கிய நாடுகள் சபையின் மூன்றாம் உலக பத்திரிகையாளர்களுக்கான டாக் புலமைப் பரிசில் உதவித்தொகைக்கு பரிந்துரைத்தது. இலங்கையில் அரபுலக அரசியல் கலாசாரத்தையும் அவர்களுடைய பண்புகளையும் மனிதாபிமானச் செயற்பாடுகளையும் அறிமுகம் செய்தவர். அவை மாத்திரமல்ல பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களிடையே நட்புறவை நிலை நாட்டுவதில் முக்கிய பங்காற்றியவர்.

லத்தீப் பாரூக் என்ற ஒரு மூத்த ஊடகவியலாளனின் சுயவரலாற்றையும், அவர் கட்டமைத்துச் சென்ற ஊடக வரலாற்றையும், அவர் பங்கேற்ற ஊடகச் செய்தி சேகரிப்புகளையும், அவரது காட்டமான ஊடக அறிக்கைகளையும், உலகளாவிய ரீதியில் அரபுலக சூழலில் அவரது ஊடகப் பங்களிப்பின் மூலமான மாற்றத்தையும் அறிய இந்தக் கட்டுரை வழிசெய்யும் என்று நம்புகின்றேன்.

லத்தீப் பாரூக் அவர்களின் ஊடக வாழ்வியல், புதிய தலைமுறையினர்களுக்கு ஊடகக் கல்வி முறைமைக்குள் பாடமாக அமைய வேண்டும் என்பதற்கு இந்தச் சான்றுகள் தக்க முன்னுதாரணமாக அமைகிறது.

இவர் எழுதிய ஆங்கில மொழி நூல்கள், மனிதாபிமானமானது இன்னும் உயிரோடு இருக்கிறதா ? அல்லது செத்து விட்டதா ? என்பதைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு உதவும். அதேபோல், அவர் ஊடகவியலாளராகவும் நூலாசிரியராகவும் இருந்து எதிர்கால விரிவுநிலையினைத் தேடுவதற்கான தன் பணியினை ஊடகங்களின் வாயிலாகக் கச்சிதமாகச் செய்து காட்டியுள்ளார். அதை அப்படியே இன்னுமொரு வெளிச்சத்துக்கு நகர்த்திச் செல்வது ஊடகவியலாளர்களின், ஆய்வாளர்களின் கடமையாகும்.



Iqbal.ali@thaiveedu.com



# அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின்
## முதல் ஈழத்தமிழ் இசைப் பட்டதாரி
# தர்மபூபதி சிதம்பரநாதன்



**- வே. விவேகானந்தன்**

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில், வலிகாமம் வடக்குப் பிரிவில், வளம் கொண்ட செம்மண் பிரதேசத்தில், கலையும் கல்வியும், கூத்தும் நடனமும், இசையும் ஆன்மீகமும், ஒருங்கே கூடிக் குலாவும் கட்டுவனூரில், வாழ்ந்து வந்த முத்துவேலு பொன்னம்மா இணையருக்கு மகளாக, 1939-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21-ஆம் திகதி தர்ம பூபதி பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மயிலிட்டி தெற்கு, கட்டுவன் பாலர் ஞானோதய வித்தியாசாலையில் கற்றார். இடைநிலைக் கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், உயர் கல்வியை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் தொடர்ந்தார். பாடசாலைக் கல்வியைக் கற்கும்போதே, இயல்பாக அமைந்த இசை ஞானத்துடன் தேவார திருப்பதிகங்களைப் பாடும் திறன் கொண்டிருந்தார். இதனை அவதானித்த பெற்றோர், இவரை இசைத் துறையில் வழிப்படுத்தினர். குப்பிளான் செல்லத்துரையின் மாணவனாகிய V.T.V. சுப்பிரமணிய ஓதுவாரிடம் தேவாரப் பண்ணிசையை முறைப்படி கற்றார். மாவிட்டபுரம் மணி ஐயரிடம் வாய்ப்பாட்டு இசையையும், வயலின் வாத்திய இசைக் கருவியை மீட்டவும் பயின்றார். வட இலங்கை சங்கீத சபை நடத்திய இசைப் பரீட்சைகளிலும் பங்குபற்றி சித்தியடைந்தார்.

இசை ஞானத்துடன் இசைத் துறையின் அடிப்படை நுட்பங்களைக் கற்றுக்கொண்ட தர்மபூபதி, உயர் கல்வியைக் கற்பதற்காக 1957-ஆம் ஆண்டு தனது பதினெட்டாவது வயதில், தமிழ்நாடு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைப் பிரிவில் இணைந்து கொண்டார். அங்கு பிரபல இசை ஜாம்பவான்கள் எம்.எம். தண்டபாணி தேசிகர், கும்பகோணம் இராஜமாணிக்கம்பிள்ளை, துவாரம் வெங்கடசாமி நாயுடு, மைசூர் சௌடையா, எஸ். இராஜகோபால்பிள்ளை, மைலம் வஜ்ரவேல் முதலியார் ஆகியோரிடம் இசை நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவர் படிக்கும் காலத்தில் தாவரவியல் பேராசிரியர், கலாநிதி சிங் அவர்கள் இசை கேட்டுத் தாவரங்களும் வளரும் என்பதனை நிரூபிக்கும் வகையில், ஓர் ஆய்வினை மேற்கொண்டார். இந்த ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்ட இசைத்துறை மாணவர் குழுவில் தர்மபூபதியும் இடம்பெற்றிருந்தார். மாணவர்கள் பாட, இவர் வயலின் கருவியை மீட்டு பாடல்களை மெருகூட்டினார். பின்னர் இந்த ஆய்வு முயற்சி குறும்படமாக வெளிவந்து மேலும் பல ஆய்வு முயற்சிகளுக்கு கால்கோளாக அமைந்தது எனக் கூறப்படுகிறது.

பல்கலைக்கழகத்தில் இசைக் கல்வியோடு மட்டும் நின்றுவிடாமல், அங்கு நடைபெறும் கலை, இசை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு, சக மாணவ மாணவிகளினது நன் மதிப்பையும், பேராசிரியர்களின் பாராட்டுதல்களையும் பெற்றார். குறிப்பாக 1958-ஆம் ஆண்டு இராமாயணம் பாலகாண்டத்தில் இராமர் பாத்திரத்தை ஏற்று, சிறப்பாக நடித்து, தமிழறிஞர் ஆர்.பி. சேதுப்பிள்ளையின் பாராட்டைப் பெற்றார். அத்துடன், பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு மாணவர் ஒன்றியச் செயலாளரகாகப் பணி புரிந்து நிர்வாகத் திறனையும் வெளிப்படுத்தினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நான்கு ஆண்டுகள் கர்நாடக இசையைக் கற்று, 'சங்கீதபூஷணம்' என்னும் பட்டத்தினை, 1962-ஆம் ஆண்டு பெற்றார். இசைத்துறையில் மேலும் பாண்டித்தியம் பெறவேண்டும் என்ற ஆர்வத்தினாலும், பெற்றோரது தூண்டுதலினாலும், அப்போது L.P.K.R. இராமநாதன் செட்டியார் அவர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட, இசைப் பட்டதாரி (Bachelor of Music) பட்டப் படிப்பினையும் மேற்கொண்டு நிறைவு செய்தார். ஆங்கில மொழி மூலமான இப்பட்டப் படிப்பில், தமிழிசைக்கு அப்பால் பிற மொழிகளின் இசை நுணுக்கங்களையும் ஒப்பீட்டு அடிப்படையில் கற்றுத் தேர்ந்தார். இதன் மூலம் அப்பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய முதலாவது ஈழத்தமிழ் இசைப்பட்டதாரி என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டார்.

1963-ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய தர்மபூபதி, அதே ஊரைச் சேர்ந்தவரும், உறவினருமான கந்தையா மீனாட்சி இணையரின் மகன், வைத்தியர் சிதம்பரநாதனைக் கரம் பற்றி இல்லற வாழ்வை ஆரம்பித்தார். சிதம்பரநாதன் அவர்கள் மன்னாரில் வைத்தியராகப் பணிபுரிந்தபோது தர்மபூபதி அங்கு நடைபெற்ற இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள், இசை நாடகங்கள், நாட்டிய நாடகங்கள் என்பவற்றில் பங்குபற்றி சிறப்பித்தார். 1972-ஆம் ஆண்டு மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில், அரச நியமனம் பெற்று இசை ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். அத்துடன் சென். சேவியர் ஆண்கள் பாடசாலை, புனித கன்னியர் மடம் பெண்கள் பாடசாலை, அல். அசார் இஸ்லாமியக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் இசையைப் போதித்து வந்தார். 1974-ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குப் பிரவேசித்த அவர், அப்பயிற்சியின் நிறைவுக்குப் பின்னர், கண்டாவளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, ஏழாலை மகா வித்தியாலயம், தான் படித்த தெல்லிப்பளை யூனியன் கல்லுரி போன்ற பாடசாலைகளில் பணியாற்றினார்.

1987-ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இசை விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அங்கும் சிறந்தமுறையில் பணியாற்றி ஆசிரிய மாணவர்களினது அன்புக்குரியவராகவும் மதிப்பிற்குரியவராகவும் விளங்கினார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் வெளிவாரிப் பரீட்சைகளின் பரீட்சகராகவும் நீண்ட காலம் பணி புரிந்தார். ஈழத்து இசைக் கலைஞர்கள் வரிசையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பேசவும் எழுதவும் திறமை மிக்க ஒருசிலரில் இவரும் ஒருவர். எனவே ஆங்கில நூல்களையும் வாசித்து, குறிப்பெடுத்துத் தயார்ப்படுத்தி விரிவுரைகளை நடத்தும் வழக்கத்தினைக் கொண்டிருந்தார்.

எனினும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பல்கலைக்கழக மாணவர்களை விடப், பாடசாலை மாணவர்களுக்கு இசையைப் போதிக்கும் போதே அதிகம் மகிழ்ச்சி அடைந்ததாகப் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இசை ஆசிரியராக, விரிவுரையாளராகப் பணி புரிந்த தர்மபூபதி ஓய்வு பெறும் வயதுக்கு முன்னரே, 1997-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். அரச பதவியிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும், இசைப் பணியைத் தொடர்ந்தும் மேற்கொண்டார். தனது வீட்டில் இலவசமாக வயலின் இசையைக் கற்பித்து வந்தார். தானாகவே முன்வந்து தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய, 'துர்க்காபுரம்' இல்ல மாணவிகளுக்கு, துர்க்காதுரந்தரி, சிவதமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆசியுடன், 1982-ஆம் ஆண்டு முதல் 1995-ஆம் ஆண்டு வரை தொண்டாக இசையைப் போதித்து வந்தார். இவரிடம் படித்த மாணவிகள் சிலர் பின்னர் யாழ். பல்கலைக்கழக நுண்கலைக் கல்லூரியில் சேர்ந்து இசைப் பட்டதாரிகளாக வெளியேறினர்.

வட இலங்கை சங்கீத சபையின் பாடத்திட்டக் குழுவில் இணைந்து, பாடத்திட்டத்தை வகுத்தல், அனைத்துத் தரங்களுக்குமான வினாத்தாள்களைத் தொகுத்தல், ஒழுங்குபடுத்திக் கொடுத்தல், மேற்பார்வை செய்தல், ஆகிய பணிகளுடன் செயன்முறைப்பாடப் பரீட்சகராகவும் செயற்பட்டார்.

சிறுவர்களுக்கான பாடல்களைத் தான் இயற்றியும், இசையமைத்தும், பிறர் இயற்றிய சிறுவர் பாடல்களுக்கு இசையமைத்தும் மகிழ்ச்சி அடைந்தார். குறிப்பாக 'டக் டக் சத்தம் போடுமாம்', 'பட்டாம்பூச்சி பட்டாம்பூச்சி எங்கே போகிறாய்'? போன்ற பாடல்களை இயற்றி இசையமைத்தும், அழவள்ளியப்பாவின் 'சின்னச்சின்ன கன்றுக்குட்டி', 'தம்பி தம்பி சிறு தம்பி' போன்ற பாடல்களுக்கு இசையமைத்தும் அரும்பணியாற்றியுள்ளார். போர்க் காலத்தில் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களுடன் இணைந்து தமிழ் ஈழப் பாடல்களை மெருகூட்டித், தமிழ்த் தேசியக் கடமைகளிலும் தன்னை



இணைத்துக் கொண்டார்.

இசையோடு சைவசமயத்திலும் அளவிலாப் பற்றுக்கொண்ட தர்மபூபதி தெல்லிப்பளை துர்க்கையம்மன் மீது பாடிய ‘மாரி பொழியும் மாரியம்மா’, ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் மீது பாடிய ‘ஒட்டிசுட்டான் ஈஸ்வரனே நின்பட்டு மலர்ப்பாதம் பணிந்தேனே’ போன்ற பாடல்கள் பக்தர்களின் மனதைத் தொட்ட பாடல்களாகும். இத்தகைய இவரது பாடல்கள் பல போர்க்காலச் சூழலில், இடப்பெயர்வுகளினால் தொலைந்து போனமை துரதிர்ஷ்டமாகும்.

1986-ஆம் ஆண்டளவில் போர் உக்கிரமடையவே பலாலி இராணுவ முகாமுக்கு அருகில் இருந்த கிராமங்களான கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான், மயிலிட்டி மக்கள் குடிபெயர, தர்மபூபதியும் குடும்பத்தினரோடு தெல்லிப்ப ளையில் குடியேறினார். அங்கு ‘கலை இலக்கியத் துறைகளில் உயர் இரசனையைப் பேணுதல்’ என்ற நோக்கத்தோடு, பேரா சிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், பேராசி ரியர் சு. வித்தியானந்தன், அனு.வை. நாகராஜன், பண்டிதர் செல்லத்துரை, கோகிலா மகேந்திரன் போன்ற தமிழ் ஆர்வ லர்கள் அலங்கரித்த, தெல்லிப்பளை கலை இலக்கிய வட் டத்தில், மத்திய குழுவில் அங்கத்தவ ராகவும், இசைக் குழுத் தலைவராகவும் செயற்பட்டு, இன்னிசைக் கச்சேரிகளையும், இசைக் கலைஞர்களின் நேர்காணல்களையும், நேர்த்தியாக ஒழுங்கு செய்தார். இசை நூல்கள், நாடக நூல்கள் தொடர்பான கருத்தரங்குகள், ஆய்வுகள் என்பனவும் இவர் தலைமையில் இடம்பெற்றன.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ‘சங்கீதபூ ஷணம்’ பட்டம் பெற்றதோடு, மேலும் இரண்டு ஆண்டுகள் ஆங்கில மொழி மூலம் இசைப் பட்டப்படிப்பினை (B. Music) நிறைவு செய்த முதலாவது ஈழத்தமிழ் மகள் என்ற பெருமை இவரைச் சாரும். தர்மபூபதி அவர்களின் தமிழ், இசைப் பணிகளைப் பாராட்டி, பல்வேறு அமைப்புகளும் அரசும் விருதுகளை வழங்கி, கௌரவித்துள்ள. தெல்லிப்பளை துர்க் கையம்மன் ஆலயம் 1997-ஆம் ஆண்டு ‘இசைத்தாய்’ விருதையும், 2011-ஆம் ஆண்டு ‘சிவத்தமிழ்’ விருதையும் வழங்கிப் பாராட்டியது. மாவிட்டபுரம் பிருந்தகானசபா 2013-ஆம் ஆண்டு ‘இசைஞானமணி’ பட்டத்தையும், அதே ஆண்டு யாழ். மாநகர சபை ‘யாழோசை’ விருதினையும் வழங்கி சிறப் பித்தன. வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் திணைக் களம் ‘கௌரவ முதலமைச்சர்’ விருதினையும், இலங்கை கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு 2015-இல் ‘கலாபூ ஷணம்’ விருதையும் வழங்கிப் பெருமை கொண்டன. அமரர் கலாபூஷணம் எல். திலகநாயகம் போல் அவர்களின் பத்தாவது ஆண்டு ஞாபகார்த்தமாக, சோமராகம் இசை மன்றம், ‘இசைத்திலகம்’ என்னும் விருதினை 2019-ஆம் ஆண்டு வழங்கி மதிப்பளித்ததோடு, தர்மபூபதி அவர்களின் இசைப்பணி குறித்து ‘இசைவாழ்வும் பணியும்’ என்னும் தலைப்பில் சிறு பிரசுரத்தையும் வெளியிட்டது.

திறமைமிக்க ஆசிரியர், சிறந்த விரிவுரையாளர், ஆன்மீக சொற்பொழிவாளர், பாடலாசிரியர் போன்ற பன்முக ஆளுமை கொண்ட தர்மபூபதி சிதம்பரநாதன் அவர்கள் 2022-ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். போர்க் காலத்திலும் களத்திலே, இசையே மூச்சாக வாழ்ந்த இவர், தான் பிறந்த கட்டுவனூருக்கு மட்டுமன்றி கர்நாடக இசை உலகுக்கே பெருமை சேர்த்தவராவார்.



vivekananthan.v@thaiveedu.com





# ஜே.வி.பி.-யும் சண்ணும் :

## சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகளை முன்வைத்து ஒரு பார்வை

**– மல்லியப்புசந்தி திலகர்**

மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் சார்பாக மூத்த பத்திரிகையாளர் வீ. தனபாலசிங்கம் தொகுத்து வெளியிட்டிருக்கும் நூல்: 'சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்' என்பதாகும். 2025 ஜூலை மாதம் 6-ஆம் திகதியன்று நா. சண்முகதாசனின் 103-வது பிறந்த நாளை நினைவுகூர்ந்து இடம்பெற்ற நினைவுப்பேருரை நிகழ்வில் அன்னாரது நூற்றாண்டு நினைவையொட்டி வெளிவந்த 8 கட்டுரைகளின் தொகுப்பாக இந்த நூல் அமையப்பெற்றுள்ளது. 'இலங்கையின் புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடித் தலைவரின் நூற்றாண்டு நினைவு வெளியீடு' எனும் உப தலைப்போடு தொகுக்கப்பட்டிருக்கும் இந்த நூலில் கலாநிதி. தயான் ஜயதிலக்க, ராஜன் பிலிப்ஸ், டி.பி.எஸ். ஜெயராஜ், மனிக் டி சில்வா, கலாநிதி சரத் அமுனுகம, சமுத்திரன், (பேராசிரியர் சண்முகரட்ணம்), பேராசிரியர் சி. மௌனகுரு, வீரகத்தி தனபாலசிங்கம் ஆகிய எட்டு ஆளுமைகளின் கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

'1960-களிலும் 70-களிலும் தேசிய ரீதியில் பெரும் கவனம் பெற்ற சண்(முகதாசன்)னும் அவரது அரசியலும் இன்று 50 வயதுக்கும் குறைவானவர்களுக்கு பரிச்சயமில்லாத - முன் பின் அறிந்திராத ஒரு விவகாரமாக இருக்கலாம்' எனும் ராஜன் பிலிப்ஸின் கருத்தை மேற்கோள்காட்டியே இந்தக் கட்டுரையை ஆரம்பிக்கலாம் எனும் எண்ணம் உதித்தது.

அதேநேரம், 'தனது சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அணியின் தலைவராக சண்(முகதாசன்)தான் ரோஹண விஜேவீரவை சேர்த்துக்கொண்டார்.' 'ரோஹண விஜேவீர'வின் அரசியல் வாழ்விலும் அவர் ஜனதா விமுக்தி பெரமுனவை (ஜே.வி.பி) தாபித்ததிலும் சண்முகதாசனின் தீர்க்கமான பாத்திரம் தொடர்பில் தயானும், மெனிக்கும் (பிற கட்டுரையாளர்கள்) தங்களது கட்டுரைகளில் குறிப்பிடவில்லை' எனும் கலாநிதி சரத் அமுனுகமவின் கருத்துக் குறித்தும் இன்றைய இளந்தலைமுறையினர் (ராஜன் குறிப்பிடும் 50 வயதுக்குக் குறைந்த) தெரிந்துகொள்ள வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டத் தோன்றியது.

'அரசியல் ஆளுமை ஒருவரை அவர் வாழ்ந்த காலகட்டத்தின் பின்புலத்தில் வைத்தே மதிப்பீடு செய்யவேண்டும். ஆனால், அவரது செயற்பாடுகளின் நீடித்த பொருத்தப்பாட்டை உறுதி செய்து பின்னறிவைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனும் மதிப்பிடலாம்'. என்பது இந்த நூலில் கலாநிதி. தயான் ஜயதிலக்க முன்வைக்கும் ஒரு தர்க்கமாகும். இந்தப் பின்னணியிலேயே தயான், நா. சண்முகதாசன் குறித்த மதிப்பீட்டை இந்த நூலில் தந்துள்ளார்.

'ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) ஒரு மாவோவாத இயக்கம் அல்ல என்றபோதிலும் அது மாவோவாத இயக்கத்தின் மடியில் இருந்து தோன்றியது என்பதுவும் அதன்

முக்கியமான உறுப்பினர்கள் பெரும்பாலும் முன்னாள் மாவோவாதிகளே என்பதும் இலங்கையின் மாவோவாதத்தின் விளைவளத்துக்குச் சான்றாகும்' என தயான் ஜயதிலக்கவின் மதிப்பீட்டில் பதிவாகிறது.

தயான் கூறும் 'மவோவாத இயக்க மடி' என்பது நா. சண்முகதாசனின் மடியே என்பதுவே உட்பொருளாகும். அதற்கான சான்றினை தயானின் பதிவுகளில் இருந்தே அடையாளம் காணலாம்.




'மாவோவை நன்கு தெரிந்த சண் அவரைப் பிரதிநிதித்துப்படுத்தினார். சண்முகதாசன் மாவோவை சந்தித்து கலந்துரையாடிய ஒரே இலங்கையர் மாத்திரமல்ல, தெற்காசியாவைச் சேர்ந்த சிலரில் ஒருவருமாவார்' என்பது தயானின் பதிவு. 'கலாசார புரட்சியின் உச்ச கட்டத்தின்போது 15 லட்சம் செங்காவலர்களின் அணிவகுப்பை மாவோ பார்வையிட்டபோது அவருக்கு அருகில் சண்(முகதாசன்) நின்றிருந்தார். செங்காவலர்கள் மத்தியில் உரையாற்றுவதற்கு அவர் அனுமதிக்கப்பட்டார்.' என்பதுவும் தயானின் மேலதிகப் பதிவு. (இந்த தெகுப்பு நூலின் அட்டைப்படத்திலும் உள்ளேயுமாக இரண்டு இடத்தில் சீனப் பெருந்தலைவர் மாவோ சே துங் அவர்களை நா. சண்முகதாசன் சந்தித்து உரையாடிய இரண்டு நிழற்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.)

'பெரும்பாலும் உறுப்பினராகக் கொண்டிருந்த அரசியல் கட்சியொன்றுக்குத் தலைமை தாங்கிய ஒரேயொரு இலங்கைத் தமிழர் சண்(முகதாசன்) மாத்திரமே' என ராஜன் பிலிப்ஸின் பதிவும் இங்கு அவதானத்துக்குரியது.

'ரோஹன விஜேவீர உட்பட ஜே.வி.பி.-யின் பல எதிர்காலத் தலைவர்கள் சண்(முகதாசன்) கட்சியின் உறுப்பினர்களாகவும் அவரது அரசியல் வகுப்பின் மாணவர்களாகவும் இருந்தனர்' என்பதுவும் ராஜன் பிலிப்ஸின் குறிப்பாகிறது. இதன்படி இலங்கையின் இப்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவையும் கூட ராஜன் குறிப்பிடும் வரிசையில் (ஜே.வி.பி.-யின் தலைவர் என்ற வகையில்) வைத்து நோக்கலாம். அதேநேரம் அப்போது ரோஹண விஜேவீரவுடனும் அதன் பின்னர் அனுரவின் வழிகாட்டியாகவும் இருந்த குமார் குணரட்ணம் இப்போது பெரும்பாலும் சிங்களவர்களையே உறுப்பினராகக் கொண்டிருக்கும் முன்னிலை சோஷலிச கட்சியின் (பெரட்டுகாமி) தலைமைப் பொறுப்பில் இருக்கும் தமிழராக இருப்பது தொடர்பில் இந்த எட்டு கட்டுரைகளில் எங்குமே குறிப்பிடப்படவில்லை.

'அன்று சண்(முகதாசன்), தான் தமிழனாகப் பிறந்தது தற்செயலானது எனக் கூறியது இனத்துவ இயல்புக் குணங்கள் பற்றிய நோக்கை நிராகரிப்பதற்காகவேயாகும். ஒருவரது பிறப்புடன் இனத்துவ அடையாளத்தை இணைப்பது ஒரு அரசியல் சோதிட செயற்பாடாகும். சண் செய்ததைப் போன்று நாட்டின் அரசியல் தலைவர்கள் தங்களது இனத்துவம் என்பது பிறப்பின் தற்செயலே என்ற உண்மையைப் புரிந்து ஏற்றுக்கொணடிருந்தால், இலங்கை சிறப்பான நாடாக அந்தக் கணத்திலேயே வந்திருக்காதா?' எனும் கேள்வியுடன் ராஜன் பிலிப்ஸின் கட்டுரை நிறைவு பெறுகிறது.

அதே நேரம் இன்றைய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜே.வி.பி.-யின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவுக்கு பூரண அரச அனுசரணையில் மிஹிந்தல ரஜமஹா விஹாரையில் நடைபெற்ற 2025 தேசிய பொசொன் பௌர்ணமி தின நிகழ்வில் 'மகா மகந்திர பிரசாதினி' என்ற கௌரவ விருதினை வழங்கிக் கௌரவித்ததும் அதனை அவர் மண்டியிட்டு ஏற்றுக்கொண்டுள்ளமையும் இங்கே அவதானிக்க வேண்டியுள்ளது. மறுபுறமாக இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கை விஜயத்தின்போது ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவினால் 'ஸ்ரீ லங்கா மித்ர விபூஷண' விருது வழங்கி பதக்கமிட்டுக் கௌரவிக்கப்பட்டமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இந்த இரண்டு நிகழ்வுகளும் ஜே.வி.பி குறித்து சண்முகதாசன் அன்று கொண்டிருந்த விமர்சனத்தை இன்று அவர் உயிருடன் இல்லாத நாட்களிலும் நியாயப்படுத்தும் தத்துவ வெளிப்பாடாகும் எனக் கொள்ளலாம்.

'விஜேவீரவின் ஆரம்பகால அரசியல் ஆய்வுகள் சண்(முகதாசன்)னின் கோட்பாடுகள் மீதே பெருமளவுக்குத் தங்கியிருந்தன. விஜேவீரவும்கூட ஐக்கிய தேசிய கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் பாரிய வேறுபாட்டைக் காணவில்லை. தந்திரோபாய காரணங்களுக்காக அந்தக் கட்சிகளில் இரண்டில் ஏதாவது ஒன்றுடன் அணி சேர்ந்துகொள்ளக் கூடியவராகவும் இருந்தார்.

ஆனால், 'விஜேவீர சிங்கள சோஷலிஸத்தை மேம்படுத்தும் பாதையிலே சென்றுகொண்டிருந்தார். உள்நாட்டுப் புரட்சியின் முன்னரங்கப் படையினராகப் பெருந்தோட்டப் பாட்டாளிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மலையகத்தில் செங்கொடி பாதையின் கீழ் அவர்களை அணி திரட்டுவதற்கான சண்ணின் முயற்சிகளை விஜேவீர நிராகரித்தார்' எனும் கலாநிதி சரத் அமுனுகமவின் பதிவும் இந்தக் கட்டத்தில் அவதானத்துக்குரியது.

**ஜே.வி.பி.-யின் நடவடிக்கைகளை சண்முகதாசன் கடுமையாக விமர்சித்தார் என்றாலும் அவரது தலைமையிலான கட்சிக்குள் ஒரு பிரிவாகவே ஜே.வி.பி முளையெடுத்தது. ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்துவதாகவும் ஜே.வி.பி.-யின் தாபகத் தலைவரான ரோஹண விஜேவீரவின் ஆசான்களில் ஒருவராகவும் இருந்த மைக்காகவுமே அரசாங்கம் சண்முகதாசனை தடுபபுக்காவலில் வைத்தது**

*-என். வி. தனபாலசிங்கம்*

'ஜே.வி.பி.-யின் நடவடிக்கைகளை சண்முகதாசன் கடுமையாக விமர்சித்தார் என்றாலும் அவரது தலைமையிலான கட்சிக்குள் ஒரு பிரிவாகவே ஜே.வி.பி முளையெடுத்தது. ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்துவதாகவும் ஜே.வி.பி.-யின் தாபகத் தலைவரான ரோஹண விஜேவீரவின் ஆசான்களில் ஒருவராகவும் இருந்தமைக்காகவுமே அரசாங்கம் சண்முகதாசனை தடுபபுக் காவலில் வைத்தது.' என வீ. தனபால சிங்கத்தின் கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

'ஜனதா விமுக்தி பெரமுனவை (ஜே.வி.பி) தத்துவார்த்த அடிப்படையில் கடுமையாக விமர்சித்த சண்ணும்கூட 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார்' என தயான் ஜயதிலக்கவும் பதிவு செய்கிறார்.

நெடுங்காலமாக முதுகில் ஒரு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த சண்ணின் வாழ்க்கை முறையும் மேல் நடுத்தர வர்க்கத்துக்குரியதாகவே இருந்தது என தயான் குறிப்பிடும் அதே நேரம் அவர் சிறையில் இருந்தபோது 'கொமொட்' மலசலகூடம் கேட்டவர் என சண் மீதான விமர்சனம் ஒன்று பரவலாக வைக்கப்படுவதுண்டு. ஆனால், ஒஸ்ரியோ ஆர்த்ரைட்டிஸ் என்ற எலும்பு வருத்தம் காரணமாக அவரால் குந்தியிருக்க இயலாமல் இருந்தது. அதனால் சிறைச்சாலை அதிகாரிகள் அவருக்கு 'கொமொட்' ஒன்றை (விசையுடன் நீர் பாய்ச்சும் வசதியற்ற) பயன்படுத்துவதற்கு அனுமதித்தார்கள். இயற்கைக் கடனைக் கழித்துவிட்டு சண்ணே அதைத் துப்பரவும் செய்ய வேண்டியிருந்தது. அதற்காக வாளியில் அவர் தண்ணீர் எடுத்துச் செல்வதால் சிறையிலடைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி உறுப்பினர்கள் தன்னை 'பால்தி காரயா' என பட்டப்பெயர் கொண்டு அழைத்ததாக சண் கூறியதாக மனிக் டி சில்வா தனது குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் மானிப்பாயில் 1920 ஜுலை 3-ஆம் திகதி சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்த சண்முகதாசன், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இருந்து கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரிக்கு வந்து வரலாற்றுத்துறை விஷேட பட்டப்படிப்பினை 1943-ஆம் ஆண்டில் முடித்துக்கொண்டதுடன் இறுதியாண்டு கற்கும்போதே எஸ்.ஏ. விக்கிரமசிங்க தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராக சேர்கிறார்.

இவ்வாறு முடிவெடுத்தது அவருடைய இளமைக்காலக் கனவையும் சோஷலிசம் மீதான திடமான நம்பிக்கையையும் அறிந்துகொள்ள உதவுகிறது. இதனால் ஏமாற்றமடைந்த தாயார் மகனைப் பார்த்து 'உன் பிற்காலத்தில் நீ என்ன செய்வாய்? சுகவீனமுற்றால் என்ன செய்வாய்' என்று கேட்டதற்கு 'அதற்குள் நாம் சோஷலிசத்தை அடைந்துவிடுவோம். ஆகவே அது பிரச்சினை இல்லை' என்று தன்னம்பிக்கை ததும்பவே பதிலளிக்கிறார் என சமுத்திரனின் (பேராசிரியர் சண்முகரட்ணம்) கட்டுரை பதிவு செய்கிறது.

1980-களின் நடுப்பகுதியில் சண்முகதாசனால் எழுதப்பட்ட கட்டுரைகள் மக்கள் போராட்டத்தின்போது போராளிகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கக் கட்டுப்பாடுகள், விதிமுறைகளை தமிழ் ஆயுதக்குழுக்களுக்கு நினைவுபடுத்தின எனக் கூறும் தயான் ஜயதிலக்க அவை தமிழ் தீவிரவாதிகளுக்கான ஆலோசனைகளாக அமைந்தன எனப் பதிவு செய்கிறார்.

எனினும் இந்திய அமைதிப்படைக்கு எதிராகப் புலிகள் சண்டையிட்டது தொடர்பில் சண் கொண்டிருந்த நிலைப்பாடு பல தவறான அபிப்பிராயங்களையும், அவரது அனுதாபிகள் கட்சி உறுப்பினர்கள் மத்தியிலும் கூடப் பிளவுகளை ஏற்படுத்தியது என டி.பி.எஸ். ஜெயராஜ் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அவரது கட்டுரையின் தலைப்பே 'தமிழ்த் தீவிரவாதிகளின் ஆயுதப்போராட்டமும் சண்முகதாசனும் என்பதாகவே அமைகிறது. எனினும் அரசியலுக்கு அப்பால் சண்முகதாசன் எனும் சாதாரண மனிதனை அறிமுகஞ் செய்யும் கட்டுரையாகவும் அது அமைகிறது. சண்ணின் கலாரசனை, குறிப்பாக சினிமா ரசனை அதுவும் எம்.ஜி.ஆர் படங்கள் பற்றிய அவரது பார்வைகள் என்பதைக்கூட வாசகர்களுக்கு எடுத்துக்காட்டி, மேதமை மிக்கவராகவே அறியப்பட்ட சண்ணின் சாதாரண குணாம்சங்களை வெளிப்படுத்துகின்றது.

இதன் தொடர்ச்சிபோலவே பேராசிரியர் சி. மௌனகுருவின் 'சங்காரம் - வடமோடி நாடகமும் சண்முகதாசனும்' எனும் கட்டுரை அமைகிறது. 'உழைக்கும் மக்களின் பார்வையில் இருந்து வரலாற்றை நோக்குதல், கீழிருந்து வரலாற்றை நோக்குதல் என புதிய கோட்பாடுகள் பேசப்படுகின்றன. ஆனால் இற்றைக்கு 65 ஆண்டுகளுக்கு முன்னரேயே இதனை அந்த மனிதர் ஆரம்பித்து வைத்தவர் என்பதை

இன்று நினைக்க வியப்பளிக்கிறது' என சண் குறித்த மனப்பதிவுகளைச் செய்கிறார் பேராசிரியர் சி. மௌனகுரு. தமது 'சங்காரம்' எனும் நாடகத்தை மேடையேற்றும்தருணங்களில் எல்லாம் பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருக்கும் சண், தமது தொழிலாளி பத்திரிகையில் அரசியல் கட்டுரைகளை மட்டுமே எழுதி வந்த நிலையில் 'சங்காரம்' நாடகம் குறித்தும் எழுதியமை தம்மை திகைப்பில் ஆழ்த்தியதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சண்முகதாசன் நூற்றாண்டு நிறைவின் நினைவாக எழுதிய எட்டுக் கட்டுரைகளின் ஆங்கில வடிவமும் இணைக்கப்பட்டு இந்நூல் தொகுக்கப் பட்டிருப்பது சிறப்பு. ஆனால் சில ஆங்கிலக் கட்டுரைகளின் தலைப்பு தமிழில் வேறு விதமாக தரப்பட்டுள்ளது. அதேபோல மாவோவின் சிறந்த சுலோகங்களில் ஒன்றான 'Its right to Rebel' என்பது 'கிளர்ச்சி செய்வதற்கான உரிமை' என்பதாக அல்லாமல் 'கிளர்ச்சி செய்வது சரியானதே' என்பதாகவே தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. அனைத்து கட்டுரைகளினதும் தமிழாக்க நடையானது அதுவே மூலக் கட்டுரைக்குரிய தன்மையைக் கொண்டிருப்பது சிறப்பு. தொகுப்பாளரான வீ. தனபாலசிங்கம், தேர்ந்த பத்திரிகையாளராக மாத்திரமல்லாது சிறந்த மொழி பெயர்ப்பாளராகவும் பிரமிக்கவைக் கிறார்.

> **உழைக்கும் மக்களின் பார்வையில் இருந்து வரலாற்றை நோக்குதல், கீழிருந்து வரலாற்றை நோக்குதல் என புதிய கோட்பாடுகள் பேசப்படுகின்றன. ஆனால் இற்றைக்கு 65 ஆண்டுகளுக்கு முன்னரேயே இதனை சண்முகதாசன் ஆரம்பித்து வைத்தவர் என்பதை இன்று நினைக்க வியப்பளிக்கிறது.**
>
> *- பேராசிரியர். சி. மௌனகுரு*

சண்ணின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்துக்காட்டுவதன் மூலமாக சண்முகதாசன் எனும் மார்க்சியவாதியை, மாவோயிஸ்ட்டை, மக்கள் தலைவரை இன்றைய தலைமுறைக்கு அறிமுகம் செய்யும் இந்த நூலில் இடம்பெற்றுள்ள அநேகமான கட்டுரைகளில் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மீதான சண்ணின் பார்வையும் பங்களிப்பும் ஒற்றை வரிகளில் சொல்லப்பட்டு இருக்கின்றதே தவிர விரிவாகப் பதிவு செய்யப்படவில்லை. அதற்கு மலையகத் தரப்பில் இருந்து சண் குறித்த கட்டுரை ஒன்று தனியாக இடம் பெற்றிருப்பதே பொருத்தமானது. CP என சுருக்கமாகவும் செங்கொடிச் சங்கம் என பரவலாகவும் அறியப்பட்ட தொழிற்சங்கக் கட்டமைப்பு மலையகத்தில் மிகப்பிரசித்தமாக இருந்தது. அதில் சண்ணின் வகிபாகமே முதன்மையானது என்பதோடு ஹட்டன் நகரில் அமையப்பெற்ற அவர்களது காரியாலயம், சண்ணின் உறவினர்கள் ஹட்டனில் வாழ்ந்தது முதலான பக்கங்களும் சண்ணின் நூற்றாண்டு நினைவாகப் பதிவு செய்யப்பட வேண்டியவையே.

குறிப்பாக அன்று மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்புவாதத்தின் எச்சமாகப் பார்த்த ஜே.வி.பி.-யினர் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கும் இந்தக் காலகட்டத்தில், மலையகத் தமிழ் மக்கள் ஜே.வி.பி.-யை ஆட்சியில் அமர்த்தப் பெருமளவு வாக்குப் பங்களிப்பு செலுத்தியுள்ள நிலையில், மலையக மக்களின் 6 பிரதிநிதிகள் ஜே.வி.பி.-யை பிரதிநிதித்துவம் செய்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற சந்தர்ப்பத்தில் நா. சண்முகதாசன், ஏ. இளஞ்செழியன் போன்ற தத்துவார்த்த அரசியல் தலைவர்கள் ஜே.வி.பி தொடர்பில் எடுத்த அன்றைய நிலைப்பாடுகள் இன்று மீள நினைவுபடுத்த வேண்டியவையும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியவையுமாகும்.

'ஒரு தொழிற்சங்கவாதி என்ற வகையில், தொழிலாளர் இயக்கத்தின் ஒரு போதனையாளர் என்ற வகையில் முன்னுதாரணமாகத் திகழ்ந்த தலைவர் என்ற வகையில் சண்முகதாசனின் பங்களிப்புகள் அளப்பரியனவாகும். அரசியல் குள்ளர்களினதும் அற்பர்களினதும் காலத்துக்கேற்ப கருத்தை மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பவாதிகளினதும் ஒத்தூதுபவர்களினதும் தாயகமாக மாறிவரும் ஒரு மண்ணில் சண்முகதாசன் போன்ற மனிதர்கள் மீண்டும் பிறப்பதென்பது நடவாத காரியமாகும். போராட்ட வாழ்க்கையை முன்னெடுத்த அவர் இறுதிவரை அவ்வாறே வாழ்ந்தார்' என இறுதிக்கட்டுரையில் தொகுப்பாளர் வீ. தனபாலசிங்கத்தின் கூற்றினை மேற்கோள் காட்டியே 'சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்' எனும் இந்த நூலின் மீதான ஒரு பார்வையை நிறைவு செய்வது பொருத்தமானதாகத் தெரிகிறது.



thilagar@thaiveedu.com

## Join us to celebrate
## Prison of Dreams (கனவுச்சிறை)
## by Devakanthan
## translated by
## Nedra Rodrigo





**Winner of the 2025 Tamil Literary Garden award for translation**

**Speakers will include:**
**Prof. R. Cheran, Prof. S. Maunaguru, Dr. Geetha Sukumaran, K. Vickneaswaran and Fr. Joseph Chandrakanthan**

**6-8pm | September 6th**
**AC-223 at UTSC Academic Advising & Career Centre**
**1265 Military Trail, Scarborough**

# நுகி வா தியாங்கோவுக்கு அஞ்சலி - 3
# மார்க்சியக் கதைசொல்லல்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ



**தொடக்கக் குறிப்புகள்:**

தியாங்கோவின் படைப்புகளின் மையமானது, மார்க்சியக் கொள்கைகளில் ஆழமான ஈடுபாடு கொண்டுள்ளது. இதை அவர் காலனித்துவ மற்றும் காலனித்துவத்திற்குப் பிந்தைய கென்யாவின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப் புகளை விமர்சிக்கப் பயன்படுத்துகிறார். அழாதே குழந்தாய் (Weep not, Child) (1964), ஒரு கோதுமை மணி (A Grain of Wheat) (1967), இரத்தத்தின் இதழ்கள் (Petals of Blood) (1977), சிலுவையில் தொங்கும் சாத்தான் (Devil on the Cross) (1980), காகத்தின் வழிகாட்டி (Wizard of the Crow) (2006) போன்ற அவரது நாவல்களும் ஒரு கறுப்புத் துறவி (The Black Hermit) (1963) எனக்கு வேண்டியபோது நான் திருமணம் செய்வேன் (I Will Marry When I Want) (1977) போன்ற நாடகங்களின் மூலமும் தியாங்கோ வர்க்கப் போராட்டம், சுரண்டல் மற்றும் கூட்டு எதிர்ப்பு ஆகியவற்றின் கருப்பொருள்களை ஆராய் கிறார். மார்க்சியத்துடனான தியாங்கோவின் ஈடு பாடு, இலக்கியம் சமூக மாற்றத்திற்கான ஒரு கரு வியாகச் செயற்படவேண்டும் என்ற அவரது நம் பிக்கையில் வேரூன்றியுள்ளது. கார்ல் மார்க்ஸ், ஃபிரான்ட்ஸ் ஃபனான் (Frantz Fanon) போன்ற மார்க்சிய சிந்தனையாளர்களால் உந்தப்பட்ட தியாங்கோ, சமத்துவமின்மையை நிலைநிறுத்தும் பொருளாதார அமைப்புகளால் இயக்கப்படும் ஒடுக்குமுறையாளர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்க ளுக்கும் இடையிலான போராட்டமாக வரலாற்றைக் கருதும் மார்க்சியத்தை ஏற்கிறார். காலனித்து வமும் அதன் வாரிசான நவகாலனித்துவமும், கென்யாவில் வர்க்கப் படிநிலைகளை எவ்வாறு வேரூன்றச் செய்தன, விவசாயிகளையும் தொழி லாள வர்க்கத்தையும் சுரண்டி, ஒரு சிறிய உயர டுக்கை வளப்படுத்தியதை அவரது படைப்புகள் பகுப்பாய்வு செய்கின்றன. தியாங்கோவுக்கு, மார்க்சியம் இந்த அநீதிகளை அம்பலப்படுத் தவும், அவற்றை அகற்ற கூட்டு நடவடிக்கைக்கு வாதிடவும் ஒரு கண்ணாடியை வழங்குகிறது.

முற்றிலும் கருத்தியல் ஆய்வுக் கட்டுரைகளைப் போலல்லாமல், தியாங்கோவின் மார்க்சியம் கென்ய மக்களின் வாழ்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது, வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தை ஆபிரிக்கக் கலாசார யதார்த்தங்களுடன் கலக்கிறது. கிகுயு மொழியில் எழுதுவதற்கான அவரது மாற்றம், மக்களை அவர்களின் மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் அதிகாரம் அளிப்பதற்கும், முதலாளித்துவ சுரண்டலால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலக்கியத்தை அணுகுவதற்கும் ஒரு மார்க்சிய உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது. மார்க்சிய சித்தாந்தத்துடன் கலாசார தேசியவாதத்தின் இந்த இணைவு தியாங்கோவின் படைப்புகளை வேறுபடுத்துகிறது, இது முறையான ஒடுக்கு முறையின் விமர்சனமாகவும் வகுப்புவாத எதிர்ப்பின் கொண்டாட்டமாகவும் அமைகிறது.

## வர்க்கப் போராட்டமும் சுதந்திரத்தின் துரோகமும்:

தியோங்கோவின் இரத்தத்தின் இதழ்கள் என்ற நாவல் நவகாலனித்துவ அரசு மற்றும் சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆபிரிக்க திட்டத்தில் பொதிந்துள்ள வர்க்க துரோகங்கள் பற்றிய ஒரு சக்திவாய்ந்த மார்க்சிய விமர்சனமாகும். காலனித்துவத்திலிருந்து கென்யாவின் சீரற்ற மாற்றத்திற்குப் பிறகு எழுதப்பட்ட இந்தநாவல், அரசியல் இறையாண்மை பொருளாதார விடுதலையைக் கொண்டுவரவில்லை என்ற கடுமையான யதார்த்தத்தை எதிர்கொள்கிறது. கென்ய மக்கள் காலனித்துவ விடுதலையின் வழி எதிர்பார்த்த மீட்சிக்குப் பதிலாக, சுதந்திரம், எவ்வாறு காலனித்துவ முதலாளித்துவத்தின் கீழ் நிறுவப்பட்ட சுரண்டலின் கட்டமைப்புகளைப் பராமரித்த - மற்றும் சில சந்தர்ப்பங்களில் ஆழப்படுத்தப்பட்ட - ஒரு தரகு முதலாளித்துவத்திற்கு அடித்தளம் அமைத்தது என்பதை இந்நாவல் ஆராய்கிறது.

கரேகா என்ற கதாபாத்திரம் மார்க்சிய பகுப்பாய்விற்கான தியாங்கோவின் வெளிப்பாட்டுக் கருவியாகச் செயற்படுகிறது, இது ஒருமையக் கேள்வியை எழுப்புகிறது:

‘சுதந்திரம் என்பது சிலருக்கா அல்லது பலருக்கா ? அது ஒரு சிலருக்கு செல்வத்தையும் மீதமுள்ளவர்களுக்கு நித்திய வறுமையையும் குறிக்குமா ?’

இந்தக் கேள்வி தேசிய விடுதலையின் மாயையைத் துளைத்து, ஃபிரான்ட்ஸ் ஃபனான், பூமியின் துரதிஸ்டசாலிகள் (The Wretched of the Earth) என்ற புத்தகத்தில் எச்சரித்ததை அம்பலப்படுத்துகிறது: ‘காலனித்துவ சக்தியை வெறுமனே மாற்றும் அதேவேளையில் முதலாளித்துவ நலன்களுக்குச் சேவைசெய்யும் ஒரு பிந்தைய காலனித்துவ முதலாளித்துவத்தின் தோற்றம் ‘பயனற்றது’ மற்றும் ‘எதையும் கட்டமைக்க இயலாதது’ என்று ஃபனான் விபரிக்கிறார். இதையே தியாங்கோ தனது நாவலில் படம் பிடிக்கிறார். இல்மோரோக் என்ற பகுதியில் சாலைகள் மற்றும் வங்கிகளின் வருகை நிலம் மற்றும் நிலமானிய உறவை இடம்பெயர்த்தது. ஆனால் இது இன்னொருவழியில் அபிவிருத்தியின் பெயரால் உயரடுக்கை வளப்படுத்தவும் ஏழைகளை இடம்பெயரவும் மட்டுமே செய்தது.

இந்தநாவல், நவகாலனித்துவத்தின் வன்முறையின் அடியாழத்தை வெளிப்படுத்துகிறது. உள்ளூர் அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயரடுக்கு, ஒழுக்கரீதியாக ஊழல் நிறைந்தவர்கள் மட்டுமல்ல, பொருளாதார ரீதியாகவும் ஒட்டுண்ணித்தனமானவர்கள். கிராமப்புற கென்யாவில் உலகளாவிய மூலதனம் விரிவடைவதிலிருந்து அவர்கள் இலாபம் ஈட்டுகிறார்கள், வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து விவசாயிகளையும் தொழிலாளர்களையும் வெளியேற்றுகிறார்கள்.

எப்படி ஐரோப்பா ஆபிரிக்காவை வளர்ச்சியடையாததாக்கியது (How Europe Underdeveloped Africa) என்ற புத்தகத்தில் ஆபிரிக்காவின் பெரும் பகுதியில் சுதந்திரம் அரசியல் கொடிகளை மாற்றுவதற்கு வழிவகுத்தது, அதேநேரத்தில் பொருளாதார அமைப்பு உலகளாவிய முதலாளித்துவத்திற்கு அடிபணிந்தது என்று வாதிட்ட வால்டர் ரோட்னி போன்ற ஆபிரிக்க மார்க்சிய சிந்தனையாளர்களுடன் தியாங்கோவின் விமர்சனமும் ஒத்துப்போகிறது. கரேகாவின் அரசியல் கல்வி மற்றும் சோசலிச எதிர்காலத்திற்கான அழைப்பு, வர்க்க உறவுகளின் தீவிர மாற்றத்தின் மூலம் மட்டுமே ஆபிரிக்க நாடுகள் உண்மையான விடுதலையை அடையமுடியும் என்ற ரோட்னியின் வலியுறுத்தலை எதிரொலிக்கிறது.

நாவலில் தியாங்கோ ஆதரிக்கும் விவசாயிகள்-தொழிலாளர் கூட்டணி கரேகாவின் புரட்சிகர நம்பிக்கையில் அதன் குரலைக் காண்கிறது:

‘மக்கள் ஒருநாள் எழுச்சி பெறுவார்கள். அவர்கள் சுமை தாங்கும் மிருகங்களாக இருப்பதற்குத் தயாராக இல்லை என்று சொல்வார்கள்.’

இங்கே, தியாங்கோ மார்க்சின் இயங்கியல் பொருள்முதல்வாதத்திலிருந்து முதலாளித்துவத்திற்குள் உள்ள முரண்பாடுகள் எதிர்ப்பை உருவாக்கும் என்ற கருத்தைப் பெறுகிறார். ஆயினும்கூட, அவர் இந்தக் கோட்பாட்டை ஆபிரிக்க சூழலுக்கு ஏற்பமாற்றியமைக்கிறார், நகர்ப்புற பாட்டாளி வர்க்கத்தின் மட்டுமல்ல, கிராமப்புற ஏழைகளின் புரட்சிகர ஆற்றலையும் அங்கீகரிக்கிறார், இது விவசாயிகள் காலனித்துவ எதிர்ப்பு மற்றும் காலனித்துவத்திற்குப் பிந்தைய சோசலிசப் போராட்டங்களுக்கு மையமாக இருக்கவேண்டும் என்று வாதிட்ட அமில்கார் கப்ராலின் சிந்தனையுடன் ஒத்துப்போகும் ஒரு நடவடிக்கையாகும்.

இரத்தத்தின் இதழ்கள் நாவலானது காலனித்துவத்திற்குப் பிந்தைய கென்யாவை கடுமையாக விமர்சிப்பதோடு, முடிக்கப்படாத புரட்சியை நிறைவு செய்வதற்கும், சுதந்திரக் காட்டிக்கொடுப்பை நிராகரிப்பதற்கும், ஒற்றுமை, வர்க்கப் போராட்டம் மற்றும் மக்கள் நனவில் வேரூன்றிய ஒரு மாற்றீட்டைக் கட்டியெழுப்புவதற்குமான ஒரு அழைப்பாகும்.

## சுரண்டலாக முதலாளித்துவமும் தரகுமுதலாளித்துவத்தின் பங்கும்:

சிலுவையில் தொங்கும் சாத்தான் நாவல், தியாங்கோவின் மார்க்சிய உருவகத்தை நோக்கி முழுமையாகத் திரும்புகிறது. பிந்தைய காலனித்துவ கென்யாவில் முதலாளித்துவ குவிப்பின் கோரமான தர்க்கத்தை அம்பலப்படுத்த, நையாண்டி மற்றும் போதனை என்ற வடிவத்தை அந்நாவல் தெரிவு செய்கிறது. தியாங்கோ சிறையில் இருந்தபோது கழிப்பறைக் காகிதத்தில் அவரது தாய்மொழியான கிக்கியுவில் எழுதப்

பட்ட இந்த நாவல் உள்ளடக்கத்திலும் வடிவத்திலும் எதிர்ப்பின் செயலாக செயற்படுகிறது - பேரரசின் மொழி யியல் மரபை நிராகரித்து, இலக்கியத்தை கருத்தியல் போராட்டத்திற்கான கருவியாகப் பயன்படுத்துகிறது.

நாவலில் முதலாளித்துவ மிகுதியின் மிகவும் குறிப்பிடத்தக்க சின்னம் 'சாத்தானின் விருந்து', இது ஒரு கொடூரமான போட்டி, அங்கு கென்ய முதலாளிகள் தங்கள் சுரண்டல் முறைகளை வெளிப்படுத்த போட்டியிடுகிறார்கள். கதை சொல்பவரின் கருத்துமிகவும் கொடூரமானது, அதேபோல் கேலிக்குரியது. அது இவ்வாறு விரிகிறது:

'உலகின் கொள்ளையர்களில் யார் அதிகம் கொள்ளையடித்தார்கள், யார் மக்களின் வியர்வையிலிருந்து அதிகம் கொள்ளையடித்தார்கள் என்பதை தீர்மானிக்க ஒரு போட்டியை நடத்தினர்.'

இங்கே, தியாங்கோ மார்க்சின் உபரிமதிப்பு பற்றிய பகுப்பாய்வை எதிரொலிக்கிறார். ஆனால் இந்த இயக்கவியலை காலனித்துவத்துக்குப் பிந்தைய ஆபிரிக்க அரசுக்குள் கண்டறிவதன் மூலம், அவர் மார்க்சியத்தை நவகாலனித்துவ யதார்த்தங்களுக்குக் காரணம் காட்டுகிறார் - அங்கு உயரடுக்குகள் தங்களைத் தேசிய ஹீரோக்களாகக் காட்டிக் கொண்டு சர்வதேச நிதி மூலதனத்திற்கு சேவை செய்கிறார்கள் என்பதை இந்தநாவலின் வழி அழகியலோடு வெளிப்படுத்துகிறார்.

> **கலாசாரம் என்பது ஆதிக்கம் செலுத்தும் மற்றும் கீழ்நிலை வகுப்புகள் கருத்தியல் கட்டுப்பாட்டிற்காகப் போராடும் ஒரு போர்க்களம் என்ற கிராம்சியின் கோட்பாட்டை இது பிரதிபலிக்கிறது. கிக்குயு மற்றும் வாய்வழி மரபை மீட்டெடுப்பதன் மூலம், ஏகாதிபத்தியம் மற்றும் முதலாளித்துவ மேலாதிக்கத்திற்கு எதிரான கலாசார எதிர்ப்பை தியாங்கோ முன்வைக்கிறார்.**

இங்கு தியாங்கோவின் தரகுமுதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாத்திரங்கள் படைப்பாற்றல் மிக்க தொழில் முனைவோர் அல்ல, மாறாக ஒட்டுண்ணி இடைத்தரகர்கள். அவர்கள் ஃபனான் 'உருமறைப்பு செய்யப்பட்டிருந்தாலும் பரவலானதான, தேசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலான பரிமாற்றக் கோடு' என்று அழைக்கும் வர்க்கத்தை உள்ளடக்கியுள்ளனர். அவர்களின் செல்வம், தேசியவாத கோஷங்கள் மற்றும் நன்கொடையாளர் மேம் பாட்டு விவரிப்புகளைத் தூண்டும் அதே வேளையில், உழைப்பு, நிலம் மற்றும் பாலின உடல்களைச் சுரண்டும் அவர்களின் திறனைப் பொறுத்தது.

நாவலின் கதாநாயகியான வாரிங்கா, அரசு மற்றும் ஆண் உயரடுக்கினரால் சுரண்டப்படும் இந்த அமைப்பினால் பலியாகத் தொடங்குகிறார். இருப்பினும், நாவலின் போக்கில், அவள் ஓர் அரசியல் மற்றும் கருத்தியல் விழிப்புணர்வை அடைகிறாள். சார்பு நிலையை நிராகரிப்பது, தன்னை ஆயுதபாணியாக்குவது மற்றும் தனது ஒடுக்குமுறையாளர்களை எதிர்கொள்வது என்ற அவரது முடிவு வெறுமனே ஒரு பரிமாண மாற்றம் அல்ல, மாறாக வர்க்க உணர்வின் மார்க்சிய உவமை. தியாங்கோ அவளை ஒரு புரட்சிகர விஷயமாக நிலைநிறுத்துகிறார். இப்பாத்திரம் தொழிலாளர் வர்க்கத்திலிருந்து எதிர்-மேலாதிக்கப் போராட்டத்தை வழிநடத்துபவராக விரிகிறது. இது அந்தோனியோ கிராம்சியின் செயலூக்க அறிவுஜீவி பற்றிய கருத்துடன் ஒத்துப் போகிறது.

நாவலின் அழகியல் இலக்கியத்தின் மார்க்சியக் கோட்பாட்டையும் பிரதிபலிக்கிறது. முதலாளித்துவ தனித்துவத்தையும் நவீனத்துவ அந்நியப்படுத்தலையும் நிராகரித்து, சிலுவையில் தொங்கும் சாத்தான் வாய்வழி கதை சொல்லல், வகுப்புவாத விவரிப்பு மற்றும் நேரடித் தொடர்பாடலை ஏற்றுக்கொள்கிறது. கதை சொல்பவர் வலியுறுத்துவதுபோல்:

'இது நம் வாழ்க்கையின் கதை, நம் மொழியில், நம்மால், நமக்காகச் சொல்லப்படுகிறது.'

கலாசாரம் என்பது ஆதிக்கம் செலுத்தும் மற்றும் கீழ்நிலை வகுப்புகள் கருத்தியல் கட்டுப்பாட்டிற்காகப் போராடும் ஒரு போர்க்களம் என்ற கிராம்சியின் கோட்பாட்டை இது பிரதிபலிக்கிறது. கிக்குயு மற்றும் வாய்வழி மரபை மீட்டெடுப்பதன் மூலம், ஏகாதிபத்தியம் மற்றும் முதலாளித்துவ மேலாதிக்கத்திற்கு எதிரான கலாசார எதிர்ப்பை தியாங்கோ முன்வைக்கிறார்.

மொழி மற்றும் கலாசாரத்தின் மீதான அவரது முக்கியத்துவம், தேசிய விடுதலையில் கலாசார விடுதலையும் அடங்கும் என்ற அமில்கர் கப்ராலின் பார்வையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. கிக்குயுவில் எழுதுவது, தியாங்கோவைப் பொறுத்தவரை, வெறும் குறியீடாக அல்ல - இது ஆதிக்கத்தின் மொழியியல் உட்கட்டமைப்பை சவால் செய்யும் ஒரு செயல். எனவே, சிலுவையில் தொங்கும் சாத்தான், ஒரு கிராம்சியின்-மார்க்சிய நடைமுறையை பின்பற்றுகிறது: இது அணுகக்கூடிய, அணிதிரட்டக்கூடிய தொழிலாள வர்க்க கலையை உருவாக்குகிறது. சுருக்கமாகச் சொன்னால், இந்த நாவல் முதலாளித்துவத்தை மட்டுமல்ல, அதன் வன்முறையை மீண்டும் உருவாக்கும் தரகுமுதலாளித்துவ உயரடுக்கையும் குற்றம் சாட்டுகிறது. இது 'ஆபிரிக்க' அபிவிருத்தி என்று அழைக்கப்பட்டதன் பிந்தைய காலனித்துவ மாயையை நிராகரிக்கிறது, அதேநேரத்தில் புரட்சிகர மாற்றம் உணர்வு, கலாசாரம் மற்றும் கூட்டுப் போராட்டத்துடன் தொடங்கவேண்டும் என்று முன்மொழிகிறது.

## நலகாலனித்துவமும் உலகளாவிய மூலதனமும்:

தியோங்கோவின் காகத்தின் வழிகாட்டி நாவல், நவகாலனித்துவம் மற்றும் உலகளாவிய முதலாளித்துவம் பற்றிய அவரது மிகவும் விரிவான மற்றும் உருவக ஆய்வு ஆகும். கிக்குயுவில் எழுதப்பட்டு பின்னர் ஆங்கிலத்தில் அவரால் மொழிபெயர்க்கப்பட்ட இந்த நாவல், மார்க்சிய கோட்பாடு, காலனித்துவத்திற்குப் பிந்தையகாலம் பற்றிய விமர்சனம் மற்றும் வாய்வழி

மரபை இணைத்து அவரது வாழ்நாள் அரசியல் உறுதிப்பாடுகளின் தொகுப்பைக் குறிக்கிறது. அதன் மையத்தில், காகத்தின் வழிகாட்டி என்பது சர்வதேச மூலதனத்தின் வாடிக்கையாளரான நவகாலனித்துவ அரசினைக் கேலி செய்கிறது. காலனித்துவத்திற்குப் பிந்தைய ஆட்சிகள் ஏகாதிபத்திய பொருளாதாரக் கட்டுப்பாட்டின் கருவிகளாக மாறும் கேலிக்குரிய மற்றும் வன் முறைவழிகளை அம்பலப்படுத்துகிறது.

இந்நாவலில், கற்பனையான அபுரேரியாவின் சுதந்திர குடியரசு பெயரிடப்படாத ஒரு 'ஆட்சியாளரால்' ஆளப்படுகிறது (இறையாண்மையின் மூலம் அல்ல, ஆனால் 'சர்வதேச வங்கி' போன்ற நிறுவனங்களைச் சார்ந்து). அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் ஆபிரிக்க சர்வாதிகாரிகளின் கோரமான கேலிச்சித்திரமாக இது விரிகிறது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியைப் பற்றிய ஒரு மறைமுகக் குறிப்பாகவும் இது வெளிப்படுகிறது. சொர்க்கத்திற்கான கோபுரத்தைக் கட்டுவதற்கான ஆட்சியாளரின் தேடல் - சொர்க்கத்திற்கான பயணம் என மறுபெயரிடப்பட்ட திட்டமானது - வெளிநாட்டுக் கடன்களால் நிதியளிக்கப்பட்ட உட்கட்டமைப்பு மற்றும் வீண் திட்டங்கள் மூலம் சட்ட பூர்வமான தன்மையைத் தேடும் பிந்தைய காலனித்துவ உயரடுக்கின் பைத்தியக்காரத்தனத்தை நாடகமாக்குகிறது. நாவலின் மிகவும் மோசமானவரிகளில் ஒன்றில், தியாங்கோ இவ்வாறு எழுதுகிறார்:

'ஒரு மனிதன் பிச்சை எடுக்கும்போது, அவன் தலை குனிந்து குரலைத் தாழ்த்துகிறான். ஒரு தேசம் பிச்சை எடுக்கும்போது, அது தலை தாழ்ந்து தன் ஆன்மாவை இழந்து விடுகிறது.'

இது ஃபனான் 'தேசியநனவின் ஆபத்துகள்' என்று அழைத்ததன் சாரத்தை படம் பிடிக்கிறது, அங்கு அரசியல் சுதந்திரம் ஒரு அடிப்படைப் பொருளாதார அடிமைத்தனத்தை மறைக்கிறது. காலனித்துவத்திற்கு பிந்தைய அரசுகள் உலகளாவிய முதலாளித்துவ அமைப்பிலிருந்து விலகாவிட்டால், அவை கட்டமைப்பு ரீதியாக சார்ந்து இருக்கும் - உலகளாவிய உழைப்புப் பிரிவின் வெறும் இடைத் தரகர்களாகவே இருக்கும் என்று ஃபனான் எச்சரித்தார்.

சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் வளர்ச்சியின் சித்தாந்தத்தை குறிவைத்து தியாங்கோ இந்த விமர்சனத்தை உருவாக்குகிறார். கட்டமைப்புச் சீர்திருத்தத் திட்டங்கள், கடன் பொறிகள் மற்றும் நன்கொடையாளர்களால் இயக்கப்படும் சீர்திருத்தங்கள் நடுநிலை பொருளாதார தலையீடுகளாக சித்தரிக்கப்படவில்லை, மாறாக வர்க்க ஆதிக்கத்தின் கருவிகளாக சித்தரிக்கப்படுகின்றன. இது சமீர் அமினின் 'துண்டித்தல்' கோட்பாட்டுடன் நெருக்கமாக ஒத்துப்போகிறது, இது புறநாடுகள் உலகளாவிய முதலாளித்துவ மையத்திற்கு அடிபணிவதைத் துண்டிக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறது. காகத்தின் வழிகாட்டி நாவலில், 'உதவி' என்ற கருத்து ஏகாதிபத்தியத்தின் ஒரு வடிவமாகக் காட்டப்பட்டுள்ளது - இது எவ்வாறு உள்நாட்டு பொருளாதாரத்தை மறுவடிவமைத்து கூட்டு இறையாண்மையை பலவீனப்படுத்துகிறது என்பதைத் தெளிவாக விபரிக்கிறது.

'செயற்றிறன்', 'முதலீடு' மற்றும் 'ஆட்சி' என்ற மொழியைப் பேசும் அதேவேளையில் நன்கொடையாளர் நிதிகளுக்காக போட்டியிடும் அமைச்சர்கள், வங்கியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் இங்கு புதிய வடிவங்களில் மீண்டும் தோன்று கிறார்கள். இந்தக் கதாபாத்திரங்கள் வால்டர் ரோட்னி 'பெரும்பான்மையைச் சுரண்டும் பொருளாதார கட்டமைப்புகளைப் பராமரிப்பதில் உயிர் வாழும் ஓர் உயரடுக்கு வர்க்கம்' என்று தனது புத்தகத்தில் விமர்சித்ததை நினைவூட்டுகின்றன. இந்த உலகில், அதிகாரம் செயற்றிறன் மிக்கது மற்றும் அபத்தமானது, ஆனால் அதன் விளைவுகள் - வெகுஜன வேலையின்மை, அடக்கு முறை மற்றும் சமத்துவமின்மை - உண்மையானவை என்பதை கதையோட்டத்தின் ஊடு இந்த நாவல் அழகாகவும் எளிமையாகவும் விளக்கிச் செல்கிறது.

> "சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் வளர்ச்சியின் சித்தாந்தத்தை குறிவைத்து தியாங்கோ இந்த விமர்சனத்தை உருவாக்குகிறார். கட்டமைப்புச் சீர்திருத்தத் திட்டங்கள், கடன் பொறிகள் மற்றும் நன்கொடையாளர்களால் இயக்கப்படும் சீர்திருத்தங்கள் நடுநிலை பொருளாதார தலையீடுகளாக சித்தரிக்கப்படவில்லை, மாறாக வர்க்க ஆதிக்கத்தின் கருவிகளாக சித்தரிக்கப்படுகின்றன."

'காக்கையின் மந்திரவாதி' என்று அழைக்கப்படும் கதாநாயகன் கமிதி, தீவிரமான புரட்சிகரச் சிந்தனைகளை உடைய குழுவின் தலைவரான நியாவேரா ஆகிய இருவரும் ஏமாற்றுதல், நாசவேலை செய்தல் மற்றும் இறுதியில் புரட்சிகர ஏற்பாடு மூலம் எதிர்க்கின்றனர். அவர்களின் போராட்டம் பெரும்பாலும் மார்க்சிய இயங்கியலின் செல்வாக்குக்குட்பட்டதைக் குறிக்கிறது - தவறான விடுதலைக்கும் உண்மையான விடுதலைக்கும் இடையிலான வேறு பாட்டை இது ஆராய்கிறது. கமிதியின் மாய செயற்றிறன் மற்றும் நியாவேராவின் பொருள்முதல்வாத செயற்பாட்டின் மூலம், எதிர்ப்பு குறியீட்டு ரீதியாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் இருக்கவேண்டும் என்று தியாங்கோ அறிவுறுத்துகிறார்: அது முதலாளித்துவத்தின் சித்தாந்தத்தை அதன் பொருள் எந்திரத்தைப் போலவே எதிர்கொள்ளவேண்டும் என்று இந்நாவலின் வழி கோருகிறார்.

காக்கையின் மந்திரவாதி கிராம்சியின் மேலாதிக்கக் கருத்தையும் நிரூபிக்கிறார். ஆளும் வர்க்கங்கள் வற்புறுத்தலின் மூலம் மட்டுமல்ல, சம்மதத்தை உருவாக்குவதன் மூலமும் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்கின்றன என்ற கருத்தை அப்பாத்திரம் பிரதிபலிக்கிறது. நாவலில், ஆட்சியாளரின் ஆட்சி அரச ஊடகங்கள், நன்கொடையாளர் பாராட்டு, மத தேசியவாதம் மற்றும் 'அபிவிருத்தி' என்ற காட்சியால் ஆதரிக்கப்படுகிறது. ஆயினும்கூட, வதந்திகள், கதை சொல்லல், இரகசிய புரட்சிகர இயக்கங்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் கேலிச்சிரிப்பு ஆகியவற்றில், மேலாதிக்க










எதிர்ப்பு இடங்கள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதையும் இந்நாவல் எடுத்துக் காட்டுகிறது. இதில் நையாண்டி எதிர்ப் பாக மாறுகிறது, செயல்திறன் கற்பித்தலாகமாறுகிறது.

மாயாஜால யதார்த்தவாதம், கேலிக்கூத்து மற்றும் மிகைப்ப டுத்தல் ஆகியவற்றை தியாங்கோ பயன்படுத்துவது மார்க்சிய யதார்த்தவாதத்தை கைவிடுவது அல்ல, மாறாக அதன் தழுவல் ஆகும். பிரெக்டின் நாடகத்தைப் போலவே, இந்த சாதனங்கள் அதிகாரத்தை அவமதிக்கின்றன, வாசகர்கள் தாங்கள் இயல்பாக்கியதைக் கேள்வி கேட்கவைக்கின்றன. புரட்சிகர கலாசாரம் காலனித்துவ அறிவியலை சீர்குலைத்து புதிய நனவை உருவாக்கவேண்டும் என்ற அமில்கார் கப்ராலின் நம்பிக்கையுடன் இது தன்னை இணைத்துக் கொள்கிறது.

காகத்தின் வழிகாட்டியில், காலனித்துவத்திற்கு பிந்தைய நெருக்கடி என்பது மோசமான நிர்வாகம் அல்லது தனிநபர் ஊழல் பற்றியது மட்டுமல்ல, உலகளாவிய மூலதனத்தில் முறையான சிக்கலைப் பற்றியது என்பதை தியாங்கோ மீண்டும் வலியுறுத்துகிறார். ஆபிரிக்காவில் வர்க்கப் போராட்டம் கடன், உதவி மற்றும் நிதிக் கட்டுப்பாட்டின் நாடு கடந்த சுற்று களில் பொதிந்துள்ளது என்பதை உணர்ந்த, அவரது விமர் சனம் தேசிய அரசைக் கடந்துசெல்கிறது.

## நிறைவுக் குறிப்புகள்:

தியாங்கோவின் நாவல்கள் வெறும் காலனித்துவத்திற்குப் பிந்தைய விமர்சனத்திற்கான இலக்கியப் படைப்புகள் மட்டு மல்ல. அவை முதலாளித்துவம், நவகாலனித்துவம் மற்றும் கலாசார ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் ஆழமாக ஈடுபட்டுள்ள தலையீடுகளாகும். ஆபிரிக்க யதார்த்தங்களில் வேரூன்றிய மார்க்சியக் கோட் பாட்டிலிருந்து பெறப்பட்ட தியாங்கோவின் புனைகதை சுதந் திரத்தின் துரோகங்கள், தரகுமுதலாளித்துவத்தின் வன்முறை மற்றும் உலகளாவிய மூலதனத்தின் கருத்தியல் ஆதிக் கத்தை எதிர்கொள்கிறது. கரேகா, வாரியங்கா மற்றும் கமிதி போன்ற கதாபாத்திரங்கள் மூலம், தியாங்கோ சுரண்டல் மற்றும் எதிர்ப்பின் இயங்கியலை நாடகமாக்கினார். நாவலைப் புரட்சிகர உணர்வு கற்பனைசெய்யப்பட்டு செயல்படுத்தப் படும் இடமாக மாற்றினார்.

கார்ல் மார்க்ஸ், அன்டோனியோகிராம்சி மற்றும் ஃபிரான்ட்ஸ் ஃபனான் போன்ற மார்க்சிய சிந்தனையாளர்களுடனான அவரது ஈடுபாடு தற்செயலானது அல்ல, அது உரையாடல் சார்ந்தது - அவர் அவர்களின் நுண்ணறிவுகளை ஆபிரிக்க அரசியல் பொருளாதாரம் மற்றும் கலாசாரத்தின் பிரத்தியேகங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கிறார். காலனித்துவ பேராசையை பிரதிப லிக்கும் ஒரு தேசிய முதலாளித்துவத்தின் தோற்றத்தை இரத் தத்தின் இதழ்கள் விமர்சிக்கிறது. சிலுவையில் தொங்கும் சாத்தான் ஒருஉலகளாவிய அமைப்பிற்குள் உள்ளூர் முதலா ளித்துவவாதிகளின் ஒட்டுண்ணித் தன்மையை நையாண்டி செய்கிறது. காகத்தின் வழிகாட்டி சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் 'அபிவிருத்தி' என்ற கதையாடலின் சித்தாந்த சக்தியை உள்ளடக்கிய விமர்சனத்தை விரிவுபடுத்துகிறது. முழுவதும், உண்மையான விடுதலை கீழிருந்து வரவேண்டும் என்று தியாங்கோ வலியுறுத்துகிறார் - மக்களின் விழிப்பு ணர்வு, பூர்வீக மொழிகளை மீட்டெடுப்பது மற்றும் உயரடுக்கு உடந்தையாக இருப்பதை நிராகரிப்பது மூலம் இது சாத்திய மாகும் என்று அவர் எடுத்துரைக்கிறார்.

அவரது மார்க்சியம் பிடிவாதமானதோ வரட்டுத் தத்து வார்த்தை அடிப்படையாகக் கொண்டதோ அல்ல. அது நாடுகடத்தல், சிறைவாசம் மற்றும் மக்கள் ஈடுபாட்டால் வடிவ மைக்கப்பட்ட ஓர் உயிரோட்டமான நடைமுறை. வர்க்கப் போராட்டத்தை கதையிலும், கதையாடலை போராட்டத்திலும் உட்பொதிப்பதன் மூலம், தியாங்கோ பின்காலனித்துவ சமூ கத்தில் எழுத்தாளரின் பங்கை மறுவரையறை செய்கிறார்: வர லாற்றைப் பார்ப்பவராக அல்ல, மாறாக அதன் மாற்றத்தில் பங்கேற்பவராக. இந்த அர்த்தத்தில், தியாங்கோவின் நாவல்கள் வெறும் விமர்சனமாக மட்டுமன்றி அதைவிட அதிகமாக வழங்குகின்றன. அவை எதிர்ப்பின் செயல்கள். அவை வாச கர்களை உலகை வித்தியாசமாகப் பார்க்க மட்டுமல்ல, அதை மாற்றவும் கோரிச் சவால் விடுகின்றன.

(தொடரும்...)



meenilankco@thaiveedu.com

# எதிர்ப்பும் கவிதையும்

## அஷ்ரஃப் சிஹாப்தீன் கவிதைகளை முன்வைத்து

ஜிஃப்ரி ஹாசன்

1980-களுக்குப் பின் ஈழத் தமிழ்ச் சூழலிலிருந்து மிக முக்கியமான எதிர்ப்புக் கவிதைகள் மேற்கிளம்பின. அஷ்ரஃப் சிஹாப்தீன் போன்றவர்கள் முஸ்லிம் சமூகத்துக்குள்ளிருந்து தீவிர மாக இந்த எதிர்ப்புக் குரலை உயர்த்தினர். இவரது கவிதைகளில் வெளிப்படும் எதிர்ப்புக் குரல் முஸ்லிம் அரசியல் பண்பாட்டுச் சமூகச் சூழல் மீதான உள்ளக எதிர்ப்பு அல்லது மறுவிசாரணை என்ற வகையிலும், முஸ்லிம் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட புற அடக்குமுறைகள் மீதான எதிர்ப்பு என்ற வகையிலும் இருவகைகளில் முகிழ்த்திருக்கிறது.

இலங்கை முஸ்லிம்களை அரசியல், பண்பாடு, சமூக இயக்கம் சார்ந்த உள்ளகரீதியாகப் பலவீனமும், அறியாமையும், முரண்களையும் கொண்டமைந்த சமூகமாக அஷ்ரஃப் சிஹாப்தீன் காண்கிறார். சமூகத்துக் குள்ளிருந்தே சில தரப்புகள் தங்களது சுயநலன்களுக்கு பயன்படுத்திக் கொண்ட இந்த அறியாமையையும் அபத்த நிலைமையையும் அஷ்ரஃப் சிஹாப்தீன் கவிதைகளில் வெளிப் படுத்துகிறார். இதனால் அவற்றின் மீதான தவிர்க்க முடியாத தன் எதிர்வினைகளை ஆற்றுகின்றார். ஒரு காலகட்டத்தின் தவிர்க்க முடியாத குரலாக, விமர்சனமாக, மாற்றத்து க்கான அடியெடுத்து வைப்பாக, அவற்றை நம்பிக்கையுடன் காலத்தின் முன் ஒப்புவித்த கவிஞனாக அவர் தோன்றுகிறார். அவருடைய 'மீலாத் வந்திரு க்கிறது' என்ற கவிதை இந்த வெளியில் நம் கவனத்தை யீர்க்கிறது.



*'மீலாத் வந்திருக்கிறது எழுந்து வாருங்கள்*
*எவ்வளவோ செய்யலாம்.*
*மேடையிரண்டில் ஏறி முழங்கலாம்*
*பிரதம அதிதிக்கு காக்காய் பிடித்துக்*
*காரியம் சிலதைக் கவனித்துக்கொள்ளலாம்!*
*சோடாப் போத்தல் உடைத்துக் குடித்து*
*கோபக்காரனை கீறிக்கிழிக்கலாம்...'*

எனத்தொடரும் இந்தக் கவிதை 1985-இல் எழுதப்பட்டி ருக்கிறது. இது சமூகத்தின் மீதான ஓர் உள்ளார்ந்த விமர்சனமாக / எதிர்வுகூறலாக அந்நாட்களிலேயே அமைந்த கவிதை. ஆழமான பண்பாட்டு உரையாடல்கள், புரிதல்கள், மறுபார்வைகள் எதுவுமின்றி சில்லறையான விசயங்களிலும் கூட ஆழ்ந்த முரண்களையும், மோதல்களையும் கொண்டிருந்த சமூகச்சூழலே அன்றும் இருந்தது என்ற அவலத்தின் சாட்சியாக அமைந்த கவிதை அது. பண்பாடு சார்ந்து முஸ்லிம்களுக்குள் நிகழப்போகும் மாற்றங்கள் எந்தளவு ஆரோக்கியமானது, அவர்களின் வரலாறு, பண்பாடு, தொன்மம் சார்ந்து இத்தகைய மாற்றத்துக்கான முன்னெடுப்புகள் எவ்வளவு தூரம் தூர நோக்கானது என்பது குறித்து ஒரு சமூக அக்கறையுள்ள கவிஞன் என்ற வகையில் அவரிடம் அப்போதே கேள்விகள் இருந்திருக் கின்றன. மிக பிற்போக்கான கலாசார முரண்களும், பிளவுகளும்

சமூக மரபுகளையும், பாரம் பரியங்களையும் சிதைத்து அவர்களைத் தனிமைப்பட்ட சமூகமாக ஆக்கும் தூய்மை வாதம் முஸ்லிம்களுக்குள் உட்புகுத்தப்பட்ட துயரம் நிகழத் தொடங்கிய போதே சமூக அக்கறையுள்ள ஒரு கவிஞனின் எச்சரிக்கை இங்கு கவனிக் கத்தக்கது. இந்தத் தளத்தில் பேசத்தக்க இன்னொரு கவிதை 'அடையாளங்கள்'.

'இறைவனுக்காக
மகனையே குர்பான் செய்த
தத்துவத்தை உணர்ந்து ஆசைகளைக்
குர்பான் கொடுக்க வேண்டிய நாட்களில்
இஸ்லாத்தையே குர்பான் கொடுக்கிறோம்.
இப்போதெல்லாம் கற்களோடு சொற்களும் எறிகிறோம்!
ஷைத்தானை நோக்கி அல்ல
ஷைத்தானிடம் வாங்கி!
குர்பான் இறைச்சியை எல்லோருக்கும்
கொடுக்கிறோம்–
ஏழைகளைத் தவிர!'

இது முஸ்லிம் சமூகம் பின்பற்ற வேண்டிய அறங்கள். மதரீதியாகச் சொல்லப்பட அறங்கள் எப்படி சமூகத்தால் தனிநபர்களால் மீறப்படுகின்றன என்பதை இக்கவிதை பேசுகிறது. அறம் பிழைத்துக்கொண்டிருக்கும் இந்தச் சமூகச் சூழல் மீதான ஒவ்வாமையின் வெளிப்பாடு இந்தக் கவிதை. ஏன் இப்படியாக நிகழ்ந்தது என்பதற்கு அவரது 'காணாமல் போனவர்கள்' கவிதையில் பதில் கிடைக்கிறது.

'யூஸூப்களைப் போன்று இவர்கள்
அறியாமைக் கிணறுகளில் தள்ளப்பட்டிருக்கலாம்!
தான்தோன்றித்தனத்தால்
தாமாகவே விழுந்துமிருக்கலாம்!'

'ஒரு செய்தியின் ஊர்வலம்' மற்றொரு உதாரணமான கவிதை. ஊர் வாயில் சிக்கிய ஒருவரது அந்தரங்கம் எப்படி பகிரங்கமாக வாய்க்கு வாய் அசிங்கமாகக் கடத்தப்படுகிறது என்பதை பகடியாக இந்தக் கவிதை பேசுகிறது. இத்தகைய சமூக விமர்சனங்களை மிக சீரியஸான தொனியில் முன் வைப்பதை விடவும் பகடியாக முன்வைக்கும் எள்ளல் தொனி இத்தகைய கவிதைகளுக்கு ஒரு பலமாகத் தெரிகிறது. அதை அஷ்ரஃப் சிஹாப்தீனின் பெரும்பாலான கவிதை களின் பொதுப் பண்பாகவும் நான் காண்கிறேன்.

'மூங்கிற் காட்டினிலே
மூண்டெழுந்த நெருப்பினைப் போல்
ஒரு செய்தி–
ஊர்வாய்கள் அனைத்திலுமே
ஊர்வலமாய் வருகிறது!'

ஆனால் இந்த செய்தியைக் கடத்துபவர்கள் ஒருவரும் யோக்கியர்கள் கிடையாது என்பதை எள்ளலாக கவிதை முன்வைக்கிறது.

'பத்தாயிரத்துக்கு பேசி அடுத்த தினம்
திருமணமென்றிருந்தது–பின்னாலே
பன்னிரண்டுக்கு புரோக்கர் பேசி வரப்
புதிய பெண் வீட்டில் புகுந்த பாருக்கும்...
தாரையழைக்கத் திராணி இல்லாமல்
பெண்டாட்டியவளை பிறநாடு அனுப்பிவிட்டுக்
கொண்டாடித் திரிகின்ற குள்ளக் குத்தூஸூம்...
தெருவோரத்து தேங்காய்க் கடையோரம்
விமர்சித்து நின்றார்கள்!'

இந்த 'யோக்கியர்'களோடு இன்னும் சில 'யோக்கியர்' களையும் கவிதை நமக்கு அடையாளப்படுத்துகிறது. அடுத்த வீட்டு அதிபர் மகளின் கற்பனையில் சதாவும் வாழும் வங்கிக் காசாளன் வஹ்ஹாபும், ஏழைக் குமரொன்றை ஏமாற்றித் திருமணம் செய்யாது 'வைத்திருக்கும்' காசிம் காக்காவின் கடைசி மகன் ஹமீதும் சீதனமாக மோட்டார் சைக்கிள் கேட்டு மூன்று வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த மனைவியை மாமியார் வீட்டுக்கு விரட்டிவிட்ட முக்தார் மாஸ்டரும் யோக்கியர்-களோடு இன்னும் சில 'யோக்கியர்களாக வந்து செல்கின்றனர்.

'சீதனமாய் பதினைந்தும் சிறந்ததொரு கல்வீடும்
திருமணத்தன்று தங்க மோதிரத்தை
கையில் போடுவது ஹராமென்ற காரணத்தால்
பொக்கற்றில் வாங்கிப் போட்டுக் கொண்டு
ஹலாலைப் பேணிவரும் காசிம் மௌலவியும்'
அந்த செய்தியைப் பரப்புரை செய்கின்றனர்...'

இத்தகைய குறைகூறல்களும், பிழை கண்டுபிடிப்புகளும் ஒரு பிற்போக்கான சமூகத்தின் அடையாளமாக உள்ளது. அதன் மீது ஒரு கவிஞருக்கிருக்கும் ஒவ்வாமையும், விமர்சனமும் இச்சூழல் மீதான முக்கிய எதிர்வினையாகப் பதிவாகியுள்ளது.

தன் அருகிலிருக்கும் சமூகத் தேவைகளைப், பணிகளைப் புறக்கணித்து வெறும் வணக்க வழிபாடுகள் மூலம் மட்டுமே 'சுவனத்தை' அடையும் அசட்டு நம்பிக்கையுடன் வாழும் முஸ்லிம் செல்வந்தர்கள், ஈமான்தாரிகள் (விசுவாசிகள்) மீது ஒரு விமர்சனத்தைப் பதிவுசெய்யும் கவிதை 'அசையும் அடித்தளம்.'

மதச்சடங்குகளை மகிழ்ச்சியாகச் செய்பவர்கள், அடித்தட்டு மக்கள் மீது சற்றும் கருணை காட்டாத நிலையில், பெரும் ஆன்மீக ஈடேற்றத்தை கனவு காண்பதை பெரும் அபத்தமாக அஷ்ரஃப் சிஹாப்தீன் காண்கிறார்.

'விண்ணைத் தகர்த்திடிக்கும்
விதம் விதமாய் மாளிகைகள்
கண்ணைப் பறிக்கும் நிறக்கார்கள் சகிதம்தான்
புண்ணிய ஏழைவறி பிறவி எடுத்து நிற்க
கண்ணீர் நதியினிலே
ஏழைக் குடிசைகள் நனைகின்றன...'

தன் சமூகப் போக்கினைக் கூர்ந்து நோக்கி ஆழமான உள்ளக விமர்சனங்களை முன்வைத்த அவரது கவிதைகள் முஸ்லிம் மக்கள் மீதான புற அழுத்தங்கள், அத்துமீறல்கள் மீதான எதிர்வினைகளும் இவரது கவிதைகளில் பதிவாகியு ள்ளன.

'ஸெய்த்தூன்' இந்த வகையில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பெரும் கவிதை. அந்நாட்களில் இது மிகத் தீவிரமான உரையாடல்களிலும், சர்ச்சைகளிலும் இருந்த கவிதை. போர் தொடங்கிய பின் முஸ்லிம் எல்லைக் கிராமங் களில் முஸ்லிம்களின் இருப்பும், பாதுகாப்பும் பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளான சூழலை தீவிர உணர்ச்சி யோடு பேசிய கவிதை அது.

எனினும் இவரது பெரும்பாலான அரசியல் எதிர்ப்புக் கவிதைகள் பொதுவாக வன்முறை, இன அடக்குமுறைகள், ஜனநாயக மறுப்பு போன்ற மானுடத்துக்கு எதிரான சூழல்களைக் குறுகிய இன மத எல்லைகளைக் கடந்து பொதுவாக எதிர்த்து நிற்பவைதான். 'யாரோ ஒருவர்' இதற்கு நல்ல எடுத்துக்காட்டான கவிதை.

'குண்டு வெடிப்பில் குதறப்பட்டவர்
யாரோ ஒருவர்தான்
குண்டு துளைத்துக் குருதியில்கிடந்தவர்
யாரோ ஒருவர்தான்
கண்ணி வெடியில் கொல்லப்பட்டவர்
யாரோ ஒருவர்தான்
கடத்தப்பட்டு காணாமல் போனவர்
யாரோ ஒருவர்தான்
க்றொஸ் ஃபயறில் அகப்பட்டு அகாலமானவரும்
விறகு தறிக்கச் சென்று வீடு திரும்பாதவரும்
யாரோ ஒருவர்தான்
எறிந்துவிழ்ந்த டயருக்குள்
எலும்பாய் கிடந்தவரும்
பாதி கருகியும் பாதி கருகாமலும்
பாதையில் கிடந்தவரும்
யாரோ ஒருவர்தான்...'

இந்த யாரோ ஒருவர் யாராகவும் இருக்கலாம். இலங்கையின் போர்க்கால சூழலில் இந்த யாரோ ஒருவர் எந்த இனம் மொழி இடம் எனப் பார்க்கப்படவில்லை. மனிதர்கள் பிணங்களாக உதிர்ந்துகொண்டிருந்த அவலத்தின் குறியீடாக நிற்கிறது இந்தக் கவிதை. இது ஒரு காலகட்ட இலங்கை அரசியல் சமூகச் சூழலைக் களயதார்த்தத்தோடு சித்தரிக்கும் கவிதை. எதன் எதிர்ப்பாக அவரிடமிருந்து இத்தகைய கவிதைகள் வெளிப்பட்டன? மொழியின் பெயரால், இனத்தின் பெயரால், பண்பாட்டின் பெயரால் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட மொத்த வன்முறைகளையும் ஒடுக்குமுறைகளையும் அவர் மானுட த்தின் மீது நிகழ்த்தப்பட்ட அத்துமீறலாகவும், வன்மமாகவுமே புரிந்துகொள்கிறார் என்பதையே அவரது எதிர்ப்புக் கவிதை கள் உறுதியாகச் சொல்கின்றன.



jiffry.hassan@thaiveedu.com





# ஒளிக்காலக் கதைகள் வேணி கிருபாகரனின் கதைகளின் வெளி

## - கருணாகரன்

'இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி, வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி' என்று சொல்லப்படும் பிரபலமான கூற்றொன்று உண்டு. இலக்கியத்தில் உள்ளடக்கப்படும் காலச் சித்திரிப்பும் அதில் அமையும் வாழ்க்கை பற்றிய நோக்கும் இந்தக் கூற்றை - கருத்தை - உருவாக்கியிருக்கிறது. மேற்கு - கிழக்கு என்ற வேறுபாடில்லாமல் எல்லாத் திசைகளிலுமுள்ள பெரும்பாலான இலக்கிய விமர்சனத்தில் இந்த நோக்குப் பின்பற்றப்படுகிறது. அப்படியென்றால், இலக்கிய வாசிப்பை அவர்கள் இந்த அடிப்படையில், இந்த நோக்கில்தான் மேற்கொள்கிறார்கள் என்று புரிந்து கொள்ளலாம். ஆனால், இலக்கியம் இதற்கும் அப்பாலானது. அது பல பரிமாணங்களில் விரிந்து விரிந்தே செல்லக் கூடியது. அதற்கு எல்லை வானத்திற்கும் அப்பால். அதுவும் இந்தப் பின்நவீனத்துவ யுகத்தில் கலை, இலக்கியம், அரசியல், பண்பாடு, மொழி, வரலாறு என அனைத்திலும் புதிய பார்வைகள் உருவாகியுள்ளன. அந்தப் பார்வைகள் இந்த எல்லைகளை இன்னும் விரிக்கின்றன. புதிய கண்ணோட்டங்களையும் புதிய சிந்தனைத் தூண்டல்களையும் ஏற்படுத்துகின்றன.

வேணியின் சிறுகதைகள், ஒரு காலத்தின் மனிதர்களையும் அவர்களுடைய வாழ்க்கையையும் அது நிகழும் சூழலையும் மையப்படுத்தி, யதார்த்தவாதக் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டுள்ளன. அது ஈழவிடுதலைப்போராட்டக் காலம், அந்தக் காலத்தின் சூழல், அந்தக் காலத்திலும் அந்தச் சூழலிலும் வாழ்ந்த மனிதர்கள், அவர்களுடைய உணர்வுகளும் வாழ்க்கையும் நம்பிக்கைகளும் (கனவுகளும்) விருப்பங்களும், அதற்கான சவால்கள், அதற்குள்ளும் கொள்ளுகின்ற தீவிர உள நிலை, இப்படிப் பலவற்றைக் குறித்தவையாக உள்ளன.

'பெண்' என்ற கதையில் வரும் அம்மாவைப் பற்றிய சித்திரிப்பில் 'சங்கர் இயக்கத்திற்குப் போன பின்னர்தான் அம்மா இப்படி எலும்பும் தோலுமாய் துரும்பாகிப் போனாள். அழுதழுது அவள் கண்கள் இடுங்கிப் போனதைத் தவிர வேறு பயனெதுவுமில்லை. துப்பாக்கி வேட்டுகளும் குண்டுச் சத்தங்களும் கேட்கும் ஒவ்வொரு கணமும் அம்மா செத்துச் செத்துப் பிழைத்துக்கொண்டிருந்தாள். சங்கருக்கென்று அம்மா பிடிக்கும் விரதங்களையும் செய்யும் நேர்த்திக்கடன்களையும் நினைத்துப் பார்த்தாள் கீதா' எனச் சொல்லும்போது, அந்தக் காலச் சூழலும் அன்றைய பெரும்பாலான அன்னையரின் நிலையும் புலனாகிறது. இதையொத்த நிலையை ரஞ்சகுமாரின் 'கோசலை'யிலும் பார்க்க முடியும். ஈழப்போராட்டத்தில் மட்டுமல்ல, உலகெங்குமுள்ள போராட்டங்களில் துயரைச் சுமப்போராகப் பெண்களே - அதிகமாக அன்னையர்களே இருந்துள்ளனர், இருக்கின்றனர். ஆண்கள் இதற்கு வெளியே - முரண் நிலையில் - பெருமிதங்களோடும், கற்பனைகளோடும் இருக்கின்றனர். இதற்கு இதே கதையில் இன்னொரு அடையாளத்தைச் சுட்டலாம்.

முற்றத்து வேப்பமர நிழலில் கதிரை ஒன்றில் சாய்ந்திருந்தபடி அவள் தந்தை பரமசிவம், பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார். அவர் பத்திரிகையை படித்து முடிக்க இரண்டு மணித்தியாலமாவது எடுக்கும். அந்தளவிற்குச் செய்திகளை எல்லாம் நுணுக்கமாக வாசிப்பார் அவர்.

நான்கு வருடத்திற்கு முன்னர் சங்கர் இயக்கத்திற்குப் போனபோது அம்மா அழுதழுது கூறியது அவள் செவிகளில் மறுபடியும் ஒலித்தது. 'உந்த மனிசன் வேலை இல்லாமல் பேப்பரைப் படிச்சு அரசியல் கதைச்சுக்கொண்டு இருந்ததாலை தான் அவனும் அதைப் பாத்திட்டு இயக்கத்திற்குப் போனவன்...'

சங்கர் இயக்கத்திற்குப் போய்விட்டான் என்பதையறிந்து அம்மா புழுவாகத் துடித்துக் கதறியழுதபோது பரமசிவம் மட்டும் பெருமிதத்துடன் நடந்தார்.

'என்ன நடந்திட்டுது எண்டு இப்ப செத்தவீடு கொண்டாடுகிறாய்?அவன் தன்ரை நாட்டைக் காக்கிறதுக்காய்ப் போராடப் போயிருக்கிறான். அவனைப்போல நாட்டுப்பற்றுக் கொண்டவனை பிள்ளையாகப் பெற்றதுக்கு நீ சந்தோசப்பட வேணும்...'

இந்த உண்மை சாதாரணமானதல்ல. பெண்களின் மனதையும் அவர்கள் சுமந்துகொண்டிருக்கும் துயரையும் புரிந்துகொள்ளத் தவறும், பொருட்படுத்த மறுக்கும் உளநிலையின் சிறந்த வெளிப்பாடு இது. அன்னையரின் (பெண்களின்) துயரத்தை அவர்களோடு உடனிருப்போர்கூடப் புரிந்து கொள்ளவில்லை. அதற்கெல்லாம் 'வெவ்வேறு விதமாக அழகுபடுத்தப்பட்ட' வியாக்கியாக்கியானங்களே சொல்லப்பட்டன; சொல்லப்படுகின்றன. ஆனால், இறுதியில் என்ன நடந்தது? அத்தனை வியாக்கியானங்களும் (நியாயப் படுத்தல்களும்) பொருளற்று, உலர்ந்து காணாமற்போயின. இதற்குப் பிறகுகூட எந்தத் தந்தையும் (ஆணும்) இதையிட்டுக் குற்றவுணர்ச்சி கொள்ளவுமில்லை; பொறுப்புக் கூறவுமில்லை.

அன்னையரின் துயரமும் அவர்கள் சிந்திய கண்ணீரும் பொருட்படுத்தப்படாத நிலையே இற்றைவரை நீடிக்கிறது.

போராட்டம் என்றாலே அது எப்பொழுதும் சவாலும் நெருக்கடியுமான வாழ்க்கைதான். அந்தப் போராட்டம் போரை நோக்கி நகர்ந்தால் சொல்லவே வேண்டியதில்லை. இழப்பு, துயரம், சிதைவு, அவலம், நெருக்கடி, வலி என்று தீராத பேரவலப் பரப்பு நீளும். இன்றைய (2025) காசா இதற்கொரு உதாரணம். பசியும் மரணமும்தான் அங்கே மேலோங்கியிருக்கும். ஏனென்றால், ஒடுக்குவோர், மிகக் கீழ்மையான முறையில் தமது அதிகாரத்தைப் பிரயோகித்து போராடும் மக்களிடம் பட்டினியையும் மரணத்தையும் பொறியாக உருவாக்குகிறார்கள். போராடும் மக்களைப் பணிய வைப்பதற்கு இந்தக் கீழ்மையை உபாயமாகப் பயன்படுத்துகிறார்கள். இது மிக இழிவான அரசியல். மனித குலம் பன்னெடுங்காலமாக முயன்று உருவாக்கிய விழுமியங்களின் சரிவு. ஆனால், உலகம் இதைக் கண்டும் காணாதது போல கள்ளத்தனமாகவே இருக்கிறது. அதுதான் உலகம். அதுதான் நடப்பியல் அறம். அதுதான் யதார்த்த அரசியல். அதுதான் நடப்பியல் விழுமியமாகும்.

இதற்குள்ளும் கொள்ளுகின்ற இலட்சியப் பிடிப்பு முக்கியமானது. அது ஒரு வகையான ஓர்மம். சிலவேளை அதொரு பைத்தியக்காரத்தனம் என்றுகூடச் சொல்லலாம். சோக்ரட்டீஸ் நஞ்சருந்த வேண்டியிருந்ததும் கிறிஸ்து சிலுவையிலேற்றப்பட்டதற்கும் கம்பன் தன்னுடைய புத்திரனை இழந்ததற்கும் புருணே உயிரோடு எரிக்கப்பட்டதற்கும் அரிச்சந்திரன் அரசாட்சியை இழந்து மயானப் பணிக்குச் சென்றதற்கும் உலகெங்கும் பல்லாயிரக்கணக்கான விடுதலையாளர்கள் தங்கள் உயிரையும் வாழ்வையும் இழந்ததற்கும் அவர்களுக்குள்ளிருந்த இலட்சிய தாகமும் அதற்கான ஓர்மமும் இந்தப் பைத்தியக்காரத்தனமும்தான் காரணம். எல்லா இலட்சியவாதத்திற்குள்ளும் ஒருவகையான பைத்தியக்காரத்தனமிருக்கும். அடங்க மறுக்கும் ஓர்மம் இருக்கும். ஆனால், அந்தப் பைத்தியக்காரத்தனத்தினால்தான் இந்த உலகம் இந்தளவுக்காவது நியாயமாகவும் ஒளியோடும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஆனால், அந்தப் பைத்தியக்காரத்தனம் இரக்கமற்றது. அது கோருகின்ற பலி சாதாரணமானதல்ல. அது தன்னுடைய இளமையின் குருதியை, தன்னுடைய இளமையின் வாழ்க்கையை, தன்னுடைய இளமையின் ஆற்றலை, தன்னுடைய இளமையின் உயிரை எல்லாவற்றையும் பலியிடும். ஆனால், அது மகத்தானது. ஒளி கூடியது.

இதற்கு மறுதலையான இன்னொரு பக்கமும் உண்டு. அதையும் பார்க்க வேண்டும். அதனுடைய ஒரு நிலையையே 'பெண்' என்ற கதையில் வகைமாதிரியாகப் பார்த்தோம். இன்னொரு நிலை, போராடித்தான் வாழ வேண்டும் என்ற நிர்ப்பந்தம். அதற்குத் தன்னை - தம்மை - பலியிட்டு தீர வேண்டிய நிலை. அப்படித் தன்னைப் பலியிட்டுத்தான் வாழ வேண்டும் என்றால், அநீதியும் அதிகாரமும் அடக்குமுறையும் இன்னமும் இந்தப் பூமியில் நீடிக்கின்றன என்றால், மானுட அறிவுக்கும் மானுடர் உருவாக்கிய விழுமியங்களுக்கும் என்ன பெறுமதி? அவற்றின் மெய்யான பொருள் என்ன? என்ற கேள்விகள் எழுகின்றன. இதையிட்ட வாதப் பிரதிவாதங்களும் உள, உறவு மோதல்களும் நிறைய உண்டு. இந்தக் கதைகள் இவை எல்லாவற்றையும் பிரதிபலிக்கின்றன. மட்டுமல்ல, சமாந்தரமாகப் பல கேள்விகளையும் எழுப்புகின்றன. உலகின் நீதி, உண்மை, நியாயம் என்ன என்று கேட்கின்றன; நம்மைக் கேட்க வைக்கின்றன. இந்த உலகில் எல்லோருக்கும் உண்மையும் நீதியும் என்னவென்று தெரியும். நமக்குப் பசிப்பதைப்போலவே மற்றவர்களுக்கும் பசிக்கும் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு ஏழாவது அறிவு வேண்டுமா? நமக்கு நீதி வேண்டுவதைப்போல பிறருக்கும் நீதி வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வதற்கு எட்டாவது அறிவு தேவையில்லை. ஆறறிவு மட்டுமல்ல, ஐந்தறிவே போதுமானது.

ஆனாலுமென்ன, இந்தப் பூமியில் நீதியின்மையே நீடிக்கிறது. நீதியின்மை கோலோச்சுவதைப் பற்றிப் பொருட்படுத்தாமல் இனமாகவும் மதமாகவும் நாடுகளாகவும் பிளவுண்டுள்ளோம். அப்படிப் பிளவுபடுத்தப்படும் கருத்தியற் சதிக்குள்ளும்




அதிகார உபாயங்களுக்குள்ளும் சிக்குண்டு தவிக்கிறோம். இது தான் உலகம் முழுவதும் காலம் (வரலாறு) முழுவதும் உள்ள நிலைமையும் யதார்த்தமுமாகும்.

அதைப்பற்றியெல்லாம் இப்படியே எழுதிச் சென்றால், அது வேணியின் கதைகளைப் பற்றிய கவனிப்புக்கு அப்பால் சென்று, இன்னொரு கவனப்புலத்தை உருவாக்கிவிடும். அது இந்தக் கதைகளைப் பற்றிய உரையாடலின் எல்லையை மீறியதாகியும் விடும். எனவே அதையெல்லாம் இந்தளவோடு இங்கே நிறுத்திக் கொள்வோம். ஆனாலும் இதையெல்லாம் வேணியின் கதைகள் உள்ளோட்டமாக உணர்த்துகின்றன; படிக்கும்போது தெளிவாகக் காட்டுகின்றன.

இத்தகைய பண்புள்ள கதைகளில் இரண்டு விடயங்கள் உள்ளிருக்கும். ஒன்று, அடக்குமுறையின், அநீதியின் வெளிப்பாடு. அடக்குமுறையினால் - அநீதியினால் - மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள். இங்கே மக்களுக்கு மட்டும் பாதிப்பு ஏற்படுவதில்லை. அவர்கள் வாழ்கின்ற சூழலுக்கும் (திணைக்கும்) பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே அவையெல்லாம் பதிவாகின்றன. இரண்டாவது, அடக்குமுறைக்கு, அநீதிக்கு எதிரான எதிர்ப்புணர்வும் விடுதலை அவாவும். இவை இரண்டையும் சாராம்சப்படுத்தி எழுதும்போது தவிர்க்க முடியாமல் இவற்றில் அரசியல் உள்ளோட்டம் சற்றுத் தூக்கலாக அமைந்துவிடுகிறது. அப்படி அமையும்போது அதற்குரிய மொழியும் வடிவமும் உருவாகிக் கொள்கிறது. இதைப் படைப்பாளிகள் தமது படைப்பாற்றல், கலையுணர்வு அல்லது கலை பற்றிய பிரக்ஞை போன்றவற்றினால் சிறப்பாக்குவதுமுண்டு. சிலபோது மேலோட்டமாக - எளிமையாகவே வெளிப்படுத்துவதுமுண்டு.

வேணியின் கதைகளைப் படிக்கும்போது பல்வேறு உணர்வலைகளும் எண்ணங்களும் கொதிப்போடு மேலெழுந்து வருகின்றன. ஒரு காலம் எழுந்து முன்னிற்கிறது. நாம் கண்ட (சந்தித்த), கூடவே வாழ்ந்த மனிதர்களும் வாழ்ந்த காலமும் களமும் மனதில் மீளத் தோன்றி, பல்வேறு உணர்நிலைகளைத் தருகின்றன. இலக்கியத்தின் சிறப்புக்குரிய அடிப்படையே இதுதான். அதில் அமையும் எந்தக் காலமும் இறந்து உக்கிப்போவதில்லை. அதே உயிர்ப்போடு, அதே வண்ணங்களோடு நித்தியத்தன்மையடைந்திருக்கும். இவற்றை வேணி எழுதிய காலத்திலும் படித்திருக்கிறேன். இதிற் சில கதைகள் நான் ஆசிரியப் பொறுப்பிலிருந்த ‘வெளிச்சம்’ இதழில் வெளிவந்தவை. ஏனையவை அன்று போராட்டச் சூழலைப் பிரதிபலித்த இதழ்களிலும் பிற ஊடகங்களிலும் வெளியானவை.

இன்றைய காலம் முற்றிலும் மாறிவிட்டது. உணர்வுத்தளத்தில் அந்தக் காலத்தின் அடிப்படைகள் இன்னும் இருக்கலாம். அல்லது அவை வேறு விதமான கலவையைக் கொண்டிருக்கலாம். ஆனால், அந்த வாழ்க்கையும் மனிதர்களும் சூழலும் மாறியுள்ளது என்பது உண்மை. இந்தக் கதைகளே அந்த வேறுபாட்டை உணர்த்துகின்றன. இலக்கியத்தின் - கலையின் - ஆற்றலே இதுதான். துல்லியமாக வாழ்க்கையையும் அது நிகழும் காலத்தையும் பிரதிபலிக்கும் அல்லது வெளிப்படுத்தும். எளிய உதாரணம், சத்யஜித்ரேயின் பதேர் பாஞ்சாலி (1955). இத்திரைப்படத்தில் அன்றைய வங்கத்தின் நிலவரத்தையும் அங்குள்ள ஒரு சமூக நிலையையும் சாராம்சப்படுத்தினார் ரேய். இன்று அதைப் பார்க்கும்போது நாம் அந்தக் காலத்துக்கும் அந்தச் சூழலுக்கும் அழைத்துச் செல்லப்படுகிறோம். அப்படியே அந்தக் களம் நமக்கு முன்னே விரிந்து கொள்கிறது. இன்னொன்று, லெஸ்டர் ஜேம்பீரிஸின் கம்பரெலிய (1964). கதைகளில் பல ஆயிரமுண்டு. நம்முடைய சூழலில் ரஞ்சகுமாரின் ‘கோசலை’ அவற்றில் ஒன்று. வரதரின் ‘கற்பு‘ இன்னொன்று. இங்கே காலமும் ஒரு பாத்திரமாகி நிற்கிறது. இப்படி எழுதும்போது, அல்லது ஒரு திரைக் காவியத்தை உருவாக்கும்போது அவற்றில் ஓரம்சமாகக் காலமும் ஒரு முக்கியமான பாத்திரமாகி விடுகிறது. இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டதைப் போலக் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவே வேணியின் கதைகள் அமைகின்றன. காலத்தையும் ஒரு பாத்திரமாகக் கொண்டு எழுவனவாக இக்கதைகள் காணப்படுகின்றன. ஒரு வார்த்தையில் சுருக்கிச் சொல்வதாக இருந்தால் கடந்த காலமொன்றுக்கு அழைத்துச் செல்லும் பழையதொரு புகைப்படமாக (Like an old photograph that takes you back in time).

அந்தக் காலத்தின் மனிதர்கள் கொண்டிருந்த இலட்சிய வேட்கை நிறைவேறாத கனவாகவே போய்விட்டது. இதனால் அன்றைய கனவும் வேட்கையும் இன்றைய துக்கமாகி விட்டன; அப்படி மாறியிருக்கிறது. இதுதான் வரலாற்றின் விதி. இதுதான் காலம் என்பது. மனித வாழ்க்கை எப்போதும் இத்தகைய சவால்களையும் விதிகளையும் ஏற்றே வந்திருக்கிறது. எத்தனையோ கனவுகள், இலட்சிய வேட்கைகள், அதை அடைவதற்கான உந்துதல்கள், அதற்காகச் செலுத்தப்படும் விலைகள், இழப்புகள், ஏற்கும்படியாகும் துயரம்… தீராத அலைச்சல்கள்… ?

**இன்று முகப்புத்தகத்தில் எழுதுவோரில் - இலட்சியவாதிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்வோரில் அதிகமானவர்கள் ஆண்களே! பல சந்தர்ப்பங்களிலும் பெண்கள் நிதானமாகத் தம்மை வெளிப்படுத்துகிறார்கள். பொதுவெளியிலும் நிர்வாகப் பரப்பிலும் கூட அப்படித்தான். அவர்களிடமுள்ள யதார்த்தப் பார்வையும் உண்மையைக் குறித்த நல்லுணர்வும்தான் இதற்குக் காரணம். வேணியிடம் மிக நுண்ணிய கூருணர்வு இருக்கிறது. அவருடைய எதிர்காலக் கதைகள் இன்னொரு பரிணாமத்தில் வரும்**

போராட்டச் சூழலில் எழுதப்படுகின்ற பெரும்பாலான கதைகளில் இலட்சியவாதமும் போராட்டத்தின் நோக்கமும் இருக்கும். அப்படி இருக்கும்போது அதற்கான எளிமையும் வலியுறுத்தலும் அவற்றில் ஒரு பண்பாக இணைந்திருக்கும். இது கதைகளுக்கு மட்டுமல்ல, இத்தகைய அடிப்படைகளோடு எழுதப்படும் கவிதைக்கும் பிற கலை வெளிப்பாட்டுக்கும் பொருந்தும். இங்கே வேணியின் கதைகளிலும் இந்தப் பண்புண்டு. எளிய சித்திரிப்பில் கவனப்படுத்த வேண்டிய நிறங்களில் ஒளியூட்ட வேண்டும் என்பதே வேணியின் கவனமாக இருந்திருக்கிறது என்பதால் இவை இலட்சியவாதக் கதைகளே!

அதேவேளை வழமையான இலட்சியவாதக் கதைகளிலிருக்கும் யதார்த்தத்தை மீறிய புனைவு இந்தக் கதைகளில் இல்லை. அல்லது குறைவு. ‘சொந்தமாய் ஒரு வீடு’ என்ற கதையை இந்த வகையில் குறிப்பிடலாம். சொந்தமாக ஒரு வீடு வாங்க வேண்டும் என்ற விருப்பம் (கனவு) ஊரில், ஓலை வீட்டில், சிறிய வயதில் மனதில் ஒரு பெண்ணுக்கு உருவாகியது. ஏதோ நிலைமைகளினால் அவர் புலம்பெயர்ந்து சுவிட்சர்லாந்தில் பாதுகாப்பான ஒரு சூழலில் வாழும்போது அந்தக் கனவு நனவாகிறது. அது எளிதாக அல்ல. மிகச் சிரமப்பட்டு, பொருந்தாக் குளிருக்குள் கடுமையாக உழைத்து, சிறுகச் சிறுகச் சேமித்த பணத்தில், குழந்தைகளையும் தன்னுடைய கனவையும் மனதில் வைத்து வாங்கிய வீட்டில் சுதந்திரமாக வாழ முடியாத நிலை. வேறொன்றுமில்லை. புதிய வீட்டில் சத்தம் அதிகமாகக் கேட்கிறது என்று அக்கம்பக்கத்தில் குடியிருப்போர் முறைப்பாடு செய்கின்றனர். அவர்கள் சத்தமிட்டும் சத்தத்தை அதிகமாகக் கேட்டுப் பழகாத வெள்ளையர்கள். அவர்களுடைய பண்பாட்டில், வாழ்க்கை முறையில் அது சரி. ஆனால், புலம்பெயர்ந்து சென்றவர்களின் இயல்பும் பண்பாட்டுச் சூழலும் வேறு. இந்த முரண் ஒரு யதார்த்தம். இங்கே அடிப்படையாக எழுப்படும்படும் கேள்வி, வீடு என்பது என்ன ? என்பதாகும்.

தன்னளவில், சுதந்திரத்தை, ஆறுதலை, மகிழ்ச்சியை, நிம்மதியை அளிக்கின்ற ஓரிடமே வீடு என்பது மாறி, உழைத்து வாங்கிய வீட்டிலும் ஒடுங்கியே வாழ வேண்டும் என்ற நிலை. புலம்பெயர் வாழ்வின்போது சந்திக்க நேருகின்ற ஒவ்வாமை இங்கே குறியீடாக்கப்பட்டுள்ளது மட்டுமல்ல, சொந்தமாக ஒரு வீடு என்பது, ‘நமக்கென்றொரு புல்வெளி’, என கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் எழுதியதைப்போல, ‘ஒரு தனி வீடு’ என்று மு. தளையசிங்கம் தன்னுடைய நாவலில் முன்வைத்தத்தைப்போல, வேணியும் தன்னுடைய தாயகத்திற்கான தாகத்தை இப்படி உணர்த்துகிறார். இப்படி ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதமாக உள்ளன. சில கதைகளில் புராண, இதிகாசப்பாத்திரங்களுக் கூடாகச் சமகாலக் கதைகளைச் சொல்கிறார். யுத்த காண்டம் அப்படியான கதைகளில் ஒன்று.

இங்கே ஒன்றை அவதானித்தேன். பெரும்பாலான கதைகளில் நிஜவாழ்வில் ஏற்பதைப் போல பெண்கள் துயரத்தைச் சுமப்போராக உள்ளனர். அவர்களுடைய கனவுகளின் நிறங்களை யாரும் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை. ஆண்கள் இலட்சியவாதத்தை மேலுயர்த்துவோராக இயங்குகின்றனர். அவர்களுடைய வேட்கை யும் தினவும் வேறு. ஆனால், பெண்கள் யதார்த்தவாதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் நடைமுறைகளை உணர்ந்தவர்கள், அதன் வேரை உணர்ந்தவர்கள். ஆண்கள் கனவுலகவாசிகளாக உள்ளனர். அதனால் துயரத்தின் மேற்பரப்பையே அவர்களால் உணரவும் முடிகிறது, அனுபவிக்கவும் முடிகிறது. உண்மை இதுதான். இதைச் சரியாக அவதானித்து வேணி எழுதியிருக்கிறார், அதனை வெளிப்படுத்தியும் இருக்கிறார்.

இன்று முகப்புத்தகத்தில் எழுதுவோரில் - இலட்சியவாதிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்வோரில் அதிகமானவர்கள் ஆண்களே! பல சந்தர்ப்பங்களிலும் பெண்கள் நிதானமாகத் தம்மை வெளிப்படுத்துகிறார்கள். பொதுவெளியிலும் நிர்வாகப் பரப்பிலும் கூட அப்படித்தான். அவர்களிடமுள்ள யதார்த்தப் பார்வையும் உண்மையைக் குறித்த நல்லுணர்வும்தான் இதற்குக் காரணம். வேணியிடம் மிக நுண்ணிய கூருணர்வு இருக்கிறது. அவருடைய எதிர்காலக் கதைகள் இன்னொரு பரிமாணத்தில் -இன்னொரு பரிணாமத்தில் வரும் என நம்புகிறேன்.



karunagaran@thaiveedu.com




# சந்திரோதயம்

## நூல் மதிப்பாய்வு

**- அருர்கார்க்கி**

இலக்கியம் வெற்று வெளியில் இருந்து தோன்றுவதில்லை அது குறிப்பிட்ட காலத்தின் பின்னணியில் குறிப்பிட்ட காலத்தை சேர்ந்த படைப்பாளிகளினால் படைக்கப்படுகின்றது. காலத்தை இலக்கியம் சித்தரிக்கிறது. இதன் காரணமாகவே இலக்கியத்தைக் காலத்தின் கண்ணாடி என்று கூறுகிறார்கள். வரலாற்றுக்கு அடிப்படையான காலம், இடம் எனும் மையங்களில் வேரூன்றி நிற்கும் இலக்கியம் நினைவுகளையும் நிகழ்வுகளையும் ஈர்ப்பு விசையாக் கொண்டு மையம் கொள்ளும். மாற்றங்களை சுவீகரித்து அந்த மாற்றங்களுக்குத் தானும் காரணமாகிறது இலக்கியம். அதே நேரம் அந்த இலக்கியம் காரியமாகவும் செயற்படுகின்றது.

அந்த அடிப்படையில் வரலாற்று உந்துசக்திகளின் ஒளியில் மறுவாசிப்பு செய்யும் பார்வையே வரலாற்றியல் அணுகுமுறையாகும். சந்திரோதயம் என்ற இந்தப் பனுவலை ஒரு வரலாற்றியல் அணுகுமுறையில் மலையகக் கல்வி வளர்ச்சியில் அதன் தொடர்ச்சியை ஆய்வு செய்யும் முயற்சியாக இந்த நூல் விமர்சனம் அமைகின்றது. மொழி, கலை, இலக்கியம், பண்பாடு முதலியவற்றை ஆராயும் போது ஆய்வுக் களத்தில் இரண்டு நிலைகள் காணப்படும். அதில் முதலாவது கிடைநிலை. இரண்டாவது செங்குத்து நிலை. கிடைநிலை எனப்படுவது ஒரே காலத்தவனாக அவற்றை எடுத்துக் கொள்வது அதாவது சந்திரோதயம் பனுவலை எடுத்துக் கொண்டால் அங்கு காணப்படும் நினைவுப் பகிர்வுகள், அஞ்சலிக் கவிதைகள், அந்த நபர் பற்றிய மீட்டல்கள் என்பவை சமகாலத்தவர்களாக அவருடன் பணிபுரிந்த பலரால் படைக்கப்பட்டிருக்கின்றன. ஒரே தளத்தில் பண்புகளையும் உத்திகளையும் மையமாகக் கொண்ட படைப்புகளாக இவை இருக்கும்.

செங்குத்து நிலை எனப்படுவது ஒன்றுக்கு மேற்பட்ட வரிசை முறைப்படியான காலங்களைத் தொடர்புபடுத்தி ஆராய்வதாகும். சந்திரோதயம் அந்த அதிபரின் வாழ்க்கை சரிதம், பாடசாலையின் வரலாற்று நகர்வு, பெறுபேற்று ஒப்பீடு, கல்விசாரா செயற்பாடுகளின் மதிப்பீடு என்பவற்றை ஆய்வு செய்வதாகப் பல கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. எனவே இதனை நாங்கள் ஒரு செங்குத்து நிலையாக நோக்க வேண்டும். அதாவது ஒரு வரலாற்று கண்ணோட்டமாக ஒரு வரலாற்று ஆராய்ச்சிக்கு தேவையான அடிப்படை மூலாதாரமாக அந்தத் தகவல்களை நாங்கள் நோக்குவதே பொருத்தமானது.

வரலாற்றுக் கண்ணோட்டங்கள் காலங்கள் தோறும் மாறி வந்திருக்கின்றன. சாதனை செய்தவர்களும் அவர்களை ஒட்டிய பெரும் நிகழ்வுகள், தத்துவங்கள், எண்ணங்கள் தான் வரலாற்றை உருவாக்கும் சக்திகளாக அமைந்திருக்கின்றன. அதிபர் நாகப்பன் சந்திரமோகனின் வாழ்க்கை வரலாறு என்ற 'சந்திரோதயம்' தொகுப்பின் ஊடாக மலையகத்தின் கல்வி வரலாறு பேசப்படுகின்றது. ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரியின் வரலாறு ஆவணப்படுத்தப்படுகின்றது. அதன் வரலாற்று வளர்ச்சி ஒப்பிடப்படுகின்றது. எனவே இவற்றை மையப்படுத்தி ஆய்வு செய்வதனால்



இந்தத் தொகுப்பு ஒரு வரலாற்று மூலாதாரமாக எடுத்துக் கொள் ளக்கூடிய தகைமையுடன் காணப் படுகின்றது.

மனிதகுல வளர்ச்சி அதன் இயல் பான பண்பின் காரணமாகவும் புறநி லைகளின் தாக்கத்தாலும் வளர்ச்சி பெறக்கூடியது. அதன் முன்னோக் கிய மாற்றங்கள், மலையகக் கல்வி வரலாறு எவ்வாறு வளம் பெறு கின்றது என்பதற்கு ஆதாரமா கவும் ஆய்வுக்கான தரவுகளை உள்ளடக்கியும் காணப்படுகின்றது. மாற்றம் என்பது வரலாற்றின் அடிப் படைப் பண்பாகும். ஆனால் எல்லா மாற்றங்களையும் வரலாறு பதிவு செய்வதில்லை. அந்த வகை யில் சந்திரோதயம் ஒரு பதிவு செய்யத் தகைமையுடைய படைப்பு என்பது நிரூபணம் ஆகின்றது.

17-ஆம் நூற்றாண்டு சிந்தனையாளரான 'பிரான்சிஸ் பேகன்', இலக்கியம் காலத்தின் ஆன்மா என்று கூறுகின்றார். மறுபுறம் சந்திரோதயம் தொகுப்பை நாங்கள் ஒரு ஆன்மாவின் கதை என்று கூறலாம். காரணம் ஒரு தனிநபரை மையப்படுத்திய வரலாற்று நிகழ்வுகள் அங்கு ஆவணப்படுத்தப்பட்டு இருப் பதால் ஒரு தனிநபர் ஊடாக ஒரு காலம் ஆய்வு செய்யப்படு கின்றது என்பதாக இந்தத் தொகுப்பினை நாங்கள் எடுத்துக் கொள்ளமுடியும்.

வரலாற்றில் ஆய்வு மூன்று பெரும் பகுப்புகளாக உள்ளது,

- இலக்கியத்தை வரலாற்றின் அடிப்படையில் அதன் பின் னணியில் நோக்குதல்
- இலக்கியத்தின் வரலாறு காணுதல்
- இலக்கியத்தில் வரலாறு கண்டறிதல், அதாவது இலக்கி யத்தை வரலாற்று மூலமாகக் கொள்ளுதல்

இந்த மூன்று நிலைகளிலும் சந்திரோதயம் ஆய்வு செய் யப்பட தகுதியானது. கால சூழல் என்பது அதனை அடிப்ப டையாகக் கொண்ட காலம், இடம், கலை, பாணி, நடை, உத்தி, செய்தி, ரசனை, போராட்டம், முரண்பாடு, போர்கள், எழுச்சி, புரட்சி என்பவற்றைப் பேசும். மலையகக் கல்வியை எடுத்துக்கொண்டால் எமது வரலாற்றில் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக எமது சமூகம் கண்ட போராட் டங்கள், பின்னடைவுகள், முரண்பாடுகள் என்பவற்றை இந்த நபரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனை நாங்கள் மேற்கத்தேய எழுத்திலும் சரளமாகக் காண முடியும். ஆய்வு அணுகுமுறையில் வரலாற்றியல் ஆய்வு மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. கார்ள் மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் ஆகியோர், ஹோமர், சேக்ஸ்பியர், பால் ஜோக்ஸ் போன்றோர்களின் படைப்புகளைத் தேடி அதன் வரலாற்றுச் சூழலையும் வரலாற்று தளத்தையும் கற்றுக்கொள்ளப் பயன்ப டுத்தினார்கள். அவற்றை அந்தக் காலங்களின் வெளிப்பாடுகளாகவும் குரல்களாகவும் மார்க்ஸ் கருது கின்றார். சந்திரோதயம் மலை யகக் கல்வி வளர்ச்சியின் வெளிப்பாடா கவும் அந்தந்தக் காலத்தில் அந்த சமூகம் எழுப்பிய குரல்களாகவும் பல எழுத்துகள் உள்ளடக்கப்பட்டி ருக்கின்றன.

பொதுவாக ஆளுமைகளுக்குரிய தனிச்சிறப்பு, திறன் என்பவற்றை அவர்களின் பிரத்தியேகமான சமு தாய சூழ்நிலைகளின் பின்னணி யிலேயே மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பது மார்க்ஸின் வாதம். அதனை ஒட்டி நாங்கள் இந்தத் தொகுப்பினை மதிப்பீடு செய்யும் போது ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரி, சந்திரமோகன் என்ற ஆளுமை, அவரின் பணி வாழ்க்கை மூலம் மலையகக் கல்வியின் போக்கும் வளர்ச்சியும் எம்மால் புரிந்து கொள்ளக் கூடியதான சில தரவுகளை இந்தத் தொகுப்பு உள்ளடக்கி இருக்கின்றது. இந்தத் தொகுப்பில் மேலும் சில ஆழமான ஆய்வுக் கட்டு ரைகளை உள்ளடக்கி இருந்தால் இதன் வரலாற்றுத் தேவை மேலும் வலுப்படும் என்பது கோடிட்டுக் காட்டக் கூடியது.

பெருந்தோட்டத் தொழில், சமுதாய அரசியல் போராட்டங்கள் என்பன மலையக இலக்கிய சூழலில் ஆவணப்படுத்தப்பட்ட அளவுக்கு மலையகக் கல்விப் போராட்டம் ஆவணப்படுத்தப் படவில்லை. மலையக தேசியம் ஒரு தேசிய இனமாக அதன் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த ஆவணப்படுத்தல் அவசியமாகின்றது. சந்திரோதயம் அதற்கான ஒரு பூர்வாங்க முயற்சி என்று கூற முடியும். இலக்கிய வரலாறு என்பது வாழ்க்கை வரலாறு, ஆங்கில இலக்கியத்தை முதலில் எழுதிய தாமஸ் வார்டன் வாழ்க்கை வரலாற்றில் இலக்கிய வரலாற்றை ஆவணப்படுத்துகின்றார். அந்த வகையில் சந்திர மோகன் என்ற நபரின் வாழ்க்கை வரலாற்றின் ஊடாக மலையகத்தின் கல்வி வரலாறு ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை மையப்படுத்தி ஆவணப்படுத்துவதாக இந்தத் தொகுப்பை நாங்கள் அவதானிக்கலாம்.

சந்திரோதயம் முதல் முயற்சி. எனவே மலையக எழுத்தையும் வாழ்க்கையையும் ஆவணப்படுத்த இவ்வாறான முயற்சி களின் தேவை காலத்தின் கட்டாயமாகிறது. மேலும் சில கோட்பாடுசார் ஆய்வுக் கட்டுரைகளை இந்தத் தொகுப்பு உள்ளடக்கி இருந்தால் அதன் வரலாற்றுப் பெறுமானம் மேலும் அதிகரித்திருக்கும். எதிர்காலத்தில் அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் ஆகும்.



karunagaran@thaiveedu.com




# வரலாற்றுக் களத்தில் யதார்த்த – புனைவுப் பாத்திரங்களின் மோதுகை

## சல்மான் ருஷ்டியின் ‘விஜயநகரம்’ நாவலை முன்வைத்து...

**– தேவகாந்தன்**

சல்மான் ருஷ்டியின் Victory City (2023) என்ற ஆங்கில நாவல், ‘விஜயநகரம்’ என்கிற தலைப்பில் காலச்சுவடு பதிப்பக வெளியீடாக ஜுலை 2024-இல் வெளிவந்திருக்கிறது. ஆர். சிவகுமார் மொழிபெயர்த்திருக்கிறார்.

என் வாசிப்பின் கவனத்தில் பதியும் எந்தவொரு நூலும் இதழ்களிலோ இணையதளங்களிலோ பெரும்பாலும் பதிவுபெற்றே வந்துள்ளது. ஆனால் வெளிவந்த இரண்டொரு மாதங்களில் கைவசமான இந்த நாவலை இரண்டு தடவைகள் வாசித்திருந்தும், என்னைப் பாதித்துள்ள நோய்க் கூறின் பக்கவிளைவான எழுதமுடியாமை அதுபற்றிய ஒரு பதிவிடுதலை கடந்த ஓராண்டாகவும் தடுத்திருந்துவிட்டது. இப்போது நோயின் வீச்சு குறைந்துவரும் இத் தருணத்தை நான் தவறவிட்டுவிடக் கூடாது.

இந் நாவல்பற்றி அறிந்தபோதே, அதன் ஆங்கிலத் தலைப்பானது, வெகுகாலத்தின் முன் வாசித்திருந்த அகிலனின் ‘வெற்றித் திருநகர்’ நாவலை நினைவுபடுத்தியது. அதன் முக்கியமான கதாபாத்திரங்களான கிருஷ்ண தேவராயரும், நாமக நாயக்கரும், விசுவநாதனும்கூட என் மனக் கண்ணில் அசைவியக்கம் காட்டினார்கள். ஆனாலும் ‘விஜயநகரம்’ வேறு சங்கதிதான். அது தொடர்கதைப் பாங்கானது; இது நாவல். அது வெகுஜன வாசிப்புக்கானது; இது வெகு குறைவான தீவிர வாசகர்களுக்கானது.

பொதுவாக விமர்சனமென்பது சமூகத்துக்கும் தனிமனிதருக்குமிடையிலான அகப், புற சிக்கல்களை ஆய்வுரீதியாக வெளிப்படுத்தும் ஒரு இலக்கியத் துறையெனச் சொல்லப்படுகிறது.

ஒரு நூலின் தர வெளிப்பாடு இரண்டு தளங்களில் தொழிற் படுகிறது. ஒன்று, அதை அதுவாகக் கண்டு முன்வைக்கும் மதிப்புரை. மற்றது, விமர்சகரின் வாசிப்பு அனுபவங்களை ஆதாரமாய்க் கொண்ட ஓர் ஒப்பீட்டினடியான தரநிர்ணயம். அதை விமர்சனமென்று சுருக்கமாகச் சொல்லலாம்.

விமர்சனங்களில், ஒரு மொழிபெயர்ப்பு நாவலின் விமர்சனமானது கூடுதலான சிரமத்தையும் உழைப்பையும் வேண்டுவதாக இருக்கிறது. ஏனெனில் அங்கே இரண்டு படைப்பாளிகளின் இருப்பு இயங்குகிறது. அதனால் மூலவாசிரியனின் நடை, மொழி வீச்சு, கலா உத்தி, சமத்காரம் ஆகியனவற்றின் பரிச்சயம் ஒரு விமர்சகனுக்கு அவசியமாய் இருந்துவிடுகிறது. போலவே, மொழிபெயர்ப்பாசிரியனின் விபரங்களும் முதன்மைத் தேவையாக ஆகிவிடுகின்றன.

சல்மான் ருஷ்டியின் Midnight’s Children 1981-இல் வெளிவந்தது. அதுபோல் எந்தவொரு இந்தியப் படைப்பாளியின் நாவலும் அந்தளவு விமர்சனங்களை எதிர்கொண்டதில்லை. அது இந்திய ஆங்கில இலக்கியத்தின் முக்கியமான வரவு. கீழ்த் திசை வாசக, விமர்சன தளங்களை அது அசைத்துப் போட்டதென்றாலும் மிகையில்லை. 1988-இல் வெளிவந்தது ருஷ்டிக்கு பட்வா (Patwa) விதிக்கப்படக் காரணமான Satanic Verses நாவல். The Moor’s Last Sigh (1995) என்பது ருஷ்டியின் இன்னொரு முக்கியமான நாவல். அவரது பதினைந்து நாவல்களில் இந்த மூன்றும் முக்கியமானவையென விமர்சகர்களால் கருதப்படுகின்றது. ருஷ்டியின் இந்நாவல்கள் கலாபூர்வமான வெளிப்பாடு களுக்காக மட்டுமில்லை, அவற்றின் சமரசமற்ற அரசியல் கருத்துக்களின் இருப்புக்காகவும்தான்.

சல்மான் ருஷ்டியின் மாயா யதார்த்தவாத எழுத்துக்களுக்கு ஆங்கில இலக்கிய உலகில் தனித்த கவனம் உண்டு. கார்ஸியா மார்க்வெய்ஸ்போன்ற தென்னமெரிக்க எழுத்தாளர்களின் மறைவுக்குப் பின்னால் அவர்களது இலக்கியப் பாணியை தொடர்ந்துகொண்டிருப்பவர் சல்மான் ருஷ்டியாக இருக்கிறார். வரலாற்றுத் தளத்தில் கதைகளை மாயமூட்டி நகர்த்திச் செல்லும் அவரது பாணிக்கு உலகளாவிய வாசகர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் ருஷ்டியின் ஆரம்ப கால மூன்று நாவல்களுக்கு இணையானது அவரின் பதினாறாவது நாவலான இந்த ‘விஜயநகரம்’ என்றே தோன்றுகிறது.

விஜயநகரப் பேரரசு (1336-1646) இந்திய உபகண்டத்தின் பிற்காலச் சரித்திரத்தில் சுமார் மூன்று நூற்றாண்டுகள் நீடித்திருந்த ஒரு தாராண்மைவாத அதிகார நிறுவனமாகும்.

பல்வேறு வம்ச அரசர்கள் அதை ஆட்சிசெய்திருந்தார்கள். போரும் சூழ்ச்சியும் பொறாமையும் துவேஷங்களும் உள்ளோடியிருந்த அதன் நிஜ வரலாறு மிக்க பயங்கரங்களைக் கொண்டது. ஆனால் கலை இலக்கியங்களின் வீச்சும், வர்த்தக விருத்தியும், செல்வச் செழிப்பும், மத நல்லிணக்கமும் அவற்றை ஒரு திரையாகப் போர்த்தி மூடிவிட்டிருந்தன.

பாரதத்தின் தென்பகுதி முழுக்கவும், இலங்கையும் அடங்கிய பேரரசாய் வளர்ச்சி பெற்றிருந்தாலும், அது சிதறுவதற்கான ஒரு பொழுது, உலகின் எல்லா பேரரசுகளுக்கும்போல இருக்கவே செய்தது.

விஜயநகரத்தின் இந்த வரலாற்றைத் தெரிந்துகொண்டுதான் வாசகன் நாவலுக்குள் பிரவேசிக்கவேண்டியவனாக இருக்கிறான். ஏனெனில், சரித்திர நிகழ்வுகளின் அகன்ற திரையில் தன் கதையை நாவல் அநாயாசமாக விரித்துச் செல்கிறதே தவிர, சரித்திரத்தின் ஓர் இடைவெளியை நிரப்பவோ, ஒரு நிகழ்வை மறுவாசிப்பு செய்யவோகூட அது முயல்வதில்லை. கிருஷ்ணதேவராயர் வருகிறார், ஏற்கனவே தெரிந்த ஒரு மனிதராக; அச்சுததேவராயர் வருகிறார், அவரும் ஏற்கனவே பரிச்சயப்பட்டவராக. நாவல் இந்த பாத்திர வார்ப்பென்ற விஷயத்தில் பெரிதாக மினைக்கெட்டு நிற்கவில்லை. புனைவுப் பாத்திரங்கள் இந்த வரலாற்றுப் பின்னணியில் யதார்த்தப் பாத்திரங்களுடன் மோதியும் பணிந்தும் விட்டுவிலகியுமாக அநாயாசமாய் நடந்து சென்றுவிடுகின்றன.

நாவலின் தொடக்கமே மாயப் புனைவின் வழிதான் விரிந்து செல்கிறது. கம்பிலி ராயரின் சிறிய அரசின்மேல் வடவிந்தியப் படை தொடுத்த போரில் அரசு மொத்தமுமே அழிந்துபோகிறது. இறந்த போர் வீரரின் மனைவிகள் பம்பா நதிக் கரையில் தீமூட்டி உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள். அவையெல்லாம் கண்டுகொண்டு நதிக் கரையில் நிற்கிறாள் அவ்வாறு இறந்தவர்களில் ஒருத்தியின் சிறிய மகள். அவள்தான் பம்பா கம்பானாவாக வளர்ந்து வருகிறாள். மந்தானா மடத் தலைவர் வித்யாசாகரின் சிஷ்யையாக தன் பால்ய பருவத்தைக் கழிக்கும் அவள்மீது தெய்வத்தின் குரலாக ஒலிக்குமளவான அதீத சக்திகள் இறங்குகின்றன. அவளே ஒரு மாயத்தின் அவதாரமாக ஆகிப்போகிறாள். இளமை அவள்மீது சாசுவதம் பெறாவிடினும் நீண்டு நிலைத்திருந்து நகருகிறது.

ஒருபோது ஹுக்க சங்கம, புக்க சங்கம என்ற இரண்டு இடைக்குல சகோதரர்களிடம் அவள் கொடுக்கும் விதைகளின் விதைப்பினூடாக கனவுலகம்போல் விரிந்தெழுகிறது ஒரு நகர். அங்கே மரங்கள் முளைக்கின்றன; குளங்கள் தோன்றுகின்றன; நிலவடிக் கோயில் வடிவமைகிறது; போலவே மனிதர்களும் குழந்தைகளாகவன்றி முழு மனிதர்களாக உருவெடுக்கிறார்கள். அவ்வாறு உருவாகும் நாடு வெற்றித் திருநகர் - 'விஜயநகரம்', எனப் பெயர் பெறுகிறது. அதை 'பிஸ்நகா' என்கிறான் போத்துக்கீசியப் பயணியான டொமிங்கோ நூனிஸ்.

தொடர்ந்து அரியணை ஏறும் இந்த இரண்டு சகோதரர்களில் மூத்தவனான ஹுக்கராயரை மணக்கிறாள் பம்பா கம்பானா. அவளுக்கு, டொமிங்கோ நூனிஸ்ஸின் காதலில் மூன்று பெண்பிள்ளைகள் பச்சைக் கண்களும் செந்தலையும் வெள்ளைத் தோலுமாய்ப் பிறக்கின்றன. அவர்களுக்கு ஜோத்ஸ்னா, ஸெரால்டா, யுக்தஸ்ரீ எனப் பெயரிடுகிறாள்.

அரசியாக இருபது வருஷங்கள் தொடரும் அவளது அந்த வாழ்க்கை ஹுக்கராயரின் மரணத்துடன் ஒரு முடிவுக்கு வருகிறது. தொடர்ந்து டொமிங்கோ நூனிஸ்சும் காலமாகிறான். பம்பா கம்பானாவென்ற அந்த அழகி அடுத்து அரியணையேறும் புக்கராயரை திருமணம் செய்கிறாள். அத் திருமணத்தில் அவளுக்கு மேலும் பகவத், எரபள்ளி, குண்டப்பா என்ற மூன்று ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. அவர்கள் அரசுரிமை கேட்டு கலகம் விளைக்காதவாறு இலங்கை யாழ்ப்பாணத்தில் விட்டு வளர்க்கப்படுகிறார்கள். புக்கராயருக்கு இளைய மூன்று சகோதரங்களும்கூட அரசுரிமை கொண்டாடப்படுவதிலிருந்து தடுக்க பேரரசின் வடதிசையில் தூரவாயுள்ள ஓரிடத்தில் சில அரசியல் கடமைகளைச் செய்து வாழ விடப்படுகிறார்கள்.

ஆனால் இவர்கள் கடைசியில் ஒன்று சேர்கிறார்கள். பம்பா கம்பானாவின் பெண் பிள்ளைகளுக்கு அரிசுரிமை சேர்ந்துவிடக் கூடாதென கலகம்செய்து படையுடன் வருகிறார்கள். போர் நடக்கிறது. பெரும் அழிவுகள் விளைகின்றன. அதன் வலிமையில் எதிர்நிற்க முடியாத பம்பா கம்பானா தன் மகள்களுடனும், ஹலேய கோட்டே மற்றும் ஆசான் லீ ஆகிய இரண்டு முதியவர்களுடனும் நகரைவிட்டோடுகிறாள்.

அந்தளவில் 'பிறப்பு' என்ற நாவலின் முதலாம் பகுதி முடிவடைகிறது. மேலே அவள் வனமடைவதில் தொடங்கி, ஏற்கனவே பெற்றிருந்த தெய்வ வரங்களால் அதன் சகல இடையூறுகளையும் கடந்து மிக நீண்டவொரு காலத்தை அங்கே கழிக்கையில், தகுந்த வேவு பார்த்தலின் மூலம் தான் நாடு திரும்பவேண்டிய காலம் வந்துவிட்டதறிந்து அவள் பிஸ்நகா திரும்பும்வரையான நாவலின் இரண்டாம் பகுதி 'வனவாச'மென பெயர்பெறுகிறது.

மாயப் புனைவின் வழி இந்த இரண்டாம் பகுதியை

**“ சல்மான் ருஷ்டியின் மாயா யதார்த்தவாத எழுத்துக்களுக்கு ஆங்கில இலக்கிய உலகில் தனித்த கவனம் உண்டு. கார்ஸியா மார்க்வெய்ஸ்போன்ற தென்னமெரிக்க எழுத்தாளர்களின் மறைவுக்குப் பின்னால் அவர்களது இலக்கியப் பாணியை தொடர்ந்துகொண்டிருப்பவர் சல்மான் ருஷ்டியாக இருக்கிறார். ”**



ஆசிரியர் நடத்திச் சென்றிருந்தாலும், அதுவொன்றும் பரவசத்தின் உச்சத்துக்கு வாசகனை எடுத்துச் செல்லவில்லை. வனவாசத்தில் இருக்கும்போது ஆசான் லீ தன் சொந்த தேசம் திரும்புவதற்கான ஆயத்தங்களைச் செய்ய கோவா புறப்படத் தயாராகிறார். முதுமையின் எல்லையில் நிற்கும் அவர்மீதுள்ள காதலால் தானும் வருவேனென பிடிவாதம் செய்து கூட பயணிக்கிறாள் ஜோத்ஸ்னா. வனப் பெண்களுடன் கொண்ட தொடர்பில் யுக்தஸ்ரீ அவர்களுடனே தங்கிவிட முடிவு செய்கிறாள். ஸெரால்டாவை, அவளது ஹலேய கோட்டேயின் மேலான பிரியம் அவர் பம்பா கம்பானாவுக்குத் துணையாக பிஸ்நகா சென்று திரும்பும்வரை வனத்தில் காத்திருக்க வைக்கிறது.

ஹலேய கோட்டேவுடன் பம்பா கம்பானா பிஸ்நகா வந்து சேர்கிறாள். மாதுரிதேவி என்ற ஜோஸ்யம் பார்க்கிறவள் வீட்டில் ரகசியமாய்த் தங்குகிறாள்.

கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்கு வரும் காலம் இது. போர்கள் ஓய்ந்து புகழ் ஓங்கிய காலமான இது ‘கீர்த்தி’ என்ற தலைப்பில் மூன்றாம் பாகமாகத் தொடர்கிறது.

ராயரின் அபிமானத்தைப் பெற்றவளாகயிருந்தாலும் அவர் திருமணம் செய்யும் திருமலாதேவியதும் அவளது தாயாரதும் போட்டி பொறாமைகளால் பம்பா கம்பானாவுக்கு நெருக் கடிகள் ஏற்படுகின்றன. ருஷ்டியின் மொழியும் நடையும் வீறுகொண்டெழும் பல நிகழ்வுகளைக் கொண்டதாக இந்தப் பகுதியுள்ளது.

இதைத் தொடர்ந்து வருவது இறுதிப் பகுதியான ‘வீழ்ச்சி’. பேரரசின் அழிவு கிருஷ்ணதேவராயரின் பிற்கால ஆட்சிப் பகுதியில் தொடங்கியிருந்தாலும், அவருக்குப் பின்னால் மன்னனாக வரும் அச்சுததேவராயரின் காலத்திலும் தொடர்ந்து ஆலியா ராமராயர் காலத்துடன் முழுமை பெறுகிறது.

ஆசான் லீ, ஹலேய கோட்டே, மாதுரிதேவி, மாதவாச்சாரியார், வித்தியாசாகர், ஜோத்ஸ்னா, ஸெரால்டா, யுக்தஸ்ரீ, பம்பா கம்பானா ஆகிய புனைவுப் பாத்திரங்களின் இயக்க வழியில் மிக வலு பொருந்திய விஜயநகரப் பேரரசின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சிக் காலங்களை உள்ளடக்கியதாய் ஒரு கதை சல்மான் ருஷ்டியால்  இங்கே விரித்து விடப்பட்டிருக்கின்றது.

யதார்த்த பாத்திரங்களான ஹுக்கராயர், புக்கராயர், கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர், நரசிம்மா, ராமராயர் போன்றவை பேரரசின் எல்லை காப்பதற்காகவோ விரிப்பதற் காகவோ அல்ல, தத்தம் அதிகாரங்களை நிலைநிறுத்த தம்முள் மோதிக்கொள்கின்றன. போலவே, புனைவுப் பாத்திரங்களான பம்பா கம்பானா, மாதவாச்சாரியார் போன்றவற்றுடனும் இவர்கள் மோதிக்கொள்கிறார்கள். இது அதிகாரத்தின் விருப்பினால் நிகழ்வதில்லை. மாறாக, ஆளுமைகளின் போட்டி பொறாமைகளினால் சம்பவிக்கின்றது. இதில் வெற்றி யாருக்காகின்றது என்பதே நாவலின் நாலாம் பகுதியான ‘வீழ்ச்சி’யில் எடுத்துரைக்கப்படுகிற விஷயம். அதைநோக்கியே முந்திய மூன்று பாகங்களின் கதையும் திட்டமுடன் நகர்த்தப்படுவதாய்ச் சொல்லமுடியும்.

பம்பா கம்பானாவின் கதையை, விஜயநகரப் பேரரசின் வரலாற்றுப் பின்னணியில் மாயங்களை நிறைத்து படைப்பாளி எழுதியிருக்கிறார் என்பது சரியான ஒரு தீர்ப்புத்தான். அதனால்தான் பம்பா கம்பானாவின் வாழ்நாட் காலத்தை இருநூற்று நாற்பத்தேழு ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் தேவை அவருக்கு ஏற்படுகிறது. இது தன் சாபமென அவளும், சிலவேளை படைப்பாளியுமே, எண்ணிக் கொண்டாலும், உண்மையில் அந்த அதிமானுட வாழ்வில் சோகம் அவளுக்குப் பின்தள்ளப்பட்டு விடுகிறது. தன் பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும்கூட தன்னைவிட முதியவர்களாய் மரணமடையும் தருணங்களை பம்பா கம்பானா சந்திப்பது தவிர்க்கமுடியாதபடி துயர அலைகளை ஒரு தாயாய் அவளில் கிளரச் செய்கின்றனதான்.  ஆனால் அவளுக்கான காமத்தின் தீர்வைகளால் அனுபவங்கள் ஞானமாய்த் தெளியும் பலனடைவதையும் மறுப்பதற்கில்லை.

காமத்தின் திசைவழி அலையாவிட்டாலும், அவளுக்கு தன் வாழ்நாளின் நீட்சி நிறைய உடலுறவுக்கான தொடர்புகளையும் திருமணங்களையும் அடைய வைத்துக்கொண்டே இருக்கின்றது. கிருஷ்ணதேவராயர் காலத்தில், அவரின் சாத்திரப்படி மணஞ்செய்த மனைவிக்கிணையான அதிகாரம் பெற்றவளாயும் பம்பா இருக்கிறாள். அதன்மூலம் தன் விருப்பத் திட்டங்களை அவளால் நிறைவேற்றவும் முடிகிறது.

தன் கணவர்களது ஆட்சிக் காலத்தில் தானே போராளியாகி படையுடன் நடந்த பம்பா கம்பானா, ஒருகாலத்தில் பதிலி அரசியாகவும் ஆகிக்கொள்கிறாள். ஆனால் அரசன் போர்களத்தில் எதிரிகளோடு யுத்தம் செய்துகொண்டிருந்த காலத்தில் அரசுக்கெதிராக துரோகம் செய்தாளென பம்பா கம்பானாமீது குற்றஞ்சாட்டப்படுகிறது. அதே குற்றம் அவளுக்கு அனுசரணையாகயிருந்த அமைச்சர் திம்மராசுமீதும்தான்.

அரசன் அவர்கள் இருவரின் கண்களையும் பறிக்க ஆணையிடுகிறான். அவர்களது கண்கள் பறிக்கப்படுகின்றன.

பம்பா கம்பானாவுக்கு மந்தானா மடத்தில் தஞ்சம் கிடைக்கிறது.  அவளது எதிரியாகவும் பாதுகாவலராகவும் ஒரு காலத்தில் விளங்கிய வித்யாசாகர் தலைமை வகித்த மடம் அது. அங்கிருந்த காலத்தில்தான் கல்வியும் கவிதை புனைதலும் அவள் கற்றாள். ஜெயபராஜெய (வெற்றியும் தோல்வியும்) என்று அவள் பின்னால் எழுதவிருக்கும் பெருங்கவிதைக்கான முன்னுரையை அவள் சிறுமியாக இருந்த காலத்தில் அங்கிருந்துதான் எழுதினாள். கண்களை இழந்த பின்னால் விஜயநகரத்தின் வரலாற்றை – ஜெயபராஜெயவை, தன் மனக் கண்ணில் கண்டு கண்டு தன் வாழ்நாள் சாதனையாக எழுத தீர்மானம் கொள்கிறாள்.

ஆரம்ப பாரதக் கதையான ‘ஜெயகதா’ போல, விஜயநகரத்தின் வரலாற்றை இருபத்து நாலாயிரம் பாடல்களில் புனைகிறாள். அதை எழுத கிருஷ்ணதேவராயரின் மகள் திருமலாம்பாள் உதவிசெய்கிறாள். பம்பா கம்பானா சொல்ல திருமலாம்பாள் எழுத விஜயநகரத்தின் வரலாறு காவியமாகிறது. பின்னால் திருமலாம்பாள் அங்கிருந்து அரண்மனை செல்ல நேர்கையில் தானே அதன் மீதியை எழுதி முடித்து தன் இருப்பிடத்தில் குழிதோண்டி அவள் புதைத்து வைக்கிறாள்.

அந்த கையெழுத்துப் பிரதி சுமார் நாலரை நூற்றாண்டு களுக்குப் பிறகு கண்டெடுக்கப்படுகிறது. விஜயநகரத்தின் கதை அறியவருகிறது. அந்தப் பிரதியிலிருந்துதான் சல்மான் ருஷ்டியின் ‘விக்டரி சிற்றி’ (வெற்றித் திருநகர்) படைப்பாக எழுகிறது.

கிருஷ்ணதேவராயரின் காலத்துடன் விஜயநகர பேரரசின் பொற்காலம் இறங்குமுகம் கண்டாலும், அது அச்சுத தேவராயரின் காலத்தில் மேலும் நலிவடைந்து, அவரின் பின் அரசராக வரும் ஆலியா ராமராயரின் காலத்தில் முற்றாக அழிந்துபோகிறது.

எப்போதும் ஒரு பேரரசானது எதிரிகளால் சூழப்பட்டிருப்பதால் போர்களையும் அதில் மாறி மாறி வெற்றி தோல்விகளையும் அடைந்துகொண்டிருக்கவே செய்கிறது. ஆனால் ராமராயர் தன் சூழ்ச்சித் திறனால் வடக்கிலுள்ள எதிரிகளின் அபாயத்தை அடக்கிவைக்கிறான்.

ஆனால் அவர்கள் எப்போது ராமராயரின் சூழ்ச்சியைப் புரியும் கணத்திலிருந்து நிலைமை மாறிப்போகிறது. விஜய நகரத்தின் மேல் அவர்களது ஒன்றிணைந்த படையெடுப்பு நிகழ்கின்றது. 1565-இல் தலைக்கோட்டையில் நடைபெறும் அந்த யுத்தம்தான் விஜயநகரத்தின் அழிவாக வந்து விழுகிறது. ராமராயரும் யுத்த முனையில் எதிரிகளால் கைது செய்யப்பட்டு சிரச்சேதம் செய்யப்படுகிறான்.

ஒரு காலத்தில் எல்லாம் உடையதாகயிருந்தது விஜயநகரம். இப்போது எதுவுமில்லையென ஆகிப்போனது. அதை பம்பா கம்பானா தன் வரலாற்று நூலின் முன்னுரையில் இவ்வாறு எழுதிவைத்திருக்கிறாள்:

“*பம்பா கம்பானாவாகிய நான் இந்த நூலின் ஆசிரியர். ஒரு பேரரசு எழுந்ததையும் வீழ்ந்ததையும் காண நான் வாழ்ந்தேன். ... அவர்கள் எவ்வாறு இப்போது நினைவுகூரப் படுகிறார்கள் இந்த அரசர்களும் இந்த அரசிகளும் ? ... அவர்களை நினைவுகூர நான் தேர்ந்தெடுத்த முறையிலேயே அவர்கள் நினைவுகூரப்படுவார்கள். ... நானுமே இப்போது ஒன்றுமில்லை. மீதமிருப்பது வார்த்தைகளின் இந்த நகரம் மட்டுமே. வார்த்தைகள் மட்டுமே வெற்றியாளர்கள்.*”

மெய்தான். வார்த்தைகள் மட்டுமே வெற்றியாளர்கள். ஏனெனில் வென்றவர்களின் வார்த்தைகளாக அவை இருக்கின்றன.

‘பேரரசின் தலைநகராக பிஸ்நகாவை ஆக்கியிருந்த அனைத்துமே கிட்டத்தட்ட எரிக்கப்பட்டு இடிபாடுகளாக, ரத்தமாக, சாம்பலாக உருமாற்றப்பட்டன...

‘ஜெயபராஜெய’வைப் புதைத்த பின் தரையில் சம்மணமிட்டு அமர்ந்து அவள் அழைத்துச் சொன்னாள்: ‘நான் அதைச் சொல்லி முடித்துவிட்டேன். என்னை விடுவி.’ பிறகு காத்திருந்தாள்....

‘அவள் சதை உலர்ந்து சருகானது, அவள் எலும்புகள் நொறுங்கின, சில கணங்கள் கழித்து அவளுடைய எளிமையான உடைகள் மட்டுமே தூசி நிரம்பி நிலத்தில் இருந்தன’ என நாவல் பம்பா கம்பானாவின் கதையை முடிக்கிறது.

அது மரணமில்லை ; காற்றில் ஒரு கரைவு.

வார்த்தைகளே இறுதியாக எஞ்சுகின்றனவெனில் ஜெயபராஜெயவில் எஞ்சும் வார்த்தைகளும் அவளாகவே இருக்கமுடியும்.

ஆக, ஆளுமைக்கானதும், அதிகாரம் செலுத்துவதற்கானது மான மோதுகைகள் ஓய்ந்தன. பாத்திரங்கள் மறைந்தன. ஆனால் பம்பா கம்பானா மட்டும் வார்த்தைகளில் எஞ்சிநிற்கிறாள்.

மூல மொழியில் படைப்பை வாசிக்காமல் பெயர்ப்பு மொழியிலாகமட்டும் அதை வாசித்துவிட்டு செய்யப்படும் எந்தவொரு மதிப்பீடும் பாதி திறனாய்வு வலுகொண்ட உபகரணத்தால் அளவீடு செய்யப்பட்டதாகவே கொள்ளப்படவேண்டும்.

வாசகன் மொழிபெயர்ப்பாளன் மீதான நம்பிக்கையோடுதான் படைப்பினுள் இறங்குகிறான். விமர்சகனும். அதை உடைத்து விடாதபடி வாசிப்பு சென்று முடிந்திருந்தால் அது நல்லவொரு மொழிபெயர்ப்பு நூல் என்றாகிவிடுகிறது. அந்தவகையில் ஆர்.சிவகுமாரின் ‘விஜய நகரம்’ நீள வசனங்கள் பெரும்பாலும் கொள்ளும் இடிபாடுகளின்றியும், தர்க்க முரண்கள் தோன்றாதபடியான தெளிவுடனும் இருந்தமை பற்றிக் குறிப்பாய்ச் சொல்லவேண்டும். ஆனாலும் இடைஞ்சலாக இருந்த ஒரு விஷயம்பற்றி இங்கே குறிப்பிடுதலும் அவசியமாகப்படுகிறது.

நிறுத்தக் குறியீடுகள் (Punctuations), அவசியமானவை; அவை அர்த்த பரிமாணம் காட்டுபவை. முற்றுப் புள்ளி (Full Stop), முக்காற் புள்ளி (Colon), அரைப் புள்ளி (Semi Colon), காற் புள்ளி (Coma), இடையீடு (Suspension), இடைக்கோடு (Hyphen) போன்றவை தகுந்த இடங்களில் வந்திருக்காவிட்டால் வாசிப்பை ரசனையுடன் செய்யமுடியாது. முக்காற் புள்ளியும் முற்றுப் புள்ளியும் நூல் முழுக்க பலவிடங்களிலும் குழம்பி வந்திருக்கின்றது. ஒருவருக்கு முற்றுப்புள்ளி வரவேண்டிய இடமாகத் தோன்றுவது, இன்னொருவருக்கு முக்காற் புள்ளி வரவேண்டியதான இடமாய்த் தோன்றக்கூடும்தான். அவர் அர்த்தம்கொள்ளும் விதத்தை அது பொறுத்திருக்கிறது. நூலிலுள்ள இந்தக் குறையை ஒரு பதிவுக்காக இங்கே சொல்லவேண்டி நேர்ந்திருக்கிறது. மற்றும்படி சல்மான் ருஷ்டி நாவலை தமிழிலேயே எழுதியதுபோல் வாசிப்புச் சுகம் கிடைத்ததை நான் சொல்லவே வேண்டும். ஜி. குப்புசாமி மொழிபெயர்த்த ஜோன் பான்விலின் ‘கடல்’, மற்றும் ஓரான் பாமுக்கின் ‘இஸ்தான்புல்’, கு.வெ. பாலசுப்பிரமணியன் மொழிபெயர்த்த க. கைலாசபதியின் ‘தமிழ் வீரநிலைக் கவிதை’, எச்.பாலசுப்பிரமணியம் மொழிபெயர்த்த கோபிசந்த் நாரங்கின் ‘அமைப்பு மையவாதம், பின்அமைப்பியல் மற்றும் கீழைக் காவியஇயல்’, அசதாவின் மொழிபெயர்ப்பில் வந்த மார்க்வெய்ஸின் ‘முன்கூறப்பட்ட சாவின் சரித்திரம்’ (புது எழுத்து) போன்றவை நான் மொழிபெயர்ப்புக்காகவே பல தடவைகள் ரசனையோடு வாசித்த நூல்களில் சிலவாக இன்றும் இருந்து வருகின்றன. அந்த வரிசையில் ஆர்.சிவகுமாரின் சல்மான் ருஷ்டியது இந்த நாவலின் மொழிபெயர்பையும் சேர்க்க எனக்குத் தடையில்லை.



devakanthan@thaiveedu.com

# ஆர். சூடாமணியின்

# இரவுச்சுடர்

■ சு. வேணுகோபால்



காலம் இடம் சந்தர்ப்பம் என்ற நிலையில், எழுதிய கதையை திரும்ப ஒருமுறை துலக்கிப் பார்த்திருந்தால் சிற்சில குறைகள் நீக்கப்பட்டு நேர்த்தி செய்யப்பட்டிருக்கும். அப்படியெல்லாம் செய்யச் சூடாமணிக்குத் தோன்றவில்லை. அவர்பாட்டுக்கு தன் வாழ்நாள் முழுக்கத் தன்னுடைய கோணத்தில் எழுதி வந்துள்ளார். அந்த நோக்கிலும் பிரச்சினையை அணுகிய விதத்திலும் சொல்லப்பட்ட முறைமையிலும் கதையை உயிரோட்டமாக உருவாக்கிவிடக்கூடிய படைப்புமனம் அவருக்கு வாய்த்திருக்கிறது. இது ஒரு ஆற்றல்தான், உள்ளத்திற்கும் எளிய கனவுகளுக்கும் தன்னை அவர் ஒப்புக்கொடுத்து எழுதியதாலே அவரின் கதைகளுக்குள் நேர்மை ஒன்று புலப்படுவதை அறியலாம்.

அவரது சிறுகதைகளில் சாத்தியமாயிருக்கும் உலகம் மிகவும் விரிந்தது. புதிய புதிய கோணத்தில் பார்த்திருக்கிறார். சிந்தனைகளும் புதுசாக, வாசகர்கள் ஒத்துக்கொள்ளும் கோணத்திலும் அவரால் எழுத முடிந்தது பெரிய பாக்கியம் என்றே நினைக்கிறேன். ‘இரவுச்சுடர்’ என்ற சிறு நாவலில் தன் எழுத்தாற்றலின் சாதனையை நிகழ்த்தியிருக்கிறார். சுதந்திர உணர்விற்கும் இறுக்கமான சமூகக் கட்டுக்கும் இடையில் மோதிச்சிதறும் ஒரு பாத்திரமாக யாமினியை வடித்திருக்கிறார். தான் விரும்பும் வாழ்க்கையை வாழ முடியாத மரபான குடும்ப உறவுகளால் நசுக்கப்படும் ஒரு காலத்தின் பிரதிநிதி யாமினி. திருமண பந்தத்தையே விரும்பாது உலகின் பேரியர்க்கையை அறிந்துவிடத் துடித்த ஓர் இளம்பெண் யாமினி. மரபான குடும்ப சிறைக்குள் சிக்கி தன் கனவெல்லாம் சிதறுண்டு போகும் பேரவலத்திற்கு ஆட்பட்டு மரணத்தை ஒரு விடுதலையாகத் தெரிவு செய்கிறாள். இது ஒரு காலத்திய தமிழ்ச் சமூகத்தின் இறுக்கமான மரபு தந்த தண்டனை. தலைப்புக்கூட ‘இரவுச்சுடர்’ இரவில் சுடரும் பெண். இரவு பயங்கரமானது. அதில் சுடர் ஒரு துளி. யாமினி இருட்டால் நிரம்பிய காலத்தில் தோன்றிய ஒரு கனவு. அந்தக் கனவு முழுதாக ஒளிர்ந்து முடியவில்லை. துளிர்த்ததுமே பஸ்பமாக்கி விடுகின்றன. சுடர் இரவில் தனித்து சுடர்ந்து ஜொலிக்க முடியாமல் போகும் வலியின் வடிவம்தான் யாமினி. சுற்றிலும் இருட்டில் துளி சுடர் ஜொலிக்கப்பார்க்கிறது. சமூகம் என்ற இருட்டு விடுவதில்லை. துளி சுடர் மறைந்ததும் மீண்டும் இருள் நிரம்புகிறது. சுடர் இருந்ததற்கான தடயம்கூட இல்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான சுதந்திர உணர்வு அல்லது கனவு. கன்னியாகவே இந்த பூமியின் பேரழகையெல்லாம் தரிசித்துவிடத் துடித்த ஒரு பெண், பெற்றோரின் மரபான விருப்ப சிந்தனையால் குடும்ப பந்தத்திற்குள் தள்ளப்பட்டு சிதைகிறாள்.

யாமினியின் மகள் சீதா அடுத்த காலகட்டத்தின் பிரதிநிதி. அவளின் சுதந்திரம் பறிக்கப்படுவதில்லை. அவளின் கனவு தாயைப்போல கன்னியாக உலவுவதல்ல. விரும்பிய காதலனை மணந்து வாழ்வது.

அவள் வேற்றுசாதி ஆடவனை தேர்ந்தபோதும் பெற்றோர்கள், வளர்த்த தாத்தாபாட்டி ஒத்துக்கொள்கின்றனர். ஓரளவு அவளின் சுதந்திரம் வெற்றியடைகிறது. இந்தக் கால மாற்றத்தை நாவல் பதிவு செய்கிறது.

காலம்தான் இந்நாவலின் கதாநாயகனா! என்றால் அப்படியும் கொள்ளலாம். காலத்தின் கதாநாயகர்கள் மானிடர்களே. யாமினியைத் தங்கள் விருப்பத்திற்குள் ஒடுக்கிய பெருந்தேவி, சாரநாதன் தாங்கள் வளர்த்த பேத்திக்கு அவளின் சுதந்திர உணர்விற்கு மதிப்பளிக்கின்றனர். இப்படித்தான் மனிதர்கள் வாழ்க்கை தந்த இழப்புகளாலும் காயங்களாலும், ரணங்களாலும் புதிய மனிதர்களாக மாறுகின்றனர். எனவே மாற்றத்தை உண்டாக்கும் மூல வித்து யாமினி போன்ற வர்கள். தங்களைப் பலிகடா ஆக்கி மனமாற்றத்தை மூத்த வருள் நிகழ்த்துகின்றனர். பழைய மரபு புது மரபாக மாறுகிறது. இப்படியான புரிதலை இந்நாவல் தருவதாக இருந்தாலும் இதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு நாவல் இயங்க வில்லை.

சாரநாதன், யாமினி விரும்பிய பிரபஞ்சத்தைத் தன் பேத்தி அணுவணுவாக அனுபவிக்கட்டும் என்று விரும்புகிறார். ஆனால் பேத்தி கீதா குடும்ப பந்தத்தையே மீண்டும் தேர்வு செய்து கொள்கிறாள். மகளின் கனவாகப் பேத்தி இல்லை. அவருக்குள் ஒரு வெறுமை. யாமினி போல தற்கொலையைத் தேர்ந்தெடுக்கிறார். இந்த எதிர்பார்ப்பு ஒரு விசித்திரம். கன்னியாக வாழ விரும்பும் யாமினியின் சுதந்திர உணர்வும் ஒரு விசித்திரம். அப்படியான தேர்விற்கு ஒற்றைவரியில் ஒரு காரணத்தைக் கண்டு சொல்லிவிட முடியாது. பிறர் புரிந்து கொள்ள முடியாத காரணங்கள் இருக்கவே செய்யும்.

சூடாமணியின் ‘நான்காம் ஆசிரம்’ என்ற கதையில் வரும் பெண் மூன்று ஆடவர்களுடன் உறவு கொள்கிறாள். ஒவ்வொருவரிடமிருந்தும் விலகுகிறாள். காமத்துடன் அவள் விரும்புவது சான்றாண்மையென்றோ பேராண்மையென்றோ கொள்ளலாம். அதைவிட காதல் நிரம்பிய அன்பின் மகத்துவத்தை நாடுகிறாள். கிடைக்கவில்லை என்றதும் மரணத்தைத் தேர்வு செய்கிறாள். இவ்விதம் யாமினி, கீதா, பெரியநாகி, சாரநாதன், ராமேசன், கீதா என ஒவ்வொருவரின் உலகமும் ஒவ்வொருவிதமாக இயங்குகிறது. ஒரு சிறு நாவலில் இந்த மாந்தர்களின் வழி வாசகர்கள் சில விசயங்களைப் புரிந்து கொள்ளமுடியும். தேடிக் கண்டடையவும் முடியும். ஆர். சூடாமணியிடமும் தேடிக் கண்டடையும் உள்ளத்தின் கோணங்கள் உண்டு. ஒரு பன்முகவாசிப்பிற் குரிய நாவலாக ‘இரவுச்சுடர்’ படைக்கப்பட்டிருக்கிறது. ஆர். சூடாமணியின் கவித்துவம் நிரம்பிய நடையால் இன்னும் இன்னும் ஆழமான எண்ணங்களை வெளிப்படுத்த முனைகிறது நாவல். சூடாமணி இசங்களை விரும்பாமல் மனிதர்களை விரும்பியதினாலேயே படைப்பிற்குள் ஒரு பூரணத்துவம் பொங்கி வருகிறது. அதற்கு மிகச்சிறந்த உதாரணம் ‘இரவுச்சுடர்’ சிறுநாவல். தமிழின் மிகச்சிறந்த குறுநாவல் வரிசையில் இரவுச்சுடருக்கு எப்போதும் நிரந்தரமான இடம் உண்டு.



venugopal@thaiveedu.com



# ஆதிலட்சுமி சிவகுமாரின்

# முட்காட்டுப் பூ

## ஒரு தாயின் குரல்

**தாமரைச்செல்வி**

தாய்மை என்பது பலவிதமான உணர்வுகளால் நிரப்பப்பட்ட ஒரு வடிவம். குடும்பத்துக்காகவும் குழந்தைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்து வாழும் தாய்மாரின் இடம் யாராலும் இட்டு நிரப்ப முடியாதது. போர் நிலத்தில் ஏற்பட்ட கடின வாழ்வை பல தாய்மார்கள் நொந்து அனுபவித்துக் கடந்திருக்கிறார்கள். கவசமாய் இருந்து குடும்பத்தை வழி நடத்தியிருக்கிறார்கள். போர் வாழ்வின் துயரம் எல்லாம் அவர்களையே சுற்றிச் சுற்றி வந்திருக்கிறது. இன்றைக்கும் இழந்துவிட்ட உறவுகளை நினைத்துக் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கும் அன்னையர் நிறைந்த பூமி நமது. காணாமல் போன தங்கள் பிள்ளைகள் இருக்கிறார்களா இல்லையா என்ற கேள்விகளுக்கு நடுவே அவர்கள் அனுபவிக்கும் வலி பெரும் துயர் தருவது. காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் பிள்ளைகளை நினைத்து அழுதுகொண்டிருக்கும் அத்தனை அன்னையர்களினதும் குரலாக இங்கு ஓர் ஒற்றைக் குரல் கேட்கிறது. அந்த ஒற்றைக் குரல்தான் இங்கு எழுத்துகளில் உயிர் பெற்றிருக்கிறது.




கருவறையில் கனல் சுமக்கும் தாய்மாருக்கு சமர்ப்பணம் செய்த போதே நாவலின் தன்மை எமக்குப் புரிந்துவிடுகிறது. ஓவியமாய் சிரித்திருக்கும் தன் மகனைப் பார்த்து உரையாடும் ஒரு தாயின் உணர்வு இந்த ‘முட்காட்டுப் பூ’. இதன் அட்டைப்படமே நம் கருத்தில் நிறைந்து கொள்கிறது. முட்கம்பிக்குள் அடைக்கப்பட்ட கடின வாழ்வின் மத்தியில் அம்மாவும் அவளின் நிழலாய் நிற்கும் மகனுமாக பொருத்தமான ஓர் ஓவியம். அதனை வரைந்த மணிவண்ணன் அவர்களுக்கும் அட்டை வடிவமைப்பு செய்த யசிகரன் அவர்களுக்கும் பாராட்டுக்கள். இந்நூலை சுவிற்சர்லாந்தில் இயங்கும் தமிழர் களரி ஆவணக் காப்பகம் தமது வெளியீடாக வெளிக்கொணர்ந்திருக்கிறது. ஜீவநதி, க. பரணிதரன் அவர்கள் இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்திருக்கிறார்.

ஆதிலட்சுமி சிவகுமார் நாடறிந்த எழுத்தாளர். ஏற்கனவே ‘புயலை எதிர்த்த பூக்கள்’, ‘மனிதர்கள்’, ‘பொன்வண்டு’, என மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் ‘என் கவிதை’, ‘ஒற்றை வானமும் ஒரு பறவையும்’ என இரண்டு கவிதைத் தொகுப்புகளையும் ‘புள்ளிகள் கரைந்த பொழுது’ எனும் நாவலையும் தந்தவர். முட்காட்டுப் பூ இவரது இரண்டாவது நாவல். இந்நூலின் நூற்றுநாற்பது பக்கங்களிலும் காணாமற் போன மகனை நினைத்து ஏங்கும் ஒரு தாயின் பலவிதமான உணர்வுகளின் ஒலி கேட்டுக் கொண்டேயிருக்கிற து. அது சிலசமயம் மகன் பற்றிய பெருமைகளோடு கசிந்து கொள்கிறது. சிலசமயம் இழந்துவிட்ட பிள்ளையின் நினைவுகளின் பதை பதைப்பை ஏக்கத்தோடு பகிர்ந்து கொள்கிறது. இந்தப் பகிர்வு நாம் கடந்து வந்த காலத்தின் பயணமாக மாறிப் போகிறது.

பல்லாயிரம் மைல்கள் கடந்து இன்னொரு தேசத்தில் வாழ்ந்தாலும் மனம் என்னமோ தான் பிறந்து வளர்ந்த நிலத்தை நோக்கியே தாவி நிற்கிறது. பெற்றவைகளும் இழந்தவைகளும் ஒரு சேர நினைவில் நின்று அலைக்கழிக்கிறது. காலம் பல துயரங்களைத் தந்த போதும் அந்த மண்ணின் வாழ்வையே அசை போடுகிறது. சொந்த நிலத்தில் மகனோடு வாழ்ந்த காலங்களை எண்ணிக் கலங்கி நிற்கிறது. புழுதி பறக்கும் முட்காட்டின் நடுவே பூவாய் மலர்ந்த சிறுவன் அவன். க தைக ள ால் நிரம்பிய மனது அவனுக்குரியது. பற்பல கேள்விகளோடு வளர்ந்தவன். சிறகுகளுக்குள் வைத்துப் பொத்திப் பொத்தி வளர்த்த பிள்ளைக்கு அன்னை சொல்லும் கதைகள் ஏராளம். வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்வுகள், அதன் விளைவுகள் எல்லா

வற்றையும் கதைகளாகச் சொல்லித்தான் வளர்க்கிறாள். நல்ல மனிதர்களை அறிமுகப்படுத்தியும், நல்ல விஷயங்களை உணரச் செய்தும், நம் தேசத்து வரலாற்றைச் சொல்லிக் கொடுத்தும் கண்ணுக்குள் வைத்து வளர்த்த பிள்ளை அவன். அத்தனையையும் மனதுக்குள் ஏந்திக் கொண்டு பொறுப்போடு வளர்கிறான். நகர்ந்து வரும் காலங்களின் மாற்றங்களை எல்லாம் உள்வாங்கிக் கொள்கிறான்.

அவனுக்கு அழகு உணர்வு அதிகம். கடலை ரசிப்பான். காடுகளை நேசிப்பான். சக மனிதர்களைப் பாசத்தோடு அணுகுவான். மிருகங்களை, பறவைகளை வியந்து கொள்வான். அப்படிப்பட்ட மகனுடனான தனது அனுபவங்களைக் கூறி எங்களையும் தன்னோடு பயணிக்க வைக்கிறார். ஆதிலட்சுமி ஒரு கதைசொல்லியாக ஒரு தாயின் வடிவத்தை நம் கண் முன்னே நிறுத்துகிறார். வித்தியாசமான கதை சொல்லல் மூலம் ஒரு தாய்க்கும் மகனுக்குமான உறவின் அழகான தருணங்கள் நம் கண் முன்னே விரிகின்றன.

‘இக்கதை முழுக்க முழுக்க என்னுடைய உணர்வுக் கடத்தல் மட்டும் கிடையாது. பிள்ளைகளைத் தேடி அலையும் எல்லா அம்மாக்களின் உணர்வுகளும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன’ என்ற ஆதிலட்சுமியின் வார்த்தைகள் மெய்மையானவை. ‘குஞ்சுகளை இழந்த குருவிக்கூடுகளாகத் தவித்துக் கிடக்கின்றன அன்னையர் வயிறுகள்’ என்ற வார்த்தைகளுக்குள் பொதிந்திருக்கும் வலி பிள்ளைகளைத் தேடி அலையும் ஒட்டுமொத்தத் தாய்மாரின் துயராக அமைகிறது. இதுவரை காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் தேடி அலைந்துகொண்டிருக்கும் அம்மாக்களினால் ஒரு நிமிடமேனும் நிம்மதியாக இருக்க முடிவதில்லை. ஒரு வாய் சோறு அவர்களின் தொண்டைக்குள் இறங்குவதில்லை. நித்திரையற்ற இரவுகள் அவர்களின் கண்ணீரை இரக்கத்தோடு பார்த்திருக்கும். காலம் விதித்த துயரது. இத்துயரை எழுதிக் கடக்க வேண்டிய நிலைக்குப் படைப்பாளியை தள்ளி விடுகிறது. அத்தனை தாய்மாரின் வலியையும் சுமந்து கொண்டே இந்த முட்காட்டுப் பூ மலர்ந்திருக்கிறது.



முட்காட்டின் நடுவே அம்மாவும் பிள்ளையுமாக அனுபவித்த சந்தோஷங்கள், துக்கங்கள் எல்லாவற்றையுமே ஆதிலட்சுமியின் எழுத்து நமக்குள்ளும் கடத்துகிறது. நாமும் அவர்களின் உணர்வுகளினூடே காடு மேடெல்லாம் அலைந்து திரிகிறோம். அவர்கள் சிரிக்கும் போது சிரித்தும் துயருற்ற போது கண்ணீர் சிந்தியும் அவர்களுக்குள் உறைந்து போகிறோம். அவர்கள் காணும் மனிதர்களுடன் நாமும் உறவாடிக் கொள் கிறோம். இடப்பெயர்வுக் காலங்களில் மனிதர்கள் எப்படி உதவி புரிந்து வாழ்ந்தார்கள் என்பதை எம் அனுபவத்தோடும் பொருத்திப் பார்க்கிறோம்.

இயற்கை வளம் மிகுந்த வன்னி மண் போரால் பாதி க்கப்பட்டு தஞ்சம் கேட்டு வந்தவர்களை வாரி அரவணைத்துக் கொண்ட விதம் போற்றுதற்குரியது. தமது குடிசை வீட்டில் இடம் தந்தார்கள். முற்றத்து நிலத்தில் குடியிருக்க அனுமதித்தார்கள். தம்மிடமிருந்ததைப் பகிர்ந்து கொடுத்துப் பசி தீர்த்தார்கள். ஆதரவு மனம் கொண்ட எளிமையான மனிதர்கள் உலவிய நிலம் அது. நெல்வயல், தோட்டம் துரவு, ஆடு மாடு வளர்ப்பு என்று இயற்கையோடு இணைந்து வாழும் வாழ்க்கை அங்கு இருந்தது. காடுகள் கூட அவர்களுக்கு அரணாய் நின்று பாதுகாத்தது. அந்த இயற்கையுடனும் இனிய மனிதர்களுடனும் மகன் இணைந்து கொண்டதை ரசித்து நிற்கும் தாயின் மனதும், பாலை, முதிரை, கருங்காலி, ஆத்தி என்று பெருமரங்கள் சூழ்ந்த காடுகளின் வாசனையும், உயிர் அச்சமுள்ள பதற்றமான பொழுதுகளும் இவரது எழுத்துக்களில் உயிர் பெற்றிருக்கின்றன.

வன்னி மண்ணின் வாசனையோடு அங்கு வாழும் மனிதர்களையும் அறிமுகப்படுத்துகிறார் ஆதிலட்சுமி. மதபேதம் பார்க்காத அன்பே உருவான திரேசம்மாப்பாட்டி, கூத்துப் பாடல்களைப் பாடி மகிழும் சின்னையா, இளம் வயதில் கணவனை இழந்து வாடும் தேவிஅன்ரி, இராணுவத்தால் பலியாக்கப்பட்ட மகளை நினைத்து அழும் பொன்னையா அப்பு, வெள்ளையம்மா, கனகபுரத்துப் பாட்டி, பூரணி அன்ரி, மகேஸ்வரி அன்ரி என இவர்களை எல்லாம் நாமும் தரிசித்துக் கடந்தவர்கள்தான். இவர்கள் கதைக்காக சேர்க்கப்பட்டவர்கள் அல்ல. ரத்தமும் சதையுமாக வாழ்ந்தவர்கள். ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள். இழப்புகளைச் சந்தித்தவர்கள். இவர்கள் தங்கள் துயரம் மறந்து தாயையும் மகனையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரவணைத்துக் கொள்கிறார்கள். மனிதநேயம் மிக்க ஒரு காலத்து வாழ்வின் வெளிப்பாடு அது.

இடம்பெயர்ந்து புதியதோர் இடத்தில், ஒரு கிராமத்தில் இருந்த போது நீண்ட நாட்களின் பின் போராளியான அப்பா அவர்களைக் காணவருகிறார். மறுபடி அவர் கடமைக்குத் திரும்பும் நேரம் மனதுக்குள் துயரம் பொங்க அம்மா ஏக்கத்துடன் நிற்கிறாள். மறுபடி எப்போது காண்போம் என்ற துக்கம் நெஞ்சை அடைக்கிறது. அந்நேரம் ‘நமது அன்பைத் தவிர அப்பாவிடம் கொடுத்துவிட எதுவும் எம்மிடம் இல்லை’ என்று மகனிடம் தன் ஆதங்கம் பகிரும் அந்தக் கணம் நெகிழ்ச்சி தருவது. இது போன்ற உயிர் வலி தரும் பல தருணங்கள் இந்நாவல் எங்கும் பரவிக் கிடக்கின்றன.

போர்க்கால வாழ்வு பற்றிப் பேசிய படைப்புகளில் முக்கியமான ஒன் றாக குறிப்பிடும் தகுதியை முட்காட்டுப் பூ பெற்றிருக்கிறது. மகிழ்ச்சியும் பதற்றமும் துயரமுமான அந்த வாழ்வை உயிர்ப் போடு பதிவு செய்திருக்கிறது. ஈரம் கசியும் எழுத்துக்களால்

எம் நெஞ்சுக்கு நெருக்கமாகத் தந்திருக்கிறது. வெறும் உணர்வுகளை மட்டும் இது பேசி விடவில்லை. இதில் ஆழமான வாழ்வும் வரலாறும் இருக்கிறது. அவற்றை எம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. ஆதிலட்சுமியின் எழுத்தின் வலிமை இது. இலக்கியம் சார்ந்த அவரது அனுபவமும் திறமையும் இதைச் சாத்தியமாக்கியிருக்கிறது. பல சமயங்களில் எங்களை அந்த நிலத்து வாழ்வுக்குள் கொண்டு போய் அழுத்தி விடுகிறது.

கண்கள் கசியாமல் மனம் பதை பதைக்காமல் யாராலும் இந்த ‘முட்காட்டுப் பூவை’ படித்து முடிக்க இயலாது. கேள்விகளுடனேயே வளர்ந்த பிள்ளை அக்கேள்விகளுக்கான விடையை ஒரு கட்டத்தில் தானே தேர்ந்தெடுத்துக்கொண்டான். அவன் பெயர் உலகம் அறியாதது. ஆனால் அவனது வாழ்க்கையை உலகம் அறியாமல் இருந்து விடக்கூடாது என்ற நினைப்பில் எழுந்த தாய்மையின் உணர்வு இந்நாவல். தன் மகனின் நல்மனது, அறிவாற்றல், சிந்தனைகள், வாழ்வின் ஒவ்வொரு விடயத்தையும் அவன் எதிர்கொண்ட விதம் என அவனுக்கிருந்த இனிய பண்புகள் எல்லாவற்றையும் பதிவு செய்து விடவேண்டும் என்ற பெருவிருப்பில் எழுதப்பட்ட படைப்பு இது. இந்த எழுத்துக்களில் என்றும் அந்த தங்கமகன் வாழ்ந்துகொண்டிருப்பான்.

இந்நாவல் ‘அவனை யாரும் அறியாதிருங்கள்’ எனும் ஒரு கவிதையுடன் நிறைவு பெறுகிறது. அந்தக் கவிதை ஒரு தாயின் ஏக்கம். அவளின் தாள முடியாத் துயரம். அக்கவிதையே இந்நாவலின் ஒட்டு மொத்த உணர்வையும் தாங்கி நிற்கிறது. அக்கவிதையை இங்கு பகிர விரும்புகிறேன்.

**அவனை யாரும் அறியாதிருங்கள்**

என்னுள் வலித்திருக்கும்
அந்தப் பெயரை ஒவ்வொரு கணமும்
உச்சரித்திருக்கிறேன் நான்...
அந்தப் பெயரை வெறும்
அறியாதிருங்கள்...

ஒரு நிலவொளி நாளில்
என் கைகளைப் பற்றி அவனொரு
சத்தியம் வாங்கிச் சென்றான்.
அந்த நம்பிக்கையை நான்
மீறாதிருப்பேனாக...

ஆண்டுகளின் அலைக்கழிப்பில்
மூப்படைந்த முதுமையில்
அவனை நாடி நிற்கிறதென் மூச்சு.

சிரிக்கும் அவனின் கண்களை
சற்றே மிதப்பான அவனின்
கூர்மையான நாசியை
காற்றில் சிறகடிக்கும் அவனின்
நெற்றி மயிர்க் கற்றையை...
ஐயோ... எல்லாவற்றையும்
தொலைத்தேனா நான்?
நடுக்கித் தொலைக்கிறதென்
நெஞ்சக்கூடு.

இறுதி நாளொன்றின் அவசரப் பொழுதில்
ஏதுமற்றிருந்த கையறுநாளில்
அவனின் ஒட்டிய வயிற்றை என்
கண்ணீரால் நிரப்பிய
அவலத்தை எப்படிச் சொல்வேன்.

கூரான அம்பொன்றின்
கொடுங்காயமாக அவனின்
நினைவெனக்குள் நிலைத்திருக்கிறது.
காற்று அள்ளி வருமா... அல்லது
கடல் அள்ளி வருமா...
ஏதும் புரியாமல்
குழப்பங்களுடன் காலநதி
கடந்து செல்கிறது.

ஒரே ஒரு வார்த்தைக்கான
ஏக்கங்களுடன்
யாருமறியாமல் அவனின் பெயரை
உச்சரித்துப் பார்க்கிறேன் எனக்குள்.
எந்தப் பெயர்களுக்குள்ளும்
அவனின் பெயர் இல்லாமல் இருக்கிறது.
அதுவே ஒரு கணம் ஆறுதலளிப்பதாகவும்
அடுத்த கணமே அச்சமூட்டுவதாகவும்
ஆகிவிடுகிறது.

காதலிக்கு கவிதை வரையும் வயதில்
அவன் வரைந்து சென்ற கவிதையை
எப்படி வெளியிடுவேன்...
கனத்த இரவுகளெல்லாம்
கடந்து போய்க் கொண்டிருக்கின்றன.

கன்னங்களில் ஒட்டிய அவனின்
முத்தத்தையும்
கைகளில் நிறைந்த அவனது
சத்தியத்தையும் பொத்தியபடி
காத்திருக்கிறேன் நான்.

புத்தகத்தை மூடி வைக்கும் கணம் கண்கள் ஈரலிக்கின்றன. மனம் பாரமாகின்றது. எங்கோ தொலைவில் பனி படர்ந்த குளிர் தேசத்திலிருக்கும் இந்தத் தாயின் தோளணைக்க மனம் துடிக்கிறது. இந்தத் தாயை மட்டுமல்ல பிள்ளைகளுக்காக ஏக்கத்தோடு காத்திருக்கும் அத்தனை தாய்மாரின் தோள்களையும் அணைத்துக் கொள்வோம். காலப்போக்கில்கூட ஆறாத காயங்கள் அவர்களுடையது. அக்காயங்களின் வலியை, இழப்பின் தீராக்கொடுமையை நேர்மையோடு பதிவு செய்த ஆதிலட்சுமிக்கு என் அன்பும் வாழ்த்துகளும்.



thamaraichelvi@thaiveedu.com

# ஒரு நூலின் உருவாக்கம்

## ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்

பகுதி 19

- என். செல்வராஜா

### சிறுவர் நூல்களும் வளரிளம் பருவத்தினரும்:

'சிறுவர் இலக்கியம்' என்பது சிறுவர்களுக்காக எழுதப்படும் இலக்கியமாகும் என்பது பொதுவான கருத்து. குழந்தைப் பருவத்தினருக்காக எழுதப்படும் மழலைப் பாடல்களும், நீதிக் கதைகளும் எம்மிடையே சிறுவர் இலக்கியம் என்று வகைப்படுத்தப்படுவதுண்டு. மழலைகள், பாலர்கள், குழந்தைகள், சிறுவர்கள் என்ற பல்வேறு பெயர்களில் வயது குறைந்த பிள்ளைகள் அழைக்கப்படுவர். இவற்றை வேறுபட்ட வயதுக்குரியவர்களுக்குரிய பெயர்களாக நூலகர்கள் குறிப்பிடுவர். இந்த வகைப்படுத்தலின் அடிப்படையிலேயே சிறுவர்களுக்கான நூல்கள் நூலகங்களின் சிறுவர் பிரிவுகளில் பிரித்தடுக்கப்பட்டிருக்கும்.

அன்றாட வாழ்வில் சிறுவர் இலக்கியம் என்ற பிரிவுக்குள் மூன்று வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட அனைவரையும் அடக்குவது பொருத்தமானதல்ல. இக்கட்டுரையின் தேவை கருதி இவ்வகைப்படுத்தலை வயதுவாரியாகக் கீழே தருகின்றேன்.

- மழலைகள் 3-5 வயது
- பாலர்கள் 6-7 வயது
- குழந்தைகள் 8-11 வயது
- சிறுவர்கள் 12-15 வயது

ஐரோப்பிய நூலகர்கள் இதனை எட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கின்றார்கள். ஒவ்வொரு பிரிவுக்கும் தனியான நிற அடையாளம் வழங்கி 3 வயது முதல் 15 வயது வரை சிறார்களின் அறிவு வளர்ச்சிக்கேற்ப நூல்களை வழங்குகிறார்கள். (ORT என்பதை Oxford Reading Tree என்பதன் சுருக்கமாகக் கொள்க).

- Pink Book Band ORT Level 1+
- Red Book Band ORT Level 2
- Yellow Book Band ORT Level 3
- Blue Book Band ORT Level 4
- Green Book Band ORT Level 5
- Orange Book Band ORT Level 6
- Turquoise Book Band ORT Level 7
- Purple Book Band ORT Level 8

சிறுவர்களுக்கான கல்வியில் மட்டுமல்லாமல், அன்றாட வாழ்விலும் சிறுவர் இலக்கியம் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. சிறுவர் இலக்கியம் மொழி நடையிலும், பொருளிலும், நூல் அமைப்பிலும் வளர்ந்தோர் இலக்கியத்தில் இருந்து வேறுபட்டது. வயதைப் பொறுத்து மொழி எளிமையாக அமைய வேண்டும். சிறுவர்களுக்கு ஏற்ற, அவர்களுக்கு ஈர்ப்பான விடயங்களாக அமைய வேண்டும், நூல் படங்களுடன் ஈர்ப்பாக அமையவேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள் உள்ளன. எனது கட்டுரை சிறுவர் இலக்கியத்தின் வரைவிலக்கணம் பற்றியதானதல்ல. அதனைப் பற்றி ஏராளமான புத்திஜீவிகள் எழுதிவிட்டார்கள். நான் சொல்லவருவது இலங்கையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டு வருகின்ற 'சிறுவர்களுக்கான நூல்கள்' பற்றிய சில அவதானிப்புகள் தொடர்பானதாகும்.

> **"சிறுவர் இலக்கியம் மொழி நடையிலும், பொருளிலும், நூல் அமைப்பிலும் வளர்ந்தோர் இலக்கியத்தில் இருந்து வேறுபட்டது. வயதைப் பொறுத்து மொழி எளிமையாக அமைய வேண்டும். சிறுவர்களுக்கு ஏற்ற, அவர்களுக்கு ஈர்ப்பான விடயங்களாக அமைய வேண்டும், நூல் படங்களுடன் ஈர்ப்பாக அமைய வேண்டும்."**

ஈழத்துத் தமிழ் நூல்களை 'நூல்தேட்டம்' தொகுப்புகளின் வாயிலாக ஆவணப்படுத்திவரும் அனுபவத்திலிருந்து, அண்மையில் தொகுத்து முடித்த 18000 நூல்களிலும் இடம்பெற்றிருந்த சிறுவர் நூல்களை வைத்தொரு புள்ளிவிபரம் தயாரித்திருந்தேன். அதன்படி ஈழத்துத் தமிழ்ப் படைப்புலகின் 5 சதவீதத்தினையே சிறுவர்களுக்கான நூல்கள் பிரதிபலிக்கின்றன என்பது எனது அவதானிப்பாகும். அவற்றில் பெரும்பாலும் மழலைப் பாடல்கள், சிறுவர் பாடல்கள், நீதிநூல்கள், நீதிபுகட்டும் சிறுவர் கதைகள் என்பவையே திரும்பத் திரும்ப ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

இலங்கையில் இன்று சிறுவர் நூல்கள் என்றதும் சிறுவர் இலக்கியங்கள் என்றே கருதும் நிலை ஒன்றுள்ளது. அதுவும் மழலைகள் முதல் சிறுவர்கள் வரையிலான அந்த நான்கு வகைக்குட்பட்ட சிறுவர்களுக்கான இலக்கியங்களையே (கதைகள், பாடல்கள்) கருதுகின்றோம். துர்அதிஷ்டவசமாகப் பயிற்சிப் புத்தகங்கள், உப பாட

நூல்கள் என்பவற்றையும் எமக்கு வசதியாக நாங்கள் சிறுவர் நூல்களாகக் கருதுகின்றோம். இலங்கை அரசாங்கமே 15 சதவீதத்திற்கும் அதிகமாக பயிற்சி நூல்களை பாடசாலை நூலகங்களுக்குள் திணிக்கவேண்டாம் என்ற போதிலும்கூட பாடசாலைகளின் கொள்வனவுத் திட்டத்தில் 85 சத வீதம் வரை பயிற்சி நூல்களையே வாங்கிக் கட்டிச் சேர்க்கிறோம். இன்று பாடசாலை நூலகங்களைப் பார்வையிட்டால் அங்கு முன்னுரிமை வழங்கப் படுவதும் இந்தப் பாடவிதானம் சார்ந்த பயிற்சி நூல்களாகவே காணப்படு கின்றன.

‘சிறுவர் நூல்கள்’ என்று இங்கு நான் குறிப்பிடுவது எதையென்றால் உலக அறிவுத்தேட்டத்தின் கீழ்க்கண்ட பத்துப் பிரிவுகளிலும் அடக்கப்படக்கூடிய அறிவு நூல்களையேயாகும். இதில் பத்தில் ஒரு பங்கே சிறுவர் ‘இலக்கி யங்கள்’ எனலாம்.

- உளவியல் / ஒழுக்கவியல்
- உலகச் சமயங்கள்
- சமூகவியல்துறை சார்ந்த நூல்கள் (அரசியல், பொருளியல், சட்டம், அரச நிர்வாகம், கல்வித்துறை, நாட்டாரியல் / விடுகதைகள்)
- மொழியியல்துறை
- தூய விஞ்ஞான நூல்கள்
- பிரயோக விஞ்ஞான / தொழில்நுட்பத்துறை
- கலைகள் / கவின்கலைகள் / விளையாட்டுத்துறை
- சிறுவர் இலக்கியம் (பாடல்கள், கதைகள், நாவல்கள்)
- வரலாறு / வாழ்க்கை வரலாறு / பிரதேச வரலாறு
- பொது விடயங்கள் (கணினித்துறை / ஊடகவியல்துறை / நூலகவியல் துறை)

எனப் பல்வேறு துறைகளிலும் போதிய சிறுவர் நூல்கள் எம்மிடம் இல்லை. சிறுவர்களிடையே வாசிப்புக் கலாசாரத்தை சுவைமிக்கதாக்குவதற்கு இத் துறைசார்ந்த நூல்கள் எல்லாம் சிறுவர்களின் முன்னால் விரித்துவைக் கப்பட வேண்டுமல்லவா? அப்பொழுது நாங்கள் நிச்சயமாக வாசிப்புக் கலாசாரம் எம்மிடையே நலிவடைந்துள்ளது என்று சொல்லவேண்டிய தேவை இராது.

இலங்கையில் முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவாசம் (Akila Viraj Kariyawasam) கல்வி அமைச்சராகப் பணியாற்றிய 2015-2019 காலப் பகுதியில் கல்வித் திணைக்களம் கோடிக்கணக்கில் நிதியையும் ஒதுக்கி, வடக்கு-கிழக்கில் தமிழ்ச் சிறுவர்களுக்கான பலவின நூல்களை பாட சாலை நூலகங்களுக்கு வழங்குங்கள் என்று எமது தமிழ்ப் பதிப்பகங் களைக் கேட்டபோது, எமது பதிப்பகங்கள் எல்லாம் தமது இயலாமையால் தமிழகத்தின் சிறுவர் நூல்களையே நாடிச்செல்லத் தூண்டியதற்கான பொறுப்பை எமது நாட்டுச் சிறுவர் நூல் எழுத்தாளர்களும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். சிங்கள மொழியில் சிறுவர்களுக்கும் வளரிளம் பருவத்தின ருக்கும் ஏற்ற நூல்கள் ஏராளம் காணப்படுகின்றன. இன்று வளரிளம் பரு வத்தினருக்கான பெரும்பாலான தமிழ் நூல்கள், சிங்கள நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்புகளாகவே காணப்படுகின்றன.

சிறுவர் நூல்களின் தேவையைப் பூர்த்திசெய்ய சிறுவர் இலக்கியங்களுடன் மாத்திரம் நின்றுவிடாது சிறுவர்களுக்கான பிற துறைகளிலும் எம்மவர்கள் எழுதிக் குவித்திருந்தால் இன்று எமது சிறுவர் நூல் வளத்தையிட்டு நெஞ்சை நிமிர்த்திப் பெருமிதம் கொண்டிருக்கலாம். எமக்கு அவசியமாக ‘தமிழ்ச் சிறுவர் நூல் வெளியீட்டாளர் சங்கம்’ ஒன்று நாடளாவிய ரீதியில் அவசரமாகத் தேவைப்படுகின்றது. தமக்கிடையேயான கருத்து வேறுபா டுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஆசிரிய வெளியீட்டாளர்கள் (Author - pub-












lishers) அனைவரும் இதன் அங்கத்த வராக இணைந்து கொள்ளவேண்டும். இதன்மூலம் தமிழில் சிறுவர் நூல் வெளி யீட்டுத்துறையின் முக்கியத்துவத்தை நிலைநாட்டலாம்.

ஆனால் நடப்பது என்ன? ஈழத்தின் சிறுவர் நூல் வெளியீட்டுக்கு இன்றும் சிறுவர் பாடல்களையும், சிறுவர் நீதிநூல், பஞ்சதந்திரக் கதைகளையும் தான் புதிய பானையில் பழைய கள்ளாக எமக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். பொருளா தாரக் காரணிகளுக்காகப் பழைய கள்ளை புதிய மொந்தைகளிலிட்டு சிறார் களின் தலையில் கட்டிவிடுகிறார்கள். இது எமது இனத்துக்குச் செய்யும் துரோகமாகாதா? சிறார் களுக்குக் கிடைக்கவேண்டிய புதிய வாசிப்பு அனுபவங்களை இல்லாதொழிக்கலாமா? வாசிப்பில் இளையோருக்கு கவர்ச்சியை ஏற்படுத்தாமல் சிறுவர்களிடையே வாசிப்புக் கலாசாரம் குறைந்துவிட்டது என மேடைகளிலும் ஊடகங்க ளிலும் பேசியும் எழுதியும் திரிவதில் அர்த்தம் என்ன?

சிறுவர் நூல்களை வெளியிடுவோர்கள் 15 வயதுக்குப் பின் னர் 18 வயது வரையிலான வளரிளம் பருவத்து இளம் வாச கருக்கான தொடர் வாசிப்புக்குரிய நூல்களைப் பற்றிக் கவலை கொள்வதில்லை.

***“சிறுவர் நூல்களை வெளியிடுவோர்கள் 15 வயதுக்குப் பின்னர் 18 வயது வரையிலான வளரிளம் பருவத்து இளம் வாசகருக்கான தொடர் வாசிப்புக்குரிய நூல்களைப் பற்றிக் கவலைகொள்வதில்லை.”***

அத்தி பூத்தாற் போல அண்மையில் இளையோர் நூல்கள் நான்கு எனது பார்வைக்குக் கிட்டியிருந்தன. இன்று என் கைக்கெட்டிய நான்கு நூல்களும் தூரத்தே ஒரு நம்பிக்கை வெளிச்சத்தைத் தெரியவைத்திருக்கின்றன. அதனால் இந்த நூல்கள் பற்றி சிறிதளவாவது தெரிவித்தாக வேண்டும். இந்த நான்கு நூல்களும், கொழும்பிலிருந்து குமரன் புத்தக இல் லத்தினரால் அவர்களது சிறுவர் நூல் வெளியீட்டுப் பிரிவான இலக்கியன் வெளியீடாக 2018-இல் வெளியிடப்பட்டுள்ளன.

இயற்கை அனர்த்தங்கள் என்ற முதலாவது நூல் திருமதி கேந்திரேஸ்வரி இராதாகிருஷ்ணன் என்பவரால் 36 பக்கங் களில் எழுதப்பட்டுள்ளது. வண்ணத்திலும், கறுப்பு வெள்ளை யிலும் போதிய விளக்கப்படங்கள் இந்நூலில் சேர்க்கப்பட் டுள்ளன. இயற்கை அனர்த்தங்கள்: ஓர் அறிமுகம், புவி யியல் சார்ந்த இயற்கை ஆபத்துக்கள் (புவிநடுக்கம், பனிச் சரிவு, நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு), நீரியல் சார்ந்த இயற்கை ஆபத்துக்கள் (வெள்ளப் பெருக்கு, சுனாமி, லைம்நிக் வெளியேற்றுகை), காலநிலை சார்ந்த இயற்கை அனர்த்தங்கள் (பனிப்புயல், வெப்பக் காற்றலை, வறட்சி, இடி மின்னல், டொர்னாடோ, சூறாவளி, இடிப்புயல்கள்), காட்டுத்தீ, தொற்றுநோய்களும் (Disease) கொள்ளை நோய்களும் (Epidemic), விண்வெளி (அண்டவெளித் தாக் குதல், சூரியக் கதிர்ப் பாய்ச்சல்), இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் ஆகிய எட்டு அத்தியாயங்களில் இந்நூல் இளையோர்க்கு விளங்கும் வகையில் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளது.

புவியியல் சிறப்புக் கலைப்பட்டதாரியான நூலாசிரியர் திருமதி கேந்திரேஸ்வரி இராதாகிருஷ்ணன் திருகோணமலை சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து பின்னர் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராகப் பணிபுரிகின்றார்.

பூகம்பம்: பேரழிவும் பயனும் என்ற அடுத்த நூலின் ஆசிரியர் ஜெய. சிதம்பரநாதன் அவர்கள். 40 பக்கம் கொண்ட இந்நூலிலும் விளக் கப்படங்களும் கறுப்பு வெள்ளைப் புகைப்ப டங்களும் காணப்படுகின்றன. இந்நூலில் மூன்று அதிர்ச்சிகளும் முக்கிய காரணமும் 1993, 2001, 2004, பூகம்பம் என்றால் என்ன? பூகம்பம் ஏன் ஏற்படுகின்றது? பூகம்பத்தின் பின்விளைவுகள், பூகம்பத்தைக் கண்டு பிடிக்க முடியுமா? பூகம்பமும் மற்றப் பேரழிவு களும், பூகம்பத்தை எப்படி அளப்பது? பேர ழிவிலும் ஒரு பயன், உலக நாடுகளில் பூகம்பத் தடுப்பு நட வடிக்கைகள் ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக கின்னஸ் புத்தகத்தில் சாதனைகளாக இடம்பிடித்த பூகம்பங்களின் பட்டியலொன் றும் இடம்பெற்றுள்ளது. நூலாசிரியர் பற்றிய குறிப்பினை நூலில் காணமுடியவில்லை என்பது குறையாக உள்ளது. (கற்பனையற்ற / துறைசார்) non fiction படைப்பாக்கங் களைப் பதிப்பிக்கும்பொழுது, பதிப்பாளர் நூலாசிரியர் பற் றிய தகவலை நிச்சயமாகப் பதிவு செய்யவேண்டும். அது அந்த நூலின் நம்பகத் தன்மைக்கு வழிசெய்யும்.

இன்று உலகில் அடிக்கடி ஏற்படும் இயற்கை அனர்த் தங்களை மேற்கண்ட இரு நூல்களும் சிறுவர்களுக்குப் புரியும் வகையில் விளக்கமாகத் தருகின்றன. சிறுவர்களின் பெற்றோரும் இதிலுள்ள தகவல்களை அறிந்துகொள்வது அவர்களின் அறிவையும் விரிவாக்க உதவும்.

இலங்கைப் பறவைகள் என்ற மற்றைய நூல் சிலாவத்தை கிருஷ்ணராசா அவர்களால் 24 பக்கங்களில் எழுதப்பட்டது. இந்நூலின் நோக்கம், பறவைகளின் பெயர்களையும் அவற் றின் அடிப்படைப் பண்புகளையும் கூறுதலாகும். இங்கு மணிப்புறா, கொட்டுக்காகம், சிறுமீன்கொத்தி, பச்சைச் சிட்டு, இமாலயக் குருவி, கொண்டைக்கிளாரி, வெண்ணாத்தி, மழைக்குருவி, ஆள்காட்டி, கரிச்சான், கானாங் கோழி, குருட் டுக்கொக்கு, கொண்டலாத்தி, சம்புக்கோழி, மாம்பழக் குருவி, காட்டுக்கோழி, கூழைக்கடா, நிலக்கிளி, செம்பகம், தையல்சிட்டு, செம்மார்பு குக்குறுவான், நீளவால் இலைக் கோழி, குக்குறுப்பான், செம்பருந்து, ஆறுமணிக்குருவி, இருவாயன், தினைக்குருவி, புலுனி, இலங்கை தொங்கும் கிளி, காடை, இலங்கை கௌதாரி, வயல் தவட்டை, சிவப் புமுக பூங்குயில், நீண்டசொண்டு தேன்சிட்டு, நீர்க்காகம், முக்குளிப்பான், தூக்கணாங்குருவி, சிறகை, கரிக்குருவி, வாலாட்டிக் குருவி ஆகிய 40 பறவைகள் சுருக்கமாக அறி முகப்படுத்தப்பட்டுள்ளன.

சிலாவத்தை கிருஷ்ணராஜா முல்லைத்தீவைப் பிறப்பிட மாகக் கொண்டவர். யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி யின் பழைய மாணவரான இவர் தனது இளமாணிப் பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பட்டப்பின் கல்வியியல்துறையில் டிப்ளோமாவை யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்திலும் பெற்றவர். ஆசிரியராகப் பணியாற்றிய இவர் தற்போது டெய்லி மிரர் பத்திரிகையில் மொழிபெயர்ப்



பாளராகப் பணியாற்றுகின்றார். தினக்குரல் வார இதழின் 'பரிசு' இதழில் இலங்கைப் பறவைகள் பற்றி இவர் எழுதிய 20 பதிவுகளுடன் மேலும் 20 புதிய பதிவுகளையும் சேர்த்து இந்நூலை ஆக்கியுள்ளார்.

என்னை இக்கட்டுரையை எழுதத்தூண்டிய நான்காவது நூல் சிறுவருக்கு சதுரங்க விளையாட்டு என்பதாகும். இதன் ஆசிரியர் சிவானந்தன் வித்தியாதரன் அவர்கள். இவர் ஏற்கனவே 'சதுரங்கத்தில் இறுதியாட்டம்' (2005), 'சதுரங்கம்: அடிப்படைகளும் தொடக்க முறைகளும்' (2005), 'சதுரங்கம்: அடிப்படைகளும் தொடக்க முறைகளும் (மாணவர்களுக்கானது)' (2017) ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். புங்குடு தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அளவெட்டியில் வசித்து வருகிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்ற இவர் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றவர். சர்வதேச தரப் புள்ளிகள் பெற்ற சதுரங்க வீரராவார். வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி வரும் இவர், சதுரங்கப் போட்டிகளில் நடுவராகவும் பணியாற்றுகிறார்.

மேற்கண்ட நான்கு நூல்களிலும் நான் அவதானித்த முக்கிய குறைபாடு யாதெனில் எந்தவொரு நூலுக்கும் Glossary எனப்படும் அருஞ்சொல் விளக்கக்கோவை இல்லாதிருந்தமையாகும். அறிவியல் நூல்களை சிறுவர்களுக்காக உருவாக்கும் படைப்பாளிகள் நிச்சயம் இதனைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

இங்கு நாம் கவனிக்கவேண்டிய முக்கிய விடயம், ஒவ்வொரு துறையிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள் எமது நாட்டில் இருக்கிறார்கள். இவர்களில் பலர் சிறுவர்களுக்காக நூல்களை எழுதுவதை காலாதிகாலமாகத் தவிர்த்து வந்துள்ளார்கள். இப்பெரியார்கள் நினைத்திருந்தால், ஈழத்துத் தமிழ்ச் சிறார்களுக்கேற்ற வகையில் தமது அறிவுத்துறையை எளிமைப்படுத்தி நூல்களாக வெளியிட்டிருந்தால், எம்மத்தியில் உள்ள 'டாக்டர்', 'இஞ்சினியர்' மோகங்கள் மறைந்து வரலாற்றாய்வாளர்களும், சமூகவியலாளர்களும், விஞ்ஞானிகளும், மொழியியலாளர்களும் உருவாக வழிசெய்திருப்பார்கள். துர் அதிஷ்டவசமாகத் தங்கள் அறிவியல்துறையை அறிமுகப்படுத்த, பல்கலைக்கழகத்துப் புகுமுக வகுப்பு மாணவர்களிடம் தானே அவர்கள் முதலில் செல்கிறார்கள்.

துறைபோகக் கற்ற எமது புத்திஜீவிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு வரும்பொழுது ஒரு நாளையாவது, இங்குள்ள பாடசாலை மாணவர்களுடனோ ஆசிரியர்களுடனோ தொடர்பு கொண்டிருந்தால், அவர்களுடன் திறந்த உரையாடல்களை மேற்கொண்டிருந்தால், சிறுவர் நூல்கள் பற்றிய புரிதலை மிக அழகாகப் பெற்றுக்கொண்டிருப்பார்கள். இங்குள்ள பாடசாலை நூலகங்களில் கொட்டிக் கிடக்கும் பல்வேறு அறிவுத் துறைசார் சிறுவர் நூல்களின் ஆசிரியர்கள் யார் யார் என்பதை அறிந்தாலே பிரமித்திருப்பார்கள். ஐரோப்பாவில் உள்ள அறிவுஜீவிகளில் பலரும் தாம் சார்ந்த துறையினை இளம் வாசகர்களிடம் அறிமுகப்படுத்துவதை பெருமையாகக் கருதுகிறார்கள். அப்பெரியார்களின் நூல்களால் உள்வாங்கப்படும் ஐரோப்பிய சிறுவர்கள் பத்தாம் வகுப்பிலேயே தமக்குரிய துறை பற்றிய தேர்வை மேற்கொள்ள வழிகாட்டப்படுகிறார்கள். (இங்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ்ப் பெற்றோர்களிடம் இந்தப் பருப்பு வேகுவதில்லை - அவர்களது பிள்ளைகள் டாக்டர்களாகவும் இஞ்சினியர்களாகவும் தொட்டிலிலேயே தீர்மானிக்கப்பட்டுவிடுகிறார்கள்).

மேற்குறிப்பிட்ட நான்கு நூல்களும் மாத்திரமல்லாது மேலும் பல இளையோர்க்கான நூல்கள் இலங்கையில் வெளிவர வேண்டும். எமக்கானதொரு 'தமிழ்ச் சிறுவர் நூல் வெளியீட்டாளர் சங்கம்' இலங்கையில் உருவாக்கப்பட்டு அடுத்த தடவை சிறுவர் நூல்களைப் பாடசாலைகளில் சேர்க்கவேண்டிய தேவை ஏற்படும்போது நிறுவன ரீதியாகத் தமது சிறுவர் நூல்களைச் சந்தைப்படுத்த வழிதேடிட வேண்டும். தனியார் படைப்பாளிகளினால் வெளியிடப்பட்ட சிறுவர் நூல்கள் தத்தம் வீடுகளில் உறங்கிக்கிடக்கும் வேளையில், அதைக் கடந்துசென்று தமிழகத்தின் பதிப்பகக் கதவுகளைத் தட்ட வேண்டிய துர்பாக்கிய நிலை இனியும் ஏற்படக்கூடாது என்பதையும் நாங்கள் நெஞ்சில் இருத்திக்கொள்வோமாக.



selvarajah.n@thaiveedu.com



# கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

4

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

தென் திராவிட மொழிக் குடும்பத்தில் காணப்படும் தமிழ், மலையாளம், கன்னடம், படகா, துளு, கொடகு, இருளா, தோடா, கோடா என்னும் ஒன்பது மொழிகளை சற்று விரிவாகப் பார்க்கலாம்.

## தமிழ் (Tamil):

தென்திராவிட மொழிகள் ஒன்பது. அந்த மொழிகளில் மிகப் பழைமையான மொழி தமிழ்மொழி ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எழுத்து வடிவமைந்த தொன்மையான இலக்கிய, இலக்கணங்களைக் கொண்ட திராவிட மொழி தமிழாகவே உள்ளது. பிற மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது வடமொழித் தாக்குதல் மிகவும் குறைந்து காணப்படும் மொழியாக, இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பிஜித்தீவு, தென் ஆபிரிக்கா என்று இன்று உலகொங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் உள்ளிட்ட எட்டுக்கோடி மக்களால் பேசப்படும் மொழியாகப் பார்க்கப்படுகிறது. சிங்கப்பூரில் ஆட்சி மொழிகளில் ஒன்றாகக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழி தனக்கென ஒரு பெரும் இலக்கணப் பாரம்பரியத்தைப் பெற்றுத் திகழ்கிறது.

***வடவேங்கடம் தென்குமரி***
***ஆயிடைத்***
***தமிழ்கூறுநல்உலகத்து***

*தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் 1-3*

என்று தொல்காப்பிய சிறப்புப் பாயிரத்தில் தமிழ் வழங்கும் பகுதிகள் கூறப்பட்டுள்ளன.

***'வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்***
***வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம் என்று***
***அந்நான் கெல்லை'***

என்று காக்கை பாடினியார் எனும் புலவர் தமிழ் வழங்கிய எல்லைகளைக் கூறுவதனைக் காணலாம். தென் இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடைப்பட்டு பழவேற்காடு முதல் குமரி வரை பரந்து கிடக்கும் நிலப்பகுதி தமிழ் வழங்கும் பகுதி என்று டாக்டர் கால்டுவெல் தனது ஒப்பிலக்கணம் எனும் நூலில் குறிப்பிடுகிறார். சங்கத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் 26,350 வரிகள் உலகின் ஒப்புயர்வற்ற மொழி தமிழ்மொழி என்பதை நிலை நிறுத்துகின்றது என்று செக்கோசுலோவாக்கிய நாட்டு மொழியல் அறிஞர் கமில் சுவலபில் (Kamil Suvalabil) தனது முருகனது சிரிப்பு (Smile of Muruga) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

'தமிழ்மொழி கிரேக்க மொழியை விட பண்பட்டது. இலத்தீனை விட அழகானது. ஆற்றலிலும் முழுமையிலும் ஆங்கிலம், ஜெர்மனி ஆகிய மொழிகளுக்கு இணையானது' என்று ஆங்கில இலக்கிய ஆக்ஸ்போர்டு துணைநூல் (Oxford Companion to English Literature 1992) குறிப்பிட்டுள்ளது. 'இன்றுள்ள இந்திய மொழிகளில் செவ்வியல் மொழியாக அமைந்து அதே செழுமையுடன் தொடரும் ஒரே மொழி தமிழ்' என்று தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஏ.கே. இராமானுஜம் குறிப்பிட்டுள்ளார். மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல மொழி தமிழ்மொழி. ஏனைய திராவிட மொழிகளைவிடச் சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப்பெற்ற மொழி தமிழே. அது மட்டுமல்ல ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைவது தமிழ் மொழியின் சொல்வளத்திற்குத் தக்க சான்றாகும்.

ஏனைய திராவிட மொழிகளில் பழங்காலக் கல்வெட்டுகள் அனைத்தும் வேற்று மொழிகளிலே காணப்படுகின்றன. ஆனால் தமிழின் தொன்மையான கல்வெட்டுகளில் அதிகமானவை தமிழிலேயே அமைந்துள்ளதனைக் காணலாம். பிறமொழித் தாக்குதல் மிகக் குறைவாகவும், தொன்மையான வடிவங்களையும் இலக்கணக் கூறுகளையும் பேணிப்பாதுகாக்கும் இயல்பு அதிகமாகவும் உள்ளமையால் ஏனைய திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணை புரிகின்றது என்பது கண்கூடு.

உலக மொழிகளுள் மூத்ததும் முன்னோடியுமான மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று என்றால் அது மிகையாகாது. உலகில் இருக்கும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 3000-த்திலிருந்து 8000-வரை இருக்கும் என்று மொழியியலாளர்கள் கூறுகிறார்கள். இவற்றுள் சில மொழிகளே எழுதவும் பேசவும் பயன்படுகின்றன. மேலும் வரிவடி

வத்தில் எழுதப்படும் மொழிகள் அதனிலும் குறைவே! இவற்றிற்கெல்லாம் தாயாகத் திகழ்பவை ஆறு மொழிகள் என்று பகரலாம். அவை,

- எபிரேய மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
- கிரேக்க மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
- இலத்தீன் மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
- சமஸ்கிருத மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
- தமிழ் மொழி
- சீன மொழி

அவ்வகையில், இன்றும் எழுத்தளவிலும் பேச்சளவிலும் தன் தொன்மையைக் காத்துச் சீரும் சிறப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கிறது தமிழ் மொழி. தமிழ் மொழி தொன்மை, முன்மை, எளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை எனப் பலவகை சிறப்புகளை ஒருங்கே யுடையது என்கிறார் ஞா. தேவநேயப் பாவாணர்.

அதுமட்டுமல்லாமல், தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு, இந்தி எனப் பல மொழிகளில் புலமைபெற்றிருந்த முண்டாசு கவிஞன் மகாகவி பாரதி 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடியதும், 'தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியதும், தமிழ்மொழி எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பதனைத் தெளிவாக்க தேவையில்லாத நிலை காணப்படுகின்றது.

தமிழின் சிறப்பை உணர்ந்த மேலைநாட்டறிஞர் டாக்டர் ஜி.யு. போப், தமிழை நன்கு கற்று அதன் சிறப்பினை உணர்ந்ததால் தமது கல்லறையில் 'ஒரு தமிழ் மாணவன்' என்று பொறிக்கச் செய்தார். உலக மொழிகள் பலவற்றுக்கு எழுத்து, சொல், யாப்பு, அணி ஆகியன உண்டு. ஆனால் தமிழ் மொழிக்கு மட்டும்தான் பொருளுக்கு இலக்கணம் உண்டு. ஆகையால்தான் தமிழை ஐந்திலக்கணம் என்றனர். பொருளிலக்கணம் பிறந்த முறையினை 'இறையனார் அகப்பொருள்' எனும் நூல் வழி அறியலாம். அத்துடன் அகத்திணை ஏழும் புறத்திணை ஏழும் பகுத்துத் தந்தது தமிழ்.

## மலையாளம் (Malayalam):

கேரளத்தில் பேசப்படும் மொழி மலையாளம். தமிழோடு நெருங்கிய தொடர்புகொண்டு திராவிட மொழிகளில் தமிழுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணப்படும் சிறப்புப் பெற்ற மொழி மலையாள மொழியாகும். பல்வேறு இலக்கியங்களுடன் புதுப் பொலிவு பெற்றுத் திகழும் மொழியாகும். பண்டைத் தமிழ் நாட்டின் மேற்குப் பகுதியான சேர நாட்டில் பேசப்பட்டு வருகின்ற மொழியாகும். ஏனைய திராவிட மொழிகளை விட வடமொழிச் சொற்களை அதிக அளவு ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழிலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்னரே பிரிந்து சென்ற மொழியாக இருந்த போதிலும் இம் மலையாள மொழி திராவிட மொழிகளின் வினைமுற்றுகளிலுள்ள பால் காட்டும் விகுதிகளை (Pronominal Terminations) விலக்கியுள்ளது.

> ***உலகில் இருக்கும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 3000-த்திலிருந்து 8000-வரை இருக்கும் என்று மொழியியலாளர்கள் கூறுகிறார்கள். இவற்றுள் சில மொழிகளே எழுதவும் பேசவும் பயன்படுகின்றன.***

**உ-ம்,**

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| அவன் அடித்தான் | அவன் அடிச்சு |
| அவள் அடித்தாள் | அவள் அடிச்சு |

தமிழில் 'ஐ' கார+ ஈற்றைக் கொண்டு முடியும் சொற்களெல்லாம் மலையாள மொழியில் 'அ' கர ஈற்றைக் கொண்டு முடியும்.
**உ-ம்,** மலை - மல

மலையாள மொழிக்கு டாக்டர் குண்டர்ட் இலக்கண நூலும் அகராதியும் அமைத்துள்ளார். தமிழின் மிகத்திரிந்த கிளைமொழி மலையாளம் என்பது டாக்டர் கால்டுவெல் கருத்தாகும்.

## கன்னடம் (Kannada):

கன்னடம் கர்நாடக மாநிலத்தின் மராத்தி நாட்டின் தென்பகுதியில் பேசப்படுகின்றது. கர்நாடகம் என்றும் கானரிஸ் என்றும் இம்மொழியை அழைப்பார்கள். கன்னட மொழியினை ஏறத்தாள மூன்று கோடி மக்கள் பேசுகின்றனர். கர்நாடகம் எனும் வடசொல் திரிந்து கன்னடம் என்றானது என்பர் வடநூலார். ஆனால் கன்னடம் என்பது திராவிடச் சொல் என்பார் மலையாள மொழிக்கு இலக்கண நூலும் அகராதியும் எழுதிய டாக்டர் குண்டர்ட் அவர்கள். கன்னடத்தில் பழங்கன்னடம், புதுக்கன்னடம் என இரண்டு வகை உள்ளது. புதுக்கன்னடத்தின் எழுத்து முறைகள் தெலுங்கு மொழியின் எழுத்து முறையை ஒட்டி அமைந்துள்ளதாக பேராசிரியர் ஏ.எஸ். ஆச்சார்யா என்பவரின் கருத்தாகக் காணப்படுகிறது. தமிழ் சொற்களை ஏற்று தமிழுடன் நெருங்கிய தொடர்புடையதாக இம்மொழி காணப்படுகிறது.

## படகா (Badaga):

படகா, நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர் பகுதிகளில் வாழும் 'படகர்கள்' எனும் இனத்தவர்கள் பேசும் மொழியாகும். இதனைக் கன்னட மொழியின் வட்டார வழக்காகவே ஒப்பியலறிஞர்கள் பலரும் கருதி வந்த நிலையில் தற்போது படகா மொழி தனி மொழியாகக் கருதப்படுகிறது. ஏறத்தாள இரண்டரை இலட்சம் மக்கள் இம்மொழியினை பேசுகின்றனர். மொழியியல் பேராசியர் மர்ரே பார்ன்சன் எமெனோ (Prof. Murray Barnson Emeneau) இம் மொழிபற்றி ஆய்வு செய்துள்ளார். அவர் கருத்துப்படி நீலகிரிப்பகுதியில் தோடர், கோடர் ஆகியோர் வந்து குடியேறிய பின் நீண்ட காலம் கழித்து படகா மொழியினர் வடக்கிலிருந்து வந்து குடியேறினர். இவர்களின் மொழி கன்னட மொழியோடு நெருங் கிய

தொடர்புடையது என்று தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் அகத்தியலிங்கம் படகா மொழியினை விரிவாக ஆய்வு செய்தமை குறிப்பிடத்தக்கது.

### துளு (Tulu):

துளு மொழியைத் திருந்திய வடிவம் என்று டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். துளு மொழிக்கு வரி வடிவம், எழுத்து வடிவம் என்பன இல்லை. பேசில் மிஷனைச் சார்ந்த பாதிரிமார்கள் (Basle Missionaries) பல நூல்களை எழுதியுள்ளனர். எழுதிய நூல்களை கன்னட வரிவடிவில் அச்சிட்டனர். கர்நாடகாவின் இரண்டு கடலோர மாவட்டங்களான தக்ஷின கன்னடா மற்றும் உடுப்பியிலும், கேரளத்தின் காசர்கோடு பகுதியிலும் பேசப்பட்டு வரும் திராவிட மொழிக் குடும்பத்தில் உள்ள மொழி தான் துளு. 2000 ஆண்டுகள் பழைமை கொண்ட, திராவிட மொழிக் குடும்பத்தில் உள்ள பழைமையான மொழிகளில் ஒன்று என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ராபர்ட் கால்ட்வெல், A Comparative Grammar of the Dravidian என்ற தன்னுடைய புத்தகத்தில் திராவிட மொழிக் குடும்பத்தில் நன்கு வளர்ச்சி அடைந்த மொழிகளில் ஒன்றாக துளுவை குறிப்பிட்டுள்ளார்.

### கொடகு (Kodagu):

கொடகு மொழிக்கு எழுத்து வடிவம் இல்லை. இதனால் எந்த இலக்கியங்களும் படைக்கப்படவில்லை. மக்களிடையே வெறும் பேச்சு மொழியாக மட்டுமே காணப்படுகிறது. சுமார் 80,000 மக்கள் இம்மொழியினைப் பேசுகின்றனர். இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் மேற்குப் பகுதிகளில் தனது பணி வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழித்த பாஸல் மிஷனைச் சேர்ந்த ஒரு ஜெர்மன் மிஷனரியான டாக்டர் மோக்லிங் (Hermann Friedrich Mögling) என்பவர் கொடகு மொழி பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். தமிழ் மொழியுடன் கொடகு மொழிக்கு மிக நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து பேராசிரியர் எல்.வி. இராமசாமி ஐயர் அவர்கள் கொடகு மொழியை ஆராய்ந்து அது தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதனை வெளிப்படுத்தினார். ஒரு பெண் பல ஆடவர்களை மணக்கும் பழக்கம் கொடகு மொழி பேசும் மக்களிடம் இருக்கிறது என்று டாக்டர் ஏ.சி. பர்னல் (A.C. Burnell) குறிப்பிட்டுள்ளார். டாக்டர் ஏ.சி. பர்னல் என்பவர் மெட்ராஸில் ஒரு ஆங்கில அரச ஊழியர் ஆவார். இவர் சமஸ்கிருதம் மற்றும் திராவிட மொழிகளிலும் அறிஞராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இருளா (Irula):

இருளா என்பது இந்தியாவின் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மாநிலங்களிலுள்ள நீலகிரி மலைகளின் பகுதிகளில் வாழும் இருளர்களால் பேசப்படும் ஒரு திராவிட மொழியாகும். இருளா மொழி தமிழுடன் நெருங்கிய தொடர்புடையதும் தமிழ் எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்திய மொழியை முதன்முதலில் இந்தியவியலாளர் கமில் சுவலபில் (Kamil Zvelebil) இம்மக்கள் பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளார். 1955-ஆம் ஆண்டு இருளா மொழி ஒரு சுயாதீனமான தென்திராவிட மொழி என்றும், அது தமிழுக்கு ஒத்ததாகவும், குறிப்பாக பழைய தமிழுக்கு ஒத்ததாகவும், சில கன்னட அம்சங்களைக் கொண்டதாகவும் இருக்கின்றது எனக் கூறினார். இவரைத் தொடர்ந்து இருளா மொழியினை ஜெரார்ட் எப். டிப்லாத் (Gerard F. Diffloth), ஆர். பெரியாழ்வார் ஆகியோரும் ஆய்வு செய்துள்ளனர். குறும்பா, படகா மொழிச் சொற்கள் இருளா மொழியில் அதிகமாகக் கலந்துள்ளன. இருளா மொழி பேசும் இருளர்கள் மலைப்பகுதிகளில் ஒதுங்கி வாழ்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோடா (Godda):

நீலகிரி மலைப்பகுதியில் வாழும் பழங்குடி இனத்தவர்கள் கோடர்கள் ஆவர். இக்கோடர்கள் பேசும் மொழி கோடா மொழி ஆகும். கூலி வேலை செய்யும் மிக எளிய மக்களால் பேசப்படும் மொழியிதுவாகும். கன்னட மொழியின் கொச்சை மொழி போலக் கோடா மொழி அமைந்திருப்பதாக டாக்டர் கால்டுவெல் (Robert Caldwell) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இருந்தாலும் இப்போது இம்மொழி தனி மொழி என்று நிறுவப்பட்டுள்ளதுடன் இதனை மொழியியல் பேராசியர் மர்ரே பார்ன்சன் எமெனோ (Prof. Murray Barnson Emeneau).அவர்களும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

### தோடா (Toda):

நீலகிரி மலைப்பகுதியில் வாழும் மற்றொரு பழங்குடி இனத்தவர் தோடர்கள் ஆவர். இவர்கள் பேசும் மொழியே தோடா மொழியாகும். பேராசிரியர் பெர்னாட் ஸ்கிமிட் (Bernard Schmid) என்பவர் பொ ஆ பி . 1837-இல் தோடா மொழியை ஆய்வு செய்தார். திராவிட மொழிக் குடும்பத்துடன் தொடர்புடைய மொழி தோடா மொழி என்று அவர் குறிப்பிட்டார். 800 பேர் தோடா மொழி பேசுகின்றனர். இந்தப் பழங்குடி மொழியானது மிக விரைவாக அழிந்துவரும் மொழிகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக யுனெஸ்கோ தெரிவித்துள்ளது. 1935-1938 வரை பேராசிரியர் எமனோ இம்மொழி பற்றியும், இம்மொழி பேசும் மக்களைப் பற்றியும் ஆராய்ந்தார். தோடா மொழி பேசும் மக்களின் தொகை 600 என்று குறிப்பிடுகிறார். போதைப் பொருட்களை உட்கொள்ளும் வழக்கம் இம்மக்களிடையே உள்ளது. பெண் குழந்தைகளைப் பிறந்தவுடன் கொல்லும் வழக்கமும் உள்ளது. ஆகவே இவர்கள் எண்ணிக்கையில் குறைந்துவிட்டனர் என்று கால்டுவெல் குறிப்பிடுவார். தோடர்களைப் பற்றி கர்னல் மார்ஷல் (Colonel Marshall) விரிவான நூல் ஒன்றினை எழுதியிருந்தார். பேராசிரியர் டபிள்யூ.எச்.ஆர். ரிவர்ஸ் (W.H.R. Rivers) என்பவர் தோடர்களைப் பற்றி 770 பக்க அளவில், The Todas என்ற தலைப்பில் 1906-இல் ஒரு நூலை எழுதி வெளியிட்டார்.

ஆகவே தென் திராவிட மொழிகள் ஒன்பது அது பற்றிய விளக்கங்களைப் பார்த்தோம்.

(தொடரும்...)



nageswary@thaiveedu.com




# தென்னாசிய நாடுகளின் அரசியலில் மதம்

– அ. மேரி றெசோதா

**“மக்கள் கூடிவாழ்ந்த காலம் தொடக்கம் அவர்களின் உணர்வுகளில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாத ஒரு சக்தியாக மதம் வளர்ச்சி பெற்றுள்ளது. நவீனத்தை நோக்கி மக்கள் முன்னேறிச் செல்கையில் மதத்தின் பரிணாமும் விஸ்தரித்து நாடுகளின் அரசியலைத் தீர்மானிக்கும் தந்திரோபயமாக மாறியுள்ளது.”**

இலங்கை, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய 08 நாடுகளைக் கொண்ட பிராந்தியம் தென்னாசிய நாடுகள் என்று அழைக்கப்படுகின்றது. இந்நாடுகளில் இந்து, பௌத்தம், இஸ்லாம் ஆகிய மதங்களினைப் பெரும்பான்மையாகக் கொண்ட மக்கள் குழுவினர் வாழ்கின்றனர். நேபாளம், இந்தியா ஆகிய நாடுகள் இந்து மதத்தினையும், இலங்கை, பூட்டான் ஆகியன பௌத்த மதத்தினையும், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆப்கானிஸ்தான் மற்றும் ஆகிய நாடுகள் இஸ்லாம் மதத்தினையும் முதன்மை மதமாகக் கொண்டுள்ளன.

இந்து மற்றும் பௌத்தம் ஆகிய மதங்கள் தென்னாசியாவின் தோற்றுவாயாக இருப்பதுடன், இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் புரட்டஸ்தாந்து ஆகிய மதங்கள் இந்நாடுகளினை தமது ஆளுகைக்கு உட்படுத்திய வேற்று நாட்டவர்களால் பரப்பப் பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. தென்னாசிய நாடுகள் பல்வேறு பண்பாடு, மொழி மற்றும் மத அடையாளங்களினைத் தக்கவைத்துள்ளது. இந்நாடுகளில், இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், சீக்கியம் மற்றும் சமண மதத்தினர் வாழ்கின்றனர்.

மக்கள் கூடிவாழ்ந்த காலம் தொடக்கம் அவர்களின் உணர்வுகளில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாத ஒரு சக்தியாக மதம் வளர்ச்சி பெற்றுள்ளது. நவீனத்தை நோக்கி மக்கள் முன்னேறிச் செல்கையில் மதத்தின் பரிணாமும் விஸ்தரித்து நாடுகளின் அரசியலைத் தீர்மானிக்கும் தந்திரோபயமாக மாறியுள்ளது. தென்னாசிய நாடுகள் தம்மை மதச்சார்பின்மை நாடுகளாக முலாம் பூசி அடையாளப்படுத்துகின்றன.

இந்நாடுகளில் ஆட்சி புரிந்த காலனித்துவ வாதிகள் தங்களது அரசியல் இலாபத்திற்காக மதம்சார் அரசியலை முன்னெடுத்திருந்தனர். இதில் நேபாளம் அதிஸ்டவசமாகக் காலனித்துவ வாதிகளின் பிடிக்குள் சிக்கிக் கொள்ளாததால் ஏனைய நாடுகளினைப் போல மதப்பரவலுக்கு ஆளாகவில்லை.

வணிக நோக்கத்தின் பெயரில் தென்னாசிய நாடுகளுக்குள் நுழைந்த காலனித்துவவாதிகள் மதம் மற்றும் மொழிப் பரவலையும் மேற்கொண்டிருந்தனர். இந்தியாவிற்கு வந்திறங்கிய வாஸ்கொடகாமா, ‘வாசனைப் பொருட்களையும், கிறிஸ்தவர்களையும் தேடி வந்ததாக’ குறிப்பிட்டிருந்தார். அரேபியர்களின் வருகையுடன் இந்நாடுகளில் இஸ்லாம் மதமும் பரவலடைந்துள்ளது. குறிப்பாக, காலனித்துவவாதிகள் மதத்தினைப் பரப்பும் நோக்குடன் பாடசாலைகளை உருவாக்கி, ஆங்கில மொழியையும் கற்பித்தனர். இது தென்னாசிய நாடுகளைப் பொறுத்தவரை கல்வி கற்ற சமூகம் உருவாகுவதற்கும் சமூக மேம்பாட்டிற்கும் வித்திட்டது என்பது உண்மையாகும்.

காலப்போக்கில், காலனித்துவவாதிகளின் ஆட்சியில் இருந்து விடுபட்ட இந்நாடுகள் மதத்தின் பிடியிலிருந்து விடுபடவில்லை. மக்களின் வாழ்க்கையின் அங்கமாக விளங்கும் மதம் இந்நாடுகளின் அரசியல் போக்கினைத் தீர்மானிக்கும் வலுக்கொண்டதாக மாறிவிட்டது. மதத்தினைச் சாரம்சமாகக்கொண்டு, நாடுகளுக்கு இடையிலும், நாட்டுக் குள்ளேயும் ஏற்படுகின்ற பிரச்சினைகள் பல வருடங்கள் கடந்தும் தீர்க்கப்படாதவையாக உள்ளன. 400 வருடங்களாகக் காலனித்துவவாதிகளின் ஆதிக்கத்தி லிருந்த இந்தியா 1947-ஆம் ஆண்டு சுதந்திரமடையும் போது, மதத்தினைக் காரணமாகக்கொண்டு தனி நாடாக சுதந்திரம் பெற்றுள்ளது. இதேபோன்று கிழக்குப் பாகிஸ்தான் 1972-ஆம் ஆண்டு பங்களாதேஷ் என்ற தனி நாடாக உருவாகியது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் எதிர்ப்பு நாடுகளாக எல்லைப் பிரச்சினைக்காக யுத்தத்தினைச் சந்தித்த வண்ணம் இன்றும் இருக்கின்றது.

ஆட்சி அமைக்கின்ற ஆட்சியாளர்கள் தங்களது மதம் சார்ந்த நாடாகவே மாற்ற முனைகின்ற போக்குகளும் தென்னாசிய நாடுகளில் காணலாம். பெரும்பான்மையைக் கொண்ட மதத்தினர் அரசியல் ரீதியாகப் பலமடைந்து, ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்று வதுடன், சிறுபான்மை மதத்தினைப் பின்பற்றும் மக்களின் உரிமைகளினையும் சுதந்திரத்தினையும் கேள்விக்குறி யாக்கும் அபாய நிலைகளையும் உருவாக்கி விடுகின்றனர்.

தேசியவாதம் எழுச்சி பெற்ற காலங்களில் தென்னாசிய நாடுகளில் வாழ்ந்த பூர்வீகமானவர்கள் தத்தமது மதத்தினை வளர்த்தெடுக்கும் வகையில் துரிதமாகச் செயற்பட்டிருந்தனர். குறிப்பாக, இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் இத்தகைய தாக்கங்கள் அதிகளவில் இருந்துள்ளன. இலங்கையில், அநகாரிக தர்மபால பௌத்த மதத்தினையும், ஆறுமுக நாவலர் இந்து மதத்தினையும், சித்திலெப்பை இஸ்லாம் மதத்தினையும் வளர்த் தெடுக்க அரும்பணியாற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதியில், சமய இயக்கங்கள், சமூக அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு மதம் வளர்த் தெடுக்கப்பட்டது மாத்திரமின்றி மதம்சார் அரசியல் கட்சிகளின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் வித்திட்டது.

> ***“ மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக்கூடிய தீவிரவாத சமய சக்திகளை முன்னிலைப்படுத்தி அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான ஒரு மார்க்கமாக அரசியல்வாதிகள் மதத்தினைக் கையாண்டுள்ளனர். ”***

மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக்கூடிய தீவிரவாத சமய சக்திகளை முன்னிலைப்படுத்தி அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான ஒரு மார்க்கமாக அரசியல்வாதிகள் மதத்தினைக் கையாண்டுள்ளனர். இந்தியாவில், தேசியவாத போர்வையிலிருந்து சமய வகுப்புவாதம் உருவாகியது. விஷ்ணு இந்து பரிசத், சிவசேனை போன்ற இந்து சமய தனித்துவ சங்கங்களின் ஆதரவுடன் பாரதீய ஜனதா கட்சி இந்து மதத்தினை விசேடமாக அங்கீகரித்து பேணப்பட வேண்டும் என்று பிரகடனப்படுதத்தி யிருந்தது. இந்து மதக்கொடி இந்தியா முழுவதும் பறக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது. இந்து சமயக் கட்சியான பாரதீய ஜனதா கட்சி நாட்டின் மத்திய அரசாங்கத்தில் இருந்ததுடன், இந்து மத ஆட்சியை ஏற்படுத்துவதில் அக்கறையுடன் செயற் பட்டது. 1825-இல் பிரம்ம சமாஜம், 1875-இல் ஆரிய சமாஜ இயக்கங்கள் இந்து மதத்தினை அரசியல் அடையாளமாகப் பிரேரணை செய்துள்ளன.

அயோத்தி நகரில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பாமர் மசூதி இடிப்புச் சம்பவம் மதப் போராட்டத்தினை ஏற்படுத்தி, இந்து - முஸ்லீம் மக்களிடையே மத நல்லிணக்கத்தினை ஏற்படுத்து வதில் சவால் மிக்கதாக இன்றும் தொடர்கின்றது. இஸ்லாமியர் தமக்குச் சொந்தமான பூமியென்றும், இராமன் அயோத்தியில் பிறந்துள்ளதால் தொன்மையான இந்துக்கோயில் இருந்துள்ள தென்று இந்துக்களும் நம்புகின்றனர். இங்கு இரண்டு தரப்பினரும் அரசியல் நலனுக்காக மும்முரமாகச் செயற் பட்டமையால் மதப்பதற்ற நிலைக்கும் வழிவகுத்தது. புரூஸ் அறிஞர், ‘இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு மதத்தினால் மட்டும் ஏற்படுத்தப்படுகின்றது. ஆனால், தென்னாசிய மக்கள் அரசியலுடன் மதத்தினை இணைத்துள்ளார்கள்’ என்கின்றார்.

இதேபோன்று, இந்து சமய மக்களை மதம் மாற்று வதற்காக இஸ்லாம், கிறிஸ்தவ மதத்தினர் மேற் கொண்ட வன்முறைகளும் விரோதப் போக்குகளும் மதங்களுக்கிடையே பகைமையுணர்வினை அதிகரிக்கச் செய்துள்ளது. அவை மதங்களிடையே புரிந்துணர்வு மற்றும் சகிப்புத்தன்மையை நீர்த்துப்போகச் செய்தது.

பங்களாதேஷ் அரசியல் யாப்பின்படி, இஸ்லாமிய மத நெறிமுறைகளுக்கு உட்பட்ட வகையில் சட்டவாக்கம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. 1977-ஆம் ஆண்டு உருவாக்கப் பட்ட பங்களாதேஷ் அரசியலமைப்பில் மதச்சார்பற்ற நாடு என பிரகடனப்படுத்தியிருப்பினும், 1988-ஆம் ஆண்டு திருத்தத்தில் அரச மதமாக இஸ்லாமிய மதம் குறிப்பிடப் பட்டுள்ளது . இங்கு, சிறுபான்மை மதத்தினராக இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பௌத்தர்கள் வாழ்கின்றனர்.



இவர்கள் இஸ்லாம் மதத்தினரைப் போன்று அரசியல், கலை, கல்வி மற்றும் இலக்கியச் செயற்பாடுகளில் பங்களித்து வருகின்றனர்.

எனினும், அரசியலில் சுவாமி லீக், பங்களாதேஷ் பொதுவுடமைக் கட்சி மற்றும் ஜாதிய சமாஜ் தாந்திரிக் கட்சி போன்றவற்றுக்கு இந்துகள் ஆதரவினை வழங்கி வருகின்ற போதிலும், இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சிகளை இந்துக்கள் வெறுப்பவர்களாகவே காலம் காலமாக இருந்து வருகின்றனர். இங்கு வாழும் இஸ்லாம் மதத்திற்கு இந்தியா ஆதரவாக பல உதவிகளை அரசியல் ரீதியாகவும் வழங்கி வருகின்றது. பங்களாதேஷ் நாட்டினை இந்தியா எப்போதும் தனது அதிகாரத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணப்பாட்டினைக் கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணமாக இந்தியாவின் எதிர் நாடாக பாகிஸ்தான் இருப்பதால் அரசியல் ரீதியாக ஆபத்துக்களில் இருந்து மறைமுகமான பாதுகாப்பினை பங்களாதேஷ் நாட்டில் இருந்து இந்தியா எதிர்பார்க்கலாம்.

பாகிஸ்தான், மாலைதீவு மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலும் இஸ்லாம் மதமே அரச ஆட்சி மதமாக இருக்கின்றது. பாகிஸ்தான் இராணுவ மயமாக்கலினை அதிகார பூர்வமாக அங்கீரித்துள்ளது. தென்னாசிய நாடுகளில் வலுவான, சக்திமிக்க இராணுவ பலம் மற்றும் அணு ஆயுதங்களைக் கொண்ட நாடாக பாகிஸ்தான் உள்ளது. பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் நீண்ட கால முரண்பாடுகள் இருந்து வருகின்றன. இதனாலேயே இந்தியா பங்களாதேஷ் பக்கம் சாயும் நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கின்றது. இந்நாட்டின் அரசியல் அமைப்பின் மாநிலச் சட்டமன்றங்கள், தேசிய சபை மற்றும் செனட் சபைகளில் இந்துக்களுக்குத் தனி இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், அரசியல் இஸ்லாம் மதத்தின் மீது மையம் கொண்டுள்ளது.

நேபாளம் பழமைவாத இந்து மத நாடாக விளங்குகின்றது. 2008-ஆம் ஆண்டு குடியரசாகப் பிரகடனப்படுத்தியபோது மதச்சார்பற்ற நாடு என அறிவித்திருந்தது. நடைமுறையில் இந்து மத ஆட்சியாக வெளிப்படுகின்றது. கௌதம புத்தரின் பிறப்பிடம் நேபாளமாக உள்ளபோதும் பௌத்த மதத்தின் ஆதிக்கமற்ற நாடாகவே இது உள்ளது. இங்கு வாழ்கின்ற மக்களின் பண்பாடு மற்றும் அரசியல் போக்கு என்பன இந்து மதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைகின்றது. இந்துக்களின் தெய்வமாகக் கருதப்படுகின்ற 'பசு' நேபாள நாட்டின் தேசிய விலங்காக அங்கீகரிக்கப்பட்டு, பசு வதைச்சட்டம் அரசியல் யாப்பின் மூலம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இது தவிர, 1962-இல் புதிதாக வடிவமைக்கப்பட்ட நேபாள நாட்டின் தேசியக்கொடியிலுள்ள வெள்ளை நிறம், சந்திரன் மற்றும் 12 கதிர்களுடன் கூடிய சூரியன் ஆகியன இந்து மதத்தினைச் சார்ந்தவையாக அமையப்பெறுகின்றது.

பூட்டான், இலங்கை போன்ற நாடுகள் பௌத்த மதத்தினை முதன்மைப்படுத்துகின்றது. பூட்டானில் வச்சிராய பௌத்தமும், இலங்கையில் தேரவாத பௌத்தமும் பின்பற்றப்படுவதுடன், அரசியலையும், ஆட்சி அதிகாரத்தையும் தீர்மானிக்கும் சக்திகளாகவும் விளங்குகின்றது. இரு நாடுகளும் அந் நாட்டினுடைய அரசியலமைப்பின்படி, பௌத்த நாடாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இலங்கை காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் இருந்தபோதே அரசியலில் மதம் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கிற்று. இறுதியாக இலங்கையை ஆண்ட பிரித்தானியர் தங்களது அரசியல் இலாப நோக்கத்திற்காக இனம் மற்றும் மதங்களிற்கு இடையிலான விரிசல்களை ஏற்படுத்திப் பிரச்சினைகளைத் தோற்றுவித்திருந்தனர். குறிப்பாக, பெரும்பான்மையினராக வாழ்ந்த சிங்கள மக்களை ஆதரித்துச் செயற்பட்டனர். பிரித்தானியர்களால் கொண்டு வரப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் சிறுபான்மையின மக்களைப் புறக்கணிப்பதாக அமைந் திருந்தன.

> ***“இறுதியாக இலங்கையை ஆண்ட பிரித்தானியர் தங்களது அரசியல் இலாப நோக்கத்திற்காக இனம் மற்றும் மதங்களிற்கு இடையிலான விரிசல்களை ஏற்படுத்திப் பிரச்சினைகளைத் தோற்றுவித் திருந்தனர்.”***

சட்ட மன்றங்களில் இன ரீதியாக பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்டு, பெரும்பான்மையினமான சிங்கள இனத்திற்கே



> “இலங்கை அரசியல் வரலாற்றில், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, நாட்டை நிர்வகிக்கும் தனித்துவ உரிமையினை பௌத்த மதத்தினரே பெற்றுள்ளனர். சட்டவாக்க மற்றும் நிர்வாக விடயங்களில் பௌத்த மதகுருமார்களுக்குப் பூரண அதிகாரத்தினை வழங்கியுள்ளது. புத்தசாசனம் மற்றும் பௌத்த மத அலுவல்கள் அமைச்சு ஆலோசனையின் பேரில் ஆட்சி நடத்தும் போக்கு இன்றுவரை உள்ளது.”



அதிகப்படியான பிரதிநிதித்துவத்தினையும் வழங்கியிருந்தது. இதனால், அதிகாரம் மிக்கவர்களாக விளங்கிய சிங்கள அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக சிறுபான்மையின மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவதில் எதிர்நிலைப் பாட்டினைக் கொண்டிருந்தனர். சிறுபான்மையினராக வாழ்ந்த தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதால் பிரித்தானியருக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார்கள். இதனால், அச்சம்கொண்ட பிரித்தானியர் மேலும் இனங்களிற்கு இடையிலான முரண்பாடுகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தனர்.

இதன் எதிர் விம்பமாகவே 1956-இல் சிங்கள மொழிச்சட்டம் கொண்டு வரப் பட்டது. 1958-இல் பிரதம மந்திரியாக இருந்த எஸ்.டபிள்யூ. பண்டாரநாயக்க வின் காலத்தில் தேசியவாத எழுச்சி முகிழ்ந்தபோது இலங்கையைப் பௌத்த மத நாடாக அடையாளப்படுத்தினர். 1948-ஆம் ஆண்டு இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான 1972 மற்றும் 1978-ஆம் ஆண்டு அரசியல் யாப்புகளில் தேசிய மதமாக பௌத்த மதம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, நாட்டை நிர்வகிக்கும் தனித்துவ உரிமையினை பௌத்த மதத்தினரே பெற்றுள்ளனர். சட்டவாக்க மற்றும் நிர்வாக விடயங்களில் பௌத்த மதகுரு மார்களுக்குப் பூரண அதிகாரத்தினை வழங்கியுள்ளது. புத்தசாசனம் மற்றும் பௌத்த மத அலுவல்கள் அமைச்சு ஆலோசனையின் பேரில் ஆட்சி நடத்தும் போக்கு இன்றுவரை உள்ளது. ஆட்சிக்கு வரும் அரசியல் தலைவர்கள் பௌத்த மத மூத்த குருமாரின் ஆசிர்வாதத்தினைப் பெற்ற பின்னரே கடமையைப் பெறுப்பேற்கும் நிலை காணப்படுகின்றது.

சிங்கள தேசியவாதம், பௌத்த மயமாக்கல் காரணமாக சிறுபான்மை மதத்தவர்களாகிய இந்து, கிறிஸ்தவம், கத்தோலிக்கம் மற்றும் இஸ்லாம் மதத்தினர் தங்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலையும் முற்றுப்பெறவில்லை. 2019-இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இஸ்லாம் மதத்தினரால் நடத்தப்பட்டதென்றும், இஸ்லாமியர் தீவிரவாதிகள் என்றும் பௌத்த மதத் தினரால் நோக்கப்பட்டமை சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தன.

அரசியல் அதிகாரத்தினை மையமாகக் கொண்டு பல்வேறு இடங்களில் பௌத் தமயமாக்கல் அதிகரித்து வருகின்ற நிலை உள்ளது. குறிப்பாக, இந்து மத அடையாளங்கள் உள்ள இடங்களில் பௌத்த மத விகாரைகளை அமைப்பது, தமிழர்களின் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவது போன்ற செயற்பாடுகள் பௌத்த மதத்திற்கே இலங்கை சொந்தம் என்பதனைத் திணிக்கின்றது. ஓர் இனத்தினை அழிக்க வேண்டுமாயின், அதனது பண்பாட்டு அம்சங்களை இல்லாதொழிக்கும்போது நாளடைவில் குறித்த இனம் அழிந்து போய்விடும் என்பது அரசியல் சூட்சுமமாக இருக்கின்றது. இந்நிலையில் திட்டமிட்ட மத அழிப்புகள் அல்லது பெரும்பான்மை மதத்தினை விஸ்தரிப்பது ஏனைய சிறுபான்மை மதத்தினை முடக்கும் செயலாக அமைகின்றது. முப்பது வருட உள்ளக யுத்தத்தின் பின்னர் இலங்கை அரசியல் பௌத்தமயமாக்கலினை மேலும் நிலைப்படுத்தி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

தென்னாசிய நாடுகளைப் பொறுத்த வரையில், அரசியல் என்பது அனைத்து மக்களுக்கும் நலனாகச் செயற்படுவதில் இருந்து விலகி, குறித்த மதத்தின் நலனை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்நாடுகளில் அரச அந்தஸ்தினைப் பெற்றதாக மதம் விளங்குகின்றது. நாடுகளின் அரசியலைத் தீர்மானிக்கும் முக்கிய சமூகக் காரணியாகவும் மதம் உள்ளது. எனினும், சிறுபான்மை மதத்தினருக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்கான வழியாக மதச்சார்பின்மையை அரசியல் யாப்பு வழியாகப் பிரகடனப்படுத்தி யுள்ளது.

meryresotha.a@thaiveedu.com



# வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக

# காமன் கூத்து

- அருணாசலம் லெட்சுமணன் -

09



தீர்மானமிக்க முடிவை ரதியிடம் எடுத்துரைக்கும் முனைப்பு மதனிடம் நிறையவே காணப்படுகிறது. ரதியானவளும் இந்நிலையில் தன் எண்ணக்கருத்துகளை மதனுக்கு எடுத்துக்கூற விளைகிறாள். வாழ்வியல் யதாரத்தத்தின் படிமங்களை போதிக்கும் பிரயத்தனத்துடன் உதாரணங்களை முன் வைக்கத் துணிகிறாள்; என்னை விட்டுச் செல்லும்போது என் மீதுள்ள ஆசையையும் விட்டுத்தான் செல்வீரோ ? என அழுத்தமாக வினாத் தொடுக்கிறாள். இதன் தொடர்ச்சியாக இயற்கையோடு கூடிய தொடர்பு நிலைகளை எடுத்துரைத்து மதனுக்கு போதிக்கும் முயற்சியைத் தொடர்கிறாள்.

'பூவில் இருந்து வாசம் பிரிந்து செல்வது ஏற்றுக் கொள்ள கூடியதா? உயிரினங்கள் நாக்கு அனுபவிக்கும் ருசிகளை தவிர்த்து இயங்குமா? நிலத்திலிருந்து புழுதி விலகி நிற்குமா? மரத்தில் இருந்து நிழல் ஒதுங்கி நிற்பது முறையா? பசு தன் கன்றை ஒதுக்கி வைக்குமா? புணுகில் இருந்து வாசம் தள்ளி நிற்பதில்லையே! திணைப் பயிர்களை தின்பதை கிளிகள் தவிர்த்து நிற்குமோ? பூசையின் பயனை அருளில் இருந்து அப்புறப்படுத்த முடியுமா? பூனை எலியை தின்பதை நிறுத்தி விடுமோ? தேனில் இருந்து வண்டுகள் பிரிந்து நிற்குமா? மனதில் இருந்து புத்தி விலகி நிற்பது முறையாகுமா? சக்தியில் இருந்து சிவன் பிரிந்து நிற்பது உலக இயக்கத்திற்கு ஏற்றதாகுமா? என்ற தொடர்நிலை வினாக்களை வினாவுகிறாள். இறுதியாக ஒரு நல்ல புருசன் தனது துணையானவளை விட்டுச் செல்வானா? என ஆத்திரம் கலந்த தொனியில் கேட்கிறாள். இந்திரனின் சூழ்ச்சிக்குள்ளே அகப்பட்டு வாழ்வை சிதைத்து விடாமல் இல்லறத்தைச் சிறப்பாக அனுபவிப்போம், மன்னவா நீர் போக வேண்டாம் என மன்றாடுகிறாள். ரதியின் கோரிக்கையை செவிமடுத்த மதன் இராமாயணக் கதையின் மேற்கோள்களை எடுத்துரைத்து தன் நிலைப்பாட்டை கூற விளைகிறான்.

அயோத்தியை ஆண்டு வந்த தசரதன் தான் பெற்ற தவத்ததால் அந்த இராமனையும் மகனாகப் பெறுகிறான். இராமன் வில் வளைத்து மாலையிட்டு சீதையை மணம் புரிகிறான். கைகேகியின் பாதகத்தால் மனைவி சீதையும் தம்பி லக்ஸ்மணனும் இணைந்து வனவாசம் அனுபவிக்கிறார்கள். இக்காலக்கட்டத்தில் இராமன் அதர்மத்தின் வழி செல்லும் தாடகை, சூர்ப்பனகை, வாலி, கும்பகர்ணன், இராவணன் ஆகியோரை மாய்த்து இலங்கையைக் கைப்பற்றி அதனைப் பெரும் படையினருடன் விபீசனனுக்கு கொடுத்தருள்கிறான். தனது காலத்தில் நன்மை பயக்கும் செயல்களை செய்ய அவன் தவறவில்லை. தன் பொறுப்பை உணர்ந்து செயல்பட்ட இராமன் பல தியாகங்களை செய்கிறார். பின்னாளில் சீதையுடன் கூடி அயோத்தியில் ஆட்சிப் பீடம் ஏறி செம்மையாக ஆட்சி புரிந்துள்ளார். இப்படி பட்டவரின் முன்மாதிரியை யான் பின்பற்றுதல் தவறில்லையே! அது போக அந்த இராமனின் அருளாசியும் எனக்குள்ள நிலையில் நான் எப்படி தோற்பேன். இந்நிலைகளை அறிந்து என்னை மகிழ்வோடு வழியனுப்ப வேண்டும் என மதன் ரதியிடம் கோரிக்கை விடுக்கின்றான்.

மேற்குறித்த இராமாயணப் பாத்திரங்களில் சூர்ப்பனகை, வாலி, கும்பகர்ணன், இராவணன் ஆகிய பாத்திரங்கள் குறித்த அவதானம் பரவலாகவே அறியப்பட்டதாகக் காணப்படுகின்றன. மாறாக இராமாயணத்தில் துணைக் கதாபாத்திரமாக வருகின்ற தாடகை பாத்திரம் தொடர்பான அவதானம் குறைவாகவே காணப்படுகின்றமை அவதானத்திற்குரியதாகும். கம்பராமாயணத்தில் பாலகாண்டத்தில் 'தாடகை வதைப் படலம்' எனும் பகுதியில் இடம்பெறும் தாடகை எனும் பாத்திரத்துடன் தொடர்புபட்டு காமன்கூத்தில் கதையம்சம் இணைக்கப்பட்டுள்ளது. இப்பாத்திரம் இராமனின் அவதார நோக்கத்தை வலியுறுத்தும் நோக்கில் இணைக்கப்பட்ட முதல் கதாபாத்திரம். தாடகைப் பாத்திரம் கொடூரமான உருவத்தோடும் தீய குணாம்சங்களுடன் கூடிய பாத்திரம். அகத்தியரின் சாபத்தால் அரக்கியாக மாறும் தாடகை பல்வேறு இழிசெயல்களையும் செய்பவளாகவும், ஏனையவர்களுக்கு தீங்கிழைப்பவளாகவும் காணப்படுகின்றாள்.

விஸ்வாமித்திரரின் வேள்வியைக் குழப்பும் முயற்சியின் போது இராமனால் கொல்லப்படுகிறாள். தன் தவறை உணர்ந்த தாடகை இராமனிடம் சாபவிமோசனம் வேண்டுகிறாள். அதன் பயனாகவே தென்கிழக்கில் உதிக்கும் நட்சத்திரமாக 'தாடகை வெள்ளி' எனும் நாமத்திற்குரியவளாகிறாள். இராமாயணம் குறித்து ஆழமான பார்வையைச் செலுத்த வேண்டிய ஆர் வத்தை தூண்டும் வகையில் இவ்வாறான விடயப்பரப்புகள் காமன்கூத்தில் இணைக்கப்பட்டுள்ளமை அவதானத்திற்குரி யதாகும்.

திருஞானசம்பந்தரால் போற்றப்பட்ட ஒருவராக 'சிறுதொண்டர் நாயனார்' விளங்குகிறார். சிறுதொண்டர் வாழ்ந்த ஊரில் எழுந்தருளிய பெருமானை ஆராதிக்கும் வகையில் திருஞான சம்பந்தரால் பதினொரு பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அவற் றுள் பத்தாவது பாடல் மாத்திரம் கிடைக்கப்பெறவில்லை. அப்பாடல்களுள் எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலை குறிப்பிடலாம்.

***'செந்தண்பூம் புனல்பரந்த***
***செங்காட்டங் குடிமேய***
***வெந்தநீ றணிமார்பன்***
***சிறுதொண்ட னவன்வேண்ட***
***அந்தண்பூங் கலிக்காழி***
***அடிகளையே அடிபரவுஞ்***
***சந்தங்கொள் சம்பந்தன்***
***தமிழுரைப்போர் தக்கோரே.,.'***

படைத்தளபதி பரஞ்சோதியாராக அறியப்பட்ட திருத்தொண் டர் நரசிம்ம பல்லவரின் போர்முனையில் நின்று பல்வேறு வெற்றிகளைக் குவித்த ஆளுமையாக விளங்கியவர். சிவன் மீது கொண்ட பக்தியினால் அரச பணியில் இருந்து விலகி திருச்செங்காட்டுத்திருக்குடிக்கு சென்று சிவபணியில் ஈடுபட் டவர். தினமும் சிவனடியார் ஒருவருக்கு உணவளித்த பின் னரே உணவு உண்பதை வழமையாக்கிக் கொண்டவர். இப்ப ணியில் ஈடுபட அவருக்கு மனைவின் ஒத்துழைப்பும் பரிபூரண மாகவே கிடைக்கப்பெற்றுள்ளது. இத்தம்பதியினருக்கு சீரா ளன் என்ற பெயரில் மகனும் இருந்தான். இத்தம்பதினரின் பக்தியின் வெளிப்பாட்டை சோதித்து அருள சிவபெருமான் திடம் கொள்கிறார். பசியில் சோர்ந்து துவண்டு இருப்பது போலான உருவத்தோடு சிறுதொண்டரின் வீட்டின் முன் சிவன் காட்சியளிக்கின்றார். அதனைத் தொடர்ந்து முத்தரப்பு உரை யாடல். 'உனது மகனையே கொன்று உணவாக்கி தர வேண் டும்' என்ற சிவனடியார் உருவில் வந்த சிவனின் வேண்டுதல் சிறுதொண்டரினால் நிறைவேற்றப்படுகிறது. பின் சிவன் தம்ப தியினருக்கு காட்சிகொடுத்து மகனை மீளவும் உயிர்ப்பித்த செயற்பாட்டுடன் சிறுதொண்டர் புராணம் நிறைவுருகிறது. இவ் வாறெல்லாம் திருவிளையாடல் புரியும் சிவன் உன்னைக் கண்டால் நிச்சயமாக எரித்து விடுவார் என ரதி மொழிகின் றாள். காமன் கூத்து ஆன்மீகத்துடன் தொடர்புடையது என் பதை இது உறுதிப்படுத்தி நிற்கிறது.

ரதியின் மொழி கேட்டு மதனின் பதில் கிருஸ்ணரின் அவதா ரத்தை மேன்மைப்படுத்தும் முனைப்போடு அமையப்பெறு கிறது. பொதுவாக சைவ,வைணவ மதங்களுக்கிடையிலான மேன்மையை பரிசோதிக்கும் முனைப்போடு இடம்பெறும் காமன் கூத்தின் வகிபங்கு முக்கியமானது. 'காதலி ரதிதேவி பத்தினியே என் மொழி கேள்' எனக் கூறி மகாபாரதக் கதையை தொடக்கத்தில் இருந்து மதன் எடுத்துரைப்பதை அறிய முடிகிறது. பஞ்ச பாண்டவர்கள் பிறப்பு தொடக்கம்அ வர்கள் வில் வித்தையில் தேர்ச்சி பெறுவது வரை எடுத்துக் காட்டப்படுகிறது. அவ்வாறே திரௌபதியை ஐவரும் மணம் முடித்தமையும் பின்னர் சகுனியின் சூழ்ச்சியால் திரௌப திக்கு நேர்ந்த நிலைமை குறித்தும் காமன் கூத்து விளக்கி நிற்கிறது. மீளவும் பாண்டவர்களுக்கு கிருஸ்ணர் செய்த உதவியைக் கூறி வெற்றி வாய்ப்பது வரையில் கிருஸ்ண அவ தாரத்தின் மகிமையை வலியுறுத்தப்படுகிறது. இவ் ஆளு மைப் படைத்த அவதாரத்தின் ஆசியும் அருளும் தனக்கு இருக்கும் போது எனக்கு எதுவும் நிகழாது என நம்பிக்கை தெரிவிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

***'பாலன் பிரகலாதனுக்காய் கோலமாய் இரணியனை***
***பங்கமாய் கொன்ற மாய நரசிங்க ரூபமாக வந்தோன்***
***படுபாவி ராவணனை இடிபோல் நின்று கொன்று***
***பரிஞ்சீவி விபூஸணர்க்கு சிரஞ்சீவியும் கொடுத்து***
***பாரிலனு மந்தனுக்கு நயந்து மோசம் அளித்தோன்***
***பரபிரமமான ரூபன் வரங்கொடுக்கும் பரந்தாமனை***
***அவன் பண்ணுங் கோலத்தை நம்மால் எண்ண முடியாது***
***'கண்ணன் பக்கத்திலேயிருக்க அந்த***
***முக்கண்ணன் என்ன செய்வான்...'***

எனக்கூறி ரதியிடம் விடைக்கொடுக்க வேண்டுமென வலியு றுத்துகிறான் மதன். இதுபோல சிவனின் திருவிளையாடலின்



மகிமையை இரதிதேவி எடுத்துச் சொல்கையில் அதனைப் பலவீனப்படுத்தும் வகையில் மதனின் செயற்பாடுகள் காணப் படுகின்றன. பாண்டிய மன்னனின் ஆட்சியின் போது செம் மனச்செல்வியிடம் பிட்டு வாங்கி தின்று மண் சுமக்கும் பொறுப்பை சிவன் ஏற்றுக்கொள்கிறார். கடமையை முறை யாக செய்யாததன் நிமித்தம் மன்னனிடம் பிரம்படி பட்ட கதையை மிக நையாண்டியாக மதன் எடுத்துரைக்கின்றான். அவ்வாறே கண்ணப்ப நாயனார் கதையையும் எடுத்துரைத்து, அவ்வாறான வேடன் ஒருவனிடம் அடிப்பட்டக் கதையையும் ரதியிடம் மதன் கூறுகிறான். வெந்த பிணங்களையெல்லாம் இன்பத்தோடு தின்றவனாகவும் சித்தரிக்கும் முனைப்பும் கவனத்திற்குரியதாகும். சிறுத்தொண்டனார் நாயனாரின் பிள் ளையைக் கறியாக சமைத்து உண்ணுவதற்கு முயற்சித்தவரா கவும் குற்றம் சுமத்துகிறான். பத்மாசூரனுக்கு பயந்து திரிந்த வராகவும் எடுத்துரைக்கின்றான். அதன் தொடர்ச்சி நிலை யினை பின்வரும் பாடல்கள் விரிந்து செல்கின்றன.

***'பத்தினிமார் தனையளிக்க அவன் பிச்சாண்டியானவன்டி***
***அன்று விசயன் கையில் அவன் நின்றடிப்பட்டவன்டி***
***ஆனை புரிந்தவன்டி மானை தரித்தவன்டி***
***மாமயிலோர்க்காக கடல் மதுவையெடுத்தவன்டி***
***சடையை விரித்தவன்டி சுடலைச் சாம்பலணிந்தவன்டி***
***சங்கையன்றி சிரசில் பெண் மங்கையைச் சுமந்தவன்டி***
***இங்கிர்த ஓடெடுத்து அவர் இரந்தமுது உண்பவன்டி***
***இரந்து அன்பர் வரங் கேட்டால் மனையாளையே தந்த வன்டி***
***அவருடைய தன்சமர்த்தை அதிசயமாய் சொல்ல வந்தாயடி?...'***

எனவும் சிவனை நிந்திக்கும் மதனின் வரிகளும் குறிப்பிடத்தக் கதாகும். மதனின் இவ்வரிகள் ரதியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நிலையில் ரதியானவள் மதனை நோக்கி பின்வ ருமாறு கூறுகிறாள்.

***'என் குலத்தை சின்னமென்றீர் நான் உன் குலத்தை சொல்கிறேன் கேள்***
***இடையர் பதிதோறும் அவர் வெண்ணைத் திருடி***
***இரவில் பதிமார்கள் அவரை உரலோடு கட்டி வைத்து***
***இடைச்சி சிறுமத்தால் அவளடித்த அடியும்பட்டு***
***ஏட்டுக் கடங்காத அந்த மாட்டுப்பொங்கல் சோறு தின்று***
***எகுந்த கோவர்த்தன கிரியை அவர் பிடித்தார் குடையாக***
***இரணியனுக்கு பயந்து முன் நகரக் கடல் போய் ஒழிந்தார்***
***இரணியனுக்கு பயந்து அவர் நரசிங்கமாக வந்தார்***
***ஏறுமந்த அருச்சுணன் தேர் சாரதியாயுன் தகப்பன்***
***இடையர் வம்சத்தில் பிறந்த இன்பமுள்ள என் கணவா***
***இந்திரலோகம் போனால் உம்மை தந்திர வித்தை செய்திடுவார்...'***

எனப்பதிலுக்கு ரதியானவள் கிருஷ்ணரை பழித்துக் கூறு வதும் அவதானத்திற்குரியதாகும். மதன் - ரதி இருவருக்குமி டையிலான தர்க்கம் தொடர்கின்ற நிலையில் ஒருவரை மிஞ் சிய வகையில் தங்களின் கருத்துக்களைப் பரிமாறிக்கொள் கின்றனர். வாதங்கள் விவாதங்களாகத் தொடர்கின்றன. ஒருவரின் கருத்துக்கு மற்றவர் விட்டுக் கொடுத்து அணுகுதல் வேண்டும் என்ற பண்பு இங்கு அடியோடு மறுக்கப்படுகிறது. இத்தர்க்க நிலை கணவன் மனைவியினிடத்தே காணப்படு வது சிறப்பு அல்ல என்ற படிப்பினையும் வலியுறுத்தப்படு கின்றமை அவதானத்திற்குரியதாகும். கருத்து பரிமாறலின் உச்சநிலையில் இருவரிடத்தேயும் ஆத்திரப்படுகின்றனர். அது வெஞ்சினமாக வெடிக்கவில்லை. ஆயினும் இருவரது தர்க்க நிலையின் உச்சம் பதிலுக்கு பதில் என்ற நிலையில் தொடர் கிறது. அண்ணாவியாரால் மேற்குறித்த விடயங்கள் பாடலாக எடுத்துரைக்கப்படுகின்றபோது இரு பாத்திரங்களின் ஆட்டம் அரங்கைக் களைக்கட்டுவதாக அமையப்பெறும். பதிலுக்கு பதில் என்ற வகையில் இருவரது உரையாடல் பாங்கும் முக்கி யமானது,

ரதி மதனுக்கு அறிவுரை சொல்லும் முனைப்பில் நரேந்திரன் கதையை கூறுவதும் ரசிக்கத் தக்கதாகக் காணப்படுகின்றது. நரேந்திரன் அரசனுக்கு சாரங்கன் என்றொரு மகன் இருந் தான். மகன் திருமண வயதை அடைந்தவுடன் சித்ராங்கி எனும் பெண்ணைத் தெரிவு செய்து அழைத்து வருகிறார்கள். மகன் சாரங்கன் வேட்டைக்காகத் தொலைதூரம் சென்றுள்ள நிலையில் சித்ராங்கியின் அழகில் மயங்கி தாமே அப் பெண்ணை அடைவதற்கு நரேந்திரன் விரும்புகிறான். அதன் பின்னர் இடம் பெறும் நிலையினை எடுத்துக்கூறிய நிலையில் 'நான் நல்ல புத்தி தானுரைத்தால் சின்ன புத்தி நீர் நினைத்து' எனைக் கண்டிக்கிறீர் என ரதி கூறுவதையும் அறிய முடிகிறது.

இந்நிலையில் மகாபாரதக் கதையில் நிகழும் சம்பவங்களைச் சபையோருக்கு எடுத்துரைக்கும் முனைப்பு கவனத்தைப் பெறுகிறது. மதனுக்கும் ரதிக்கும் இடையிலான உரையாடல் இதனைத் தெளிவுப்படுத்துகிறது. பாண்டவர்களுக்கும், கௌர வர்களுக்கும் இடையே நடந்த மோதல்களையும் முரண்பாட்டு நிலைகளையும் எடுத்துரைக்கும் இதிகாசம் மகாபாரதம் ஆகும். வியாச முனிவர் சொல்ல விநாயகர் எழுதியதான நம்பிக்கை தொடர்கிறது. அஸ்த்தினாபுரத்தை ஆண்ட குரு வம்சத்தின ரினுடைய கதையான பாரதம் அறம், பொருள், இன்பம், வீடு பேறு ஆகிய நோக்கங்களை தெளிவுறுத்துகிறது. திருதராஸ் டிரன், பாண்டு, விதுரர் ஆகிய மூன்று இளவரசர்களில் திருத ராஸ்டிரனுக்கு கண் பார்வை இன்மையால் பாண்டு ஆட்சியை பொறுப்பேற்கிறான். தலைமுறையைக் கடந்து ஆட்சிப்பீடம் கைமாற வேண்டிய நிலையில் பாண்டவர்களுக்கும், கௌர வர்களுக்கும் முரண்பாடு தொடர்கிறது. அதன் உச்ச நிலை யில் குருசேத்திர போர் இடம்பெறுகிறது. இந்தப் போர் தொடர்ந்து பதினெட்டு நாட்கள் இடம்பெறுகிறது. இக்களத் தில் இருந்தே 'பகவத்கீதை' உருவாகிறது. மகாபாரதத்தில் கிருஸ்ணரின் வகிபங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இப்போர் உயிர்கள், உடமைகள் உட்பட்ட பேரழிவை ஏற்படுத்துகிறது. மகாபாரதக் கதையின் முதன்மைக் கதை அம்சம் இது வாயினும் இக்கதையில் பல கிளைக்கதைகள் உள்வாங்கப் பட்டுள்ளன. வாழ்வியலுக்கு பொருத்தமானதும், தேவையான துமான தத்துவக் கருத்துக்களையும், சமூக கோட்பாடுகளை யும் இக்கதை வலியுறுத்துகிறது. இக்கருத்துக்களை வெளிப் படுத்தும் வகையில் அண்ணாவியார்களால் பாடல்கள் இசைக்கப்படும். பாடல்களுக்கு ஏற்ற தாளக்கட்டுடன் தப்பி சையும் சால்றாவின் ஆதிக்கமும் களத்தை கலகலப்பூட்டு வதாக அமையப்பெறும். அதற்கு ஏற்ற வகையிலான் மதன், ரதியின் ஆடல் முறைமை நிகழ்வை கலைக்கட்டச் செய்யும்.

இலாவணி பாடல் முறைமையில் அமையும் இரசனை மிக்க இவ்வுரையாடலும் ஆட்டமும் மிகச் சுவாரஸ்யமானவை. உரையாடலுக்கேற்ற வகையில் தப்படிக்கப்படும். இச்சந்தர்ப் பத்தில் அடிக்கப்படும் அடியை 'இலாவணி அடி' என்பர். இவ் வடிக்கமைய ஆடப்படுகின்ற ஆட்டத்தை 'இலாவணி ஆட் டம்' என்பர். அவற்றுள் பின்வரும் பாடலை எடுத்துக்காட் டாகக் கூறலாம்.

***'தென்றல் ரதம் நான் எடுத்து பெண்னே பெண்னே***
***அந்த தேவர் சபை போறேனடி கண்னே கண்ணே***

***தென்றல் ரதம் நான் எடுக்க வேண்டாம் வேண்டாம்***
***அந்த தேவர் சபை போக வேண்டாம் வேண்டாம்***

***செங்கரும்பு வில்லெடுக்க போறேன் போறேன்***
***அந்த சிவன் மீது போர் தொடுக்கப் போறேன்***
***போறேன்***

***செங்கரும்பு வில்லெடுக்க வேண்டாம் வேண்டாம்***
***அந்த சிவன் மீது போர் தொடுக்க வேண்டாம்***
***வேண்டாம்...'***

என்றவாறு தொடர்கிறது. இவ்வாறான பாடல்களுக்கு ஆடும் போது அரங்கில் மதனும் ரதியும் வட்ட வடிவில் பரப்பை பயன்படுத்துகின்ற நிலை காணப்படும். இவர்களுக்கு ஏற்ற வகையில் அண்ணாவியார்களும், தப்பிசைக் கலைஞர்களும், மதன், ரதியினருக்கும் அருள் வரும்போது கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவதற்காக தயார்நிலையிலுள்ளவர்கள் அங்கம் வகிப்பார்கள். இவர்களுடன் முக்கிய பாத்திரமாக அறியப் படும் 'பபூன்' பாத்திரத்தின் பங்கேற்பு முக்கிய அவதானத்திற் குரியதாக அமையப்பெறும். ரதி, மதன் இடையே இடம்பெறும் கருத்து மோதலுக்குரிய இடத்தில் இருவரையும் ஆற்றுப் படுத்தும் முனைப்புடனும் சபையோரை கவரும் வகையிலும் இப் பாத்திரத்தின் பங்கேற்பு சிறப்பு பெறுகிறது. அவ்வாறே காமன் நட்டது தொடக்கம் இறுதி வரை இப்பாத்திரத்துடன் தொடர்புபட்ட வகையிலேயே காமன்கூத்து நடக்கும். மேலும், மலையக அரங்கியல் முயற்சியில் பபூன் விசேடமான அவ தானத்தை பெற்றுள்ளமையும் கவனத்திற்குரியதாகும். மூர்க் கமான நிலையை ஆற்றுப்படுத்தும் வகையில் பபூனின் உடல் மொழியும் ஆட்டமும் அமையும். சபையோரின் கவ னத்தை வென்றதாக இது அமையப்பெறும். அவ்வாறே காமன் கூத்து வாத்தியார்களின் பாடல் முன்வைப்புகளும் இவ் விட யத்திற்கு துணை நிற்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



தொடரும் தர்க்க நிலையில் மதன் அரிச்சந்திரன் கதையை முன்வைத்து தன் ஆட்டத்தைத் தொடர்கிறான். தமிழர்களி டத்தே அரிச்சந்திரன் நாடகம் மீதான அவதானம் மிக நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது. தமிழ் அரங்கியல் வர லாற்றில் மிக முக்கிய தடத்தைப் பதிந்த நாடகமாகவும் இந் நாடகம் விளங்குகிறது. இலங்கையில் நடிகமணி வைரமுத்து அவர்களுக்கு நிரந்தரமான ஒரு பெயரை பெற்றுத்தந்த நாடகமாக அரிச்சந்திரன் மயான காண்டம் விளங்குகிறது. இது உண்மையின் முக்கியத்துவத்தையும் நேர்மையின் மகத் துவத்தையும் வலியுறுத்துகிறது. இந்நாடகத்தில் அரிச்சந்திரன் தனது வார்த்தையைக் காப்பாற்றுவதற்காகப் பல இன்னல்க ளையும் நெருக்குதல்களையும் சோதனைகளையும் சந்திக் கிறான். அரிச்சந்திரன் இறுதி வரைக்கும்உண்மையே பேசு வேன் எனச் சபதம் செய்கிறான். அரிச்சந்திரனது சத்தியத்தை சோதிப்பதற்காக விசுவாமித்திர முனிவர் பல சோதனைக் களைச் செய்கிறார். அரிச்சந்திரன் தனது மனைவி, மகனுடன் காட்டிற்கு அனுப்பப்படுகிறான். அரிச்சந்திரன் பிணம் எரிக் கும் இடத்தில் வேலைக்கு அமர்த்தப்படுகிறான். தனது மகனை இழக்கிறான். இறுதியில் முனிவரின் சோதனைகளில் வென்ற நிலையில் மீண்டும் தான் இழந்த இராச்சியத்தை பெறு கிறான். தனது குடும்பத்தையும் பெறுகிறான். நகைச்சுவை, பாடல், நடனம், நடிப்புகளுடன் இந்நாடகம் காமன்கூத்தில் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும். இந் நாடகத்தின் நோக்கம் மக் களிடத்தே நல்லொழுக்கத்தினை வலியுறுத்துவதாகும். இந் நாடகமே காந்தியின வாழ்விலும் திருப்புமுனையை ஏற்படுத் தியமையை அவரது 'சத்தியசோதனை' சரிதம் கொண்டு அறியலாம். அரிச்சந்திரனின் கரத்தாலே அவனது மனைவி சந்திரமதியின் தலை வெட்டப்படுகின்ற கட்டம் வருகையில், சிவனின் அருளால் சந்திரமதி காப்பாற்றப்பட்டு அரிச்சந்தி ரனுக்கு மறுவாழ்வு கொடுக்கப்படுகிறது. அவ்வகையில் தனது உயிர் விடயத்திலும் சிவன் எதுவித பாதிப்பு நிலையையும் ஏற்படுத்த மாட்டார் எனவும் மதன் குறிப்பிடுகிறான்.

(தொடரும்...)



letsumanan.a@thaiveedu.com



# தொல்லியல்:

## கடந்த காலத்தின் பெருமையும் எதிர்காலத்தின் திசையும்

– சிறிதரன் ஹரிஷா

தற்கால உலகில் வளர்ச்சி அடைந்து வருகின்ற துறைகளில் ஒன்றாகத் தொல்லியல் துறையும் காணப்படுகின்றது. அந்த வகையில் தொல்லியல் என்றால் என்ன என்பது பற்றிப் பார்க்கின்றபோது தொல்லியல் துறை என்பது கடந்த காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் கலாசாரம், சமூகங்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து அறிந்துகொள்ள உதவும் ஒரு முக்கியமான துறையாகும். இது, அகழ்வாராய்ச்சி மூலம் கிடைக்கும் கட்டடங்கள், கருவிகள், கலைப்பொருட்கள், கல்லறைகள் போன்றவற்றை ஆய்வு செய்வதன் மூலம் மனித வரலாற்றை மறுசீரமைக்க உதவுகிறது. இத் தொல்லியலானது பொருளாதார தொல்லியல் (Economic Arthstology), இன மரபு தொல்லியல், (ethno archeology), நீரடி அகழாய்வு (Underwater archaeology), ஆகாய நிழற்பட தொல்லியல் (Aerial Archaeology), அழிவு மீட்பு தொல்லியல் (solvage archaeology) என வகைப் படுத்தப்படுகின்றது.

### தொல்லியல் கற்கையின் முக்கியத்துவங்களாக:

**வரலாற்றை அறிதல்:** எழுதப்பட்ட ஆதாரங்கள் இல்லாத காலங்களில் வாழ்ந்த மனிதர்களின் வரலாற்றை தொல்லியல் ஆய்வுகள் மூலமாகத்தான் தெரிந்துகொள்ள முடியும். அவர்களின் நாகரிகம், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் சமூக அமைப்புகள் பற்றிய தகவல்களை இது தருகிறது.

**கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்:** தொல்லியல் ஆய்வுகள் மூலம் கண்டறியப்படும் கலைப்பொருட்கள், நினைவுச்சின்னங்கள், மற்றும் இதர கலாசார சின்னங்கள் நமது பாரம்பரியத்தை மதித்து, பாதுகாப்பதற்கான அவசியத்தை உணர்த்துகின்றன. இவை வருங்கால சந்ததியினருக்கு நமது முன்னோர்களின் பெருமைகளையும், வாழ்க்கை முறைகளையும் அறிந்துகொள்ள உதவுகின்றன.

**நவீன சமூகங்களுக்கான கற்றல்:** பண்டைய சமூகங்கள் எவ்வாறு சவால்களை எதிர்கொண்டனர், புதிய தொழில்நுட்பங்களை எப்படி உருவாக்கினர், ஒரு நாகரிகம் எப்படி வளர்ந்தது அல்லது வீழ்ச்சியடைந்தது என்பதைத் தொல்லியல் ஆய்வுகள் மூலம் தெரிந்துகொள்ள முடியும். இது நமது இன்றைய சமூகப் பிரச்சினைகளுக்கும், எதிர்காலத் திட்டமிடலுக்கும் உதவியாக இருக்கும்.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி:** தொல்லியல் துறை, கார்பன் டேட்டிங் (Carbon dating), புவியியல் ஆய்வு (Geographical survey), கணினி மாதிரியாக்கம் (Computer modeling) போன்ற பல நவீன அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது. இது அறிவியல் துறைகளின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கிறது.

**உள்ளூர் சமூகங்களுக்குப் பொருளாதார நன்மைகள்:** தொல்லியல் தளங்கள் பாதுகாக்கப்பட்டால், அவை சுற்றுலா மையங்களாக மாறக்கூடும். இது உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பையும் பொருளாதார வளர்ச்சியையும் உருவாக்கும்.

மொத்தத்தில், தொல்லியல் கற்கை என்பது வெறும் பழைமையான பொருட்களைப் பற்றிய ஆய்வு மட்டுமல்ல, அது நமது அடையாளத்தையும், நமது முன்னோர்களின் பெருமைகளையும், நாம் எங்கிருந்து வந்தோம் என்பதையும் புரிந்து கொள்ள உதவும் ஒரு பாலமாகும். வரலாற்றை உருவாக்கப் பயன்படும் பலவிதமான மூலகங்களுள் தொல்லியல் துறை ஆனது முதன்மை வகிக்கின்றது. குறிப்பாக வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதரின் வாழ்க்கை முறை பற்றிய விபரங்களை அறிவதில் தொல்லியலே முக்கிய இடத்தினை பெறுகின்றது. அதாவது எழுத்துச் சான்றுகளே இல்லாத கற்கால மக்களின் வரலாற்றினைக் கணிக்க அவர்கள் ஆரம்ப காலகட்டத்தில் வாழ்ந்த இடங்களைக் கண்டுபிடித்து அவற்றில் ஆய்வுகளை மேற்கொண்டு கிடைக்கப்பெறும் சான்றுகளின் ஊடாக மனிதர் எவ்வாறு நாகரிகத்தை நோக்கி முன்னேறினர் என்பதனை எடுத்துக்காட்டுவது தொல்லியலாகும்.

பண்டைய மனிதர் ஐந்து லட்சம் ஆண்டுகால நீண்ட நெடிய வாழ்க்கைப் பயணத்தில் ஒவ்வொரு காலகட்டத்திலும் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் எவ்வாறு இயற்கைச் சவால்களைச் சந்தித்தனர், வெற்றிகொண்டனர் என்பதனைத் தெளிவுபடுத்துவதே தொல்லியலாகக் காணப்படுகின்றது.

மனிதரின் வாழ்க்கை வரலாறானது புறச் சூழல்களுடன் நடத்திய போராட்டங்களுடன் கூடிய கதையே என்பது இதன் மூலம் புலனாகின்றது. சூழலுக்கு ஏற்ப பண்டைய கால மனிதர் தம்மை மாற்றிக்கொண்டு தொழில்நுட்பங்களைக் கண்டுபிடித்து முன்னேற்றம் கண்டனர் என்பதை அறிய துணை புரிவது தொல்லியல் ஆய்வு. இது பழைய கற்காலம், புதிய கற்காலம், இடைசெம்புக்காலம், இரும்புக்காலம், பெருங் கற்காலம் முதலான காலகட்டங்களில் பல்வேறு சாதனை களைப் படம் பிடித்துக் காட்டுவதாகவும் காணப்படுகின்றது.

பண்டைய கால மனிதனுடைய பேராற்றலை வெளிப்படுத்து வதில் உலகெங்கிலும் அகழ்வாய்வுகளே (Excavation) முக் கியம் வகிக்கின்றன. உதாரணமாக ஆந்திரா, நாளந்தா, ஹரப்பா, காவிரிப்பூம்பட்டினம், அழகன்குளம், கொற்கை, கருவூர் போன்ற பல வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களில் இடம் பெற்ற அகழ்வாய்வுகள் முக்கியம் வாய்ந்தவையாக அமைந் திருக்கின்றன. இவை வரலாற்றின் காலத்தையே பின்னோக் கித் தள்ளின. உதாரணமாக மொகஞ்சதாரோ - ஹரப்பா அகழ்வாய்வுகள் இந்திய வரலாற்றின் தொடக்க காலத்தை பன்னூறு ஆண்டுகள் பின்னோக்கி இட்டுச்சென்றதை நாம் அறிவோம். சிந்து சமவெளி நாகரிகத்தின் இறுதிக்காலம் வரலாற்று காலத்தின் தொடக்கம் வரையினாலான இந்திய மனிதரின் நாகரிக் கூறுகளை வெளிப்படுத்துவதாகவும் தொல் லியல் காணப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் வாழ்ந்த மனிதர் எவ்வாறு மேய்ச்சல் தொழிலை விட்டு வேளாண்மைக்கு மாறினர்?, எவ்வாறு நேர்த்தியான மட்பாண்டங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்தனர்?, செம்பு இரும்பு போன்ற உலோகங்களைப் பயன் படுத்தி எவ்வாறு வீட்டு உபயோகப் பொருட்கள், போர்க் கருவி கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யக் கற்றுக் கொண்டனர்?, எவ்வாறு வீடுகளை அமைக்க கற்றுக்கொண்டனர்? காட்டு விலங்குகளை வேட்டையாடிய மனிதர் எவ்வாறு அவற்றை வீட்டு மிருகமாக வளர்க்கக் கற்றுக்கொண்டனர்?, இறந்தவர் களைத் திறந்த வெளியில் தூக்கி எறிந்த மனிதர் எவ்வாறு இறந்தவரை அடக்கம் செய்ய கற்றுக்கொண்டனர்?, தானி யங்களை எவ்வாறு சேமித்து வைத்துக் கொள்ள கற்றுக் கொண்டனர்? போன்ற பல அம்சங்களைத் தொல்லியல் அகழ்வுகளின் ஊடாக கிடைக்கப்பெறும் தொல்பொருள் சான்றோர்களின் ஊடாக விடை பெற்றுத்தரும் துறையாக தொல்லியலும் அதன் அடையாளமாக விளங்கும் தொல்லிய லாளர்களும் காணப்படுகின்றனர். முன்பு தொல்லியல் ஆய்வுகள் என்பது தொல்பொருட்களின் பட்டியலாக மட்டுமே இருந்துள்ளது.

தற்பொழுது தொல்லியல் ஆய்வாளர்கள், அத்தொல்பொருட் களைப் பற்றி, விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு, அவற்றை ஒத்த பொருட்கள், உலகின் பல்வேறு இடங்களில் கிடைப்ப வற்றை ஒப்பாய்வு செய்து அதன் மூலம் அவற்றைப் பயன்ப டுத்திய மக்களின் வாழ்க்கை முறையைக் கணிக்க முற்பட் டனர். இந்த ஆய்வின் மூலம் அவற்றைப் பயன்படுத்திய மக்களின் காலம் யாது? அவை எவ்வாறு உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களாலும் பயன்படுத்தப்பட்டன? போன்ற பல வினாக்களுக்கு விடையாக தொல்லியல் உள் ளது. தொல்லியல் ஆய்வுகள் முன்பு, தொல்பொருள்களைப் பட்டியலிடும் பணியாக மட்டுமே கருதப்பட்டது. ஆனால் தற்பொழுது தொல்லியலில் ஆய்வு மேற்கொள்ளும்போது ஆய்வாளர்கள் அவற்றை ஒத்த பொருள்கள் வேறு எப்பகுதி களில் கிடைத்துள்ளன என்றும் அவற்றின் மூலம் அவற்றைப் பயன்படுத்திய மக்களின் வாழ்க்கை முறையைக் கணிக் கவும், காலத்தை நிர்ணயிக்கவும் செய்கின்றனர். இதில் பல வகையான ஆய்வு முறைகள் ஒப்பீட்டு முறையில் கடைப்பி டிக்கப்படுகின்றன. வரலாறு என்பது உணர்வுகளின் அடிப்ப டையில் அல்லாமல், உண்மைகளின் அடிப்படையில் எழு தப்பட வேண்டும். இதற்கு உறுதியான தொல்லியல் ஆதா ரங்கள் இன்றியமையாதவை. இலக்கியங்கள் ஒரு சமூகத்தின் பண்பாடு, நம்பிக்கைகள், மற்றும் வாழ்க்கை முறையை வெளிப்படுத்தினாலும், சில சமயங்களில் அவை அரசர்களின் புகழை மட்டுமே மையப்படுத்தி அமைகின்றன. இதனால், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் முழுமையான சித்திரம் நமக்குக் கிடைப்பதில்லை.

ஒரு குறிப்பிட்ட முதன்மைச் சான்றினை மட்டும் வைத்து மேற் கொள்ளப்படும் வரலாற்று ஆய்வு முழுமையடையாது. உதார ணமாக சங்க இலக்கியங்களில் சமணர்கள், தமிழர்களின் கடல் கடந்த வணிகம், எழுத்துகளின் பரிணாம வளர்ச்சி, மற்றும் மன்னர்களின் நாணயங்கள் குறித்த நேரடியான குறிப் புகள் குறைவாகவே உள்ளன. ஆனால் இந்த வெற்றிடத்தை தொல்லியல் ஆதாரங்கள் நிரப்புகின்றன. அகழ்வாராய்ச் சியில் கண்டெடுக்கப்பட்ட ரோமா னிய நாணயங்கள், தமிழ் பிராமி கல்வெட்டுகள், மற்றும் சம ணப் பள்ளிகளின் சிதை வுகள் ஆகியவை

> ***மொத்தத்தில், தொல்லியல் கற்கை என்பது வெறும் பழைமையான பொருட்களைப் பற்றிய ஆய்வு மட்டுமல்ல, அது நமது அடையாளத்தையும், நமது முன்னோர் களின் பெருமைகளையும், நாம் எங்கிருந்து வந்தோம் என்பதையும் புரிந்துகொள்ள உதவும் ஒரு பாலமாகும்.***



இலக்கியங்களில் குறிப்பிடப்படாத பல உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகின்றன.

மதுரைக்கு அருகிலுள்ள மாங்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் பிராமி கல்வெட்டுகள், சமணப் பள்ளி பல நூறு ஆண்டுகளாகச் செயற்பட்டு வந்ததற்கான உறுதியான சான்றுகளைத் தருகின்றன. ஆனால் இந்தத் தகவல் சங்க இலக்கியங்களில் நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. அதேபோல், தமிழரின் கடல் கடந்த வணிகத்தின் முக்கியத்துவம், குறிப்பாக ரோமானியர்களுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புகள் பற்றி அகழாய்வுகளில் கிடைத்த ரோமானிய நாணயங்கள் மற்றும் மட்பாண்டங்கள் (உதாரணம்: அரிக்கமேடு) தெளிவாகப் பேசுகின்றன. இந்தச் சான்றுகள் இலக்கியங்களில் உள்ள வணிகக் குறிப்புகளுக்கு மேலும் வலுவூட்டி அதன் பரிமாணத்தை விரிவுபடுத்துகின்றன.

இவ்வாறு தொல்லியலில் கண்டறியப்பட்ட பல செய்திகள் இலக்கியங்களில் காணப்படவில்லை. இலக்கியங்களில் பெரிதும் பேசப்படும் செய்திகளுக்கு தொல்லியல் ஆதாரங்கள் இன்னும் காணப்படாமல் உள்ளன. இது, தொல்லியல் ஆய்வுகளின் எல்லைகளையும், காலத்தின் சவால்களையும் காட்டுகிறது. தொல்லியல் ஆய்வுகள் அனைத்துப் பொருட்களையும் கண்டறிந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. பல வரலாற்றுச் சான்றுகள் காலப்போக்கில் அழிந்துவிடுகின்றன அல்லது இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் மண்ணுக்குள் புதைந்திருக்கலாம்.

தொல்லியல் என்பது வெறும் கடந்த காலத்தின் சிதைவுகளை அகழ்ந்தெடுப்பது மட்டுமல்ல. அது ஒரு தேசத்தின் ஆழமான அடையாளத்தையும் பண்பாட்டு வேர்களையும் கண்டறியும் ஒரு பணியாகும். ஜேர்மனி, கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் தொல்லியல் துறை அதன் உச்சக்கட்ட வளர்ச்சியை அடைந்துள்ளது. அங்குள்ள பல்கலைக்கழகங்களும் ஆய்வு நிறுவனங்களும் தொல்லியலை ஒரு பிரதானத் துறையாக அங்கீகரித்து போதிய நிதி உதவிகளையும் வழங்கி வருகின்றன. ஆனால் இந்தியா, இலங்கை போன்ற வளரும் நாடுகளில் இந்தத் துறை படிப்படியான வளர்ச்சியையே கண்டு வருகிறது. நமது பாரம்பரியத்தையும் வரலாற்றையும் முழுமையாகப் புரிந்துகொள்ள வலுவான தொல்லியல் ஆய்வுகள் இன்னும் அவசியம். எனவே, தொல்லியல் துறை சார்ந்த படிப்பு என்பது வெறும் கல்வி மட்டுமல்ல. அது நமது முன்னோர்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்கள் நமக்காக விட்டுச்சென்ற அரிய பொக்கிஷங்களையும் பாதுகாப்பதற்கான ஒரு கடமை. கடந்த காலத்தை ஆராய்வதன் மூலம் நாம் யார் என்பதைப் புரிந்துகொண்டு நமது எதிர்காலப் பாதையை வடிவமைக்க இந்தத் துறை நமக்கு உதவுகிறது. தொல்லியல் துறைக்கு நாம் அளிக்கும் முக்கியத்துவம் ஒரு தேசமாக நமது கடந்த காலத்தை எவ்வளவு மதிக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. அதுவே நமது எதிர்காலத்தையும் தீர்மானிக்கும்.



Harisha.S@thaiveedu.com





# இனப்படுகொலையின் அரசியல் - 17

# இனப்படுகொலை: தத்துவார்த்தக் கேள்விகள் -2

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## அறிமுகக் குறிப்பு:

இனப்படுகொலைகளுக்கு ஒரு சர்வதேச பரிமாணம் உண்டு. பல சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தது இனப்படு கொலையா இல்லையா என்பதைக் கூடத் தீர்மானிக் கும் ஒன்றாக அது இருக்கிறது. இந்தப் பின்புலத்தில் இனப்படுகொலைக்கும் சர்வதேச உறவுகளுக்கும் இடையிலான தொடர்பைத் தத்துவார்த்த ரீதியாக நோக்குவது முக்கியமானது.

1900 முதல் இனப்படுகொலையால் குறைந்தது 84 மில்லியன் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர், மேலும் பெரும்பாலான நிகழ்வுகள் பெரிய அளவிலான சர்வதேச தாக்கங்களைக் கொண்டுள்ளன. பல சந் தர்ப்பங்களில், அந்நிய அரங்காடிகள் குற்றவாளி களுக்கு வெகுஜன வன்முறையை நிகழ்த்துவதற்கான ஆதரவையும் தண்டனையிலிருந்து பாதுகாப்பினை யும் வழங்கியுள்ளனர். இனப்படுகொலைக்கான சாத் தியக்கூறுகளில் அந்நிய அரங்காடிகள் எவ்வாறு தாக் கம் செலுத்துகின்றார்கள் என்பது பற்றிய நமது புரிதல் ஆய்வுக்கு உட்பட்டது. குறிப்பாக இலங்கை யின் இறுதிப் போரில் நடந்தது என்ன? என்பதைப் புரிந்து கொள்வதும், இனப்படுகொலையைப் புரிந்து கொள்வதும் அந்நிய ஆதரவின் தாக்கத்தைப் புரிந்து கொள்வதும் முக்கியமானது. குறிப்பாக அந்நிய அரங் காடிகளின் நலன்கள் அவர்களை 'கொடுப்போரா கவும்' உள்நாட்டு அரங்காடிகளைப் 'பெறுவோரா கவும்' மாற்றுகிறது. இதனால் இனப்படுகொலைகளில் கொடுப்போர்-பெறுவோர் உறவிற்கு ஒரு முக்கிய பாத் திரமுண்டு. கொடுப்போர், முதன்மையாகத் தங்கள் சுயநலத்தால் தூண்டப்பட்டு, இராணுவ உதவியை வழங்குவதன் மூலம் இனப்படுகொலையை அனும திக்கலாம் அல்லது தடுக்கலாம். ஆதரவு என்பது 'உதவிபெறும்' நாட்டிற்கு வழங்கப்படும் குறிப்பிடத் தக்க பொருள் ஆதரவைக் குறிக்கிறது. இச்சூழ் நிலை களில் வெளிப்புற ஆதரவை பரஸ்பர சேவைகள் அல்லது பொதுவான இலக்குகளை வழங்குவதற்குக் கூட்டு நலன்கள் அல்லது பயனுள்ள பத்திரங்கள் மூலம் ஒன்றாக இணைக்கப்பட்ட வெளிப்படையான சமமற்ற வளங்களுடைய இரு நாடுகளுக்கு இடையே யான ஒரு சிறப்பு வகைத் தொடர்பு என்று கொள்ள லாம். இந்த உறவு பெரும்பாலும் வரலாற்று கொலனித் துவ உறவுகள், இன-மத அல்லது மொழி சார்ந்த உறவு, தற்போதைய பொருளாதார மற்றும்/அல்லது இராணுவ உறவுகள் மூலம் பெறப்படுகின்றது. இரா ணுவ உதவியானது, இனப்படுகொலைக்கு நேரடியாக உதவுவதாகவும், பொதுமக்களுக்கு எதிரான பாரிய அளவிலான வன்முறைக்கான திறனை வழங்குவ தாகவும், பெறுவோர் அரசின் மற்ற இலக்குகளுக்கு இது முக்கியமானதாக இருக்கும் அளவிற்குச் சாத்தி யமான தடையாகவும் செயற்படுகிறது. பெரும் பாலான கொடுப்போர்-பெறுவோர் உறவுகளில், இரா ணுவ உதவி, நிறுத்தி வைப்பது அல்லது தொடர்வது, கொடுக்கும் அரசின் ஆதரவிற்கான சக்திவாய்ந்த சமிக்ஞையாக செயற்படுகிறது. இனப்படுகொலை யின் வெளிப்புற இயக்கவியல் பற்றிய புரிதல் அவசி யமானதும் தவிர்க்கவியலாததும் ஆகும். இலங்கைச்

சூழலில் தமிழர் நீதியை வேண்டி நிற்கும் தரப்புகள் இறுதிப் போரில் இந்தச் சக்திகளின் பாத்திரமென்ன என்ற வினாவைத் தவிர்த்துவிட்டு நீதி குறித்துப் பேசுவது பயனற்றது.

இனப்படுகொலை பற்றிய விளக்கத்திற்கு உதவக்கூடிய பல காரணிகள் உள்ளன. சர்வதேச காரணிகள் மோதலின் இயக்கவியலை எந்த அளவிற்குப் பாதிக்கின்றன என்பதை மிகைப்படுத்துவது எளிது. அட்டூழியத்தின் மூலோபாயத்தில் தீர்க்கப்பட்டவுடன், குற்றம் செய்யும் அரங்காடிகளை நிராகரிப்பது கடினம், மேலும் உள்நாட்டு மோதல்கள், அரசியல் இயக்கவியல் ஆகியவை வெளிப்புறங்களை விட அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. எவ்வாறாயினும், கொடுப்போரின் புவிசார் அரசியல் நலன்களை ஊக்குவிப்பது, கட்டுப்படுத்துவது அல்லது அனுமதிப்பது அதிக ஆபத்துள்ள நிகழ்வுகளில் விளைவுகளின் மாறுபாட்டை விளக்குவதில் ஒரு முக்கிய பகுதியாகும்.

இனப்படுகொலைக்கான காரணங்கள் பல; அதேவேளை அவற்றில் பல சர்ச்சைக்குரியவை. இனப்படுகொலை முதன்மையாக உள்நாட்டு நிகழ்வு, ஆனால் சர்வதேச பரிமாணங்களைக் கொண்டுள்ளது. புரட்சி, போர் அல்லது வேறு சில குறிப்பிடத்தக்க இடையூறு இனப்படுகொலைக்கான அவசிய நிபந்தனைக்கு மிக நெருக்கமானதாகத் தோன்றுகிறது. பல சந்தர்ப்பங்களில் குற்றவாளிகளுக்கு அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்பின் உணர்வை அதிகரிப்பதில் கருத்தியல் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆயினும்கூட, கோட்பாட்டளவில் இனப்படுகொலைக்கான அபாயத்தை அதிகரிக்கும் இந்தக் காரணிகள் பல இருக்கும் சந்தர்ப்பங்களில், அது நிகழாது. இனப்படுகொலையைப் புரிந்துகொள்வதில் சர்வதேச உறவுகளில் கவனம் செலுத்தினால் இருபதாம் நூற்றாண்டின் ஐரோப்பிய இனப்படுகொலைகளில் அதன் பங்கை விரிவாக நோக்கலாம். உலகளாவிய வல்லரசுகளின் உறவுகளை நாம் பார்த்தால் அவை இனப்படுகொலைக்கு 'பதிலளிப்பு' என்பதன் அடிப்படையில் மட்டுமல்ல, அவர்கள் இனப்படுகொலை உற்பத்தியில் எப்படி நுழைகிறார்கள் என்பதன் அடிப்படையிலும் நோக்க வேண்டியுள்ளது. முக்கியமாக பல நூற்றாண்டுகளாக சர்வதேச அமைப்பில் மாற்றங்கள் எவ்வாறு இனப்படுகொலையை பாதித்தன என்பது முக்கியமானது. இனப்படுகொலைக்கான சாத்தியங்கள் குறித்த பரந்த பகுப்பாய்வுகளில் வெளிப்புற இயக்கவியல் குறித்து சீரிய கவனமின்மை முக்கியமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. இது உள்நோக்கிக் கவனம் செலுத்துகிறது, இது இடர் பகுப்பாய்வுக்கான முக்கியமான தகவல்களைத் தவிர்க்கலாம் மற்றும் விலக்கப்படும் ஆபத்தில் உள்ள நாடுகளில் மட்டுமே கவனம் செலுத்தும் செயல்களுக்கு தலையீடு செய்வதற்கான விருப்பங்களை கட்டுப்படுத்துகிறது. அத்தகைய வன்முறையை அனுமதிக்கும் அல்லது கட்டுப்படுத்தும் சக்தியாக அந்நிய அரங்காடிகள் இருக்கிறார்கள். கெடுபிடிப் போர் காலம் முழுவதும் இந்தோனேசியா, கிழக்கு பாகிஸ்தான் மற்றும் குவாத்தமாலாவில் இனப்படுகொலை ஆட்சிகளுக்கு அமெரிக்க ஆதரவு, மற்றும் கெடுபிடிப்போருக்குப் பிந்தைய இலங்கை மற்றும் மியான்மருக்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு ஆகியவை அடங்கும்.

இனப்படுகொலை என்பது சர்வதேச சட்டத்தில் 'குற்றங்களின் குற்றமாக' கருதப்படுகிறது, ஆனால் 'குறைந்த குற்றங்களை' விட மிகக் குறைவான அரசியல் எடையைக் கொண்டுள்ளது. உதாரணமாக, சர்வதேச பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல், சர்வதேச அளவில் கடற்கொள்ளையர் போன்ற குற்றங்களைத் தடுக்க முயற்சிக்கும்போது நீண்டகால கூட்டுப் பாதுகாப்பு உத்திகள் பின்பற்றப்படுகின்றன. ஆனால் இனப்படுகொலை தடுப்பு என்று வரும்போது அத்தகைய நீண்டகாலக் கூட்டுப் பாதுகாப்பு உத்தி எதுவும் இல்லை. அடிப்படையில், போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றங்கள் ஒரு சர்வதேச அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றன. இதனால் இவற்றுக்கு எதிராகச் செயற்படும் நாடுகள் தமது பாதுகாப்புப் பற்றாக்குறையை எதிர்கொள்ளக் கூட்டாகச் செயற்படுவதனால் அந்த அரசுகளின் தனிப்பட்ட பாதுகாப்புத் திறனை விட பலமாகவே காப்பு நடவடிக்கைகள் அமைகின்றன. அதன்படி, அத்தகைய குறிப்பிட்ட சூழல்களுக்குள் கூட்டுநலன் தேசிய நலனை மேம்படுத்துகிறது என்பதை கொள்கை வகுப்பாளர்கள் உணர்கிறார்கள். இனப்படுகொலையை நோக்கிய எந்தவொரு நீண்டகால கூட்டுப் பாதுகாப்பு மூலோபாயமும் ஏற்படுத்தப்படவில்லை. மேற்கூறிய குற்றங்களைப் போலவே இனப்படுகொலையும் ஒரு சர்வதேச அச்சுறுத் தலை ஏற்படுத்துகிறது என்பதை சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் உணரவில்லை. அவர்கள் இனப்படுகொலையின் பயங்கரத்தை சந்தேகத்திற்கு இடமின்றி உணர்ந்து, இனப்படு கொலை பாரிய இடப்பெயர்வை (mass migration) ஏற்படுத்தக்கூடும் என்பதை ஏற்றுக்கொள்வார்கள், இது பிராந்திய உறுதியற்ற தன்மையை ஏற்படுத்துகிறது, பாரிய இடப்பெயர்வு என்பது இனப்படுகொலைக்குப் பிரத்தியேகமானது அல்ல, இது குறைந்த முன்னுரிமை பிரச்சினையாகவே உள்ளது. இத்தகைய புரிதல், இனப்படுகொலைத் தடுப்பு என்று வரும் போது, அவர்கள் அதைக் கண்டுகொள்வதில்லை, அதன் விளைவாக இனப்



***"1900 முதல் இனப்படுகொலையால் குறைந்தது 84 மில்லியன் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர், மேலும் பெரும்பாலான நிகழ்வுகள் பெரிய அளவிலான சர்வதேச தாக்கங்களைக் கொண்டுள்ளன. பல சந்தர்ப்பங்களில், அந்நிய அரங்காடிகள் குற்றவாளிகளுக்கு வெகுஜன வன்முறையை நிகழ்த்துவதற்கான ஆதரவையும் தண்டனையிலிருந்து பாதுகாப்பினையும் வழங்கியுள்ளனர்."***




படுகொலையைத் தடுப்பதைப் பொது நலன் சார்ந்த விஷயமாகவோ சர்வதேச பாதுகாப்புப் பிரச்சினையாகவோ கருதுவதில்லை.

## இனப்படுகொலையும் சர்வதேச அங்கீகாரமும்:

உலக அரசியல் அரங்கில் அங்கீகாரத்துக்கு முக்கிய இடமுண்டு. நியாயம்-அநியாயம் என்ற அளவுகோலைத் தீர்மானிப்பதாக சர்வதேச அங்கீகாரம் என்பது இருக்கிறது. கெடுபிடிப்போரின் முடிவும் 9/11 போன்ற நிகழ்வுகளும் சர்வதேச அங்கீகாரம் குறித்த வினாக்களை எழுப்பத் தொடங்கின. இவை 9/11-க்குப் பிறகும் அதற்கு அமெரிக்கா தலைமையிலான பதிலளிப்பிலும் மிகச் சரியாக விளக்கப்பட்டது. முதன்மையாக, 2003-இல் ஈராக் மீதான அமெரிக்கத் தலைமையிலான ஆக்கிரமிப்பு சர்வதேச உறவுகளின் மையத்திற்கு சட்டபூர்வமான அதிகாரம் மற்றும் முறையான நடத்தை பற்றிய கேள்விகளைக் கொண்டு வந்தது. 1999-இல் கொசோவோ நெருக்கடியைச் சுற்றியுள்ள விவாதங்களில், 9/11-க்குப் பிந்தைய பல கேள்விகள், சட்டபூர்வமான நடத்தை, முறையான அதிகாரம் தொடர்பாக எழுப்பப்பட்டன. குறிப்பாக கொசோவோ மீதான நேட்டோவின் தாக்குதலானது 'சட்டவிரோதமானது ஆனால் நியாயமானது' என்று விளக்கப்பட்டது. இது அமெரிக்கா தலைமையிலான ஒற்றைமைய உலக ஒழுங்கில் அமெரிக்காவினதும் அவர்தம் கூட்டாளிகளினதும் செயல்களுக்கும் - அவை சர்வதேச சட்டத்திற்கு முரணானதாக இருந்த போதும் - சர்வதேச அங்கீகாரத்தை அளித்தன. அங்கீகாரத்துக்கும் சட்டபூர்வமான தன்மைக்கும் இடையிலான இந்த வெளிப்படையான மோதல் சர்வதேச சட்டம் எப்படியோ குறைபாடுடையது என்பதைக் குறிக்கிறது. சர்வதேச சட்டம் மீறப்பட்டால், அதை எவ்வாறு சரிசெய்வது என்ற கேள்விக்குப் பதில் இல்லை. அனைத்தும் சர்வதேச அங்கீகாரம் என்ற ஒற்றைப் புள்ளியில் மையங்கொண்டது.

> ***"சட்ட மற்றும் தார்மீகக் கண்ணோட்டத்தில் இனப்படுகொலை என்பது சர்வதேச அளவில் குற்றங்களின் குற்றமாக கருதப்பட்டாலும், இனப்படுகொலைக்கும் அரசியலமைப்புச் சட்டத்துக்கும் இடையே உள்ள பிரச்சினைக்குரிய உறவை உயர்த்திக் காட்டும் கொள்கையை வகுப்பதில் விமர்சன ரீதியாகக் குறைந்த முன்னுரிமையாகவே உள்ளது"***

சர்வதேச அங்கீகாரத்துடனான சட்டபூர்வமான செயல் என்றால் என்ன என்ற விவாதம் வெறுமனே ஒரு தத்துவ விவாதம் அல்ல. ஏனெனில் சர்வதேச அங்கீகாரத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் சட்டபூர்வமான தன்மையை உலகம் விவாதிக்கும் போது போர்கள் நடத்தப்பட்டன, மக்கள் இறந்து கொண்டிருந்தனர். 9/11-இன் நிகழ்வுகளும் அதைத் தொடர்ந்து நடந்த 'பயங்கரவாதத்தின் மீதான போர்' என்பதும் எந்த அடிப்படைகளையும் கொண்டிருக்கவில்லை. ஆயினும் சர்வதேச அங்கீகாரம் அனைத்துச் செயல்களையும் செய்வதற்கான கடவுச்சீட்டாக இருக்கிறது என்பது புலனானது.

சர்வதேச அங்கீகாரம் என்பது இனப்படுகொலையுடன் ஒரு சிறப்பு உறவைக் கொண்டுள்ளது. இதை விளங்கிக்கொள்ள அறநெறி, சட்டபூர்வத் தன்மை மற்றும் அரசியலமைப்பு ஆகிய மூன்று விதிமுறைகளுக்கும் இனப்படுகொலைக்கும் இடையிலான உறவைப் புரிந்துகொள்வது முக்கியம். ஏனெனில், சர்வதேச அங்கீகாரமானது இந்த மூன்று விதிமுறைகளிலிருந்து அதன் மதிப்பைப் பெறுகிறது. இது காலப்போக்கில் மாறலாம், அத்துடன் சில சந்தர்ப்பங்களில் ஒன்றுடன் ஒன்று மோதலாம். எனவே, சட்ட மற்றும் தார்மீகக் கண்ணோட்டத்தில் இனப்படுகொலை என்பது சர்வதேச அளவில் 'குற்றங்களின் குற்றமாக' கருதப்பட்டாலும், இனப்படுகொலைக்கும் அரசியலமைப்புச் சட்டத்துக்கும் இடையே உள்ள பிரச்சினைக்குரிய உறவை உயர்த்திக் காட்டும் கொள்கையை வகுப்பதில் விமர்சன ரீதியாகக் குறைந்த முன்னுரிமையாகவே உள்ளது என்பதை இங்கு நோக்குவது அவசியம். இதையொட்டி, அரசியல் எதிர்பார்ப்புகள் சர்வதேச சமூகத்தின் சட்ட மற்றும் தார்மீக எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதும் கவனிப்புக்குரியது.

மேற்குறிப்பிட்ட மூன்றில் முதலாவதான அறநெறி என்பதைக் கருத்தில் கொள்ளும்போது, இனப்படுகொலை அறமில்லாதது என்ற எண்ணம் தெளிவாகத் தெரிகிறது. உண்மையில், இனப்படுகொலை ஏன் மோசமானது என்பதை ஒருவர் நியாயப்படுத்த வேண்டும் என்று சிந்திப்பது கூட ஆச்சிரியமாக இருக்கலாம். ஆனால் ஒருவர் அதைச் செய்ய வேண்டும் என்பது தெளிவாகிறது. இருபதாம் நூற்றாண்டில் அறநெ

றியின் அதிகாரம் மற்றும் தார்மீக முன்னேற்றம் குறித்த ஒரு நெருக்கடி வெளிப்பட்டது. பிரட்ரிக் நீட்ஷேவின் 'கடவுளின் மரணம்' என்ற சிந்தனையின் தாக்கம் மிகுந்த செல்வாக்கான ஒன்றாக நிலைபெற்ற நிலையில், ஹோப்ஸ்பாம் விளக்கிய 'தீவிர யுகம்' என்பது எவ்வளவு சரியானது என்று புலனாகிறது. இது அறநெறி என்பது அவசியமானதுதானா என்ற வினாவை எழுப்பியது. இருபதாம் நூற்றாண்டின் இயங்கியல் இவ்வினா எவ்வளவு பொருத்தமானது என்பதைக் காட்டி நிற்கின்றது.

இனப்படுகொலைகளில் அறம் சார்ந்து பேசுகிற போது, கவனிப்புக்குள்ளாகும் ஒரு முக்கியமான விஷயம் என்ன வென்றால், விருப்பமுள்ள பங்கேற்பாளர்களையும் விரும்பாத பங்கேற்பாளர்களையும் உள்ளடக்கிய நடைமுறைகளுக்கு இடையிலான வேறுபாடு. எஸ்கிமோக்கள் தங்கள் முதியவர் களை வெளியே உறைந்து இறக்கும் வரை விட்டுச் செல்வ தானது நன்கு அறியப்பட்ட உதாரணமாகும். முதலில், இது இரக்கமும் அறமும் அற்றதாகத் தோன்றினாலும், நடைமு றையில் முதியவர்களது விருப்பத்துடனே இது நடக்கின்றது என்பதை வைத்துப் பார்க்கின்றபோது இது ஒரு ஒழுக்கக் கேடான நடைமுறை என்று தீர்ப்பது கடினமாகிறது. இப்போது அத்தகைய சூழல்களுக்குள் ஒருவரது விருப்பமான பங்கேற் புப் பிரச்சினையை மேலும் விவாதிக்க நேர்மறை, எதிர்மறை சுதந்திரம் போன்ற கருத்துக்களை ஒருவர் தூண்டலாம். இங்கு மிகவும் அழுத்தமான விஷயம் என்னவென்றால், விருப் பமில்லாத பங்கேற்பாளர்களுக்கு எதிராகச் செயற்படும் நடை முறைகளுக்கு இனப்படுகொலை ஒரு முக்கிய உதாரணம் என்பது தெளிவாகிறது. இனப்படுகொலையின் சூழலில் விருப்பமில்லாத பங்கேற்பாளர்கள் நிச்சயமாக பாதிக்கப்பட் டவர்களாகத் தகுதி பெற்றிருப்பதால், இந்தப் பிந்தைய சூழலில் 'பங்கேற்பாளர்' என்ற சொல் ஓரளவு தவறாகத் தெரி கிறது. வெறும் போர்க் கோட்பாட்டில் காணக்கூடிய பல உணர்வுகளை வரைந்து, (இராணுவ ரீதியாகவோ அல்லது வேறுவிதமாகவோ) தலையிட்டு, சம்பந்தப்பட்ட துன்பங் களின் அளவைக் குறைக்கும் திறன் நமக்கு இருந்தால், அதைச் செய்வதற்கான தார்மீகக் கடமை நமக்கு இல்லையா?

சர்வதேச சமூகத்தில் இறையாண்மையின் சட்டபூர்வமான தன்மையை மீறக்கூடிய ஒரு தார்மீக வரம்பு உள்ளதா என்ற விவாதம் தொடர்ந்தவண்ணம் இருக்கிறது. 'மனிதா பிமான தலையீடு' (Humanitarian Intervention) குறித்த விவாதத்தில் இந்தச் சிந் தனைப் போக்கு நன்கு தெரிந்ததே. 'நாம் தலை யிடுவதற்கு முன்பு எவ்வளவு துன் பங்களைப் பார்க்கத் தயாராக இருக் கிறோம்?' என்ற வினாவே இந்தக் கருத்து ருவாக்கத்தின் மையம். 1994-இல் நடந்த ருவாண்டா இனப்படு கொலை, சர்வதேச சமூகம் ஓர் இனப்படுகொலை நிகழ்வதைப் பார்க்க மிகவும் தயாராக உள்ளது என் பதை நிரூபித்தது. தார்மீக சார்பியல்வாதி களின் கூற்றுகளை நிராகரிக்க ஒழுக்கத்தை விட அதிகமாக நாம் முறையிடலாம் என் பது தெளிவாக இருப்பதால் ஒருமித்த பங்கு சர்வதேச அங்கீகாரம் என்ற விடயத் துக்கு நம்மை மீண்டும் கொண்டு வரு கிறது. தார்மீக சார்பியல்வாதத்தை

***இன்று உள்ள சர்வதேச சட்டத்தால் இனப்படுகொலை குற்றத்தை எதிர்கொள்ள முடியாவிட்டால், சர்வதேச சமூகம் எவ்வாறு நெறிமுறைகளை உள்ளடக்கிய சர்வதேச சட்ட அமைப்பைக் கொண்டிருக்க முடியும் என்ற கேள்வியின் தீவிரத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.***

விஞ்ஞான முறையில் நிரூபிப்பது சாத்தியமில்லை என்றா லும், தார்மீக சார்பியல்வாதம், குறைந்தபட்சம் இனப்படு கொலையின் பின்னணியில், சட்டத்திற்குப் புறம்பானது மற் றும் பொதுவானது அல்ல என்பதை நிரூபிக்க, மேலே வழங் கப்பட்ட சர்வதேச அங்கீகாரம் பற்றிய புரிதலுடன் மீண்டும் ஈடுபட முடியும். இது மிகக்குறைவான எதிர்பார்ப்பாக இருந் தாலும் கூட இனப்படு கொலையின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது சர்வதேச அங்கீகாரத்தின் வகிபாகத்தின் அரசியற்தன்மை தெளிவாகிறது.

இனப்படுகொலையைப் புரிந்து கொள்வது தொடர்பில் தார் மீக தத்துவவாதிகள் உலகளாவிய தார்மீகத்தன்மையின் குறைந்தபட்சத் தேவை பற்றிய புரிதலை உருவாக்கியது போல, சர்வதேச வழக்கறிஞர்கள் உலகளாவிய சட்டத்தின் குறைந்தபட்சத் தேவை பற்றிய புரிதலை உருவாக்கியுள்ள னர். இனப்படுகொலை என்பது அனைத்துக்கும் மேலான அத்துமீறலாக சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப் பதுதான் இங்கு பொருத்தமாக இருக்கிறது. இனப்படுகொலை பற்றிய சர்வதேச சமூகத்தின் பார்வையை சட்டக் கண்ணோட் டத்தில் அளவிட, இனப்படுகொலை ஒப்பந்தத்தின் வரை வுக்குத் திரும்புவது அவசியம். சுவாரஸ்யமாக, தார்மீகத் திற்கும் சட்டத்திற்கும் இடையிலான மேற்கூறிய உறவு இனப் படுகொலை தொடர்பான வரைவின் நடைமுறைக்குள் வைக் கப்பட்டது. உதாரணமாக, 1946-இல், இனப்படுகொலை குற் றத்திற்கான ஐ.நா பொதுச் சபை தீர்மானம், இனப்படு கொலை 'மனிதகுலத்தின் உணர்வை அதிர்ச்சிக்குள்ளாக்கு கிறது' என்று கூறியது. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை, இனப்படுகொலை என்பது சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு குற் றம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இதை நாகரிக உலகம் கண்டிக்கிறது. சர்வதேச சட்ட இயக்கத்தின் மையத்தில் இருக்கும் நாஜி இனப்படுகொலையை நோக்கிய தார்மீக வெறுப்புணர்ச்சி இது என்பதை இந்த அறிக்கை அடிக் கோடிட்டுக் காட்டுகிறது. 1946-இல் பொதுச் சபை தீர்மானத் தில் வெளிப்படுத்தப்பட்ட உலகளாவிய தார்மீக வெறுப்பு, குற்றத்தை கண்டிக்கும்போது அரசுகளின் பிரதிநிதிகள் உல களாவிய தார்மீக மொழியுடன் தொடர்ந்து பேசிய தால், அடுத்தடுத்த வரைவு செயல்முறை முழுவதும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இனப்படுகொலைக் கான சர்வதேச சட்ட முன்னோக்குகள், இனப்படு கொலையைத் தவறான நடத்தை என்று வெறுமனே அங்கீகரிப்பதை விட, சர்வதேச சட்டத்தில் 'குற்றங் களின் குற்றமாக' இனப்படுகொலையை நிறுவ முற் பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.

இனப்படுகொலை என்பது சர்வதேச அளவில் 'குற் றங்களின் குற்றமாக' கருதப்பட்டால், ஏன் அரசுகள் இனப்படுகொலைக் குற்றத்தை எதிர்கொள்ளத் தவறு கின்றன என்ற கேள்வியை இந்த இடத்தில் கேட்பது பொருத்தம். அரசியல் கண்ணோட்டத்தில் இனப்ப டுகொலை என்பது சர்வதேச அளவில் 'குற்றங்க ளுக்கெல்லாம் தலையாய குற்றமாக' கருதப்பட வில்லை என்பது தெளிவாகத் தெரிந்ததால், இந்தக் கேள்வியில் இயல்பாக எழுப்பப்பட்ட உணர்வுக்கு நம்மைத் திரும்பக் கொண்டுவருகிறது. 9/11 நிகழ்வு களிலிருந்து, சர்வதேச பயங்கரவாதம் இனப்படு கொலையை விட முன்னுரிமை அளிக்கப்படும் ஒன் றாக மாறியது. இனப்படுகொலையை விட சர்வதேச

பயங்கரவாதம் போன்ற பிற குற்றங்களுக்கு முன்னுரிமை அளிப்பது, மனிதாபிமான முன்னேற்றத்தின் பாதையில் பின் தங்கிய படியை பிரதிபலிக்கிறது, சர்வதேச பயங்கரவாதம் சர்வதேச உறவுகளில் ஒரு தீவிரமான சிக்கலை ஏற்படுத்தும் அதே வேளையில், பயங்கரவாதிகள் அணு ஆயுதங்களை வாங்காத வரையில், நிராயுதபாணியான அப்பாவிக் குழுக் களுக்கு அரசுகள் செய்யக்கூடிய அழிவின் அளவை அவர் களால் கொண்டு வர முடியாது என்பது தெளிவாக இருப் பதால், அத்தகைய தர்க்கம் முற்றிலும் புரிந்துகொள்ளக் கூடியது. மிக எளிமையாக, பயங்கரவாதிகளை விட அரசுகள் அதிக அதிகாரத்தை வைத்திருக்கின்றன. இது போன்ற நியா யத்தை மனதில் கொண்டுதான் நாம் இனப்படுகொலையில் சர்வதேச அங்கீகாரத்தின் முக்கியத்துவத்தை நோக்க வேண் டியுள்ளது.

இனப்படுகொலையைத் தடைசெய்யும் ஒரு நெறிமுறையில் பரவலான உலகளாவிய உடன்பாட்டை இன்றுவரை எம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது உண்மையில் அவமான கரமானது. இன்று உள்ள சர்வதேச சட்டத்தால் இனப்படு கொலை குற்றத்தை எதிர்கொள்ள முடியாவிட்டால், சர்வதேச சமூகம் எவ்வாறு நெறிமுறைகளை உள்ளடக்கிய சர்வதேச சட்ட அமைப்பைக் கொண்டிருக்க முடியும் என்ற கேள்வியின் தீவிரத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இருப்பினும், ஒரு முக்கியமான புள்ளியைத் தொடுவது இங்கே அவசிய மானது. இனப்படுகொலைகள் தடுக்கப்பட வேண்டும் என்ற சர்வதேச எதிர்பார்ப்பு நிலவுகின்ற அதேவேளை, இனப்படு கொலை தடுக்கப்படமாட்டாது என்ற சர்வதேச ரீதியில் ஏற் றுக்கொள்ளப்பட்டிருப்பதும் தெளிவாகின்றது. இதை விளக்கு வதற்கு, இனப்படுகொலை தடுப்புக்கான தேசிய மற்றும் சர்வதேச அரசியல் எதிர்பார்ப்புகளை வேறுபடுத்துவது அவ சியம். இனப்படுகொலை தடுக்கப்பட வேண்டும் என்ற எதிர் பார்ப்புடன் இந்தச் சொற்றொடர் ஒத்ததாக மாறியுள்ளதால், இந்த வேறுபாட்டை விளக்குவதற்கு, 'இனி ஒருபோதும் இல்லை' என்ற அரசியல் சொல்லாட்சியை இந் தப் பகுப்பாய்வு பயன்படுத்துகிறது. இனப்படுகொலை ஆய்வுகள் பற்றிய கருத்தாடல்கள் 'இனி ஒருபோதும் இல்லை' என்ற சொற்றொடரால் நிரம் பியுள்ளது. இது சர்வதேச சமூகத்தின் (இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு செய்யப்பட்ட) சர்வதேச உறவுகளில் 'இனி ஒருபோதும்' இனப்படுகொலை ஏற்பட அனுமதிக்கப்படாது என்ற உறுதி மொழியைக் குறிக்கிறது. முக்கியமாக, நாஜிகளால் குறிவைக்கப்பட்டவர்க ளைப் பாதுகாப்பதில் சர்வதேச சமூ கம் அதன் பொறுப்புகளில் தோல்வி யடைந்துள்ளது மற்றும் இந்தத் தோல் விக்கு இனப்படுகொலை மாநாடு ஒரு தீர்வை வழங்கியது என்ற புரிதலின் அடிப்படையில் 'இனி ஒருபோதும்' என்ற சொல்லாட்சி கட்டப்பட்டது. அதன்படி, சர்வதேச உறவுகளில் இனப்படு கொலை தடுக்கப்பட வேண்டும் என்ற தெளிவான சர்வதேச எதிர்பார்ப்பு இருந்தது. சர்வதேச சமூகம் இனப்படு கொலையை அனுமதிக்கவில்லை என் றாலும், அது நடக்க அனுமதிக்கின்றது. இனப்படுகொலை நிகழக் கூடாது என்ற இந்த சர்வதேச எதிர்பார்ப்பு, இத் தகைய 'சிக்கலான மற்றும் ஆபத்தான' அயலுறவுக் கொள்கை நிகழ்ச்சி நிரல்களில் அரசுகளின் தலையிடக் கூடாது என்ற தேசிய எதிர்பார்ப்பில் சோகமாக சரிந்தது.

**❝ இனப்படுகொலையைத் தடைசெய்யும் ஒரு நெறிமுறையில் பரவலான உலகளாவிய உடன் பாட்டை இன்றுவரை எம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது உண்மையில் அவமானகரமானது. ❞**




கடந்த ஒரு நூற்றாண்டுகால அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கைகளின் வரலாறானது இனப்படுகொலைக்கும் அரசிய லமைப்புச் சட்டத்திற்கும் இடையிலான உறவு தொடர்பான விஷயத்தின் இதயத்திற்குச் செல்கிறது. மிக எளிமையாக, மற்ற எல்லா அரசுகளையும் போலவே அமெரிக்காவும், சர்வ தேச சமூகம் இனப்படுகொலையைத் தடுக்க வேண்டும் என்ற சர்வதேச எதிர்பார்ப்புக்குப் பேச்சளவிலான சம்மதத்தைத் தருகின்றது. ஆனால், இனப்படுகொலையைத் தடுப்பது அரசு களின் தேசிய நலனுக்கு உட்பட்டது அல்ல என்ற யதார்த்த மான அயலுறவுக் கொள்கை நெறிமுறையை அது நிலை நிறுத்துகிறது. இனப்படுகொலையைத் தடுப்பது தொடர்பாக அரசுகளிடையே நீண்டகாலக் கூட்டுப் பாதுகாப்பு உத்திகள் எதுவும் உருவாக்கப்படவில்லை என்ற புரிதலுக்கு இது நம்மைத் திரும்பக் கொண்டுவருகிறது. இதுதான் உண்மை யான பிரச்சினை. இனப்படுகொலையைத் தடுக்க வேண்டு மானால், இனப்படுகொலையைத் தடுப்பதை மட்டும் எந்த அரசும் மேற்பார்வையிட முடியாது என்பதால், நீண்ட காலக் கூட்டு முயற்சியை உருவாக்க வேண்டும். தற்போது, எந்த ஒரு சர்வதேச கூட்டு முயற்சியும் இல்லாதது, இனப்படுகொலையின் தாக்கம் உலகளாவிய கொள்கை வகுப்பாளர்களிடையே உணரப்படவில்லை என்ற உண்மையைப் பிரதிபலிக்கிறது. இனப்படுகொலை தார்மீக ரீதியாக வெறுக்கத்தக்கது என் பதை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள், ஆனால் இனப்படு கொலையைத் தீர்க்க முடியாத பல பிரச்சினைகளில் ஒன் றாகப் பார்க்கிறார்கள்.

கடந்த கால சர்வதேச அரசியல் சில விடயங்களைத் தெளிவாகக் காட்டு கிறது. சர்வதேச உறவுகளில் தொடர் புடைய அனைத்து அரங்காடிகளும் (அவர்கள் யாராக இருந்தாலும்) ஓர் இனப்படுகொலையைத் தார்மீக ரீதி யாகவும், சட்ட ரீதியாகவும், அரசியல மைப்பு ரீதியாகவும் ஏற்றுக்கொண் டால் மட்டுமே அது இனப்படுகொ லையாக ஏற்றுக்கொள்ளப்படும் சாத் தியப்பாடு உண்டு. அத்தகைய யதார்த்தம் பற்றிய ஒரு புரிதல்; திகில டையச் செய்தாலும் உண்மை அது தான். முதலாவதாக, சர்வதேச சமூகம் கடைபிடிக்க வேண்டிய தார்மீகக் கோரிக்கையை எந்த உலக அரசாங் கமும் வழங்காத நிலையில், சர்வதேச அங்கீகாரத்தை ஆணையிடப் போட் டியிடும் ஒழுக்கங்கள் அனுமதிக்கப்ப டாமல் இருப்பது கட்டாயமாகும். குறிப்பாக பல்மைய உலக ஒழுங்கில் இனப்படுகொலைக்கான சர்வதேச அங்கீகாரம் என்பது மிகவும் சவா லானது. அரசியல் கண்ணோட்டத்தில்



ஒரே வெளிச்சத்தில் கருதப்படாவிட்டாலும், சட்ட மற்றும் தார்மீகக் கண்ணோட்டத்தில் சர்வதேச அளவில் 'குற்றங்களின் குற்றமாக' கருதப்படுவதால், இனப்படுகொலையானது சர்வதேச சட்டபூர்வமான தன்மையுடன் ஒரு சிறப்பு உறவைக் கொண்டுள்ளது. இக்கண்ணோட்டத்தில், இனப்படுகொலை மற்றும் சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச அங்கீகாரத்தின் முதன்மை நிறுவனங்களுக்கு இடையேயான உறவைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கெடுபிடிப்போரின் முடிவு சர்வதேச சமூகத்தை மூடிமறைத்த அதிகாரச் சமநிலை குறித்த தடுமாற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. அதிகாரச் சமநிலையில் அடுத்தடுத்து ஏற்பட்ட தீவிர மாற்றம், சர்வதேச சமூகத்தின் சட்ட, தார்மீக மற்றும் அரசியலமைப்பு எதிர்பார்ப்புகளை மாற்றிய புதிய சகாப்தத்தை முன்னறிவித்தது. பிரச்சினைக்குரிய வகையில், அமெரிக்கா தலைமையிலான 'புதிய உலக ஒழுங்கின்' தெளிவின்மை, கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தில் சரியான நடத்தை என்ன என்பது பற்றிய அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படவில்லை. ஒரு தசாப்தத்திற்கும் குறைவான காலத்திற்குள், சர்வதேச உறவுகளில் ஒரு சட்டபூர்வமான நெருக்கடி ஏன் ஏற்பட்டது என்பதை இது விளக்க உதவுகிறது. கொசோவோ மற்றும் ஈராக்கில் தலையீடுகள் தொடர்பாக எழுந்த சட்டபூர்வ நெருக்கடி பற்றி அதிகம் எழுதப்பட்டிருந்தாலும், கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தில் இனப்படுகொலை நிகழ்வது சட்டபூர்வமான செயற்பாட்டில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு இறையாண்மை தேசத்தின் மீதான தலையீடு பற்றிய அதிகார சங்கடம் எழுந்தது. இந்த இக்கட்டான நிலையைத் தீர்ப்பதில் சர்வதேச சமூகத்தின் தோல்விதான், கொசோவோவின் சூழலில் சட்டபூர்வ நெருக்கடி வெளிப்பட்டு இறுதியில் ஈராக்கிற்குள் பரவியது. இந்தக் கண்ணோட்டத்தில், சட்டபூர்வ நெருக்கடியைத் தீர்ப்பதற்கான சர்வதேச சமூகத்தின் திறனின்மை வெளிப்பட்டது. ஆயினும்கூட, இனப்படுகொலையின் சட்டபூர்வ செயல்முறையின் தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்வதற்கு முன், கெடுபிடிப்போருக்குப் பிந்தைய 'புதிய உலக ஒழுங்கில்' பொதிந்துள்ள பிரச்சினைகள் முக்கியமானவை.

சட்டபூர்வ செயல்முறைக்குள் பதற்றங்கள் எவ்வாறு எழுந்தன என்பதைப் புரிந்துகொள்வதற்கு, சரியான நடத்தையின் (Rightful Conduct) சூழலில் இறையாண்மை-தலையீடு விவாதத்தை முதலில் கருத்தில் கொள்வோம். முதன்மையாக, கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தில் மனிதாபிமானத் தலையீட்டிற்கான சாத்தியமான பாத்திரத்தின் மீது சர்வதேச சமூகம் பிளவுபட்டதால் ஒரு பதற்றம் எழுந்தது. குறிப்பாக சோவியத் ஒன்றியத்தின் முடிவையடுத்த காலப்பகுதியில் ஒரு நாட்டின் மீதான இராணுவத் தலையீடு என்ற கருத்துக்கு சர்வதேச அங்கீகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையில் கோருவது தொடர்பில் வீட்டோ அதிகாரமிக்க நாடுகளின் செயற்பாடுகள் கவனிப்புக்குரியன. ஒருபுறம், சீனாவும் ரஷ்யாவும் முழுமையான இறையாண்மை மற்றும் சர்வதேச உறவுகளில் பலத்தைப் பயன்படுத்தாது பன்மைத்துவ உறுதிப்பாட்டை ஏற்றுக்கொண்டன. எனவே இறையாண்மையின் சட்டபூர்வ உரிமை முழுமையானதாகக் காணப்பட்டது. மறுபுறம், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகியவை நிபந்தனைக்குட்பட்ட இறையாண்மை மற்றும் மனிதாபிமானத் தலையீட்டின் தார்மீகத்திற்கு மிகவும் உறுதியான உறுதிப்பாட்டை ஆதரிக்க முனைகின்றன. எனவே, இறையாண்மையின் சட்டபூர்வத் தன்மை தலையீட்டின் தார்மீகத்துடன் மோதியதால், சட்டபூர்வ செயல்முறைக்குள் விதிமுறைகளின் மோதல் ஏற்பட்டது. அதே நேரத்தில், நாடுகளுக்குள் அதிகரித்து வரும் மோதல்களைப் பற்றி ஏதாவது செய்ய வேண்டும் என்பது தெளிவாகத் தெரிந்ததால், ஐ.நா.-வின் அங்கீகரிக்கப்பட்ட தலையீடு சில உள்விவகாரங்கள் சர்வதேச தலையீட்டிற்கு உத்தரவாதம் அளிக்கும் ஓர் ஒப்பந்தத்துக்கு வீட்டோ நாடுகள் உடன்பட்டன. சோமாலியாவின் சூழலில் இது வெளிப்படையாக இருந்தது. இது மீண்டும் ஒருமுறை, இறையாண்மை-தலையீடு தொடர்பான அடிப்படைப் பதற்றத்தை மறைத்தது, ஏனெனில் சோமாலியாவில் அமெரிக்காவின் தன்னிச்சையான தலையீடு துல்லியமாக ஆதரவைப் பெற்றது. ஏனெனில் சோமாலியா ஒரு தோல்வியுற்ற நாடாக இருந்ததால் அது ஓர் இறையாண்மை நாடாகத் தகுதி பெறவில்லை என்று ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை ஒப்புக்கொண்டது. அதன்படி, தலையீட்டின் தார்மீகத் தன்மையைத் தடுக்கக்கூடிய, பொருந்தக்கூடிய சட்டத் தடையாக இறையாண்மையின் உரிமை காணப்படவில்லை. ஆனால் வீட்டோ நாடுகளுக்கிடையிலான கருத்தொருமிப்பு நீண்ட காலம் நிலைக்கவில்லை. ஏனெனில் அமெரிக்க இந்தக் கருத்தொருமிப்பைப் பயன்படுத்தி உலகநாடுகளில் தன்னிச்சையாக இராணுவத் தலையீடுகளை மேற்கொள்ளத் தொடங்கியது. இதற்கு எதிரான ரஷ்யா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தத் தொடங்கியது. இது கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தில் ஒழுங்கு மற்றும் நீதியின் இணக்கத் தன்மை குறித்து சர்வதேச சமுதாயத்தில் ஆழமான பிளவை பிரதிபலித்தது. இது இறுதியில் சர்வதேச சமூகத்தின் சரியான நடத்தை பற்றிய பொதுவான புரிதலை உருவாக்கும் திறனை இல்லாமல் செய்தது.

இங்கு 'சரியான நடத்தை' பற்றிய விவாதம் ஐ.நா.-வின் அதிகாரத்தின் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம். கெடுபிடிப்போருக்குப் பிந்தைய ஐ.நா. தீர்மானங்களுக்குள் காணப்படும் தெளிவின்மை, இது போன்ற நிச்சயமற்ற தன்மை முரண்பட்ட விளக்கங்களைத் தூண்டியது. இது இறுதியில் ஐ.நா சாசனத்தின் கூட்டுப் பாதுகாப்பு அமைப்பின் முக்கிய விதிகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது. சர்வதேச சட்டபூர்வமான சூழலில் இத்தகைய புரிதல், விதிகள் அவற்றின் உறுதியை இழக்கின்றன, அல்லது வேறுவிதமாகக் கூறினால், அவை தெளிவற்றதாக இருக்கும் போது அவற்றின் இணக்கம் இழுக்கப்படும். பிரச்சினைக்குரிய வகையில், நாடுகள்



> இனப்படுகொலை சர்வதேச சட்டத்துடனும் சர்வதேச ஒழுக்கத்துடனும் வைத்திருக்கும் உறவின் காரணமாக, சர்வதேச சமூகத்தில் இனப்படுகொலை நிகழும்போது, இந்தக் கருத்துக்களின் மதிப்பு சிதைந்துவிடும்.

தெளிவற்ற, எப்போதும் விரிவடைந்து வரும், நெறிமுறையான நிகழ்ச்சி நிரலை உருவாக்கின. அதை நிறைவேற்றும் திறன் ஐ.நா.-விடம் இல்லை. இது ஐ.நா.-வின் அதிகாரத்தின் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. கெடுபிடிப்போருக்குப் பிந்தைய சகாப்தத்தில் சரியான நடத்தை என்ன என்பதைப் பற்றிய தெளிவான புரிதலை உள்ளடக்கியதாக 'புதிய உலக ஒழுங்கு' தேவைப்பட்டது என்பதைப் பின்னோக்கிப் பார்க்கும் போது தெளிவாகத் தெரிகிறது, ஆனால் அவ்வாறு ஒன்றும் ஏற்படவில்லை. நாடுகளுக்குள் நடக்கும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, தன்னிச்சையான தலையீடுகளுக்கான அங்கீகாரத்தை அமெரிக்கா தனது பெரும்பலத்தைப் பயன்படுத்தி ஐ.நா.-வில் கோரி நின்றது. ஆனால் அத்தகைய தலையீடுகளின் சட்ட அடிப்படைகள் பெரும்பாலும் ஆதாரமற்றவை. இவ்வகையான தலையீடுகள் ஐ.நா. அமைப்பின் அதிகாரத்தை சிதைக்க மட்டுமே பயன்பட்டன.

ருவாண்டா இனப்படுகொலையானது சர்வதேச உறவுகளில் இறையாண்மை-தலையீடு-அதிகாரம் என்ற இக்கட்டான கேள்வியை மீண்டும் கொண்டுவந்த வினையூக்கியாகச் செயற்பட்டது. இதை கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தின் பரந்த சூழலில் வைக்க வேண்டும். 1993-ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஐ.நா.-விற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பல அரங்காடிகள் ஐ.நா. 'பயனற்றுப் போகிறது, அமெரிக்க நிகழ்ச்சிநிரலுக்கு இயங்குகிறது' என்பதை அறிந்திருந்தனர். ஆனால் எதையும் செய்யவியலாதவாறு ஐ.நா. தனது தார்மீக அதிகாரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தியிருந்தது.

1993-ஆம் ஆண்டு ஒக்ரோபர் 3-ஆம் தேதி சோமாலியத் தலைநகர் மொகடிசுவில் அமெரிக்க படைவீரர்கள் கொல்லப்பட்டபோது ஐ.நா. ஏற்கனவே அமைதி காக்கும் உன்னதமான விதிகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. இந்த நிகழ்வு ஐ.நா.-வின் செயற்பாடானது அதன் அமைதி காக்கும் அர்ப்பணிப்பின் மீது கட்டமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை வலுப்படுத்தியது. இந்தப் பின்புலத்தில் ருவாண்டாவில் ஐ.நா.-வின் செயலற்ற தன்மை, இனப்படுகொலையைத் தடுக்க ஒரு தெளிவான சட்டபூர்வ கடமை இருந்தும் தன் விதிகளைத் தவறாகப் புரிந்துகொண்டது. இந்த சட்டபூர்வக் கடமையை நிறைவேற்றத் தவறியதால், ஐ.நா.-வின் ஒழுங்குமுறை கட்டமைப்பிற்குள் முழுமையான சிதைவை உந்தித் தள்ளும் அளவிற்கு அரிக்கப்பட்டுவிட்டது. இதனால் சர்வதேச சட்டப்பூர்வ நடைமுறையை எளிதாக்குவதற்கு உதவுவதில் ஐ.நா. அதன் பங்கில் தோல்வியுற்றால், இரண்டாம் நிலை நிறுவனமாக அதன் சட்டபூர்வமான தன்மை இறுதியில் கேள்விக்குள்ளாகியுள்ளது.

இனப்படுகொலை சர்வதேச அங்கீகாரத்துடன் சிறப்பு உறவைக் கொண்டுள்ளது, ஏனெனில் இது சட்ட மற்றும் தார்மீக கண்ணோட்டத்தில் 'குற்றங்களின் குற்றம்' என சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இனப்படுகொலை உண்மையில் சர்வதேச ஒழுங்கிற்கு எவ்வாறு அச்சுறுத்தலாக உள்ளது என்பதைப் பார்க்க இத்தகைய புரிதல் நமக்கு உதவுகிறது, மனிதாபிமான தலையீடு பற்றிய கதையாடல்கள் சில சமயங்களில் இனப்படுகொலை ஐ.நா.-வின் அதிகாரத்தை அழிக்கிறது என்ற கருத்தை நியாயப்படுத்துகின்றன என்றாலும், இனப்படுகொலைக்கும் சர்வதேச சட்டப்பூர்வத்திற்கும் இடையிலான சிறப்பு உறவுதான் சர்வதேசத்தின் மீதான இனப்படுகொலையின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கான கதவுகளைத் திறக்கும் திறவுகோலாகச் செயல்படுகிறது.

ருவாண்டா இனப்படுகொலையின் பின்னணியில், சர்வதேச சமூகம் அதன் சட்டபூர்வ கடமையை நிறைவேற்றத் தவறியது, கொசோவோவின் சூழலில் படையைப் பயன்படுத்துவதைப் பொறுத்தவரை, ஐ.நா.-வினதும் பாதுகாப்புச் சபையினதும் அதிகாரத்தை நேட்டோ சவால் செய்தது. சம்பந்தப்பட்ட அரங்காடிகள் ஐ.நா.-வை வெளிப்படையாக நிராகரிக்கவில்லை என்றாலும், சர்வதேச சமூகத்தில் எழுந்த ஒருமித்த ஆதரவின் நிலை அவ்வாறு செய்தது, ஏனெனில் ருவாண்டா இனப்படுகொலை முதலில் ஐ.நா. மற்றும் பாதுகாப்புச் சபையிடம் இருந்த அதிகாரத்தை அழித்துவிட்டது. இதற்குக் காரணம் குற்றத்தின் சர்வதேச சட்டபூர்வத் தொடர்புதான்.

இதைச் சர்வதேச உறவுகளின் பரந்த சூழலில் புரிந்துகொள்ள, ருவாண்டா இனப்படுகொலைக்குப் பின் ஏற்பட்ட நெருக்கடி கொசோவோவிலும் பின்னர் ஈராக்கிலும் பரவியது. எனவே, ருவாண்டா இனப்படுகொலையின் பின்னணியில் ஐ.நா.-வின் அதிகாரம் பலவீனமடைந்தது எவ்வாறு பரந்த தாக்கங்களைக் கொண்டிருந்தது என்பதை நாம் காணலாம், இது தற்காலிகமான முறையில் ஐ.நா.-வின் அதிகாரத்தை சவால் செய்ய நாடுகளுக்கு வழி வகுத்தது. பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகியவை ஈராக்கில் 2003-ஆம் ஆண்டு அமெரிக்கத்

தலைமையிலான தலையீட்டை எதிர்த்தன. மேலும் அமெரிக்காவே 2008-ஆம் ஆண்டு ஜோர்ஜியாவில் ரஷ்ய தலையீட்டை எதிர்த்தபோது, தங்கள் எதிர்ப்பை நியாயப்படுத்தும் முயற்சியில் தோல்விகண்டன. வீட்டோ நாடுகள் அனைத்து மனித உரிமை மீறல்களையும் தடுக்க முடியும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை என்றாலும், இனப்படுகொலை என்பது தேசிய நலன்கள் ஆபத்தில் இருக்கும்போது மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மற்றொரு கொள்கையை விருப்பமாகப் பார்க்க முடியாது என்பது தெளிவாகிறது. இனப்படுகொலை சர்வதேச சட்டத்துடனும் சர்வதேச ஒழுக்கத்துடனும் வைத்திருக்கும் உறவின் காரணமாக, சர்வதேச சமூகத்தில் இனப்படுகொலை நிகழும்போது, இந்தக் கருத்துக்களின் மதிப்பு சிதைந்துவிடும். அதன்படி, இனப்படுகொலை தடுப்பு என்பது - அரசுகள் சர்வதேச ஒழுங்கை மதிப்பதாக இருந்தால் - ஒரு நாட்டின் தேசிய நலனோடு தொடர்புடையது.

## தொடரும் குறிப்புகள்:

2005-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஒருமனதாக 'காக்கும் கடப்பாடு' (Responsbiltiy to Protect - R2P) கொள்கையை அங்கீகரித்தது. இது அரசின் இறையாண்மை, பொறுப்புகள் மற்றும் உரிமைகளை உள்ளடக்கியது என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனச் சுத்திகரிப்பு ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுகளுக்கு இருப்பதால், இந்தப் பொறுப்பு தேசிய மற்றும் சர்வதேச அளவிலானது என்று வரையறுக்கப்பட்டது. எந்தவொரு காரணத்திற்காகவும், ஓர் அரசு இந்தப் பொறுப்பில் 'வெளிப்படையாகத் தோல்வியடைந்தால்', சர்வதேச சமூகம் இந்தப் பொறுப்பின் பற்றாக்குறையை நிறைவேற்ற அழைக்கப்படும். அதன்படி, காக்கும் கடப்பாடு என்பது சட்ட, தார்மீக, சரியான நடத்தை பற்றிய புதிய புரிதலை உருவாக்குவதற்கான சர்வதேச சமூகத்தின் முயற்சியை பிரதிபலிக்கிறது. இந்தப் பின்புலத்தில் முதலாவதாக, இனப்படுகொலைக் குற்றத்திற்குக் காக்கும் கடப்பாட்டைப் பயன்படுத்துவதன் மூலம், இது இனப்படுகொலைத் தடுப்புப் பிரச்சினையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம். இரண்டாவதாக, கொசோவோ நிகழ்வு முன்கொணர்ந்த நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதன் மூலம், கெடுபிடிப்போருக்குப் பிந்தைய சட்டபூர்வ நெருக்கடிக்கு அடித்தளமாக இருந்த இறையாண்மை-தலையீடு-அதிகார சங்கடத்தில் காக்கும் கடப்பாட்டின் தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்வது முக்கியம். காக்கும் கடப்பாடு இனப்படுகொலையைத் தடுத்தல் என்ற போர்வையில் எவ்வாறு தனது அரசியலை மேற்கொண்டது என்பதை ஆராய்வதும் இலங்கையில் அந்தக் காக்கும் கடப்பாட்டுக்கு என்ன நடந்தது என்ற வினாவை எழுப்புவதும் முக்கியமானது.



meenilankco@thaiveedu.com




# ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில் பெண் வன்முறை

சி. ரமேஷ்



பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது உடல் ரீதியான வன்முறையை மட்டும் குறிக்க வில்லை. தனிப்பட்ட வாழ்க்கையில் பெண்க ளுக்கு எதிராக இழைக்கப்படும் உளவியல் சார்ந்த வன்முறைகளையும், நிதி ரீதியான தீங்கு விளைவிக்கக்கூடிய வன்முறைகளையும் குடும்பம் சார்ந்த வன்முறைகளையும் உணர்ச்சிக் கொந்த ளிப்பான சந்தர்ப்பத்தில் வாய்மொழி மூலம் ஏற்ப டுத்தப்படும் வன்முறைகளையும் உள்ளடக் கியது. அத்தகைய செயல்களில் அச்சுறுத் தல்கள், வற்புறுத்தல் அல்லது தன்னிச்சையான சுதந்திரத்தைப் பறித்தல் ஆகியனவும் அடங்கும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், வன்முறை நடத்தை என்பது பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள் மீது அதிகாரத்தையும் கட்டுப்பாட் டையும் செலுத்துவதாகவும் அமைகின்றது. முனைவர் நா. வேலம்மாள் மனித சமுதாயத்தில் பெண்க ளுக்கெதிராக நிகழும் வன்முறைகளை ‘பெண் சிசுக்கொலை, வீட்டுவன்முறை, வரதட்சனைச் சாவுகளும் கொடுமைகளும் பாலியல்த் தொழி லுக்காகப் பெண்களைக் கடத்துதல், பொது இடங்களில் வைத்து பெண்களை அவமதித்தல், பெண்களை ஆபாசமாகச் சித்திரித்தல், சமய ரீதியான வன்முறை’ எனப் பாகுபடுத்தி ஆராய்வார்.

இலங்கை போன்ற நாடுகளில் குடும்பத்தில் ஆண்கள் மற்றும் பிறநபர்களால் பெண்களுக்கு எதிராக உடல்ரீதியான வன் முறைகளே அதிகம் இழைக்கப்படுகின்றன. உடல் ரீதியான வன்மு றையில் அடித்தல், அறைதல், தள்ளுதல், குத்துதல், உதைத்தல், கைகளை முறுக்குதல், மூச்சுத் திணறலை உண்டாக்கல், எரித்தல் ஆகிய இன் னோரன்ன செயற்பாடுகளும் அடங்கும். உலக ளவில் முப்பது சதவீதமான பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவர்களாலும் மற்றும் துணை அல்லாதவர்களாலும் உடல்ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் வன்முறைக்கு உள்ளாக்கின்றனர். WHO வெளியிட்டுள்ள மதிப்பீடுகள் இதனை உறு திப்படுத்தி நிற்கின்றன. இந்த வன்முறையில் பெரும்பாலானவை நெருக்கமான துணைவர்க ளாலேயே ஏற்படுத்தப்படுகின்றன.

பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தை (Convention on the Elimination of All Forms of Discrimination against Women - CEDAW) 1981-ஆம் ஆண்டில் ஏற்று அங்கீகரித்ததுடன் 1993-ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தையும் (UN Declaration on the Elimination of Violence against Women) இலங்கை ஆதரித்தது. ஆயினும், இலங்கை போன்ற சிறிய நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதைக் காணலாம். 2018-ஆம் ஆண்டு ஐ.நா. இன்டர்ஜென்சி பணிக்குழுவின் (UN Inter-agency working group) அறிக்கையின்படி உலகில் பதினைந்து வயதுக்கும் நாற்பத்தொன்பது வயதுக்கும் இடைப்பட்ட பெண்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கினர் (27%) தங்கள் நெருங்கிய துணையால் ஏதேனும் ஒரு வகையான உடல் ரீதியான அல்லது பாலியல்ரீதியான வன்முறைக்கு உள்ளாகின்றனர். இவ்வாறான வன்முறைகள் பெண் களின் உடல், மன ஆரோக்கியத்தையும் பாதிப்படையச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் என்பது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களிடமிருந்து பெண்ணைத் தனிமைப்படுத்துதல், அவர்களுக்குத் தொடர்ச்சியான அவமானத்தை ஏற்படுத்தல், கொலை செய்திடுவேன் என அச்சுறுத்தல் விடுத்தல், மிரட்டுதல், கேலிசெய்தல், பிடிக்காத ஒன்றைச் செய்யும்படி வற்புறுத்தல் போன்ற பல்வேறு கட்டுப்பாட்டு நடத்தைவாத முறைகளை உள்ளடக்கியது.

நிதி அல்லது பொருளாதார ரீதியான துஷ்பிரயோகம் என்பது பெண்களின் பணம் அல்லது பிற சொத்துக்களை வலுக்கட்டாயமாகக் கட்டுப்படுத்துதலைக் குறிக்கும். இதில் பணத்தைத் திருடுதல், எந்தவொரு நிதி குறித்த விடயங்களிலும் பங்கெடுத்துக்கொள்ள பெண்களை அனுமதிக்காமை முதலியனவை உள்ளடங்கும். அதேசமயம் பெண்களுக்கு வேலை கிடைப்பதைத் தடுப்பது, குறிப்பிட்ட வேலையை மட்டுமே பெண்களைச் செய்யும்படி தூண்டுவது முதலியவையும் இதில் அடங்கும். சித்தி றபீக்கா பாயிஸின் 'நுண்கடன்' என்ற கவிதை ஏழைமக்களின் வாழ்வைப் பாதிக்கும் நுண்கடன்கள் குறித்தும் பேசுகிறது.

*'...முகவரி தேடி வந்தவனின்*
*வாய்மொழி உரையில்*
*விம்பங்களை பார்த்திருக்கிறாய்...*
*கடன் பற்றி*
*தெரியாமலும்*
*தொகை பற்றி அறியாமலும் /*
*கண் விழி பிதுங்க*
*வாழ்வையும் தொலைக்கிறாய்... /*
*கரும்புச்சாற்றைக் குடித்து*
*சக்கையைக் கக்கும்*
*ஆலையாய்*
*அத்தனை சொத்துகளையும் இழந்தாய்'*

——— *வற்றாத ஈரம் - பக்.81*

தனியார் நிறுவனங்களால் வழங்கப்படும் நுண்கடன்கள் வறுமையை ஒழிக்கவும், வருமானத்தை அதிகரிக்கவும் உதவும் என்று நம்பப்பட்டாலும் அது உண்மையிலேயே வருமானங் குறைந்தவர்களை இருந்தே கொல்லும். இலங்கையில் நுண்கடன் திட்டங்களால் குடும்பத்தில் பிளவுகள் ஏற்படுவதோடு அதிகமான பெண்கள் பாதிக்கப்படவும் செய்கின்றனர். அவர்கள் அதனைச் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் பலர் தம் சொத்துகளை இழக்கவும் நேரிடுகின்றனர். நுண்கடன்களில் அதிக வட்டி விகிதம் வசூலிக்கப்படுவதே இதற்குக் காரணம் எனலாம். நுண்கடன் நிறுவனங்கள் சில, கடனை வசூலிக்க கட்டாயப்படுத்தும் நிலையில் சிலர் தம் உயிரையும் இழக்கும் நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

குடும்ப வன்முறை என்பது குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயான வன்முறையையும், நெருங்கிய கூட்டாளிகளுக்கிடையிலான வன்முறைகளையும் உள்ளடக்கியது. இதனை வீட்டு வன்முறை என்றும் அழைப்பர். 'குடும்ப வன்முறை' என்பது ஒரு பொதுவான சொல் என்றாலும், அது பழங்குடியினர் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவுவாசிகளின் வன்முறை அனுபவங்களை அவர்களின் தனித்துவமான உறவுமுறைகளையும் அவர்களின் சமூக கட்டமைப்புகளையும் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

தற்போதைய அரசியலமைப்பின் 12(2)-ஆம் உறுப்புரை 'இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரசைக்கும் ஓரங்கட்டுதல் ஆகாது' என்றாலும், அவை பெரும்பாலும் ஏட்டளவிலேயே உள்ளன. நடைமுறையில் அதன் சாத்தியப்பாடுகள் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. இலங்கை முதலான நாடுகளில் இழைக்கப்படும் பாலியல் வன்கொடுமைகளாக அச்சுறுத்தி பாலியல் வன்கொடுமை செய்தல், சிறுவயதில் பெண்ணைக் கர்பிணியாக்கல், வலுக்கட்டாயமாக இனப்பெருக்க ஆற்றலை அழித்தல், வலுக்கட்டாயமாக கருச்சிதைப்புச் செய்தல், பெண்ணொருவரை வலுக்கட்டாயமாக விபச்சாரத்துக்குத் தள்ளல், பாலியற் சுரண்டல், சட்டவிரோதமாகப் பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடச்செய்தல், பாலியல் அடிமையாக்கஞ் செய்தல், வலுக்கட்டாயமாகப் பாலுறுப்பினை வெட்டி அகற்றல், வலுக்கட்டாயமாக ஆண்களின் விதைப்பையை அகற்றல், நிர்வாணப் படுத்தல், ஆபாசப் படங்களைப் பார்க்கவோ அதுபோல ஓர் உறவினைச் செய்யவோ கட்டாயப்படுத்துதல், பெண்ணைத் தகாத முறையில் உடல்ரீதியாகக் கையாளல் முதலானவற்றைக் கூறலாம். மற்றும் பாலியல்ரீதியிலான வன்முறைகள் இனப் பெருக்க ஆரோக்கியத்தையும் பாதிக்கலாம். இதனால் HIV தொற்றும் ஏற்படலாம்.

அபிவிருத்தி அடைந்து வரும் இந்தியா, இலங்கை முதலான ஆசிய நாடுகளில் பெண்ணுக்கெதிரான வன்முறைகளும் பாலினப் பாகுபாடுகளும் பாரிய அளவில் அதிகரித்து வரும் சூழ்நிலையில் அதனைப் பாடுபொருளாகக் கொண்டு ஈழத்துப் பெண் கவிஞர்களின் நவீன கவிதைகள் எழுந்தன. ஆணாதிக்கச் சமூகத்தில் கணவனாலும் அவளது குடும்பத்தினராலும் பெண்ணானவள் இரண்டாம் நிலைப்பிரஜையாகவும் வீட்டில் சமையல்ப்பணிகளைச் செய்யும் வெறும் மனித இயந்திரமாக நடாத்தப்படுவதை 'விழிப்பு'க் கவிதையில் மிகத் துல்லியமாகப் பதிவு செய்யும் சன்மார்க்கா, அன்புணர்

வற்று ஈனமின்றிப் பெண்ணுழைப்புச் சுரண்டப்படுவதையும் யதார்த்த பூர்வமாக எடுத்துரைக்கிறார்.

*‘சமையல் செய்யும் இயந்திரமாக*
*ஆண்டுகள் பல தூங்கிக் கிடந்தாய்*
*உன் சிறுவீடே உனதுலகானது*
*உப்பும் புளியுமே பிரச்சினையானது,*
*உனது வாழ்நாள் இவ்வாறாக*
*உளுத்துப்போனது*
*உன்னைச் சுரண்டி வாழ்ந்தது உலகம்*
*உன்னை நினைத்து அழுதவர் கொஞ்சம்’*

சிறுவீட்டினில் பெண்ணின் சுதந்திரம் பறிக்கப்படுவதையும் அவளது வாழ்வு சமையலறைக்குள் முடக்கப்படுவதையும் சன்மார்க்கா இக்கவிதையில் பதிவுசெய்கிறார்.

ஆண்டாண்டு காலமாக பண்பாட்டு மதிப்புகள் கொண்ட நிறுவனமான குடும்பத்தில் பெண்ணை சமூக மரபுகளைக் காரணங்காட்டி அவளை உள்ளொடுக்கி அவளது நடத்தையை முடமாக்கி மனிதாபிமானமற்று சிதைக்கப்படுவதை அ. சங்கரி ‘இன்று நான் பெரிய பெண்’ என்ற கவிதையில் மிகக் கூர்மையாகவும் அங்கதத்தொனியுடனும் பதிவு செய்கிறார்.

*‘இன்று*
*நான் பெரிய பெண்*
*உரத்துச் சிரித்தல் கூடாது*
*விரித்த புகையிலை*
*அடக்கம் பொறுமை*
*நாணம்*
*பெண்மையின் அணிகலன்*
*கதைத்தல் சிரித்தல்*
*பார்த்தல் நடத்தல்*
*உடுத்தல்*
*எல்லாம் இன்னபடி*
*என்றெழுதி*
*... நான்*
*கல்லாய்*
*பாறையாய்*
*பனியாய்*
*பெண்ணாய்...’*

தமது உணர்வுகளையும் எண்ணங்களையும் கருத்துகளையும் ஆற்றல்களையும் இயல்பாக வெளியிடுவதற்கு அஞ்சிய காலத்தில் சொல்லாத சேதிகள் தொகுப்பில் இடம்பெற்ற ‘அவர்கள் பார்வையில்’ என்ற கவிதையில் சங்கரி, பெண்களுக்குரிய கடமைகளைச் சமையல் செய்தல், படுக்கையை விரித்தல், குழந்தை பெறுதல், பணிந்து நடத்தல் என வரையறுக்கிறார்.

மலிவான உழைப்பின் இருப்பிடமாகப் பெண் கருதப்படுவது தவிர்க்கப்படவேண்டும். வீட்டு வேலைகள் என்றும் பெண்ணினுடைய ஆளுமையையோ, அறிவையே வளர்ப்பதில்லை. பெண்ணானவள் தன் ஆயுட்காலத்தில் 16.66 வீதத்தை சமையலறையில் கழிக்கிறாள். வினைப்பயனற்றுக் கழியும் அவள் உழைப்பு அவள் வாழ்வின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக உள்ளது, இதனாலே லெனின் ‘வீட்டு வேலைகளுக்கு எதிரான போராட்டம் எங்கு எப்பொழுது தொடங்கப்படுகிறதோ, அங்குதான், அப்போதுதான் மாதர்களின் மெய்யான விடுதலை தொடங்கும்’ எனக் கூறினார். இதனை பாமினியின் ‘வெளியே வா’ என்னும் கவிதை எளிமையாக மென்னுணர்வுத் தளத்தில் பதிவு செய்கிறது.

*‘சமையல் தொடங்கி*
*படுக்கைவரை*
*இலவச சேவை /*
*வழங்கியது போதும்*
*சுமைகளும்*
*துளிதுளியான*
*துன்பத்தின்*
*வெளிப்பாடுகளும்*
*மட்டும்*
*உனதல்ல*
*சூழவுள்ள சகலவற்றிலும்*
*உனக்கும் சம பங்குண்டு*
*வெளியே வா’*

*மறையாத மறுபாதி - பக் -53*

பெண்ணுடல், உளம் மீது நிகழ்த்தப்படும் வன்முறை அவள் இருப்பைச் சிதைக்கிறது. அவளை நிர்க்கதிக்குள்ளாக்குகிறது. அதிகார வர்க்கத்தால் சிதைக்கப்பட்டு நசுக்கப்பட்ட பெண்ணின் அவலக் குரலாய் ஒலிக்கும் சிவரமணியின் ‘முனைப்பு’ என்னும் கவிதை அவர் சார்ந்த உள்ளப் பதிவுகளைத் துல்லியமாகப் பதிவு செய்கிறது.

*‘பேய்களால் சிதைக்கப்படும்*
*பிரேதத்தைப் போன்று*
*சிதைக்கப்பட்டேன்*
*ஆத்மாவின் உணர்ச்சிகள் எல்லாம்*
*இரத்தம் தீண்டிய கரங்களால்*
*அசுத்தப்படுத்தப்பட்டன’*

என்னும் எளிமையான வரிகளுக்கூடாக, நுட்பமான உவமைகளை உள்வாங்கி எழுதப்பட்ட இக்கவிதை மரபுவழிச் சமூகத்தால் பெண்வாழ்வு சீர்குலைவதை எடுத்துரைக்கிறது.

திருமணம் என்பது கட்டு. அது ஆண்டாண்டு காலமாய்ப் பெண்ணை அடிமையாக்குகின்றது. திருமண வாழ்வுக்குப் பின் பெண், தன்னை நிலப்படுத்துவற்கான போராட்டமும் இப்பூமியில் அவள் வாழ்வதற்கான போராட்டமும் தொடர்கிறது. பெண்ணின் விருப்பமின்றி திருமணம் நடக்கின்றவேளையில் அவளின் வாழ்க்கை கேள்விக்குள்ளாகின்றது. இந்நிலையில் பெண்ணின் கனவுகள் சிதைக்கப்பட்டு பிடிக்காத ஒருவருடன் அவள் வேறொரு வாழ்வு வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறாள். இச்சந்தர்ப்பத்தில் அவளுடைய வாழ்க்கையை அவளே முடிவு செய்யமுடியாத நிலையே காணப்படுகிறது. ஆணாதிக்க மனோநிலையில் திருமணத்துக்குப்பின் பெண்

பலவந்தமாக ஒடுக்கப்படுகிறாள். அவளது மனோநிலை சிதைக்கப்படுகிறது. பெண் உளச் சிதைவுக்குள்ளாகி வதை படுவதை பெண்ணியாவின் 'படியோலையின் குரல்' என்னும் கவிதை மிகத் தத்துருபமாக வெளிப்படுத்துகிறது.

*'ஒரு இருட்டு எனைக் கொன்றது*
*நான் மிரண்டேன்*
*அல்லது*
*மிரள*
*வைக்கப்பட்டேன்*
*என் உறவுகள் வரையறுக்கப்பட்டன*
*ஆனால்*
*என் இரவுகள் எனை விடுவதாயில்லை...*
*நான் கொல்லப்பட்டேன்*
*நான்கு வருடங்களுக்கு முன்*
*என் சுவாசம் நல்லடக்கம்*
*செய்யப்பட்டது என்னுடல் மட்டும் வாழ்கிறது.....'*

*சரிநிகர் ஜூன் 25 - ஜுலை 8*

சமூகத்தில் கணவனைப் பறிகொடுத்த பெண் மங்கலமற்றவளாகவும் குடும்பத்துக்கு ஆகாதவளாகவும் கருதப்படுகிறாள். இதனால் அவள்படும் இன்னல்கள் அனேகம். இருண்ட அவள் வாழ்வில் மறுமலர்ச்சியில்லை. பெண்ணானவள் பொட்டிழந்து, பூவிழந்து, பொலிவிழந்து பெருமைப்படத்தக்க பிறப்பில்லாது அவள் படும் துயர்கள் ஈழத்துக்கவிதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் ஜெயந்தி தளையசிங்கத்தின் 'கோடுகள்' கவிதை இதனை துலாம்பரப்படுத்துகிறது.

*'நான் ஜடமல்ல*
*உணர்வுகளும் ஆசைகளும் உள்ளவள்*
*யுத்தத்தின் பரிசு*
*என் வாழ்வு சூன்யத்தில்*
*எனக்கு*
*வெள்ளைச் சேலை கட்டி*
*தருகிறார் பட்டம்*
*விதவை என.*
*தாலி பொட்டு, பூவை*
*பறித்தெடுத்தார்*
*அடுத்த பட்டம்*
*அறுதலி*
*மங்கள சபையினிலே*
*நான் ஓர் அங்கமில்லை*
*என் முகத்தில் முழித்தால்*
*அபசகுணமாம் ...'*

*பெண் 1997 மார்ச்*

போர் தின்று தீர்த்த பெண்ணின் அவல வாழ்வை, சமூகம் தின்று தீர்ப்பதைப் பிரசாரப் பாங்கில் வெளிப்படுத்தும் இக்கவிதை நமது நாட்டில் பெண்ணுக்கு இழைக்கப்படும் சமூக அநீதிகளை மறைமுகமாகச் சாடுகிறது.

முஸ்லிம் பெண் கவிஞர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்களில் அனாரும் ஒருவர். உள்ளுணர்வுத் தடத்தில் இயங்கும் அனாரின் கவிதைமொழி எளிமையானது. அதேசமயம் ஆழமானது. அனாரின் பெரும்பாலான கவிதைகள் ஆண், பெண் அசமத்துவ போக்கால் ஏற்படும் வலிகளைப் பாடுபவையாகவே உள்ளன. ஆணாதிக்கச் சமூகத்தினாலும், மரபு வழிப்பட்ட சமூகக் கட்டுமானத்தாலும் ஒடுக்கி நசுக்கப்பட்ட பெண்ணின் வாழ்வை அனாரின் கவிதைகள் பலவற்றில் காணலாம். இதனை இவரின் 'வன்மப்படுத்தல்' இயல்பாக வெளிப்படுத்துகிறது.

*'நினைத்தப்படி*
*நீ-சத்திர சிகிச்சை செய்ய*
*என் வாழ்க்கை*
*விபத்திலடிபட்ட பிராணியாகிவிட்டது.*
*சுயத்தையெல்லாம்*
*ஒப்படைத்து விட்டு வைக்கோல் பொம்மையாகி*
*உன் - இழுப்புக்கு*
*ஆட வேண்டுமென்றே*
*நீ- நினைக்கிறாய் நீ - சொல்வது தான் வேதம்*
*நீ - காட்டுவது தான் உலகமெனில்*
*எனக்கென்று இதயமும் கண்களும் எதற்கு ?*
*முன்னேற்பாட்டுடன்*
*நடத்தும்*
*தாக்குதலைப்போன்று*
*திடீர் திடீரென என்னைச்*
*சுற்றி வளைக்கிறாய்.*
*(எதிலும் முன்னேற விடாமல்) நீ - வஞ்சித்தவர்களை*
*மறந்து துரோகி என்கிறாய்.*
*நீ - குற்றவாளியாக இருந்து*
*கொண்டு*
*என்னைத் தண்டிக்கிறாய் ?'*

*ஊடறு பக் 123*

தந்தை வழி அதிகார சமூகத்தில் கருத்தியல், பொருளாதார, பால்வழிச் சுரண்டலுக்குள்ளாகி வன்மப்படுத்தலுக்குள்ளாகும் பெண்சார் இருப்பை விபரணப்பாங்கில் வெளிப்படுத்தும் இக்கவிதை ஒழுக்கத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் ஆணதிகாரத்தைத் தகர்ப்பதற்குரிய உரிமைக்குரலாய் எழுவதுடன் பெண்ணுக்குரிய சம உரிமையையும் கோரி நிற்கிறது. 'பெண்ணியம் என்பது பாலியல் சமத்துவம்' என்று கூறப்பட்டாலும் நடைமுறையில் பெண்ணானவள் ஆணுக்கு நிகரானவளாகக் கருதப்படுவது இல்லை. எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும் அவள் ஆணால் ஒடுக்கப்படுகிறாள் என்பதை தி.செல்வமனோகரியின் 'பெண்ணியம்' என்னும் கவிதை இறைதொன்மங்களுக்கூடாகத் தன்னை எடுத்துரைக்கிறது.

*காலகாலமாய் ...*
*அழுக்குகள் கலந்தாலும்*
*வானறியும் /*
*நதிகள் மாசற்றதென்பதை*
*நதிக்கோ ...*
*கடலிடம் தானே*
*உறவு விதிக்கப்பட்டிருக்கிறது!...*
*கடலில் விழுந்த மீண்டும்*

*நதியென்று பெயர் கொள்வதில்லை*
*இத்தரையின் எல்லைவரை*
*விரட்டிச் சென்று*
*கலக்கச் சொன்னார்கள்*
*புதைத்து நின்றார்கள்.*
*இமயத்தில் ஜனித்தாலென்ன*
*சிவன் தலையில்*
*தரி(வசி)த்தாலென்ன /*
*கங்கை வானம் தொடுவதில்லை !*
*தொடர முடிவதில்லை*
*இன்றுவரை*
*கங்கையின் வெள்ளம்*
*பூமிக்கும் கடலிற்கும் தானே'*

——————— *கவிதை 1995 மாசி - பங்குனி*

பெண்ணடக்குமுறையைப் படிமங்களுக்கூடாகவும் குறியீட்டுத் தொன்மங்களுக்கூடாகவும் வெளிப்படுத்தும் இக்கவிதை, ஆண்களின் வாழ்வியல் தேவைக்குப் பெண் பயன்படுபொருளாகத் தள்ளப்பட்டத்தையும் வன்மையாகக் கண்டிக்கிறது. ஆணினால் பெண் வன்முறைக்குள்ளாக்கப்படுவதைப் போல பெண்ணினால் பெண் வன்முறைக்குள்ளாக்கப்படுவதும் உண்டு. சமூகக் கட்டுப்பாட்டுடன் வாழும் குடும்பத்தில் பாரம்பரிய மரபுவழிக் கருத்துருவாக்கச் சிந்தனையின் அடிப்படையில் பெண்ணால் பெண் அடக்கப்படுவதுடன் வன்முறைக்குள்ளாக்கப்படுவதும் உண்டு. இதனை நாமகளின் 'தொலைந்து போன முகம்' என்னும் கவிதை உணர்வுபூர்வமாகச் சித்திரிக்கிறது.

*'நான் தனிமைப்படுத்தப்பட்டவள்*
*வீதிகளில்*
*வகுப்பறைகளில்*
*வீட்டிலும் கூட*
*ஆரம்பநாட்களில் இது*
*அலட்சியமாயும்*
*பின்னால் சலிப்பூட்டுவதாயிருந்தது*
*இப்போதோ*
*இந்த தனிமை*
*பயமேற்படுத்துகிறது*
*வெறிச்சோடிய மூலைகள்*
*என்னுள்*
*நடுக்கமேற்படுத்துகின்றன.*
*விரும்பாத முகங்களுக்காகவும்*
*சிரித்தாகவேண்டும்...*
*ஆனாலும்...*
*இவற்றிடையேயான*
*எனது நிமிர்வு*
*எனது முகத்தின் மீட்பிற்காய்'*

——————— *கவிதை சித்திரை-வைகாசி.1995*

பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் விரும்பத்தகாத முறையில் உலகெங்கும் தொடர்ச்சியாய் நடந்த வண்ணமே உள்ளது. உடல் தொடர்பு, தேவையற்ற தொடுதல், பாலியல் சார் நகைச்சுவைகள், பாலியல் இயல்புடைய வாய்மொழி துன்புறுத்தல் என வேலைத்தளம், பாடசாலை, பிற இடங்களில் பெண் தொடர்ந்து பாதிக்கப்பட்டவளாகவே காணப்படுகின்றாள். பாலியல் தாக்குதல் என்பது பாதிக்கப்பட்டவரின் அனுமதியின்றி நிகழும் உடல் ரீதியான பாலியல் துன்புறுத்தலாகும். ஒரு நபரின் உடல் மற்றும் மன ஒருமைப்பாட்டை அச்சுறுத்துறுத்தும் வகையில் அமையும் துன்புறுத்தல் பாதிக்கப்பட்டவரை அவமானகரமானதாகவும், இழிவுபடுத்துவதாகவும் அமைகிறது. பாலுறவு நிமித்தம் பாலியல் அடிப்படையில் மீண்டும் மீண்டும் பெண் துன்புறுத்தப்படுவதை சரிநிகரில் வெளியான நிலாவின் இரு கவிதைகளில் ஒன்று எடுத்துரைக்கிறது.

*'நீ வராத அந்தப்பொழுதுகளில்*
*அவன் வந்தான்*
*பின்*
*மற்றொருவன்*
*அதன் பின் வேறோருவன்*
*அவர்கள் எனது*
*நண்பர்கள் என்றில்லை*
*எனது உறவுகள் என்றுமில்லை*
*இலிங்கம் தரித்தவன்கள் – அந்த*
*இலிங்கங்கள் எனை நோக்கி*
*நிமிரும் கணத்தில்*
*இறந்து போனேன் எனக்குள்ளே.'*

——————— *சரிநிகர், டிசம்பர் 24- டிசம்பர் 30 - 2000*

ஒரு சமுதாயத்தில் சமத்துவ அந்தஸ்தைப் பாதிக்கும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் ஒழிக்கப்படவேண்டும். ஒரு பெண்ணின் மனத்தினைப் புரிந்து கொள்ளாது அவருடன் பலவந்தமாகப் பாலுறவு கொள்ளுதல், மறுப்புத் தெரிவிக்கும்போது அவளுடைய சம்மதமின்றி அவரை நிர்பந்தித்து அவருடலை அனுபவித்தல் தவிர்க்கப்படவேண்டும்.

*'மிதந்தெழும் தொன்மத்தின் வன்மப் புணர்ச்சிக்குள்*
*சிதைந்தொழுகும் என்னை*
*பெண்னென்று சொல்லிக் கொள்கிறேன்...'*

*— நாம் பேசிக்கொண்டிருந்தபோது பெய்திராத மழை - பக்.87*

காலாதிகாலமாக கீழ்த்தரமான அல்லது அவமதிப்பான பாலியில் செயலொன்றைப் புரியுமாறு பலவந்தப்படுத்தப்படும் பெண்ணின் துயரத்தை மயூ மனோவின் 'சாணும் முழமும் அடியும்' என்னும் கவிதை உணர்த்தி நிற்கிறது. 'நினைவு வன்புணர்ச்சி' என்ற இக்கவிதை பெண்ணிடம் இதமாக நடக்கத் தெரியாத ஆண்விலங்குகள் பெண்ணின் உடலைக் குதறும்போது ஏற்படும் வலியைப் பாடுகிறது.

*'அகோரே நினைவுகளைப் பிரசவித்த*
*அசிங்கத் தழும்புகள் பல*
*என் வயிறெங்கும்*
*நான் மார்பு கிழித்தெறிந்த*
*அவற்றின் எச்சங்கள் பல*
*என் வலி எங்கும்'*

*– நாம் பேசிக்கொண்டிருந்தபோது பெய்திராத மழை - பக்.84*

ஆணினால் வன்முறைக்குள்ளாகும் பெண்ணின் உள்ளத்தை எவ்வித விகற்பமுமின்றி இக்கவிதை தத்துருபமாக எடுத்து ரைக்கிறது.

தமிழ்ச் சமூகப்பாரம்பரியத்தில் குடும்ப வெளிக்குள் பெண் ணானவள் ஆணுக்குள் கட்டுண்டு வாழத் தலைப்படும்போது அவள் எதிர்கொள்கின்ற நெருக்கடிகள் அவள் சுதந்தி ரத்தைக் கட்டிப்போடுகின்றன. சமூகத்தில் பண்பாட்டின் அடிப்படையில் நீதி உரைத்தல்களாலும் உபதேசங்களாலும் பெண்ணானவள் தளையிடப்படுகிறாள். எம்முன்னோர்கள் உரைத்த நீதிநுநூல்களும் காவியங்களும் பெண்ணானவள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றன. அதன்படி வாழ்பவளே பெண்ணென முத்திரைக்குத்தப்படு கிறாள். வன்முறைவழி வரையறுக்கப்பட்ட ஈழத்துப் பண் பாட்டுச் சூழலில், அதிகாரத்தை உடைத்துத் தளைகளை அறுக்க முனையும் கூர்மையான பெண்ணியக் குரலாய் மைத் திரேயின் 'பிரகடனம்' ஒலிக்கிறது.

*'புளித்து நாறும்*
*இதுக்குள்ள கிடந்து*
*புழுங்கிச் சாக*
*என்னால் ஏலாது.*
*இந்த நாலு சுவரையும்*
*கிடுகு*
*வேலியையும் தாண்டி*
*நான் வாழப் போறன்.*
*சுவர்களில்லாப் பரந்த வெளியில்*
*காற்றுடன் கைகோர்த்துச்*
*சுதந்திரமாய் உலாவி...*
*நான் வாழ வேண்டும்'.*

——————— *கல்லறைநெருஞ்சிகள். - பக்- 05*

1980-களின் பிற்பகுதியில் இலங்கைத் தமிழ்ப் பெண்க ளிடையே அவர்களது இருப்பு, நிலை குறித்து விழிப்புணர்வு ஏற்பட்ட காலப்பகுதியில் உள்வெளிச் சிதைவையும் அதன் உடைவையும் மிகநுட்பமாக இக்கவிதையில் மைத்ரேயி பதிவு செய்கிறார். கமலா வாசுகியின் கவிதைகளிலும் இதன் தொடர்ச்சியைக் காணலாம். பெண்ணைப் பீடித்திருக்கும் தளைகளை நீக்கி அதில் இருந்து மீண்டெழும் முயற்சியாக அவருடைய கவிதைகள் காணப்படுகின்றன.

*'அவிழ்க்க அவிழ்க்க*
*தயாராகும் புது மந்திரங்கள்*
*எவ்வளவு காலத்தைய கட்டு இது*
*கால நதியில் கரைத்து விடப்பட்டு*
*நிற மூர்த்தங்களில் ஊறி ஊறி*
*முதலில் கற்பனை வெளிகளை விட்டுத்*
*தரையில் கால் பதிப்போம்*
*எங்கள் பரம்பரை அலகுகளின் தொடங்கி'*

——————— *நிலம் பரவும் புற்கள் - பக்.10*

பெண்ணியக் கவித்துவத்துக்குள் இழையோடும் தீவிர பண்பாக தளைகளை உடைத்து வெளியேறல் காணப்படு கிறது. அடிமைப்பட்டுக் கிடந்த பெண்ணானவள், தடைக ளைத் தகர்த்து வீறுகொண்டு எழுந்து போராடித் தம்முரிமை களைப் பெறவேண்டும். ஆண்களின் கண்களில் இருந்து உலகத்தைப் பார்த்த பெண்களுக்கு அவர்கள் கற்ற கல்வி, அவர்கள் தங்களைத் தாங்கள் எவ்வாறு பார்க்கவேண்டும் என்பதை தெளிவுறுத்தி நிற்கும். சுல்பிகாவின் 'காணாமல் போகும் பெண்களும் மண்ணின் மாந்தர்களும்' என்னும் கவிதை இப்பின்னணியில் எழுதப்பட்ட கவிதையாகும்.

*'பெண்மையும் மென்மையும்*
*தாய்மையும் ஓர் புறம்*
*தீராத*
*ஊழிக்கடனும்*
*தேவையாயின் திரவியம் தேடலும்*
*மறுபுறம்*
*பெண்களை மறைக்கும் புதைகுழிகளாயின.*
*நாமிந்த உலகிற்கு*
*நரகத்துழலவா வந்து பிறந்துள்ளோம் ?*
*புதை குழிகளில்*
*சாகாத பிணங்களாய்*
*சதா வாழவா வந்தோம்*
*இல்லவே*
*யில்லை*
*புதை குழியிலிருந்து*
*புதிதாய்ப் பிறந்தோம்*
*புதுமைகள் செய்வோம்'*

——————— *விலங்கிடப்பட்ட மானுடம் - பக்-24*

இயற்கையாகவே ஆணைவிட அதிக ஆற்றல் உடையவ ளாகப் பெண் இருப்பதோடு அவள் சுயசிந்தனையும், விடுதலை உணர்வும் நிரம்பப் பெற்றவளாகவும் காணப்படு கின்றாள். ஈழத்தில் போரக்களத்தில் பெண் சாதித்த சாதனைகள் அதனை நினைவூட்டி நிற்கின்றன. தடைகளைத் தகர்த்து விடைகளைக் காணும் மகத்தான சக்தி பெண்ணுக் குண்டு.

சர்வதேச சட்டங்களில் மனித உரிமைகள் வலியுறுத்தப்பட்ட நிலையில் விசாரணை என்ற பெயரில் பெண்கள் கைதுசெய் யப்பட்டு இராணுவச் சிறைகளில் அடைக்கப்பட்டதையும் இராணுவ முகாங்களுக்குள் அழைத்துச் செல்லப்பட்ட பெண்கள் விசாரணை என்ற நிலையில் அச்சுறுத்தப்பட்ட தையும் பெண்களால் எழுதப்பட்ட கவிதைகள் எடுத்துரைக் கின்றன. கொடூரமான யுத்த சூழலில் நீதியைப் பெறுவ தற்கான வசதிவாய்ப்புக்கள் இன்மையாலும் பிரச்சினை களைக் கையாள்வதற்கான போதிய கட்டமைப்புகள் இல்லா மையாலும் பெண்கள் அதிகளவிலான துன்பங்களுக்கு உள் ளானார்கள். இலங்கைப் பாதுகாப்பு படையினரால் கொல்லப் படும் அப்பாவிப் பொதுமக்களின் உடலைப் பெறவேண்டு மானால் அவரைப் புலி எனப் பெற்றோர் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு கொட்டியா என்று முத்திரை குத்தப் பட்டால் மாத்திரமே கொல்லப்பட்டவரின் சடலத்தை அரச படையினர் ஒப்படைப்பர். இதனை விஜயலட்சுமி சேகரின் 'சும்மா கிடந்த மூங்கில்கள்' தொகுப்பில் உள்ளடங்கும் கவிதை ஒன்று பதிவுசெய்கிறது.

'விசாரணைகளில் அவளுக்கான
முதல்கேள்வி அதுதான்
'உண்ட புள்ள கொட்டியா'?
கொட்டியா எங்க'? ...மூக்கை
உடைத்து. கண்ணைப் பிடுங்கி
காதை வெட்டி
மனித
அடையாளங் மறையும்வரை முகம் சிதைத்து
தீர்ப்புக்கள்
ரகசியமாய் நிறைவேற்றப்பட்டது
பூரணதிருப்தி
தமிழச்சியின்
கொட்டியாவை
கொன்றுவிட்ட திருப்தியில்...'

——— சும்மா கிடந்த மூங்கில்கள்- பக் - 21

ஈழத்தில் மரபு என்னும் வேலிக்குள் கட்டுண்ட பெண்ணுக்குத் தமிழ் சமூக வாழ்வியல் பண்பாட்டுப்புலமானது, கணவனுக்கு அஞ்சி ஒடுங்கி, நடுங்கி, நாணி வாழும் தன்மையையும், எதிருரை பேசாது ஆணுக்கு அடிமையாகும் சிறுமதியையும் சிறுபிராயத்தில் இருந்தே கற்றுக் கொடுக்கிறது. இவ்வாழ்வியல் முறையானது அடியோடு தகர்க்கப்பட வேண்டும் என்பதை கார்த்திகாவின் 'உடைப்பு' என்னும் கவிதையிலும் காணலாம்.

'என்னை விடுங்கள்
இந்தக்கட்டுக்குள்
அடங்கியிருக்க
இருக்க என்னால் முடியாது
நான் சுதந்திரன்
என்
இறக்கைகளை விரித்துக்
காற்றில் அலைய வேண்டும்
யாழ்ப்பாண விட்டத்துள் சுருங்கி
பழைமையில் மூழ்கி
மரபிலே திளைக்கும் சராசரியல்ல நான்
வெறும் உடலும்
அல்ல நான்
என்னை விடுங்கள்
ஏதாவது தத்துவக்
காட்டிலே
காட்டிலே
கதியென வீழவும் முடிவதில்லை
என்னால்...
இந்தப் பூகோளப்பரப்பில்
அகமும் புறமும்
அலசி வர
தயவு செய்து என்னை விடுங்கள்
எனக்குப்
பூரண விடுதலை வேண்டும்'

——— திசை 25.03.1989

'பெண்கள் அடிமை நிலையில் இருப்பதற்குக் காரணம் அவர்களது அடிமைப்பட்ட மனநிலையே' என ஈ.வே.ரா. பெரியார் கூறுவார். இதன் காரணமாகவே பெண்கள் தம் விடுதலை குறித்துச் சிந்திப்பதில்லை. எனவே பெண்கள் இந்நிலையிலிருந்து விடுபட்டு தம் உரிமைகள் குறித்து சிந்திக்க வேண்டும். ஆண்கள் தம் ஆதிக்க மனோபாவத்தில் இருந்து விடுபடுவதுடன் பெண்ணைத் தமக்கு நிகராக மதித்து அவர்களைச் சமவுரிமையோடு நடத்த முற்பட வேண்டும். இச்செயற்பாடுகளைச் சமூகத்தில் முன்னெடுப்பதனூடாகவே பெண்ணுக்கெதிரான வன்முறை தடுக்கப்படும்.



ramesh.s@thaiveedu.com





# புறநிலையும் அகநிலையும்

**ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட**
**தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்**

சமூக விஞ்ஞானத்தின் மெய்யியலில் (Philosophy of Science) விவாதத்திற்குரிய எண்ணக் கருக்களாக விளங்கும் புறநிலை (Objectivity) அகநிலை (Subjectivity) என்பன குறித்து ஜயதேவ உயன்கொட அவர்கள் Social Research: Philosophical and Methodological Foundations என்னும் நூலின் 19-ஆவது அத்தியாயத்தில் (பக்: 376–405) விரிவாக விளக்கிக் கூறியுள்ளார். அவரது கருத்துகளைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

## தொடக்க நிலைக் குறிப்புகள்:

புறநிலையான கூற்றுகள் (Objective Statements) என்பதைச் சாதாரணமாக எவ்வாறு அர்த்தப்படுத்துகிறோம்? பக்கச்சார்பற்றவை (Impartial), முற்சாய்வுகள் இல்லாதவை, சான்றுகளின் படியானவை (Backed by Evidence) ஆகிய சொற்றொடர்களைப் பயன்படுத்தி இவ்வினாவிற்கு நாம் விடை கூறுவதுண்டு. சாதாரண மக்களைவிட சட்டவாளர்களும் நீதிபதிகளும் 'புறநிலையான கூற்றுகள்' என்பது பற்றிக் கூடியளவு அக்கறை கொண்டவர்களாக இருப்பதைக் காண்கிறோம். நீதிமன்ற வழக்குகளில் நீதியான தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டுமானால் 'பக்கச்சார்பின்மை' என்பது முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையாக இருத்தல் வேண்டும். ஆகையால், நீதிமன்றத்தின் தீர்ப்புகள், சான்றுகளின் அடிப்படையில் அமைதல் வேண்டும். அத்தீர்ப்புகள் ஜூரிகளுடையதும் நீதிபதிகளுடையதும் தனிப்பட்ட அபிப்பிராயங்களுக்கு ஏற்ப அமைதல் ஆகாது. நீதித் தீர்ப்புகள் என்ற விடயத்தில் முடிவுகள் தற்சார்பு அற்றனவாக (Impersonal) இருத்தல் வேண்டும் என்பதையே புறநிலைத்தன்மை என்ற எண்ணக்கரு குறித்து நிற்கிறது. மேலும் புறநிலையான கூற்றுகளை நீதிமன்றின் முன் எழுந்தமானமாகக் கூறக்கூடாது. அக்கூற்றுகளைக் கூறும்போது வார்த்தைகளை அளந்து பேச வேண்டும், உணர்ச்சி வசப்பட்டுப் பேசக்கூடாது. பக்கச் சார்பற்றதாகவும் தப்பிதமான முற்சாய்வுகளை வெளிப்படுத்துவனவாகவும் உணர்ச்சியை வெளிப்படுத்துவனவாகவும் கூற்றுகள் இருத்தலாகாது. பேசும் தொனி உணர்ச்சியை வெளிப்படுத்துவதாக இருத்தலாகாது. மிகைப்படுத்தல்கள் இருத்தலாகாது.

அகநிலைக் கூற்றுகள் அவரவரது தனிப்பட்ட கருத்துகளைக் கூறுவனவாகவே கொள்ளப்படுகின்றன. அக்கூற்றுகளுக்குச் சான்றுகள் ஆதாரமாக இருப்பதில்லை. முற்சாய்வு, பக்கச்சார்பு, நடுநிலைதவறிப் பேசுதல் ஆகிய பண்புகள் அகநிலைக்கூற்றுகள் மூலம் வெளிப்படுவதை நாம் காண்கிறோம். அகநிலைக் கூற்றுகள் எதிர்மறைப் பண்புகள் (Negative Qualities) கொண்டவை என்பதையும் அனுபவம் எமக்கு உணர்த்துகிறது.

சமூக விஞ்ஞானத்திலும் புறநிலை, அகநிலை என்பன முக்கிய மானவையாகக் கொள்ளப்படுகின்றன. ஆய்வாளர் என்ன சொல்கிறார், எப்படிச் சொல்கிறார் என்பன புறநிலையான அளவுகோல்களுக்குப் பொருந்துவனவா என்பது முக்கியமானது. அவர் கூறும் முடிவுகளும், அவதானிப்புகளும் புறநிலையானவையாக அமையவேண்டுமானால் அவை சான்றுகளின் ஆதாரத்தில் அமைதல் வேண்டும். அறிவார்ந்த தன்மை (Rationality) உடையனவாகவும் தர்க்க முறையில் எடுத்துக் கூறப்படுவனவாகவும் ஆய்வாளரின் கூற்றுகள் இருத்தல் வேண்டும். மிகைப்படுத்தலும், அலங்கார மொழி நடையும் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

விஞ்ஞானக் கூற்றுகளின் உள்ளார்ந்த பண்புகளாகப் பின் வரும் கூறுகள் அமைகின்றன.

- நேர்வுகள், தரவுகள் (Facts).
- சான்றுகள்.
- அறிவார்ந்ததன்மை (Rationality).
- தர்க்க முரண்பாடின்மை (Logical Consistency).

மேற்கூறிய புறிலைத் தன்மை கொண்டவையாக விஞ்ஞானக் கூற்றுகள் இருப்பதனால் அவை சுவாரசியம் அற்றவையாகவும், அலுப்பைத் தருவனவாகவும் அமைந்து விடுவதுமுண்டு. குறிப்பாக துறைசார் அறிவும், பயிற்சியும் இல்லாத பொதுவாசகர் (Non - Specialist Reader) விஞ்ஞானக் கருத்துகளை உள்ளடக்கிய அறிக்கையை வாசிப்பதில் அக்கறை கொள்வதில்லை.

ஆயினும், சமூக விஞ்ஞான ஆய்வுகளில் அறிவின் வலிதுடைமை (Validity of Knowledge) எல்லாச் சந்தர்ப்பங்களிலும் புறநிலை (Objectivity) அடிப்படையில் தான் அமைகிறது என்று கூறுவதற்கில்லை. சமூக விஞ்ஞானங்களில் புறநிலை, அகநிலை என்ற இரண்டும் முக்கியமானவை. இக்காரணத்தால் சமூக விஞ்ஞான மெய்யியல் அறிவின் இயல்பு (Nature of Knowledge), அறிவைப் பெறும் வழி முறைகள்

(Paths to Knowledge) என்ற இரண்டு விடயங்களிலும் புறநிலை (Objectivity) என்பதை எல்லாச் சந்தர்ப்பத்திலும் முதன்மைப்படுத்துவதில்லை. சமூக விஞ்ஞான ஆய்வில் அகநிலைக்கும் (Subjectivity) சமமான முக்கியத்துவம் உள்ளது. அகநிலை முற்சாய்வுடையது, அது நம்பத்தகுந்த அறிவைத் தருவதில்லை என்று சமூக விஞ்ஞானிகள் அதனைப் புறந்தள்ளுவதில்லை. அறிவாராய்ச்சியியலில் (Epistemology) ஒன்றோடொன்று போட்டியிடும் இரு 'நோக்குமுறைகள்' உள்ளன. அவையாவன:

- புறநிலை நோக்கு முறைகள் (Objective Approaches)
- அகநிலை நோக்குமுறைகள் (Subjective Approaches)

சமூக விஞ்ஞானிகளிடையே புறநிலை நோக்குமுறையின் ஆதரவாளர்கள் அகநிலை நோக்குமுறையின் ஆதரவாளர் என்ற இருதுருவ அணிச்சேர்க்கை (Polarisation) காணப்படுகிறது. இவ்வாறான இருதுருவ அணி சேர்க்கை இயற்கை விஞ்ஞானிகளிடையே காணப்படுவதில்லை. சமூக விஞ்ஞானத் துறையினரிடம் காணப்படும் இப்பிளவு, அத்துறையின் வளர்ச்சிக்கு மிகவும் தீங்கானது என்பதைச் சில மெய்யியலாளர்களும் சமூகக் கோட்பாட்டாளர்களும் (Social Theorist) எடுத்துக் கூறியுள்ளனர். புறநிலை எதிர் அகநிலை விவாதம் சமூக விஞ்ஞானத் துறையைப் பாதித்த அளவிற்கு இயற்கை விஞ்ஞானத் துறையைப் பாதிக்கவில்லை. இக்கட்டுரையில் நாம் விஞ்ஞான மெய்யியல், சமூக விஞ்ஞான மெய்யியல், சமூகக் கோட்பாடு என்ற மூன்று துறைகளிலும் புறநிலை எதிர் அகநிலை என்ற முரண்பாடும், அவை பற்றிய கருத்து வேறுபாடுகளும் விவாதிக்கப்பட்டமை பற்றிப் பரிசீலிக்கவுள்ளோம்.

## புறநிலை – அகநிலை: பொருள் விளக்கம்:

புறநிலை, அகநிலை என்னும் இரு எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான வரைவிலக்கணம் இல்லாததால் இரண்டையும் வேறுபடுத்திப் புரிந்து கொள்வதில் நீண்ட காலமாக குழப்பநிலை இருந்து வந்தது. இவை குறித்த நவீனகால வரைவிலக்கணம் ரேமண்ட் வில்லியம்ஸ் (Raymond Williams) எழுதிய 'Keywords' (1983: P-310) என்ற நூலில் தரப்பட்டுள்ளது. 1983-இல் எழுதப்பட்ட அந்நூலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணம் 19-ஆம் நூற்றாண்டில் உருவாக்கம் பெற்றது. இலக்கணம், மொழியியல் ஓவியம், அழகியல், சட்டம் மெய்யியல் ஆகிய துறைகளில் இவ்விரு சொற்களும் காலத்திற்குக் காலம் வெவ்வேறு பொருளில் உபயோகிக்கப்பட்டு வந்தன. அன்றாடப் பேச்சு வழக்கிலும் இவை வெவ்வேறு பொருளில் உபயோகிக்கப்பட்டன. இக்காரணங்களால் இவை பற்றிய பொதுவான வரைவிலக்கணம் ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கு நீண்ட காலம் பிடித்தது. இக்கட்டுரையில் நாம் புறநிலை, அகநிலை என்ற சொற்களை அவற்றின் மெய்யியல் அர்த்தத்திலேயே உபயோகிக்கின்றோம். குறிப்பாக இச்சொற்களின் அறிவாராய்ச்சியியல் (Epistemology) அர்த்தமே எமது கவனிப்புக்கு உரியது. ஐரோப்பிய சிந்தனை வரலாற்றில் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் புறநிலை அகநிலை என்பனவற்றை வேறுபடுத்திப் புரிந்து கொள்வதற்கு 1- புறநிலை நிச்சயத்தன்மை (Objective Certainty), 2- அகநிலை நிச்சயத்தன்மை (Subjective Certainty) என்ற இரு சொற்தொடர்கள் உபயோகிக்கப்பட்டன. ஒரு கூற்று புறநிலை நிச்சயத்தன்மை உடையது என்று கூறும்போது அக்கூற்று உண்மையானது அல்லது உறுதியானது என்பது அக்கூற்றிலேயே உள்ளடங்கியிருக்கும். அதாவது புறநிலை நிச்சயத் தன்மை ஒரு கூற்றின் உள்ளார்ந்த பண்பாக (Inherent Quality) இருக்கும். ஆனால், ஒரு கூற்றை அகநிலை நிச்சயத்தன்மையுடையது என்று கூறும்போது, அதன் உண்மைத் தன்மை அக்கூற்றின் உள்ளார்ந்த கூறாக இருப்பதில்லை. அக்கூற்றுக்கு வெளியே தான் அதன் உண்மைத் தன்மை ஆதாரம் கொண்டுள்ளது. அகநிலை நிச்சயத்தன்மை வெளியே இருந்து பெறப்படுகிறது. அதன் மீது சார்த்தப்படுகிறது. ஜயதேவ உயன்கொட அவர்கள் இவ்வேறுபாட்டை ஆங்கிலத்தில் பின்வருமாறு விளக்குகிறார்.

'...objective propositions have certainty in themselves, whereas the certainty of subjective proposition lies outside-in us, when we are certain that they are truthful. Thus, certainty is an inherent quality of objective statements. In contrast, with regard to subjective statements, their certainty is not inherent, but attributed by us from outside.'

18-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய சிந்தனையில் புறநிலை, அகநிலை என்பனவற்றை வேறுபடுத்துவதற்கு நிச்சயத்தன்மை (Certainty) என்ற கூறு அளவுகோலாக இருந்ததைக் காண்கிறோம். 19-ஆம் நூற்றாண்டில் ஜேர்மன் மொழியில் 'புறநிலை' என்ற சொல் 'முற்றும் சரியாது' (Accurate) என்னும் அர்த்தத்தைப் பெறத் தொடங்கியது என ரேமண்ட் வில்லியம்ஸ் குறிப்பிடுகிறார். ஒருவர் புறநிலையாக ஒரு விடயத்தை அணுகுகிறார் அல்லது புறநிலையாகச் சிந்திக்கிறார் என்றால் அவரது சிந்தனை முற்றும் சரியானது, செம்மையானது, குறிதவறாதது என்ற பொருள் பெறப்படுகிறது. ஆகவே செம்மையான, திட்பநுட்பமான சிந்தனைக்கு 'புறநிலை இன்றியமையாத கூறாகக் கருதப்பட்டது' (The idea of being objective had by then come to be viewed as Indispensable to accurate thinking).




ஜேர்மனியின் மெய்யியல் மரபில் புறநிலை என்பது உண்மையின் அடிப்படையிலானது. நீதியானது, நடுநிலை உடையது, நம்பகத் தன்மையுடையது ஆகிய அர்த்தங்களைப் பெறலாயிற்று. புறநிலையை அகநிலையுடன் வேறுபடுத்தியும் நோக்கும் சிந்தனை உருவானது. அகநிலையென்றால் பக்கச் சார்பானது, ஒருவர் மனதில் தோன்றும் அபிப்பிராயங்களாக அமைவது என்று பொருள் கொள்ளப்பட்டது. அகநிலைக் கூற்றுகள் தனிப்பட்ட உணர்ச்சிகளை வெளியிடுவன, ஆதலால் அவை நம்ப

கத்தன்மை உடையன அல்ல எனவும் ஜேர்மனியின் மெய்யியல் மரபில் கருதப்பட்டது. அகநிலை பற்றிய இக்கருத்து நேர்க்காட்சி விஞ்ஞானத்தால் வலுப்பெற்றது. இயற்கை விஞ்ஞானங்களிலும், சமூக அரசியல் நிர்வாக விடயங்களிலும் புறநிலை சார் முடிவுகளே வற்புறுத்தப்பட்டன. புறநிலைச் சான்றுகள் பக்கச்சார்பற்று (Impartial) நடுநிலையான (Neutral) முடிவுகள் எடுக்கப்படுவதற்கு ஆதாரமாக அமைவன எனக் கருதப்பட்டது.

மறுபுறத்தில் மெய்யியலாளர்களிடையே நேர்க்காட்சி வாதத்திற்கு எதிர்ப்பான கருத்துகள் வளர்ச்சியுற்றன. இதனால் புறநிலை, அகநிலை ஆகிய இரு எண்ணக் கருக்களும் முன்னர் இல்லாத அளவுக்கு முக்கியம் பெற்றன. கருத்து முதல் வாதிகள் (Idealists) அல்லது மனிதாயவாத (Humanistic) சார்புடையவர்கள் சமூக உலகம் (Social World) பற்றிய விடயங்களில் புறநிலைக்கு முதன்மையளித்து, அகநிலைப் பரிமாணத்தைக் கவனிக்கத் தவறுவதைக் கண்டனம் செய்தனர். ஜேர்மனியின் மெய்யியலில் 19-ஆம் நூற்றாண்டில் அகநிலையும் (Subjectivity) அகநிலைவாதமும் (Subjectivism) முக்கியம் பெற்றன. கருத்துமுதல்வாத மெய்யியலாளர்கள் அகநிலையையும் அகநிலை வாதத்தையும் புறநிலைக்கும், புறநிலைவாதத்திற்கும் எதிரானதாக முன்னிறுத்தினர். புறநிலையை (Objectivity) அழுத்துவதன் மூலம் வெளியே உள்ள பொருண்மிய உலகமே (External, Material World) கவனத்தைப் பெறுகின்றது எனவும், மனிதரின் உள்ளக, தனிப்பட்ட அக உலகம் (Inner, Personal and Subjective World) புறந்தள்ளப்படுகிறது எனவும் குற்றம் சாட்டப்பட்டது. 19-ஆம் நூற்றாண்டில் எழுந்த விமர்சனத்தின் தொடர்ச்சியாக 20-ஆம் நூற்றாண்டிலும் இடம்பெற்ற விவாதங்களின் பயனாக புறநிலை / அகநிலை என்பனவற்றின் அர்த்தம் விரிவடைந்தது. அறிவாராய்ச்சியியலிலும் ஆராய்ச்சி முறையியலிலும் இவ்விவாதத்தின் தாக்கங்கள் வெளிப்பட்டன.

மனிதரின் அகத்திற்கும் அவர்களின் உணர்வு நிலைக்கும் (Consciousness) வெளியே புறவுலகம் இருப்புக் கொண்டுள்ளது எனக் கருதும் மெய்யியல் கொள்கை புறநிலை உள்ளதன் இயல் (Objectivist Ontology) எனப்படும். புறநிலை உள்ளதன் இயலுக்கு மாறாகப் புறநிலை உலகத்தின் (Objective World) இருப்பை மறுக்கும் கொள்கை அகநிலை உள்ளதன் இயல் (Subjectivist Ontology) என அழைக்கப்படும். இவையிரண்டும் நாம் எவ்வாறு உலகத்தைப் பார்க்கிறோம் (The Way of Seeing the World) என்பதில் வேறுபட்ட அனுமானங்களைக் கொண்டுள்ளன. உலகத்தை எவ்வாறு பார்க்கிறோம் என்பதைப் போன்றே, உலகம் பற்றிய அறிவைப் பெறும் மூலங்கள் எவை? வலிதுடைமையுடைய அறிவை நிச்சயிப்பது எப்படி? என்ற வினாக்களோடு தொடர்புடைய அறிவாராய்ச்சியியல் (Epistemology) என்ற மெய்யியல் பிரிவும் புறநிலை அறிவாராய்ச்சியியல் (Objectivist Epistemology), அகநிலை அறிவாராய்ச்சியியல் (Subjectivist Epistemology) என இரு பிரிவுகளாகப் பிளவுபட்டுள்ளது. புறநிலை, அகநிலை என்ற அடிப்படையில் அமையும் முரண்பட்ட இருமைநிலை (Antagonistic Dualism) 19-ஆம் 20-ஆம் நூற்றாண்டுகளில் இவ்விடயம் குறித்த ஆழமான மெய்யியல் விவாதங்களுக்குக் காரணமாக அமைந்தது.



shanmugalingam@thaiveedu.com





# வரலாற்றில் 'ஊடல்'

## திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும் 2

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**சென்ற இதழில்...**

தலைவன் தலைவியரிடையே ஏற்படும் பிணக்கு, பொய்ச்சினம், பகைத்தல், வெறுத்தல் முதலான செயல்களைக் குறிக்கும் ஒற்றைப் பதமான 'ஊடல், காலம், இடம், இனம், மொழி, பண்பாடு முதலாய எல்லைகளைக் கடந்து, எவருக்கும் எக்காலத்திற்கும் ஏற்புடைத்தாக, இனிய வாழ்விற்குப் பொருந்தும் அன்பின் நுணுக்கங்களைப் படிப்பார் மனத்தில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அனைத்து இலக்கணங்களையும் விஞ்சி நிற்கிறது திருக்குறள் என்பது கருதுகோளாகும். திருவள்ளுவர், உலக இன்பங்களுக்கெல்லாம் அடிப்படையான அன்பை வலியுறுத்தும் முறையில் காதலின் நுணுக்கங்களை ஆராய்ந்திருக்கிறார். நெஞ்சொடு புலத்தல், புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை எனும் நான்கு அதிகாரங்களிலும் ஊடல் பற்றிக் குறிப்பிடும் கருத்துக்கள் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் உரியனவாக அனைத்து இலக்கண இலக்கியங்களை விஞ்சி நிற்கிறது என்பதே இந்த ஆய்வின் முடிவாகும்.

தொல்காப்பியத்தில் களவியல், சுவைமிக்க காதல், மொட்டாகி மலராகி காயாகி கனியாகும் இனிய அனுபவத்தை அழகுறக் கூறும் பகுதியாகும். காதல் திருமணமாக அரங்கேறுவதுடன் காதல் வாழ்வின் சுவைமிக்க ஒரு அங்கம் முடிந்துவிடுகிறது. அடுத்து வரும் கற்பியல் பகுதி திருமணத்துடன் தொடங்குகிறது. இப்பகுதி வாழ்வியலின் இன்னொரு பக்கத்தைக் கூறுகிறது.

தொல்காப்பியத்தில் ஊடல் மருதநிலத்திற்கு உரியதாகக் கூறப்படுகிறது. விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்டது மருதநிலம். ஓய்வு நேரத்தில் கலைகள் வளர்ந்தன. கூடவே பண்பாட்டுச் சீர்கேடும் வளர்ந்தது. 'ஊடல்' என்னும் ஒழுக்கம் கற்பியல் என்னும் அதிகாரத்தின் முக்கிய பேசு பொருளாக இடம்பெறுகிறது.

ஊடல் என்பது பொதுவாக இருவரிடையே, சிறப்பாக கணவன் மனைவியரிடையே அல்லது காதலன் காதலியரிடையே ஏற்படும் பொய்க் கோபம், பிணக்கு, கருத்து வேறுபாடு அல்லது மனத்தாங்கல் எனலாம். இது உளவியல் அடிப்படையில் தோன்றுகிறது. இதனை 'நடத்தை அறிவியல்' அடிப்படையில் பல கோணங்களில் பகுத்து ஆயலாம். நடத்தையியல் மேலை நாடுகளில் 19-ஆம் நூற்றாண்டில் உருவானது. தமிழில் இக் கலை தொல்காப்பியர் காலத்திலேயே வளர்ந்திருக்கிறது. இந்த ஊடலின் பகுதிகளை, தொல்காப்பியருக்கு ஆயிரம் ஆண்டுகளின் பின் வாழ்ந்த திருவள்ளுவர் மிக அழகாக எடுத்துக்காட்டுடன் விளக்கியிருக்கிறார்.

**தொடர்கிறது...**

***'துனியும் புலவியும் இல்லாயிற் காமம்***
***கனியும் கருக்காயும் அற்று'***

*திருக்குறள் 1306.*

துனி என்பது ஊடலின் முதிர்ந்தநிலை, புலவி என்பது ஊடலின் இளைய நிலை அதாவது மனவேறுபாடு. பொய்க் கோபம். இவ்விரண்டையும், ஒன்றே முக்கால் அடி கொண்ட குறளில், நன்கு பழுத்த பழத்திற்கும் இளம் காய்க்கும் ஒப்புமையாகக் காட்டுகிறார் வள்ளுவர். தொல்காப்பியர் கூறும் இலக்கணத்தை இலக்கியமாகக் காட்டுகிறார் வள்ளுவர். ஊடல் பற்றிய விளக்கத்தை மெய்ப்பாட்டியலில் கூறிய தொல்காப்பியர், ஊடல் எழும் தருணங்கள் சிலவற்றைக் அகத்திணையியல் 44, கற்பியல் 5-ஆம் நூற்பாக்களில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். பெரும்பாலும் தலைவன் பரத்தையிடம் செல்லும் தருணங்களிலேயே ஊடல் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

***'பரத்தையின் அகற்சியின் பிரிந்தோட் குறுகி***
***இரத்தலும் தெளிதலும் என இருவகையோடு ...'***

*அகத்திணையியல் நூ. 44.*

தொல்காப்பியர், 'தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையோர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்' (கற்பியல் 52), என கற்பியல் அதிகாரத்தில் பன்னிரு வாயில்களை (பாத்திரங்களை) உலாவ விட்டிருக்கிறார். இவர்களில் பெரும்பாலானவர்கள் தலைவன், தலைவியரின் ஊடலைத் தணிக்கும் வாயில்களாகக் காணப்படுகிறார்கள். தொல்காப்பியர் வகுத்த 'ஊடல்' என்னும் வாழ்வியல் பகுதிக்கு, உரையாசிரியர்கள் சங்க இலக்கியத்தையே எடுத்துக்காட்டுகளாகக் காட்டியிருக்கிறார்கள்.

## இயல்–2:

சங்க இலக்கியத்தில் ஊடல் சங்க காலத்தில் (ஏறக்குறைய பொ.ஆ.மு. 5 முதல் 1 வரை) எழுந்ததாகக் கொள்ளப்படும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கியங்களில் 'ஊடல்' பெற்றிருக்கும் இடத்தை பார்க்கலாம். தொல்காப்பியர், தன் காலத்தில் பாடல் பாடும் புலவனுக்கு, பாடல் அமையவேண்டிய விதிமுறைகள், எல்லைகள் முதலிய வற்றைக் கூறும் வாழ்வியல் இலக்கணமே தொல்காப்பியம் பொருளதிகாரமாகும் தொல்காப்பியம், ஒரு ஆணும் பெண்ணும் சந்தித்துக் காதல் கொள்ளும் காலத்தின் பல்வேறு படிநிலைகளையும், காதலின் பின்னர் அவர்கள் திருமணத்தின் மூலம் அல்லது உடன்போக்கின் மூலம் இணைந்து வாழும் இல்லற வாழ்க்கையையும் அகம் என்றும் அகத்தினுள் அடங்காத அனைத்தையும் புறம் என்றும் இலக்கணம் வகுத்திருக்கிறார். சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்கள் யாவுமே தனிப் பாடல்கள், தன்னுணர்ச்சிப் பாடல்கள் என்றும் கூறலாம். அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட ஒரு பின்னணியில் பாடப்பட்ட சிறு சிறு கூற்றுக்கள், இக் காலத்தில் சிறப்பாக வரவேற்கப்படுகின்ற சிறுகதைகளை ஒத்தவை.

### ஊடல், பரத்தை காரணமாக:

காதலித்த பெண்ணை மணந்து அவளோடு இன்பமாக வாழும் தலைமகன் பொதுப் பெண்களில் நாட்டம் கொண்டு அவர்களிடம் இன்பம் அனுபவித்து வருவது அக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு வழக்காக இருந்திருக்கிறது. இது, பரத்தையிற் பிரிவு என்று அழைக்கப்பட்டது. சங்கப் பாடல்கள் கற்பனைப் பாடல்களாக இருந்த போதிலும் அவை அக்கால மக்கள் வாழ்க்கையை வெளிப்படுத்த ஓரளவுக்கு வழிவகுக்கின்றன என்றே கூறலாம். தலைவன், பொதுப் பெண்களின் ஆடல் பாடல்களில் ஈடுபட்டு அவர்களைக் கூடியிருப்பதை விரும்பி, தலைவியைப் பிரிகிறான். இப்பிரிவு தற்காலிகமானது. தலைமகளைப் பிரியும் இந்தப் பிரிவில் இரு உணர்வுகளைக் காணக்கூடியதாகவுள்ளது. தலைவன் தன் மனைவியிடம் கொண்ட அன்பு நிரந்தரமானது. பரத்தையிடம் கொண்ட கவர்ச்சி, நாட்டம், அன்பு தற்காலிகமானது. தலைவியிடம் கொண்ட நிரந்தர அன்பு பரத்தையிடம் ஏற்படும் இன்பம் மீதான தற்காலிக உணர்வால் மறைக்கப்படுகிறது அல்லது தற்காலிகமாக ஒதுக்கி வைக்கப்படுகிறது. அதாவது, ஒரே நேரத்தில் இரு உணர்ச்சிகள் ஒருங்கே பயணிப்பது இயற்கைக்கு மாறானது.

பரத்தையிற் பிரிவு பற்றிய மாறான கருத்துக்களும் உள. மாறான கருத்துப் பற்றிய விவாதத்திற்கு இது களம் அல்ல. அப் பிரிவினால் உண்டான பாதிப்புப் பற்றியதே இந்த ஆய்வு. பரத்தையிற் பிரிவு தொல்காப்பியரால் மட்டுமல்ல அவர் பின் வந்து சமூகத்திற்கு அறிவியல் விளக்கமும் வழி காட்டலும் செய்த திருவள்ளுவராலும் விரும்பப்படவில்லை என்பதே இதன் சமூக எதிர்பார்ப்பை நன்கு புலப்படுத்துவதாகவுள்ளது. பரத்தை காரணமாகத் தலைவனிடம் தலைவி கொள்ளும் ஊடல் பற்றிய பாடல்கள் அகத்திணை இலக்கியத்தில் இடம்பெறுவது புதிதல்ல. ஆனால், சுவைக்காக புறத்திணை இலக்கியத்தில் ஊடலை, புலவர் இணைத்திருப்பதுதான் சிறப்பு. எடுத்துக்காட்டாக, பத்துச் சேரமன்னரின் வீரம், வெற்றி, கொடை முதலாய தலைமைப் பண்புகளை எடுத்துக் கூறும் வரலாற்று இலக்கியமான பதிற்றுப்பத்தில் கூறப்படும் ஒரு ஊடல் காட்சியை இங்கு எடுத்து வருகிறேன். பதிற்றுப்பத்தில் பாணர், கூத்தர், விறலியர், கண்ணுளர், வயிரியர், பொருநர், துணங்கையர் என்று பல்வேறுபட்ட கலைஞர்களும் பாடப்படுகிறார்கள். பதிற்றுப்பத்தில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய ஆறாம் பாட்டின் ஒரு பகுதி. 'அலவன் ஆடிய வடு' என்னும் அழகிய தொடர் இடம்பெறும் பாடற் பகுதி. கடற்கரையோரம், காற்றின் வேகத்தால் அலைகள் உயர்ந்து மணல் துகள்களை வீசி எறியப்பட்டன. மணல் துகள்கள் பறந்து நண்டு (அலவன்) ஆடியதால் ஏற்பட்ட கோலங்களை (வடுக்களை) இருந்த இடம் தெரியாது மறைத்தன. இந்தப் பின்புலத்தில், கடற்கரை ஓரமாக நீண்டு உயர்ந்த பனங்காடு, அந்தப் பனங்காட்டில் கூரை வேய்ந்தது போன்று காட்சியளித்த பனை மரங்களின் கொண்டைகள், அக் கொண்டைகள் காற்றில் அசைந்து ஒன்றோடொன்று உராய்ந்தன. காட்சி விரிகின்றது. 'அலவன் ஆடிய வடுக்கள்'- நாட்டிய மகளிரின் ஆட்டத்தைக் கலை உணர்வுடன் விளக்குவதாக, கூத்து நிகழவிருப்பதற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்திருக்கிறது.

> ***"காதலித்த பெண்ணை மணந்து அவளோடு இன்பமாக வாழும் தலைமகன் பொதுப் பெண்களில் நாட்டம் கொண்டு அவர்களிடம் இன்பம் அனுபவித்து வருவது அக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு வழக்காக இருந்திருக்கிறது."***



பனங்காடு வட்டமாக அமைந்து வட்டக்களறி போன்று காணப் படுகிறது. பகலெல்லாம் போராடிக் களைத்த மன்னன், துணை வேந்தர்களுடனும் படைவீரர்களுடனும் வட்டமாக அமர்ந்து ஆடல் பாடல்களை அனுபவித்தபடி மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தான்.

இரவு நேரம், பாண்டு விளக்கின் ஒளி, முழவுடன் கூடிய இசை, அவ்விசைக்கு இசைவான துணங்கைக் கூத்து, மன்னனும் மற்றோரும் ஆட்டத்தோடு ஒன்றி அனுபவித்துக் கொண்டிருந் தனர். ஆட்டத்தின் ஒரு கட்டத்தில் தன் மனைவியுடன் அமர்ந் திருந்த அரசன், ஆடலரசியின் ஆட்டத்தை உச்சத்திற்குக் கொண்டுவர எண்ணி, முழவுடன் துணங்கை கூத்து ஆடுப வளுக்குத் 'தலைக்கை தந்து' தோளோடு தோள் அணைத்த படி, ஏறு போல் தன்னை மறந்து ஆடுகிறான். விறலியருடன் மன்னன் மெய் மறந்து ஆடும் கூத்தைக் கண்ணுற்ற மனைவி ஊடல் கொண்டாள்.

மெய்மறந்து துணங்கைக் கூத்து ஆடிக்கொண்டிருந்த மன் னன் மனைவி தன்மேல் கொண்ட ஊடலை உய்த்துணர்கிறான். உணர்ந்தவன், ஆடல் களம் நீங்கித் தன் மனைவியை அணு கினான். ஊடல் கொண்ட அவள் தளிர் மேனி கோபத்தால் நடுங்கியது. கோபத்துடன் அவன் மேல் எறிவதற்காக ஓங்கிய சிறிய செங்குவளை மலரைத் தரும்படி மன்னன் இரக்கிறான். காதல் வசப்பட்ட மன்னன் அவளை மகிழ்விக்க எண்ணினான். ஆனால், அவள் கொண்ட ஊடல் தீருவதாக இல்லை. அவள், ஊடல் தீர்ந்ததன் அடையாளமாகச் செங்குவளை மலரை அவனிடம் கொடுக்க முன்வரவில்லை. மாறாக, 'நீ யார் எனக்கு' என்று கேட்டு அவ்விடத்தை விட்டு நகர்கிறாள். அவ்வாறு மன்னனை விட்டு விலகிச் செல்பவளின் கையிலி ருக்கும் மலரைக் கோபத்துடன் விரைவாக் கைப்பற்றும் ஆற்றல் அற்றவன் ஆனாய் என்று நச்செள்ளையார் கேலி செய்வது போலப் பாடல் அமைந்திருக்கிறது.

போர்க்களத்தில் பெருவெற்றி ஈட்டிய வீரனே! உன் மனைவி யின் கை மலரை உன்னால் பெற்றுக் கொள்ளமுடியவிலயே என்னும் காக்கை பாடினியார் கூற்று, மன்னனது வீரத்தைப் புகழும் அதே சமயம் அவன் காதலின் சிறப்பை எடுத்துக் கூறுவதாகவும் அமைகிறது. மன்னனைக் கேலி செய்வது போலப் பாடல் அமைந்திருக்கிறது.

***'சுடரும் பாண்டில் திரு நாறு விளக்கத்து
முழா இமிழ் துணங்கைக்கு தழூஉ புணை ஆக
சிலைப்பு வல் ஏற்றின் தலைக்கை தந்து நீ
நளிந்தனை வருதல் உடன்றனள் ஆகி
உயவும் கோதை ஊரல் அம் தித்தி
ஈர் இதழ் மழை கண் பேர் இயல் அரிவை
ஒள் இதழ் அவிழ் அகம் கடுக்கும் சீறடி
பல் சில கிண்கிணி சிறு பரடு அலைப்ப
கொல் புனல் தளிரின் நடுங்குவனள் நின்று நின்
எறியர் ஓக்கிய சிறு செங்குவளை
ஈ என இரப்பவும் ஒல்லாள் நீ எமக்கு
யாரையோ என பெயர்வோள் கையதை
கதுமென உருத்த நோக்கமோடு அது நீ
பாஅல் வல்லாய் ஆயினை பாஅல்
யாங்கு வல்லுநையோ வாழ்க ...'***

*பதிற்றுப் பத்து, ஆறாம் பத்து, பாடல் 52.*

**"திருவள்ளுவர்,
அனைத்துத் துறைகளையும்
தானே அனுபவித்துத்தான் எழுதியுள்ளாரோ
என்று கூறுமளவுக்கு ஒவ்வொரு துறைகளும்
அத்தனை நுணுக்கமாக ஆராய்ந்து
எழுதப்பட்டுள்ளன."**

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை காக்கைபாடினியார் நச் செள்ளையார் பாடியது. ஊடல் அகத்திணை மரபில் மருதத் திணைக்கு உரியது. இங்கு, மன்னர் வீரம், வெற்றி, கொடை முதலாய, அகமல்லாத சிறப்புக்களைப் பாடப் பயன்படும் புறத்திணையில் பாடப்பட்ட பாடல் பதிற்றுப்பத்து. பாடலின், சுவைக்காகச் சேர்க்கப்பட்ட பகுதி இதுவாகும். பாடல் பாடும் புலவனின் சிறப்பினால் புறத்திணைப் பாடலினுள்ளும் அகம் பாடலாம் என்பதற்கு பதிற்றுப் பத்தின் ஆறாம் பத்துப் பாடலின் இப்பகுதி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## இயல் 3:

திருக்குறளில் ஊடல்: திருக்குறள், அரசியல், சமூகம், பொரு ளாதாரம், வானியல், முருத்துவம், உளவியல் முதலாய அனைத்துத் துறைகளினதும் ஆளம் நீளம் கண்டு, எவரது ஐயத்திற்கும் இடம் கொடாது எழுதப்பட்ட இலக்கியம் என்று சொன்னால் மிகையாகாது. திருவள்ளுவர், அனைத்துத் துறைகளையும் தானே அனுபவித்துத்தான் எழுதியுள்ளாரோ என்று கூறுமளவுக்கு ஒவ்வொரு துறைகளும் அத்தனை நுணுக்கமாக ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. செய்யுள் இயற் றுவதற்குத் தொல்காப்பியனாரால் பொருளதிகாரத்தில் வரை யறுத்துக் கூறப்பட்ட அனைத்து இலக்கணங்களையும் உள்வாங்கி, தனது காலம் வரையுள்ள மாற்றங்களுக்கும் வழிவிட்டு திருக்குறளை எழுதியிருப்பது வியப்பிற்குரியது. வாழ்க்கையின் நுணுக்கங்களை அனுபவித்து அறிந்தவர் போல வாழ்வியலின் சிறு சிறு மூலை முடுக்குகள் எல்லாம் நுழைந்து சொற் சுருக்கமும் பொருள் செறிவும் மிக்க வையான குறள் வெண்பாக்களை எக்காலத்திற்கும் எந்த வய தினருக்கும் ஏற்ற வகையில் உலகியல் நோக்கில் கூறியிருக் கிறார்.

காமத்துப்பாலில், புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை ஆகிய மூன்று அதிகாரங்களும் இனிமையான இல்லற வாழ்விற்கு இன்றியமையாதவையாக அமைத்திருக்கும் திறம் இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்கும் எம் மக்களுக்கும் ஏற்பு டையவையாக இருப்பது இதன் சிறப்பாகும். அடுத்த அத்தி யாயத்தில் திருக்குறளில் ஊடல் எடுத்துவரப்படும்.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com

# தமிழரின் பண்பாட்டு மரபில் திருக்குறள் செலுத்திவந்துள்ள செல்வாக்கு

– நா. சுப்பிரமணியன்



### தோற்றுவாய்:

'தமிழ் மறை' எனவும் 'உலகப் பொதுமறை' எனவும் கணிப்பைப் பெற்றுவந்துள்ள திருக்குறளானது தமிழ்ப் பண்பாட்டு மரபில் பெரும் செல்வாக்குச் செலுத்திவந்துள்ள ஒரு 'சிந்தனைக்களஞ்சியம்' ஆகும். இங்கே பண்டைத்தமிழ் மரபு என்ற சொல்லாட்சியானது திருக்குறள் அச்சேறத்தொடங்கிய காலகட்டமான 1812-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியைக் குறிப்பதாகும். மேற்படி காலகட்டம் வரையான திருக்குறளின் செல்வாக்குத் தொடர்பாக ஆய்வாளர்கள் பலர் ஏற்கெனவே கவனம் செலுத்தி அரிய தகவல்கள் பலவற்றைத் திரட்டித்தந்துள்ளனர். இவ்வகைச் சான்றாதாரங்களுள் முக்கியமான சிலவற்றை இன்றைய ஆய்வுலகின் கவனத்துக்கு இட்டு வரும் முயற்சியாகவே இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது. இவ்வகையில் இருவகை சான்றாதாரங்களே இங்கு நோக்கப்படவுள்ளன. ஒரு வகையின, தமிழிலக்கிய மரபில் திருக்குறள் செலுத்திவந்துள்ள செல்வாக்கு தொடர்பானவை. இது இலக்கியநிலை சார் செல்வாக்கு' என்ற தலைப்பில் நோக்கப்படுகின்றது. இன்னொருவகைச் சான்றாதாரமாக இங்கு நோக்கப்படவுள்ளது. 'திருக்குறளை ஒரு ஆட்சி முறைக்கான வழிகாட்டு நூலாகக் கொள்ளும் முறைமை' தொடர்பான ஒரு வரலாற்றுத் தகவல் ஆகும். இவற்றுள் 'இலக்கியநிலைசார் செல்வாக்கு' என்ற அம்சமே இங்கு முதற்கவனத்துக்கு வருகிறது.

### இலக்கியநிலைசார் செல்வாக்கு:

இதனை நோக்கும் முயற்சியில் முதலில் நமது கவனத்துக்கு இட்டுவரப்படவேண்டிய முக்கிய விடயம், இலக்கிய வரலாற்றில் திருக்குறள் வகிக்கும் இடம் - குறிப்பாக அது எழுந்திருக்கக் கூடிய காலகட்டம்- பற்றியதாகும்.

- **திருக்குறள் எழுந்திருக்கக்கூடிய காலகட்டம் தொடர்பாக...**

தமிழ் இலக்கியவரலாறு சார்ந்த பார்வையிலே தமிழின் தொல்லிலக்கியங்களாகக் கொள்ளப்படுபவை 'சங்க இலக்கியங்கள்' என்ற பொது அடையாளத்துக்குரியவையான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகிய பாடல் தொகுப்புகளாகும். இலக்கணநூல்களின் வரிசையில் தொன்மையானதாக் கொள்ளப்படுவது தொல்காப்பியம் ஆகும். மேற்படி சங்கப் பாடல்களுக்கும் தொல்காப்பியத்துக்கும் பிற்பட்ட ஒரு ஆக்கமாகவே திருக்குறள் கணிக்கப்பட்டுவருகிறது.

திருக்குறள் எழுந்தாக ஊகிக்கப்படக்கூடிய காலகட்டமாக தமிழிலக்கிய வரலாற்றில் 'சங்கம் மருவிய காலம்' காணப்படுகிறது. இக்காலம் 'அறநெறிக் காலம்' மற்றும் 'களப்பிரர் காலம்' ஆகிய பெயர்களால் அடையாளப்படுத்தப்படுகிறது. பொ.ஆ.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையான காலகட்டமே இவ்வாறு பலபெயர்களால் சுட்டப்படுகிறது.

மேல் சுட்டிய காலகட்டத்திலே திருக்குறள் தவிர நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவைநாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய பெயர்கள் தாங்கிய வேறுபத்து அறநூல்களும் எழுந்துள்ளன. இவை தவிர, தமிழின் முதற்பேரிலக்கியங்கள் என்ற கணிப்பைப் பெற்றவையான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியனவும் தமிழின் தொல்லிலக்கணமான தொல்காப்பியமும் மேற்படி 'சங்கம் மருவிய காலம்' என்ற காலப்பகுதிக்குரியனவாகவே கொள்ளப்படுகின்றன. இவற்றுள் தொல்காப்பியம் திருக்குறளுக்கு முன் எழுந்தது எனவும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன திருக்குறளுக்குச் சற்றுப் பிற்பட்டவை என்பதுமே தமிழ் ஆய்வுலகின் பொதுவான கருத்தாகும்.

(தொல்காப்பியத்தைச் சங்க இலக்கியங்களுக்கு முன் கொண்டு செல்லும் வகையிலான ஆய்வுப்பார்வைகளும். ஆய்வுலகில் நிலவிவருகின்றன. எவ்வாறாயினும் திருக்குறள் தொல்காப்பியத்துக்குப் பிற்பட்டதென்பதில் மாற்றுக் கருத்தில்லை. மேலும், திருக்குறளின் ஆசிரியராக அறியப்படும் திருவள்ளுவர் பிறந்த ஆண்டு பொ ஆ மு .31 என்பதான ஒரு தகவல் தமிழர் மத்தியில் நிலவி வருகின்றது என்பதையும் அறிவோம். அவ்வாறான கணிப்புக்கான தெளிவான சான்றாதாரங்கள் இற்றைவரை தமிழ் ஆய்வுலகில் முன் வைக்கப்படவில்லை

என்பதால் அக்கணிப்பானது இங்கு கவனத்திற் கொள்ளப்பட வில்லை.)

மேலே நாம் நோக்கிய பொதுவான காலக்கணிப்பின் அடிப்ப டையிலேயே 'திருக்குறளின் இலக்கிய மரபுசார் செல்வாக்கு' என்ற அம்சம் இங்கு கவனத்துக்குட்படுத்தப்படுகிறது. இப் பொருண்மையானது பின்வரும் துணைத்தலைப்புகளில் இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

- சங்கப்பாடல்கள், தொல்காப்பியம் ஆகியவற்றைத் திருக் குறளுடன் தொடர்புறுத்தும் சான்றுகளும் அவை பற்றிய வரலாற்று நிலையிலான புரிதல்களும்.
- சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் குறட்பா வொன்று மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளமை.
- பிற்கால இலக்கியங்களின் உருவாக்கநிலைகளில் திருக் குறள் செலுத்திவந்துள்ள செல்வாக்கு - தொகுநிலை நோக்கு

### சங்கப்பாடல்கள், தொல்காப்பியம் ஆகியவற்றைத் திருக்குறளுடன் தொடர்புறுத்தும் சான்றுகளும் அவை பற்றிய வரலாற்று நிலையிலான புரிதல்களும்:

திருக்குறளானது சங்கப்பாடல்களுக்கும் தொல்காப்பியத் துக்கும் பிற்பட்டதென்பதான பொதுவான கருத்தை மேலே நோக்கியுள்ளோம். ஆயினும் சங்கப்பாடல் தொகுதிகளான புறநானூறு மற்றும் நற்றிணை ஆகியவற்றின் பாடல்களில் ஒவ்வொன்றும் (புறநானூறு: 34 மற்றும் நற்றிணை: 355) தொல்காப்பிய நூற்பாவொன்றும் தரும் செய்திகள் திருக்குற ளின் குறட்பாக்கள் மூன்றின் பொருண்மைகளுடன் ஒத்துள் ளன என்பது இங்கு நமது கவனத்துக்குரியதாகிறது. அவ்வா றான ஒப்புமை அம்சங்கள் பற்றியும் அவற்றை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளவேண்டும் என்பதுமே இங்கு நோக்கப்படவுள் ளன. புறநானூறு தொகுப்பின் 34-ஆம் பாடலில் இடம்பெற் றுள்ளவையான

***' நிலம்புடைபெயர்வ தாயினும் ஒருவன்***
***செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென***
***அறம்பா டிற்றே ...'***

*புறநானூறு: அடிகள்:5-7*

எனவரும் மூன்று அடிகள் திருக்குறளின் 'செய்ந்நன்றியறிதல்' என்ற அதிகாரத்தின 10ஆம் குறளின் பொருளைமேற்கோளாக எடுத்தாள்வது போல அமைந்துள்ளன: 'நிலம் கீழ்மேலாகப் பெயர்ந்தாலுங்கூட ஒருவர் செய்த நன்றியை மறந்தவருக்கு உய்தியில்லை என அறநூல் கூறுகிறது' என்பதே மேற்படி பாடலடிகளின் பொருளாகும்

திருக்குறளின் 'செய்ந்நன்றியறிதல்' : அதிகாரத்தின் 10ஆம் குறள்:

***'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை***
***செய்ந்நன்றி கொன்ற மகற்கு'***

*-திருக்குறள்: 11:10*

என்கிறது. இதுவும் மேற்படி புறநானூற்று அடிகளின் கருத் தைத்தான் - தருகிறது. 'நிலம் கீழ்மேலாகப் பெயர்ந்தாலுங் கூட' என்ற குறிப்பு மேற்படி குறளில் இல்லை. இது ஒன்றே முக்கிய வேறுபாடாகும்.

நற்றிணை 35-ஆம் பாடலடிகள் வருமாறு:

***'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பில்***
***நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்'***

பாடல்: 355. அடிகள் 6-7

இவ்வடிகள் தமிழர் மத்தியில் பண்டைக்காலம் முதல் நிலவி வந்துள்ள சுவையான உயர்பண்புகளிலொன்றைப்பற்றிப் பேசுவனவாகும்.'சிறந்த நாகரிகராகத் திகழ்வோர் தமது நண் பர்களாயுள்ளோர் கண்முன்னே நஞ்சையே கொடுத்தாலுங் கூட அந்நஞ்சை (மறுக்காது) ஏற்றுண்பர்' என்பதே நற்றிணை யின் இவ்வடிகள்தரும் செய்தியாகும். இப்பண்பையே பின் வரும் குறட்பாவும் எடுத்துரைத்துளது.

***'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க***
***நாகரிகம் வேண்டு பவர்'***

இக்குறளானதுமேலே நோக்கிய நற்றிணைப்பாடலடிகள் தரும் பொருளை முழுமையாகவே தந்துநிற்கின்றமை வெளிப்படை தொல்காப்பியச் சான்றாக இங்கு கவனத்துக்குவருவது,

***'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த***
***மறைமொழி தானே மந்திரம் என்ப.'***

என்ற செய்யுளியலில் இடம்பெற்றுள்ள 176-ஆம் நூற்பாவா கும். மேற்படிதொல்காப்பிய நூற்பாவானது 'மந்திரம்' என்ற செய்யுள் வகையின் இலக்கணங்கூறுவதாகும். 'ஆழ்ந்தகன்ற மொழியறிவுடைய பெரியோரின் பொருட்செறிவு மிகுந்த சொற் களே மந்திரங்கள் என வழங்கப்படுகின்றன' என்பதே இந் நூற்பாவின் தெளிபொருளாகும். மேற்சுட்டிய தொல்கப்பிய நூற்பாவுடன் ஒத்த பொருண்மை கொண்ட குறட்பாவொன் றுளது. அது வருமாறு,

***'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து***
***மறைமொழி காட்டி விடும்'***

*திருக்குறள்:3:8*

இக்குறளின்பொருளானது மேற்சுட்டிய தொல்காப்பிய நூற் பாவின் பொருளுடன் பெருமளவில் ஒத்துள்ளதென்பதை அவையிரண்டிலும் பயிலும் நிறைமொழி, மறைமொழி ஆகிய சொற்கள் தெளிவாகவே உணர்த்திநிற்கின்றமை வெளிப்படை. மேற்படி மூன்று ஒப்புமையம்சங்கள் தொடர்பாக முதலில் இங்கு நமது கவனத்துக்கு வரும் விடயம், 'தமிழரின் பண் டைய பண்பாட்டுச் செழுமைகளுட் சிலவற்றைச் சங்கப்பா டல்கள், தொல்காப்பியம் ஆகியனவும் திருக்குறளும் ஒரே குரலில் ஒலித்துள்ளன' என்பதேயாகும். இவ்வாறான சிறப்பைப் பாராட்டும் அதேவேளை ஆய்வுநிலையில் நோக்கப்படவேண் டிய விடயமொன்றும் உளது. அது, அக்குரல்களின் 'கால வரிசை' பற்றியதாகும்.

நற்றிணை மற்றும் தொல்காப்பியம் ஆகியன திருக்குறளுக்கு முற்பட்டவை என்றவகையில் 'நனிநாகரிகம், மந்திரம்' என்பன தொடர்பான அவற்றின் கருத்துகளை திருக்குறள் வழிமொழிந் துள்ளதாகக் கொள்வதே காலவரிசைப்படி பொருத்தமான

தாகும். ஆனால் புறநானூறு 34-ஆம் பாடலடிகள் தரும் ‘செய்ந்நன்றி’ தொடர்பான கருத்தைத் திருக்குறள் வழி மொழிந்துளது எனக்கொள்வதில் ‘காலவரிசைசார் சிக்கல்’ ஒன்று உளது. இதுபற்றிய சிறு விளக்கத்தை இங்கு முன் வைக்க வேண்டியது அவசியமாகிறது.

மேற்படி சிக்கலுக்கான காரணியாக அமைவது மேற்படி புற நானூற்றுப் பாடலடிகளில் இடம் பெற்றுள்ள, ’அறம் பாடிற்றே’ என்ற தொடராகும். இத்தொடரில் ‘அறம்’ என்பது பொதுவாக ‘அறமரபு’ என்ற பொருள் தருவதாகும். ஆயினும் அச்சொல் லானது பண்டைய அறநூலொன்றைச் சுட்டிநிற்கின்றது என் பதே உரைமரபில் நிலவிவரும் பொதுவான கருத்தாகும். இக் கருத்நிலைசார் தமிழாய்வாளர்களில் ஒருசாரார் ’அப்பண் டைய அறநூல் திருக்குறளேயாகும்’ என்ற கணிப்பை முன் வைத்துள்ளனர். குறிப்பாக, திரு. சதாசிவபண்டாரத்தார் என்ற ஆய்வறிஞர் இக்கருத்தினராவார். இவ்வாறு கொண் டால் திருக்குறளை மேற்படி புறநானூற்றுப் பாடலுக்கு முற் பட்டதாகக் கொள்ளவேண்டியிருக்கும் என்பது வெளிப்படை. இதுவே மேற்படி ‘காலவரிசைசார்சிக்கல்’ ஆகும்.

ஆயினும், ஆய்வு நிலையில் இவ்வாறான ஊகங்களுக்கு வாய்ப்பில்லை என்பதையும் இங்குநாம் கவனத்தில் இருத்த வேண்டும். புறநானூற்றுப் பாடல்கள் காட்டும் சமூக - பண் பாட்டுச் சூழல்களைவிட வளர்ச்சியடைந்த ஒருசமூக - பண் பாட்டுச் சூழலையே திருக்குறள் நமக்குக் காட்சிப்படுத்தி யுள்ளது என்பது பொதுவாக ஆய்வாளர் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

இவ்வாறு சிந்திக்கும்போது, மேற்படி புறநானூற்றுப்பாடல் வரிகள் குறிப்பிடும் ‘அறம்’ புறநானூற்றுப்பாடலுக்கு முற்பட்ட தாகவோ அல்லது அதன் சமகாலத்திலோ வழக்கிலிருந் திருக்கக்கூடியதான (திருக்குறள் அல்லாத) வேறொரு நூலையே குறிப்பதாகவோ கொள்வதே பொருத்தமானதாகும். இவ்வாறு சிந்திப்பதே மேற்படி காலவரிசைசார்சிக்கலுக்கான தீர்வாகவும் அமையமுடியும். இவ்வாறு நாம் சிந்திப்பதற்குத் துணைபுரியும் வகையிலமைந்துள்ள ஆய்வுக்குறிப்பொன்றை இங்கு கவனத்துக்கு கொண்டுவரவிழைகிறேன். ‘அறம் என்ற புறநானூற்றுச் சுட்டானது தமிழ்மக்களிடையே பண்டைக்கா லத்தில் தோன்றி வழக்கிலிருந்திருக்கக்கூடிய (திருக்குறள் அல்லாத) பிறிதொரு அறநூலையே குறித்து நிற்பது. ’இது, ஆய்வறிஞர் திரு. கொ இலக்கு மணசாமியவர்கள் அவரு டைய ‘திருக்குறளும் சங்க இலக்கியங்களும்’ என்ற தலைப் பிலான ஆய்வுக் கட்டுரையில் முன்வைத்துள்ள ஆய்வுமுடி பாகும். சங்கப்பாடல்கள், தொல்காப்பியம் ஆகியவற்றைத் திருக்குறளுடன் தொடர்புறுத்தும் சான்றுகள் பற்றிய புரித லானது இத்துடன் நிறைவுக்கு வருகிறது.

**‣ சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பேரிலக்கியங் களிலே குறட்பாவொன்று மேற்கோளாக எடுத்தாளப் பட்டுள்ளமை தொடர்பாக...**

மேற்படி இரு பேரிலக்கியங்களும் திருக்குறளைப்போலச் சங்கமருவிய காலப்பகுதி சார்ந்தன என்பதும் அந்நிலையில் திருக் குறளுக்குச் சிறிது பிற்பட்ட ஆக்கங்கள் என்பதுமான செய்திகளை முன்னரே நோக்கியுள்ளோம். இவ்விரு ஆக்கங் களிலும் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட குறட்பா வருமாறு:

***‘தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்***
***பெய்யெனப் பெய்யும் மழை’***

(குறள்:55)

இக்குறட்பா சிலப்பதிகாரத்தின் 23-வது காதையான ‘கட்டுரை காதை’யின் ஈற்றிலமைந்த வெண்பாவில் மேற்கோள் நிலை யில் எடுத்தாளப்பட்டுள்ளது. அவ்வெண்பா வருமாறு:

***‘தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுவாளைத்***
***தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால் -தெய்வமாய்***
***மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி***
***விண்ணக மாதர்க்கு விருந்து’***

மணிமேகலையில் 22-ஆம் காதையான ‘சிறைசெய் காதை’ யில் பத்தினிப்பெண்டின் இயல்பு தொடர்பான கூற்றொன்றில் சதுக்கப்பூதத்தின்கூற்றாக-மேற்படி குறட்பாவானது இடம் பெற்றுளது:

***தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்***
***பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்***
***பொய்யில் புலவன் பொருளுரை...’***

மேற்சுட்டிய குறட்பாவானது, ‘கணவரை வழிபட்டுநிற்கும் கற் புடைப் பெண்டிர் மழையையும் வருவிக்கும் ஆற்றலுடைய வர்கள்’ என்பதான மரபுசார் நம்பிக்கையின் பதிவாகத் திகழ் வதாகும்.

இவ்விரு பேரிலக்கியங்களிலும் அக்குறட்பா சுட்டும் நம்பிக்கை என்ற அம்சமே எடுத்துப்பேசப்பட்டுள்ளது. ‘சிலப்பதிகாரக் கதையின் தலைவியான கண்ணகி தெய்வமாகிய பெருநிலையை வியப்புடன் எடுத்துரைக்கும் செயற்பாடாகவே மேற்படி மேற் கோள் பகுதிகள் அமைந்துள்ளன’ என்பதும் வெளிப்படை. இவற்றில் அக்குறட்பா எடுத்தாளப்பட்ட முறைமையே நமது கவனத்துக்குரியதாகிறது.



சிலப்பதிகார மேற்கோளிலே மேற்படி குறட்பாவின் முதலடியின் பெரும் பகுதியானது ஒத்துள்ளமை தெளிவாகவே தெரிக்கிறது. 'கண்ணகி தெய்வ நிலை யுற்று விண்ணகமாதரால் வரவேற்கப்பட்டாள்' என்ற செய்தியை அது சுட்டிநிற்கிறது. 'கணவரை வழிபட்டுநிற்கும் பெண்டிர் தேவருலகினர் தொழுதுவரவேற்பர்' என்பதான நம்பிக்கைசார் கருத்தாக்கத்துக்குக் கண்ணகியை ஒரு சான்றாக் கொள்ளலாம்' என்பதே மேற்படி சிலப்பதிகார வெண்பாவின் தெளிபொருளாகும். திருக்குறளின் குறட்பாவினின்றுதான் எடுத்தாளப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிப்பதற்கு 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுவாளைத்தெய்வந் தொழுந் தகைமை'என்ற அதன் தொடரமைப்பானது முக்கிய சான்றாகவுள்ள தென்பது வெளிப்படை. ஆயினும், இது ஒரு ஊகமாகமட்டுமே கொள்ளப்படவேண்டியதாகும். உறுதியாக அப்படிக் கூறுவதற்கில்லை. ஏனெனில் மாறாக அது, 'அன்றைய சமூகத்திலே வழக்கிலிருந்திருக்கக்கூடிய ஒரு சொற்றொடரிலிருந்து - அதாவது ஒருபழமொழி வகைசார் தொடரிலிருந்து எடுத்தாளப்பட்டதாகவும்கூட இருக்கலாம்.

மேற்படி குறட்பாகூட அவ்வாறான மக்கள் வழக்கிலிருந்திருக்கக் கூடிய பழமொழி வகைசார் தொடரொன்றிலிருந்தும் உருவாகியிருக்கலாம் என்பதான ஊகத்துக்கும் இடமுளது.

மணிமேகலையிலே மேற்படி குறட்பபாவானது அதன் மூலவடிவிலேயே மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது. இம்மேற்கோள் பகுதியின் முதல்ஒன்றே முக்காலடிகள் மேற்சுட்டிய குறளின் மூலவடிவமேயாகும். அவ்வகையில் இது திருக்குறளின் மேற்படி குறட்பாவிலிருந்து எடுத்தாளப்பட்டது என்பது தெளிவாகவே தெரிகிறது. இத்துடன் இங்கு தனிக் கவனத்துக்குரியதாகவுள்ள இன்னொரு முக்கிய அம்சம், திருக்குறளையும் அதனாசிரியராக அறியப்படும் திருவள்ளுவரையும் புகழ்ந்தேத்தும் உணர்வுடன் இது அமைந்துள்ளமையாகும். 'பொய்யில் புலவன் பொருளுரை' என்ற தொடரானது இவ்வுணர்வின் வெளிப்பாடேயாகும். பொய்யில்புலவன்' என்ற தொடரின் பொருள், 'உண்மையை மட்டுமே பேசும்புலவன்' என்பதாகும் இம்மேற்கோள் பகுதியில் இவ்வாறு சுட்டப்படுபவர், 'திருக்குறளின் ஆசிரியராக அறியப்படும் திருவள்ளுவரே' ஆவார். இத்தொடர்சார் உரைக்குறிப்பும் இதனை உறுதிசெய்கிறது. எனவே, மணிமேகலையாசிரியரான கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் திருக்குறளாசிரியரயே 'பொய்யில் புலவன்' எனப் புகழ்ந்துரைத்துள்ளார் என்பது தெளிவாகின்றது. மேற்படிதொடரிலுள்ள, 'பொருளுரை' என்ற சொல்லானது, மேற்படி குறட்பாவின் பொருட்சிறப்பைச் சுட்டிநிற்பதாகும். அதாவது, 'மக்கட் சமூகத்தின் பயன்பாட்டுக்குரியதும் அவ்வகையிற் பொருட் சிறப்புடையதுமான ஒரு ஆக்கம்' என்ற வகையிலான உயர் கணிப்பு அக்குறட்பாவுக்குச் சாத்தனாரால் வழங்கப்பட்டுள்ளது. இக்கணிப்பானது திருக்குறளுக்கு 'அந்நூல் எழுந்த சங்கமருவிய காலப்பகுதியிலேயே கிடைத்துள்ள பெருங்கௌரவம்' என்றே கொள்ளப்படவேண்டியதாகும்.



### பிற்கால இலக்கியங்களின் உருவாக்கநிலைகளில் திருக்குறள் செலுத்திவந்துள்ள செல்வாக்கு – தொகுநிலை நோக்கு:

பிற்கால இலக்கியங்கள் என இங்கு குறிப்பிடப்படுபவை பொ.ஆ.பி. 6-ஆம் நூற்றாண்டுமுதல் 18-ஆம் நூற்றாண்டுவரையிலான இலக்கியங்களையேயாகும். இக்காலப்பகுதியில் முதல் பொ.ஆ.பி. 900 வரையான காலப்பகுதி பக்தியிலக்கிய காலம் என வழங்கப்படுவது. அதனையடுத்த 900 ஆண்டுக் காலப்பகுதியில் பல்வேறு பொருண்மைகள் சார்ந்த பெருந்தொகையான பேரிலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் எழுந்துள்ளன. இவ்வாறான 1200 ஆண்டுக்கால தமிழிலக்கியச் செல்நெறியிலே திருக் குறளானது ஆழமான செல்வாக்குச் செலுத்திவந்துள்ளது. அத்தொடர்பிலான சில முக்கிய சான்றுகளே இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

### பக்தியிலக்கியப்பரப்பிலே திருக்குறளின் செல்வாக்கு:

பக்தி இலக்கியங்களான திருமுறைகள் மற்றும் திவ்யபிரபந்தங்களில் திருக்குறள் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளமை தொடர்பாக ஆய்வாளர்கள் பலர் ஆய்வுகளை முன்னெடுத்துள்ளனர். குறிப்பாக, திருமுறைகளில் திருக்குறளின் செல்வாக்கு தொடர்பாக மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் ஆழ்வார்கள் திருக்குறளை எடுத்தாண்டுள்ளமை பற்றிப் பேராசிரியர் சீனிவாச கண்ணன் அவர்களும் ஆழமாக நோக்கியுள்ளனர். அருணை வடிவேல் முதலியாரின் எழுத்து களுக்குச் சான்றாக அண்ணாமலைப் பல்கலைக்கழகவெளியீடான தெய்வப் பனுவல்களில் திருக்குறள் என்ற ஆக்கம் அமைந்துள்ளது. அதுபோலவே பேராசிரியர் சீனிவாச கண்ணன் அவர்களின் மேற்சுட்டியவகை சார் எழுத்துகளுக்கான சான்றாக 'ஆழ்வார்கள் ஆதரித்த வள்ளுவம்' என்ற நூலாக்கம் திகழ்கின்றது.

திருமுறைகளில் திருக்குறளின் பயிற்சி என்ற வகையில் இங்கு கவனத்துக்குரிய முக்கிய சான்று, 'பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளதான சேரமான்பெருமாள் நாயனாரின் திருக்கைலாய ஞானவுலா என்ற ஆக்கத்தில் திருக்குறளின் இரு குறட்பாக்கள் தமது அதே வடிவில் எடுத்தாளப்பட்டுள்ளனமையாகும். அக்குறள்கள் வருமாறு:

***'இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை***
***எல்லாரும் செய்வர் சிறப்பு'***

*குறள்: 752*

***'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்***
***ஒண்டொடி கண்ணே உள.'***

*குறள்: 1101*

இவ்விரு குறள்களும் திருக்கைலாய ஞானவுலாவில் முறையே 136, 173ஆம் கண்ணிகளாக எடுத்தாளப்பட்டுள்ளன. ஆழ்வார் பாசுரங்களில் திருக்குறளின் பயில்நிலைக்குப் பலசான்றுகளை இங்கு சுட்டமுடியும். குறிப்பாக, நம்மாழ்வார் திருவாய்மொழியில் இடம்பெறும் ஒரு சான்று மட்டுமே இங்கு நமது கவனத்துக்கு வருகிறது.

***'ஊரவர் கௌவை எருவிட்டு அன்னைசொல் நீர்ப் படுத்து***
***ஈரநீர் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ் செய்யுள்***
***பேரமர்காதல் கடல்புரைய விளைவித்த***
***காரமர் மேனிக் கண்ணன் தோழீ கடியனே.'***

*திவ்யபிரபந்தம்: 3366*

இப்பாடலானது திருக்குறளின் காமத்துப்பாலிலிடம்பெற்றுள்ள,

***'ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்***
***நீராக நீழும் இந்நோய்'***

என்ற 1147-ஆம் குறட்பாவை நினைவூட்டுகின்றது. இதனைப் பாடிய நம்மாழ்வார் திருக்குறளில் ஊறித்திளைத்தவர் என்பதை இப்பாடல் உணர்த்திநிற்கின்றமை வெளிப்படை.

▸ பேரிலக்கியப் பரப்பிலே ...

பொ.ஆ.பி.9-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரான பேரிலக்கியங்கள் பேரிலக்கியங்களில் திருக்குறள் செலுத்தியுள்ள செல்வாக்கு என்ற வகையில் 12-ஆம் நூற்றாண்டில் எழுந்தவையான பெரியபுராணம் மற்றும் கம்பராமாயணம் ஆகியன சார்ந்த சில சான்றுகள் மட்டுமே இங்கு கவனத்துக்கு முன்வைக்கப்படுகின்றன.

12-ஆம் திருமுறை என வழங்கப்படும் பெரியபுராணத்திலே ஒருபாட லடியானது குறட்பாவொன்றை நினைவுக்கு இட்டு வரும் வகையில் அமைந்ததாகும்.

***கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று***
***அமர்ந்திருந்தார் காதலினால்'***

(பெரியபுரா ணம்:3426)

என்பதே அந்த அடி. இவ்வடியானது, சுந்தரமூர்த்திநாயனார் திருவொற்றியூரிலே சங்கிலியாரை மணந்து மகிழ்ந்திருந்தமையை காட்சிப்படுத்துவதாகும். இவ்வடியானது திருக்குறள் காமத்துப்பலிலுள்ள

***கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்***
***ஒண்டொடி கண்ணே உள'***

என்ற 1101-ஆம் குறளை நமது நினைவுக்கு இட்டுவருகின்றமை வெளிப்படை. இக்குறளைச் சுவைத்த அநுபவத்தின்



தளத்திலேயே சேக்கிழார் இப்பாடலைத்தந்திருப்பார் என்பது உய்த்துணரக்கூடியதேயாகும்.

கம்பராமாயணத்திலே திருக்குறள் செலுத்தியுள்ள செல்வாக்கு மிக விரிந்த பொருட்பரப்புடையதாகும். இப்பொருண்மைசார்ந்து பேராசிரியர் தெ. ஞானசுந்தரம் அவர்கள் ஆழமாக ஆராய்ந்துள்ளார். அவர் எழுதிய கம்பர் போற்றிய கவிஞர்(2012) என்ற ஆய்வுநூல் நூல்முக்கியமானது. அதில் அவர், '600-க்கு மேற்பட்ட இடங்களில் கம்பர் திருக்குறள் கருத்துகளை எடுத்தாண்டுள்ளார்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு கம்பர் திருக்குறளை எடுத்தாண்டுள்ளமை தொடர்பான ஒரு சான்றுமட்டுமே கவனத்துக்கு இட்டுவரப்படுகிறது.

***'எடுத்தொரு வருக்கொருவர் ஈவதனின் முன்னம்***
***தடுப்பது நினக்கழகிதோ தகவில் வெள்ளி***
***கொடுப்பது விலக்கு கொடியோய் உனது சுற்றம்***
***உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி விடுகின்றாய்.'***

*கம்பராமாயணம்: 425*

கம்பராமாயணம் 'பாலகாண்ட'த்திலுள்ள வேள்விப்படலத்திலே இடம்பெறும் இப்பாடலானது 'தானம் கொடுப்பதைத் தடுத்தல் கூடாது' என்பதான அறவுணர்வை வலியுறுத்துவதாகும். மகாபலிச்சக்கரவர்த்தியானவர் தம்முன் வாமனாக வந்துள்ளன திருமாலுக்கு மூன்றடி நிலம் கொடுக்க முற்பட்ட சூழலில் அதனைத் தடுக்கமுயன்ற சுக்கிராச்சாரியாரை நோக்கிக் கூறிய கோபவார்த்தையாக இது அமைந்துளது. இப்பாடலின் 3-ஆம் 4-ஆம் அடிகள், திருக்குறளின்...

***கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதுவும்***
***உண்பதூஉம் இன்றிக் கெடும்.'***

*குறள்:166*

பொருளைத் தழுவியமைந்துள்ளமை தெளிவாகவே தெரின்றது.

▸ சிற்றிலக்கியப் பரப்பிலே...

சிற்றிலக்கியப் பரப்பிலே திருக்குறள் பேணப்பட்டமை மற்றும் மதித்துப் போற்றப்பட்டமை ஆகியன தொடர்பான பார்வையிலே இரு விடயங்கள் ங்கு நம்து கவனத்துக்குரியன. ஒருவிடயம் சிற்றிலக்கியங்களில் குறட்பாக்களின் பொதுவானபயில்நிலை பற்றியதாகும்; இன்னொரு விடயம் திருக்குறளை மையப்படுத்தியே சிற்றி லக்கியங்கள் உருவானமை பற்றியதாகும்.

சிற்றிலக்கியங்களிலே குறட்பாக்களின் பொதுவான பயில்நிலை என்ற வகையில் தமிழ்விடு தூது, என்ற 'தூது' வகைசார் சிற்றிலக்கிய ஆக்கத்தில் 'குறட்பாக்கள் எடுத்தாண்டுள்ளமை இங்கு கவனத்துக்கு வருகிறது. இவ்வாக்கத்தின் 97, 194, 196 ஆகிய மூன்று கண்ணிகளாக மூன்று குறட்பாக்களே எடுத்தாளப்பட்டுள்ளன. அவை:

***'கற்க கசடறக் கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக'***

*குறள்: 391*

*‘தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்.’*

*குறள்: 399*

*‘ நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு’*

*குறள்: 408*

ஆகிய குறட்பாக்களே மேற்படி கண்ணிகளாக அமைந்துள்ளன.

இவ்வாறு குறட்பாக்கள் இலக்கியங்களில் கண்ணிகளாக எடுத்தாளப்படும் முறைமையை ஏற்கெனவே நாம் சேரமான் பெருமாள் நாயனாரின் திருக்கைலாயஞானவுலா பற்றிய பதிவிலும் நோக்கியுள்ளோம். இவ்வாறு குறள்களை எடுத்தாளும் பண்பு அறநூல்களிலும் நிலவியமைக்கு ஒரு சான்றாக அருங்கலச்செப்பு (12-ஆம் நூ.ஆ.) என்ற ஆக்கத்தின் ஒருபாடல் இங்கு சுட்டப்படுகிறது. திருக்குறளைப் போலவே குறட்பாக்களிலமைந்த இவ்வாக்கத்தின் 175ஆவது குறட்பாவாக அமைவது திருக்குறளின் 360-ஆவது குறளாகும். அக்குறள் வருமாறு:

*‘காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்’*

சிற்றிலக்கியங்களில் திருக்குறளின் செல்வாக்கு என்றவகையில் மேற்சுட்டியவை தவிர வேறுசில செய்திகளுங்கூட இங்கு பதிவு பெறவேண்டியமுக்கியத்துவமுடையனவாகும். அவற்றுளொன்று சித்தாந்த சாத்திரங்களிலொன்றான உமாபதி சிவாசாரியாரியாரின் திருவருட்பயன் என்ற ஆக்கமானது திருக்குறளைப்போலவே குறள்வெண்பா என்ற பாவடிவத்தில் அமைந்தது என்பதாகும்.

இத்தொடர்பில் குறிப்பிடத்தக்க இன்னொரு செய்தி, பொ.ஆ.பி. 14 முதல் 17 வரையான நூற்றாண்டுகளில் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றவர்களாகத் திகழ்ந்த தமிழ்ச்சித்தர்கள் மற்றும் அருளாளர்கள் ஆகியோரின் பாடல்களில் திருக்குறளின் செல்வாக்கு காணப்படுகிறது என்பதாகும். இத்தொடர்பிலான முக்கிய தகல்களை, ஆய்வறிஞர் இரா. சாரங்கபாணி அவர்களின் சித்தர் இலக்கியங்களில் திருக்குறள் 1999 என்றநூல் மூலம் அறியலாம்.

திருக்குறளை மையப்படுத்தியசிற்றிலக்கிய உருவாக்கம் என்றவகை யில் இங்கு நமது கவனத்துக்கு வருவது, குறட்பாக்களின் அடிகளை வைத்து, அவற்றுக்கு விளக்கம் தரும் வகையான கதையம்சமொன்றையும் இணைத்துப் பாடல்களை உருவாக்கும் ஆக்கமுறை’ ஆகும். இவ்வகைக்கான முக்கிய சான்றாகத்திகழ்வது, 18-ஆம் நூற்றாண்டினரான சிவஞானமுனிவர் என்ற பேரறிஞர் இயற்றிய சோமேசர் முதுமொழி வெண்பா என்றநூலாகும். அவ்வகையில் இவ்வாக்கத்தை, ‘திருக்குறள் தோற்றுவித்த இலக்கியம்’ என்று கூறலாம். அத்துடன், இவ்வாக்கமானது குறட்பாக்களின் பொருண்மைகளை விளக்கியுரைப்பன என்றவகையில் ‘திருக்குறளுக்குச் செய்யுள்வடிவில் எழுந்த உரை’ என்பதான கணிப்புக்கும் உரியதாகிறது.

மேற்படி சோமேசர் முதுமொழி வெண்பா பற்றிய தகவலையடுத்து, அதனைப் போல குறளை உள்ளடக்கியனவாக ‘முதுமொ ழிவெண்பா’ என்ற பெயரிலும் ‘சிவசிவ வெண்பா வள்ளுவர் நேரிசை, திருமலைக் கொழுந்து வெண்பா’ என்பனவாக பல்வேறு பெயர் வேறுபாடுகளுடனும் இவ்வகையான வெண்பாவகை ஆக்கங்கள் 16-18-ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதிகளில் எழுந்துள்ளன. இத்தொடர்பிலான விரிவான தகவல்களைப் அறிய விழைவோர் ‘குறள்வெண்பா நூற்கோவை’ 10 என்ற நூலை நோக்கலாம்.

மேற்படி குறள் விளக்க நோக்கில் அண்மையில் கனடாவில் குறட்கவி யமுதம்(2022) என்ற ஆக்கமொன்று வெளிவந்துள்ளது. புலவர் முருகேசு மயில்வாகனார் என்பாரின் ஆக்கமான இதில் வெண்பா மட்டுமன்றி, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா மற்றும் விருத்தம் ஆகிய பாவகைகளும்கூடப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### திருக்குறளை ‘ஆட்சி முறைக்கான வழிகாட்டு நூலாக’க் கொண்டுள்ளமை தொடர்பான ஒரு வரலாற்றுத் தகவல்:

இவ்வகையில் இங்கு குறிப்பிடப்படவேண்டிய வரலாற்று முக்கியத்துவமுடைய செய்தி, தமிழகத்தின் கொங்குநாடு எனப்படும் நிலப்பரப்பில் 15, 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த குறுநிலமன்னர்கள் திருக்குறளை மேற்சுட்டியவாறு மதித்துப் பேணி நின்றுள்ளனர் என்பதாகும். இதற்கான சான்றுகளாக ‘பூந்துறை நாட்டார் மேலோலை, காரையூர்ச் செப்பேடு, பல்லடம் செப்பேடு, பழனி வீரமுடியாளர் செப்பேடு’ ஆகியன திகழ்கின்றன.

*வள்ளுவன் உரைத்த முப்பால் மொழியின்படியே
செங்கோல் நீதி வழுவாமல் நாட்டி*

என்பன போன்ற தொடர்கள் மேற்படி ஓலைச்சுவடிகள் செப்பேடுகள் ஆகியவற்றிற் காணப்படுகின்றன என்பதே இத்தொடர்பில் முக்கிய செய்தி யாகும். தொல்லியல் ஆய்வாளரான முனைவர் செ. இராசு அவர்கள் எழுதிய ‘ஆவணங்களில் திருவள்ளுவரும் திருக்குறளும்’ என்ற கட்டுரை மற்றும் கவிஞர் தமிழ்நாடன் என்பார் எழுதிய ‘திருக்குறள் ஆவணங்கள்’ என்ற கட்டுரை ஆகியன மேற்படி ஆவணங்கள் தொடர்பான விளக்கங்களைத் தருகின்றன.

## நிறைவாக:

மிகவிரிந்த ஒரு பொருட்பரப்பை இயன்றவரை சுருக்கித்தர முற்பட்டுள்ளேன். இத்தொடர்பில் மேலும் விரிவாகவ எழுதவும் உரைகள் நிகழ்த்தவும் விழைகிறேன்.



subramanian.n@thaiveedu.com



# திருக்குறள் காமத்துப்பாலின் இலக்கியவரலாற்று முக்கியத்துவம்

## தமிழின் அகப்பொருள் மரபை மையப்படுத்திய நுண்ணாய்வு

– கௌசல்யா சுப்பிரமணியம்

### தோற்றுவாய்:

திருக்குறளின் முப்பால் பகுப்பிலொன்றாகத் திகழும் 'காமத் துப்பால்' என்ற பகுதியானது தமிழரின் அகத்திணை இலக் கிய மரபுக்குரியவையான 'களவியல்', 'கற்பியல்' ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டமைந்ததாகும். ஏழு அதிகாரங்களில் களவியலும் பதினெட்டு அதிகாரங்களில் கற்பியலுமாக மொத்தம் இருபத்தைந்து அதிகாரங்களில் இருநூற்றைம்பது குறட்பாக்கள் கொண்டதாக இக் காமத்துப்பால் பகுதி திகழ் கின்றது. தமிழின் பண்டைய இலக்கிய மரபிலே 'அகத்திணை' என வழங்கப்பட்டு வருவதான, 'ஆண்-பெண் காதலுறவு' என்ற உணர்வம்சமே மேற்படி காமத்துப்பால் பகுதியின் உள்ளடக் கமாகும். இப்பகுதியின் இலக்கிய வரலாற்று முக்கியத்துவத் தைத் தெளிவுறுத்தும் முயற்சியாகவே இக்கட்டுரை அமை கின்றது. அவ்வகையில் தமிழின் அகத்திணை இலக்கியமரபு தொடர்பான ஒரு சிறு விளக்கம் இங்கு முதலில் முன்வைக்கப் படுகிறது.

### தமிழின் அகத்திணை இலக்கியமரபு:

தமிழின் அகத்திணை என்ற இலக்கிய மரபானது மூன்று முக் கிய தொடர் நிகழ்வுகளைக் கொண்டதாகும். அவை:

- 'குறித்த ஆணும் ஒரு பெண்ணும் ஒருவரையொருவர் சந் தித்துக் காதல் கொள்வது',
- 'அவர்களே பின்னர் திருமண பந்தத்தில் இணைவதன் மூலம் இல்வாழ்வை மேற்கொள்வது',
- 'இல்வாழ்வில் தமது காதலை அவர்கள் தொடர்ந்து பேணிக் கொள்வது'.

மேற்சுட்டியவாறான காதலுணர்வு சார்ந்த தொடர் நிகழ்வு களில் அவ்விருவரும் எய்தும் பல்வேறுகட்ட அனுபவ நிலை களை மையப்படுத்தியமையும் இலக்கிய ஆக்கங்களே 'அகத்திணை இலக்கியம்' என வழங்கப்பட்டு வருவனவாகும். இவ்வாறான இலக்கிய ஆக்கமுறைமை தொடர்பான தொன் மையான இலக்கியச்சான்றுகள் என்ற வகையில் நமக்குக் கிடைப்பன சங்க இலக்கியப் பரப்பு சார்ந்தவையான குறுந் தொகை, நற்றிணை, அகநானூறு முதலான எட்டுத்தொகை நூல்களும் குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்பாட்டு முதலான பத்துப்பாட்டு நூல்களுமாகும். இவ்வாறான இலக்கிய ஆக்க முறைமைசார் இலக்கண அம்சங்களைக் கூறுவதாக நமக் குக் கிடைக்கும் முக்கிய தொல்லிலக்கணம் தொல்காப்பி யத்தின் பொருளதிகாரப் பகுதியாகும்.

மேற்படியமைந்த தொல்லிலக்கியங்கள் மற்றும் தொல்காப் பியம் ஆகியன அடையாளப்படுத்தி நிற்கும் அகத்திணை இலக்கிய மரபின் ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி நிலையொன் றையே திருக்குறளின் காமத்துப்பால் பகுதியிலே நாம் தரிசிக் கிறோம் என்பது இங்கு ஆய்வுநிலையில் அறியப்படும் செய்தியாகும். இதனைத் தெளிந்துகொள்வதற்கு முதலில் நாம் இம்மரபின் இலக்கண அம்சங்கள் பற்றி, குறிப்பாகத் தொல்காப்பியம் சுட்டும் அகத்திணை மரபு பற்றிச் சற்று விரிவாகவே புரிந்துகொள்வது அவசியமாகிறது.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் அகத்திணை என்ற வகையில் எழுவகை மரபுகளைக் குறிப்பிடுகிறது. அவை: கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல், பெருந்திணை என்பனவாகும். இவற்றுள் முதலாவதான கைக் கிளையும் இறுதியான பெருந்திணையும் முறையே ஒருதலைக் காதல் மற்றும் பொருந்தாக்காமம் ஆகியவற்றைக் குறிப்பன. இடையிலுள்ளவையான ஐந்து திணைகளின் காதலே தூய காதலொழுக்கங்களாகக் கொள்ளப்படுவனவாகும். இவ் ஐந்து திணைகளுக்குரிய இலக்கிய உணர்வம்சங்கள் என்ற வகையில் முறையே புணர்தல், இருத்தல், ஊடல், பிரிதல், இரங்கல் ஆகியன மேற்படி பொருளதிகாரப் பகுதியில் சுட் டப்பட்டுள்ளன.

மேற்படி ஐவகைத் திணை மரபுகள் பற்றிய எடுத்துரைப்பு களிலே அம்மரபுகளின் அடிப்படைகளாக 'முதற்பொருள்', 'கருப்பொருள்', 'உரிப்பொருள்' ஆகிய முப்பொருண்மைகள் அப் பொருளதிகாரப் பகுதியில் சுட்டப்படுகின்றன. இவற்றில் 'முதல்' மற்றும் 'கரு' ஆகியன இலக்கியப் பொருண்மைக் கான பின்னணி அம்சங்களைக் குறிப்பனவாகும். 'முதல்' எனப்படுவது 'நிலம்', 'பொழுது' ஆகியவற்றையும் 'கரு' எனப்படுவது தெய்வம், உணவு, உயிரினங்கள், தாவரங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் ஆகியவற்றையும் சுட்டுவன வாகும்.

மூன்றாவது வகையான 'உரி' என்பதே 'இலக்கியப் பொருண்மை' யைச் சுட்டி நிற்பதாகும். அதாவது காதலன் மற்றும் காதலி ஆகியோருக்கிடையிலான உணர்வுக் கிளர்ச்சிகளின் ஊடாட்டமே இங்கே உரிப்பொருள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான உணர்வுக் கிளர்ச்சிகளுக்கான அனுபவச் சூழல்சார் அம்சங்களே மேலே புணர்தல், இருத்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்பனவாகச் சுட்டப்பட்டவையாகும்.

மேற்சுட்டிய புணர்தல் என்ற உரிப்பொருளானது, 'பருவ வயதுடைய ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் சந்திப்பதுமுதல், அவர்கள் காதல்கொண்டு அடிக்கடி சந்திப்பது முதலிய அனுபவ நிலைகளை உள்ளடக்கிய உணர்வுப் பரிமாற்றங்களைச் சுட்டுவதாகும். ஏனைய நான்கும் திருமணத்தின் பின்னரான பல்வேறு அனுபவச்சூழல்கள் சார்ந்த உணர்வு வெளிப்பாட்டு நிலைகளைச் சுட்டுவன.

மேற்படி முதலாவதான புணர்தல்சார் செயற்பாட்டு நிலைகள் அகத்திணை மரபிலே களவியல் என வழங்கப்படுவதாகும். அதாவது உறவுகளுக்கும் சமூகத்துக்கும் தெரியாதவகையான மறைவுச் செயற்பாடு என்பதே அதன் பொருளாகும். பின்னைய நான்கும் 'கற்பியல்' எனப்படும். சமூகம் அவர்களை கணவன் - மனைவி என்ற வகையில் ஏற்றுக்கொண்ட சூழலில், அச்சமூகம் கற்பித்த விதிமுறைகளுக்கு உட்பட்ட செயற்பாட்டு நிலைகள் என இதனை நாம் பொருள் கொள்ளலாம்.

மேற்படி களவு மற்றும் கற்பு ஆகிய இரு கட்ட நிலைகள்சார் செயற்பாடுகள் பற்றிய இலக்கண விதிகள், கோட்பாட்டு நிலைகளில் 'கைகோள் கோட்பாடு' எனவும், அச்செயற்பாட்டு நிலைகளில் தலைவன், தலைவி முதலியோர் நிகழ்த்தும் கூற்று முறைமைகளை 'கூற்றுக் கோட்பாடு' எனவும் ஆய்வாளர்கள் வகைப்படுத்துவர்.

இவற்றில் களவு என்ற கைக்கோளானது, இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டம் என நான்கு அடிப்படைக் களங்கள் சார்ந்தனவாகவும் மதியுடம்பாடு, வரைவு மறுத்தல், வரைவு நீட்டிப்பு எனத் துணைக் களன்கள் சார்ந்தனவாகவும் தொல்காப்பியத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல கற்பு என்ற கைக்கோளானது, இல்வாழ்க்கை மேற்கொண்ட தலைவன் தொழில் நிமித்தம் பிரிதல், மீண்டும் வந்து சேர்தல் என்பன போன்ற பல களன்களாகப் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்தமைந்த கூற்றுக்கோட்பாடானது அகத்திணைக்குரிய பாத்திரங்களான தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாங்கன், பாணன், பரத்தை, பாகன், ஊரார் முதலியோரின் கூற்றுகள் அமைந்த முறைகளைக் கூறுவதாக தொல்காப்பியம் வழியாக அறிகிறோம். இக்கூற்றுகள் வெளிப்படும் முறைகள் பலவாகும். 'நேரடியாகக் கூறல்', 'சிறைப்புறமாகக் கூறல்' (மறைந்திருந்து கூறல்), 'முன்னிலைப் புறமொழியாகக் கூறல்' என்பன ஒருவகை முறைமை; 'தனக்குத்தானே கூறல்', 'பிறிதொருவருக்குக் கூறல்', 'பகுத்தறிவற்ற பொருள்களை நோக்கிக் கூறல்' என்பன இன்னோர் முறைமையாகும்.

இவைதவிர, 'கூற்று வெளிப்படும் திறன்கள்' என்ற முறையில் 'தலைவியின் பேதைமை கூறல்', 'அருமை கூறல்', 'தலைவன் பெருமை கூறல்' என்ற வகையிலான கூற்று முறைமைகளும் 'உள்ளுறை', 'இறைச்சி' என்பவற்றின் வாயிலாகக் கருத்துப் புலப்படுத்துதல் ஆகிய முறைமைகளும் கவிதை உத்தி முறைகளாக தொல்காப்பியத்தில் கூறப்படுவதைக் காண்கிறோம்.

இவையே அகத்திணை மரபு தொடர்பாக தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் ஊடாக நாம் புரிந்து கொள்ளும் அடிப்படையான செய்திகளாகும். இவை திருக்குறளின் அகத்திணை மரபைப் புரிந்து கொள்வதற்கெனச் சுருக்கமாக இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

மேற்சுட்டியவாறான தொல்காப்பியப் பொருளதிகாரம் ஊடாக நாம் அறியும் அகத்திணைசார் நிகழ்ச்சித் தொடர்களில், 'குறித்த நிகழ்வில்' சந்திக்கும் பாத்திரங்களின் கூற்றுகளாகவே சங்க இலக்கியங்களின் பாடல்கள் ஒவ்வொன்றும் திகழ்கின்றன என்பது இங்கு நமது முக்கிய கவனிப்புக்குரிய விடயமாகும். இவ்வாறாக, அகத்திணை இலக்கிய மரபு தொடர்பாகத் தொல்காப்பியம் சுட்டிய கோட்பாட்டுநிலையிலான இலக்கண அம்சங்களையும் சங்ககால அகப்பாடல்கள் புலப்படுத்திநின்ற கவிதையாக்க முறைகளையும் அடியொற்றி உருவான ஓர் அகத்திணை ஆக்கமாகவே திருக்குறளின் காமத்துப்பால் நமது தரிசனத்துக்கு வருகிறது என்பதை முதலில் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும். இதனடிப்படையில் திருக்குறளின் காமத்துப்பால் அடுத்து நோக்கப்படுகிறது.

## திருக்குறள் காமத்துப்பால் புலப்படுத்திநிற்கும் அகத்திணை மரபு:

அகத்திணை மரபு தொடர்பாகத் தொல்காப்பியம் கூறும் கோட்பாட்டு நிலைகளைத் தழுவியமைந்த ஒரு புத்துருவாக்கமாகவே திருக்குறளின் காமத்துப்பால் திகழ்கின்றது என்பதும் அதனை நமக்கு அறியத்தரும் முக்கிய சான்றுகளாகத் திகழ்வனவே அதன் களவியல் மற்றும் கற்பியல் என்ற வகையிலான இயல்பகுப்பு முறைமையும் அவ்வவ்வியல்களில் இடம்பெறும் அதிகாரங்களின் 'பொருள் தொடர்ச்சி முறைமை' மற்றும் 'கூற்று முறைமை' என்பனவுமாகும்.

களவியல் என்ற பகுதியில் அமைந்துள்ள 'தகையணங்குறுத்தல்', 'குறிப்பறிதல்', 'புணர்ச்சிமகிழ்தல்', 'நலம்புனைந்துரைத்தல்', 'காதற் சிறப்புரைத்தல்', 'நாணுத்துறவுரைத்தல்', 'அலரறிவுறுத்தல்' ஆகிய ஏழு அதிகாரங்களும், பருவ வயதுடைய ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் சந்திப்பது, காதல் கொண்டு இணைவது, பின்னரும் அவ்வனுபவத்தில் திளைப்பது மற்றும் அத்தொடர்பில் ஊரில் எழும் 'அலர்' உட்பட்டவற்றை ஒரு சீரான கதைத்தொடர்ச்சியாக நாடகப்பாங்காகக் காட்சிப்படுத்துவனவாகும்.

இதே போலவே கற்பியலின் பிரிவாற்றாமை முதல் ஊடலுவகை வரையிலான 18 அதிகாரங்களும் கணவன் - மனைவி இருவரின் பல்வேறு சூழல்சார் உணர்வு நெருக்கங்களை வெவ்வேறு பரிமாணங்களில் நாடகப் பாங்காகக் காட்சிப்படுத்தி நிற்கின்றன. முன்னர் களவியலில் சந்தித்து உறவு கொண்ட காதலர்களே இங்கே கணவனாகவும் மனைவியாகவும் காட்சிப்படுத்தப்படுகின்றனர் என்பதே வாசகர்கள் புரிந்துகொள்ளவேண்டிய செய்தியாகிறது.

‘கூற்று முறைமை’ என்ற வகையிலே இங்கே கவனத்திற்குரிய முக்கிய அம்சம் ‘காமத்துப்பாலின் மிகப்பெரும் பகுதிப் பாடல்கள் தலைவன், தலைவி முதலிய பாத்திரங்களின் கூற்றுகளாகவே திகழ்வன’ என்பதாகும். குறுந்தொகை முதலான சங்க அகப்பாடல்கள் இவ்வகையான ‘கூற்றுமுறைமை’யில் அமைந்தனவே என்பதும் தொல்காப்பியப் பொருளதிகாரம் இவ்வாறான கூற்றுமுறைமைகளை விரித்துப் பேசியுள்ளன என்பதும் இங்கு தொடர்புபடுத்தி நோக்குதற்குரியனவாகும்.

இவ்வம்சங்களை நோக்கும்போது, மேற்சுட்டிய ‘சங்ககால அகத்திணை இலக்கிய ஆக்கமுறைமை’ மற்றும் ‘தொல்காப்பியப் பொருளதிகாரம் சுட்டிநிற்கும் அகத்திணை இலக்கிய மரபு’ ஆகியவற்றின் ஒரு ‘வரலாற்றுத் தொடர்நிலை’யையே திருக்குறளின் காமத்துப்பாலில் நாம் தரிசிக்கிறோம் என்பதை உறுதியாகக் கூறமுடிகின்றது.

இவ்வாறு மேற்படியான ‘அகத்திணைக் கோட்பாட்டு இலக்கண முறைமைகளைச் சார்ந்து உருவானபோதும் காமத்துப்பால் தனக்கெனத் தனியான அடையாளத்தையும் தெளிவாகவே இனங்காட்டி நிற்கிறது, என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. இவ்வகையில் இரு விடயங்கள் இங்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையனவாகும். இவற்றுள் ஒன்று, ‘உரிப்பொருளுக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம்’ ஆகும். அதாவது, ‘சங்க இலக்கியங்கள் மற்றும் தொல்காப்பியம் ஆகியன ‘முதற்பொருள்’ மற்றும் ‘கருப்பொருள்’களுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைத் திருக்குறளின் காமத்துப்பால் கொடுக்கவில்லை’ என்பதும் ‘உரிப்பொருளான உணர்வம்சத்துக்கே காமத்துப்பால் முக்கியத்துவமளித்துள்ளது’ என்பதுமே திருக்குறளின் காமத்துப்பாலின் முக்கிய தனித்தன்மையிலொன்றாக இங்கு நமது கவனத்துக்கு வருகின்றது.

தனித்தன்மை என்றவகையில் கவனத்துக்குவரும் இன்னொரு அம்சம், ‘பண்டைய அகத்திணை மரபின் ஊடல் என்ற உரிப்பொருள் அம்சம் எடுத்தாளப்பட்ட முறைமை’ ஆகும். அதாவது ‘ஊடலின் பின்புல அம்சமான பரத்தைமை’ என்ற விடயம் காமத்துப்பாலில் தவிர்க்கப்பட்டுள்ளது என்பதே இங்கு கவனித்தற்குரியதாகிறது. இவ்விரு அம்சங்கள் பற்றிய விளக்கங்கள் வருமாறு,

திருக்குறளில் ‘உரிப்பொருளுக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம்’ என்ற வகையில் கவனத்துக்குரிய முதலாவது அம்சம், அதன் பாவடிவத்தின் குறுகிய நிலை ஆகும். இது, ‘ஏழுசீர்களில் ஒன்றேமுக் கால் அடிகளில்’ அமைந்த பாவகையாகும். இது வெண்பா என்ற கட்டிறுக்கமான வடிவமைப்பின் குறுகிய கட்டமைப்பாகும். சங்கப்பாடல்கள் ‘ஆசிரியப்பா’ மற்றும் கலிப்பா வகைகளில் அமைந்தவை என்பதறிவோம். அப் பாவகைகள் உணர்வம்சங்களைச் சூழல்சார் பின்புல அம்சங்களுடன் விரிவாக எடுத்துரைக்க வாய்ப்பளிப்பவையாகும்.

திருக்குறளின் குறட்பாக்களின் மேற்படியமைந்த குறுகிய வடிவநிலையானது, மேலே நோக்கிய ஆசிரியப்பா மற்றும் கலிப்பா ஆகியனபோல ‘முதல்’, ‘கரு’ ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான எடுத்துரைப்புக்கு வாய்ப்பளிப்பதன்று. ‘உரி’பொருள் எனப்படும் தலைவன், தலைவி, தோழி முதலியோரின் உணர்வம்சங்களை’ எடுத்துரைப்பதற்கு மட்டுமே பயன்படக்கூடிய வடிவம் ஆகும். இவ்வாறான அதன் பயன்பாட்டுநிலைக்கு ஏற்பவே குறளாசிரியரும் காமத்துப்பாலில் அதனைக் கையாண்டுள்ளார் என்பதே ‘முதல்’ மற்றும் ‘கரு’ ஆகியன அப்பாலில் முகியத்துவம் பெறாமற் போனமைக்கான அடிப்படைக் காரணி எனலாம்.

அடுத்து, ‘பரத்தைமை’ என்ற விடயம் காமத்துப்பாலில் தவிர்க்கப்பட்டுள்ளமை தொடர்பாக நோக்குகையிலே, முதற்கண் ‘ஊடல்’ என்ற உணர்வம்சத்துக்கும் பரத்தைமை அல்லது பொதுமகளிர் நாட்டம் என்ற தலைவனின் செயற்பாட்டிற்கும் உள்ள தொடர்பு பற்றிய அகத்திணை மரபுசார் விளக்கமொன்று இங்கு அவசியமாகிறது.

ஊடல் என்பது கணவன் மீது மனைவிக்கு ஏற்படும் ‘உரிமையுணர்வோடு கூடிய கோபம்’ ஆகும். (இதனைச் சிறு கோபம் என்பது மரபு.) இக்கோபத்துக்குக் காரணமான கணவனின் செயற்பாடாகச் சங்க இலக்கியங்கள் மற்றும் தொல்காப்பியம் ஆகியவற்றில் சுட்டியுணர்த்தப்படுவது அவன் பிறபெண்டிரை - குறிப்பாகப் பொதுமகளிரை நாடும் நிலையேயாகும். சங்ககால அகத்திணைப் பாடல்களில் மருதத்திணைசார் பாடல்கள் காட்சிப்படுத்தும் ஊடற் காட்சிகள் கணவர்களின் இவ்வகைச் செயற்பாடுகளின் - அதாவது பொதுமகளிர் நாட்டங்களின் - மீதான கோபங்களாக வெளிப்படுவனவேயாகும். தொல்காப்பியத்தின் அகத்திணை மரபும் இவ்வாறான ஊடலையே சுட்டுகிறது.

மேற்சுட்டியவாறான கணவர்களின் பொதுமகளிர் நாட்டங்களானது ஒரு சமூக்குறைபாடு என்பதே அறநூல்களின் நிலைப்பாடாகும். அவ்வகையில் ‘திருக்குறள் அதனைத் திட்டமிட்டே கண்டிக்கவும் தவிர்க்கவும் முற்பட்டுள்ளது’ என்பதை அதன் பொருட்பாலில் இடம்பெற்றுள்ளதான ‘வரைவின் மகளிர்’ என்ற தலைப்பிலான 92-ஆம் அதிகாரம் மூலம் தெளிந்து கொள்ளலாம். அவ்வதிகாரம், ‘பரத்தைமையை சமூகத்தின் ஒழுக்கக் குறைபாடுகளில் ஒன்றாக அடையாளங்காட்டிக்’ கண்டிப்பதாகும். அதாவது ஓர் அறநூல் என்ற வகையில் திருக்குறளானது மேற்கொண்ட சமுதாய விமர்சனமாகவே அக்கண்டனம் அமைந்துள்ளதென்பது வெளிப்படை.

இவ்வாறு பொருட்பாலில் விமர்சிக்கப்பட்ட ஓர் அம்சத்துக்கு காமத்துப்பாலில் உரிய முக்கியத்துவத்தை வழங்கமுடியாது என்பதை குறளாசிரியர் உணர்ந்திருப்பார். அதேவேளை அகத்திணைமரபிலே ஊடல் தொடர்பான உணர்வம்சங்களுக்குரிய முக்கியத்துவத்தைப் புறக்கணித்து விடமுடியாது என்பதையும்கூட அறக்கருத்துகளைக் கூறும் பண்பாட்டுச் சிந்தனையாளரான அவர் உணர்ந்திருந்தார் என்பதை அவர் குறட்பாக்களில் அவற்றைக் கையாண்டுள்ள முறைமைகளின் ஊடாக தெளிவாகவே தெரிந்துகொள்கிறோம்.

காமத்துப்பாலிலே கற்பியலின் இறுதி மூன்று அதிகாரங்களான ‘புலவி’, ‘புலவிநுணுக்கம்’, ‘ஊடலுவகை’ ஆகிய தலைப்புகளிலான மூன்று அதிகாரங்கள் (131,132,133) இடம்பெற்றுள்ளன. இவை மூன்றும் ஊடலுணர்வுசார் வெவ்வேறு பரிமாணங்களைக் காட்டிநிற்பனவாகும். எனவே காமத்துப்பாலிலே ஊடல் அழுத்தமாகவே பேசப்படுகிறது என்பது வெளிப்படை. ஆனால் இங்கு சுட்டப்படும் ஊடல் சார்

உணர்வம்சங்களுக்கு தலைவனின் பரத்தைமை காரணமாகச் சுட்டப்படவில்லை என்பதை இங்கு நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

புலவி (131) என்ற அதிகாரத்திலே, தலைவியின் தவறான புரிந்துணர்வின் விளைவாகவே அவளுக்கு தலைவன்மீது ஊடல் ஏற்பட்டதாகக் காட்டப்படுகிறது. புலவி நுணுக்கம் என்ற அதிகாரத்தில் தலைவன் மீது தலைவி கொள்ளும் சந்தேகமே காட்டப்படுகிறது. அதற்கப்பால் பரத்தைமை பற்றிய எடுத்துரைப்புகள் ஆசிரியராலோ உரைகாரராலோ இங்கு சிந்திக்கப்படவில்லை என்பதே இங்கு நமது கவனிப்புக்குரிய செய்தியாகும்.

இதேபோன்று நிறை அழிதல் (126) என்னும் அதிகாரத்தில் 1258,1259 ஆகிய எண்களையுடைய இரு குறள்களில் பரத்தைமை தொடர்பான உணர்வுகளை இனம்காணமுடியும். அவை:

***‘பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்***
***பெண்மை அடைக்கும் படை’***

***‘புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்***
***கலத்தல் உறுவது கண்டு’***

இவற்றில் முதற்குறளிலுள்ள ‘பன்மாயக் கள்வன் பணிமொழி என்ற தொடரானது சங்க இலக்கியத்தில் கூறப்படுவதைப் போன்று ‘பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் ஊடல் தணிக்கக் கூறும் பணிந்த மொழியை’ நினைவுக்கு இட்டுவருவது. ஆனால் உரைகாரர் எவரும் இதனை பரத்தைமை சார்ந்த தாகச் சுட்ட முற்படவில்லை என்பதும் இங்கு நோக்குதற்குரிய முக்கிய செய்தியாகும்.

மேற்கூறிய இரண்டாவது குறட்பாவில் ‘என்நெஞ்சம் முன்னரேயே அவனுடன் கலந்துவிட்டதால் ஊடவேண்டுமென்ற எண்ணம் பிற்தள்ளப்பட்டுவிட்டது’ என்று தலைவி கூறுகிறாள். பெண்மையின் பேதைமையை உணர்த்தும் வகையிலான இவ்வுத்திமுறையை கலித்தொகையின் 67-ஆம் பாடலிலும் காணமுடிகிறது. அங்கு அது பரத்தமையை சார்ந்த கூற்றாக அடையாளப்படுத்தப்படுவது. ஆனால் இங்கே அது அவ்வாறாக உரையாசிரியர்களால் அடையாளம் காட்டப்படவில்லை. எனவே காமத்துப்பாலில் காட்சிப்படுத்தப்படும் ஊடல்சார் உணர்வம்சங்கள் பற்றிய எடுத்துரைப்புகளில் கணவனின் பரத்தைமை என்ற அம்சம் திட்டமிட்டே தவிர்க்கப்பட்டுள்ளமையை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

இதுவரை அகத்திணை மரபைக் கையாள்வதில் காமத்துப்பால் புலப்படுத்திநின்ற தனித்தன்மைகள் என்ற வகையிலான சில முக்கிய அம்சங்களை நோக்கினோம். இவ்வாறான குறித்த சில அதிகாரங்கள் மற்றும் குறட்பாக்கள் ஆகியவற்றை அகத்திணை மரபுகளில் பொருத்தி நோக்கிப் பொருள் கொள்வதில் உரைகாரர்களுக்கிடையே சில சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன.

காமத்துப்பாலில் ‘முதல்’ மற்றும் ‘கரு’ ஆகியன முக்கியத்துவம் பெறாமையால் அதன் அதிகாரங்கள் சிலவற்றுக்குத் ‘திணை’, ‘துறை’ வகுத்தல் மற்றும் பொருளுரைத்தல் ஆகியவற்றில் உரைகாரர்கள் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். இவ்விடயம் தனியானதொரு ஆய்வுக் கட்டுரையிலே நோக்குவதற்குரிய பொருட்பரப்புக்கொண்டதாகும். எனவே அதனை இங்கு தவிர்த்துக்கொள்கிறேன்.

அடுத்து இக்கட்டுரையை நிறைவுக்குக் கொண்டுவரும் நிலையில் குறிப்பாக இலக்கிய உருவாக்க வரலாற்றில் காமத்துப்பால் செலுத்தியுள்ள செல்வாக்கு தொடர்பான ஒரு முக்கிய அவதானிப்பை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். அவ்வகையில் இங்கு கவனத்திற்கு வரும் அவ்விடயம், பின்னாளில் எழுந்த ‘கோவை’ என்ற ‘சிற்றிலக்கிய வகை’க்கு இக்காமத்துப்பாலே முன்னோடியாக அமைந்ததென்பதாகும். கோவை என்ற இலக்கிய வகையானது அகத்திணை சார்ந்த உணர்வம்சங்களை பொருட்பொருத்தமுற வரிசைப்படுத்தி நாடகப்பாங்காக எடுத்துரைக்கும் ஆக்க முறைமையாகும். தலைவன் - தலைவி ஆகியோரின் முதற் சந்திப்பில் தொடங்கி திருமணம் மற்றும் திருமணத்துக்குப் பின்னரான வாழ்க்கை ஆகியவற்றில் அவர்கள் பெறும் அனுபவங்கள் சார்ந்த உணர்வம்சங்களை உள்ளடக்கியதாக அவ்விலக்கிய வகை அமையும். குறிப்பாக, ‘திருக்கோவையார்’, ‘தஞ்சைவாணன் கோவை’ முதலிய கோவை வகைசார் பிரபந்தங்கள் இவ்வகை உள்ளடக்க அமைப்புக் கொண்டவையாகும். இவ்வாறான கோவை அமைப்புக்கு முன்னோடியாக அமைந்ததே திருக்குறளின் காமத்துப்பால் என்பதே நாம் இங்கு அவதானிக்கக்கூடிய செய்தியாகிறது.

## நிறைவுரை:

திருக்குறளின் காமத்துப்பாலானது அதற்கு முற்பட்ட கால அகப்பொருள் மரபை அடியொற்றிய ஓர் ஆக்கம் என்பதும், அவ்வாறு மரபின் தொடர்ச்சியாக அது அமைந்தபோதும் தனக்கெனத் தனியான பண்புகளைக் கொண்டதாகத் திகழ்கின்றதென்பதும் மேலே நோக்கப்பட்டன. அத்துடன், பிற்கால அகத்திணை நூலாக்கங்களுக்கு ஒரு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் இது திகழ்கிறது என்பதையுங்கூட மேலே சுருக்கமாக நோக்கினோம். இத்தொடர்பில் மேலும் ஆய்வுகள் நிகழ்த்தும் எண்ணம் உளது என்பதான எனது ஆர்வத்தையும் தெரிவிப்பதோடு இவ்வாய்வுக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

### இக்கட்டுரையாக்கத்திற்குத் துணைநின்ற நூலும் கட்டுரையும்:


- திருக்குறள் உரைக்கொத்து [காமத்துப்பால்], திருப்பணந்தாள் ஸ்ரீகாசிமட வெளியீடு. 1970
- முனைவர் இந்திராணி மனுவேல், ‘திருக்குறள் காமத்துப்பால் அகமரபு’, வள்ளுவம், இதழ் 20, திருவள்ளுவர் ஆண்டு 2033 (பொ ஆ பி .2002), பக்.17-29




kawsalya.s@thaiveedu.com

# மகாகவி பாரதியின் மாண்புறு சீடர்கள்



## கண்ணனும் கனகலிங்கமும்

கிருங்கை சேதுபதி

மகாகவி பாரதிக்கு வாய்த்த சீடர்கள் எத்தனையோ பேர். அவர்களுள் அவரே, தனக்குச் சீடர்களாக அமைத்துக் கொண்டவர்கள் இருவர். ஒருவர் எங்கிருந்தோ வந்த குவளைக் கண்ணன். மற்றொருவர் இங்கிருந்தே தன் பக்திப் பணிவால் பாரதியைத் தன்பால் ஈர்த்துக்கொண்ட கனகலிங் கம். கண்ணனும் கனகலிங்கமும் பாரதியின் இரு கண்கள் எனக் கொண்டால் மிகையாகாது.

***...கனத்தபுகழ்க் குவளையூர்க் கண்ணன் என்பான்
பார்ப்பாரக் குலத்தினிலே பிறந்தான் கண்ணன்
பறையரையும் மறவரையும் நிகராக் கொண்டான்...***

என்று (பாரதியறுபத்தாறு - 42) குவளைக்கண்ணனைப் பாடும் பாரதியார்,

***'நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் இந்த
நாட்டினில் இல்லை'***

என்று (உயிர் பெற்ற தமிழர் பாட்டு - 4) பொதுவாகப் பாடிய பாடலையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்தம் சுட்டும் விழிச் சுடரின் முன் கண்ணனும் கனகலிங்கமும் நேருற நிற்கும் காட்சி தெரியும். இவர்கள் இருவர் மட்டுமல்லர், அவர் காணும் எவரும் சரிநிகர் சமானமானவர்களே.

***'மனிதரில் ஆயிரம் ஜாதி என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை'***

என்பது பாரதியின் கோட்பாடு.

இதில் வியப்பு என்னவெனில், கண்ணனும் கனகலிங்கமும் பாரதி பாசறையில் ஒருசாலை மாணாக்கராகு முன்பே, புதுவை கல்வே கல்லூரி என்னும் பள்ளியில் ஒருசாலை மாணாக்க ராகப் பயின்று வந்தவர்கள் என்பதுதான். பாரதியைச் சந்திக் கும் முன்னும் சந்தித்த பின்னும் குவளைக்கண்ணனின் பண்பு கள் எவ்வாறிருந்தன என்பதை, ரா. கனகலிங்கம், தனது, 'என் குருநாதர்' நூலில், 'குவளைக்கண்ணனின் குணாதிசயங்கள்' என்ற தலைப்பின்கீழ் தொகுத்துச் சுட்டியிருக்கிறார். அதில் பாரதியின் பராக்கிரமமும் பதிவாகியிருக்கின்றன.

### பள்ளிப் பருவ நினைவுகள்:

யாரே ஆகினும் தன் பள்ளிப் பருவ நினைவுகளைச் சொல்லும் போது, அந்த வயதிற்குள்ளேயே போய்விடுவதுண்டு. அதற் குக் கனகலிங்கமும் விதிவிலக்கானவர் அல்லர்.

பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுத்தவர்கள் ஆசிரியர்கள். ஞானம் போதித்தவர் குருநாதர் என்கிற தெளிவு அவருக்கு உண்டு. அதனால், இவ்விருவரையும் நினைவுபடுத்தி எழுதும் ரா. கனகலிங்கம், பள்ளி ஆசிரியர்களை அக்கால வழக்கப்

படி, ‘உபாத்தியாயர்கள்’ என்றும், பாரதியாரைக் ‘குருநாதர்’ என்றும் இப்பதிவில் குறித்திருக்கிறார்.

‘குவளைக்கண்ணனின் குணாதிசயங்கள்’ என்ற தலைப்பிட்டு அவர் எழுதுகிறார்.

‘என் குருநாதர் புதுவையில் அடிவைத்தபோது அன்னவருக்குக் கிடைத்த நண்பர் குவளைக்கண்ணன் என்ற ஸ்ரீ. கிருஷ்ண மாசாரியார்தான். நானும் குவளைக்கண்ணனும் புதுவைக் கல்வே உயர்தரப் பள்ளியில் ஒன்றாக வசித்து வந்தோம். அப்போது ஸ்ரீ.வி.ஏ. சுவாமிநாத ஐயர், பி.ஏ., எல்.டி., ஹெட் மாஸ்டராகவும், ஸ்ரீ. சூசை ரெட்டியார் அடுத்த தலைமை ஆசிரியராகவும் இருந்து வந்தார்கள். எங்கள் வகுப்பு உபாத்தியாயர் ஓர் ஐயங்கார். சுமார் 38 வருடங்கள் கழிந்துவிட்டதால் அவர் பெயர் மட்டும் ஞாபகத்திற்கு வரவில்லை. தலையில் மேல் தலைக்குட்டை, மேலே நீண்ட கோட்டு, இடையில் கரை வேட்டி, நெற்றியில் பட்டை நாமத்துடன் அவர் பள்ளிக்கு வருவார். அவருடைய மூக்கு நீண்டிருந்தமையால், ‘கொம்பேறி மூக்கன் வாத்தியார்’ என்று நாங்கள் வேடிக்கையாக அவரை அழைப்பது வழக்கம்.

(இது எழுதப்பட்டு அச்சேற்றம் கண்ட காலம், 1947. அதற்கு முன்னதாக, 38 ஆண்டுகள் என்றால் எவ்வளவு என்பதை நாம் கணக்கிட்டுக் கொள்ளலாம்) அவர்களது வகுப்பறை நினைவின் பதிவு. பணிக்கு வந்த ஆசிரியர்களின் தோற்றம் இவ்வாறு என்றால் உடன் பயில வந்த குவளைக்கண்ணனின் தோற்றம் எவ்வாறு இருந்திருக்கும்? அதையும் அவரே எழுதுகிறார்.

‘எனது நண்பர் குவளைக்கண்ணன் பள்ளிக்கூடத்திற்கு வரும்போது சட்டை எதுவும் போட மாட்டார், ஓர் அங்கவஸ்திரத்தை மட்டும் போர்த்திக்கொண்டு புத்தகத்துடன் வருவார். நெற்றியில் பட்டை நாமம் துலங்கும். பள்ளியில் படிக்கும்போது மிகவும் வைதிகமாகவே இருந்துவந்தார். படிப்பை விட்ட பின்னர் அவர் உத்தியோகம் எதுவும் செய்ய நான் பார்த்ததில்லை.’

## குருநாதர் சொல் கேட்ட குவளைக் கண்ணன்:

பாரதியார் புதுவையில் புகுந்த ஆண்டு, 1908 இறுதிக் காலம். அப்போது எங்கிருந்தோ வந்த கண்ணன்தான் எல்லாமாகி நின்று உதவியிருக்கிறார். கைகாட்டி விலகிக் கொள்ளாமல், அவர்தம் காரியம் யாவினுக்கும் இயன்றவரை கைகொடுத்திருக்கிறார். இவரில்லாமல் பாரதிக்கு எந்தப் பணியும் நடக்க இயலாது என்ற நிலை. இந்தக் காலகட்டத்தில், படிப்பு முடித்துப் பணி தேடத் தொடங்கியிருக்கிறார் குவளைக் கண்ணன்.

புதுவைக் கல்வே கல்லூரி என்னும் உயர்தரப் பள்ளியில் பயின்ற குவளைக் கண்ணன், படிப்பேறாத நிலையில் இல்லை. தாய்மொழியாகத் தமிழைக் கொண்டிருந்த அவர், ‘ஆங்கிலம், பிரெஞ்சு இரண்டிலும் அறிவு வாய்ந்தவர்.’ என்கிறார் அவரை நேரில் சந்தித்த கவியரசு கி.வா. ஜகந்நாதன். தேடிய பணி கிட்டியபோதிலும், அங்கு செல்ல முடியாத நிலை, குவளைக் கண்ணனுக்குக் குருவால் வாய்த்தது. இதனை அவரே சொல்லக் கேட்ட கி.வா.ஜ. எழுதுகிறார்.

1912-ஆம் வருடம் ‘ராலி’ கம்பெனியிலிருந்து உத்தியோகம் தருவதாகக் கடிதம் வந்ததாம். அதைக் கிருஷ்ணமாசாரியார் பாரதியாரிடம் கொண்டுபோய்க் காட்டினார். அந்த மனுஷ்யர் சிறிதேனும் தயவுதாட்சண்யமின்றி அதைக் கிழித்துப் போட்டுவிட்டாராம். திருவண்ணாமலையில் அந்தக் கம்பெனியார் சில வேலைகளை நடத்தி வந்தபடியால், அங்கே வரும்படி கிருஷ்ணமாசாரியாருக்கு உத்தரவு வந்திருந்தது.

பாரதியார் உத்தரவைக் கிழித்துப் போட்டவுடன் கிருஷ்ணமாசாரியார், ‘என்ன இப்படிச் செய்துவிட்டீர்களே?’ என்றார்.

‘கிருஷ்ணா, நீ திருவண்ணாமலைக்குப் போய்விட்டால், எனக்கு இங்கே யார் துணை?’ என்று பாரதியார் கேட்டார்.

‘வாஸ்தவம். நமக்கு இவர் துணை; இவருக்கு நாம் துணை’ என்ற திருப்தியோடு அவர் இருந்துவிட்டார்.’

இது அந்த நேரத்தில் வந்த திருப்தி அன்று. அவர்தம் ஆயுட்காலம் முழுக்கவும் அடைந்த திருப்தி. நிறைவுக்காலத்தில் அவர்தம் வாக்காகவே கேட்ட கி.வா.ஜ. இதனையும் பின் வருமாறு பதிவிடுகிறார்.

‘நான் ஏழை; அறிவில்லாதவன். அவர் எனக்கும் தமது செய்யுட்களிலே ஒரு ஸ்தானம் கொடுத்திருக்கிறார். கிருஷ்ணா, பொருட்செல்வம் அழிந்து விடுமடா; கவிச் செல்வம் தருகிறேன் உனக்கு’ என்று சொல்லியிருக்கிறார்... ‘இந்த வார்த்தைகளைக் குவளைக் கிருஷ்ணமாசாரியாரோடு பழகிய யாவரும், ஒரு முறையல்ல, பலமுறை கேட்டிருப்பார்கள்: இந்தச் சந்தோஷத்துக்கு ஈடும் உண்டோ?’

இது இப்போது இனிக்கலாம். போராட்டக் களத்தில் இருந்த காலத்தில் எப்படி இருந்திருக்கும்? துணிவும் குருவிடம் காட்டிய பணிவும் இல்லையென்றால் கண்ணனுக்கு இது வாய்க்குமா? குருநாதருக்குத் தொண்டாற்றினாலும், வருமானத்திற்கு வழியும் வேண்டுமல்லவா?

## குவளைக் கண்ணனின் பட்டாசாரியர் பணி:

பணியேதும் இல்லாமல் இருந்தாலும் பசிக்கு உணவு வேண்டுமல்லவா? தன் குலத்தொழிலையே (பெருமாள் கோயிலில் பட்டாசாரியார் பணியைக்) குவளைக் கண்ணன் மேற்கொண்டிருக்கிறார் என்பது ஓரளவிற்குத் தெரிய வருகிறது. பள்ளி விட்டு நின்ற பிறகு, குவளைக் கண்ணனைக் கண்ட இடம் எதுவென்று கனகலிங்கம் சொல்கிறார்.

‘புதுவைப் பெருமாள் கோவிலில் பட்டாசாரியராக இருந்து வந்தார் என்று நான் கேள்விப்பட்டதுண்டு. ஆனால், இரண்டொரு சமயங்களில், புதுவை நீதிஸ்தலத்தில் சாட்சிகளாக வரும் பிராமணரல்லாதாருக்கு அவர் துளசித் தீர்த்தம் கொடுக்கும்போது நான் பார்த்திருக்கிறேன். அக்காலத்தில் புதுவைக் கோர்ட்டுகளில் சாட்சிகள் பிரமாணம் செய்வதற்காக, முஸ்லிம்களுக்காக விருத்தாப்பிய முஸ்லிம் ஒருவர் குர்ஆன் புத்தகத்துடனும், பிராம்மணரல்லாதார்களுக்காக ஐயங்கார் துளசித் தீர்த்தப் பாத்திரத்துடனும், ஹரிஜன சமூகத்தாருக்காக வள்ளுவப் பண்டாரம் ஒருவர் துளசித் தீர்த்தப் பாத்திரத்துடனும் காட்சியளிப்பார்கள். கிறிஸ்தவர்களுக்காக ஒருவரும் கிடையாது, அவர்கள் கையைமட்டும் தூக்கிப் பிரமாணம் செய்ய வேண்டியதுதான். ஆனால், இப்போது இந்த வழக்கங்கள் எல்லாம் நீங்கி எல்லா வகுப்பாரும் கையைத் தூக்கிச் சத்தியம் செய்யவேண்டிய முறை ஏற்பட்டிருக்கிறது.

## மகாகவி பாரதியின் மாண்புறு சீடராக:

வயிற்றுப்பாட்டுக்கு, இந்தப் பணி என்றாலும் தன் வாழ்க்கைப் பாட்டிற்கு பாரதியே கதி என்று சரணடைந்து கொண்டவர்

குவளைக் கண்ணன். அவரது குருபக்தி அளப்பரியது. அதையும் ரா. கனகலிங்கம்,

‘பாரதியார் குவளைக்கண்ணனிடம் அளவு கடந்த அன்பு பாராட்டி வந்தார். அவர் விருப்பத்திற்குக் கண்ணன் இரண்டு சொல்லமாட்டார். நாள்தோறும் பாரதியாரைத் தரிசிக்காமல் இருக்க மாட்டார்’ என்று விளக்குகிறார்.

வைதீக ஐயங்காராக இருந்த குவளைக் கண்ணன் பாரதி இல்லத்தில் எவ்வாறு இருந்தார்? அவர்தம் பண்பும் செயலும் எத்தகையனவாக இருந்தன என்பதைப் பார்த்தும் பழகி அனுபவித்தும் தெரிந்துகொண்டவர் கனகலிங்கம்.

அவர், ‘பாரதியார் வீட்டில் என்னைக் கண்டுவிட்டால், ‘கனகலிங்கம்! கனகலிங்கம்!’ என்று புன்சிரிப்புடன் அன்போடு அழைத்து அருகில் உட்கார வைத்துக் கொள்வார்.

ஈசுவரன் தருமராஜா, கோவில் வீதியில் 10-வது எண்ணுள்ள வீட்டில் பாரதியார் குடியிருந்தபோது குவளைக்கண்ணனை நான் அடிக்கடி பார்ப்பதுண்டு, பள்ளியில் படிக்கும்போது காட்டிவந்த வைதிகமெல்லாம் பாரதியாரின் அன்பைப் பெற்ற பின் எங்கே போய் ஒளிந்துகொண்டதோ தெரியவில்லை’ என்கிறார்.

இந்த மாற்றத்திற்குக் காரணம், பாரதியார் அவருக்குச் செய்த உபதேசம். அது யாது?

## பாரதியார் செய்த உபதேசம்:

‘பறையனுக்குப் போஜனம் செய்வித்துப் பக்கத்திலிருந்து சாப்பிட்டால் நீ மனுஷ்யனிடம் அன்புடையவனாக விளங்குவாய்!’ என்று குருநாதர் குவளைக்கண்ணனிடம் அடிக்கடி சொல்லிவருவார்.

என்னைப் பார்த்து, ‘அதோ கனகலிங்கம் வருகிறான். அவனைப்பார்த்து யாராகிலும் பறையன் என்று சொல்லுவார்களா?’ என்று கேட்பார்.

இதே கேள்வியை அவர் புரட்சிக் கவிஞர் ஸ்ரீ. பாரதிதாசனிடமும் அடிக்கடி கேட்பதுண்டு’ - இது ரா. கனகலிங்கம் எழுதும் உபதேச உண்மை.

## அந்தக் காலத்தில்...

இன்றைக்கு இது எளிது. ஜாதி வெறியும் மதத் துவேஷமும் நிறைந்த அக்காலத்தில், தன்னளவில் மட்டுமன்றித் தன் சீடர்களிடத்தும் இந்நெறி பரப்பி வாழ்ந்துகாட்டுதல் என்பது அவ்வளவு எளிதன்று. முற்றிலும் புதிய இடத்தில், மற்றொரு நாட்டிற்கு அடிமைப்பட்டுக்கிடந்த ஒரு பிரதேசத்தில், தன்னந்தனி நபராய் வந்து வாழ்கின்ற ஒருவர் இத்தகு முயற்சிகளில் இறங்கித் தன் சொந்த ஜாதியையே பகைத்தும், தன் சீடர்களைத் தன்வசப்படுத்தி நெறிப்படுத்தியும் ஆட்கொள்ளுதல் என்பது எவ்வளவு கடினம்? இதனை நன்கு உணர்ந்த பாரதியின் சீடர் ரா. கனகலிங்கம், அக்கால அரசியல், சமூகச் சூழல்களைப் பின்வருமாறு விவரிக்கிறார்.

‘அந்தக் காலத்தில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்றையும் கொள்கைகளாகக் கொண்ட குடியரசின் கீழிருந்த புதுவை நீதிஸ்தலங்களிலேயே ஜாதி வித்தியாசங்கள் இருந்தன என்றால், கோவில், ஹோட்டல், சவரக் கூடம், நாடகக் கொட்டகை முதலான இடங்களில் சொல்லவும் வேண்டுமா? ஜாதி வேற்றுமைகள் தலைவிரித்தாடிய அக்காலத்தில், கூண்டில் அடைபட்ட கிளியைப் போலிருந்த பாரதியாரால் என்ன செய்ய முடியும்? தேர்தல் காலத்தில் எங்கும் அடிதடி நடக்கும். பாரதியார் எதற்கும் அஞ்சாமல், ஜாதி வித்தியாசம் பார்க்கும் மடமையை விளக்கி, ‘பறையர்களை ஏன் கோவிலுக்குள் அனுமதிக்கக் கூடாது?’ என்று கேள்வி கேட்டு, அனுமதிக்க வேண்டும் என்பதற்குத் தக்க ஆதாரங்களுடன் விளக்கி, ‘கோவில் திருத்தம்’ என்ற ‘நோட்டீஸ்’ எழுதித் துணிவுடன் வெளியிட்டார். அதில் குவளைக்கண்ணனைக் கையொப்பமிடச் செய்திருந்தார்.

இதனைக் கண்ணுற்ற பெருமாள்கோவில் ஐயங்கார்கள் குவளைக்கண்ணனிடம் கோபாவேசம் கொண்டு, சந்நிதியில் அவர் நிற்கும்போது கோஷ்டியில் சேர்க்காமல், ஜாதிப்பிரஷ்டம் செய்தவரைப் போல ஒதுக்கமாக வைத்துத்தான் தீர்த்தம் கொடுத்து வந்தார்கள் என்பதைப் பாரதியார் அனந்தம் தடவைகள் என்னிடம் சொல்லியிருக்கிறார்.’

இது பொய்யில்லை. புனைவில்லை. கற்பனையும் இல்லை. கனகலிங்கம் என்கிற பாரதி அன்பர் கண்களால் கண்டது. காதால் கேட்டது. நேரில் அனுபவிக்க நேர்ந்தது. இதெல்லாம் பாரதி என்கிற இலட்சியவாதிக்குச் சரி. அவரைக் குருவாகக் கொண்டு வாழ்ந்த குவளைக்கண்ணனுக்கு?

குருவே சரணம் என்று சரணாகதி அடைந்த பின்னர் வேறு எவர் அவரை மாற்றிவிட முடியும்? தன் நிலை தாழாது இறுதி வரை அவர் இருந்த திறத்தைக் கனகலிங்கம் சொல்கிறார்.

‘ஐயங்கார்களின் பூச்சாண்டிகளுக்கெல்லாம் குவளைக்கண்ணன் அஞ்சினவரல்லர். கடைசிவரை பாரதியாரின் விசுவாசத்தையும் நட்பையும் கைவிடாமல் ஒழுகிவந்தார். பாரதிதான் அவரைக் கெடுத்துவிட்டார் என்று பலரும் சொல்லிவந்தனர். அதையும் அவர் காதில் போட்டுக் கொள்ளாமல், பாரதியார் வீட்டுக்கு அடிக்கடி போய்வந்துகொண்டிருந்தார்.’

இந்த மாற்றமும் ஏற்றமும் திடீரென்று குவளைக் கண்ணனுக்கு வந்ததென்று சொல்ல முடியாது. படிப்படியாக அவரைப் பரிணமிக்க வைத்தவர் பாரதியார். அதனைத் தன் வாக்காகக் கண்ணனும் தந்திருக்கிறார். அது தனித்துக் காண வேண்டியது.

## நிறைவாக...

அன்றைக்குக் கனவாக இருந்த பாரதியின் செயற்றிட்டங்கள் பல இன்றைக்கு நனவாகி வருகின்றன. நாள்தோறும் நடைமுறையில் இருக்கின்றன. அதில் ஒன்று, ஆலயங்களில் அரிஜனப் பிரவேசம். அதை அக்காலத்திலேயே நேருறக் கண்டவர், ரா. கனகலிங்கம். குவளைக் கண்ணனின் குணாதிசயங்கள் பற்றிக் குறிப்பிட்ட அத்தியாயத்தை அவர் இப்படி முடிக்கிறார்.

‘இப்போது ஹரிஜன மக்கள் புதுவைப் பெருமாள் கோவிலுக்குச் சென்று பெருமாளை வணங்கும் பாக்கியம் பெற்றுவிட்டார்கள். அன்று பாரதியார் கேட்ட கேள்விக்குப் பதிலாக இன்று எல்லோருக்கும் சம உரிமை கிடைத்திருக்கிறது.’

உண்மைதானே. குருநாதரின் கொள்கைக்கு உடன்பட்ட சீடர்கள் சொல்வது எப்படிப் பொய்யாகிப் போகும்?



sethupathi@thaiveedu.com




# மகாவம்சம்

## ஏழாம் அத்தியாயம்

# விஜயனின் பட்டாபிசேகம்

**இதுவரை...**

- ஈழத்து வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சத்தின் உண்மைத் தன்மை ஆராயப்படுகிறது.
- மகாவம்சத்தின் முதல் நான்கு அத்தியாயங்களிலும் கூறப்படும் வட நாட்டு அரச பின்னணி, பௌத்த மதமும் அதன் பிரிவுகளும் ஏற்படுவதற்கான பின்புலத்தை விளக்குவதாய் காணப்படுவதோடு இந்நூலுக்கு முகவுரையாகவும் அமைந்திருக்கின்றன.
- அரச உரிமைப் போராட்டம் தொடர்ந்தது. ஈற்றில், சந்திரகுப்தன் என்னும் பேரரசன் ஜம்புத்வீபம் முழுமையையும் 24 ஆண்டுகள் ஆட்சி செய்தான். சந்திரகுப்தனின் பின் அவன் மகன் பிந்துசாரன் 28-ஆண்டுகள் ஆட்சி செய்தான். பிந்து சாரனின் பின் அவனது மகனான அசோகன் தன் சகோதர்களைக் கொன்று அரசனானான். அசோகன் முடிசூடிக் கொண்டபோது புத்தர் நிர்வாணம் அடைந்து 218-ஆண்டுகள் ஆகிவிட்டன. அசோகனே பௌத்த மத வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட மன்னனாவான்.
- அசோகன் நாடெங்கிலும் பெருமளவிலான பௌத்த விகாரைகளைக் கட்டினான், அசோகன் காலத்தில் பல பிரபல்யமான பௌத்த பிக்குகள் தோன்றிப் பௌத்தத்தை வளர்த்தனர். மகாகாலன் என்னும் நாக மன்னன், புத்தரின் அழகிய உருவத்தைப் படைத்தான்.
- தேரவாத மரபு முதல் 100-ஆண்டுகளில் ஒன்றாகவும் ஒன்றுபட்டதாகவும் இருந்தது. அதன் பின் பிற தர்மக் கோட்பாடுகள் எழுந்தன. தவறான வழியில் நடந்த 10,000 பிக்குகளும் மஹா சம்ஹிகை என்ற ஒன்றை அமைத்தனர். மஹா சம்ஹிகையிலிருந்து கோகுலிகா, ஏகவியோகாரிகா பிரிவுகள் ஏற்பட்டன.
- மகாவம்சத்தின் 5-ஆம் அத்தியாயம் மூன்றாம் மகாசபையுடன் முற்றுப் பெற்றது.
- அசோகச் சக்கரவர்த்தியின் (பொ.ஆ.மு. 3-ஆம் நூற்.) கிர்னார் இரண்டாம் பாறைக் கல்வெட்டு வாசகங்களில், ஈழம் 'தம்பபரணி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அசோகச்சக்கரவர்த்தி காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தின் தெற்கேயும் அதன் கீழேயுமிருந்த நிலப்பரப்புக்களுக்கும் பௌத்தம் பரப்பும் முயற்சி நடந்திருக்கிறது என்பதை இப்பாறைக் கல்வெட்டு விதந்து உரைக்கின்றது.

**தொடர்கிறது...**

புத்தர் நிர்வாணப் படுக்கையில் இருந்த போது, அவருடனிருந்த சக்கனிடம் (இந்திரன்) 'சிம்மபாகுவின் மகன் விஜயன், லாலா நாட்டிலுருந்து 700 பேருடன் இலங்கைக்கு வந்திருக்கிறான். இலங்கையில் என் மதம் நிலைபெறுவதற்காக, விஜயனையும் அவனைச் சார்ந்தவர்களையும் இலங்கையையும் கவனமாகப் பாதுகாப்பாய்' என்று கூறினார்.

---

*இங்கு, விஜயன், அவன் நண்பர்கள் 700 பேருடனும் குடும்பத்தினருடனும் இலங்கை வருவதான செய்தி, புத்தரால் முன்னரே எதிர்பார்க்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக இணைக்கப்பட்டுள்ளது. புத்தருக்கும் இலங்கைக்குமான தொடர்பு மகாவம்சத்தில் கூறப்படுகிறது. இந்திரன் இப்பொறுப்பை நீல வண்ணனிடம் (விஷ்ணு) ஒப்படைத்தான்.*

*பகவத்கீதை பிற்காலத்தில் எழுதப்பட்டது. எனவே, இது, தெய்வீகக் காரணங்களுக்காக, மூலக் கதையுடன் இணைக்கப்பட்டிருக்கலாம்.*

---

நீலவர்ணனான விஷ்ணு ஒரு நாடோடித் துறவிக் கோலத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார். விஜயனுடன் வந்தவர்கள் இவரிடம் வந்து 'இது என்ன தீவு' என்று கேட்டனர். அவர், 'இலங்கைத் தீவு' என்று பதிலளித்தார். அத்துடன், வந்தவர்கள் சௌகரியமாகத் தங்கும் விதமாக 'இங்கு மனிதர் யாரும் கிடையாது. எனவே அபாயம் எதுவும் நேராது' என்றும் சொல்லி, கமண்டலத்திலிருந்து நீரை எடுத்து அவர்கள் மேல் தெளித்தார். அத்துடன் கையில் நூலினால் காப்புக் கயிறு கட்டிவிட்டு மறைந்தார். கமண்டலம், கையில் காப்புக்கட்டுதல், நீர் தெளித்தல் என்பவை, இலங்கைத் தீவில் ஏற்கெனவே இருந்த வழக்காக இருந்திருக்கலாம்.

அவ்விடத்தில் நாய் வடிவில் ஒரு யட்சிணி தோன்றினாள். இவள் குவன்னா என்பவளின் பரிவாரத்தைச் சேர்ந்தவள். விஜயன் தரப்பினரில் ஒருவன் நாயின் பின் சென்றான். நாய் இருக்குமானால் அருகில் கிராமம் இருக்கவேண்டும் என்னும் அனுமானத்தில் நாயைப் பின் தொடர்ந்தான். நாய் உருவில் இருந்த யட்சிணியின் எஜமானி குவன்னா என்பவள் மரத்த டியில் இருந்து நூல் நூற்றுக் கொண்டிருந்தாள். அவள் சந்நி யாசினி போல் காணப்பட்டாள். வந்தவன் அருகிலிருந்த குளத்தில் நீராடி, நீர் பருகி, தாமரை இலையின் இளம் மொட் டுக்களையும் தாமரை இலையில் தண்ணீரையும் மொண்டு கரையேறினான். குவன்னா, அவனை நோக்கி, 'நில். நீ எனக்கு உணவு' என்றாள். அவனும் கட்டுப்பட்டவனாக நின்றான். ஆனால், மந்திர கவசத்தின் சக்தியால் அவளால் அவனை விழுங்கமுடியவில்லை. யட்சிணி கவசத்தை எடுத்துவிடும்படி கேட்டும் அவன் உடன்படாமையால் அவனைத் தூக்கி எறிந்தாள். இவ்வாறு எழுநூறுபேரும் வீசப்பட்டார்கள். போன வர்கள் திரும்பிவரக் காணாத விஜயன் அவர்களைத் தேடிக் கொண்டு புறப்பட்டான்.

மரத்தடியில் சன்னியாசி உருவில் யட்சிணியை மட்டும் கண் டான். அவளிடம் தன் நண்பர்களைப் பற்றி விசாரித்தான். அதற்கு அவள், 'இளவரசே இத்தடாகத்தில் இறங்கி நீர் பரு கிக் குளிக்கலாமே' என்றாள். இவள் ஒரு யட்சிணி என்பதை உணர்ந்து கொண்ட விஜயன், வில்லை வளைத்தபடி அவளை நெருங்கி, அவள் கழுத்தில் வில்லை மாட்டித் தன் நண்பர் களைப் பற்றி வினாவினான். அவனது கொலை மிரட்டலுக்கு அஞ்சிய யட்சிணி, அவனுக்கு ஒரு இராச்சியம் தருவதாகவும் அவனுக்குச் சேவை செய்வதாகவும் ஒத்துக் கொண்டு நண்பர் களை மீட்டுத் தந்தாள். அவர்களுக்கு உணவுப் பண்டங்கள் கொடுக்கப்பட்டன. அவர்கள் சமைத்த உணவை உட்கொண்ட யட்சிணி திருப்தியடைந்தாள். 16 வயதுப் பருவ மங்கையாக உரு மாறினாள். விஜயனும் நல்ல காலத்தை எதிர்நோக்கி அவளைத் துணையாகக் கொண்டான்.

இரவு நேரம், இசை ஒலி விஜயன் காதிற்கு எட்டியது. அவ் வோசை பற்றி யட்சிணியிடம் விசாரித்தான். அதற்கு அவள், எல்லா யட்சர்களையும் கொன்றுவிடவேண்டும். இல்லாவிட் டால் அவர்கள், நான் மனிதர்களைக் கொண்டு வந்த கார ணத்தால் என்னைக் கொன்றுவிடுவார்கள். இங்கே சிரஸவத்த என்னும் யட்ச நகரம் ஒன்று உண்டு. இலங்கையில் வசிக்கும் யட்சர் தலைவன் மகள் இங்கு அழைத்து வரப்பட்டிருக் கிறாள். அவளுடன் அவள் தாயும் வந்திருக்கிறாள். திருமணத் திற்கான கொண்டாட்டம் நடைபெறுகிறது. இது தான் அந்தச் சத்தம். இது ஏழு நாட்கள் நடைபெறும். இன்றே இவர்களைக் கொன்றுவிடு, பிறகு கொல்வது முடியவே முடியாது என்றாள்.

விஜயன் யட்சிணியின் உதவியுடன் யட்சர்கள் அனைவரையும் கொன்று யட்ச அரசன் உடைகளை அணிந்து கொண்டான். சில நாட்களின் பின், தம்மபாணிக்குச் (தம்மபாணி-சிவப்புக் கை) சென்று அங்கு 'தம்மபாணி' நகரத்தை ஏற்படுத்தி யட் சிணியுடனும் மந்திரிகளுடனும் வாழ்ந்தான். செம்மண்ணில் கை ஊன்றியதால் அவர்கள் கைகள் செம்மை நிறமாகியிருந் தன. அதனால் அந் நகரையும் தீவையும் தம்மபாணி என்று பெயரிட்டனர்.

சிம்மத்தைக் கொன்றதால் அரசன் சிம்மபாஹு என்றும் சிங்க காலன் என்றும் அழைக்கப்பட்டான். விஜயனுக்கும் சிம்மபா ஹுவுக்கும் உள்ள தொடர்பு காரணமாக 'சிங்க காலர்' என்று அழைக்கப்பட்டனர். இதுவே பிற்காலத்தில் 'சிங்களவர்' என்று ஆகியிருக்கலாமோ ?

விஜயனின் நண்பர்கள் ஆங்காங்கே பல கிராமங்களை உரு வாக்கினர். கடம்ப நதிக்கு அருகே அனுராதன் என்பவன் அனுராத கிராமத்தையும் உபதீசன் என்பவன் உபதீச கிரா மத்தையும் ஏற்படுத்தினர். இவ்வாறே உஜ்ஜயினி, உருவேலா, விஜிதா ஆகிய நகரங்களும் உருவாக்கப்பட்டன.

குடியிருப்புக்கள் ஏற்பட்ட பின் விஜயனின் மந்திரிகள் அவனை முடிசூடிக் கொள்ளும்படி கேட்டார்கள். உயர் குடிப் பெண் ணொருத்தியை ராணியாக்கிய பின்பே பட்டாபிசேகம் செய்ய முடியும் என்றான் விஜயன். பாண்டிய மன்னன் மகளை விஜயன் மணந்து கொண்டான். அவன் தோழர்களுக்கும் பெண்கள் வரவழைக்கப்பட்டார்கள். இதுவே பாண்டிய நாட் டிற்கும் இலங்கை அரச வம்சத்திற்குமான திருமணத் தொடர் பின் தொடக்கமாகும். இத்தொடர்பு கண்டிக் கடைசி மன்னன் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் காலம் வரை நீடித்திருந்திருக்கிறது. சிங்களவர்களது இரத்தம் தமிழ் நாட்டினர் இரத்தம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க வழியில்லை.

இப்பொழுது யட்சிணி மூலம் விஜயனுக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக இரு குழந்தைகள் பிறந்திருந்தார்கள். விஜயன் பாண்டிய இளவரசியை மணந்தபோது, அமானுச சக்தி படைத்தவர்களைக் கண்டால் மனிதர்கள் பயப்படுவார்கள் என்றும் அதனால் யட்சிணியை அவள் குழந்தைகளை விட்டு விட்டுப் போய்விடும்படியும் கேட்டுக் கொண்டான். யட்சிணி, இலங்காபுரிக்குத் தீங்கு வரும் என்று தெரிந்து கொண்டே தன் இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு இலங்கா





புரிக்குச் சென்றாள். குழந்தைகளை வெளியே விட்டுவிட்டு அவள் மட்டும் நகரினுள் சென்றாள். நகரத்திலிருந்தவர்கள் அவளை அடையாளம் கண்டனர். அவள் உளவு செய்ய வந் திருப்பதாக எண்ணி முரடன் ஒருவன் முஷ்டியால் குத்தியதில் அவள் இறந்தாள்.

அவளது தாய் மாமன் ஒருவன் நகருக்கு வெளியே குழந்தை களைக் கண்டு, அவர்கள் குவன்னாவின் குழந்தைகள் என அறிந்து, அவர்களிடம் ‘உங்கள் தாயாரைக் கொன்றுவிட்டார் கள். உங்களைக் கண்டால் உங்களையும் கொன்றுவிடுவார் கள். ஓடுங்கள்’ என்று விரட்டியதில் அவர்கள் ஓடிச் சுமண கூடத்தை அடைந்தனர்.

குழந்தைகளில் மகன் மூத்தவன். இவன் தன் தங்கையை மனைவியாக்கிப் பல குழந்தைகளைப் பெற்றுப் பெருக்கி வாழ்ந்தான். விஜயனுக்கும் யட்சிணியான குவன்னாவுக்கும் பிறந்த பிள்ளைகளின் வழித் தோன்றல்களே புலிந்தர்கள் என்ற காட்டு மிராண்டிக் கூட்டம்.

விஜயன் பாண்டிய இளவரசியை ராணியாகக் கொண்டதோடு நில்லாது அரசனாக முடிசூடிக் கொண்டான். அவனது கெட்ட பழக்கங்களை எல்லாம் கைவிட்டுச் சிறந்த அரசனாக இலங்கை முழுமையும் அமைதியும் தர்மமும் விளங்க தம்ம பாணியைத் தலைநகராகக் கொண்டு 38-ஆண்டுகள் அர சாண்டான். விஜயனின் பிறப்புப் பற்றிக் குறிப்பிடும் கதை இங்கு கருத்தில் கொள்ளப்படவேண்டியது. விஜயன் சிங்கத் திற்கும் இளவரசி ஒருத்திக்கும் பிறந்த மகனாக அறியப்படு கிறான். அவன் பிறப்பில் ஒரு சிங்கத்தின் பங்கு உண்டு என்பது கவனிக்கத்தக்கது. இது சாத்தியமா? இது நடை முறைச் சாத்தியமாக இல்லாதிருந்தாலும் இன்று வரை, இலங் கையின் வரலாற்றுச் சின்னங்களில் இந்தச் சிங்கம் ஆட்சி பெற்றிருக்கிறது. இது மகாவம்சம் கூறும் கதைகளின் தாக் கமா? சிந்திக்கவேண்டியது.

விஜயனின் பிறப்பிடம் பற்றிக் கருத்து வேறுபாடு காணப்படு கிறது. அதாவது சிங்கபுர என்பது வங்காளம், அசாம் அல் லது ஒரிஸ்ஸாவாக இருக்கலாம் என்று கருதப்பட்டாலும் தற் போது ஆய்வாளர் மத்தியில் அவன் பிறப்பிடம் ‘ஒரிஸ்ஸா’ என்பதில் ஒரு ஒருமைப்பாடு காணப்படுகிறது. ஒரிஸ்ஸாவின் மகாநதி ஆற்றுப் பகுதி தான் சிங்கபுரப் பகுதி என்று அடை யாளம் காட்டப்படுகிறது. எப்படிப் பார்த்தாலும் வங்காளம், ஒரிஸ்ஸா பகுதிகள் யாவும் இந்தியாவின் கிழக்குக் கரையோ ரமாகவே அமைந்திருக்கின்றன. அத்துடன் அவை வர்த்தகப் போக்குவரத்துப் பாதையும் ஆகும். பிற்காலத்தில் வங்காள இளவரசிகளைச் சிங்கள மன்னர்கள் திருமணம் செய்திருக்கி றார்கள். இவை தவிர மொழியியல் அடிப்படையிலும் ஒரிஸ்ஸா மொழி, சிங்கள எழுத்து வடிவம் முதலியவற்றிலும் அதிக ஒற்றுமை காணப்படுகின்றன.

மகாவம்சம் இலங்கையின் பழங்குடி மக்கள் பற்றி அதிகம் பேசவில்லை. விஜயன் இலங்கைக்கு வருவதுடன் தான் இலங்கை வரலாறு தொடங்குகிறது. இலங்கையின் முதல் மன்னனாக இவன் கூறப்படுகிறான். விஜயன் இலங்கைக்கு வரும்போதே இலங்கையில் இனக்குழுக்கள் இருந்தமை பற்றி மகாவம்சம் கூறுகிறது. விஜயனின் முதலாவது போர் ஒரு இனக்குழுவினருடன் தான் நடைபெற்றிருக்கிறது என்பது பற்றி மகாவம்சம் 7-ஆம் அத்தியாயம் கூறுகிறது.

‘இங்கே சிரஸவத்த என்னும் யட்ச நகரம் ஒன்று உண்டு. இலங்கையில் வசிக்கும் யட்சர் தலைவன் மகள் இங்கு அழைத்து வரப்பட்டிருக்கிறாள். அவளுடன் அவள் தாயும் வந்ருக்கிறாள். திருமணத்திற்கான கொண்டாட்டம் நடைபெறு கிறது’ - என்று குறிப்பிடும் இந்தப் பகுதி, விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பாகவே இலங்கையில் பழங்குடி மக்கள் அரசு இருந்திருக்கிறது என்பதையும் குறிப்பிடுகிறது. நாம் சிறுவயதில் கற்றுக் கொண்ட நினைவுகளைப் புரட்டிப் பார்த்தால், விஜயனுக்கும் குவேனி என்ற இயக்கர் குலப் பெண்ணுக்கும் பிறந்த பிள்ளைகளின் வம்சத்தினரே சிங்கள வர் என்னும் கருத்து எங்கிருந்து வந்திருக்கிறது?... மகா வம்சம் ஏழாம் அத்தியாயம் கூறும் விஜயனின் பட்டாபிசேகம் இத்துடன் நிறைவு பெற நாம் மகாவம்சம் 8-ஆம் அத்தியாயத் தினுள் நுழைகிறோம்.

தொடரும்...



selvanayaki.s@thaiveedu.com

# கம்பனின் கருவூலம் திறந்து...

## மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**திருமணங்களின்போது குலவேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்படுகின்ற வைதீக மரபு பற்றிய செய்தி கம்பரால் இங்கே பதியப்பட்டிருப்பதைக் காணலாம். இவர்களது உரையாடலின்போது தான் திருமணமானவன் என்பதை இராமன் தெரிவிக்காதது ஏன் என்பதும் புதிராக உள்ளது.**

சென்றமாதத் தாய்வீடு இதழில் கம்பராமாயணத்தில் ஆரணிய காண்டத்தின் ஐந்தாவது படலமாகிய சூர்ப்பண கைப் படலத்தின் இரண்டாவது பகுதியை எடுத்து வந்திருந் தேன். தனிமையில் தண்டகவனத்தில் சுற்றிக்கொண்டிருந்த சூர்ப்பணகை இராமனைக் கண்டபோது அவனது அழகால் ஈர்க்கப்பட்டவளாக, அவன் யாராக இருப்பானோ என்று பல வாறு எண்ணுவதையும், பின்னர் அவனை எதிர்கொண்டு அவனோடு உரையாடுகையில் அவனிடம் ஏற்பட்ட காதலின் வேதனையைப் போக்கிக் காத்திடவேண்டும் என்று அவனிடம் இரந்து வேண்டுவதையும் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக நிகழ்வனவற்றை இப்போது பார்க்கலாம்.

சூர்ப்பணகை கூறிய முரண்பட்ட செய்திகளைச் சொல்லக் கேட்ட இராமன் இவள் நாணமற்றவள் என்று கருதி அமைதியாக இருக்க, அவள் தனது வேட்கையை அவனிடம் மேலும் கூற, அந்தணர் கணிகையாகவும், அரக்கர் குலத்தவ ளாகவும் உள்ள அவளை அரச குலத்தவனாகிய தான் மணம் செய்யலாகாது என்றும், உரியவர் கொடாது தனியே வந்த அவளை மணம்புரிய மாட்டேன் என்று இராமன் மறுப்பதையும் கம்பர் அழகிய செய்யுள்களில் படைத்துள்ளார். திருமணங்க ளின்போது குலவேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்படுகின்ற வைதீக மரபு பற்றிய செய்தி கம்பரால் இங்கே பதியப்பட்டி ருப்பதைக் காணலாம். இவர்களது உரையாடலின்போது தான் திருமணமானவன் என்பதை இராமன் தெரிவிக்காதது ஏன் என்பதும் புதிராக உள்ளது. அப்போது அவ்விடத்துக்குச் சீதை வருகிறாள்.

***ஊன்சுட உணங்கு பேழ்வாய் உணர்விலி: உருவம் நாறும்***
***வான்சுடர்ச் சோதிவெள்ளம் வந்திடை வயங்க நோக்கி;***
***மீன்சுடர் விண்ணும் மண்ணும் விரிந்தபோர் அரக்கர் என்னும்***
***கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணில் கண்டாள்***

(கம்ப. ஆரணிய. 282)

ஊன்சுட உணங்கு பேழ்வாய் உணர்விலி - இறைச்சியைச் சுட்டு உண்ணுவதற்குப் பதைக்கின்ற திறந்த வாயையுடைய அறிவில்லாதவள், உருவம் நாறும் வான்சுடர்ச் சோதிவெள் ளம் வந்திடை வயங்க நோக்கி; - வந்த சீதையின் உருவம் தெரியாதவாறு மிகுந்த பளபளப்பையுடைய ஒளியின் வெள் ளம் அவர்களுக்கிடையிலே வந்து விளங்குவதைப் பார்த்து, மீன்சுடர் விண்ணும் மண்ணும் விரிந்த - விண்மீன்கள் ஒளிவீசு கின்ற விண்ணிலும் நிலவுலகத்திலும் பரவிய, போர் அரக்கர் என்னும் கான்சுட முளைத்த - போர் புரிகின்ற அரக்கர் என் னும் காட்டை எரிப்பதற்காகத் தோன்றிய, கற்பின் கனலியைக் கண்ணில் கண்டாள் - கற்பெனும் நெருப்புப் பிழம்பாகிய சீதையைத் தன் கண்களால் கண்டாள் என்பது பொருள்.

சீதை வரும்போது அவளது உருவத்தை மறைத்த அவளது மேனியொளியை முதலில் சூர்ப்பணகை பார்க்கிறாள் என்ப தும், பின்னர் அந்த ஒளிக்கு இடையே அவளது உருவத்தை அவள் கண்டாள் என்பதும் கம்பரின் கற்பனை நயம். சீதை யின் மேனியொளியை, 'பொன்னின் ஒளி, பூவின் வெறி, சாந்து பொதி சீதம், மின்னின் நிழல் அன்னவள்தன் மேனியொளி மான' என முன்னர் பாலகாண்டத்தில் கம்பர் வருணிப்பதை யும் பார்த்திருக்கிறோம். மேலும் வானுக்கும் மண்ணுக்கும் விரிந்து நின்று போர் செய்கின்ற அரக்கரைக் காடாகவும் அந் தக் காட்டை எரிக்க வந்த கற்பாகிய நெருப்பாகச் சீதையை யும் உருவகம் செய்து சிறந்த உருவக அணிநயத்துடன் இச் செய்யுளைக் கம்பர் படைத்திருப்பதைக் காண்கிறோம்.

சீதையின் பேரழகைக் கண்டு வியந்துபோன சூர்ப்பணகை இவள் திருமகளோ என ஐயுற்றுத் திகைப்படைகிறாள். பெண் ணாகிய தன்னையே அவளது அழகு நிலைதடுமாற வைக்கு மென்றால் ஆடவர் நிலை என்னாவது என எண்ணுகிறாள். இராமனையும் சீதையையும் ஒன்றாகப் பார்த்த சூர்ப்பணகை அவர்கள் இருவரதும் அழகுக்கு இணையாக வேறொருவர் இருக்க முடியாதவாறு இவர்களைப் பிரமன் படைத்தானோ என ஒருகணம் தான் இராமனிடம் கொண்டிருந்த விருப்பத் தையும் மறந்து எண்ணுகிறாள். பின்னர் இராமனிடம் அவள் கொண்டிருந்த காதல் உணர்வு மேலிட இவளும் தன்னைப்

போல் இடையில் வந்தவளாக இருக்கலாம் என்று எண்ணிச் சீதையைக் குறித்து இராமனிடம் பழித்துக் கூறி அவளை விட்டு நீங்கிவந்து அவனைத் தன்னோடு சேர்ந்துகொள்ள வேண்டும் என அழைக்கின்றாள். அத்தோடு அவள் சீதையை யும் மிரட்ட சீதை அச்சத்துடன் இராமனைச் சென்று தழுவிக் கொள்கிறாள். இராமன் சூர்ப்பணகையை இவ்விடத்தில் நில் லாது அகன்று போய்விடு என்று எச்சரித்துவிட்டு சீதையுடன் அங்கிருந்த சோலைக்குள் தன் உறைவிடம் நோக்கிச் சென்று விடுகின்றான்.

***புக்கபின் போயது என்னும் உணர்வினள்:***
***பொறையுள் நீங்கி***
***உக்கதாம் உயிரள்: ஒன்றும் உயிர்த்திலள் ஒடுங்கி***
***நின்றாள்***
***தக்கிலன்: மனத்துள் யாதும் தழுவிலன்: சலமும்***
***கொண்டான்***
***மைக்கரும் குழலினாள் மாட்டு அன்பினில் வலியன்***
***என்பாள்***

*(கம்ப. ஆரணிய. 294)*

புக்கபின் போயது என்னும் உணர்வினள் - இராமன் சென்று விட்டபின்பும் அவன் போய்விட்டான் என்னும் உணர்வு அற்ற வளாகச் சூர்ப்பணகை அங்கு நிற்கிறாள். பொறையுள் நீங்கி உக்கதாம் உயிரள் - பொறுமையாக உயிரைத்தாங்கும் அவ ளது உடம்பிலிருந்து உயிர் போய்விட்டது போலானாள், ஒன்றும் உயிர்த்திலள் ஒடுங்கி நின்றாள் - மூச்சற்றவளாகச் செயலற்று ஒடுங்கி நின்றாள், தக்கிலன் - அவன் எனக்குத் தக்கவன் அல்லன், மனத்துள் யாதும் தழுவிலன் - தன்னு டைய உள்ளத்துள் என்னை அவன் ஏற்றுக்கொண்டவனாக இல்லை, சலமும் கொண்டான் - என்மீது தணியாத சினமும் கொண்டுள்ளான், மைக்கரும் குழலினாள் மாட்டு அன்பினில் வலியன் என்பாள் - கருமையான கூந்தலைக்கொண்ட அந் தப் பெண்ணிடத்தில்தான் அன்பு கொண்டிருக்கின்றான் என்று சூர்ப்பணகை அறிந்துகொள்கிறாள்.

இராமன் சூர்ப்பணகையைப் புறக்கணித்துவிட்டுத் தனது உறைவிடம் சென்றுவிட்டபோது அவள் உணர்வு அற்று, மூச்சு அடங்கி செயற்று நின்ற நிலையைக் கம்பர் இவ்வாறு வருணிக்கின்றார். உயிரைப் பொறுமையாகத் தாங்கிக் கொண்டிருப்பதால் இங்கே உடலைப் பொறை என்னும் சொல்லால் கம்பர் குறிப்பிடுவது ஏது உருவக அணியாகும்.

இந்த நிலையில் மாலைப் பொழுதும் வர, சூர்ப்பணகை தான் இராமனைச் சேரவில்லையென்றால் தனது உயிரை மாய்த் துக்கொள்ளப் போவதாக உறுதி கொண்டவளாக அவ் விடத்தை விட்டு நீங்கினாள். இரவு நேரம் வந்துவிட்டது. அந்த இரவு வேளையில் சூர்ப்பணகை காமவேதனையுற்றுத் தவிப் பதைக் கம்பர் அழகான பதினாறு செய்யுள்களில் வடித்துள் ளார்.

***அயர்ந்த சிந்தைய ளாய்அயர்வாள் வயின்***
***மொழிந்த காமக் கடுங்கனல் மூண்டதால்***
***வழிந்த நாகத்தின் வன்தொளை வாள்எயிற்று***
***இழிந்த கார்விடம் ஏறுவது என்னவே***

*(கம்ப. ஆரணிய. 296)*

வழிந்த நாகத்தின் வன்தொளை வாள் எயிற்று இழிந்த கார்விடம் ஏறுவது என்னவே - நாகபாம்பினது கூர்மையான கொடிய பற்களிலிருந்து வழிந்த கரிய நஞ்சு அது கடித்த இடத்திலிருந்து தலைக்கேறுவது போல, அயர்ந்த சிந்தை யளாய் அயர்வாள் வயின் - சிந்தனை ஒடுங்கித் தளர்ந் துபோன அச்சூர்ப்பணகையிடம், மொழிந்த காமக் கடுங் கனல் மூண்டதால் - சொல்லப்பட்ட காமமாகிய கொடிய நெருப்பு மூண்டெரியத் தொடங்கியது என்பது பொருள்.



நாகம் கடித்தவிடத்திலிருந்து நஞ்சு பற்றிப்பரவித் தலைக் கேறுவதுபோலக் காமம் என்னும் கொடிய நெருப்பு அவளை முழுமையாகப் பற்றிக்கொண்டது என்னும் உவமை அணி நயம் கம்பரின் கவித்துவத்துக்கு முத்திரை பதிக்கிறது. சூர்ப் பணகை படும் காமவேதனையை எடுத்துவரும் இனிய செய் யுள்களிலே இன்னுமொன்று.

***கைக ளால்தன் கதிரிளங் கொங்கைமேல்***
***ஐய தண்பனி யள்ளின் அளப்பினாள்***
***மொய்கொள் தீயிடை வெந்து முருங்கிய***
***வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால்***

*(கம்ப. ஆரணிய. 302)*

கைக ளால்தன் கதிரிளங் கொங்கைமேல் - காம வெப்பம் தீரத் தனது கைகளாலே தனது ஒளியுள்ள இளமையான மார் பகங்களின் மீது, ஐய தண்பனி யள்ளி அளப்பினாள் - வியக் கத்தக்க குளிர்ந்த பனிக்கட்டியை அள்ளியெடுத்து அப்பிக் கொண்டாள். மொய்கொள் தீயிடை வெந்து முருங்கிய வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால் - ஆனால் அது



அவளது மிக்க தாபத்தைத் தணிக்கமாட்டாமல், சூழ்ந்த நெருப்பிலே வெந்து போயிருக்கின்ற பாறையொன்றின் மீது வைத்த வெண்ணெய் உருகிக் கரைந்து போவதைப்போல உருகிப்போயிற்று என்பது பொருள். சூர்ப்பணகையின் காமத் தீயைத் தணிப்பதற்கு இயலாமல் வெந்த பாறையிலிட்ட வெண்ணெய்போலப் பனிக்கட்டி உருகிப்போயிற்று என்னும் கம்பரின் உவமைச் சிறப்பு சுவைமிக்கது.

சூர்ப்பணகை இவ்வாறு காமத்தீயில் தவித்துக்கொண்டிருக்க, அந்த நீண்ட இரவு முடிந்து காலை புலர்கிறது. அவளது காம வேட்கை சிறிது தணிய, இராமன் தன் மனைவி அருகிலிருக் கும் மட்டும் தன்னைச் சிறிதும் விரும்ப மாட்டான். ஆதலால் அவளை எடுத்துச்சென்று எங்காவது மறைத்து வைத்துவிட் டால் பின்னர் இராமன் தன்னுடன் வந்து சேர்ந்து இன்பம் அளிப் பான் என்று எண்ணுகிறாள். இராமன் கோதாவரிக்கரையில் நீராடிக்கொண்டிருப்பதைக் கண்டு, சீதை தனியே இருப்பாள். விரைந்து சென்று அவளைக் கடத்திப்போய் மறைத்துவிட்டு அவளது வடிவத்தைத் தான் வைத்துக்கொண்டு இராமனுடன் வாழ்வதுதான் சரி. அதற்கு இதுவே நல்ல தருணம் என எண்ணு கிறாள். அந்தச் சோலையிலே சீதை உலாவிக்கொண்டிருக்க இலக்குமணன் அவளுக்குக் காவலாக இருக்கிறான் என்பதை அறியாமல் சூர்ப்பணகை தனது இயல்பான உருவத்துடன் சீதையைப் பின்தொடர்கிறாள். அவள் பின்தொடர்வதை இலக்குமணன் பார்த்துவிடுகிறான்.

***நில்லடீ யெனக் கடுகினன் பெண்ணென நினைந்தான்***
***வில்லெ டாதுஅவள் வீங்கெரி யாமென விரிந்த***
***சில்ல லோதியைச் செங்கையில் திருகுறப் பற்றி***
***ஒல்வயிற்று உதைத்து ஒளிகிளர் சுற்றுவாள் உருவி***
*(கம்ப. ஆரணிய. 317)*

நில்லடீ யெனக் கடுகினன் - சீதையை அவள் பின்தொடர் வதைக் கண்டு இலக்குமணன் சினம் கொண்டு 'அடியே நில்' என அதட்டியவாறு விரைந்து வந்தான். பெண்ணென நினைந் தான். பெண்ணாகிய அவளைக் கொல்வது தகாதென நினைத் தான், வில் எடாது - அதனால் அவளைக் கொல்வதற்கு வில்லை எடுக்காது, அவள் வீங்கெரியாம் என விரிந்த சில் லல் ஓதியை - பற்றியெரிகின்ற நெருப்பைப் போலப் பரந்தி ருந்த அவளது தலை மயிரை, செங்கையில் திருகுறப் பற்றி - தனது சிவந்த கைகளால் திருகிப் பற்றிக்கொண்டு, ஒல்வயிற்று உதைத்து ஒளிகிளர் - சுற்றுவாள் உருவி - அவளது வயிற் றில் காலால் உதைத்துக்கொண்டு ஒளிவீசுகின்ற தனது உடை வாளை உருவி எடுத்துக்கொண்டான்.

***ஊக்கித் தாக்கிவிண் படர்வன் என்றுஉருத்து எழுவாளை***
***நூக்கி நொய்தினின் வெய்து இழையேன் எனநுவலா***
***மூக்கும் காதும்வெம் முரண்முலைக் கண்களும் முறையால்***
***போக்கிப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்***
*(கம்ப. ஆரணிய. 318)*

ஊக்கித் தாக்கிவிண் படர்வன் என்றுஉருத்து எழுவாளை - அப்பொழுது அவளைத் தூக்கி எடுத்துக்கொண்டு விண்வெளி யாகச் சென்றுவிடுவேன் என்று சொல்லியவாறு சினம் கொண்டு எழுந்தவளை, நூக்கி நொய்தினின் - மிக எளிதாகக் கீழே தள் ளிவிட்டு, வெய்து இழையேல் என நுவலா - 'இப்படிப்பட்ட தீய செயலை இனிச் செய்யாதே!' என்று கூறியபடி, மூக்கும் காதும் - மூக்கையும், காதையும், வெம்முரண் முலைக்கண்களும் - கொடிய வலிய முலைக் காம்புகளையும், முறையால் போக் கிப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான் - ஒன்றன்பின் ஒன்றாக அறுத்ததன்பின் அவனது சினம் தணிய அவளின் கூந்தலைப் பற்றியிருந்த கையை விட்டான். உறுப்புகள் சிதைக்கப்பட்ட சூர்ப்பணகை மிகவருந்தி விடுத்த பேரோசை விண்ணுலகும் அதிரும்படி எல்லாத் திசைகளிலும் கேட்ட தாகக் கம்பர் தம்செய்யுளில் கூறுவது நமது அகக் கண்களில் நீரை வரவழைக்கிறது.

***கொலைது மித்துயர் கொடுங்கதிர் வாளினக் கொடியாள்***
***முலைது மித்துயர் மூக்கினை நீக்கிய முறைமை***
***மலைது மித்தென இராவணன் மணியுடை மகுடத்***
***தலைது மித்தற்கு நாள்கொண்டது ஒத்ததோர் தன்மை***
*(கம்ப. ஆரணிய. 320)*

கொலை துமித்து - கொல்லுதலை விடுத்து, உயர் கொடுங் கதிர் வாளின் - சிறந்த கொடிய ஒளியுள்ள உடைவாளினால், அக் கொடியாள் முலை துமித்து - அக்கொடியவளின் முலையை அறுத்து, உயர் மூக்கினை நீக்கிய முறைமை - அவளது மூக்கையும் அறுத்திட்ட செய்கை, மலை துமித்தென - மலையின் கொடுமுடியை வெட்டியெறிந்தாற்போல, இராவ ணன் மணியுடை மகுடத் தலை துமித்தற்கு நாள்கொண்டது ஒத்ததோர் தன்மை - மணிமுடியணிந்த இராவணனது தலை யைத் துணிப்பதற்கு நாள் பார்த்து வந்ததைப் போன்றதாகும் என்பது பொருள்.

இலக்குமணன் சூர்ப்பணகையின் மூக்கையும் காதையும் அறுத்து அலங்கோலப்படுத்தியதுடன், முலைக்காம்புகளை யும் அரிந்து அவளது பெண்மைக்கு இழுக்கை ஏற்படுத்திய இந்தச் செயல்தான் இராம இராவணப் போர் தொடங்குவ தற்கு அடித்தளம் இட்டது என்பதைக் கம்பர் கூறுகிறார். அந் தப்போர் பதினெட்டு மாதகாலம் நடந்ததாகக் கூறப்படுவது இந்தத் தொடக்கத்தில் இருந்துதான் என்பதைக் கணித்துக் கொள்ளலாம். சூர்ப்பணகையின் உறுப்புகள் சிதைக்கப்பட்ட பின்னே நடந்தவற்றைக் கம்பனின் கவிநயத்தோடு சுவைக்க அடுத்த இதழ்வரை பொறுத்திருப்போம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 119

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-119 வினா

### இடமிருந்து வலம்

1 பாலஸ்தீனத்தில் இனப்படுகொலை நிகழும் இடம்
3 வனம்
5 பிரான்சின் அதிபர்
9 சத்துராதி
10 உலைக்களம்
11 இராமனின் சிற்றன்னை
14 அண்மையில் இறந்த தமிழ்த் தலைவரின் குறும்பெயர்
15 இயற்கை எய்து
17 நோயாளரின் மருந்துக்கேற்ற உணவு
19 பளு

### மேலிருந்து கீழ்

2 ஒரு தானியம்
4 பயிர்ச்செய்கை
6 சோவியத் ஒன்றியத்தின் கடைசி அதிபர்
7 தர்க்கவியல் நிறைந்த தமிழ் இலக்கிய நூல்
8 அகப்படுத்த சூழ்ச்சி செய்
12 சபை
13 விமர்சனம்
16 புரளி
17 தூற்று
18 கப்பம்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை-118-க்கான விடைகள்



## தமிழ்வலை-118 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

குமாரசாமி ரூபிகா, கிளிநொச்சி.
மேரி கெலன் தேவதாஸ்,நோத்யோர்க்.
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்
விசுவநாதன் தாமரை, ரொறன்ரோ

**குறுக்கெழுத்துப் போட்டி - 118-இல் யாரும் வெற்றி பெறாததால், குறுக்கெழுத்துப் போட்டி - 119-க்கான பரிசுத்தொகை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



# முலையறுகாதை!

## பெண் துயரப் பெருங்கதை - 7



மா. சித்திவினாயகம்

அவன் போகிற பாதையில் இயற்கையின் கொடையென நீர் விரித்திருந்தது அந்தக் கண்மாய். இது கணேசன் பிறப்பதற்கு முன்னரே தலைமுறை தலைமுறையாக விவசாயிகளின் உயிரென நிலைபெற்ற கண்மாய். இத்தகு கண்மாய்கள்தான் பெரு ஆறுகளாகி பெண்களின் பெயரில் இந்தியா முழுவதும் பெருங் கண்ணீரோடு இன்றும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

காப்பியங்களின் தேசமான இந்தியாவின் கங்கை, பீஸ்மனைப் பெற்றெறிந்து விட்டுக் கண்ணீரோடும், நாளும் பிணங்களோடும் புனிதமென்கிற பெயரில் இன்றும் ஆறாக ஓடுகின்ற அபலை. அதேபோன்றே பெண்கள் பெயரில் இருக்கின்ற ஒவ்வொரு ஆற்றிற்கும் ஒவ்வொரு துயரை ஆணாதிக்கம் எழுதி வைத்துள்ளது. ஏமாற்றப்பட்ட அம்பைகளும், காந்தாரிகளும் அழுத கண்ணீரோடு இன்றும் இத்தேசத்தில் அலைகின்றார்கள்.

பெண் பெயரில் இருக்கிற புனிதம் பெண்கள் வாழ்வில் என்றும் இல்லை. சபைகளில் பெண்ணைத் துகிலுரிந்தெறிந்து மானபங்கப்படுத்திய கொடூரமும், சுயம்வரமென்கிற பெயரில் கொடூர முரடர்கள் பெண்களைக் கவர்தலும், வேண்டாப் பெண்களின் மூக்கையும், முலையையும் அரிந்தெறிகிறவர்களின் கொடூரத்தைத்தான் நாம் வீரமெனப் போற்றிக்கொண்டிருக்கின்றோம். அத்தகு கொடியோரைக் கடவுளாக்கிய கதைகளில்தான் இற்றை வரை இந்தியா கட்டப்பட்டிருக்கிறது.

எவரெவரின் மனைவிகளுக்கோ வியாசன் விந்தில் உதித்த பாரதக் கதாநாயகர்களான திருதராட்டினன், பாண்டு, விதுரன் தான் இந்திய மானிட வரலாற்றின் மகத்துவமென ஆணாதிக்க நம்பூதிரிகள் எழுதியுள்ள வரலாறும் வாழ்வியலும் தான் இந்தியப் பண்பாட்டியல்.

தகிக்கும் வெயிலின் தீக்கொழுந்துகள் தின்று போட்ட ஊரை, இரவில் முழுநிலா தன் குளிர் கரங்கொண்டு தழுவி உச்சி மோந்தது. கேரள வானில் வரிசையாக, நிலவொளியை சீண்டியபடியே முகில் கூட்டங்கள் கரு எருமைகளென ஓடிக்கொண்டிருந்தன. அந்த மேகக் கூட்டங்களினுள்ளும் தண்ணொளி வீசிய நிலவு வெளிச்சத்தில் கலவரங்கொண்ட முகத்தோடு கணேசன் வீடுநோக்கிப் போய்க் கொண்டிருந்தான். தோட்டக்காரக் கோவிந்தனின் கொடூரச் சாவு அவனைப் பாடாத பாடுபடுத்தியது.

அத்தகு நீர்நிலையை அண்டி நீண்டிருக்கும் அந்த ஊரின் பெருந்தெருவில்தான் கணேசன் சலனமற்று நடந்து கொண்டிருந்தான். ஆரவாரமில்லாத் தெருவின் முனையில் வேப்ப மர நிழலில் இருந்து ஒரு உருவம் கணேசனை அழைத்தது.

கணேசன் மிரண்டான். யாராயிருக்கும்...

சிந்தனையிலாழ்ந்தவனை வாடா நீ... மகனே... உரிமையோடு அழைத்த குரல் அவனை மேலும் கலவரமாக்கியது.

நிலவு வெளிச்சத்தில் திருநீறு துலங்க கோவணாண்டியாய் குந்தியிருந்தான் சித்தன் ஒருவன்.

ஓம் நமசிவாய என்றபடி... சித்தன் நீர் தோய்ந்த வேப்பிலையை கணேசன் தலையில் அடித்தான்.

கணேசனுக்கு எதுவும் புரியவில்லை...

சாவீட்டுச் சாபம் அழிந்து போகட்டும் என்றபடி எல்லாம் எரிந்து முடிந்துவிட்டதா? என்றான் சித்தன்.

கேள்வி கணேசனைத் திடுக்கிட வைத்தது.

வீட்டோடு நம்பூதிரி எரித்த குடும்பத்தை கேட்கின்றானே... இந்தச் சித்தன் எப்படி அறிந்தான் அதனை...

சித்தன் அறியாத சூட்சுமம் உண்டா?

சித்தன் தொடர்ந்தான்...

*கறந்த பால் முலைப் புகா, கடைந்த வெண்ணெய் மோர் புகா,*
*உடைந்து போன சங்கின் ஓசை உயிர்களும் உடல் புகா,*
*விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம் புகா,*
*இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே*

அவ்வளவு தான் வாழ்க்கை.

நீ கண்டு வந்த சாம்பல் அவர்களுக்கானதல்ல எம்மெல்லோர்க்குமானது. இன்று அவர்களை எரித்த தீக்கொழுந்து நாளை எம்மையெரிக்க எங்கும், எப்போதும் கனன்று கொண்டுதானிருக்கின்றது.

சித்தன் எதையெதையோ பேசினான்... அவனது வார்த்தைகள் விளங்க முடியாமற் சொற்களாய் சிதறிப் பரவின.

இங்கிருக்காதே இனியும்... கேரள தேசத்தை கயவர்கள், கடவுளின் பெயரால் தம் தேசமாக்கியுள்ளார்கள்.

இராமாயணம், மகாபாரதமென ஆரியர்களின் பொல்லாத கதைகள் ஆதித் தமிழரை அழகற்ற கொடிய அரக்கராக்கி வைத்திருக்கிறது. தொன்மைக் குடிகளின் தொல்லியல் வரலாற்றை ஆரியச் சகுனிகள் தலைகீழாக்கிவிட்டார்கள். வரலாறழித்த நாடு வாழ்வதற்கு உரியதல்ல.

விரைந்து வெளியேறிப் போ...

வேண்டுமென்றே ஆரியர்கள் காறி உமிழ்ந்து அரக்க தேசமெனக் கேவலமாக்கிய ஈழமெனும் அழகுதேசத்திற்கு அகதியாகப் போ... அது தான் உன் நிலம்... உனக்கான அடையாளம்... உனக்கான உறவென்றான் சித்தன்...

வாழ்ந்த உன்னை வந்தேறி என்கின்ற நம்பூதிரிகளைப் போன்றே அங்கும் உன்னை வந்தேறி என்பார்கள் சிலர். மனந் தளராதே... முன்னால் வந்தவன் பின்னால் வந்தவனை வந்தேறியென்கிற நரகம் தான் இந்தப் பூமி... யாரும் இப்பூமிக்கு முழுச் சொந்தக்காரர்களல்ல.

ஆனால் எல்லோருக்கும் மூத்தவன் நீ, மறவாதே உன் மொழி மூத்தது... இம்மண்ணில் வளர்ந்த பூவில் தேனெடுக்கிற கொலைபாதக வண்டுகள் எப்போதாவது பூக்களின் வலி பற்றி சிந்தித்ததுண்டா?

சித்தன் பேச்சில் மலைத்துபோனான் கணேசன்.

பூமி நிலமெங்கும் குரலடங்கிப்போன எதுவுமற்ற ஏதிலிகளின் மண்டையோடுகள்தான் ஆளப் புதைந்து கிடக்கின்றன. வலியவன் அவர்களை வதைத்துப் போடுகின்றான். வாழ்ந்த ஊர் விட்டுப் பிரிவது எத்துணை துன்பம்... இன்னும் எத்தனை யுகங்கள் தமிழன் அகதியாய் சாவது...

புதைபடப் புதைபடப் போராடு கணேசா...

சித்தன் தீர்மானமாகப் பேசினான்.

வேப்பமர உச்சி வேகமாய் ஆடியது

அண்ணாந்து பார்த்தான் கணேசன்

ஈழமெரித்த ஆஞ்சநேயர் அந்த வேப்பமரமிருந்து வேறுமரம் பாய்ந்தார்.

மறுபடி கணேசன் திரும்பிய வேளை சித்தனைக் காணவில்லை. சித்தன் நின்றிருந்த இடத்தில் முருக வேல் நடப்பட்டிருந்தது.

கணேசன் கலவரத்தோடு வீட்டிற்கு ஓடி குப்புற வீழ்ந்தான். பயத்தில் அவன் உடம்பு தணலாய்த் தகித்தது.

கேரளத்தின் அதிகாலை... வெள்ளைக்கார கிளாரா அழகே உருவாக தன்னைச் சிங்காரித்து தயாரானாள். கேரளம் திருவிதாங்கூர், கொச்சின் என இருவேறு நிர்வாக அலகுகளாயிருந்தது. திருவிதாங்கூர் நிர்வாகப் பணிப்பாளர் வெள்ளையரான சாம் அவர்கள். இன்றோடு அவர் இளைப்பாறி இங்கிலாந்து செல்லுகிறார். அவரது சேவை நலம் பாராட்டும் இளைப்பாறல் கூட்டத்திற்கு கிளாராவும் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தாள்.

கண்டியின் கடைசி மன்னரான மதுரை நாயக்க வம்ச விக்கிரம ராஜசிங்கனை வேலூர்ச் சிறையில் அடைத்த வெள்ளைய துரையின் வாரிசு என்ற பெருமையுடையவன் இந்த சாம்.

சாம் பற்றி எதனை நான் பேசுவது... சிந்தித்த கிளாரா தன் மானிடவியல் அறிவைப் பேசத் துணிந்தாள்.

இரண்டு கால்களில் நிமிர்ந்த முதல் மனிதனை ஹோமோ எரெக்டஸ் Homo erectus என்கின்ற லத்தீன் மொழிச் சொல்லால்தான் இன்றும் அடையாளம் காட்டுகின்றார்கள். இன்றைய நவீன மனிதர்களின் மூத்த இனமது என்றால் நீங்கள் நம்பப் போவதில்லை.

மனித பரிணாம வளர்ச்சியில் ஹோமோ எரெக்டஸ் ஒரு முக்கியமான இனமாகக் கருதப்படுகிறது, ஏனெனில் அவை ஆபிரிக்காவிலிருந்து வெளியேறி ஆசியா மற்றும் ஐரோப்பாவின் பல பகுதிகளை காலனித்துவப்படுத்திய முதல் கூட்ட வாரிசு. இவற்றிலிருந்து தப்பித்த நியாண்டதல் மனித எலும்புகளை ஜேர்மானிய பள்ளத்தாக்கில் பின்னாளில் கண்டெடுத்தார்கள்.

இதே நூற்றாண்டில்தான் யூஜின் டுபோயிஸ் அவர்களால் ஜாவா மற்றும் சீனாவில் இந்த ஹோமோ எரெக்டஸ் தடயங்கள் நிலக்கீழ் கண்டுபிடிக்கப்பட்டது. தாண்டு போன லெமூரியாவும் ஹோமோ எரெக்டஸ் நிரம்பிய கண்டமென்கின்றார்கள்.

கிட்டத்தட்ட 2 மில்லியன் ஆண்டுகளில் மனிதனைப் போன்ற உடல்வாகு மற்றும் நடை ஆகியவற்றை கொண்ட எம்

மூதாதைக் குரங்கு, ஆபிரிக்காவை விட்டு வெளியேறி தீயையும், கல்லாயுதமும் கண்டு ஆசியாவையும் ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் எமக்கு முன்னரேயே காலனித்துவப்படுத்திய முதல் மனித இனமெனில் நாம் அவற்றைப் பாராட்டத்தானே வேண்டும் என்றாள் கிளாரா.

அவளது பேச்சிற்கு கைதட்டியது சபை. மானிடவியலாளரான அவளது உரை அங்கு கூடியோரைச் சிந்திக்கவைத்தது.

கடவுள் தலையிலிருந்து தம்மைப் படைத்தார் என்கின்ற நம்பூதிரிகளும், ஆதாம் ஏவாளுக்காக ஆக்கப்பட்டதே உலகம் என்கிற வெள்ளையர்களும் அவள் பேச்சினைக் கேட்டு மனம் மறுகியபடியே ஓர் ஓரமாக நின்றனர்.

மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்பதைக்கூட ஏற்றுக் கொள்ளலாம், ஆனால் ஆபிரிக்க அடிமைக் கறுப்பர்களும் நாமும் ஒரே இனத்திலிருந்து எப்படி வந்திருக்க முடியும் என்று முணுமுணுத்தனர் சில வெள்ளையர்கள்.

மனிதன் உருவாக்க எண்ணிய கடவுள்கள் கருணை மிக்கவை அல்ல. எல்லோரும் சமமென நினைத்து உருவானவையல்ல அவை. நம்பூதிரிகளும், காலனித்துவ வெள்ளையர்களும், அரேபியர்களும் உருவாக்கிய கடவுள்கள் தாம் வாழ மற்றவர்களை கொலை செய்பவை, சாமானிய மக்களைப் பிச்சையெடுக்க வைப்பவை. ஏழைகளின் இரத்தத்தாலும், அவர்கள் சிந்திய வியர்வைப் பணத்தின் மீதாலும் கட்டப்பட்டிருந்தது அவர்களது கடவுளர் தேசங்கள்... இப்படித்தான் அப்பாவி அரசன் சேரமான் பெருமாளைக் கொன்றுவிட்டு கடவுளோடே போனார் என்கின்றார்கள் இவர்கள். அவர்தான் தாஜுதீன் என்கின்றார்கள் முகமதியர்கள். நல்லதைச் சொன்ன வள்ளலாரும் இப்படி எரிக்கப்பட்டவர்தான்... மதங்களை யாரும் இங்கு பேசிவிட்டுத் தப்ப முடியாதே...

பேச்சைத் திசை மாற்றினாள் கிளாரா...

அரிசி அரைக்கும் மாவாலைகள் இங்கு இல்லை.

அடிமைகள் தான் நெல் குத்திகள். அதற்குப் பதிலாக கிடைக்கும் குறுணி அரிசியில் அவர்கள் கஞ்சி குடிக்கிற பொல்லாத காலம் இது. சுத்தமாக குடிக்க தண்ணீர் இல்லாத மக்கள் குடத்தைத் தூக்கி வெகுதூரம் அலைகிற காலம்.

கூலி அடிமைகளும், சாதியால் ஒடுக்கப்பட்டவர்களும் குப்பாயம் எனப்படும் மேற்சட்டை போட அனுமதிக்கப்படாத காலம். இந்தக் கொடுமைகளூடுதான் தினமும் இங்குள்ள சமானியர்கள் உலா வருகின்றனர். இவற்றைக் கண்டு இவை மாற வேண்டுமென மக்களுக்கு கல்வியறிவூட்ட நின்ற அதிகாரி சாம் என்றாள் கிளாரா...

சோப்புக்கு பதிலாக கண்மாயில் களிமண்ணை தேய்த்த மக்களுக்கு, ஆலும் வேலுமெனத் தடிகுச்சியோடு பல் துலக்கியோர்க்கு கொழுப்பை சாம்பலுடன் காய்ச்சி பண்டைய பாபிலோனியர்கள் பொ.ஆ.மு. 2800-ஆம் ஆண்டிலேயே சோப்பு தயாரிக்கும் கலையை அறிந்ததை நீங்களும் அறியுங்கள் என்கிற கல்வியை ஊட்ட முனைந்த கனவான்.

கார் இல்லை பஸ் இல்லை சைக்கிள் இல்லை கால் நடை தான் பயணமென்றிருந்த மக்களுக்கு மோட்டாரை அறிமுகப்படுத்திய நல்லவர். கட்டை வண்டிகளுக்கு கல்தாக் கொடுத்து விட்டு கடும் வேக ரயில்களை போட்டுத்தர முனைந்தவர்.

புராணக் கதைதான் வாழ்வும் பொழுதுபோக்கும் என்றிருந்தவர்க்கு ஓவியம், சிற்பம், நாடகம் மட்டுமல்ல அச்சியந்திர மூலம் நூல்களை அச்சிட்டு வாசிக்க கொடுத்த மனிதர். ஆனாலும் பகலிரவு பாராமல் இங்குள்ள மனிதர்க்காகவும், றோயல் இங்கிலாந்தின் பெருமைக்காகவும் உழைத்தார்.

பணம் சம்பாதிப்பதற்காக இந்த அன்னிய தேசத்தில் தன் உடலை வருத்தி தன் ஆரோக்கியம் இழந்தார். அவருக்கு புற்றுநோய் என்பது பலரும் அறியாச் செய்தி.

இன்று தான் சம்பாதித்த பணம் எல்லாவற்றையும் தன் நோய்க்காகவும், அதன் மருத்துவ செலவுகளுக்காகவும் இழக்க வேண்டியவராகவுள்ளார். மனிதர்கள் வாழும் காலத்தில் உழைப்பு உழைப்பென்று அலைந்து கடைசியில் வாழ்வை வாழாமலே செத்துத் தொலைகின்றார்கள்.

நிகழ்காலத்தைத் துறந்துவிட்டு, எதிர்காலக் கனவில் தன் நிஜ வாழ்வைத் தொலைத்து அலைகிற இந்த துர்ப்பாக்கியம் இங்கு பலருக்கும் இருக்கிறது. அது என் கணவருக்கும் எனக்கும்கூடப் பொருந்தும். அதற்கு எங்கள் வாழ்வும் ஒரு சாட்சி...

சபை பலத்த கரவொலி எழுப்பியது...

ஸ்டீபன் தன்னோடு காதல் புரிந்தால் நமக்கேன் இந்த நம்பூதிரியிடம் சேர்க்கை என்கிற வெப்பிசாரம் அவள் ஒவ்வொரு வார்த்தைகளிலும் கொப்பளித்தது.

ஆபிரிக்காவிலிருந்து ஏறத்தாள 65,000 ஆண்டுகளுக்கு முன்தான் முதல் மனிதர்கள் கால்நடையாகவே இந்தியத் துணைக்கண்டத்தை வந்தடைந்திருக்க வேண்டும். இதற்கு உயிர்சாட்சியாக அந்தமான் தீவுகளில் இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் கற்காலப் பழங்குடிகளான ஜரவாக்கள் நல்ல சான்று.

ஆதியில் உலகம் அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா எனப் பெயர் பெற்றுப் பிளவுகளாகவில்லை. அனைத்துமொன்றான பனிப்பாறைகளால் இணைக்கப்பட்டிருந்தன. இந்த இணைப்பு வழியாக ஆதி மனிதர்கள் அமெரிக்காவிற்குள் நுழைந்திருக்கலாம் என்று கருத்தை புறந்தள்ளி கொலம்பஸ் கண்டுபிடித்தான் அமெரிக்காவை என வரலாறு எழுதுவோர் நாம்...

இந்த நிலப்பாலம் இப்போது பெரிய நீரிணையாகிப் போயிற்று.

அப்படி வந்தவர்கள் வேட்டையாடி, உணவு சேகரித்து நாடோடி வாழ்க்கைதான் வாழ்ந்திருப்பர். பின் ஆற்றோரங்களில் விவசாயம் கண்டு இந்தியாவில் சிந்துவெளி நாகரிகம் கண்டு சிறப்பான வாழ்வியல் கொண்டவர்களாகப் பரிணாமம் பெற்றார்கள்.

இவர்களைத்தான் நாம் முதல் இந்தியர்கள் என்று அழைக்க வேண்டும்.

அப்படியானால், சிந்து சமவெளி நாகரிகத்தினர் பேசிய மொழி எதுவாகவிருக்கும் என்றார்கள் அவளின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த வெள்ளையர்கள்.

மரபணுத் தரவுகள் தொல்லியல், மொழியியல் சான்றுகள் என்று நாமினி நவீனமாக ஆராய்ந்தால், சிந்து சமவெளி நாகரிக மக்கள் பூர்வ திராவிட மொழியையே பேசியிருக்க வேண்டும். தென்னிந்தியாவில் வாழ்ந்துவந்த 'முதல் இந்தியர்'களுடன் சிந்து சமவெளி நாகரிகத்தினர் கூடிய போது, அவர்களிடமிருந்து பூர்வ திராவிட மொழி தென்னிந்திய மூதாதையர் மரபுடன் கூடியிருக்க வேண்டும். அதன் காரணமாக திராவிட மொழியான தமிழ் முகிழ்ந்திருக்க வேண்டும் என்றாள் கிளாரா...

அப்போ கடவுள் படைத்த நாங்கள் எங்கிருந்து வந்த வர்கள், எம் மூத்த மொழி கடவுள் மொழி சமஸ்கிருத மல்லவா என்றார்கள் அங்கு நின்ற நம்பூதிரிகள் பெருங் கோபத்தோடு...

நீங்கள் ஆரியர் வழி வந்த குழப்பக்கார நம்பூதிரிகள் என்றாள் சிரித்துக் கொண்டே...

அதே போல் நாடுகள் பிடிக்கிற ஐரோப்பியர்களும், இங்கி லாந்துக்கார எம்மவர்களும் நல்லவர்களல்ல என்றாள் கிளாரா...

இங்கு வல்லமையுள்ள ஆதிக்கவாத அரசன்தான் உலகத்தின் கடவுள்... மக்களின் வாழ்வும், சாவும் அவன் கையில்தான் இருக்கிறது என்று நம்பியவர்கள் அவர்கள்... அரசனின் விரோதிகள் கொல்லப்பட்டார்கள்... அரசனின் உறவினரான பகைவர்கள் ஆயுள் முழுவதும் கொட்டடிச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள். இங்கிலாந்தின் அரசர் களுடைய, ராணிகளுடைய தலைகள் பலவும்கூட அதிகாரப் போட்டியில் போட்டி போட்டு தமக்குள் அறுக்கப்பட்டவை என்றாள்... உண்மையில் அவளொரு பாரபட்சமில்லா மானிடவியல் ஆய்வாளர். அவளுடைய பேச்சு திசை திரும்புவதை பார்த்து இனிப் போதும் எனக் கூச்சலிட்டார்கள் ஆதிக்க வெள்ளையர்.

அவள் மேடையை விட்டு இறங்கினாள்.

நம்பூதிரியோடு ஆலப்புளா சென்றாள்.

சிறிய படகில் அந்த ஆற்றில் மிதந்தார்கள் அந்தக் காதல் சிட்டுகள்.

மைக்கேல் பாரடே கண்ட மின்சார சக்தி இல்லையெனில் இந்த உலகம் இன்னமும் இருட்டுத்தான்... என்றாள் ஒளிர்ந்து கொண்டிருந்த வெளிச்சம் பார்த்துக் கிளாரா..

உடனே கிளாராவை தொட்டணைத்தான் நம்பூதிரி.

உன் உடம்பிலும் மின்சாரம் ஓடுவது போல உணர்கின்றேன் நான் என்றான் வெகுளியாக...

கிளாரா நீ தான் இங்கிலாந்தின் மின்சார சேமிப்புக் கிடங்கா?

'ஏன் அப்படிக் கேட்கிறாய்?

'எனக்கு உன் பிரகாசமும், பளிச்சென்ற வெண்மையும், தொட்டதும் ஷாக்கடிக்கின்ற உன் உடலும், ஆப்பிள் கன்னங்களும் அப்படித்தான் இருக்கிறது...

அவன் அவள் நாக்கைத் தன் நாக்குள் அழுத்திப் பதித்தான்...

ஆசையுடன் ஆரத் தழுவிய அவர்களால் பேச முடிவில்லை. எத்தனை முரணையும் காமம் உடனேயே சுதாரித்து விடுகிறது.

சில மாதங்கள் முன்பாக இங்கிலாந்து மண்ணிலிருந்து இந்தியாவில் காலடி எடுத்து வைத்தபோது, இருளிலே இருந்த என் வாழ்விற்கு ஒளி கொடுத்தவன் நீதான் நம்பூதிரி என்றாள் இன்பக் கிளுகிளுப்போடு கிளாரா...

அவளின் அங்கப் பிரதேசங்களை ஒவ்வொன்றாய் அனுபவிப்பதில் நாயானான் நம்பூதிரி...

பீட்ரூட் கிழங்கிலிருந்து சீனி, நீராவிக்கப்பல், இரயில், தந்தி, நெருப்புப்பெட்டி, போட்டோ, மின்சார ஒளி என்றெல்லாம் புதுப்புதுச் சமாச்சாரங்கள் இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப் பட்ட நாட்களவை... இவைகளையெல்லாம் இன்னும் இந்தியா முழு வதுமாக அறியவில்லை... அவற்றை இந்தியர்கள் அனுபவிக்க வெள்ளையர்கள் அனுமதித்தவர் களுமல்ல!

உண்மையிலேயே நீ இங்கிலாந்திருந்து வந்தது இருளிலி ருந்து எமக்கு ஒளியேற்றத்தான் என்று சிரித்தான் நம்பூதிரி...

என்னுடைய வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிட்ட உன்னிடம் இன்னமும் சொல்லிக்கொண்டே இருக்கலாம் வாழ்வின் இரகசியங்களை கிசுகிசுத்தாள் கிளாரா.

இத்தனைக்கும் நன்றாகப் படித்த பணக்கார வீட்டுப் பெண் கிளாரா...

காம இச்சையும், தன் கணவன் தன்னைத் தேடுகின்றானில்லை என்கிற அவமான வெப்பிசாரமும்தான் நம்பூதிரியை அவள் நாடக் காரணங்களாகின.

தேம்ஸ் நதியின் அழகிய கரைகளில் காலாற நடந்தவளின் வெண்பாதங்கள், இன்று நம்பூதிரிகளின் கோட்டையான ஆலப்புளாக் கரைகளில் நடக்கின்றபோது துள்ளலடித்தன... இந்துக் கடல் காற்று அவளை ஏதேதோ செய்தது.

வா, அந்த அமைதி நிறைந்த கரைக்குச் செல்வோம்... என இழுத்தது காமச் சொர்க்கம்.

அசைந்தாடும் கங்கை போன்ற ஆலப்புளா நீருள் மூழ்கி எழுந்த அவள் அழகிய கொங்கைகளில் பட்டுச் சிலிர்த்தன கேரளத்துத் தண்ணீர். உலகின் எத்துணை அழகு இவ்விடம்... அவள் பெரு மூச்செறிந்தாள்... காலமெல்லாம் நம்பூதிரியோடு இருந்து விடலாம் போலிருந்தது அவளுக்கு...

இதை விடவா சிறந்துவிடப் போகிறது எம் நாட்டுத் தேம்ஸ்.

இன்னாள் வரை தேம் ஸ்நதியைப் பார்க்கும்பொழுதெல்லாம், பிரிந்திருந்த தன் கணவனான ஸ்டீபனின் நினைவு வரும்... அவனை அந்த தேம்ஸ் நதிக்கரைகளில் ஓடிப்பாடிக் காதலித்த இனிய நினைவு வந்து ஆனந்தக் கண்ணீரைத் தரும்... ஆனால் இப்போது... அவன்தான் பணஞ்சேர்க்கும் பிணமாக அலைகின்றானே...

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com



# விலகல்

## உஷாதீபன்

வாசலில் கதவு திறக்கும் சத்தம். சுனிதாதான் வருகிறாள். அறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருக்கும் என்னால் அதை உணர முடிகிறது. மணி இப்பொழுது மாலை ஆறு. சரியாக ஆறைத் தொடும்போதுதான் அவள் நுழைவாள். அந்த நேரம் என்றும் தப்பியதில்லை. மாதத்தின் கடைசி நாளில்தான் சில சமயம் அது மாறுவதுண்டு. அன்றெல்லாம் அலுவலகத்தில் யாருக்காவது பார்ட்டி என்று நான் புரிந்து கொள்ள வேண்டும். அவளாகச் சொல்ல மாட்டாள். என்னத்தச் சொல்றது என்ற ஒரு அலுப்பு உண்டு அவளுக்கு.

மாதா மாதம் அவள் அலுவலகத்தில் யாராவது ஓய்வு பெற்றுக் கொண்டேதான் இருக்கிறார்கள். அல்லது என்னமாவது ஒரு காரணத்தைச் சொல்லி யாராவது ஒருவர் பார்ட்டி வைத்துக்கொண்டேதான் இருக்கிறார்கள். ஆபீஸில் வேலை நடக்கிறதா? அல்லது இந்தப் பார்ட்டி மட்டும்தான் நடக்கிறதா? என்று தோன்றும் நமக்கு. மதிய விருந்து என்றால் மணி பன்னிரெண்டரைக்கே எல்லாரும் கிளம்பிப் போய் விடுகிறார்கள். பிறகு அவர்கள் வந்து உட்காரும் போது மணி மூன்றரை. இதை நான் சொன்னால் அவளுக்குக் கோபம் வரும்.

நான் சொல்வது ஒரு பொது அபிப்பிராயம். ஆனாலும் அது அவளுக்குத் தாங்காது. ‘ஆமா, உங்க ஆபீஸ்ல எல்லாம் ஒழுங்கா இருந்ததாக்கும்...’ என்பாள். ‘ஓய்வு பெற்றவனுக்கு எதையும் சொல்ல அருகதையில்லை. பார்ட்டி, பார்ட்டி... சதா இதுதானா உங்க ஆபீஸ்ல...’

அன்றெல்லாம் எப்படியாவது மணி ஏழு ஆகி விடும் அவளுக்கு. பொழுது இருட்டும் சமயம், தெருவில் நிசப்தம் நிலவும் ஏகாந்த அமைதியில் அவள் கதவின் கொண்டியை

உயர்த்தும் சத்தம் மட்டும் துல்லியமாய்க் கேட்கும். நேரமாகி விட்டதாலேயே அன்று ஏதாவது பார்ட்டியாக இருக்கும் என்று ஏற்கனவே உணர்ந்து வைத்திருப்பேன். அவளின் வருகையை எந்தவித அதிர்ச்சியும் இல்லாமல் எதிர்நோக்குவேன். ஆறு மணிக்கு வருவது போலவே இன்றும் இருக்கிறானே என்று கூட அவளுக்குத் தோன்றலாம்தான்.

ஆனால் இன்று மிகச் சரியாக ஆறு மணிக்கு நுழைகிறாள். இது அவளின் மற்ற நாட்களிலான வழக்கமான நேரம். முன் பெல்லாம் எழுந்து சென்று திண்ணைக் கதவைத் திறப்ப துண்டு. இப்பொழுது நான் அதைச் செய்வதில்லை. அவள் வரும் நேரம் நெருங்குகையில் முன்னதாகவே பூட்டைத் திறந்து வைத்து விடுகிறேன்.

அவள் நுழைகையில் முகத்திற்கு முன்னே நான் நிற்ப தில்லை. அது ஏனோ எனக்குப் பிடிப்பதில்லை. அவளுக்கும் பிடிக்காது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அவளாகவே கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைகையில் முதல் அறையில் அமர்ந்து கொண்டிருக்கும் என்னை அவள் திரும் பிக்கூடப் பார்க்காத அந்த நாளிலிருந்துதான் இந்த முடிவுக்கு வந்தேன்.

முன்பெல்லாம் அவள் வந்து நின்றபின்னால்தான் திறப்பேன். அப்படித் திறப்பதில் அப்பொழுது ஒரு உற்சாகம் இருந்தது. அது எங்கே போனது? ஏன் போனது? இருவருக்குமே தெரிய வில்லை. அவளுக்கும் அப்படியான மனநிலைதான் இருக் கிறது. முன்னதாகவே நான் திறந்து வைத்திருந்த அன்று அவள் எதுவும் சொல்லியதில்லை. இவனிடம் என்ன பேச்சு?

அவள் என்னைத் திரும்பிப் பார்க்காதது என் மனதில் ஒரு ஆதங்கமா? அதுவுமில்லை. என்னவோ அது தானாகவே இப்படி ஆகிப் போனது. அவள்பாட்டுக்கு இருக்கிறாள். நான், என் பாட்டுக்கு இருக்கிறேன். அவ்வளவே!

இந்த வாழ்க்கையே அடிக்கடி சலித்துப் போகக் கூடியதா கத்தானே இருந்து தொலைக்கிறது? நாமாகவே என்னத்தை யாவது செய்துதானே அதை உற்சாகமுள்ளதாக ஆக்கிக் கொள்கிறோம் அல்லது பாவித்துக் கொள்கிறோம்? புதுப் பித்துக் கொள்ளுதல். ரினியூவல்....!

இதோ சுனிதா உள்ளே நுழைகிறாள். நேரே சென்று பீரோவின் கைப்பிடியில் தன் பேக்கை மாட்டிவிட்டு, பாத்ரூம் நோக்கிச் செல்கிறாள். அடுத்தது அவள் இருக்கை, உள்ளே அமர்ந்து கணினியில் எதையோ நோண்டிக்கொண்டிருக்கும் பையனுடனாகத்தான் இருக்கும்.

இன்னிக்கு என்ன விசேடம்? ஏதாச்சும் தபால் வந்ததா? பாங்க் வேலையெல்லாம் முடிச்சிட்டீங்களா? சில சாமான் லாம் சொல்லியிருந்தேனே, வாங்கிட்டீங்களா? முக்கியமா அரிசி தீர்ந்து போயிடுச்சின்னு சொன்னேனே, வாங்கி னீங்களா? அவனுக்கு செவன் க்ரெயின்ஸ் இல்ல... அதுவும் வாங்கணும்... வாங்கியாச்சா? - இப்படிக் கேட்க நிறையக் கேள்விகள் அவளிடம் இருக்கத்தான் செய்கின்றன. அவள் கேட்பதில்லை.

கேட்டாலும் கேட்காவிட்டாலும் நான் முடித்து வைத்திருக்கப் போகிறேன். ஒருவேளை அதுவே அவளின் எண்ணமாகக் கூட இருக்குமோ என்னவோ?

அவளாக என்றோ ஒரு நாள் கேட்காமல் இருக்க ஆரம்பித்து, இன்றுவரை அப்படியே இருந்து வருகிறாள். இப்படியும்தான் இருந்து பார்ப்போமே என்பது போல். இது குறித்து நானும் அவளை வற்புறுத்துவதில்லை. உனக்குச் சலிப்பாகத் தோன்றும் விஷயம் எனக்கும் சலிப்பாகாதா அல்லது ஆகக் கூடாதா? என்னாலும் உன்னை மாதிரியே இருக்க முடியும். உனக்கு மேலும் இருப்பேன் நான்.

நீ சலித்தால் நான் சலிப்பேன் சிங்காரப் பெண்ணே... நீ அழுதால் நான் அழுவேன் மங்காத பெண்ணே... இப்படி என் னமாவது மனதுக்குத் திகிடு முகடாகத் தோன்றிக் கொண்டேதான் இருக்கிறது. எனக்குக் காமெடியாகத் தோன்றும் விஷயம் அவளுக்கும் சிரிப்பாக இருக்க வேண்டு மென்கிற அவசியமில்லையே?

ஆனாலும் மனிதனுக்கு நகைச்சுவை உணர்வு என்பது இல் லையென்றால் இந்த வாழ்க்கை வெறுத்துத்தான் போகும். அது சுனிதாவிடம் துளிகூடக் கிடையாது. மனிதன் கலை, கலாசாரம், இவைகளோடு கலந்தவனாய் இருக்க வேண்டும். அப்படியானால்தான் வாழ்க்கை சுவாரஸ்யப்படும். ஒரு வேளை இதுவே அவளின் தற்போதைய வறண்ட மனநி லைக்குக் காரணமாக இருக்கலாம்.

வறண்ட என்று சொன்னேனல்லவா? தவறு... தவறு... தன் பையனைப் பொறுத்தவரை அவள் மனம் வறண்டவளில்லை. என்னைப் பொறுத்து மட்டும்தான் அது அப்படியாகிவிட்டது.

நாற்பது வயதைத் தாண்டிய பொழுதில் அலுத்துப் போய், இன்று ஐம்பதைக் கடந்துவிட்ட நிலையில் காய்ந்து வறண்டு சருகாகிப் போனதோ என்னவோ? அடுத்து உதிர வேண்டிய துதான் பாக்கி.

உள்ளே அவன் என்னவோ சொல்லிக்கொண்டேயிருக்கிறான். அவளும் ம்... ம்... ம்... என்று 'ம்' கொட்டிக் கேட்டுக்கொண்டே யிருக்கிறாள். அப்படி என்னதான் விஷயம் இருக்குமோ அம் மாவுக்கும் பிள்ளைக்கும்? அவனின் எல்லாப் பேச்சுக்க ளையும் அவள் அவனுடைய சாதனையாக நினைக்கிறாள். அதனால்தான் சொல்ல வேண்டிய முக்கியமானவைகள் தவ றிப்போனது என்கிறேன் நான். என்னையும் சொல்ல விட வில்லையே!

பையன்தான் முக்கியம். இது அவள் அடிக்கடி சொல்வது. நானென்னவோ அப்படியில்லை என்பது மாதிரி. அவ்வாறு நினைப்பதற்கு எனக்கு மட்டும்தான் உரிமை என்பது போல் அதைச் சொல்வாள். அதைக் கேட்கச் சிரிப்புத்தான் வரும். என்றாலும் நான் அதை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. வெளியில் ஓடியாடி அலைந்து செய்வது அனைத்தும் நான். இவள்தான் பொத்திப் பொத்தி வளர்ப்பதாக ஒரு பகீரத எண்ணம்.

கடமைகளை எந்நேரமும் இப்படித் தலையில் தூக்கிச் சுமந்து கொண்டுதான் திரிய வேண்டுமா? நாமாகச் செய்ய வேண்டியதைச் செய்து கொண்டே போனோமென்றால் தானாகவே அது சென்றடைய வேண்டிய இடத்திற்குப் போய்த்தானே ஆக வேண்டும். அவன்தான் முக்கிய

மென்றால் அவனின் கல்வியில் தீவிர கவனம் செலுத்தி அவனைத் தேற்றியல்லவா விட்டிருக்க வேண்டும்? அது அவன் போக்கில் என்று ஆகிப் போனது ஏன்? இதை நான் நினைக்கத்தான் முடியும். சொல்ல முடியாது. சொன்னால் பெரிய சண்டைதான். பிறகு அடித்துப் பிரண்டு படுத்துக் கொள்வாள். நாலு நாளைக்கு அவளை எழுப்ப முடியாது. எதையென்று சொல்வது? இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான மனோவியாதியால் அவதிப்படுகிறார்கள். யாராலும் தீர்க்க முடியாத ஆயுள் பரியந்தம் அது.

தீபக் ஆறு பேப்பர்ஸ் அரியர்ஸ் வைத்திருக்கிறான்.

**‘என்னடா இது? ஏண்டா இப்டி?’**

**‘என்னவோ ஆயிப் போச்சுப்பா... விட்ரு பார்த்துக்கலாம்.’**

**‘இதென்ன நான் சொல்ல வேண்டியதை இவன் சொல்கிறான்.’**

**‘எல்லாம் முடிச்சிருவான்... பேசாம இருங்க...’**

இது சுனிதா.

நான் ஏதாவது சொல்லிவிடுவேனோ என்று முந்திக்கொண்டு அவள் சொல்கிறாள். என் வாய் ஒரேயடியாக அடைத்துப் போனது.

**‘என்ன காரணம் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?’**

**‘கொஞ்சம் காலேஜ்ல பிரச்சனை பண்ணிட்டாங்கப்பா... அதுல அப்செட் ஆயிட்டேன்...’**

**‘சரி விடு... போனாப் போறது... இப்போ முடிச்சிர்லாமா?’**

**‘முடிச்சித்தான் ஆகணும்...’**

**‘ஒரே ஸ்ட்ரோக்குல அடிச்சித் தள்ளிடு... உன்னால முடியாதா என்ன?’**

**‘மொக்கை போடாத... ரொம்பச் சொன்னேன்னா அப்புறம் ஒண் ணொண்ணாத்தான் பாஸ் பண்ணுவேன்...’**

‘என்ன பாஷை இது... மொக்கை மொழங்கை என்றுகொண்டு... லேசாகச் சொன்னதற்கே இப்படி ஒரு பதிலா? கல்லூரி இவனுக்கு இதைத்தான் கற்றுக்கொடுத்தி ருக்கிறதா? கல்வியின் பலன் இதுதானா? இதுக்குத்தான் எதுவும் பேச வேண்டாம் என்றாளா அவள்? ஒவ்வொன்றாய் இவன் என்று முடித்து, என்று டிகிரி வாங்குவது? எப்பொழுது வேலைக்குப் போவது? எங்காவது சின்ன வேலையில் நுழைந்துகொண்டுதான் பிறகு பெரிய இடத்தைப் பிடிக்க வேண்டி வரும். அவன் நிலைமை அதுதான் என்று தோன்றிப் பயமுறுத்தியது.

அதற்குப் பின்தான் சுனிதாவின் பேச்சு என் சார்பாகக் குறைந்திருக்கிறது என்பதாக இப்பொழுது எனக்குத் தோன்று கிறது. எதற்காக இவள் இப்படி ஆகிப் போனாள்? தன்னைத் தானே ஏன் இப்படி ஆக்கிக் கொண்டிருக்கிறாள்? இயல்பாக இல்லையே இது?

இவளுக்கு முன்பாகவே தீபக் என்றோ என்னிடம் பேச்சைக் குறைத்துக் கொண்டு விட்டான். இன்றைய வயதுப் பையன்கள் எல்லோரும் இப்படித்தான் இருக்கிறார்கள் என்றார் என் நண்பர். அவருக்கு அம்மாதிரி அனுபவம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் அவருக்குப் பிள்ளைகளே இல்லை. எதிலோ படித் ததை, பார்த்ததை அல்லது கேள்விப்பட்டதை வைத்து அவர் சொல்லியிருக்கலாம். ஆனால் அவரின் முடிவு பல சமயங் களில் சரியாகவே இருந்திருக்கிறது. அதனால்தான் இந்த விஷயத்தை நான் அவரிடம் பகிர்ந்து கொண்டேன்.

விடுங்க... விடுங்க... வொர்ரிப் பண்ணாதீங்க சிவா என்றார். நானென்ன பிடித்துத் தொங்கிக்கொண்டா இருக்கிறேன். எதையுமே அத்தனை அழுத்தமாக நான் மனதில் போட்டுக் கொள்வதில்லை. எல்லாமும் அப்படி இப்படித்தான் இருக்கும். எந்த விஷயமும் என்னை அத்தனை அதிர்ச்சிப்படுத்துவ தில்லை. இதுவே எனது அனுபவத்தின் அடையாளம். எது என்னை அப்படி நினைக்க வைக்கிறது என்பது தெரிய வில்லை. பொதுவாக என் மனதில் தோன்றுவது இது.

**‘எதைச் சொன்னா என்ன? சொல்லாட்டா என்ன? எல்லாமும் கிணத்துல போட்ட கல்லுதான் உங்கப்பாவுக்கு...’**

சுனிதா என்றோ இப்படிச் சொன்னதாக நினைவு. பட்டென்று ஒரு விஷயத்திற்கு ரீயாக்ஷன் காண்பிப்பதைவிட, அதை ஆறப் போட்டு, ஊறப்போட்டு, ஒரு நல்ல முடிவைக் காணலாம் அல்லது ஒன்றுமே செய்யாமல் விட்டும் விடலாம். இம்மாதிரி வசதி உள்ள ஒரு ஒத்திவைப்பு என்னிடம் இருப் பதை நான் மறுக்கக் கூடாதுதான். பல சமயங்களில் அது நல்லதையே விளைவித்திருக்கிறது.

ஆனால் ஒன்று. இன்றைய இளைஞர்களுக்கு, வயதானவர்க ளிடம் பேச எதுவுமில்லை. அவர்களின் உலகம் தனி. அது அவர்களின் வயதொத்தவர்களின் உலகம். அவர்களுக்குள் அவர்கள் ஏராளமாய்ப் பேசிக் கொள்கிறார்கள். என்னென் னவோ விஷயங்களை அலசுகிறார்கள். அவற்றில் நல்லவை களும் இருக்கின்றன, நிறையக் கெட்டவைகளும் இருக் கின்றன. ஒரு வேளை இதெல்லாம் அப்பாவிடம் பேச முடியாது என்று நினைத்திருக்கலாம். ஆனால் அப்பாவிடம் பேச வேண்டியதும் விட்டுப் போகிறதே? எதற்கும் அவன் இப்போது என்னிடம் வருவதில்லை.

அவனிடம்தான் ஒரு ஏ.டி.எம் கார்டு இருக்கிறதே, பிறகு நானெதற்கு? அவள்தான் கொடுத்து வைத்திருக்கிறாள். தேவைக்குக் கேட்டுப் பெறுவது எப்படி? இப்பொழுதே எழுதி வைப்பது எப்படி? எல்லாம் காலத்தின் கோலம். அவள் தேவைக்கே அவனிடம் கேட்டுத்தான் வாங்கிக் கொள்வாளோ என்னவோ? அந்த அளவுக்கு பையனை மதிக்கிறாளாம்... அவன் மனதிற்குள் எந்த இடத்தில் இவளை வைத்திருக்கிறானோ?

என்னவோ சொல்ல வருவதுபோல் வருவான்... ஒண்ணுமில் லப்பா... என்றுவிட்டு நகர்ந்து விடுவான்.

அவனுக்கு, அவன் அம்மாவிடம்தான் நிறையப் பேச இருக் கிறது. அதில்தான் ஒரு தன்னிச்சையான சுதந்திரத்தை உணர்கிறான். அப்பாவிடம் சொல்லி அவர் ஏதாவது மறுத்து விட்டால் அதை அவனால் தாங்க முடியாது. அம்மாவிடம் சொன்னால்தான் உடனே ஓகே ஆகும்.

கேட்டுவிட்டு அவள் என்னிடம் வந்து சொல்கிறாள். பையனுக்காக வாதாடுகிறாள். நான் அதற்கு மாற்றாகத்தான் இருப்பேன் என்று அவளாகவே முடிவு செய்துவிட்டாள். இவளாவது வந்து சொல்கிறாளே என்று சமாதானம் செய்து கொள்கிறேன் நான். என்னிடம் சொல்லாமலும் செய்து விட முடியும் அவளால். இன்றுவரை அவள் அந்த எல்லைக்குப் போகவில்லை. எதுவோ அவளைத் தடுத்தாட்கொண்டிருக் கிறது. அந்த வகையில் ஒரு ஆறுதல்தான்.

நான் அவளைப் பயப்படுத்தி வைக்கவில்லை. எதற்கும் ஒரு முறைமை இருக்கிறதுதானே? அது பிரளக் கூடாது. குடும்பம் என்பது இப்படித்தான் இருந்தாக வேண்டும் என்கிற உண்மையை நம் செய்கைகள், நடைமுறைகள் மூலம் பையனுக்கு உணர்த்த வேண்டும். வீட்டில் கற்றுக் கொள்ளும் சின்னச் சின்ன நடைமுறைகள் நாளை அவன் பணியிலிருக் கையில் கை கொடுக்கும். வெளியில் அவனைப் பக்குவப்ப டுத்தும். பொறுப்புள்ள மனிதனாக்கும்.

சமீப நாட்களாக சில குறைந்துகொண்டு வருகிறதோ என்று சந்தேகம். தீபக்கும் அவளும் கிளம்பிப் போகிறார்கள். என் னென்னவோ பொருட்களை வாங்கி வருகிறார்கள். இதெல்லாம் எதற்கு என்பதுபோல் நிறைய அதில் இருப் பதைப் பார்க்கிறேன் நான். சொன்னால் சண்டை வரும். தேவை என்பதற்கான காரணத்தைச் சொல்வாள் அவள். அந்தக் காரணங்களின் செயற்கைத் தன்மை அவளுக்கே நன்றாகத் தெரிகிறது. எப்படி எப்படியோ கூட்டிக் குறைத்துச் சொல்லி முடிக்கிறாள். நானும் தலையசைத்துக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். தேவை என்று நீட்டிக்கொண்டே போனால் பின்னர் அதற்கு ஒரு முடிவே இருக்காது என்பது என் கருத்து. இப்படி வாங்கி வைத்தவைகள் எவ்வளவு வீணாகிப் போகின்றன? கவனிக்கப்படாதவைகள் அப்ப டித்தானே தன் முடிவை அடையும்?

உள்ளே அவன் படிக்கிறான் என்றுதான் நினைத்துக்கொண்டி ருந்தேன். படித்தவைகளை அம்மாவிடம் சொல்லிக் காண் பிக்கும் பழக்கம் அவனுக்கு உண்டு. புரிகிறதோ புரிய வில்லையோ தலையசைத்துக் கொண்டிருப்பாள் அவள். அதற்கும் ஒரு பொறுமையும் சகிப்புத் தன்மையும் கண் டிப்பாக வேண்டும்தான். நிச்சயம் அவனின் பாடங்கள் அவ ளுக்குப் புரியப் போவதில்லை. அம்மாதிரிப் புரியாத பாடங்களை அப்பாவிடமும் சொல்லிக் காண்பிக்கலா மில்லையா? அது ஏன் இல்லாமல் போனது? ஒரு வேளை ஒரு பெண் இருந்தால் அது என்னிடம் அப்படிச் செய்யுமோ என்னவோ?

ஒரு பெண் பிள்ளை இல்லாதது பெரிய குறைதான். அது எனக்கு ரொம்பத் தாமதமாகத்தான் தெரிய வந்தது. அதாவது நான் உணர்ந்ததைச் சொல்கிறேன். அது இருந்தால், என்ன நீ சதா இவன்கிட்ட வந்து இப்படி உட்கார்ந்திட்டிருக்கே என்று கேட்கலாம். அப்பாவைத் தனியா விட்டிட்டு அப்படி என்னம்மா அவனட்டப் பேச்சு என்று அவளைக் கண்டிக் கலாம். அப்பொழுது அது அவளுக்கு உறுத்தலாம். சரி, படி... என்றுவிட்டு எழுந்து வரலாம்.
இப்பொழுதும் அவள் அதைச் செய்யத்தான் செய்கிறாள். படி என்று அவனிடம் சொல்லிவிட்டு உறாலுக்கு வந்து அவள் படிக்க ஆரம்பித்து விடுகிறாள். தினசரி படிப்பதில் அத்தனை ஆர்வம் அவளுக்கு. ஒரு செய்தி விடாமல் மேய்ந்து விடுவாள். என்ன அரசியல் நிகழ்வினைக் கூறினாலும் அதற்கு ஒரு எதிர்வினை அவளிடம் கண்டிப்பாக இருக்கும். நாட்டு நடப்பு அப் டு டேட்டாக வைத்திருப்பாள். அதெல்லாம் எனக்கு சந் தோஷம்தான். ஆனால் பேச்சு என்பது இல்லையே?

நீங்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும் இந்த இடத்தில். பேசவில்லை என்பதை நான் இங்கே குறையாகச் சொல்ல வரவில்லை. ஏனென்றால் நானே ஒரு புத்தகப் புழு. பேசும் நேரத்தைப் படிப்பதில் கழிக்கலாமே என்று நினைப்பவன். இன்றைக்கு இந்தப் புத்தகம் என்று எடுத்து வைத்துக் கொண்டு படித்துத் தீர்ப்பவன். படித்துக் கழிக்க என்னிடம் ஏராளமான புத்தகங்கள் இருக்கின்றன. அவள் என்னிடம் வந்து சேருவதற்கு முன்பே இளம் பிராயத்திலிருந்து இந்தப் புத்தக வாசிப்பிற்கு அடிமையானவன் நான். ஆகையினால் தனிமை என்றுமே எனக்கு ஒரு பொருட்டாக இருந்ததில்லை. ஏனென்றால் நான்தான் தனியனாகவே இருப்பதில்லையே? பல்வேறு குணாதிசயங்கள் கொண்ட அனுபவமும் செழுமையும் மிக்க மனிதர்களோடு அல்லவா நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நானெப்படி தனியனாக முடியும்? சற்றுத் தாமதமாகத்தான் இதை இங்கே நான் பகிர்ந்து கொள்கிறேன். இப்பொழுது நீங்கள் என்னை முழுமையாகப் புரிந்து கொண்டிருக்க வாய்ப்புண்டு.

**‘உங்களுக்கு இந்தப் புஸ்தகம்தான் முதல் பொண்டாட்டி...’**

**‘இருக்கட்டுமே... அதனால உடலும் மனமும் கெடப் போற தில்லையே...’**

**‘அதெப்படிச் சொல்ல முடியும்... என்ன புஸ்தகம் படிக்கிறீங்கங் கிறதைப் பொறுத்ததாச்சே அது...’**

**‘அது உன் பார்வை... எனக்குன்னு நிறைய உறுதிகள் உண்டு... வேணும்னா வந்து பாரு...’**

வேண்டாம்ப்பா... அதெல்லாம் உங்களோடவே இருக்கட்டும்... எனக்கு ஆன்மீகப் புஸ்தகங்கள்தான் பிடிக்கும்... இதெல் லாம் வேண்டாம்.

**‘ஆன்மீகம் ஆன்மீகம்ங்கிறியே... அப்படீன்னா என்னன்னு சொல்லேன் பார்ப்போம்...’**

**‘உண்மையிலேயே உங்களுக்குத் தெரியாதா?’**

**‘தெரியாதுன்னுதான் வச்சிக்கேயேன்... எனக்கு இதை மத்தவங் ககிட்டக் கேட்டுத் தெரிஞ்சிக்கிறதுல வெட்கமில்ல... நீதான் சொல்லேன்...’**

**‘எனக்கு விளக்கமெல்லாம் சொல்லத் தெரியாது. உணரத்தான் தெரியும்.’**

**‘அடேயப்பா... உணர்ற அளவுக்குப் பக்குவமாயாச்சா?’**

**‘அது உணர்றவங்களுக்குத்தான் தெரியும்...’**

**‘நீ உணர்றதை நான் உணரமாட்டேன்னு எப்படிச் சொல்ற? முதல்ல நீ சரியாத்தான் உணர்றையாங்கிறதை தெரிஞ்சிக்க வேண்டாமா?’**

‘யாரும் தெரிஞ்சிக்க வேணும்னு அவசியமில்ல...’

‘ம்... அப்போ இதுதான் உன் ஆன்மீகம் போலிருக்கு...’

பதிலில்லை அவளிடம்.

‘என்னைப் பொறுத்தவரைக்கும் மனுஷனை எதெல்லாம் பக்கு வப்படுத்துதோ அதெல்லாம் ஆன்மீகம்தான்...’

எதிலும் அவள் சற்றும் கீழிறங்கி நான் பார்த்ததேயில்லை. சொல்லப் போனால் அதை நான் மிகவும் ரசித்திருக்கிறேன். ஆனாலும் அவள் பேச்சு இத்தனை குறைவாக இருக்கக் கூடாதுதான்.

‘நீ இப்டியே இருந்தேன்னா நாளடைவில் உனக்கு மொழி மறந்து போகும்... அப்புறம் தாய்பாஷை எதுன்னு தேடணும். புதுசாப் பேச ஆரம்பிச்சு வார்த்தைகளுக்குப் பழகணும்... ஜாக்கிரதை...’

அவளின் அமைதி அதீதமானது.

‘ஏன் இத்தனை குழப்பம். நீ பேசிவிட வேண்டியதுதானே? என்று நீங்கள் கேட்கலாம். நான் ஒரு வள வளாப் பேச்சுக் காரன். பேச ஆரம்பித்தால் நிறுத்த மாட்டேன். அதில் நிறைய நல்லதும் இருக்கும் கெட்டதும் இருக்கும். என்னிடம் சற்று லூஸ் டாக் அதிகம். அது அவளுக்குப் பிடிக்காது. ஒரு வேளை எனது இம்மாதிரியான பைத்தியக்காரப் பேச்சுக்கள் பிடிக்காமல்தான் அவள் அறவே என்னிடம் பேச்சை நிறுத்தி விட்டாளோ என்னவோ? ஏனென்றால் பைத்தியம் தானேதான் பேசிக் கொள்ள வேண்டும்.’

ஆரம்ப கால சுனிதாவை நான் நன்கறிவேன். வீட்டுக் காரியங் களில் அவள் என்ன பிஸியாக இருந்தாலும் கூட காரியார்த் தமாய் நாம் ஏதாவது கேட்டால் டக்கென்று பதில் சொல்வாள். என்னதான் ஓய்வாக இருந்தாலும் அசட்டுத்தனமாய் ஏதாவது பேசினால் மலையே இடிந்து விழுந்தாலும் அவளிடம் ரீயாக்ஷனே இருக்காது. ஏதோ கிறுக்கு ஒளருது... அவ்வள வுதான்.

இதோ நான் சொன்னதுபோல்தான் சுனிதா இப்பொழுது உறாலுக்கு வந்திருக்கிறாள். அடுத்தாற்போல் தினசரியைக் கையில் எடுக்கப் போகிறாள். அவள் வழக்கமாய்ப் படிக்கும் இடத்தில் நாற்காலி கிடக்கிறது. அது அவளை இருத்திக் கொள்ளப் போகிறது. அவளோடு சேர்ந்து எத்தனை ஆயிரம் செய்திகளைக் கண்டிருக்கிறது அது! தினசரித் தாள் வடி வத்தில் அந்த நாற்காலி செய்திகளை அப்பிக்கொண்டு உருப்பெற்றிருப்பதாய் எனக்குத் தோன்றுகிறது.

என் அறையில் நான். உறாலில் அவள். உள் அறையில் அவன். வீடே ஒரு நூலகமாய்த் தோன்றுகிறது. ஏகாந்த அமைதி. பல மணி நேரங்கள் இந்த வீடு இப்படி இருப்பதற்கு அனுபவப்பட்டிருக்கிறது. என் வீட்டிற்குப் பெயர் ‘சாந்தி இல்லம்’. அது என் மனதை ஈர்த்த ஒரு ஏழைப் பெண்ணின் ஞாபகமானது. முட்டி முட்டிக் கேட்டிருக்கிறாள் சுனிதா அது யார் என்று? அது என்னோடு தோன்றி என்னிலேயே அழியக் கூடிய ரகசியம். நீங்களும் அறியக்கூடாத, அறிய முடியாத ஒன்று. சாந்தி நிலவ வேண்டும் - பாட்டு ஞாபகம் வருகிறது எனக்கு. அதுதான் தாராளமாய் நிலவிக் கொண்டிருக்கிறதே! நீங்கள் நினைப்பீர்கள் அமைதியை அப்படிச் சொல்கிறான் என்று. அது அல்ல இது. சாந்த சொரூபம். என் வீட்டில் என் எதிரில் என் மன அமைதிக்காக என் முன்னே எப்பொழுதும் திகழும் சாந்த சொரூபிணி ‘அந்தச் சாந்தி’.

உறாலில் இருக்கும் சுனிதாவின் உருவம் எனக்குத் தெரிய வில்லை. ஏனெனில் என் அறையில் நான் அமர்ந்திருக்கும் இடம் அப்படி. ஒவ்வொருவரும் அவரவருக்குள் அப்படி ஒரு இடத்தைச் சுயமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டோம்.

சற்றுக் கழித்து அவள் குரல் மட்டும் கேட்கிறது. அந்தக் குர லில்தான் என்ன ஒரு உறுதி. ஏற்கனவே முடிவு செய்துவிட்ட ஒன்று அது.

‘அவனுக்கு ஒட்டலுக்குப் போகணுமாம். நான் கூடப் போயிட்டு வர்றேன்...’

கிளம்பியாயிற்று. இதோ அவனும் படியிறங்கிவிட்டான். சத்தம் கேட்கிறது. நிச்சயம் அவளும் அவனோடு சேர்ந்து இரவு டிபனை முடித்து விட்டுத்தான் திரும்புவாள். அவனா வது விடுவதாவது! அம்மாவை விதம் விதமாய்ச் சாப்பிட வைத்துப் பார்ப்பதில் அவனுக்கு ஒரு அலாதிப் பிரியம். அதுபோல் அப்பாவுக்கும் ஒரு நாக்கு உண்டு என்று ஏனோ அவனுக்குத் தெரியவில்லை. உங்களுக்கும் வாங்கிட்டு வர்றோம்... என்று ஒரு நாளும் சொன்னதில்லை. பாவம் அவள். அவன் ரசனைக்கு அவள் ஆகமாட்டாள். விதம் விதமாய்த் தேடி, ரசித்துச் சாப்பிடும் பழக்கமெல்லாம் உடம்போடு ஒட்டியதாய் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் ரசித்து எதிர்நோக்கும் திறன் வேண்டும்.

வெறுமே போயிட்டு வர்றேன் என்ற அவளின் உலர்ந்த வார்த்தை உள்ளே இருக்கும், தவறின் உறுத்தலை அவள் உணர்ந்ததின் அடையாளம். அது போதும் எனக்கு. வாழ்க வளமுடன்.

கையிலென்ன கொண்டு வந்தோம்... கொண்டு செல்ல... - சட்டென்று தோன்றும் பாட்டு வரிகள். மனசு லேசாகிப் போகிறது எனக்கு. அது என் இயல்பு.

பதிலொன்றும் நான் சொல்லவில்லை. எதிர்பார்க்கவுமில்லை. அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள்.



ushadeepan@thaiveedu.com

# ஆண்குறிகள் அழுக்கானவை




– பவானி சற்குணசெல்வம்

பெருநாடுகளுடன் ஒப்பிடுகையில் சிற்றூரிலும் சிறியது எமது நாடு. அதில் இலங்கை பூராவும் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் தமிழ் பேசும் சமூகங்கள். அதிலும் உலகெங்கும் ஆங்காங்கே பரந்துவாழும் தமிழர்களை நுணுக்குக்காட் டியின் கண்ணாடிகளால் தேட வேண்டிய நிலை.

இருந்தபோதும் நாற்திசைகளிலிருந்தும் உலகளாவ எமது குரல் ஓங்காரமாக ஒலிக்கிறது. அதுவும் இனிய தமிழில் ஒலிக் கிறது. கதைகளாக, கவிதைகளாக, நாடகமாக, கூத்தாக, ஒலிப்பேளைகளாக, ஒளிச்சித்திரங்களாகச் சிறகடித்து வலம் வருகின்றன.

இதில் நாட்டில் வாழ்பவர்கள், புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் அவர்களின் வாழ்க்கைப் பின்னணி கலாசாரப் பிறழ்வுகள் என ஒரு சிக்கலான கட்டமைப்பில் வாழும் நம்மினம் பேசக்கூடிய விடயங்கள் பேசக்கூடாத விடயங்களெனத் தொன்றுதொட்டு வகுத்தும் பகுத்தும் வைத்திருக்கும் விடயங்கள் இன்றும் பேசப்படாமல் இருப்பதும், அதனால் வரக்கூடிய விளைவு களைப் பற்றிய சிந்தனைகள் வளர்வதும் மலர்வதும் அழகு தான். இன்னொரு விதமாகக் கூறப்போனால் நமது சமூகத்தில் பேசப்படாது சில விடயங்கள் மறைத்து வைக்கப்படுவ தனால்த்தான் சில சமூகப் பின்னடைவுகளும் சமூகச் சீரழிவு களும் அதிகரித்துச் செல்லக் காரணமாக இருக்குமோ என்றுகூட எண்ணத் தோன்றும். பேசப்படாது என்று இப் பொழுதும் தவிர்த்து வைக்கப்பட்டிருக்கும் சில விடயங்கள் சங்க இலக்கியங்களில் அதிகமாகப் பேசப்பட்ட விடயங் கள்தான்.

இந்தக் கதையில் என்னைக் கவர்ந்த முதல் விடயம் என்ன வென்றால் இலங்கைவாழ் இளைய தலைமுறை எழுத்தாளர் ஒருவர் துணிந்து பலர் பேசத்துணியாத விடயங்கள் பற்றிப் பேசியதுதான். இந்தக் கதை, சமூக ஏற்றத்தாழ்வுகளையும், பின்தங்கிய மக்களின் (முக்கியமாகப் பெண்களின்) அவல நிலைகளையும் வெளிப்படையாகப் பேசுகிறது. எளிமையான நடை யில் கதையை எழுதியுள்ளார், இதனால் வாசகர்கள் எளிதில் கதையுடன் தொடர்புகொள்ள முடிகிறது.

சில இடங்களில், கதையில் வரும் கதாபாத்திரங்களின் செயற் பாடுகள் நகைச்சுவையை ஏற்படுத்துகின்றன. இது கதையை சுவாரசியமாக்குகிறது. இந்தக் கதையில், கதை சொல்லியின் கூற்றுகள், கதாபாத்திரங்களின் மனவோட்டங்கள் போன்றவற் றுடன் மட்டுமல்லாமல் அவர்கள் செய்யும் செயல்களால் அவர் களின் வாழ்க்கை நிலை வெளிப்படுகிறது.

மொழியை வசப்படுத்திக் கருத்தை மறைபொருளாக்கி, படைப்பை செதுக்கித் தரும் ஆற்றலை இந்த எழுத்தாளர் தன் வசப்படுத்தியிருக்கிறார் என்று கூறலாம்.

‘கோதுமை ரொட்டியென நிலத்தை சூடேற்றிக்கொண்டி

ருக்கும் சூரிய வெப்பம் தகிக்கின்ற பட்டப் பகலில்... நிலத்தில் விழுந்த பனம்பழம் போன்ற தொத்திப்பான முகத்தை யுடைய...' போன்ற புதுமையான பொருத்தமான படிமங்களை ஆங் காங்கே பாவிப்பதன்மூலம் கதையை மேலும் மெருகூட்டி யுள்ளார்.

சுயஇன்பம் என்பது இயல்பான பாலியல் செயற்பாடுதான், இதிலுள்ள நன்மை தீமைகள் பற்றி பல நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அளவுடன் சுயஇன்பம் பெறுபவர்கள் அதி கம் நன்மையையே அடைகின்றனர். ஆனால் இது தவறா னதென சில மதக்கொள்கைகள் கூறுகின்றன. இங்கே தன்னைப் புனிதனாக வெளி உலகில் நிலைநிறுத்தும் ஒரு பாதிரியார் சுயஇன்பத்தில் ஈடுபட்ட பால்ய வயதுப் பையன் சுள்ளானுக்குத் தண்டனை கொடுப்பதாக ஆரம்பிக்கும் கதையின் இரண்டாவது அத்தியாயம் அவனின் தாய் மரியத் தின் வாழ்வையும் அதன் பின்னணியையும் விபரித்துச் செல்கிறது.

மரியம் இறந்துபோன கணவனுடன் வாழ்ந்த காலங்களை நினைத்து ஏங்கும் அதேவேளை தன் கஷ்டத்தின் நிமித்தம் உடலை விற்று சீவிக்கிறாள். அவளுக்கு மெர்லின் என்று ஒரு பெண் பிள்ளை. மரியத்தின் நிலையைப் புரிந்து கொள்ளாத எம் சமூகம் அவளை வேசை என்று வசைபாடுவதுடன் திருச்ச பையிலிருந்தும் விலக்கிவிடுகிறது.

ஆணாகப் பிறந்திருந்தாலும் ஆணாகவோ பெண்ணாகவோ உணரப்படாத நிலையில் தன் தந்தையினால் பழிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட மேற்கத்தேய வெள்ளையர் ஒருவன் வீட்டிலி ருக்க முடியாமல் திருச்சபையில் சேர்ந்து பின் சுனாமி அழிவு களில் இடிந்து போன தேவாலயத்தை நிர்மாணிக்கும் பணிக் காக இலங்கை வருகிறான். அந்தநேரம் அங்கு சமையல்காரி யாகப் பணிபுரிந்த றோசம்மா நோயுற்றிருந்ததால் மரியம் அவனுக்கு பணிவிடைகள் செய்ய அமர்த்தப்பட்டாள். அந்த வெள்ளையர் மரியத்துடன் எந்தப் பாரபட்சமுமின்றிச் சமனாக அவளை நடத்திய தன்மை அவளைப் பூரிக்க வைத்தது. நட்புடன் பழகிப் பணிமுடிந்து அந்த வெள்ளையர் ஊர் திரும் பிய சில நாட்களில் மரியம் கருத்தரித்திருப்பதை ஊர் அறிந்து அவள் வெள்ளையனுடன் தொடர்புற்று வாங்கிய பிள்ளையை வயிற்றில் சுமப்பதாக அவள் மீதான அவதூறுகளை ஊரெல்லாம் விதைத்தனர்.

அவள் கர்ப்பமாக இருக்கும்போதே நோய்வாய்ப்பட்டுக் குழந் தையை குறை மாதத்தில் பெற்றெடுத்து சொற்ப காலத்தில் இறந்து போகிறாள். அந்தக் குழந்தைதான் இக் கதையின் முற் பகுதியில் கூறப்படும் சுள்ளான். அவனது சூத்தாமட்டியின் மீது ஏறியிருக்கும் தசைத்துண்டத்தில் அதிகளவு மயிர்க ளுடன் ஒரு மாங்காய் மச்சம் இருந்தது. மரியம் இறந்தபின் றோசம்மா மரியத்தின் குழந்தைகளுக்கு ஆதரவாக இருக் கிறாள். சுள்ளானுக்குப் பற்றைகளில் தும்பி பிடிப்பது என்பது அலாதி விருப்பம். ஒருநாள் ஒரு பச்சைத் தும்பியைப் பிடித்த சந்தோசத்தில் கடற்கரைக்கு ஓடிவந்தவனுக்கு ஊர்ச்சனங்கள் அங்கு கூடியிருப்பது வியப்பாக இருந்தது. மெர்லின் முளங்கா லிலிருக்க வைக்கப்பட்டிருந்தாள். றோசம்மாள் பாதிரியாரை ஒரு புருஷன் நிறை வெறியில் எப்படி பெண்டாட்டியை அடிப்பானோ அப்படி ஆத்திரம் பொங்க அடித்துக்கொண்டி ருந்தாள். அவள் அப்பாவிக் குழந்தையை நீ நாசமாக்கி விட்டாய் என்று கேட்டுக்கேட்டு அடித்தாள். பாதிரியார் உடை கிழிந்து நிலத்தில் புரண்டார்.

அவரின் சூத்தாமட்டியின்மீது ஏறியிருக்கும் தசைத்துண்டத் திலும் அதிகளவு மயிர்களுடன் ஒரு மாங்காய் மச்சம் என்று முடியும் இந்தக் கதையில் ஆங்காங்கே பொருத்தமான பைபிள் வரிகள் பொருத்தப்பட்டிருப்பது சிறப்பாக இருப் பினும் ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பாதிக்கும் வகையில் இந்தக் கதை எழுதாமல் வேறு வழியில் கதையை நகர்த்தியி ருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. வட்டார வழக்குச் சொற்களைத் தவிர்த்தால் இவரின் படைப்புகளை அனை வரும் வாசித்து இலகுவாக விளங்கிக்கொள்ளலாம் என்பது எனது தாழ்மையான கருத்து.

எல்லா மச்சங்களும் பரம்பரையலகுகளின் ஊடாகக் கடத்தப் படாது என்பதை நன்கு தெரிந்த கதைசொல்லி அதிக மயிர்க ளுடனான மாங்காய் மச்சத்தை வைத்துச் சாதுரியமாகக் கதை புனைந்திருக்கிறார். பிறப்புரிமை என்பது பிறப்புரிமை யியல் காரணிகள் மற்றும் சூழற் காரணிகள் சார்ந்து உருவா வது. அதில் இரண்டினதும் பங்கு உள்ளது. உடலில் மெலனி னைப் படியவைக்கும் தோலிலுள்ள மெலனின் குழியங்களின் திரட்சி பாரம்பரியம் சார்ந்தும் ஏற்படலாம் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

மேலும் கதைசொல்லி ஒரு மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்த்தொழில்நுட்ப மாணவன் என்பதையும் இங்கு பகிர் கிறேன். அத்தோடு இங்கு ஓர் இடத்தில் கூட ரோமன் பாதிரியா ரிடமிருந்துதான் குறித்த மச்சம் குச்சானுக்குக் கடத்தப்பட்டது என்று கூறப்படவில்லை. ஜேக்கப்பிற்கு உள்ளங்கை வியர்ப்பது போலவும் அவனுக்குப் பூனைக்கண்கள் இருப்பது போலவும் குச்சானுக்கு ஏற்படுவதையும் கதை கூறுகிறது. அதே நேரம் மரியத்திற்கும் பூனைக்கண் என்று குறிப்பிடப்படு கிறது. கை வியர்ப்பதற்குப் பல காரணிகள் இருக்கலாம். இதில் குச்சானின் தகப்பன் யார் என்பது நேரடியாகக் குறிப்பி டப்படவில்லை. மையத்தை மட்டும் வைத்துக்கொண்டு முடிவுக்கு வர எத்தனிக்கும் வாசகர்களால் விளிம்பை அறிய முடியாது. இங்கு மையம் குச்சான் ரோமன் பாதிரியாரின் மகன் என்பது. விளிம்பு ஜேக்கப்பின் மகன் என்பது. (மாறியும் யோசிக்க இடமுண்டு) பின்நவீனத்துவம் என்ன கூறுகின்றது என்றால் மையமும் விளிம்புமற்ற நிலை கதைகளில் காணப்ப டுவது என்பதை. இந்தக்கதை மையம் / விளிம்பு எதுவென்று கூறாமல் முடிகிறது.

உள்நாட்டு வாழ்க்கை, வெளிநாட்டு வாழ்க்கை, கரும்புத் தோட்டக் கூலி வாழ்க்கை, விபச்சாரியாக வாழ்தல், பாலியல் பிறழ்வுகள் தரும் உணர்வுச் சிக்கல்கள் எனக் கதைசொல்லி இந்தக் கதையைப் பல தளங்களினூடாக நகர்த்திச் செல்வது சிறப்பு.
மொத்தத்தில் நல்லதொரு கதையை வாசித்த உண்ர்வைத் தோற்றுவித்த சிறுகதை.



Bavany.S@thaiveedu.com



# முத்தம்

**அன்ரன் செக்கோவ்**

**தமிழில்: என்.கே. மகாலிங்கம்**

(அன்ரன் செக்கோவ் உலகப் புகழ் பெற்ற ரஷிய எழுத்தாளர். காலம் 1860-1904. நாடகங்களும் சிறுகதைகளும் எழுதியவர். புகழ் பெற்ற நாலு செவ்வியல் நாடகங்களும் பல சிறுகதைகளும், குறுநாவல்களும், பயணக்கட்டு ரைகளும் எழுதியுள்ளார். அவருடைய சிறுகதைகளை இலக்கிய விமர்சகர்களும் வாசகர்களும் உயர்ந்த இடத்தில் வைத்துள்ளனர். ஹென்றிக் இப்சன், ஒகஸ்ற் ஸ்றின்பேர்க் ஆகியோருடன் இவரையும் சேர்த்து நவீன நாடகத்தின் முக்கியமான மூன்று பேர்கள் என்றும் கணிக்கிறார்கள். இவர் தொழில்ரீதியாக ஒரு மருத்துவர். 'மருத்துவம் என்னுடைய சட்டரீதியான மனைவி. இலக்கியம் என் வைப்பாட்டி,' என்று ஒருமுறை சொன்னார்.

இவருடைய முக்கியமான நாடகங்கள் The Seagull, Three Sisters, The Cherry Orchard, Uncle Vanya.

கலைஞனின் பங்கு கேள்வி கேட்பதே அன்றி பதில் சொல்வதல்ல, என்று ஒருமுறை சொன்னார், அவருடைய சில கதைகள் புரியவில்லை என்று கேட்டதற்கு பதிலாக.

அவருடைய தந்தை, விடுதலை செய்யப்பட்ட அடிமையின் மகன். அவர் மளிகைக் கடை வைத்திருந்தார். தாய் நன்றாகக் கதை சொல்வார். நாங்கள் தந்தையிடமிருந்து திறமைகளையும் தாயிடமிருந்து ஆன்மாவையும் பெற்றோம் என்றார். தந்தை கண்டிப்பானவராக இருந்திருக்கிறார். செக்கோவ் புதுமைப்பித்தனையும் அவர் தந் தையையும் இவ்விடத்தில் நினைவில் கொண்டு வருகிறார். செக்கோவைப் போல புதுமைப்பித்தனும் இளமை யிலேயே காசநோயால் பாதிக்கப்பட்டு உயிர் நீத்தார். தந்தை யுடனான உறவில் விரிசல் இருந்தது.)

மே மாதம் இருபதாம் திகதி மாலை எட்டு மணிக்கு வட பகுதி படையணியின் ஒரு பகுதியான சேமப்படையின் ஆறு பீரங்கித் தொகுதிகளும் பாசறைக் கூடாரத்திற்குப் போகும் வழியில் மியெஸ்றெசிக்கிக் என்ற கிராமத்தில் இரவு தங்கியது. அப்போது படைகளின் பொதுவான சந்தடி இரைச்சல் உச்சத்தில் இருந்தது. சில அதிகாரிகள் துப்பாக்கிகளை பழுதுபார்ப்பதில் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள், தேவாலயத்தின் சதுக்கத்தின் அருகாமையில் ஒன்றுகூடி குடியிருப்புக்குப் பொறுப்பான அதிகாரி சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த நேரம் ஒருத்தன் சிவில் உடையில் விசித்திரமான குதிரை ஒன்றில், தேவாலயப் பகுதியில் தோன்றினான். சிறிய சாம்பல் கலந்த பழுப்பு நிறமும், அழகான கழுத்தும், கட்டை வாலும் உடைய குதிரை அது. அதில் நேராக வராமல் பக்கவாட்டில் அசைந்துகொண்டு வந்தான். அந்த குதிரை, கால்களில் சவுக்கால் அடிபட்டது போல ஒருவகையான நடனம் ஆடிக்கொண்டு காலடி எடுத்துவைத்து நடந்து வந்தது. குதிரையில் வந்தவன் அதிகாரிகள் நிற்கும் இடத்தை அடைந்தவுடன் தன் தொப்பியை கையில் எடுத்துக் கொண்டு, 'மேன்மைதங்கிய லியுட்டினன்ற் ஜெனரல் வொன் ராபெக், கனவான்களாகிய உங்களை இன்று தன்னுடன் தேநீர் அருந்த அழைக்கிறார்...' என்றான்.

பின் குதிரை திரும்பி, நடனமாடி விட்டு, பக்கவாட்டாகத் திரும்பிச் சென்றது. தூதன் திரும்பவும் ஒருதரம் தன் தொப்பியை தூக்கி விட்டு, தேவாலயத்தின் பின்பக்கம் விசித்திரமான குதிரையுடன் மறைந்துவிட்டான்.

'என்ன அர்த்தம் இதற்கு?' என்று அங்கிருந்த சில அதிகாரிகள் குறைபட்டுக்கொண்டு, தங்கள் இருப்பிடத்தை நோக்கிக் கலைந்து சென்றார்கள். 'நாங்கள் தூக்க மயக்கத்தில் இருக்கிறோம். இந்த வொன் ராபெக் என்பவன் தேநீர் விருந்துக்கு அழைக்கிறான்! தேநீர் விருந்தென்றால் என்ன என்று எங்களுக்குத் தெரியும்.'

ஆறு பீரங்கித் தொகுதிகளின் அதிகாரிகளுக்கும் கடந்த ஆண்டு நடந்த நிகழ்ச்சி தெளிவாகவே நினைவிருந்தது. கொசாக் படைப்பிரிவு அதிகாரிகளுடன் சேர்ந்து நடைபெற்ற ஒரு நிகழ்வின்போது இதேபோல ஒரு பிரபு தேநீர் விருந்துக்கு அழைத் திருந்தார். அவருக்கு அந்தச் சுற்றுப்புறத்தில் ஒரு பண்ணை இருந்தது. அவர் ஓய்வுபெற்ற ஓர் இராணுவ அதிகாரி. விருந்தோம்பல் பண்பும் இன்முகம் காட்டிப் பழகும் தன்மையும் உள்ளவர். அவர் இவர்களுக்கு நன்றாக மதுவும் உணவும் அளித்து உபசரித்தார். கிராமத்தில் உள்ள அவர்களின் இருப்பிடத்திற்குப் போக அனுமதிக்காமல் அன்றிரவு அங்கேயே தங்கச் செய்தார். அவை எல்லாம் நன்றாகவே நடந்தன. அவற்றை விட வேறெதையும் எவரும் விரும்ப மாட்டார்கள். ஆனால் அதில் மோசமான விஷயம் என்னவென்றால் முதிய இராணுவ அதிகாரி இளம் இராணுவத்தினரிடம் உண்டான நட்பால் ஈர்க்கப்பட்டு காலையில் சூரியன் உதிக்கும்வரை தன் காலத்து இராணுவ அதிகாரிகளின் புகழ் பெற்ற கடந்த காலத்து உபகதைகளைச் சொல்லுவதில் காலத்தைக் கடத்தினார். அத்துடன் அவர்களை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, விலைமதிப்பற்ற ஓவியங் களையும், பழைய செதுக்கு வேலைப்பாடுகளையும், அரிய துப்பாக்கி வகைகளையும், பெரிய மனிதர்கள் தம் கையால் எழுதிய கடிதங்களையும் வாசித்துக் காட்டினார். விருந்துக்கு வந்திருந்த இளைய அதிகாரிகள் களைப்புற்று எப்போது போய் தங்கள் படுக்கையில் தலையைச் சாய்க்கலாம் என்றும் மறைவாகக் கொட்டாவி விட்டுக்கொண்டும் காத்துக்கொண்டும் இருந்தார்கள். இறுதியில் விருந்தாளி அவர்களைப் போக அனுமதித்தபோது அவர்கள் துயில்வதற்கான காலம் கடந்துவிட்டது.

இந்த வொன் றாபெக்கும் அப்படியானவராக இருக்கலாம் அல்லவா? அவர் அப்படியானவரோ இல்லையோ அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் தங்கள் சீருடைகளை மாற்றிக்கொண்டு, எல்லோரும் சேர்ந்து அந்தக் கனவானுடைய வீட்டைத் தேடிச் சென்றார்கள். தேவாலயத்தின் சதுக்கத்துக்குப் பக்கத்தில் உள்ள பாதையால் கீழிறங்கிச் சென்றால் மேன்மை தங்கியவரின் வீட்டுக்குச் செல்லலாம் என்று சொன்னார்கள். அல்லது தேவாலயத்தின் பின்புறம் ஆற்றின் பக்கம் கீழிறங்கி, கரையோரம் தோட்டம்வரை நடந்தால் ஒரு சாலை செல்லும். அது அவர் வீட்டிற்குக் கொண்டு செல்லும். அல்லது மேல் பாதையால் தேவாலயத்திலிருந்து நேராகச் செல்லும் தெருவால் போனால் கிராமத்திலிருந்து அரை மைல் தூரத்தில் உள்ள மேன்மை தங்கியவரின் தானியக் கிடங்குகளை அடையலாம். அப்படியும் போகலாம் என்றார்கள். அதிகாரிகள் மேற்பக்க வழியால் செல்லத் தீர்மானித்தார்கள்.

'யார் இந்த வான் றாபெக்?' என்று வியந்தார்கள். 'நிச்சயமாக, பிளெவ்னாவில் உள்ள குதிரைப்படைப் பிரிவை நடத்தும் கட்டளைத் தளபதியாக இருக்காது,' என்றார்கள்.

•

'இல்லை, அவர் இந்த வொன் றாபெக் அல்ல. அவர் சாதாரண றாபெக் தான். வொன் என்ற பிரபு வர்க்கத்தைச் சேர்ந்தவர் அல்ல.'

'எப்படியான அருமையான காலநிலை!'

முதலாவதாக வந்த தானியக் கிடங்கில் இருந்து தெரு இரண்டாகப் பிரிந்து சென்றது. ஒன்று நேராகச் சென்று மாலை இருட்டில் மறைந்து போனது. அடுத்தது, வலது பக்கமிருந்த களஞ்சிய உரிமையாளரின் வீட்டுக்குச் சென்றது. அதிகாரிகள் வலது பக்கம் திரும்பி மெதுவாகப் பேச ஆரம்பித்தார்கள்... தெருவின் இரண்டு பக்கமும் கல்லால் கட்டப்பட்ட தானியக் கிடங்குக் கட்டடம் நீண்டு சென்றது. அவற்றுக்கு செந்நிறக் கூரை போடப்பட்டிருந்தது. அவை முறைத்த தோற்றத்தில், மாவட்ட நகரத்தில் உள்ள இராணுவ இருப்பிடம் போன்று காணப்பட்டது. அதற்கு மேற்புறம் பண்ணை வீட்டின் யன்னல், கண்ணாடிகள் ஒளிவீசின.

'நல்ல சகுனம், கனவான்களே,' என்றான் அதிகாரிகள் ஒருத்தன். 'எங்களை அழைத்தவர் மிகவும் அனுபவம் வாய்ந்தவராகவும் திறமைசாலியாகவும் இருக்க வேண்டும். அவர் எங்களைப் பற்றி விபரம் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும்!...'

லியுற்றினன்ற் லொபிற்கோ முன்னால் சென்று கொண்டிருந்தான். உயரமானவன், உறுதியானவன். முகத்தில் மீசையோ

தாடியோ இல்லை. அவனுடைய வட்டமான செழிப்பான முகத்தில் ஏதோ காரணத்தால் ஒரு மயிர்கூட முளைத்திருக்கவில்லை. வயது இருபத்தைந்துக்கு மேல் இருக்கும். பெண்கள் அவ்விடத்தில் இருக்கிறார்களா என்பதைத் தூர இருந்தே அறியும் விசேஷ புலனறிவு உள்ளவன் என்பதற்காக படையணிப் பிரிவில் பெயர்பெற்றவன். அவன் திரும்பி நின்று, 'ஓம், இங்கே பெண்கள் இருக்கிறார்கள். அதை நான் என் இயல்புணர்வால் அறிந்து சொல்கிறேன்,' என்றான்.

வாசலில் வொன் றாபெக்கே அதிகாரிகளை வரவேற்றார். அழகான தோற்றம் கொண்ட மனிதர். அறுபது வயதிருக்கும். சிவிலியன் உடையில் இருந்தார். விருந்தினருடன் கைகளைக் குலுக்கிக் கொண்டார். அவர்களைக் கண்டதால் தான் மிகவும் மகிழ்ச்சியும் உவகையும் அடைவதாகச் சொன்னார். ஆனால் அன்றிரவு அங்கே அவர்களைத் தங்குவதற்கு கேட்க முடியாது என்பதற்காக மன்னிக்கும்படி இறைவன் பேரில் தாழ்மையாகக் கேட்பதாகச் சொன்னார். அவரின் இரண்டு சகோதரிகள் தங்கள் குழந்தைகளுடனும் சில சகோதரர்களும் சில அயலவர்களுடன் அவரைச் சந்திப்பதற்காக வந்திருப்பதாகவும், அதனால் இவர்கள் தங்குவதற்குக் கூடுதலாக அறைகள் இல்லை என்றும் சொன்னார்.

தளபதி எல்லோரின் கைகளையும் குலுக்கினார். மன்னிப்பும் கேட்டார். முறுவலித்தார். முன்பு சந்தித்த பிரபு போல் இவர் இல்லை என்பது அவரின் முகத்தில் தெரிந்தது. அவர் அதிகாரிகளை அழைத்ததிற்குக் காரணம், அவருடைய அபிப்பிராயத்தில் அதுவொரு சமூகக் கடமை. கம்பளம் விரித்த மாடிப் படிகளில் அதிகாரிகள் மெதுவாக ஏறிக்கொண்டிருந்தபோது அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பணியாள் ஒருத்தன் அவசரம் அவசரமாக கீழே இருந்த வாயிலடியில் இருந்த விளக்கையும் மேலே முன்னறையிலிருந்த விளக்கையும் கொளுத்தப் போவதைக் கண்டதும், அவர்கள், அசௌகரியத்தையும் அமைதியின்மையையும் அந்த வீட்டுக்குக் கொண்டு வந்ததை உணர்ந்து கொண்டார்கள். அந்த வீட்டில் இரண்டு சகோதரிகளும் அவர்கள் குழந்தைகளும் சகோதரர்களும் அயலவர்களும் ஏதோ குடும்ப கொண்டாட்டத்திற்காகவோ நிகழ்வுக்காகவோ கூடியிருந்தார்கள். அப்போது அறிமுகமில்லாத பத்தொன்பது அதிகாரிகளின் வருகையை எப்படி அவர்கள் வரவேற்க முடியும்? வரவேற்பறை வாயிலில் அதிகாரிகளை உயரமான, கம்பீரமான முதிய மூதாட்டி ஒருத்தி வரவேற்றாள். கருமையான புருவங்கள், நீண்ட முகம். பேரரசி ஐுஜீனைப் போல இருந்தாள். கண்ணியமாகவும் கம்பீரமாகவும் முறுவலித்தாள். விருந்தினரை பார்த்ததில் மகிழ்ச்சியும் உவகையும் அடைந்ததாகச் சொன்னாள். கணவனும் தானும் அந்த அதிகாரிகளை இரவு தங்கிச் செல்ல அழைக்காததற்காக மன்னிப்புக் கேட்டாள். அவளுடைய அழகான கம்பீரமான புன்னகை விருந்தினரிட மிருந்து முகத்தைத் திருப்பியபோது முகத்திலிருந்து உடனடியாக மறைந்து போனது. இப்படியான பல அதிகாரிகளை பலமுறை தன் வாழ்வில் கண்டிருக்கிறாள் என்பதும், அவர்களை வரவேற்பதற்கான மனநிலையில் அவள் இப்பொழுது இல்லை என்பதும் தெரிந்தது. தன் வீட்டிற்கு அவர்களை அழைத்ததும் இன்னும் கூடுதலாக அவர்களை வரவேற்க முடியாது என்பதற்காக மன்னிப்புக் கேட்டதும் அவளுடைய நற்பிறப்பும், சமூகத்தில் அவர்களுக்கிருந்த தகுதியும் தான். அவை காரணமே தவிர வேறொன்றில்லை.

அதிகாரிகள் பெரிய உணவறைக்குச் சென்றபோது அங்கே ஒரு டசின் பேர் இருந்தார்கள். ஆண்களும் பெண்களும் இளையவர்களும் முதியவர்களுமாக. அவர்கள் அனைவரும் நீண்ட மேசையில் தேநீருக்காகக் காத்திருந்தார்கள். ஒரு கூட்டம் ஆண்கள் நாற்காலிகளில் தெளிவில்லாமல் தெரிந்தார்கள். அவர்களைச் சுற்றி சுருட்டுப் புகை படர்ந்திருந்தது. அவர்களின் நடுவே உயரமான ஒல்லியான ஓர் இளம் ஆண் நின்றான். சிவப்பு நிற கன்ன மீசை மயிர்க் கற்றை வைத்த அவன் ஆங்கிலத்தில் உரத்து குதலை மொழியில் பேசிக் கொண்டிருந்தான். அந்தக் கூட்டத்திற்கு அப்பால் கதவொன்றின் ஊடாக ஓர் ஒளி அறை தெரிந்தது. அங்கே பழுப்பு நீல நிறத்தில் தளவாடங்கள் தெரிந்தன.

●

'கனவான்களே, நீங்கள் பலர் இருக்கிறீர்கள். அதனால் என்னால் உங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அறிமுகம் செய்ய முடியாது,' என்றார் தளபதி உரத்த குரலில். அதை உற்சாகமாகச் சொல்ல முயன்றார். 'அதனால் ஒவ்வொருவரும் நீங்களே உங்களை அறிமுகம் செய்து கொள்ளுங்கள், கனவான்கனே, எந்த சம்பிரதாயங்களும் தேவை இல்லை!'

அதிகாரிகளில் சிலர் மிகத் தீவிரமான முகத்துடன் இருந்தார்கள். சிலர் புன்னகையை வேண்டுமென்றே வரவழைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் எல்லோரும் மிகவும் சங்கடத்துடன் தலைகளைக் குனிந்து வணக்கம் தெரிவித்தார்கள். பின் தேநீருக்காக இருந்துகொண்டார்கள்.

அவர்களில் மிகவும் சங்கடமாக உணர்ந்தவன் றியாபோவிச்தான். அவன் கண்ணாடி அணிந்த சிறு அதிகாரி. சரிந்த தோள்களும் சிவிங்கிப்பூனைக்குரிய கன்னத்துத் தாடியுமாக இருந்தான். அவனுடைய சில தோழர்கள் தீவிரமான முக வெளிப்பாடுகளைக் காட்டிக்கொண்டிருந்தார்கள். சிலர் சிரிக்க வேண்டும் என்பதற்காகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவனுடைய முகமும் சிவிங்கிப்பூனை கன்னத் தாடியும் மூக்குக் கண்ணாடியும் எதையோ சொல்வது போல இருந்தன. 'மிகவும் கூச்சப்படுகிற, மிகவும் அடக்கமான, முழு படைத் தொகுதியிலும் எந்தப் புகழும் பெறாத ஒரு அதிகாரி!' என்பதைப் போல இருந்தன. அறைக்குள் போய் முதலில் மேசையில் இருந்தபோது அவனால் எந்த முகத்திலும் சரி பொருளிலும் சரி தன் கவனத்தைச் செலுத்த முடியவில்லை. முகங்கள், உடைகள், பிறண்டி மது இருந்த கிளாஸ் குடுவை, கிளாஸ்களிலிருந்து வெளியேறும் ஆவி, வடிவமைக்கப்பட்ட பலகைகள் - எல்லாம் கலந்து ஒரே மனப்பதிவாகத்தான் அவனுக்குத் தெரிந்தது. அது றியாபோவிச்சிற்கு ஓர் எச்சரிக்கை உணர்வாகவும் தன் சங்கடத்தை ஒளித்துவைக்கத் தூண்டுவதற்கு மட்டுமே உதவியாகவும் இருந்தது. ஒரு விரிவுரையாளர் மாணவர்கள் முன் முதன் முதல் நேரில் தோன்றுவதை போல, அவன் கண்கள் முன்னால் இருந்த எல்லாவற்றையும் பார்த்தன. ஆனால் வெளிப்படையாக அவனுக்கு எதுவும் மனதில் பதியவில்லை. மங்கலாக மட்டுமே புரிந்தது. (அதை உளவி

யலாளர்கள் உளவியல் குருட்டுத் தன்மை என்பார்கள்) சற்று நேரத்திற்குப் பின், சூழலுக்குப் பழக்கப்பட்ட பின், றியா போவிச் தெளிவாகப் பார்த்தான். அதன் பின் அவற்றைச் சரியாக அவதானிக்கத் துவங்கினான். கூச்ச சுபாவம் உள்ள மனிதனாக, சமூகத்திற்குப் பழக்கப்படாத, அவனுக்கு முதலில் தென்பட்டது புதிதாக அறிமுகமானவர்களின் அசாதாரண மனத் தைரியம் தான். அதில் அவன் மிகவும் குறைபாடுள் ளவன். அங்கே, வொன் றாபெக், அவர் மனைவி, இரு முதிய பெண்கள், இளஞ்சிவப்பு நிற உடையில் இருந்த ஓர் இளம் பெண், சிவப்பு நிற கன்னத்தாடி வைத்த இளம் ஆண்-அவன் வொன் றாபெக்கின் இளைய மகன். அவன் புத்திசாலியா கவும் தெரிந்தான். எல்லோரும் ஏற்கனவே ஒத்திகை பார்த்த வர்கள் போலக் காணப்பட்டார்கள். அவர்கள் எல்லோரும் அதிகாரிகளுக்கு இடையே இருந்து கொண்டார்கள். உடனடி யாகவே கடும் சூடான விவாதத்திலும் ஈடுபட்டார்கள். அதில் விருந்தினரும் பங்குபற்றினார்கள். இளஞ்சிவப்பு நிற உடை யில் இருந்த இளம் பெண் பீரங்கிப்படைக்கு இது நல்ல காலம் என்றாள். குதிரைப்படை மற்றும் காலாட்படையிலும் பார்க்க அதற்கு நல்ல காலம் என்பதை கடுமையாக வலி யுறுத்திச் சொன்னாள். வொன் றாபெக்கும் முதிய பெண்களும் எதிர் கோணத்தை எடுத்து விவாதித்தார்கள். இரு பகுதி யினரும் அதைப்பற்றி விறுவிறுப்பாக மாறி மாறி விவாதித் தார்கள். றியாபோவிச், சிவப்பு நிற உடையணிந்த இளம் பெண் சூடாக விவாதிப்பதைக் கவனித்துக் கொண்டிருந் தான். அறிமுகமும் சற்றும் சுவாரஸ்யமும் அற்ற ஒரு பொரு ளைப் பற்றி சூடாக விவாதித்துக் கொண்டிருந்தாள். அவளு டைய முகத்தில் செயற்கையான புன்சிரிப்புகள் வந்து போவதை அவன் கவனித்துக் கொண்டிருந்தான்.

வொன் றாபெக்கும் அவருடைய குடும்பமும் சாமார்த்தியமாக அதிகாரிகளை விவாதத்திற்குள் இழுத்துவிட்டார்கள். அதே வேளை அவர்களுடைய மதுக் கிளாஸ்களையும் வாயையும் கவனமாகப் பார்த்துக்கொண்டார்கள். அவர்கள் போதியளவு மது அருந்துகிறார்களா, இனிப்பு எடுத்துக் கொள்கிறார்களா, சிலர் ஏன் கேக்குகள் சாப்பிடுகிறார்கள் இல்லை, ஏன் சிலர் பிறண்டி அருந்துகிறார்கள் இல்லை என்று கவனித்துக் கொண்டிருந்தார்கள். றியாபோவிச் அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டும் அவர்களைக் கவனித்துக் கொண்டும் இருந்தான். அவர்கள் நேர்மையற்ற ஆனால் அற்புதமான ஒழுக்கமுடைய குடும்பத்தினர் என்று அறிந்து கொண்டான். அவர்களால் அவன் கவரப்பட்டுக்கொண்டும் இருந்தான்.

தேநீர் விருந்துக்குப் பின் அதிகாரிகள் வரவேற்பறைக்குள் சென்றார்கள். லியுற்றினன்ற் லொபிற்கோவின் இயலுணர்வு அவனைக் கைவிட்டுவிடவில்லை. அங்கே பல மணமாகாத இளம் பெண்களும் மணமான இளம் பெண்களும் இருந்தார் கள். எங்களுக்குத் தகவல் கொண்டு வந்த தூதன் ஒரு லியுட் டினென்ற். அவன் கறுப்பு உடை அணிந்த அழகான இளம் பெண்ணுக்குப் பக்கத்தில், கண்ணுக்குத் தெரியாத வாள் ஒன்றில் சாய்ந்து நிற்பதைப் போல நின்றான். மகிழ்ச்சியுடன் குனிந்து நின்று முறுவலித்துக் கொண்டும் தோள்களைக் குலுக்கிக்கொண்டும் சரசமாடிக் கொண்டிருந்தான். மிகவும் சுவராசியமான ஆனால் அபத்தமான ஏதோ ஒரு விஷயத் தைப் பற்றிக் பேசிக்கொண்டிருக்கலாம். ஏனென்றால் அழ கான அந்தப் பெண் அவனுடைய செழிப்பான முகத்தைப் பார்த்துக் கொண்டு, பணிவாக ஆனால் ஆர்வமில்லாமல், ‘அப்படியா?’ என்று கேட்டாள். அந்த ஆர்வமில்லாத அப் படியா என்ற கேள்வியில் அவன் ஒரு புத்திசாலியாக இருந்தி ருந்தால் அவள் ஒருபோதுமே அவனுடைய விருப்பத்துக்கு இசைய மாட்டாள் என்ற முடிவுக்கு வந்திருப்பான்.

•

பியானோ இசை தொடங்கியது. வால்ஸ் நாட்டாரிசை அகன்ற யன்னல்களின் ஊடாக சோகமாக மிதந்து வந்தது. அனை வரும் ஏதோ காரணத்திற்காக அதுவொரு வசந்த காலம் என்றும் மே மாதம் என்றும் நினைத்துக்கொண்டார்கள். ஒவ் வொருவருக்கும் றோசா மலர்களின் மணம், இளம் சிவப்பு மலரின் மணம், இளம் நெட்டிலிங்க மர இலைகளின் மணம் பிரக்ஞையில் வந்து சென்றன. றியாபோவிச் பிறண்டி குடித்தி ருந்ததால் அவனுக்குப் போதை தலைக்கேறி இருந்தது. அதனால் இசையின் பாதிப்பால் யன்னல் பக்கம் பார்த்துக் கொண்டு முறுவலித்துக்கொண்டும், பெண்களின் அசைவு களை கவனித்துக்கொண்டும் இருந்தான். றோஸா மலர்களின் மணமும், நெட்டிலிங்க இலைகளின் மணமும், இளம் சிவப்பு லைலாக்கின் மணமும் தோட்டத்தில் இருந்து வராமல் பெண் களின் முகங்களிலும் அவர்களின் உடைகளிலிருந்தும் வருவது போல அவனுக்குத் தோன்றியது.

வொன் றாபெக்கின் மகன் எலும்பும் தோலுமான ஓர் இளம் பெண்ணை நடனமாட அழைத்துச் சென்றான். அவளுடன் வோல்ஸ் நடனமாடி இரண்டு முறை அறையைச் சுற்றி வந் தான். லொபிற்கோ, பலகை ஓடுகள் போட்ட தரையில் வழுக்கி நடனமாடினான். லைலாக் பெண்ணிடம் சென்று அவளை அள்ளித் தூக்கிச் சுழற்றினான். நடனம் ஆரம்பித் தது... றியாபோவிச் நடனமாடாதவர்களுடன் கதவடியில் நின்று எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு நின்றான். அவன் தன் வாழ்க்கையில் ஒருபோதும் தன் கைகளால் மரியாதைக் குரிய ஒரு பெண்ணின் இடையைச் சுற்றி அணைத்ததில்லை. ஒருத்தன் மற்றவர்களின் மத்தியில் தனக்குத் தெரியாத ஒரு பெண்ணின் இடையைச் சுற்றி வளைத்து தன் தோளில் அவ ளின் கைகளை வைத்திருக்க இடம் கொடுத்தால் அதைப் பார்த்து அவன் மிகவும் மகிழ்ச்சி அடைவான். ஆனால் அந்த மனிதனின் இடத்தில் தன்னை வைத்துப் பார்த்து கற்பனை செய்ய அவனால் முடியாது. சிலவேளைகளில் அவன் தோழர் கள் பெண்களை அப்படிச் செய்வதைப் பார்த்து அவர்களின் தைரியத்தையும் வீம்பையும் கண்டு பொறாமைப்பட்டிருக் கிறான். உள்ளூர மனவுளைச்சலும் அடைந்திருக்கிறான். தான் ஒரு கோழை, கூனல் முதுகுள்ளவன், சுவாரசியமில்லாதவன், அகன்ற இடையும், சிவிங்கிப் பூனையின் தாடியும் உள்ளவன் என்ற எண்ணம் அவனை ஆழமாகப் பாதித்திருந்தது. ஆனால் காலம் அந்த உணர்ச்சியுடன் அவனை வாழப் பழக்கி இருந் தது. இப்பொழுது தன் தோழர்கள் நடனமாடுவதைக் கண்டும் அவர்கள் சத்தமாக கதைப்பதைக் கேட்டும் அவர்களில் அவன் பொறாமை கொள்ளவில்லை. ஆனால் சற்று உணர்ச் சிவசப்பட்டான். துக்கமாகவும் உணர்ந்தான்.

நான்கு இணையர்களின் நடனம் ஆரம்பமானபோது இளைய வொன் றாபெக் நடனமாடாதவர்களிடம் சென்று இரண்டு அதி காரிகளை பிலியட் விளையாட்டு விளையாட அழைத்தான். அதிகாரிகள் அதை ஏற்றுக்கொண்டு வரவேற்பறையிலிருந்து

அவனுடன் சென்றார்கள். றியாபோவிச் செய்வதற்கு ஒன்று மில்லாமல் எல்லோரும் பங்குபற்றும் விளையாட்டில் பங்கு பற்றுவதற்கு விருப்பம் கொண்டு அவர்களின் பின்னால் குனிந்துகொண்டு சென்றான். பெரிய வரவேற்பறையிலிருந்து சிறிய வரவேற்பறைக்கு போனார்கள். பின் கிளாஸ் கூரை போட்ட குறுகிய நடைகூடத்திற்குச் சென்றார்கள். அதன் பிறகு ஓர் அறைக்குச் சென்றார்கள். அங்கே வாசலில் சோர்ந்தது போல இருந்த மூன்று பணியாட்கள் சோபாவிலிருந்து வேக மாகத் துள்ளி எழுந்தார்கள். இறுதியாக, பல அறைகளைத் தாண்டி இளம் வொன் றாபெக்கும் அதிகாரிகளும் சிறிய அறைக்குள் வந்தபோது அங்கே ஒரு பிலியட் மேசை இருந் தது. அவர்கள் விளையாட ஆரம்பித்தார்கள்.

றியாபோவிச் சீட்டாட்டம் தவிர வேறொரு விளையாட்டையும் தன் வாழ்நாளில் ஆடியதில்லை. பிலியட் மேசைக்குப் பக் கத்தில் நின்று விளையாடுபவர்களை அக்கறையின்றிப் பார்த்துக்கொண்டிருந்தான். விளையாடுபவர்கள் கோட்டுப் பொத்தான்களைக் கழற்றி விட்டு கைகளில் விளையாடும் கோல்களுடன் மேலும் கீழும் கால்களைத் தூக்கி வைத்துக் கொண்டு, சிலேடையாகப் பேசிக் கொண்டும், புரியாத சொற் களில் சத்தம் போட்டுக்கொண்டும் விளையாடினார்கள்.

•

அவனை அவர்கள் கண்டுகொண்டதாகவே இல்லை. இடைக் கிடை ஒருத்தன் தன் முழங்கையால் அவனைத் தள்ளினான். அல்லது தற்செயலாக தான் வைத்திருந்த கோலினால் முட் டிய பின் ‘மன்னிக்கவும்’ என்று சொல்லிக் கொண்டான். முதலாவது ஆட்டம் முடிவதற்கு முன் அதைப் பார்த்துச் சலித்துப்போய் அவர்களுக்கு இடையூறாக இருப்பதை தான் விரும்பவில்லை என்று உணர்ந்து கொண்டான். வரவேற்ப றைக்கு திரும்பப் போவதற்கு விரும்பி அவ்விடத்திலிருந்து வெளியேறினான். போகும் வழியில் வழியைத் தவறவிட்டது போல உணர்ந்தான். பாதித் தூரம் போனபோது வழி மாறி வந்ததை அவதானித்தான். போகும்வழியில் சோர்வான அந்த மூன்று பணியாட்களையும் சந்திப்பான் என்று தெளிவாகவே நினைவில் வைத்திருந்தான். ஆனால் இப்பொழுது ஐந்தோ ஆறோ அறைகளைத் தாண்டி வந்துவிட்டான். அந்தப் பணி யாளர்கள் நிலத்துக்குள் மறைந்துவிட்டது போலத் தோன் றியது. தன் தவறை உணர்ந்த அவன் திரும்ப சில தூரம் நடந்து வலது பக்கம் திரும்பி நடந்தான். அப்போது அவன் ஒரு இருட்டறைக்குள் வந்து சேர்ந்ததை அறிந்து கொண் டான். பிலியட் அறைக்கு அவன் முன்பு போனபோது அது இருக்கவில்லை. அங்கே சிலநேரம் நின்ற பின் அவன் கண்ட முதலாவது கதவை உறுதியுடன் திறந்துகொண்டு கடும் இருட்டாக இருந்த அந்த அறைக்குள் நுழைந்தான். அதற்கு நேராக முன்னால் கதவில் ஒரு விரிசல் தெரிந்தது. அதனூடாக தெளிவான வெளிச்சம் ஒன்று வந்தது. கதவின் அடுத்த பக்கத்திலிருந்து மசுக்கா என்ற சோகமான போலிஷ் நாட்டு நடன இசை வந்துகொண்டிருந்தது. இங்கேயும் வர வேற்பறையிலிருந்தது போல யன்னல்கள் அகலத் திறந்தி ருந்தன. அதனூடாக பொப்ளர், லைலக், றோசா மலர்களின் மணம் இருந்துகொண்டிருந்தது.

றியாபோவிச் தயக்கத்துடன் அவ்விடத்தில் சற்று நேரம் நிமிர்ந்து நின்றான். அந்தக் கணம் அவனுக்கு ஆச்சரியம் அளிக்கும் வகையில் அவசரமாக வரும் காலடிகளும் உடை களின் சலசலப்பும் கேட்டன. ‘கடைசியில்!’ என்ற ஒரு பெண் ணின் குரல் மூச்சுத் திணறலுடன் குசுகுசுத்தது. நறுமணம் வீசும் ஒரு பெண்ணின் இரண்டு கைகள் அவனுடைய கழுத் தைச் சுற்றிக் கொண்டன. சூடான கன்னம் ஒன்று அவனுடைய கன்னத்தை அழுத்தியது. அவனை அவள் முத்தமிட்டாள். அந்த ஓசையும் கேட்டது. ஆனால் உடனடியாக முத்தத்தை அளித்தவள் மெலிதாகக் கூச்சலிட்டுக்கொண்டு பின் நகர்ந்தாள். அந்தக் கூச்சல் அருவருப்பினால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று றியாபோவிச்சிற்குத் தோன்றியது. அவனும் ஏறக்குறைய அதேபோலக் கூச்சலிட்டுவிட்டான். பின் கதவ டியில் தெரிந்த வெளிச்சத்தை நோக்கி வேகமாகச் சென்றான்.

வரவேற்பறைக்கு அவன் திரும்பிச் சென்றபோது அவனுடைய இதயம் வேகமாக அடித்துக்கொண்டிருந்தது. கைகள் கவ னிக்கக் கூடியதாகவே நடுங்கிக்கொண்டிருந்தன. அதை மறைக்க கைகளை அவசரமாகப் பின்னால் ஒளித்து வைத் துக்கொண்டான். வரவேற்பறையிலிருந்த அத்தனை பேரும் அவனுக்கு ஒரு பெண் முத்தம் கொடுத்துக் கட்டி அணைத் தாள் என்பதை அறிந்துகொண்டார்கள் என்று நினைத்தான். அவமானத்தாலும் பயத்தாலும் துன்பப்பட்டான். தனக்குள்ளே சுருங்கிக்கொண்டு தன்னை சுற்றி அசௌகரியமாகப் பார்த்தான். ஆனால் அங்கிருந்தவர்கள் எதுவுமே அறியாத வர்கள் போல நடனமாடிக் கொண்டும் மென்மையாகப் பேசிக் கொண்டும் இருந்தார்கள். அவன் என்றுமே அனுபவித்திராத புதிய உணர்ச்சிக்குள் முழுவதாக ஆழ்ந்துவிட்டான். ஏதோ விசித்திரமானதொன்று அவனுக்கு நடந்தது... அவனுடைய கழுத்தைச் சுற்றி மென்மையான நறுமணம் வீசும் கைகள் கட் டிப்பிடித்தன. அது அவனை எண்ணெயால் அபிஷேகம் செய்தது போல இருந்தது. இடது கன்னத்தில் மீசைக்கு அருகில் முன்பின் தெரியாத ஒருத்தி அவனை முத்தமிட்டாள். அது அவனுக்கு மெல்லிய குளிர்ச்சியான நடுக்க உணர்ச்சி யைக் கொடுத்தது. பெப்பர்மின்ற் துளிகள் விழுந்தது போன்ற ஓர் உணர்ச்சி. அந்த இடத்தை மீண்டும் மீண்டும் தேய்த்து விட்டான். ஆனால் அவ்விடம் மேலும் குளிர்ச்சியான உணர்ச் சியைக் கொடுத்தது. தலையிலிருந்து கால்வரை புதிய விசித் திரமான உணர்ச்சி ஏற்பட்டது. அது மேலும் மேலும் வலுவாக வளர்ந்து கொண்டே இருந்தது... அவனுக்கு நடனமாட வேண்டும் போல, பேச வேண்டும் போல, தோட்டத்திற்குள் ஓட வேண்டும் போல, உரத்துச் சிரிக்க வேண்டும் போல இருந்தது... கூனல் முதுகினன், சுவாரசியம் அற்றவன், சிவிங் கிப் பூனை தாடி உள்ளவன், அடையாளம் காணமுடியாத தோற்றமுடையவன், (அப்படித்தான் சில பெண்கள் பேசி யனார்கள். அது அவன் காதில் விழுந்திருக்கிறது) வொன் றாபெக்கின் மனைவி எதேச்சையாக அவனைக் கடந்து போய்க்கொண்டிருக்கையில் அவன் அவளைப் பார்த்து மிகவும் நட்பார்ந்த முறையில் முறுவலித்தபோது அவள் சில கணம் நின்று என்ன என்று வினவுவது போல அவனைப் பார்த்தாள்.

•

‘உங்கள் வீடு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது’ என்று சொன் னான், தன் மூக்குக் கண்ணாடியை சரிசெய்து கொண்டே.

தளபதியின் மனைவி புன்னகைத்து விட்டு, 'வீடு தன் தந்தைக்குச் சொந்தமானது,' என்றாள். அதன் பின், உங்கள் பெற்றோர்கள் இன்னும் உயிருடன் இருக்கிறார்களா? பல காலம் இராணுவத்தில் இருந்தாரா? அவன் ஏன் அப்படி மெலிந்திருக்கிறான்? என்று பல கேள்விகளை கேட்டாள். அவற்றுக்கான விடைகள் கிடைத்த பின்னும் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தாள். அவளுடன் உரையாடிய பின் அவனுடைய முறுவலிப்பு எப்போதையும் விட இன்னும் நட்பார்ந்ததாக மாறியது. அவனைச் சுற்றி அற்புதமானவர்கள் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டான்...

இரவுணவின்போது றியாபோவிச் அவனுக்கு அளித்த எல்லா உணவையும் இயந்திரத்தனமாக உண்டான். குடித்தான். எதையும் காது கொடுத்துக் கேட்காமல் அவனுக்கு நடந்ததை மட்டும் புரிந்துகொள்ள முயன்றுகொண்டிருந்தான்... அந்த துணிவான செயல் மர்மமும் காதல் சார்ந்ததுமான குணமுடையது. ஆனால் அது விளங்கப்படுத்தச் சிரமமான ஒன்றல்ல. யாரோ ஒரு பெண்ணோ அல்லது ஓர் இளமையான மணம் முடித்த ஒருத்தியோ ஓர் ஆண் - பெண் சந்திப்பை அந்த இருட்டறையில் ஒழுங்குபடுத்தி இருக்க வேண்டும். அதில் சந்தேகமில்லை. அந்தப் பெண் அங்கே நெடுநேரம் காத்திருந்திருக்க வேண்டும். அதனால் பதற்றமும் ஆர்வமும் மேவ அந்த ஆண் றியாபோவிச்தான் என்று நினைத்து அவனுக்கு முத்தம் கொடுத்திருக்க வேண்டும். றியாபோவிச் அங்கே தயங்கித் தயங்கி அந்த இருட்டறையில் நின்றபோது அவனும் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது போல அவளுக்குத் தோன்றியிருக்க வேண்டும்... அப்படித்தான் றியாபோவிச் தனக்குக் கிடைத்த அந்த முத்தத்தைப் பற்றி தனக்கு விளங்கப்படுத்தினான்.

'அப்போ அவள் யார்?' என்று யோசித்தான். பெண்கள் அனைவரினதும் முகங்களையும் திரும்பிப் பார்த்தான். அவள் இளம் பெண்ணாக இருக்க வேண்டும். ஏனென்றால் முதிய பெண்கள் அப்படியான சந்திப்பை ஏற்படுத்துவதில்லை. அவள் ஒரு சீமாட்டியாக இருக்க வேண்டும். அவளுடைய உடைகளின் சலசலப்பு, அணிந்திருந்த வாசனைத் திரவியம், குரல் ஆகியவற்றை வைத்தே அதை அறிந்துகொள்ள முடியும்.

அவனுடைய கண்கள் இளம் சிவப்பு நிற இளம் சீமாட்டியில் சென்று நிலைத்து நின்றன. அவள் மிகவும் கவர்ச்சியானவள் என்று எண்ணினான். அவளுக்கு அழகான தோள்களும் கைகளும் புத்திசாலித்தனமான முகமும் இனிமையான குரலும் இருந்தன. றியாபோவிச் அவளைப் பார்த்து அவள் தான் வேறெவரும் அல்ல என்று நம்பினான்... ஆனால் அவள் செயற்கைத்தனமாக புன்னகை புரிந்துகொண்டிருந்தாள். அத்துடன் அவள் தன்னுடைய நீண்ட மூக்கை சுருக்கிக் கொண்டிருந்தாள். அது அவளை வயது போனவள் போலக் காட்டியது. அதன் பின் அவன் தன் கண்களை கறுத்த உடை அணிந்த அழகான பெண்ணை நோக்கித் திருப்பினான். இளமை. எளிமை. நேர்மை எல்லாம் இருந்தன. கவர்ச்சியான நெற்றியும் இருந்தது. அவள் வைன் கிளாசிலிருந்து நேர்த்தியாக வைனை அருந்திக்கொண்டிருந்தாள். அந்த அறிமுகமற்றவள் அவளாகத்தான் இருக்க வேண்டும் என்று றியோபோவிச் நம்பினான். ஆனால் அவள் முகம் தட்டையாக உள்ளது என்று நினைக்கத் துவங்கினான். பின் அவன் கண்கள் அவளுக்கு அடுத்திருந்தவள் மீது சென்றன. 'எல்லாவற்றையும் சிந்தித்தபோது அதை ஊகிக்கக் கஷ்டமாக இருக்கிறது,' என்று எண்ணினான். 'சிவப்பு நிற பெண்ணின் தோள்களையும் கைகளையும் மட்டும் பார்த்தால்... அழகானவளின் நெற்றியை மட்டும் பார்த்தால்... லொபிற்கோவிற்குப் பக்கத்திலிருந்தவளின் கண்களை மட்டும் பார்த்தால்...'

•

மனதில் இவற்றை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால் அவனுக்கு முத்தம் கொடுத்த, அவன் விரும்பும் அவளின் பிம்பம் வரும். ஆனால் அவளை அந்த மேசையில் காண முடியவில்லை...

இரவுணவை வயிறார உண்டு உற்சாகமாகி அதிகாரிகள் விடைபெறுவதற்கும் நன்றி சொல்வதற்கும் தயாரானார்கள். வொன் றாபெக்கும் அவர் மனைவியும் அன்றிரவு அவர்களைத் தங்க வைக்க இயலவில்லை என்பதற்கு திரும்பவும் மன்னிப்புக் கேட்கத் தொடங்கினார்கள்.

'உங்களைச் சந்தித்ததில் நாங்கள் மிக மிக உவகை அடைகிறோம், கனவான்களே,' என்றார் வொன் றாபெக். இந்த முறை மனமார்ந்து சொன்னார். (ஏனெனில், மக்கள் விருந்தினரை வரவேற்பதிலும் பார்க்க வழியனுப்புவதற்கு மனமார்ந்தும் உற்சாகத்துடன் இருப்பார்கள்.) 'வந்ததிற்கு மகிழ்ச்சி. நீங்கள் திரும்பும்போது திரும்பவும் இங்கே வருவீர்கள் என்று நம்புகிறேன்! சடங்கு சம்பிரதாயங்களைப் பார்க்காதீர்கள்! எங்கே போகிறீர்கள்? நீங்கள் மேல் பகுதியால் போகிறீர்களா? தோட்டத்திற்குக் குறுக்காகப் போங்கள். கீழ்ப் பக்கத்தால் போனால் அது கிட்ட,' என்றார்.

அதிகாரிகள் தோட்டத்துக்குள் போனார்கள். பிரகாசமான வெளிச்சத்துக்கும் சத்தத்துக்கும் பின் தோட்டம் மிகவும் இருட்டுப் போலவும் அமைதியாகவும் இருந்தது. படலை வாயில்வரை அவர்கள் அமைதியாக நடந்தார்கள். அவர்கள் ஓரளவு குடி போதையிலும் இருந்தார்கள். திருப்தியாகவும் உற்சாகமான மனநிலையிலும் இருந்தார்கள். ஆனால் இருளும் அமைதியும் அவர்களை ஒரு நிமிஷம் சிந்தனை வயப்படுத்தின. றியாபோவிச்சுக்குத் தோன்றியது போன்ற எண்ணம் அங்கிருந்த ஒவ்வொரு வருக்கும் ஏற்பட்டிருக்கலாம். அவர்களும் வொன் றாபெக்கிற்கு இருப்பது போல விசாலமான வீடும், ஒரு குடும்பமும், ஒரு தோட்டமும் இருந்து விருந்தினரை வரவேற்று, நேர்மையற்றதனமாக என்றாலும், அழைத்து அவர்களுக்கு உணவளித்து, போதை ஏற்றி, மனநிறைவு கொள்ளச் செய்யும் காலம் ஒன்று வருமா? என்ற அந்த எண்ணம்.

தோட்டத்தின் வாயிலைக் கடந்து போன பின் அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் பேச வெளிக்கிட்டார்கள். எதைப் பற்றி என்றில்லாமல். ஆற்றுக்குச் செல்லும் சிறிய பாதையால் நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். பின் புதர்கள், குளங்கள், ஆற்றின் மேல் விழுந்த அலரிகள் ஆகிவற்றைச் சுற்றிக் கரையோரத்தால் ஓடினார்கள். ஆற்றின் கரையும் பாதையும் கண்களுக்குச் சரிவரத் தெரியவில்லை. அடுத்த பக்கக் கரை

முழுவதும் இருட்டில் மறைந்து விட்டது. இருட்டு நீரில் நட்சத்திரங்கள் இங்கும் அங்கும் எதிரொளித்தன. நீரில் துடித்தன. மேற்பரப்பில் துண்டு துண்டாகத் தெரிந்தன. அதிலிருந்தே ஆறு வேகமாக ஓடிக் கொண்டிருந்ததை அவர்களால் அறிய முடிந்தது. ஆனால் அசைவற்றது போல இருந்தது. தூங்கி வழியும் கோட்டான்கள் ஆற்றின் மேலே தள்ளி இருந்து சோகமாக அழுதன. புதர்கள் ஒன்றிலிருந்து ஓர் இன்னிசைப் பறவை பெரிதாக நடுங்கொலி எழுப்பிப் பாடிக் கொண்டிருந்தது. அதிகாரிகள் கூட்டமாக வருவதைப் பற்றி அவை கவலைப்படவில்லை. அதிகாரிகள் புதர்களைச் சுற்றி நின்று கொண்டு இன்னிசைப் பறவையைத் தொட்டுப் பார்த்தார்கள். அது பாடிக் கொண்டே இருந்தது.

'என்ன மாதிரியான பறவை இது!' என்று சொல்லி வியந்தார்கள். 'நாங்கள் அதற்குப் பக்கத்தில் நிற்கிறோம். ஆனால் அது எங்களைச் சற்றேனும் கவனிக்கவில்லை. என்ன மாதிரியான போக்கிரிப் பயல்!'

வழியின் முடிவில் பாதை மலைச்சரிவின் மேலெறியது. தேவாலய வேலியைச் சுற்றி வந்து தெருவில் முடிந்தது. அதிகாரிகள் மலைச்சரிவில் ஏறியதால் களைத்துப் போய் இருந்து கொண்டு சிகரெற் பற்ற வைத்தார்கள். ஆற்றின் மறுபக்கம் சிவப்பு நிறத்தில் தீ எரிவது தெரிந்தது. செய்வதற்கு ஒன்றுமில்லாததால் அது குளிர்காய மூட்டப்பட்ட தீயா அல்லது யன்னல் ஒன்றில் தெரியும் விளக்கு வெளிச்சமா அல்லது வேறேதாவது ஒன்றா... என்று விவாதிப்பதில் அதிக நேரத்தைச் செலவழித்தார்கள். றியாபோவிச்சும் அந்த வெளிச்சத்தைப் பார்த்தான். அது தன்னைப் பார்த்து கண்ணடிக்கிறதென்றும் அதற்கு அந்த முத்தம் பற்றித் தெரியும் என்றும் கற்பனை பண்ணிக்கொண்டான்.

•

இருப்பிடத்தை அடைந்தவுடன் றியாபோவிச் வேகமாகத் தன் உடைகளை மாற்றிக்கொண்டு படுக்கைக்குச் சென்றான். லொபிற்கோ மேர்ஸ்லியாகோவ் அமைதியை விரும்புவன், மௌனி. நண்பர்கள் வட்டத்தில் அவன் உயர் கல்வி கற்றவன் என்று பெயரெடுத்தவன். அவன் முடிந்த நேரம் எல்லாம் 'வியெஸ்ற்நெக் எவ்றொப்' என்ற சஞ்சிகையை வாசித்துக் கொண்டிருப்பான். அதை அவன் தன்னுடன் எல்லாவிடமும் எடுத்துக்கொண்டு செல்வான். அவனும் றியாபோவிச்சின் கொட்டிலில் தங்கி இருந்தான். லொபிற்கோ உடையை மாற்றிக்கொண்டு தன் நடைமுறை வாழ்க்கையில் திருப்தி அடையாதவன் போல மேலும் கீழும் நடந்தான். பின் வேலையாளை அழைத்து ஒரு போத்தல் பியர் வாங்க அனுப்பினான். மேர்சிலியாகோவ் கட்டிலில் ஏறி தலையணைக்குப் பக்கத்தில் ஒரு மெழுகுதிரியைப் பற்ற வைத்து 'வையெஸ்ற்னிக எவ்றொபி' (அந்தக் காலத்தில் ஐரோப்பாவில் வெளிவந்த ஒரு தாராளவாத சஞ்சிகை) வாசிக்க வெளிக்கிட்டான்.

'யார் அவள்?' றியாபோவிச் யோசித்தான், புகைபடிந்த கூரையைப் பார்த்துக்கொண்டு. அவனுடைய கழுத்தை எண்ணெயால் அபிஷேகம் செய்தது போல உணர்ந்தான். பெப்பர்மின்ற் துளிகள் வாய்க்குள் விட்டது போல குளிர்ச்சியான உணர்ச்சி இருந்து கொண்டிருந்தது. இளம் சிவப்பு நிற சட்டையில் நின்ற இளம் பெண்ணின் தோள்களும் கைகளும், கறுப்பு நிற உடையில் இருந்த அழகான பெண்ணின் நெற்றியும், உண்மையான கண்களும், இடையும், உடையும் மார்பில் அணிந்த ஊசி அணிகளும் கற்பனையில் மிதந்து சென்றன. அந்த பிம்பங்களில் அவன் தன் கவனத்தை ஊன்ற முயன்றான். ஆனால் அவை அங்குமிங்கும் அசைந்தன, உடைந்து பளபளத்தன. அனைவரும் தங்கள் கண்களை மூடினால் காணும் அந்த பிம்பங்கள் அகன்ற இருட்டான பின்னணியில் இருந்து முற்றாக மறைந்து போயின. அவசரம் அவசரமாக நடக்கும் காலடிகளை, பாவாடைகளின் சலசலப்புகளை, முத்தத்தின் ஓசையை கேட்டான். அடர்த்தியான எந்தக் கட்டுப்பாடுமற்ற மகிழ்ச்சி அவனை ஆட்கொண்டது... அந்த மகிழ்ச்சிக்கு தன்னை விட்டுக்கொடுத்துக்கொண்டிருந்தபோது பணியாள் திரும்பி வந்து பியர் இல்லை என்பதை அறிவித்தான். லொபிற்கோ பயங்கரமாகக் கோபப்பட்ட பின் மேலும் கீழும் நடந்தான்.

'அவன் ஒரு முட்டாள்,' என்று சொல்லிக்கொண்டே இருந்தான். முதலில் அவன் றியாபோவிச்சின் முன் நின்றான். பின் மேர்சிலியாகோவ் முன் நின்றான். 'ஒரு பியர் வாங்க முடியாதவன் எத்தனை முட்டாளாக இருக்க வேண்டும்? அவன் ஓர் அயோக்கியன் அல்லவா?' என்றான்.

'ஓம், இங்கே பியர் வாங்க முடியாது,' என்றான் மேர்சிலியாகோவ், கண்களை 'வியெஸ்ற்நிக் எவ்றொப்' சஞ்சிகையில் இருந்து எடுக்காமலே.

•

'ஓ, அது உன்னுடைய அபிப்பிராயமா?' லொபிற்கோ உறுதியாகக் கேட்டான். 'ஆண்டவனே, எங்களில் இரக்கம் காட்டு. நீ என்னை சந்திரனில் கொண்டு சென்று விட்டால் அங்கே உடனடியாகவே ஒரு பியரும் பெண்களையும் பெற்றுக் கொள்வேன். போய் உடனடியாக ஒருத்தியை காணுவேன். அப்படிக் காணாவிட்டால் என்னை நீ ஏமாற்றுக்காரன் என்று அழை.'

உடைகள் மாற்றுவதிலும் உயர்ந்த பூட்சை அணிவதிலும் அவன் நீண்ட நேரம் செலவழித்தான். பின், அமைதியாக சிகரெற்றைக் புகைத்துக்கொண்டு வெளியே சென்றான்.

'றாபெக், க்றாபெக், லாபெக்,' என்று முணுமுணுத்துக்கொண்டு வெளி அறையில் நின்றான். 'தனியாக நான் செல்ல விரும்பவில்லை. நாசமாகப் போக! றியாபோவிச், என்னுடன் ஒரு நடை செல்ல உனக்கு விருப்பமா?' என்று கேட்டான்.

ஒரு பதிலும் அவனிடமிருந்து வராததால் திரும்பி வந்தான். மெதுவாக உடைகளைக் களைந்துவிட்டு படுக்கைக்குப் போனான். மெர்சிலியாக்கொவ் பெருமூச்சு விட்டான், 'வியெஸ்ற்னிக் எவ்றொப்பி'யைத் தூர வைத்தான். விளக்கை அணைத்தான்.

'ம்ம்!...' என்று முணுமுணுத்தான், லொபிற்கோ, இருட்டில் ஒரு சிகறெற்றைப் பற்ற வைத்துக் கொண்டே.

றியாபோவிற்ச் படுக்கை விரிப்பை இழுத்து தலையை மூடிக் கொண்டு, குறண்டிக்கொண்டு படுத்தான். மனதில் மிதக்கும்

பிம்பங்களை ஒன்று திரட்ட முயன்று அவற்றை ஒன்றாகத் திரட்டி முழுவதாக்க நினைத்தான். ஆனால் எதுவுமே நடக்க வில்லை. விரைவில் தூங்கிவிட்டான். அவன் கடைசியாக சிந் தித்தது, யாரோ அவனை அன்போடு வருடி அவனை மகிழ்ச் சிப்படுத்துவதாக. அது மிகவும் அசாதாரணமானது, முட் டாள்த்தனமானது, ஆனால் மிகவும் இனிமையானது. அது அவன் வாழ்க்கைக்குள் வந்து சேர்ந்துவிட்டது. அந்த எண்ணம் அவனுடைய நித்திரையில்கூட அவனை விட்டு அக லவில்லை.

அவன் எழுந்தபோது கழுத்தில் இருந்த எண்ணெயின் உணர் வும் இதழ்களுக்கு அருகில் இருந்த பெப்பமின்ரின் குளிர்ச் சியும் போய்விட்டன. ஆனால் முந்தைய நாளைப் போல மகிழ்ச்சியால் இதயம் நிரம்பி இருந்தது. உற்சாகத்துடன் யன்னல் சட்டகங்களைப் பார்த்தான். உதயமாகிக்கொண்டி ருக்கும் சூரியவொளியால் அவை பொன்னிறமாகக் காட்சிய ளித்தன. வீதியில் நடந்து போகிறவர்களின் அசைவுகளை காது கொடுத்துக் கேட்டான். யன்னலுக்கு அருகாமையில் வீதியில் மக்கள் உரத்துப் பேசிக்கொண்டு சென்றார்கள். றியாபோவிச்சின் பீரங்கிப்படையின் படைத்தலைவனான லெபெடெற்ஸ்கி அவனுடைய மேற்காவலனிடம் உச்ச குரலில் பேசிக்கொண்டிருந்தான். அப்படி உச்ச குரலில் சத்தம் போட் டுப் பேசுவதுதான் அவன் பழக்கம். அவன் இப்பொழுதுதான் படைப்பிரிவிற்குத் தலைவனாக வந்திருந்தான்.

'வேறென்ன ?' என்று சத்தமிட்டான் தலைவன்.

'நேற்று லாடமடித்தபோது உன் பிரபு, குதிரையின் உள் சாய்ந்த குளம்பில் ஒரு ஆணியை அடித்து விட்டான். கால் நடை மருத்துவன் அதில் களிமண்ணும் வினாகிரியும் போட் டுக் கட்டிவிட்டான். அது இப்போது குளம்பை இரண்டாகப் பிளக்கிறது. பிரபுவே, ஆட்டேமியேவ் நன்றாகக் குடித்திருந் தான். அதனால் அவனை லியுற்றினென்ற் வெடிகுண்டு வண்டி யில் ஓர் உதிரிப்பாகமாக அதைக் கட்டி இழுக்கும்படி ஆணையிட்டிருக்கிறான்.

•

ஊதுகொம்புகளின் புதிய கயிறுகளையும் கூடாரங்களுக்கான வளையங்களையும் கார்போவ் மறந்து விட்டான் என்று மேற் காவலன் அறிவித்திருந்தான். அத்துடன் அதிகாரிகள், நேற்று தளபதி வொன் றாபெக்கைப் போய்ச் சந்தித்து அங்கே மாலைப்பொழுதைக் கழித்திருக்கிறார்கள் என்றும் சொன் னான். இந்த உரையாடலின்போது சிவப்புத் தாடி வைத்த லெபெடெற்ஸ்கி யன்னலில் தோன்றினான். அவன் கிட்டப் பார்வை கொண்ட தன் கண்களைச் சுருக்கிக்கொண்டு அதி காரிகளின் தூக்க முகங்களைப் பார்த்து காலை வணக்கம் என்றான்.

'எல்லாம் சரியாக இருக்கிறதா ?' என்று கேட்டான்.

'குதிரை ஒன்றின் கழுத்தில் புதிய கழுத்துப் பட்டையை அணிந்ததால் கழுத்து புண்ணாகி இருக்கிறது,' என்றான் லொபிற்கோ, கொட்டாவி விட்டுக்கொண்டே.

தளபதி பெருமூச்செறிந்துகொண்டு ஒரு கணம் யோசித்து விட்டு உரத்த குரலில் சொன்னான்.

'நான் அலெக்சான்ட்ரா யெவ்கிறாஃபோனாவைப் போய்ப் பார்க்க நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவளை நான் சந் திக்க வேண்டும். போய் வருகிறேன். மாலையில் உங்களுடன் தொடர்பு கொள்கிறேன்.'

கால் மணி நேரத்திற்குப் பின் பீரங்கிப் படைப்பிரிவு திரும் பவும் போகத் தொடங்கியது. களஞ்சியங்களின் நீளம் தெரு வில் சென்றபோது றியோபோவிச் வலது பக்கம் இருந்த வீட்டைப் பார்த்தான். யன்னல்களில் போட்டிருந்த எல்லா மறைப்புகளும் கீழிறக்கப்பட்டிருந்தன. வீட்டிலிருந்தவர்கள் அனைவரும் இன்னும் தூக்கத்தில் இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. முதல் நாள் றியாபோவிச்சிற்கு முத் தம் கொடுத்தவளும் தூங்கிக்கொண்டிருப்பாள். அவள் துயில் வதை கற்பனை செய்து பார்க்க முயன்றான். படுக்கை அறை யின் அகலத் திறந்த யன்னல்கள், பச்சைக் கிளைகள் ஊடாக களவாக உற்றுப் பார்த்தான். காலையின் புத்துணர்ச்சி, நெட் டிலிங்க மரங்களின் நறுமணம், மஞ்சத்தி, றோசா மலர்கள், கட்டில், ஒரு நாற்காலி, அதன்மேல் நேற்று சரசரத்த பாவா டைகள், சின்னஞ்சிறிய காலணிகள், மேசைமேல் இருக்கும் சிறிய கைக்கடிகாரம் - எல்லாவற்றையும் அவன் தெளிவா கவும் தனித்தும் கற்பனை செய்தான். ஆனால் அவளுடைய முகத்தின் சிறப்பம்சங்களும், இனிமையாகத் துயிலும்போது இருக்கும் புன்னகையும் - அவையே அவளுடைய குணவி யல்பும் முக்கியமானதும் - அவை அவனுடைய கற்பனையிலி ருந்து நழுவிவிட்டன. திரவப் பாதரசம், விரல்கள் ஊடாக நழுவி விடுவது போல. அவன் தன் உணர்ச்சிகளைக் கட்டுப டுத்திய பின் திரும்பவும் அவ்விடத்தைப் பார்த்தான். அங்கே மஞ்சள் நிற தேவாலயம், வீடு, ஆறு எல்லாம் வெளிச்சத்தில் தோய்ந்து போய் இருந்தன. ஆறு அதன் பிரகாசமான பச்சை நிற கரைகளுடன், நீல வானம் அதில் பிரதிபலிக்க, இங்கும் அங்கும் தெரியும் சூரிய ஒளியின் சடுதியான மினுமினுப்பு எல்லாம் மிகவும் அழகாக இருந்தன. றியாபோவிச் மியெஸ் ரெற்சியை கடைசி முறையாக நோக்கினான். அவனுடைய நெஞ்சுக்கு நெருக்கமானதும் அன்புக்குரியதுமான ஒன்றை கடைசியாகப் பிரியும்போது ஏற்படும் சோகத்தை அப்போது அவன் உணர்ந்தான்.

தெருவில் அவன் முன்னால் நீண்ட பழகிய சுவாரஸ்யமற்ற காட்சிகள் தான் இருந்தன... வலது பக்கமும் இடது பக்கமும் இளம் கம்புத்தானிய வயல்களும் கோதுமை வயல்களும் ஒருவகைக் காகங்களும் அவற்றைச் சுற்றி தத்தித் தத்தி கொத்திக் கொண்டிருந்தன. முன்னால் பார்த்தபோது தூசும் மனிதத் தலைகளின் பின்புறமும் தெரிந்தன. பின்னால் பார்த் தால் அதே தூசும் முகங்களும் தெரிந்தன... எல்லாவற்றிற்கும் மேலாக நான்கு பேர் வாள்களுடன் அணிவகுத்து நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் தான் முன்னணிப் படைவீரர். அடுத்தது, பின்னால் வந்த பாடகர்களின் கூட்டம். அதன் பின் குதிரையின் மேல் ஊதுகொம்பு ஊதுபவர்கள். முன்னணிப் படைவீரர்களும் சேர்ந்திசை பாடகர் குழுவும். மரண ஊர்வலத்தில் போகும் தீவட்டி பிடிப்பவர்களும் தொலை வுக் கட்டுப்பாட்டை மீறி அதிக தூரம் முன்னால் போவார்கள்.

அதேபோல பாடகர் குழுவும் சென்றது... ரியாபோவிச் ஐந்தாவது பீரங்கிப் படையினரின் முதலாவது பீரங்கிக்குழுவைச் சேர்ந்தவன். அவனுக்கு முன்னால் நாலு பீரங்கிக் குழுக்கள் போவதைப் பார்த்தான். இராணுவ வீரன் அல்லாதவன் ஒருத்தன் இந்த நீண்ட சலிப்பான ஊர்வலம் போவதைப் பார்த்து அது சிக்கலான புரிந்து கொள்ள முடியாத குளறுபடியானதொன்று என்று நினைத்துக்கொள்வான். ஒரு பீரங்கிக்குப் பக்கத்தில் ஏன் அத்தனை பேர் நிற்கிறார்கள் என்று புரிந்து கொள்ள மாட்டான். ஏன் அதை பல குதிரைகளை வைத்து விசித்திரமான பல சேணங்களை பின்னிக் கட்டி இழுக்கிறார்கள், என்னவோ உண்மையில் அதுவொரு பயங்கரமான பாரமானது என்று நினைத்துக்கொள்வான். ரியபோவிச்சிற்கு அது முழுமையாகப் புரிந்து கொள்ளக் கூடியதொன்றுதான். அதனால் அது அவனுக்குச் சுவாரஸ்யமற்றது. அவனுக்கு அதுவெல்லாம் நன்றாகவே தெரியும். ஏன் ஒவ்வொரு பீரங்கிக் குழுவின் முன்னணியிலும் துணிச்சலான ஒரு குண்டுவீச்சாளன் இருக்கிறான் என்பதும் அவனுக்கு நன்றாகவே தெரியும். ஏன் அவன் குண்டுவீச்சாளன் என்று அழைக்கப்படுகிறான் என்பதும் தெரியும். அந்தக் குண்டுவீச்சாளனுக்கு நேர் பின்னாலும், நடுவிலும் குதிரை வீரர்கள் நிற்கிறார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். ரியாபோவிச்சுக்கு அவர்கள் ஓட்டி வந்த குதிரைகள் எவை என்று தெரியும். இடது பக்கம் நிற்பதற்கு ஒரு பெயரும், வலது பக்கம் நிற்பவைக்கு வேறு பெயர்களும் இருந்தன என்பதும் அவனுக்குத் தெரியும். அவை மிகவும் சுவராஸ்யமற்றவை. குதிரை வீரர்களுக்குப் பின்னால் இரண்டு வண்டி இழுக்கும் குதிரைகள் நின்றன. ஒன்றில் குதிரையோட்டி இருந்தான். அவன் முதுகில் நேற்றுப் படிந்த தூசு இருந்தது. அவன் காலில் வேடிக்கையான தோற்றமுள்ள ஒரு மரத்துண்டு இருந்தது. ரியாபோவிச்சுக்கு அந்த மரத்துண்டு வைத்திருப்பதற்கான காரணம் தெரியும். அது வேடிக்கைக்காக வைக்கவில்லை என்பதும் தெரியும். எல்லா குதிரையோட்டிகளும் தங்கள் சவுக்குகளை இயந்திரத்தனமாக அசைத்து அடிக்கடி சத்தம் செய்வார்கள். பீரங்கியே அழகற்றதுதான். அதன் முன்பகுதியில் ஓட்ஸ் சாக்குகள் கன்வஸ் துணியால் மூடப்பட்டுக் கிடக்கும். பீரங்கியின் எல்லாப்பக்கமும் கேத்தில்களும் இராணுவ வீரர்களின் முதுகுப்பைகளும், பைகளும் தொங்கவிடப்பட்டிருக்கும். அது பார்ப்பதற்கு, சிறியதொரு தீங்கற்ற விலங்கை ஏதோ அறிய முடியாத காரணத்திற்காகச் சுற்றி நிற்கும் மனிதர்களையும் குதிரைகளையும் போல இருக்கும். காற்றுப்படாத திசையை நோக்கி பீரங்கி சுடும் ஆறு பேர் கைகளை வீசி அணிவகுத்துச் சென்றனர். பீரங்கிக்குப் பிறகு திரும்பவும் மேலும் குண்டுவீச் சாளர்கள், குதிரையோட்டிகள், வண்டிக் குதிரைகள். அவர்களின் பின் இன்னுமொரு பீரங்கி முதலாவதைப் போல அழகற்றும் கவர்ச்சியற்றும் வந்தது. இரண்டாவதற்குப் பிறகு மூன்றாவது, நாலாவது. நாலாவதற்குப் பக்கத்தில் ஒவ்வொரு அதிகாரி. அந்தப் படைத்தொகுதியில் மொத்தமாக ஆறு பீரங்கித் தொகுதிகளும் நாலு பீரங்கிகளும் இருந்தன. அணிவகுப்பு அரை மைல்வரை சென்றது. அது போய் வகன் வண்டிகள் நிற்கும் இடத்தில் முடிந்தது. அவற்றின் அருகில் மிகவும் அழகான கழுதை ஒன்று நின்றது. அதன் பெயர் மகர். அதை துருக்கியிலிருந்து ஒரு பீரங்கித் தளபதி கொண்டு வந்திருந்தான். அது தன் நீண்ட காதுகளையுடைய தலையை கீழே தொங்கப் போட்டுக் கொண்டு ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டு மேலும் கீழும் நடந்தது.

ரியாபோவிச் முன்னாலும் பின்னாலும் தலைகளின் பிடரிகளையும் முகங்களையும் அக்கறையின்றி பார்த்தான். மற்ற நேரங்களில் என்றால் அவன் அரைத் தூக்கத்தில் இருந்திருப்பான். ஆனால் இப்பொழுது அவன் தன் புதிய இணக்கமான சிந்தனைகளில் முற்றாக ஆழ்ந்திருந்தான். முதலில் பீரங்கிப் படை அணிவகுத்துப் போக வெளிக்கிட்டபோது தனக்குக் கிடைத்த முத்த நிகழ்வை சுவாரசியமான, புதிரான, ஒரு சிறிய துணிச்சலான சாகச நிகழ்வாகத்தான் தன்னை நம்ப வைக்க முயன்றுகொண்டிருந்தான். அது உண்மையில் அற்பமானதென்றும் அதைத் தீவிரமாக எடுப்பது, அதைப் பற்றிக் குறைந்தது நினைப்பது முட்டாள்த்தனம் என்று நினைத்தான். ஆனால் இப்பொழுது தர்க்கத்தை புறம் தள்ளி விட்டு கனவுகள் காண வெளிக்கிட்டான்... ஒரு கணம் தான் வொன் றாபெக்கின் வரவேற்பறையில் ஒரு பெண்ணின் பக்கத்தில் இருப்பதாகக் கற்பனை செய்தான். சிவப்பு நிற இளம் பெண் போலவும் கறுப்பு நிற ஆடையில் தெரிந்த அழகான பெண் போலவும் அவள் இருந்தாள். பின் தன் கண்களை மூடிக் கொண்டு இன்னொரு பெண்ணுடன் இருப்பதாகக் கற்பனை செய்தான். அவள் முற்றாகவே அவன் அறியாத ஒரு பெண். அவளுடைய முக அம்சங்கள் மிகத் தெளிவில்லாமல் தெரிந்தன. தன் கற்பனையில் அவளுடன் பேசினான், அணைத்தான், தோள்களில் சாய்ந்தான், போரைக் கற்பனை செய்தான், பிரிந்து செல்வதை எண்ணினான், பின் திரும்பவும் சந்தித்தான், தன் மனைவியுடனும் குழந்தைகளுடனும் இரவுணவை உண்டான்...

ஒவ்வொரு முறை பீரங்கிப்படை சரிவில் இறங்கிப் போகும் போது தளபதி 'நிறுத்தியை அழுத்தங்கள்,' என்று சத்தம் இடுவது பெரிதாகக் கேட்டது.

●

அவனும் 'நிறுத்தியை அழுத்துங்கள்!' என்று சத்தமிட்டான். அவன் போட்ட அந்த சத்தம் பகற்கனவைக் குலைத்து யதார்த்த நிலைக்குத் தன்னைக் கொண்டு வந்து விடும் என்று பயந்தான்...

அவர்கள் ஒரு நிலக்கிழாரின் பண்ணையைக் கடந்து சென்ற போது ரியாபோவிச் வேலிக்கு மேலால் தோட்டத்தைப் பார்த்தான். ஒரு நீண்ட சாலை நேரான தண்டு போல ஓடியது. அதன் மேல் மஞ்சள் நிற மண் தூவிக் கிடந்தது. இளம் பேர்ச் மரங்கள் ஓரங்களில் நடப்பட்டிருந்தன. அவை எல்லாம் அவன் கண்களில் பட்டன... கனவு காணும் ஒருத்தனின் ஆவலுடன் அவற்றைப் பார்த்தான். ஒரு பெண்ணின் காலடிகள் மஞ்சள் மண்ணில் இடறிக்கொண்டு நடந்து கொண்டிருப்பதைக் கற்பனைச் செய்தான். எதிர்பாராதவிதமாக அவன் கற்பனையில் தெளிவான ஒரு காட்சி விரிந்தது. அதில் அவனை முத்தமிட்ட அந்தப் பெண் வந்தாள். அவளை அவன் இரவுணவுக்கு முந்திய மாலையில் கற்பனை செய்துகொண்டான். அந்தப் பிம்பம் அவனுடைய மூளையில் பதிந்துவிட்டது. அதன் பின் அது அவனைக் கைவிட்டுச் செல்லவில்லை.

அன்று மதியம் வகன் வண்டித் தொடர்களின் பின்னால் ஒரு சத்தம் கேட்டது.

'மெதுவாக, மெதுவாக! இடது பக்கம் கண்களைத் திருப்புங்கள்! அதிகாரிகளே!'

பீரங்கிப் படைகளின் தளபதி ஒரு சோடி வெள்ளைக் குதிரைகள் பூட்டிய ஒரு வண்டியில் போய்க்கொண்டிருந்தான். இரண்டாவது பீரங்கியின் பக்கத்தில் வண்டியை நிறுத்தி எதையோ சொல்லிச் சத்தம் போட்டான். அதை ஒருவரும் புரிந்து கொள்ளவில்லை. பல அதிகாரிகள் அவன் நின்ற இடத்திற்கு குதிரைகளில் சென்றார்கள். அதில் றியாபோவிச்சும் ஒருத்தன்.

'சரி, என்ன?' சிவப்புக் கண்களைச் சிமிட்டிக்கொண்டு, 'இங்கே யாராவது நோயாளிகள் இருக்கிறார்களா?' என்றான்.

அதற்குப் பதில் கிடைக்கவே, மெலிந்த சிறிய மனிதனான தளபதி வாயை மென்றுகொண்டு ஒரு கணம் சிந்தித்துவிட்டு ஒரு அதிகாரியைப் பார்த்துச் சொன்னான்.

'உன்னுடைய மூன்றாவது பீரங்கிபடையை செலுத்துபவனில் ஒருத்தன் தன் கால் கவசத்தை எடுத்து பீரங்கியின் முன்பகுதியில் தொங்க விட்டிருக்கிறான், போக்கிரிப் பயல், அவனைக் கண்டித்து வை!'

அவன் தன் கண்களை உயர்த்தி றியாபோவிச்சைப் பார்த்துச் சொன்னான்.

'உன்னுடைய முன்பக்க வார்ப்பட்டை மிகவும் நீண்டுள்ளது.'

இன்னும் சில சலிப்பூட்டுகிற அறிவுரைகளைச் சொல்லிவிட்டு தளபதி லொபிற்கோவைப் பார்த்து சிரித்தான்.

'நீ இன்றைக்கு மிகவும் சோர்வுடன் இருக்கிறாய், லியுற்றினன்ற் லொபிற்கோ. நீ மடம் லொபுஹோவை நினைந்து ஏங்கிக் கொண்டிருக்கிறியா? கனவான்களே. இவன் மடம் லொபுஹோவை நினைத்து ஏங்கிக்கொண்டிருக்கிறான்,' என்றான்.

அவன் குறிப்பிடும் சீமாட்டி மிகவும் தடித்த, உயரமான பெண். நாற்பது வயதைக் கடந்தவள். தளபதிக்கு தடித்த உறுதியான பெண்களைப் பிடிக்கும். எந்த வயதாக இருந்தாலும் சரி. தன் அதிகாரிகளுக்கும் அப்படியான ரசனை தான் இருக்கும் என்று நினைத்தான். அதிகாரிகள் மரியாதையாக முறுவலித்தார்கள். தளபதி தான் வேடிக்கையானதொன்றைச் சொல்லிவிட்டதாக நினைத்து உவகை அடைந்து உரத்துச் சிரித்தான். பின் வண்டியோட்டியின் முதுகில் தட்டி, சலாம் போட்டான்.

வண்டி உருண்டது...

•

'எனக்கு மிகவும் கடினமானது போலவும் அமானுஷ்யமானது போலவும் தோன்றிய அது உண்மையில் சாதாரணமான தொன்று,' என்று றியாபோவிச் நினைத்தான், தளபதியின் வண்டிக்குப் பின்னால் ஓடும் முகில்களைப் பார்த்தபோது... எல்லாமே சாதாரணமானவை. அனைவருமே அதைக் கடந்துதான் போகிறார்கள்... உதாரணமாக, அந்தத் தளபதி முன்னொரு முறை காதலித்திருக்கிறான். இப்பொழுது அவனுக்கு மணமாகி குழந்தைகளும் இருக்கின்றன. கப்ரன் வாஃரெரின் பின் கழுத்து மிகவும் சிகப்பாகவும் அழகற்றதாகவும் இருந்தபோதிலும், அவனுக்கு இடையே இல்லாதிருந்த போதிலும், அவனும் மணமானவன் தான், காதலித்தவன் தான்... சல்னனோவ் ஒரு முரடன். தாத்தரிய இனத்தவன். அவனுக்கும் காதல் இருந்தது. அது திருமணத்தில் முடிந்திருக்கிறது... நானும் மற்றவர்களைப் போலத்தான். எனக்கும் மற்றவர்களுக்குக் கிடைத்தது போன்ற அதே அனுபவம் கிடைக்கும். இப்போதோ, பிறகோ... தான் சாதாரணமான ஒருத்தன் என்ற எண்ணமும் அவனுடைய வாழ்க்கையும் சாதாரணமானது தான் என்பதும் அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அத்துடன் தைரியத்தையும் கொடுத்தது. முத்தம் தந்த அவளையும் தான் விரும்பியது போல வாழ விரும்பும் மகிழ்ச்சியையும் கற்பனை செய்தான். தன்னுடைய கற்பனைக்கு அவன் கடிவாளம் போட விரும்பவில்லை.

பீரங்கிப் படை மாலையில் நிறுத்த வேண்டிய இடத்தை அடைந்தது. அதிகாரிகள் தங்கள் கூடாரங்களில் இளைப்பாறினார்கள். றியாபோவிச், மேர்சிலியாகோவ், லொபிற்கோ எல்லோரும் ஒரு பெட்டியைச் சுற்றி இருந்து கொண்டு இரவுணவை உண்டு கொண்டிருந்தார்கள். மேரிசிலியாகோவ் அவசரப்படாமல் ஆறுதலாகச் சாப்பிட்டான். அவன் நேரம் எடுத்து ஆறுதலாகச் சாப்பிட்டபோது 'வியெஸ்ரினிக் எவ்றொப்'யையும் வாசித்தான். அதை அவன் தன் முழங்கால்களில் வைத்திருந்தான். லொபிற்கோ தொடர்ந்து கதைத்துக்கொண்டே தன் கிளாசில் பியரை நிரப்பிக் கொண்டிருந்தான். றியாபோவிச் நாள் முழுவதும் கனவு கண்டுகொண்டிருந்ததால் அவன் தலை குழம்பிப் போய் இருந்தது. மதுவருந்திக்கொண்டு பேசாமல் இருந்தான். மூன்று கிளாஸ் மது அருந்திய பின் கொஞ்சம் போதை ஏறி, தன்னைப் பலவீனமாக உணர்ந்தான். அவனுக்கு கிடைத்த புதிய உணர்ச்சிகளைத் தன் தோழர்களுக்குச் சொல்வதற்கு தணியாத ஆசை பிறந்தது.

'வொன் றாபெக்கின் வீட்டில் எனக்கொரு விசித்திரமான அனுபவம் ஒன்று கிடைத்தது,' என்று சொல்ல ஆரம்பித்தான். அவன் தன் குரலுக்கு அலட்சியமான, முரண்பாடான ஒரு தொனியைக் கொடுக்கவும் முயன்றான். 'நான் பிலியட் அறைக்கு சென்றேன்...'

தனக்குக் கிடைத்த முத்த நிகழ்ச்சியை மிகவும் நுணுக்காக விபரிக்கத் தொடங்கினான். ஒரு நிமிஷத்தின் பின் அதை நிறுத்தி விட்டு அமைதியானான்... அதற்குள் அவன் எல்லாவற்றையும் சொல்லிவிட்டான். அதைச் சொல்வதற்கு அவனுக்கு ஒரு சிறிது நேரமே பிடித்தது. அது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அந்த முத்தத்தின் கதையை அடுத்த நாள் காலைவரை சொல்லிக்கொண்டிருப்பான் என்று கற்பனை செய்திருந்தான். அவன் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்த லொபிற்கோ அவனைச் சந்தேகத்துடன் பார்த்து சிரித்தான். லொபிற்கோ ஒரு பெரும் பொய்யன். அதனால் அவன் எவரை நம்புவதும் இல்லை. மேர்சிலியாகொவின் கண்ணிமைகள் துடித்தன. தன் கண்களை 'வியெஸ்றினிக் எவ்றொபி'யிலிருந்து எடுக்காமல் சொன்னான்.

•

‘அது நகைப்புக்கிடமானதொன்று! எப்படிப்பட்ட விசித்திர மானது அது!... ஒரு ஆணின் கழுத்தில் ஒருத்தி விழுந்து முத்தம் கொடுப்பது, அவனுடைய பெயரைக் கேட்காமலே... அவள் ஒருவகையான நரம்பியல் கோளாறு பிடித்தவள்.’

‘ஓம், அப்படித்தான் இருக்க வேணும்,’ என்று றியாபோவிச்சும் அங்கீகரித்தான்.

‘அப்படியானதொன்று எனக்கும் நடந்தது,’ என்றான் லொபிற்கோ, பயம் கலந்த வெளிப்பாடு ஒன்றைக் காட்டிக் கொண்டு. ‘கடந்த ஆண்டு நான் கொவ்னோவுக்குப் புகை வண்டியில் போய்க்கொண்டிருந்தேன்... நான் இரண்டாம் வகுப்பு பயணச்சீட்டு எடுத்திருந்தேன். வண்டியில் நெரிசலான கூட் டம். அதில் நித்திரை கொள்ளவே இடமில்லை. நான் பாது காவலனுக்கு அரை றூபிள் பணம் கொடுத்தேன். அவன் என் பயணப்பொதியை எடுத்துக்கொண்டு என்னை இன்னொரு பெட்டிக்கு அழைத்துச் சென்றான். நான் படுத்துக்கொண்டு என்னை ஒரு கம்பளத்தால் மூடிக் கொண்டேன்... இருட்டாக இருந்தது. புரிந்து கொள்ளுங்கள். சடுதியாக, எவளோ ஒருத்தி என் தோளில் தொடுவதையும் முகத்தில் மூச்சு விடுவ தையும் உணர்ந்தேன். என் கைகளை அசைத்து பார்த்த போது முழங்கை ஒன்றைக் கண்டேன்... கண்களைத் திறந்து பார்த்தபோது அது ஒரு பெண். அது என் கற்பனையாகவும் இருக்கலாம். கருமையான கண்கள், இளம் சமன் மீனைப் போன்ற சிவந்த இதழ்கள், நாசித் துவாரங்களால் உணர்ச்சி யுடன் மூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். அவள் மார்புகள் விசைதாங்கி போல...

‘மன்னித்துக் கொள்,’ என்றான் மேர்சிலியாகோவ் லொபிற் கோவை அமைதியாக இடைநிறுத்திக் கொண்டே. ‘மார்பு இடையில் இருந்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இருட்டில் அவள் இதழ்களை எப்படிக் கண்டாய்?’

லொபிற்கோ மேர்சிலியாகோவின் கற்பனைத்தன்மையற்ற மடமையை நினைத்துச் சிரித்தான். அது றியாபோவிற்சிக்கும் அருவருப்பை ஏற்படுத்தியது. அவன் அந்தப் பெட்டியிலி ருந்து எழும்பி வெளியே போய் படுக்கச் சென்றான். அதனால் றியாபோவிற்ச் அவர்களுக்கு எதையும் சொல்லப்போவ தில்லை என்று தீர்மானித்துக் கொண்டான்.

முகாம் வாழ்க்கை தொடங்கியது... நாட்கள் ஓடின. ஒரு நாள் மற்ற நாளைப் போல கடந்து சென்றது. அந்த நாட்களில் றியாபோவிச் தான் காதலில் இருப்பதாக உணர்ந்தான், நினைத்தான், அத்துடன் நடந்தும் கொண்டான். ஒவ்வொரு நாள் காலையிலும் அவனுடைய பணியாள் கழுவுவதற்கு தண்ணீரைக் கொடுத்தபோது குளிர் நீரால் தன் தலையிலும் பாய்ச்சிக் கொண்டான். தன் வாழ்க்கையில் இதமான, மகிழ்ச் சியான ஏதோ ஒன்று நிகழ்கின்றது என்று எண்ணினான்.

மாலை வேளைகளில் அவன் தோழர்கள் காதலையும் பெண் களையும் பற்றிக் கதைக்கத் தொடங்கும்போது அவன் அதைக் காது கொடுத்துக் கேட்டான். அவர்களுக்கருகில் சென்று இருப்பான். அவன் பங்குபற்றிய ஒரு போரைப் பற்றி எவரும் விபரித்தால் ஒரு இராணுவ வீரனுக்குரிய முக வெளிப்பாட் டைக் காண்பிப்பான். மாலை வேளைகளில் அதிகாரிகள் லொபிற்கோவின் தலைமையில் புறநகருக்குச் சென்று டொன் ஹவான் போல் களியாட்டத்தில் ஈடுபட்டால் றியாபோச்சும் ஈடுபடுவான். பின் சோகமாக இருப்பான். ஆழமான குற்ற வுணர்வுக்கும் ஆளாவான். மனதுக்குள் தன்னை மன்னிக் கும்படி இறைஞ்சுவான். ஓய்வாக இருக்கும்போது அல்லது தூக்கமில்லாத இரவுகளில் தன் குழந்தைப் பருவத்தை நினைத்து ஏங்கையில் தாய், தந்தை, உறவினர்கள், அன்புக் குரியவர்களை நினைத்துக்கொள்வான். அப்பொழுது தவிர்க்க முடியாத வகையில் மியெஸ்ரெற்றிகியின் நினைவும் வரும். விசித்திரமான குதிரையும், வொன் றாபெக்கும் அவரின் மனைவியும் - அவள் பேரரசி ஜுஜீன் போன்றவள் - இருட்ட றையும், கதவில் வந்த வெளிச்சமும் எல்லாம் நினைவில் வரும்...

•

ஒகஸ்ட் மாதம் 31-ஆந் திகதி கூடாரத்திலிருந்து திரும்பிச் சென்றான். மொத்த பீரங்கிப் படையுடன் அல்ல. இரண்டு பீரங்கிகளுடன் மட்டும். அவன் வழி முழுவதும் கனவு கொண் டும் உற்சாகமாகவும் இருந்தான். ஏதோ தன் சொந்த இடத் திற்குத் திரும்பிப் போவதைப் போல. விசித்திரமான குதிரைக ளையும், தேவாலயத்தையும், வொன் றாபெக்கின் நேர்மை யற்ற குடும்பத்தையும், இருட்டறையையும் திரும்பவும் பார்ப்ப தற்கு தீவிர ஆவலுடன் இருந்தான். காதலர்களை அநேக மாக ஏமாற்றும் ‘உள்ளொலி,’ ஏதோ காரணத்தால் அவளைக் கட்டாயம் சந்திப்பான் என்று அவன் காதுக்குள் குசுகுசுத் தது... அவன் எப்படிச் சந்திக்க வேண்டும்? எதைப்பற்றி அவளுடன் கதைப்பான்? அவள் அந்த முத்தத்தை மறந்து விட்டிருப்பாளா? இல்லையா? ஆக மோசமாகப் போய் அவ ளைச் சந்திக்காவிட்டாலும் பரவாயில்லை, அந்த இருட்ட றைக்குள் போய் வந்து பழைய நினைவுகளை மீட்டாலே மகிழ்ச்சியாகத்தான் இருக்கும்...

மாலைப் பொழுதில் பழக்கமான தேவாலயமும் வெண்ணிற தானியக் களஞ்சியங்களும் அடிவானத்தில் தோன்றின. றியா போவிச்சின் இதயம் அடித்துக் கொண்டது... அவனுக்குப் பக் கத்தில் குதிரையை ஓட்டி வரும் அதிகாரி ஏதோ சொன்னான். அது அவனுக்குக் கேட்கவில்லை. எல்லாவற்றையும் மறந்து போனான். தூரத்தில் ஆறு பளபளத்து ஓடுவதையும், வீட்டின் கூரையையும், பிரத்தியேகமாகக் கட்டிய புறாக்கூடுகளைச் சுற்றி சூரிய அஸ்தமன ஒளியில் வட்டுமிட்டுக்கொண்டிருந்த புறாக்களையும் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

தேவாலயத்தை அவர்கள் அடைந்து, தங்குமிடத்திற்கான ஆணையைக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தபோது, குதிரையின்மீது ஒரு தூதுவன் தேவாலயத்தைச் சுற்றி வந்து அதிகாரிகளை தேநீர் விருந்துக்கு அழைப்பான் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால்... தங்குமிடத்திற்கான ஆணை வாசிக்கப்பட்டது. அதிகாரிகள் கிராமத்திற்குப் போவ தற்கு அவசரம் காட்டினார்கள். குதிரையின்மீது வரும் தூதன் வரவில்லை.

‘வொன் றாபெக் நாங்கள் வந்திருக்கும் செய்தியை விவசாயி களிடமிருந்து அறிந்து எங்களை அழைப்பான்,’ என்று

றியாபோவிச் எண்ணிக்கொண்டிருந்தான். அவன் தன் தங்குமிடக் குடிசைக்குள் நுழைந்தபோது, ஒரு தோழன் ஏன் மெழுகு திரியைக் கொளுத்துகிறான், ஏன் பணியாளர்கள் தேநீர்க் குடுவைகளை அவசரமாக பற்ற வைக்கிறார்கள் என்பதோ ஒன்றும் அவனுக்குப் புரியவில்லை...

அவனை வலிமிகுந்த சங்கடம் ஒன்று ஆட்கொண்டிருந்தது. படுத்தான், திரும்ப எழும்பி தூதன் வருகிறானா என்று யன்னலுக்கு வெளியே பார்த்தான். எந்த அறிகுறியும் தெரியவில்லை.

•

திரும்பவும் படுத்தான். அரை மணி நேரத்தின் பின் எழுந்தான். மன உளைச்சலைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதிக்குச் சென்று தேவாலயத்தை நோக்கிச் சென்றான். இருட்டாகவும் சதுக்கம் கைவிடப்பட்டதாகவும் இருந்தது... மூன்று இராணுவ வீரர்கள் அமைதியாக வரிசையாக எழுந்து நின்றார்கள். தெரு கீழ் நோக்கி இறங்கிச் சென்றது. றியாபோவிச்சைக் கண்ட அவர்கள் எழும்பி சலாம் வைத்தார்கள். அவனும் திரும்பி சலாம் அடித்துவிட்டு பழகிய பாதையில் கீழே இறங்கினான்.

ஆற்றின் மேல் பக்கத்தில் முழு வானமும் ஆழமான சிவப்பு நிறத்தால் நிரப்பட்டிருந்தது! சந்திரன் எழுந்துகொண்டிருந்தான். இரண்டு விவசாயப் பெண்கள் உரத்துப் பேசிக்கொண்டு குசினித் தோட்டத்தில் முட்டைக் கோஸ் பிடுங்கிக் கொண்டிருந்தார்கள். குசினித் தோட்டத்திற்குப் பின்புறத்தில் இருண்ட குடிசைகள் சில இருந்தன... ஆற்றின் பின்பக்கத்தில் உள்ள எல்லாம் மே மாதத்தில் உள்ளது போலவே இருந்தன. பாதைகள், செடிகள், தண்ணீரின் மேல் தொங்குகின்ற வில்லோ மரங்கள்... ஆனால் இன்னிசைப்பறவையின் தைரியமான சத்தம் கேட்கவில்லை. பொப்ளர் மரத்தின் வாசம் இருக்கவில்லை. புதிய புல்லும் இல்லை.

தோட்டத்தை அடைந்து றியாபோவிச், வாசல் கதவடியில் நின்று உள்ளே பார்த்தான். தோட்டம் இருண்டும் அமைதியாகவும் இருந்தது... அவனால் எதையும் பார்க்க இயலவில்லை. ஆனால் கிட்ட இருந்த பேர்ச் மரங்களின் வெண்ணிற தண்டுகளையும் வீதியின் சிறு பகுதியையும் பார்க்க முடிந்தது. மற்றவை எல்லாம் இருட்டில் கலந்துவிட்டன. றியாபோவிச் கூர்ந்து பார்த்தான். ஆவலுடன் ஏதாவது ஒலி வருகிறதா உற்றுக் கேட்டான். கால் மணி நேரம் அங்கே நின்றான். எந்தச் சத்தமோ ஒலியோ வெளிச்சமோ வரவில்லை. அவன் திரும்பவும் பின்னோக்கி நடந்தான்...

ஆற்றை நோக்கிச் சென்றான். தளபதியின் குளியல் வீடும் பாலத்தின் கைப்பிடியில் குளியல் துணிகளும் வெண்ணிறமாகக் காட்சி அளித்தன... பாலத்தின் மேல் நடந்து சென்று கொஞ்ச நேரம் நின்றான். தேவையில்லாமல் கைப்பிடியில் கிடந்த குளியல் துண்டைத் தொட்டான். அவை கரடு முரடாகவும் விறைத்துப் போயும் இருந்தன. கீழே தண்ணீரைப் பார்த்தான்... களகளத்த மெல்லிய ஒலியுடன் குளியல் வீட்டைச் சுற்றி ஆறு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. சிவப்புச் சந்திரன் ஆற்றின் இடது பக்கக் கரையின் பக்கத்தில் பிரதிபலித்துக்கொண்டிருந்தது. சிற்றலைகள் பிரதிபலிப்புக்கள்மீது விழுந்து நீண்டு சிறு சிறு துண்டுகளாக உடைந்து சென்றன. அவற்றைத் தூக்கிச் செல்ல முயல்வது போல.

'எப்படியான முட்டாள்த்தனம்! எப்படியான முட்டாள்த்தனம்!' ஓடும் நீரைப் பார்த்துக்கொண்டு றியாபோவிச் சிந்தித்தான். 'எல்லாரும் கூர்மதியற்றவர்கள்!'

•

இப்பொழுது அவன் எதையும் எதிர்பார்க்கவில்லை. முத்தம் கிடைத்த சம்பவம், அவனுடைய பொறுமையின்மை, அவனுடைய தெளிவற்ற நம்பிக்கைகளும் ஏமாற்றங்களும், எல்லாம் தெளிவான வெளிச்சத்தில் வெளிவந்தன. தளபதியின் தூதனை காணாதது இனிமேலும் அவனுக்கு விநோதமான தொரு விஷயமல்ல. இன்னொருவனுக்குக் கொடுக்க வேண்டிய முத்தம் தனக்குக் கொடுத்த அந்தப் பெண்ணை அவன் இனிமேல் என்றுமே காணப்போவதில்லை. அவளை அவன் திரும்பவும் கண்டால் அது விசித்திரமானதாக இருக்கும்...

ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அது எங்கே போகிறது, ஏன் போகிறது என்பது அவனுக்குத் தெரியாது. அது மே மாதம் ஓடுவது போல ஓடிக்கொண்டிருந்தது. மே மாதம் அது பெரிய ஆற்றிற்குள் ஓடிக் கலந்தது. பெரிய ஆறு கடலுக்குள் சென்று விழுந்தது. அதன் பின் அது ஆவியாகி மழையாக மாறியது. சிலவேளை அதே நீர் இப்பொழுது றியாபோவிச்சின் கண் முன்னால் திரும்பவும் ஓடிக் கொண்டிருக்கலாம்... எதற்காக? ஏன்?

முழு உலகமும், முழு வாழ்க்கையும், றியாபோவிச்சிற்கு தெளிவில்லாததாக, நோக்கமற்ற கேலியாக இருப்பதுபோலத் தோன்றியது. தண்ணீரிலிருந்து தன் கண்களைத் திருப்பி வானத்தை பார்த்தான். எப்படி தெரியாத பெண்ணின் விதி தற்செயலாக அவனை அணைத்தது. அதை நினைத்தான். தன் கோடை காலக் கனவுகளையும் கற்பனைகளையும் நினைத்தான். தன் வாழ்க்கை அசாதாரண அற்பத்தனமானது, வறுமையானது, நிறமற்றது என்ற நினைத்துக் கொண்டான்.

அவன் தன் குடிசைக்குச் சென்றபோது தோழர்களில் எவரையும் காணவில்லை. பணியாள், 'அவர்கள் எல்லோரும் தளபதி வொன் றாபெக்கின் வீட்டிற்குச் சென்று விட்டார்கள். அவர் ஒரு தூதனை குதிரையில் அனுப்பி அவர்களை அழைத்திருந்தார்... என்றான்.

ஒரு கணம் றியாபோவிச்சின் இதயத்தில் மகிழ்ச்சியின் வெளிச்சம் வந்து சென்றது. அதை அவன் உடனடியாக தணித்துவிட்டு, கட்டிலில் ஏறிப் படுத்தான். தன் விதியின் மீது கொண்ட பெரும் சினத்தில் அதைப் பழிவாங்குவதுபோல, அவன் தளபதியின் வீட்டிற்குச் செல்லவில்லை.



mahalingam.k@thaiveedu.com

# ஆறாவது அனைத்துலக திருக்குறள் மாநாடு

## 6TH INTERNATIONAL THIRUKKURAL CONFERENCE

THEME
THIRUKKURAL ON GOVERNANCE

**DATE**

SEPTEMBER 19, 20, 21- 2025

**HOSTING CITY AND COUNTRY**

TORONTO, CANADA

**Jointly organized by**

Toronto Tamil Sangam, Toronto, Canada
Institute of Asian Studies, Chennai, India

***with the support of University of Toronto Scarborough***


வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS
சமூக உளவளம் பேணும் தொடர் - 99
Psychosocial Educational Series - 99
VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE
01 September 2025 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 4:30a.m - 6:30am (Tuesday)
Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588
புலம் பெயர்ந்தோரின் பெற்றார் இலங்கையில் படும் அவலங்கள்
Parents of Diaspora Children's Struggles in Sri Lanka
யாழ்ப்பாணத்திலிருந்து நேரடி உரையாடல்
A live Dialogue from Jaffna
Sathiyabhama Thaneskumar
Director of Mathibha Makizhakam
Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!
Join us via zoom: CLICK HERE or go to link below in the email
Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA



விநாடி-வினா
தொல்காப்பிய மன்றம் - கனடா
Association for Tholkappiyam - Canada
ரொறொன்ரோ, கனடா
செப். 7
ஞாயிறு
நேரம்:
மாலை 4-9
மணி
2025
தொல்காப்பிய விழா
2025
Thamil Isai Kalaamanram
சிறுவருக்கான தொல்காப்பிய
விநாடி-வினா
(Tolkappiyam Quiz)
JUNIOR
QUIZIZZ
இளையோரிடமும்
தொல்காப்பியத்தின்
பெருமையை
எடுத்துச்செல்வோம்
வாரீர்!
2025-க்கான
தொல்காப்பியச் செல்வி
செல்வன் யார்?
Register Now


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

| Corporate Bankruptcy | Bankruptcy | Consumer Proposal |
|---|---|---|
| $ 5000 to $7000 + HST | $1800 - $3000 + HST | Zero fee |

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
"Empowering Financial Freedom"
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
creditsolutioncentre@gmail.com




BRING YOUR
PARENTS AND
GRANDPARENTS
WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radiusfinancial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Chairman's Club Award Winner 2017
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8

# STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

**SARVAA CPA**
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272







NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9855
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah
Realtor
DILEEP Thangavel
Realtor
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJI SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

Sri Vallipuranathar
CSC Credit Solution Centre
416.439.0224
416.450.5011

Suba Aynkharan
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.

Amazon
2466 Eglinton Ave. East Unit 124, Toronto ON M1K 5J8

Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
RE/MAX ACE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1358@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Ave, Suite 210, Toronto ON M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
iNFORCE LIFE Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
Cell: 416 505 8532

DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
YA Smiles
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX NORTH REALTY
077 566 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner